ஓ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருமூலநாயனார் அருளிய

திருமந்திரமாலையெனப்

பெயரிய 1920

திருமந்திரம்

(பத்தாம் திருமுறை)

சைவ சித்தாந்த மகா சமாஜம்

திருவருளகம், 22-ஏ, கல்லுக்காரத் தெரு, மயிலாப்பூர்.

சென்னை

1940

உரிமை பதிவு செய்யப்பட்டது

தனிப் பிரதி விலை ரூபா ஒன்று

11 பிரதிகள் விலை ரூபா 10

சாது அச்சுக்கூடம்,

இராயப்பேட்டை, சென்னை

உ

சிவமயம்

பதிப்புரை

குடிமன்னு சாத்தனூர்க் கோக்குல மேய்ப்போன் குரம்பைபுக்கு
மூடிமன்னு கூனற் பிறையாளன் தன்னை முழுத்தமிழின்
படிமன்னு வேதத்தின் சொற்படி யேபர விட்டென்உச்சி
அடிமன்ன வைத்தபி ரான்மூல னுகின்ற அங்கணனே.

—நம்பியாண்டார்நம்பிகள்

ஒன்றவன்தானுய், உலப்பிலிதேவர்கள் நக்கனென்றேத்திடு காதலுய்ப், போற்றிசைத் தின்னுயிர்மன்னும் புனிதனுய் விளங்கும் மூழுமுதற் கடவுள் அருட்டுணை கொண்டு, தமிழ்மறையும் பத்தாந் திருமுறையுமாகிய திருமந்திரம் என்னும் இந்நூல், நமது சமாஜத் தின் இரண்டாவது பதிப்பாக இன்று கோவூர் திருமேனீச்சரத்தில் எழுந்தருளியிருக்கும் தென்முகக் கடவுள் திருவடிகளிற் சமர்ப் பிக்கப்பெறுகின்றது. இவ்விரண்டாம் பதிப்பு வெளிவருதற்குப் பொருளுதவி செய்தவர் தேவகோட்டை சைவத் திருவாளர் - சேவு. லெ. ராம. நாராயணன் செட்டியார் அவர்களேயாவர். இப்பெரியார் இந்நூலிற் கூறப்படும் யோகாஸனங்கள் பலவற்றைச் செய்யும் பழக்கமுடையவர்; தனவணிக நாட்டில் "யோகி" என்று அழைக்கப்படுபவர்; நோயற்ற வாழ்வுடையவர். அச்சுத் தாள்களைத் திருவாளர் - மா. துரைசாமி முதலியாரவர்களும், திருவாளர் - திரு. வி. உலகநாத முதலியாரவர்களும் திருத்தி உதவினர்கள். சாது அச்சுக்கூடத்தினர் விரைவாகவும் செம்மையாகவும் அச்சிட்டு முடித்தனர். இப்பெரியார்கட்கெல்லாம் நமது சமாஜம் மனப் பூர்வமான நன்றி செலுத்துகின்றது.

இந்நூல், மெய்யன்பர்கட்குப் புறப்பட்டுப் புக்குத் திரிகின்ற வாயுவை நெறிப்பட உள்ளே நின்மலமாக்கும் வகையையும், காற் றைப் பிடிக்கும் கணக்கறிவையும், கூற்றை யுதைக்குங் குறியையும் புலப்படுத்துமாறு யோகியாய் யோகமுத்தியுதவும் தென்முகக் கடவுள் திருவடிகளை வழுத்துகின்றும்.

இங்ஙனம்

விக்கிரமவரு வைகாசிமீ நுவ
கோவூர் தேர்த்திருநாள்

ம. பாலசுப்பிரமணியன்
காரியதரிசி

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருமூலர் வரலாறு *

கயிலாயத் தொருசித்தர் பொதியிற் சேர்வார்
காவிரிசூழ் சாத்தனூர் கருது மூலன்
பயிலாநோ யுடன்வீயத் துயர நீடும்
பசுக்களைக்கண் டவனுடலிற் பாய்ந்து போத
வயலாகப் பண்டையுடல் அருளான் மேவி
ஆவடுதண் டுறையாண்டுக் கொருபா வாகக்
குயிலாரு மரசடியி லிருந்து கூறிக்
கோதிலா வடகயிலை குறுகி னாரே.

—உமாபதிசிவாசாரியார்

திருக்கயிலாயமலைக் கோயிலுக்கு முதற் பெருநாயகமாகி இந்திரன் மாலயன் முதலாம் இமையவர்க்கு நெறியருளும் நந்தியெம் பெருமான் திருவருள் பெற்ற நான்மறையோகிகள் ஒருவர் (அணிமா முதலான அட்டமாசித்தியும் பெற்றவர்) அகத்திய முனிவரைக் கண்டு அவருடன் சிலநாள் வசிப்பதற்காகக் கயிலைமலையிலிருந்து பொதியமலை நோக்கிப் புறப்பட்டார். வழியிலே திருக்கேதாரம், பசுபதி நேபாளம், அவிமுத்தம் (= காசி), திருப்பருப்பதம், காளத்தி, ஆலங்காடு, ஏகம்பம் என்ற தலங்களில் இறைவனை வணங்கினர். காஞ்சியில் சில யோகியரைக் கண்டு நயந்து, திருவதிகை சென்று, பின்னர் தில்லையில் திருநடனங் கண்டு அங்குச் சிலநாள் தங்கிக் காவிரியைக் கடந்து, திருவாவடுதுறை சென்று தொழுதார். தொழுது மீளும்போது அவ்விடம் விட்டு "அகலாததொரு கருத்து முன்னி யெழுங்குறிப்பிலுல் மூலுமாதரவெய்தப் பின்னுமகன்று"

---

* இவ்வரலாறும் குறிப்பு முதலியனவும் திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் பி.ஏ., பி.எல். அவர்களால் எழுதப்பட்டன.

சென்றார். செல்லும் வழியில் காவிரிக்கரையில் பசுக்கூட்டங்கள் அழுவதைக் கண்டார்.

அந்தணர் வாழ்கின்ற சாத்தனூரில் பசுமேய்ப்பார் குடியில் தோன்றிய மூலன் என்பான் வழக்கம்போல் ஒருநாள் பசுக்களை மேய்க்கும்போது, தனது வாழ்நாள் முடிவெய்த, நிலத்தில் வீழ்ந் திறந்தான். அவன் மேய்த்த பசுக்கள் அவன் உடம்பைச் சுற்றிச் சுற்றிக் கதறியழுதன. அவ்வழுகையைக்கண்ட சிவயோகியார் திருவருளாலே அப்பசுக்களின் துயரை நீக்கத் துணிந்து, தமது உடம்புக்குத் தகுந்த அரண்செய்து, கூடுவிட்டுக் கூடுபாயும் சித்தி யால் மூலன் உடம்பில் தமதுயிரைப் பாய்த்திரை. " பாய்த்தியபின் திருழலாய் எழுலும் பசுக்களெலாம், நாத்தழும்ப நக்கிமோந்து அணைந்து கனைப்பொடு நயந்து, வாய்த்தெழுந்த களிப்பிலை வாலெடுத்துத் துள்ளி " மேய்ந்தன. மாலைப்பொழுது வந்தவுடன் தத்தம் கன்றுகளை நினைந்து சாத்தனூருக்குத் திரும்பி, அவ்வவற் றின் வீடுகளுட் புகுந்தன. திருமூலர் எவ்வீட்டிலும் நுழையாமல் வெளியே நின்றார்.

இவ்வாறு இவர் நிற்பதைக்கண்ட மூலன் மனைவி திருமூலரைத் தனது கணவனென்றே எண்ணித் தொட்டழைக்க வந்தாள். ஆனால் திருமூலர் அதற்கிசையாது " இங்கு உனக்கு என்னுடன் அனை வொன்றில்லையென எதிர்மறுத்து " ஒரு பொதுமடத்திலுட் புகுந்து சிவயோகத்தி லமர்ந்திருந்தார்.

அன்றிரவெல்லாம் தூங்காது வருந்திய மூலன் மனைவி மறுநாட் காலை நல்லார் பலரிடத்து முறையிட்டாள். அவர்கள் திருமூலர் நிட்டையிலிருப்பதைக் கண்டு, " பித்துற்ற மயலன்று, பிறிதொரு சார்புளதன்று, சித்தவிகற்பம் களைந்து தெளிந்த சிவயோகமே " அவர் இருக்கும் நிலையெனத் தெரிந்து அவர் இல்வாழ்க்கைக்கு உதவார் என்பதை மூலன் மனைவிக்குத் தெரிவித்தார்கள். அவள் துயரெய்தி மையலுற உடனிருந்தவர்கள் அவளைக் கொண்டகன்றார் கள்.

திருமூலர் பின்னர் நிட்டைவிட்டெழுந்து பசுக்கள் வந்த வழியே மீண்டுத் தாம் அரண்செய்து வைத்த தமதுடலைக் காணுது, மெய்ஞ்ஞானத்தால் ஆராய்ந்து, சிவபெருமான் தந்த, ஆகமப் பொருளை மண்ணின்மிசைத் தமது வாக்கிலுல் தமிழ்வகுப்ப இறை வன் திருவுளங்கொண்டு தமதுடலைக் கரப்பித்தார் எனத் தெளிந்த னர். மூலனுடைய சுற்றத்தார் மீண்டும் தொடர அவர்களுக்குத்

தமது தொடர்பின்மையை நன்முப் விளக்கிப் பிறகு திருவாவடுதுறை சென்முர்.

ஆங்கு இறைவனை வணங்கி மேற்குப் புறத்தில் மிகவுயர்ந்த ஓர் அரசமரத்தின் கீழ் அமர்ந்து சிவயோகம் புரிந்து மூவாயிரம் ஆண்டு இப்புவியிலிருந்து "ஒன்றவன்முனென"த் தொடங்கி ஓராண்டுக் கொன்முக மூவாயிரம் திருமந்திரமோதி மீண்டும் திருக்கயிலை சென்று "ஒருகாலும் பிரியாமைத்தாள் அடைந்தார்"

"ஊனுடம்பிற் பிறவிவிடந் தீர்ந்துலகத் தோருய்ய
ஞானமுதல் நான்குமலர் நல்திருமந் திரமாலை
பான்மைமுறை ஓராண்டுக் கொன்றுகப் பரம்பொருளாம்
எனையறி றணிந்தாரை ஒன்றவன்ற னெனவடுத்து"

"முன்னியஅப் பொருண்மாலைத் தமிழ்மூவா யிரஞ்சாத்தி
மன்னியழ வாயிரத்தாண் டிப்புவிமேல் மகிழ்ந்திருந்து
சென்னிமதி யணிந்தார்தம் திருவருளாற் றிருக்கயிலை
தன்னிலணைந் தொருகாலும் பிரியாமைத் தாளடைந்தார்"

இவ்வரலாறு சேக்கிழார் பெருமான் திருவாக்கால் திருத் தொண்டர் புராணத்துள் இருபத்தெட்டு இனிய பாக்களாற் கூறப் பட்டுள்ளது. இவ்வரலாற்றுக் காதரவான குறிப்புக்களும் இவ்வரலாற்றிற் காணப்பெறுத செய்திகளை யறிவிக்கும் குறிப்புக்களும் திருமந்திரத்தில் காணப்படுகின்றன. இக்குறிப்புக்களைத் திரட்டுங் கால், பாயிரமுட்பட திருமந்திரம் முழுமையும் திருமூலர் வாக் கென்றே எண்ணிக் கொள்ளவேண்டும்.

திராவிடமாபாடிய ஆசிரியர் சிவஞான சுவாமிகள் காலத்தி லிருந்த சாஸ்திரஞ் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகளாற் பாடப் பெற்றதும், திருவாவடுதுறை ஆதீனத்து கஉ-வது பட்டமாகிய திருச் சிற்றம்பல தேசிகசுவாமிகள் காலத்து (ஏறக்குறைய நூற்றைம்பது ஆண்டுகட்குமுன்) அரங்கேறியதும், இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட செய்யுட்களையுடையதும், இதுவரை அச்சில் வெளிவராததுமாகிய திருவாவடுதுறைப் புராணத்தில் "திருமூலரைத் தடுத்தாட் கொண்ட சருக்கம்" ஒன்றுளது. அதில் கீழே காணும் மாறுபாடு களோடு பெரியபுராண வரலாற்றை யொட்டியே திருமூலர் சரிதை கூறப்படுகின்றது. மூலன் உடலிற் புகவேண்டுமென்ற பவவினை

திருமூலருக் குண்மையின் அவர் அவ்வாறு புகலேர்ந்தென்றும், திருமூலர் அரண் செய்து வைத்த தமது சொந்த உடலைப் போதி யின்கீழ் மறையப் பொதிந்து இறைவனே வைத்ததாகவும் இப் புராணம் கூறுவதோடு திருமந்திரம் வெளிப்பட்ட விதத்தையும் கீழ்வரும் செய்யுளால் தெரிவிக்கின்றது.

" அறிவான் மிகுந்த சித்தர்குழாம் அலேகத் தெழுதி யவரவரே
நெறியா லுணர்ந்து களித்துலக முழுது முணர நிரப்பினர்கள்
பிறியாச் சிவபோ கம்புசிக்கு மூல ரின்றும் பிரானடியிற்
செறிவா மியோகுற் றிருந்தனர்நீ டூழி பலவும் சென்றனவால் "

" ஒன்றவன் " " நந்தியருள் பெற்ற " முதலிய முப்பது பாடல்களின் கருத்தமைதிகள் இப்புராணத்திற் கூறப்பட்டுள்ளன.

திருமூலர் காலத்தைப்பற்றிய குறிப்புகள் :—(1) மன்று தொழுத பதஞ்சலியும் தம்மோடு நந்தியருள் பெற்றவருள் ஒருவர் என்று 67-ம் பாட்டில் திருமூலர் கூறுகிறார். மகாபாஷ்யம் இயற் றிய பதஞ்சலி வேறு, யோக சூத்திரம் இயற்றிய பதஞ்சலி வேறு என சம்ஸ்கிருத நூல் வரலாற்றுசிரியர் டாக்டர் கீத் (Dr. A. B. Keith) என்பவர் கருதுகிறார். முற்கூறிய பதஞ்சலியார் கி. மு. 150-ல் இருந்தவரென்றும் பிற்கூறியவர் கி. பி. ஏழாம் நூற்றாண்டி லிருந்த மாகன் என்ற கவிக்கு மூத்தியவரென்றும் அவ்வாசிரியர் கூறுகிறார். முற்கூறிய பதஞ்சலியே திருமூலருடன் நந்தியருள் பெற்ற நாதருள் ஒருவர் எனக் கொண்டாலும் திருமூலர் கி. மு. 150-ம் ஆண்டுக்கு முற்பட்டவரென்று கொள்ள இயலாது. (2) திருத்தொண்டத் தொகையிலும், நம்பியாண்டார் நம்பிகள் திருத்தொண்டர் திருவந்தாதியிலும் சேக்கிழார் திருத்தொண்டர் புராணத்திலும் திருமூலரும் அவர் வரலாறும் கூறப்பெறுதலால் திரு மூலர் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டுக்கு முந்தியவரென்பதில் ஐய மில்லை. (3) திருமந்திரத்து 204-ம் செய்யுளின் இரண்டாம் அடி இந்நூலின் நடை-ம் பக்கத்திலுள்ள குறிப்பின்படி (கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த) யாப்பருங்கல விருத்தியில் குறிக்கப்பட் டிருத்தலும் இம்முடிபை வலியுறுத்தும். (4) திருவாசகத்துக்கும் திருமந்திரத்துக்கும் பலவகையான சொல், சொற்றொடர், கருத்து ஒற்றுமைகள் காணப்படுதலால் இவ்விரண்டு நூல்கட்கும் ஒரு தொடர்பிருத்தல் வேண்டும். மாணிக்கவாசகர் கி. பி. மூன்றும்

நூற்றுண்டினரென்ற மரபின்படி திருமூலர் கி. பி. மூன்றும் நூற்றுண்டின் பிற்பட்டவராதல் வேண்டும். மாணிக்கவாசகரை கி. பி. ஒன்பதாம் நூற்றுண்டினராகக் கொள்வோர் திருமூலரை அவருக்கு முந்தியவராகக் கொள்ளவேண்டும். திருமந்திரத்து 2651-ம் செய்யுளிற் கூறப்படும் பெருந்துறை, திருப்பெருந்துறை, திருவாவடுதுறை பொதுவாகக் கடவுள் அருட்டுறை என்பவற்றில் ஒன்றைக் குறிக்க வேண்டும். இச்சொல்லிலிருந்துமட்டும் திருமூலர் மாணிக்கவாசகருக்குப் பிற்பட்டவரென்று திடமாகக் கூறவியலாது. (5) திருஞானசம்பந்தர் திருவாவடுதுறைக்குச் சென்ற காலத்துப் பலிபீடத்தினருகில் மணங்கமழ்ந்ததென்றும் அகழ்ந்து பார்த்தபோது திருமந்திரநூற் பிரதி கிடைத்ததென்றும் ஒரு வரலாறு கர்ண பரம்பரையாக வுள்ளதெனச் சில தேவாரப் பிரதிகளிற் குறிக்கப்பட்டுளது. இவ்வரலாறு உண்மையாயின் திருமூலர் திருஞானசம்பந்தர் காலத்துக்கு (கி. பி. 600 - 650) முந்தியவராவார். ஆனால் இவ்வரலாறு பெரிய புராணத்திலாவது திருவாவடுதுறைப் புராணத்திலாவது கூறப்படவில்லை. மேலும் திருமந்திரம் வெளிப்பட்ட முறை திருவாவடுதுறைப் புராணத்தில் மேலே கண்டபடி வேறுவிதமாகக் கூறப்பட்டுளது. மேற்கூறிய பொருள்களையெல்லாம் ஒப்புநோக்கி முடிவு கூறின் பொதுவாகத் திருமூலர் காலம் கி. மு. 150-க்குப் பின் கி. பி. 900-க்கு முன் என்ற காலமாகும். பெரும்பாலும் கி. பி. மூன்றும் நூற்றுண்டுக்குப் பின்னும் கி. பி. ஏழாம் நூற்றுண்டுக்கு முன்னும் இருந்த காலவளவையாயிருத்தல் கூடும். திருமூலர் திருஞானசம்பந்தருக்கு முந்தியவரென்றே உயர் திருவாளர்கள் - மறைமலையடிகள், கா. சுப்பிரமணிய பிள்ளை, டாக்டர் - வை. வே. இரமண சாஸ்திரிகள் முதலியோர் கருதுகின்றனர்.

திருமந்திரம் தமிழ்முதல் நூலா, மொழிபெயர்ப்பா ? :— டாக்டர் - வை. வே. இரமண சாஸ்திரிகள் திருமந்திரம் மொழிபெயர்ப்பென்றும் திருமூலர் கயிலையிலிருந்து " ஸ்ரீமந்த்ர மாலிகா " என்றொரு வடமொழி நூலைக் கொண்டுவந்து தமிழில் மொழிபெயர்த்தாரென்றும் கூறுகின்றார். பெரிய புராணத்திலும் திருவாவடுதுறைப் புராணத்திலும் இவ்வரலாறு கூறப்படவில்லை. மேலும் மொழிபெயர்ப்புக்கு மூவாயிரம் ஆண்டு தேவையில்லை, ஆண்டுக்கொரு பாடல் சொல்லவும் தேவையில்லை, வடமொழியில் இப்போது " ஸ்ரீமந்த்ர மாலிகா " என்றொரு நூல் இருப்பதாகவும்

திருமூலருக் குண்மையின் அவர் அவ்வாறு புகநேர்ந்ததென்றும், திருமூலர் அரண் செய்து வைத்த தமது சொந்த உடலைப் போதி யின்கீழ் மறையப் பொதிந்து இறைவனே வைத்ததாகவும் இப் புராணம் கூறுவதோடு திருமந்திரம் வெளிப்பட்ட விதத்தையும் கீழ்வரும் செய்யுளால் தெரிவிக்கின்றது.

" அறிவான் மிகுந்த சித்தர்குழாம் அலேகத் தெழுதி யவரவரே
நெறியா லுணர்ந்து களித்துலக முழுது முணர நிரப்பினர்கள்
பிறியாச் சிவபோ கம்புசிக்கு மூல ரின்றும் பிரானடியிற்
செறிவா மியோகுற் றிருந்தனர்நீ டூழி பலவும் சென்றனவால் "

" ஒன்றவன் " " நந்தியருள் பெற்ற " முதலிய முப்பது பாடல்களின் கருத்தமைதிகள் இப்புராணத்திற் கூறப்பட்டுள்ளன.

திருமூலர் காலத்தைப்பற்றிய குறிப்புகள் :—(1) மன்று தொழுத பதஞ்சலியும் தம்மோடு நந்தியருள் பெற்றவருள் ஒருவர் என்று 67-ம் பாட்டில் திருமூலர் கூறுகிறார். மகாபாஷ்யம் இயற் றிய பதஞ்சலி வேறு, யோக சூத்திரம் இயற்றிய பதஞ்சலி வேறு என சம்ஸ்கிருத நூல் வரலாற்றுசிரியர் டாக்டர் கீத் (Dr. A. B. Keith) என்பவர் கருதுகிறார். முற்கூறிய பதஞ்சலியார் கி. மு. 150-ல் இருந்தவரென்றும் பிற்கூறியவர் கி. பி. ஏழாம் நூற்றாண்டி லிருந்த மாகன் என்ற கவிக்கு மூந்தியவரென்றும் அவ்வாசிரியர் கூறுகிறார். முற்கூறிய பதஞ்சலியே திருமூலருடன் நந்தியருள் பெற்ற நாதருள் ஒருவர் எனக் கொண்டாலும் திருமூலர் கி. மு. 150-ம் ஆண்டுக்கு முற்பட்டவரென்று கொள்ள இயலாது. (2) திருத்தொண்டத் தொகையிலும், நம்பியாண்டார் நம்பிகள் திருத்தொண்டர் திருவந்தாதியிலும் சேக்கிழார் திருத்தொண்டர் புராணத்திலும் திருமூலரும் அவர் வரலாறும் கூறப்பெறுதலால் திரு மூலர் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டுக்கு மூந்தியவரென்பதில் ஐய மில்லை. (3) திருமந்திரத்து 204-ம் செய்யுளின் இரண்டாம் அடி இந்நூலின் நூ-ம் பக்கத்திலுள்ள குறிப்பின்படி (கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த) யாப்பருங்கல விருத்தியில் குறிக்கப்பட் டிருத்தலும் இம்மூடிபை வலியுறுத்தும். (4) திருவாசகத்துக்கும் திருமந்திரத்துக்கும் பலவகையான சொல், சொற்றொடர், கருத்து ஒற்றுமைகள் காணப்படுதலால் இவ்விரண்டு நூல்கட்கும் ஒரு தொடர்பிருத்தல் வேண்டும். மாணிக்கவாசகர் கி. பி. மூன்றும்

நூற்றுண்டினரென்ற மரபின்படி திருமூலர் கி. பி. மூன்றும் நூற்றுண்டின் பிற்பட்டவராதல் வேண்டும். மாணிக்கவாசகரை கி. பி. ஒன்பதாம் நூற்றுண்டினராகக் கொள்வோர் திருமூலரை அவருக்கு முந்தியவராகக் கொள்ளவேண்டும். திருமந்திரத்து 2651-ம் செய்யுளிற் கூறப்படும் பெருந்துறை, திருப்பெருந்துறை, திருவாவடுதுறை பொதுவாகக் கடவுள் அருட்டுறை என்பவற்றில் ஒன்றைக் குறிக்க வேண்டும். இச்சொல்லிலிருந்துமட்டும் திருமூலர் மாணிக்கவாசகருக்குப் பிற்பட்டவரென்று திடமாகக் கூறவியலாது. (5) திருஞானசம்பந்தர் திருவாவடுதுறைக்குச் சென்ற காலத்துப் பலிபீடத்தினருகில் மணங்கமழ்ந்ததென்றும் அகழ்ந்து பார்த்தபோது திருமந்திரநூற் பிரதி கிடைத்ததென்றும் ஒரு வரலாறு கர்ண பரம்பரையாக வுள்ளதெனச் சில தேவாரப் பிரதிகளிற் குறிக்கப்பட்டுளது. இவ்வரலாறு உண்மையாயின் திருமூலர் திருஞானசம்பந்தர் காலத்துக்கு (கி. பி. 600 - 650) முந்தியவராவார். ஆனால் இவ்வரலாறு பெரிய புராணத்திலாவது திருவாவடுதுறைப் புராணத்திலாவது கூறப்படவில்லை. மேலும் திருமந்திரம் வெளிப்பட்ட முறை திருவாவடுதுறைப் புராணத்தில் மேலே கண்டபடி வேறுவிதமாகக் கூறப்பட்டுளது. மேற்கூறிய பொருள்களையெல்லாம் ஒப்புநோக்கி முடிவு கூறின் பொதுவாகத் திருமூலர் காலம் கி. மு. 150-க்குப் பின் கி. பி. 900-க்கு முன் என்ற காலமாகும். பெரும்பாலும் கி. பி. மூன்றும் நூற்றுண்டுக்குப் பின்னும் கி. பி. ஏழாம் நூற்றுண்டுக்கு முன்னும் இருந்த காலவளவையாயிருத்தல் கூடும். திருமூலர் திருஞானசம்பந்தருக்கு முந்தியவரென்றே உயர் திருவாளர்கள் - மறைமலையடிகள், கா. சுப்பிரமணிய பிள்ளை, டாக்டர் - வை. வே. இரமண சாஸ்திரிகள் முதலியோர் கருதுகின்றனர்.

திருமந்திரம் தமிழ்முதல் நூலா, மொழிபெயர்ப்பா ? :— டாக்டர் - வை. வே. இரமண சாஸ்திரிகள் திருமந்திரம் மொழிபெயர்ப்பென்றும் திருமூலர் கயிலையிலிருந்து " ஸ்ரீமந்த்ர மாலிகா " என்றொரு வடமொழி நூலைக் கொண்டுவந்து தமிழில் மொழிபெயர்த்தாரென்றும் கூறுகின்றார். பெரிய புராணத்திலும் திருவாவடுதுறைப் புராணத்திலும் இவ்வரலாறு கூறப்படவில்லை. மேலும் மொழிபெயர்ப்புக்கு மூவாயிரம் ஆண்டு தேவையில்லை, ஆண்டுக்கொரு பாடல் சொல்லவும் தேவையில்லை, வடமொழியில் இப்போது " ஸ்ரீமந்த்ர மாலிகா " என்றொரு நூல் இருப்பதாகவும்

எப்போதாவது இருந்ததாகவும் தெரியவில்லை, எனவே திருமந்திரம் தமிழ்முதல் நூலே மொழிபெயர்ப்பல்லவென்று திடமாய்க் கூறலாம். வடமொழியிலுள்ள ஆகமப் பொருள்களைத் தமிழில் கூறுவதாகத் திருமூலர் 81-ம் பாட்டில் சொல்வதிலிருந்து திருமந் திரம் மொழிபெயர்ப்பென்று ஏற்படாது. ஆகமப் பொருளை நன்முக மனதிற் பதித்து தமது மொழியிலே திருமந்திரமாகச் செய்தார் என்பதே போதரும்.

ஏரே பாட்டு இருமுறை அல்லது மும்முறை வந்துள்ளதைக் காட்டும் அட்டவணை. எண்கள் பாட்டெண்கள்:—அகன்முன் 448, 3011. அகாரமுயிரே 975, 2503. அண்ணலிருப்பிட 766, 2660. அத்தத்து 2452, 2582. அவ்வுலக 1652, 1869. அறிவறிவென்ற 2362, 2637. அறிவாயசத் 617, 2471. ஆகியவச் 2493, 2570. ஆதாரசோதனை 1492, 1707. ஆமத்தினி 973, 1213. ஆயுமலரின் 1711, 2359. ஆவனவாவ 504, 2175. ஆறையருவி 2530, 2979. இலைந்தனள் 972, 1115. இரவும் பகலும் 1134, 1528. இராப் பகல் 331, 1856. உணர்ந்தெழு 1222, 1306. உணர்வுடை 1786, 2938. உணர்வுமவனே 2857, 3035. உண்ணீர் 336, 882. உய்ந்தன 1460, 2622. ஊழிதோறூழி 1458, 1846. எழுந்துநீர் 72, 553. ஏறுடை 1862, 2111, ஏனோர் பெருமை 490, 2012, 3024. ஐம்பதெழுத் 965, 2698. ஒன்றிய 185, 863. ஒன்று மிரண்டு 236, 2536. ஓலக்கஞ் 108, 540. காயக்குழப் 2071, 2550. காணுறுகோடி 1452, 1848. குறிப்பினுள் 587, 1794. கூடகில்லா 2093, 2559. கொல்லையின் 2016, 2903. சத்திசிவன் 492, 1771. சிவன் முதல் 106, 990. சைவப்பெருமை 1478, 1567. தரிக்கின்ற 1589, 1782. தலைநின்ற 2597, 2845. தானே இருநில 10, 1165. தானேதிசை 412, 2967. துரியமடங்கி 2498, 2572. தேடுந்திசை 406, 414. தோம்பதுந் 2441, 2473, 2826. நின்றது 403, 438. பின்னெய்த 1586, 1629. போகின்ற 457, 2926. போற்றுகின்றேன் 884, 2988. மண்ணென்று 440, 2351. விந்துவும் 961, 1971.

அந்தாதித் தொடையில் வந்துள்ள பாடல்களின் அட்டவணை:- 113—142, 381—387, 475—480, 481—486, 674—703, 712—714, 715—719, 740—788, 803—824, 825—844, 884—913, 919—929, 936—948, 1015—1044, 1045—1074, 1075—1124, 1125—1154, 1155—1290, 1291—1296.

1297—1306, 1308—1318, 1319—1418, 1803—1806,
1809—1813, 1814—1817, 1925—1936, 1937—1945,
1948—1952, 1953—1968, 2373—2381, 2382—2386,
2388—2391, 2393—2396, 2419—2423, 2467—2469,

ஆக 590 பாடல்கள்.

திருமந்திரப் பொருள் விளக்கம் :—திருமந்திரப் பாடல்களுக்கு உரை காணும் முயற்சி நெடுநாளாக நடைபெற்று வந்துள்ளது. மதுரைத் தமிழ்ச்சங்கத்தினர் நூறு பாட்டுக்குரையென்றொரு நூல் வெளியிட்டனர். கோயமுத்தூரை யடுத்த புதுமதுரை திரு. C.S. சுந்தரமுதலியாரவர்கள் உபதேசப்பகுதி என்ற 113–142 எண்ணுள்ள பாடல்கட்குரை யெழுதி வெளியிட்டனர். திரு. மா. வே. விசுவநாத பிள்ளையவர்கள் பதிப்பில் திருமந்திரம் முழுமைக்கும் உரைக்குறிப்பு தரப்பட்டுள்ளது. சில அன்பர்கள் பத்திரிகைகளிற் கட்டுரைகளாகச் சிற்சில பாடல்கட்கு உரையெழுதியுள்ளனர். இவ்வுரைகளெல்லாம் ஓரளவு நூற்கருத்தை யறியத் துணை செய்கின்றன. சிறந்த யோகானுபவம் உடைய சைவப்பெரியார்கள் யோகத்திற் பிறரைப் பயில்வித்து அவ்வப்போது அனுபவ வாயிலாகப் பல நுட்பங்களை விளக்கிலுலன்றித் திருமந்திர நுண்பொருள்கள் உணரப்படுமாறில்லை யென்பது பேரறிஞர் பலர் கருத்து. இப்போது யோகநுட்பங்களை மேல்நாட்டு அறிவியலாராய்ச்சி முறையிற் பரிசோதித்துப் பல முடிபுகளைச் சில அறிஞர்கள் வெளியிட்டுள்ளனர். பம்பாய் மாகாணத்திலுள்ள Lonavla என்ற இடத்தில் Kaivalyadhama எனப் பெயரிய ஒரு யோகப்பயிற்சி நிலையம் செம்மையாக நடைபெற்று வருகிறது. அந்நிலையத் தலைவர் திரு. சுவாமி குவலயானந்தரவர்கள் ஆங்கிலமும் வடமொழியும் கற்று வைத்தியசாத்திரமுறையில் நிலையத்தை நடத்துகிறார். அவரியற்றிய "ஆஸனங்கள்", "பிராணயாமம்", "யோகமீமாஞ்சை" என்ற ஆங்கில நூல்களைப் பயின்றுல் திருமந்திரத்திலுள்ள பல நுட்பங்கள் எளிதிற் புலனுகுமென்று உறுதியாய்க் கூறலாம். டாக்டர் ரேலே என்பவர் இயற்றிய "தி மிஸ்டீரியஸ் குண்டலினி" என்ற நூலும், ஸர்ஜான் வுட்ராப் இயற்றிய "தி ஸெர்பென்ட் பவர்" என்ற நூலும் பெரிதும் துணை செய்வன. லலிதாஸஹஸ்ரநாம பாஷ்யத்திலும் பல நுட்பங்கள் விளக்கப்பட்டுள்ளன.

மிகச் சுருக்கமாகக் கூறின் உடம்பிலுள்ள பல கூறுகளைத் தெய்வின்றிப் பாதுகாத்து, நரம்புத்தொகுதிகளைத் தன்வசப்படுத்திக்

குண்டலிசக்தியை எழுப்பிச் சிரசிலுள்ள பிரமரந்திரத்தின் வழி யாகச் செலுத்தி, ஆங்குள்ள பெருவெளியில் அமிர்தத்தை ஊற் றெடுக்கச் செய்து, ஆங்குறையும் ஒளிவடிவாகிய இறைவனைத் தரிசித்து இன்புற்று அவ்வியாபகத்துள் அடங்கி நிற்றலே திரு மந்திரம் கூறும் சிறந்த யோகமென்று கூறலாம்.

திருமந்திரத்திலும் வேறு சில நூல்களிலும் கூறப்படும் யோகாஸனங்கள், பிராணயாமம் முதலிய மூச்சுப்பயிற்சிகள், முத் திரைகள் முதலியன மேற்கூறிய யோகத்திலுள்ள பல படிகளே யாம். இவை எவ்வாறு யோகசித்தி பெறுதற்குத் துணை செய் கின்றன வென்பது சுவாமி குவலயாநந்தர் இயற்றிய மேற்கூறிய நூல்களில் மிகத் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. இந்நூல் வெளி வருதற்குப் பொருளுதவி செய்த திரு. நாராயணன் செட்டியார் அவர்களும் ஷே சுவாமிகளிடம் சென்று பயிற்சி பெற்றவர்.

தென்முகக் கடவுள் திருவருளால் திருமந்திரம் சைவப் பெரி யோர்களைத் தமிழ்நாட்டில் சிவயோகத்தில் நிறுத்தித் தமிழ் மக்கட்கு யோக நெறியின் நுட்பங்களைப் புலப்படுத்துக, தமிழ்நாடு யோக பூமியாகத் திகழ்வதாகுக.

உ

சிவமயம்

உள்ளுறை

	பக்கம்		பக்கம்
அகத்தியம்	50	அவவேடம்	235
அக்கினி காரியம்	32	அவாவறுத்தல்	370
அசலை	128	அவையடக்கம்	14
அசற்குருநெறி	291	அறஞ்செயான்திறம்	39
அசுத்த சைவம்	201	அறஞ்செய்வான்திறம்	37
அடித்தலையறியும் திறங் கூறல்	344	அறிவுதயம்	334
அடிமுடிதேடல்	55	அற்புதக்கூத்து	392
அடியார் பெருமை	266	அன்புசெய்வாரை அறிவன் சிவன்	42
அட்டமாசித்தி	93	அன்புடைமை	40
அட்டாங்க யோகப்பேறு	92	அஷ்டதளகமலமுக்குண அவத்தை	358
அட்டாங்க யோகம்	80	ஆகமச்சிறப்பு	9
அணைந்தோர் தன்மை	419	ஆகாசப்பேறு	397
அண்டலிங்கம்	244	ஆதனம்	81
அண்டாதிபேதம்	326	ஆதாரவாதேயம்	165
அதிகமாகக் காணப்படும் செய்யுள்கள்	431	ஆதித்தநிலைஅண்டாதித்தன்	281
அதிசூக்கும பஞ்சாக்கரம்	385	ஆத்மலிங்கம்	250
அதோமுக தெரிசனம்	75	ஆயுள் பரிட்சை	111
அத்துவாக்கள்	310	ஆறந்தம்	336
அநுக்கிரகம்	64	ஆறுதாரம்	243
அந்தணரொழுக்கம்	33	ஆறுந்தந்திரம்	224–242
அபக்குவன்	239	இதோபதேசம்	299
அபாத்திரம்	73	இயமம்	80
அமுரிதாரணை	122	இரண்டாம் தந்திரம்	50–79
அருச்சனை	144	இராசதோடம்	35
அருளுடைமையின் ஞானம் வருதல்	234	இலக்கணைத்திரயம்	364
அருளொளி	258	இலிங்க புராணம்	51
அவத்தை பேதம் கீழா லவத்தை	305	இளமை நிலையாமை	27
		உடலிற்பஞ்சபேதம்	302
		உடல்விடல்	304

	பக்கம்
உட்சமயம்	221
உபசாந்தம்	355
உபதேசம்	18
உயிர் நிலையாமை	28
உள்ளுறை	xiii
ஊழ்	404
எட்டாந்தந்திரம்	302–375
எலும்புங் கபாலமும்	55
எரொளிச்சக்கரம்	178
ஏழாந்தந்திரம்	243–301
ஐந்தாந்தந்திரம்	201–223
ஐந்திந்திரிய மடக்குமருமை	288
ஐந்திந்திரியம் அடக்கு முறைமை	289
ஒளி	380
ஒன்பதாந்தந்திரம்	376–431
கடவுள் வாழ்த்து	1
கடுஞ்சுத்த சைவம்	203
கர்ப்பக்கிரியை	66
கலவு செலவு	327
கலிநிலை	103
கல்லாமை	46
கல்வி	43
கள்ளுண்ணாமை	48
காரியகாரணவுபாதி	354
காலசக்கரம்	107
கிரியை	205
குருநிந்தை	77
குருபாரம்பரியம்	10
குருபூசை	263
குருமடதரிசனம்	376
குருமட வரலாறு	15
கூடாவொழுக்கம்	294
கேசரி யோகம்	115
கேடுகண்டிரங்கல்	296

	பக்கம்
கேவல சகல சுத்தம்	316
கேள்வி கேட்டமைதல்	44
கொல்லாமை	29
சகமார்க்கம்	211
சக்கரப்பேறு	54
சங்காரம்	62
சதாசிவலிங்கம்	246
சத்திநிபாதம் தீவிரதரம்	216
சத்திநிபாதம் தீவிரம்	216
சத்திநிபாதம் மந்ததரம்	215
சத்திநிபாதம் மந்தம்	214
சத்திபேதம் திரிபுரை சக்கரம்	150
சத்திய ஞானனந்தம்	400
சந்திரயோகம்	123
சமாதி	90
சமாதிக்கிரியை	272
சம்பிரதாயம்	253
சரியை	204
சரீரசித்தி உபாயம்	105
சர்வசிருஷ்டி	56
சர்வ வியாபி	128
சற்குருநெறி	291
சற்புத்திரமார்க்கம்	212
சன்மார்க்கம்	209
சாமீபம்	214
சாம்பவி மண்டலச் சக்கரம்	184
சாயுச்சியம்	214
சாரூபம்	214
சாலோகம்	213
சிவகுருதரிசனம்	224
சிவசொரூப தரிசனம்	405
சிவதரிசனம்	404
சிவநிந்தை	76
சிவபூசை	259

	பக்கம்
சிவலிங்கம்	252
சிவவேடம்	238
சிவாதித்தன்	284
சிவானந்தக்கூத்து	386
சீவன்	286
சுத்தசைவம்	201
சுத்தநனவாதி பருவம்	311
சுத்தாசுத்தம்	361
சுந்தரக்கூத்து	387
சூக்கும பஞ்சாக்கரம்	384
சூனிய சம்பாஷணை	406
செல்வம்நிலையாமை	25
சொரூபஉதயம்	402
சோதனை	373
ஞாதருஞானஞேயம்	228
ஞானகுருதரிசனம்	377
ஞானம்	208
ஞானலிங்கம்	251
ஞானவேடம்	237
ஞாஞதித்தன்	283
ஞானிசெயல்	370
ஞாஞேதயம்	399
தக்கன்வேள்வி	52
தத்துவமசிவாக்கியம்	364
தவதூடணம்	232
தவம்	231
தவவேடம்	236
தாசமார்க்கம்	213
தாரணை	85
தானச்சிறப்பு	37
திதி	60
தியானம்	87
திரிமூர்த்திகளின் சேட்ட கனிட்ட முறைமை	15
திருக்கூத்துத்தரிசனம்	386

	பக்கம்
திருக்கோயிலிழிவு	75
திருநீறு	237
திருமந்திரத்தொகைச்சிறப்பு	15
திருமூலர் வரலாறு	11
திருவடிப்பேறு	226
திருவம்பலச்சக்கரம்	132
திருவருள்வைப்பு	255
திரோபவம்	63
தீர்த்தம்	74
துறவு	230
தூலபஞ்சாக்கரம்	383
தோத்திரம்	422
நடுவுநிலைமை	47
நல்குரவு	31
நவகுண்டம்	146
நவாக்கரிசக்கரம்	187
நவாவத்தை நவாபிமானி	360
நாலாந்தந்திரம்	128–200
நியமம்	81
நிராகாரம்	220
நின்மலாவத்தை	327
பக்குவன்	240
பசு	286
பசுவிலக்கணம் பிராணன்	285
பதிபசுபாசம் வேறின்மை	341
பதிப்புரை	iii
பதிவலியில் வீரட்டம் எட்டு	50
பதிஞரொந்தானமும் அவத்தை யெனக்காணல்	326
பத்தியுடைமை	372
பரலட்சணம்	347
பராவத்தை	322
பரியங்கயோகம்	119
பாட்டு முதற்குறிப்பகராதி	435
பாத்திரம்	73

	பக்கம்
பாயிரம்	1–17
பிட்சாவிதி	268
பிண்டலிங்கம்	246
பிண்டாதித்தன்	282
பிரணவசமாதி	379
பிரத்தியாகாரம்	84
பிரளயம்	53
பிராணயாமம்	82
பிறன்மனைநயவாமை	30
புருடன்	285
புலால்மறுத்தல்	30
புவனபதிசக்கரம்	185
புறங்கூறுமை	356
புறச்சமயதூஷணம்	217
பூரணக்குகைநெறிச்சமாதி	271
பூரணசக்தி	161
பெரியாரைத்துணைக்கோடல்	79
பொறையுடைமை	78
பொற்பதிக்கூத்து	388
பொற்றில்லைக்கூத்து	390
போசனவிதி	268
போதன்	287
மகளிர்இழிவு	31
மகேசுவரபூசை	264
மத்தியசாக்கிராவத்தை	308
மயேசுரநிந்தை	78
மணவாதித்தன்	283
மார்க்கசைவம்	202
முக்கரணம்	352
முக்குண நிர்க்குணம்	326
முக்குற்றம்	345
முச்சூனியதொந்தத்தசி	353
முச்சொரூபம்	351
முதல்தந்திரம்	18–49
முத்திபேதம்கருமநிருவாணம்	406
முத்தியுடைமை	373
முத்திரைபேதம்	269
முத்துரியம்	349
முப்பதம்	345
முப்பரம்	346
முப்பாழ்	354
மும்முத்தி	351
மூவகைச்சீவவர்க்கம்	71
மூன்றந்தந்திரம்	80–127
மோனசமாதி	416
மோகூகநிந்தை	363
யாக்கை நிலையாமை	22
யோகம்	206
வயிரவச்சக்கரம்	183
வயிரவிமந்திரம்	154
வரையுரை மாட்சி	418
வாய்மை	368
வாரசரம்	114
வாரசூலம்	115
வானச்சிறப்பு	37
விசுவக்கிராசம்	367
விநாயகர்காப்பு	1
விந்துற்பனம்	274
விந்துஜயம் போகசரவோட்டம்	276
வேதச்சிறப்பு	8

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருமந்திரம்

விநாயகர் காப்பு

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே. ௧

1. கடவுள் வாழ்த்து

1 *ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்
நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந் தான்ஐந்து
வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழும்பர்ச்
சென்றனன் தானிருந் தாஞணர்ந் தெட்டே. ௨

2 போற்றிசைத் தின்னுயிர் மன்னும் புனிதனை
நாற்றிசைக் கும்நல்ல மாதுக்கு நாதனை
மேற்றிசைக் குள்தென் திசைக்கொரு வேந்தனுங்
கூற்றுதைத் தானையான் கூறுகின் றேனே. ௩

3 ஒக்கநின் றூனை உலப்பிலி தேவர்கள்
நக்கனென் றேத்திடு நாதனை நாள்தொறும்
பக்கநின் றூர்அறி யாத பரமனைப்
புக்குநின் றுன்னியான் போற்றிசெய் வேனே. ௪

---

* சில பிரதிகளில் இதுவே முதற் செய்யுளாகக் காணப்படுகின்றது. பெரியபுராணம் 'திருமந்திரமாலை...ஒன்ற வன்ரு னென வெடுத்து' (திருமூல நாயனர் புராணம், 26) என்று கூறுவதால் இது வலியுறுகின்றது. வேறு சில பிரதிகளில், இதுவும் அடுத்த செய்யுளும் முறைமாறிக் காணப்படுகின்றன.

4 அகலிடத் தார்மெய்யை அண்டத்து வித்தைப்
புகலிடத் தென்றனைப் போதவிட் டானைப்
பகலிடத் தும்இர வும்பணிந் தேத்தி
இகலிடத் தேஇருள் நீங்கினின் றேனே. ச

5 சிவனெனடொக் குந்தெய்வந் தேடினும் இல்லை
அவனெனடொப் பார்இங்கு யாவரும் இல்லை
புவனங் கடந்தன்று பொன்னெளி மின்னுங்
கவனச் சடைமுடித் தாமரை யானே. ஞ

6 அவனை ஒழிய அமரரும் இல்லை
அவனன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை
அவனன்றி மூவரால் ஆவதொன் றில்லை
அவனன்றி ஊர்புகு மாறறி யேனே. சு

7 முன்னையொப் பாயுள்ள மூவர்க்கு மூத்தவன்
தன்னையொப் பாயொன்றும் இல்லாத் தலைமகன்
தன்னையப் பானனில் அப்பனு மாய்உளன்
பொன்னையொப் பாகின்ற போதகத் தானே. எ

8 தீயினும் வெய்யன் புனலினுந் தண்ணியன்
ஆயினும் ஈசன் அருளறி வார்இல்லை
சேயினும் நல்லன் அணியன்நல் அன்பர்க்குத்
தாயினும் நல்லன் தாழ்சடை யோனே. அ

9 பொன்னுற் புரிந்திட்ட பொற்சடை யென்னப்
பின்னுற் பிறங்க இருந்தவன் பேர்ந்தி
என்னுல் தொழப்படும் எம்இறை மற்றவன்
தன்னுல் தொழப்படு வாரில்லை தானே. கூ

10 தானே இருநிலந் தாங்கிவின் ணைய்நிற்குந்
தானே சுடும்அங்கி ஞாயிறுந் திங்களுந்
தானே மழைபொழி தையலு மாய்நிற்குந்
தானே தடவரை தண்கட லாமே. கo

11 அயலும் புடையும்எம் ஆதியை நோக்கில்
இயலும் பெருந்தெய்வம் யாதுமொன் றில்லை

முயலும் முயலில் முடிவுமற் றுங்கே
பெயலும் மழைமுகிற் போர்ந்தி தானே. கக

12 கண்ணுத லான்ஓரு காதலின் நிற்கவும்
எண்ணிலி தேவர் இறந்தார் எனப்பலர்
மண்ணுறு வாகளுடை வானுறு வாகளுட
அண்ணல் இவன்என் றறியகி லார்களே. கஉ

13 மண்ணளந் தான்மல ரோன்முதல் தேவர்கள்
எண்ணளந் தின்ன நினைக்கிலார் ஈசனை
விண்ணளந் தான்தன்னை மேல்உளந் தாரில்லை
கண்ணளந் தெங்குங் கடந்துநின் றானே. கஎ

14 கடந்துநின் றான்கட லம்மல ராதி
கடந்துநின் றான்கடல் வண்ணன்எம் மாயன்
கடந்துநின் றான்அவர்க் கப்புறம் ஈசன்
கடந்துநின் றான்எங்கும் கண்டுநின் றானே. கச

15 ஆதியு மாய்அர னுப்உட லுள்நின்ற
வேதியு மாய்விரிந் தார்ந்திருந் தான்அருட்
சோதியு மாய்ச்சுருங் காததோர் தன்மையுள்
நீதியு மாய்நிந்த மாகிநின் றானே. கரு

16 கோது குலாவிய கொன்றைக் குழற்சடை
மாது குலாவிய வாள்நுதல் பாகனை
யாது குலாவி அமரரும் தேவரும்
கோது குலாவிக் குணம்பயில் வாரே. கரு

17 காயம் இரண்டுங் கலந்து கொதிக்கினு
மாயங் கத்தூரி யதுமிகும் அவ்வழி
தேசங் கலந்தொரு தேவனென் றெண்ணினும்
ஈசன் உறவுக் கெதிரில்லை தானே. கன

18 அதிபதி செய்து அளகை வேந்தனை
நிதிபதி செய்த நிறைதவ நோக்கி
அதுபதி யாதரித் தாக்கம தாக்கின்
இதுபதி கொள்ளென்ற எம்பெரு மானே. கஅ

இதுபதி ஏலங் கமழ்பொழில் ஏழும்
மூதுபதி செய்தவன் மூதறி வாளன்
விதுபதி செய்தவன் மெய்த்தவம் நோக்கி
அதுபதி யாக அமருகின் றானே. ௧௯

மூடுவும் பிறப்பையும் முன்னே படைத்த
அடிகள் உறையும் அறனெறி காடில்
இடியும் முழக்குமும் ஈசர் உருவங்
கடிமலர்க் குன்ற மலையது தானே. ௨0

வானப் பெருங்கொண்டல் மாலயன் வானவர்
ஊனப் பிறவி ஒழிக்கும் ஒருவனைக்
கானக் களிறு கதறப் பிளந்தனங்
கோனைப் புகழுமின் கூடலு மாமே. ௨௧

3 மனத்தில் எழுகின்ற மாயநன் னுடன்
நினைத்த தறிவ னெனில்தான் நினைக்கிலர்
எனக்கிறை அன்பிலன் என்பர் இறைவன்
பிழைக்கநின் றூர்பக்கம் பேணிநின் றானே. ௨௨

3 வல்லவன் வன்னிக் கிறையிடை வாரண
நில்லென நிற்பித்த நீதிபுள் ஈசனை
இல்லென வேண்டா இறையவர் தம்முதல்
அல்லும் பகலும் அருளுகின் றானே. ௨௩

4 போற்றிசைத் தும்புகழ்ந் தும்புனி தன்னடி
தேற்றுமின் என்றுநஞ் சிவனடிக் கேசென்ம
மாற்றிய தென்று மயலுற்ற சிந்தையை
மாற்றநின் றூர்வழி மன்னிநின் றானே. ௨௪

5 பிறப்பிலி பிஞ்ஞகன் பேரரு ளாளன்
இறப்பிலி யாவர்க்கும் இன்பம் அருளும்
துறப்பிலி தன்னைத் தொழுமின் தொழுதால்
மறப்பிலி மாயா விருத்தமும் ஆமே. ௨௬

6 தொடர்ந்துநின் றூனைத் தொழுமின் தொழுதால்
படர்ந்துநின் றூன்பரி பாரக மூற்றுங்

கடந்துநின் றுன்கம லம்மலர் மேலே
உடந்திருந் தானடிப் புண்ணிய மாமே. உசு

27 சந்தி னெனத்தக்க தாமரை வாண்முகத்
தந்தமில் ஈசன் அருள்நமக் கேயென்று
நந்தியை நாளுநம் வணங்கப் படும்அவர்
புந்தியு ளுள்ளே புகுந்துநின் றுனே. உன

28 இணங்கினின் றுன்னங்கு மாகினின் றுணும்
பிணங்கினின் றுன்பின்முன் னாகினின் றுணும்
உணங்கினின் றுன்அம ராபதி நாதன்
வணங்கினின் றுர்க்கே வழித்துணை யாமே. உஅ

29 காணநில் லாயடி யேற்குற வாருளர்
காணநில் லென்உன்னை கான்தழு விக்கொளக்
கோணநில் லாத குணத்துடி யார்மனத்
தாணிய னாகி அமர்ந்துநின் றுனே. உக

30 வானின் றணழக்கும் மழைபோல் இறைவனுக்
தானின் றணழக்குங்கொல் என்று தயங்குவார்
ஆனின் றணழக்கு மதுபோல்என் நந்தியை
நானின் றணழப்பது ஞானங் கருதியே. ஈ0

31 மண்ணகத் தான்ஒக்கும் வானகத்தான் ஒக்கும்
விண்ணகத் தான்ஒக்கும் வேதகத் தான்ஒக்கும்
பண்ணகத் தின்னிசை பாடலுற் றுனுக்கே
கண்ணகத் தேநின்று காதலித் தேனே. ஈக

32 தேவர் பிரான்நகம் பிரான்திசை பத்தையு
மேவு பிரான்விரி நீருல கேழையும்
தாவு பிரான்தன்மை தானறி வாரில்லை
பாவு பிரான்அருட் பாடலு மாமே. ஈஉ

33 பதிபல வாயது பண்டிவ் வுலகம்
விதிபல செய்தொன்று மெய்ம்மை உணராள்
துதிபல தோத்திரஞ் சொல்லவல் லாரும்
மதியிலர் நெஞ்சினுள் வாடுகின் றுரே. ஈஈ

சாந்து கமழுங் கவரியின் கந்தம்போல்
வேந்தன் அமரர்க் கருளிய மெய்ந்நெறி
ஆர்ந்த சுடரன்ன ஆயிர நாமமும்
போந்தும் இருந்தும் புகழுகின் றேனே. ௪

3 ஆற்றுகி லாவழி யாகும் இறைவனைப்
போற்றுமின் போற்றிப் புகழ்மின் புகழ்ந்திடில்
மேற்றிசைக் குங்கிழக் குத்திசை எட்டொடு
மாற்றுவன் அப்படி யாட்டவு மாமே. ௯

6 அப்பனை நந்தியை ஆரா அமுதினை
ஒப்பிலி வள்ளலை ஊழி முதல்வனை
எப்பரி சாயினும் ஏத்துமின் ஏத்திணல்
அப்பரி சீசன் அருள்பெற லாமே. ௫

7 நாணுமின் றேத்துவன் நாள்தொறும் நந்தியைத்
தாணுமின் முன்கழல் தாளைக்கு மேனியன்
வானில்நின் மூர்மதி போல்உடல் உள்ளுவக்
தானில்நின் முங்கே உயிர்க்கின்ற வாறே. ௬

8 பிதற்றெழி யேன்பெரி யான்அரி யானைப்
பிதற்றெழி யேன்பிற வாஉரு வானைப்
பிதற்றெழி யேன்எங்கள் போர்ந்தி தன்னைப்
பிதற்றெழி யேன்பெரு மைத்தவன் நானே. ௭

39 வாழ்த்தவல் லார்மனத் துள்ளுறு சோதியைத்
தீர்த்தனை அங்கே திளைக்கின்ற தேவனை
எத்தியும் எம்பெரு மான்என் றிறைஞ்சியும்
ஆத்தஞ்செய் தீசன் அருள்பெற லாமே. ௪

40 குறைந்தடைந் தீசன் குறைகழல் நாடும்
நிறைந்தடை செம்பொனின் நேரொளி ஒக்கும்
மறைஞ்சடஞ் செய்யாது வாழ்த்தவல் லார்க்குப்
புறஞ்சடஞ் செய்வான் புகுந்துநின் றானே. ௩

41 சினஞ்செய்த நஞ்சுண்ட தேவர் பிரானைப்
நெஞ்சிடை போற்றவல் லார்க்குக்

கனஞ்செய்த வாள்நுதல் பாகனும் அங்கே
இனஞ்செய்த மான்போல் இணைங்கின்ற னனே. சக

42 போயபரன் தன்னைப் புகழ்வார் பெறுவது
நாயக னென்முடி செய்தது வேநல்கு
மாயகஞ் சூழ்ந்து வரவல்ல ராகிலும்
வேயன தோளிக்கு வேந்தென்றுந் தானே. சஉ

43 அரனடி சொல்லி அரற்றி அழுது
பரனடி நாடியே பாவிப்ப நாளும்
உரனடி செய்தங் கொதுங்கவல் லார்க்கு
நிரனடி செய்து நிறைந்துநின் றனே. சஙூ

44 போற்றினன் பார்அம ரர்புனி தன்அடி
போற்றினன் பாரசு ரர்புனி தன்அடி
போற்றினன் பார்மனி தர்புனி தன்அடி
போற்றினன் அன்புள் பொலியவைத் தேனே. சச

45 விதிவழி அல்லதிவ் வேலை உலகும்
விதிவழி இன்பம் விருந்தமும் இல்லை
துதிவழி நித்தலுஞ் சோதிப் பிரானும்
பதிவழி காட்டும் பகலவ னுமே. சஞ

46 அந்திவண் ணனரு னேசிவ னேனென்று
சிந்தைசெய் வண்ணந் திருந்தடி யார்தொழ
முந்திவண் ணமுதல் வாபர னேனென்று
புந்தி வண்ணன்எம் மனம்புகுந் தானே. சஙூ

47 மனைபுள் இருந்தவர் மாதவர் ஒப்பர்
நினைவுள் இருந்தவர் நேசத்துள் நிற்பர்
பனைபுள் இருந்த பருந்தது போல
நினையாத வர்க்கில்லை நின்இன்பந் தானே. சஎ

48 அடியார் பரவும் அமரர் பிரானை
முடியால் வணங்கி முதல்வனை முன்னிப்
படியார் அருளும் பரம்பரன் எந்தை
விடியா விளக்கென்று மேவினன் றேனே. சஅ

பரைபசு பாசத்து நாதனை உள்ளி
உரைபசு பாசத் தொருங்கவல் லார்க்குத்
திரைபசு பாவச் செழுங்கடல் நீந்திக்
கரைபசு பாசங் கடந்தெய்த லாமே. சுக

சூடுவன் நெஞ்சிடை வைப்பன் பிரான்என்று
பாடுவன் பன்மலர் தூவிப் பணிந்துநின்
றூடுவன் ஆடி அமரர்பி ரான்என்று
நாடுவன் நானின் றறிவது தானே. நம

2. வேதச் சிறப்பு

வேதத்தை விட்ட அறம்இல்லை வேதத்தின்
ஓதத் தகும்அறம் எல்லாம் உளதாக்க
வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற
வேதத்தை ஓதியே வீடுபெற் றார்களே. க

2 வேதம் உரைத்தானும் வேதிய னாகிலன்
வேதம் உரைத்தானும் வேதா விளங்கிட
வேதம் உரைத்தானும் வேதியர் வேள்விக்காய்
வேதம் உரைத்தானும் மெய்ப்பொருள் காட்டவே. உ

3 இருக்குரு வாம்எழில் வேதத்தி னுள்ளே
உருக்குணர் வாயுணர் வேதத்துள் ஓங்கி
வெருக்குரு வாகிய வேதியர் சொல்லுங்
கருக்குரு வாய்நின்ற கண்ணனு மாமே. ங

4 திருநெறி யாவது சித்தசித் தன்றிப்
பெருநெறி யாய பிரானை நினைந்து
குருநெறி யாஞ்சிவ மாநெறி கூடும்
ஒருநெறி ஒன்றுக வேதாந்தம் ஓதுமே. சு

55 ஆறங்க மாய்வரு மாமறை ஓதினைக்
கூறங்க மாகக் குணம்பயில் வாரில்லை
வேறங்க மாக விளைவுசெய் தப்புறம்
பேறங்க மாகப் பெருக்குகின் றாரே. ஞ

56 பாட்டும் ஒலியும் பரக்குங் கணிகையர்
ஆட்டும் அழுத அவனியின் மாட்டாதார்
மேட்டு விருப்பார் விரதமில் லாதவர்
ஈட்டும் இடஞ்சென் றிகலலுற் றூரே. சு

3. ஆகமச் சிறப்பு

57 அஞ்சன மேனி அரிவையோர் பாகத்தன்
அஞ்சொ டிருபத்து மூன்றுள ஆகமம்
அஞ்சலி கூப்பி அறுபத் தறுவரும்
அஞ்சா முகத்தில் அரும்பொருள் கேட்டதே. க

58 அண்ணல் அருளால் அருளுந் சிவாகமம்
எண்ணில் இருபத்தெண் கோடிநூ றாயிரம்
விண்ணவர் ஈசன் விழுப்பம் உரைத்தனர்
எண்ணின் றப்பொருள் ஏத்துவன் நானே. உ

59 பண்டித ராவார் பதினெட்டுப் பாடையுங்
கண்டவர் கூறுங் கருத்தறி வார்என்க
பண்டிதர் தங்கள் பதினெட்டுப் பாடையும்
அண்ட முதலான் அறஞ்சொன்ன வாறே. ங

60 அண்ணல் அருளால் அருளுந்தி வ் யாகமம்
விண்ணில் அமரர் தமக்கும் விளங்கரி
தெண்ணில் எழுபது கோடிநூ றாயிரம்
எண்ணிலும் நீர்மேல் எழுத்தது ஆகுமே. ச

61 பரஞ்சுப் பராபரங் காட்டி உலகிற்
றரஞ்சுச் சிவதன்மந் தானைசொல் காலத்
தரஞ்சுய் அமரர்கள் அர்ச்சிக்கு நந்தி
உரஞ்சுகி ஆகமம் ஓங்கினின் றூனே. ஞ

62 சிவமாம் பரத்தினிற் சத்தி சதாசிவம்
உவமா மகேசர் உருத்திர தேவர்
தவமால் பிரமீசர் தம்மில்தாம் பெற்ற
நவஆ கமம்எங்கள் நந்திபெற் றூனே. ட

63 பெற்றநல் ஆகமங் காரணங் காமிகம்
உற்றநல் ஷீரம் உயர்சிந்தம் வாதுளம்
மற்றவ் விபாமள மாகுங்கா லோத்தரந்
துற்றநற் சுப்பிரஞ் சொல்லு மகுடமே. எ

64 அண்ணல் அருளால் அருளுஞ் சிவாகமம்
எண்ணிலி கோடி தொகுத்திடு மாயினும்
அண்ணல் அறைந்த அறிவறி யாவிடின்
எண்ணிலி கோடியும் நீர்மேல் எழுத்தே. அ

65 மாரியுங் கோடையும் வார்பனி தூங்கநின்
றேரியு நின்றங் கிளைக்கின்ற காலத்து
ஆரிய முந்தமி ழும்உட னேசொலிக்
காரிகை யார்க்குக் கருணைசெய் தானே. கூ

66 அவிழ்க்கின்ற வாறும் அதுகட்டு மாறுஞ்
சிமிட்டலைப் பட்டுயிர் போகின்ற வாறுந்
தமிழ்ச்சொல் வடசொல் எனுமிவ் விரண்டும்
உணர்த்தும் அவனை உணரலு மாமே. கo

4. குரு பாரம்பரியம்

67 நந்தி அருள்பெற்ற நாதனை நாடிடின்
நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்ரமர்
என்றிவர் என்னை டெண்மரு மாமே. க

68 நந்தி அருளாலே நாதனும் போற்றெற்றும்
நந்தி அருளாலே மூலனை நாடினேம்
நந்தி அருளாவ தென்செயும் நாட்டினில்
நந்தி வழிகாட்ட நானிருந் தேனே. உ

69 மந்திரம் பெற்ற வழிமுறை மாலாங்கன்
இந்திரன் சோமன் பிரமன் உருத்திரன்
கந்துருக் காலாங்கி கஞ்ச மலையனை
டிந்த எழுவரும் என்வழி யாமே. ங

70 நால்வரும் நாலு திசைக்கொன்று நாதர்கள்
நால்வரும் நாண விதப்பொருள் கைக்கொண்டு
நால்வரும் நான்பெற்ற தெல்லாம் பெறுகென
நால்வருந் தேவராய் நாதரா னுர்களே. ச

71 மொழிந்தது மூவர்க்கும் நால்வர்க்கும் ஈசன்
ஒழிந்த பெருமை இறப்பும் பிறப்புந்
செழுஞ்சுடர் மூன்றொளி யாகிய தேவன்
கழிந்த பெருமையைக் காட்டகி லானே. ஞ

72 எழுந்துநீர் பெய்யினும் எட்டுத் திசையும்
செழுந்தண் நியமங்கள் செய்மினென் றண்ணல்
கொழுந்தண் பவளக் குளிர்சடை போலே
அழுந்திய நால்வர்க் கருள்புரிந் தானே. கூ

5. திருமூலர் வரலாறு

73 நந்தி இணையடி நான்தலை மேற்கொண்டு
புந்தியின் உள்ளே புகப்பெய்து போற்றிசெய்
நந்தி மதிபுனை அரனடி நாள்தொறுஞ்
சிந்தைசெய் தாகமஞ் செப்பலுற் றேனே. கூ

74 செப்புஞ் சிவாகமம் என்னும்அப் போர்பெற் றும்
அப்படி நல்கும் அருள்நந்தி தாள்பெற் றுத்
தப்பிலா மன்றில் தனிக்கூத்துக் கண்டபின்
ஒப்பில் எழுகோடி யுகம்இருந் தேனே. உ

75 இருந்தவக் காரணங் கேளிந் திரனே
பொருந்திய செல்வப் புவன பதியாம்
அருந்தவச் செல்வியைச் சேவித் தடியேன்
பரிந்துடன் வந்தனன் பத்திபி ணலே. ஊ

76 சதாசிவந் தத்துவம் முத்தமிழ் வேதம்
மிதாசனி யாதிருந் தேனின்ற காலம்
இதாசனி யாதிருந் தேன்டன நீங்கி
உதாசனி யாதுட னேஉணர்ந் தோமால். ச

77 மாலாங்க னேயிங்கு யான்வந்த காரணம்
நீலாங்க மேனியள் கேரிழை யாளொடு
மூலாங்க மாக மொழிந்த திருக்கூத்தின்
சீலாங்க வேதத்தைச் செப்பவந் தேனே. ந

78 கேரிழை யாவாள் நிரதிச யானந்தப்
பேருடை யாளென் பிறப்பறுத் தாண்டவள்
சீருடை யாள்சிவ னுவடி தண்டுணை
சீருடை யாள்பதஞ் சேர்ந்திருந் தேனே. சு

79 சேர்ந்திருந் தேன்சிவ மங்கைதன் பங்கனைச்
சேர்ந்திருந் தேன்சிவ னுவடி தண்டுணை
சேர்ந்திருந் தேன்சிவ போதியின் நீழலிற்
சேர்ந்திருந் தேன்சிவன் நாமங்கள் ஓதியே. எ

80 இருந்தேன் இக்காயத்தே எண்ணிலி கோடி
இருந்தேன் இராப்பகல் அற்ற இடத்தே
இருந்தேன் இமையவர் ஏத்தும் பதத்தே
இருந்தேன் என்னந்தி இணையடிக் கீழே. அ

81 பின்னை நின்னென் றெனனே பிறவி பெறுவது
முன்னை நன்னுக முயல்தவஞ் செய்கிலர்
என்னை நன்னுக இறைவன் படைத்தனன்
தன்னை நன்னுகத் தமிழ்ச்செப்பு மாறே. க

82 ஞானத் தலிவிதன் நந்தி நகர்புக்கு
ஊனமில் ஒன்பது கோடி யுகந்தனுள்
ஞானப்பா லாட்டி நாதனை அர்ச்சித்து
நானும் இருந்தேன்நற் போதியின் கீழே. கo

83 செல்கின்ற வாறறி சிவமுனி சித்தசன்
வெல்கின்ற ஞானத்து மிக்கோர் முனிவராப்பப்
பல்கின்ற தேவர் அசுரர் நரர்தம்பால்
ஒல்கின்ற வான்வழி யூடுவந் தேனே. கக

77 மாலாங்க னேயிங்கு யான்வந்த காரணம்
நீலாங்க மேனியள் கேரிழை யாளொடு
மூலாங்க மாக மொழிந்த திருக்கூத்தின்
சீலாங்க வேதத்தைச் செப்பவந் தேனே. நு

78 கேரிழை யாவாள் நிரதிச யானந்தப்
பேருடை யாளென் பிறப்பறுத் தாண்டவள
சீருடை யாள்சிவ னுவடி தண்டுணை
சீருடை யாள்பதஞ் சேர்ந்திருந் தேனே. சூ

79 சேர்ந்திருந் தேன்சிவ மங்கைதன் பங்கனைச்
சேர்ந்திருந் தேன்சிவ னுவடி தண்டுணை
சேர்ந்திருந் தேன்சிவ போதியின் நீழலிற்
சேர்ந்திருந் தேன்சிவன் நாமங்கள் ஓதியே. எ

80 இருந்தேன்இக் காயத்தே எண்ணிலி கோடி
இருந்தேன் இராப்பகல் அற்ற இடத்தே
இருந்தேன் இமையவர் ஏத்தும் பதத்தே
இருந்தேன் என்னந்தி இணையடிக் கீழே. அ

81 பின்னனின் றென்னை பிறவி பெறுவது
முன்னனன் முக முயல்தவஞ் செய்கிலர்
என்னனன் முக இறைவன் படைத்தனன்
தன்னனன் முகந் தமிழ்ச்செப்பு மாறே. கூ

82 ஞானத் தலிவிதன் நந்தி நகர்புக்கு
ஊனமில் ஒன்பது கோடி யுகந்தனுள்
ஞானப்பா லாட்டி நாதனை அர்ச்சித்து
நானும் இருந்தேன்நற் போதியின் கீழே. கo

83 செல்கின்ற வாறறி சிவமுனி சித்தசன்
வெல்கின்ற ஞானத்து மிக்கோர் முனிவராப்பப்
பல்கின்ற தேவர் அசுரர் நரர்தம்பால்
ஒல்கின்ற வான்வழி யூடுவந் தேனே. கக

91 வினக்கிப் பரமாகும் மெய்ஞ்ஞானச் சோதி
ஆளப்பில் பெருமையன் ஆனந்த நந்தி
தாளக்கமும் ஆனந்தக் கூத்தன்சொற் போந்து
வாளப்பில் கபிலை வழியில்வந் தேனே. ௧௯

92 நந்தி அருளாலே மூலனை நாடிப்பின்
நந்தி அருளாலே சதாசிவ ணுபினேன்
நந்தி அருளால்மெய்ஞ் ஞானத்துள் நண்ணினேன்
நந்தி அருளாலே நானிருந் தேனே. ௨0

93 இருக்கில் இருக்கும் எண்ணிலி கோடி
அருக்கின்ற மூலத்துள் அங்கே இருக்கும்
அருக்கனுஞ் சோமனுமம் ஆரழல் வீச
உருக்கிய சோமம் ஒளிவிடுந் தானே. ௨௧

94 பிதற்றுகின் றேன்என்றும் போர்ந்தி தன்னை
இயற்றுவன் நெஞ்சத் திரவும் பகலும்
முயற்றுவன் ஓங்கொளி வண்ணன்எம் மானை
இயற்றிகழ் சோதி இறைவனு மாமே. ௨௨

6. அவையடக்கம்

95 ஆறறி வார்எங்கள் அண்ணல் பெருமையை
யாரறி வார்இந்த அகலமும் நீளமும்
போரறி யாத பெருஞ்சுடர் ஒன்றதின்
வேரறி யாமை விளம்புகின் றேனே. ௧

96 பாடவல் லார்நெறி பாட அறிகிலேன்
ஆடவல் லார்நெறி ஆட அறிகிலேன்
நாடவல் லார்நெறி நாட அறிகிலேன்
தேடவல் லார்நெறி தேடகில் லேனே. ௨

97 மன்னிய வாய்மொழி யாலும் மதித்தவர்
இன்னிசை உள்ளே எழுகின்ற ஈசனைப்
பின்னை உலகம் படைத்த பிரமனும்
உன்னும் அவனை உணரலு மாமே. ௩

98 தத்துவ ஞானம் உரைத்தது தாழ்வரை
மூத்திக் கிருந்த முனிவருந் தேவரும்
ஒத்துடன் வேரு யிருந்து துதிசெயும்
பத்திமை யால்இப் பயனறி யாரே. ச

7. திருமந்திரத் தொகைச்சிறப்பு

99 மூலன் உரைசெய்த மூவா யிரந்தமிழ்
ஞாலம் அறியவே கந்தி அருளது
காலை எழுந்து கருத்தறிந் தோதிடின்
ஞாலத் தலைவனை கண்ணுவ ரன்றே. க

100 வைத்த பரிசே வகைவகை கன்னூலின்
மூத்தி முடிவிது மூவா யிரத்திலை
புத்திசெய் பூர்வத்து மூவா யிரம்பொது
வைத்த சிறப்புத் தருமிவை தானே. உ

8. குருமட வரலாறு

101 வந்த மடமெழு மன்னுஞ்சன் மார்க்கத்தின்
மூந்தி உதிக்கின்ற மூலன் மடவரை
தந்திரம் ஒன்பது சார்வுமூ வாயிரஞ்
சுந்தர ஆகமச் சொல்மொழிந் தானே. க

102 கலந்தருள் காலாங்கர் தம்பால கோரர்
கலந்தரு மாளிகைத் தேவர்கா தாந்தர்
புலங்கொள் பரமானந் தர்போக தேவர்
நிலந்திகழ் மூலர் நிராமயத் தோரே. உ

9. திருமூர்த்திகளின் சேட்ட கனிட்ட முறைமை

103 அளவில் இளமையும் அந்தமும் ஈறும்
அளவியல் காலமும் காலும் உணரில்
தளர்வில்லன் சங்கரன் தன்னடி யார்சொல்
அளவில் பெருமை அரிஅயற் காமே. க

104 ஆதிப் பிரானும் அணிமணி வண்ணனும்
ஆதிக் கமலத் தலர்மிசை யானுஞ்
சோதிக்கில் மூன்றுந் தொடர்ச்சியில் ஒன்றெனுஞ்
பேதித் துலகம் பிணங்குகின் றூர்களே. உ

105 ஈசன் இருக்கும் இருவினைக் கப்புறம்
பீசம் உலகிற் பெருந்தெய்வ மானது
ஈசன் அதுஇது என்பார் நினைப்பிலார்
தூசு பிடித்தவர் தூரறிந் தார்களே. ங

106 சிவன்முதல் மூவரோ டைவர் சிறந்த
அவைமுதல் ஆறிரண் டொன்றுடொன் றூகும்
அவைமுதல் விந்துவும் நாதமும் ஓங்கச்
சவைமுதற் சங்கரன் தன்பெயர் தானே. ச

107 பயன்அறிந் தவ்வழி எண்ணும் அளவில்
அயனெடு மால்நமக் கன்னியம் இல்லை
நயனங்கள் மூன்றுடை நந்தி தமராம்
வயனம் பெறுவீர்அவ் வானவ ராலே. ஞ

108 ஓலக்கஞ் சூழ்ந்த உலப்பிலி தேவர்கள
பாலொத்த மேனி பணிந்தடி யேன்தொழ
மாலுக்கும் ஆதிப் பிரமற்கும் ஒப்புநீ
ஞாலத்து நம்மடி நல்கிடென் றூனே. ட

109 வானவர் என்றும் மனிதர்இவர் என்றுந்
தேனமர் கொன்றைச் சிவனருள் அல்லது
தானமர்ந் தோருந் தனித்தெய்வம் மற்றில்லை
ஊனமர்ந் தோரை உணர்வது தானே. எ

110 சோதித்த பேரொளி மூன்றைந் தெனநின்ற
ஆதிக்கண் ஆவ தறிகிலர் ஆதர்கள்
நீதிக்கண் ஈசன் நெடுமால் அயன்என்று
பேதித் தவரைப் பிதற்றுகின் றூரே. அ

111 பரத்திலே ஒன்றுப்உள் ளாய்ப் புறமாகி
வரத்தினுள் மாயவ னுய்அய னுகித்
தரத்தினுள் தான்பல தன்மைய னுகிக்
கரத்தினுள் நின்று கழிவுசெய் தானே. கூ

112 *தாளொரு கூறு சதாசிவன் எம்இறை
வாளொரு கூறு மருவியும் அங்குளான்
கோளொரு கூறுடல் உள்நின் றுயிர்க்கின்ற
தாளொரு கூறு சலமய னுமே. கூ

[illegible]

* திரு. மா. வே. விசுவநாத பிள்ளையவர்கள் பதிப்பில் 51—112 வரையுள்ள பாடல்கள் முறை மாறிக் காணப்படுகின்றன. இப் பதிப்பில் 51—94, 95—98, 99, 100, 101, 102, 103—112 என்பன அப்பதிப்பில் முறையே 61—104, 109—112, 107, 108, 105, 106, 51—60 ஆக உள்ளன.

முதல் தந்திரம்

10. உபதேசம்

113 விண்ணின் றிழிந்து வினைக்கீடாய் மெய்கொண்டு
தண்ணின்ற தாளத் தலைக்காவல் முன்வைத்து
உண்ணின் றுருக்கியொ ரொப்பிலா ஆனந்தக்
கண்ணின்று காட்டிக் களிம்பறுத் தானே. க

114 களிம்பறுத் தான்எங்கள் கண்ணுதல் நந்தி
களிம்பறுத் தான்அருட் கண்விழிப் பித்துக்
களிம்பணு காத கதிரொளி காட்டிப்
பளிங்கிற் பவளம் பதித்தான் பதியே. உ

115 பதிபசு பாசம் எனப்பகர் மூன்றிற்
பதியினைப் போற்பசு பாசம் அணுதி
பதியினைச் சென்றணு காப்பசு பாசம்
பதியணு கிற்பசு பாசம் நிலாவே. ங

116 வேயின் எழுங்கனல் போலேஇம் மெய்யெனுங்
கோயி லிருந்து குடிகொண்ட கோன்நந்தி
தாயினும் மும்மலம் மாற்றித் தயாளன்னுங்
தோயம தாய்எழுஞ் சூரிய னுமே. ச

117 சூரிய காந்தமுஞ் சூழ்பஞ்சும் போலவே
சூரிய காந்தஞ் சூழ்பஞ்சைச் சுட்டிடா
சூரியன் சந்நிதி யிற்சுடு மாறுபோல்
ஆரியன் தோற்றமுன் அற்ற மலங்களே. ஞ

118 மலங்களைத் தாமென மாற்றி அருளித்
தலங்களைத் தானற் சதாசிவ மான
புலங்களைத் தானப் பொதுவினுள் நந்தி
கலங்களைத் தானுள் கயந்தான் அறிந்தே. ட

119 அறிவைவம் புலனுட னேநான் றதாகி
நெறியறி யாதுற்ற நீராழம் போல
அறிவறி வள்ளே அழிந்தது போல
குறியறி விப்பான் குருபர னுமே. என

120 ஆமேவு பால்நீர் பிறிக்கின்ற அன்னம்போல்
தாமே தனிமன்றில் தன்னந் தனிநித்தந்
தீமேவு பல்கர ணங்களுள் உற்றன
தாமேழ் பிறப்பொரி சார்ந்தவித் தாமே. அ

121 வித்தைக் கெடுத்து வியாக்கிரத் தேதமிகச்
சுத்தத் துரியம் பிறந்து துடக்கற
ஒத்துப் புலனுயிர் ஒன்றுபோ டுடம்பொடு
செத்திட் டிருப்பர் சிவயோகி யார்களே. கூ

122 சிவயோக மாவது சித்தசித் தென்று
தவயோகத் துள்புக்குத் தன்னெளி தானுய்
அவயோகஞ் சாரா தவன்பதி போக
நவயோக நந்தி நமக்களித் தானே. கo

123 அளித்தான் உலகெங்குந் தானன உண்மை
அளித்தான் அமரர் அறியா உலகம்
அளித்தான் திருமன்றுள் ஆடுந் திருத்தாள்
அளித்தான் பேரின்பத் தருள்வெளி தானே. கக

124 வெளியில் வெளிபோய் விரவிய வாறும்
அளியில் அளிபோய் அடங்கிய வாறும்
ஒளியில் ஒளிபோய் ஒருங்கிய வாறுந்
தெளியும் அவரே சிவசித்தர் தாமே. கஉ

125 சித்தர் சிவலோகம் இங்கே தெரிசித்தோர்
சத்தமுஞ் சத்த முடிவுந்தம் முள்கொண்டோர்
நித்தர் நிமலர் நிராமயர் நீள்பர
முத்தர்தம் முத்தி முதல்முப்பத் தாறே. கஙூ

126 முப்பதும் ஆறும் படிமுத்தி ஏணியாய்
ஒப்பிலா ஆனந்தத் துள்ளொளி புக்குச்

செப்ப அரிய சிவங்கண்டு தான்தெளிந்
தப்பரி சாக அமர்ந்திருந் தாரே. கச

127 இருந்தார் சிவமாகி எங்குந் தாமாகி
இருந்தார் சிவன்செயல் யாவையும் நோக்கி
இருந்தார் மூக்காலத் தியல்பைக் குறித்தங்
கிருந்தார் இழவுவந் தெய்திய சோம்பே. கஞ

128 சோம்பர் இருப்பது சுத்த வெளியிலே
சோம்பர் கிடப்பதுஞ் சுத்த வெளியிலே
சோம்பர் உணர்வு சுருதி முடிந்திடஞ்
சோம்பர்கண் டாரச் சுருதிக்கண் தூக்கமே. கசு

129 தூங்கிக்கண் டார்சிவ லோகமும் தம்உள்ளே
தூங்கிக்கண் டார்சிவ யோகமும் தம்உள்ளே
தூங்கிக்கண் டார்சிவ போகமும் தம்உள்ளே
தூங்கிக் கண்டார்நிலை சொல்வதெவ் வாறே. கஎ

130 எவ்வா றுகாண்பான் அறிவு தனக்கெல்லை
அவ்வா றருட்செய்வன் ஆதி யரன்தானும்
ஒவ்வாத மன்றுள் உடைமகாண ஆடிநஞ்
செவ்வானிற் செய்ய செழுஞ்சுடர் மாணிக்கம். கஅ

131 மாணிக்கத் துள்ளே மரகதச் சோதியாய்
மாணிக்கத் துள்ளே மரகத மாடமாய்
ஆணிப்பொன் மன்றினில் ஆடுந் திருக்கூத்தைப்
பேணித் தொழுதென்ன பேறுபெற் றாரே. கக

132 பெற்றூர் உலகிற் பிரியாப் பெருநெறி
பெற்றூர் உலகிற் பிறவாப் பெரும்பயன்
பெற்றூர்அம் மன்றிற் பிரியாப் பெரும்பேறு
பெற்றூர் உலகுடன் பேசாப் பெருமையே. உ0

133 பெருமை சிறுமை அறிந்தெம் பிரான்போல்
அருண்மை எளிமை அறிந்தறி வாரார்
ஒருமையுள் ஆமைபோல் உள்ளைந் தடக்கி
இருமையுங் கேட்டிருந் தார்புரை அற்றே. உக

134 புரைஅற்ற பாலினுள் நெய்கலந் தாற்போல்
திரைஅற்ற சிந்தைதங் ஆரியன் செப்பும்
உரையற் றுணர்வோர் உடம்பிங் கொழிந்தாற்
கரையற்ற சோதி கலந்தசத் தாமே. ௨௨

135 சத்த முதல்ஐந்துந் தன்வழித் தான்சாரில்
சித்துக்குச் சித்தன்றிச் சேர்விடம் வேறுண்டோ
சுத்த வெளியிற் சுடரிற் சுடர்சேரும்
அத்தம் இதுகுறித் தாண்டுகொள் அப்பிலே. ௨௩

136 அப்பினிற் கூர்மை ஆதித்தன் வெம்மையால்
உப்பெனப் பேர்பெற் றுருச்செய்த அவ்வுரு
அப்பினிற் கூடிய தொன்றுகு மாறுபோற்
செப்பினிற் சிவன் சிவத்துள் அடங்குமே. ௨௪

137 அடங்குபே ரண்டத் தணுஅண்டஞ் சென்றங்
கடங்கொண்ட தில்லை இதுவன்றி வேறுண்டோ
கடந்தோறும் நின்ற உயிர்க்கரை காணில்
திடம்பெற நின்றுன் திருவடி தானே. ௨௫

138 திருவடி யேசிவ மாவது தேரில்
திருவடி யேசிவ லோகஞ் சிந்திக்கில்
திருவடி யேசெல் கதியது செப்பில்
திருவடி யேதஞ்சம் உள்தெளி வார்க்கே. ௨௬

139 தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே. ௨௭

140 தானே புலன்ஐந்துந் தன்வச மாயிடுந்
தானே புலன்ஐந்துந் தன்வசம் போயிடுந்
தானே புலன்ஐந்துந் தன்னில் மடைமாறும்
தானே தனித்தெம் பிரான்தனைச் சந்தித்தே. ௨௮

141 சந்திப் பதுநந்தி தன்திருத் தாளிணை
சிந்திப் பதுநந்தி செய்ப தருமேனி
வந்திப் பதுநந்தி நாமம்என் வாய்மையாற்
புந்திக்குள் நிற்பது நந்திபொற் போதமே. உக

142 போதந் தருமெங்கள் புண்ணிய நந்தியைப்
போதந் தனில்வைத்துப் புண்ணிய ராயினர்
நாதன் நடத்தால் நயனங் களிகூர
வேதந் துதித்திடப் போயடைந்தார் விண்ணே. நo

11. யாக்கை நிலையாமை

143 மண்ணொன்று கண்டீர் இருவகைப் பாத்திரந்
திண்ணென் றிருந்தது தீவினை சேர்ந்தது
விண்ணின்று நீர்விழின் மீண்டுமண் ணுறற்போல்
எண்ணின்றி மாந்தர் இறக்கின்ற வாறே. க

144 பண்டம்பெய் கூரை பழுகி விழுந்தக்கால்
உண்டஅப் பெண்டிரும் மக்களும் பின்செலார்
கொண்ட விரதமும் ஞானமும் அல்லது
மண்டி அவருடன் வழிநட வாதே. உ

145 ஊரெலாங் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்களே. ங

146 காலும் இரண்டு முகட்டலக் கொன்றுள
பாலுள் பருங்கழி முப்பத்தி ரண்டுள
மேலுள கூரை பிரியும் பிரிந்தால்முன்
போலுயிர் மீளப் புகஅறி யாதே. ச

147 சீக்கை விளைந்தது செய்வினை மூட்டிற்ற
ஆக்கை பிரிந்த தலகு பழுத்தது
மூக்கினிற் கைவைத்து மூடிட்டுக் கொண்டுபோய்க்
காக்கைக் குப்பலி காட்டிய வாறே. ஞ

148 அடப்பண்ணி வைத்தார் அடிசில உண்டார்
மடக்கொடி யாரொடு மந்தணங் கொண்டார்
இடப்பக்க மேஇறை நொந்தது என்ஞ்ஞர்
கிடக்கப் படுத்தார் கிடந்தாழிந் தாரே. சூ

149 மன்றத்தே நம்பி மாடம் எடுத்தது
மன்றத்தே நம்பி சிவிகைபெற் றேறினன்
மன்றத்தே நம்பி முக்கோடி வழங்கினன்
சென்றத்தா வென்னத் திரிந்திலன் தானே. எ

150 வாசந்தி பேசி மணம்புணர்ந் தப்பதி
நேசந் தெவிட்டி நினைப்பொழி வார்பின்னை
ஆசந்தி மேல்வைத் தமைய அழுதிட்டுப்
பாசந்தீச் சுட்டுப் பலியட்டி னுர்களே. அ

151 கைவிட்டு நாடிக் கருத்தழிந் தச்சற
நெய்யட்டிச் சோறுண்ணும் ஐவரும் போயினர்
மையிட்ட கண்ணரும் மாடும் இருக்கவே
மெய்விட்டுப் போக விடைகொள்ளு மாறே. கூ

152 பந்தல் பிரிந்தது பண்டாரங் கட்டற்ற
ஒன்பது வாசலும் ஒக்க அடைந்தன
துன்புறு காலந் துரிசுவர மேன்மேல்
அன்புடை யார்கள் அழுதகன் றூர்களே. கo

153 நாட்டுக்கு நாயகன் நம்மூர்த் தலைமகன்
காட்டுச் சிவிகையொன் றேறிக் கடைமுறை
நாட்டார்கள் பின்செல்ல முன்னே பறைகொட்ட
நாட்டுக்கு நம்பி நடக்கின்ற வாறே. கக

154 முப்பதும் முப்பதும் முப்பத் தறுவருந்
செப்ப மதிளுடைக் கோயிலுள் வாழ்பவர்
செப்ப மதிளுடைக் கோயில் சிதைந்தபின்
ஒப்ப அனைவரும் ஓட்டெடுத் தார்களே. கஉ

155 மதுவூர் குழலியும் மாடும் மனையும்
இதுவூர் ஒழிய இதணம தேறிப்

பொதுவூர் புறஞ்சுடு காடது நோக்கி
மதுவூர வாங்கியே வைத்தகன் றூர்களே. கஙூ

156 வைச்சகல் வுற்றது கண்டு மனிதர்கள்
அச்சக லாதென நாடும் அரும்பொருள்
பிச்சது வாய்ப்பின் தொடர்வுறு மற்றவர்
எச்சக லாநின் றிலைக்கின்ற வாறே. கச

157 ஆர்த்தெழு சுற்றமும் பெண்டிரும் மக்களும்
ஊர்த்துணைக் காலே ஒழிவர் ஒழிந்தபின்
வோர்த்தலை போக்கி விறகிட் டெரிமூட்டி
நீர்த்தலை மூழ்குவார் நீதியி லோரே. கரு

158 வளத்திடை முற்றத்தோர் மூநிலம் முற்றுங்
குளத்தின் மண்கொண்டு குயவன் வனைந்தான்
குடமூடைத் தால்அவை ஓடென்று வைப்பர்
உடலுடைத் தால்இறைப் போதும் வையாரே. கசூ

159 ஐந்து தலைப்பறி யாறு சடையுள
சந்தவை மூப்பது சார்வு பதினெட்டுப்
பந்தலும் ஒன்பது பந்தி பதினைந்து
வெந்து கிடந்தது மேலறி யோமே. கஎ

160 அத்திப் பழமும் அறைக்கீரை நல்வித்துங்
கொத்தி உலைப்பெய்து கூழட்டு வைத்தனர்
அத்திப் பழத்தை அறைக்கீரை வித்துண்ணைக்
கத்தி எடுத்தவர் காடுபுக் காரே. கஅ

161 மேலும் முகடில்லை கீழும் வடிம்பில்லை
காலும் இரண்டு முகட்டலைக் கொன்றுண்டு
ஓலையான் மேய்ந்தவ ரூடு வரியாமை
வேலையான் மேய்ந்தோர் வெள்ளித் தளியே. கஙூ

162 கூடங் கிடந்தது கோலங்கள் இங்கில்லை
ஆடும் இலையமும் அற்ற தறுதலும்
பாடுகின் றூர்சிலர் பண்ணில் அழுதிட்டுத்
தேடிய தீயினில் தீயவைத் தார்களே. உ0

163 முட்டை பிறந்தது முந்நூ றுகாளினில்
இட்டது தானிலை யேதெனும் ஏழைகாள்
பட்டது பார்மணம் பன்னிரண் டாண்டினிற்
கெட்ட தெழுபதிற் கேடறி யீரே. உக

164 இடிஞ்சில் இருக்க விளக்கெரி கொண்டான்
மூடிஞ்ச தறியார் முழங்குவர் மூடர்
விடிஞ்சிறு ளாவ தறியா உலகம்
படிஞ்சு கிடந்து பதைக்கின் றவாறே. உஉ

165 மடல்விரி கொன்றையன் மாபன் படைத்த
உடலும் உயிரும் உருவந் தொழாமல்
இடர்படார்ந் தேழா நரகிற் கிடப்பர்
குடர்பட வெந்தமர் கூப்பிடு மாறே. உங

166 குடையுங் குதிரையுங் கொற்றவா ளுங்கொண்
டிடையுமக் காலம் இருந்து நடுவே
புடையு மனிகளுர் போகும்அப் போதே
அடையும் இடம்வலம் ஆருயி ராமே. உச

167 காக்கை கவரிலென் கண்டார் பழிக்கிலென்
பாற்குளி பெய்யிலென் பல்லோர் பழிச்சிலென்
தோற்பையுள் நின்று தொழிலறச் செய்தூட்டுங்
கூத்தன் புறப்பட்டுப் போனஇக் கூட்டையே. உந

12. செல்வம் நிலையாமை

168 அருளும் அரசனும் ஆனையுந் தேரும்
பொருளும் பிறர்கொள்ளப் போவதன் முன்னந்
தெருளும் உயிரொடுந் செல்வனைச் சேரின்
மருளும் பிணையவன் மாதவ மன்றே. க

169 இயக்குறு திங்கள் இருட்பிழம் பொக்குந்
துயக்குறு செல்வத்தைச் சொல்லவும் வேண்டா
மயக்கற நாடுமின் வானவர் கோனைப்
பெயற்கொண்டல் போலப் பெருஞ்செல்வ மாமே. உ

170 தன்னது சாயை தனக்குத வாதுகண்
டென்னது மாடென் றிருப்பர்கள் ஏழைகள்
உன்னுயிர் போம்உடல் ஒக்கப் பிறந்தது
கண்ணது காணெனி கண்டுகொ ளீரே. க

171 ஈட்டிய தேன்பூ மணங்கண் டிரதமும்
கூட்டிக் கொணர்ந்தொரு கொம்பிடை வைத்திடும்
ஓட்டித் துரந்திட் டதுவலி யார்கொளக்
காட்டிக் கொடுத்தது கைவிட்ட வாறே. ச

172 தேற்றத் தெளிமின் தெளிந்தீர் கலங்கன்மின்
ஆற்றுப் பெருக்கிற் கலக்கி மலக்காதே
மாற்றிக் களைவீர் மறுத்துங்கள் செல்வத்தைக்
கூற்றன் வருங்கால் குதிக்கலு மாமே. ஞ

173 மகிழ்கின்ற செல்வமும் மாடும் உடனே
கவிழ்கின்ற நீர்மிசைச் செல்லுங் கலம்போல்
அவிழ்கின்ற ஆக்கைக்கோர் வீடுபே ரூகச்
சிவிழொன்று வைத்தமை தேர்ந்தறி யாரே. ஙா

174 வாழ்வும் மனைவியும் மக்கள் உடன்பிறந்
தாரு மளவே தமக்கென்பர் ஞண்பொருள்
மேவு மதனை விரிவுசெய் வார்கட்குக்
கூவுந் துணையொன்று கூடலு மாமே. எ

175 வேட்கை மிகுத்தது மெய்கொள்வார் இங்கிலை
பூட்டுந் தறியொன்று போம்வழி ஒன்பது
காட்டிய தாய்தமர் வந்து வணங்கிப்பின்
காட்டிக் கொடுத்தவர் கைவிட்ட வாறே. அ

176 உடம்பொ டுயிரிடை விட்டோடும் போது
அடும்பரி சொன்றில்லை அண்ணலே எண்ணும்
விடும்பரி சாய்நின்ற மெய்ங்கமன் தூதர்
சுடும்பரி சத்தையுஞ் சூழகி லாரே. கூ

13. இளமை நிலையாமை

177 கிழக்கெழுந் தோடிய ஞாயிறு மேற்கே
விழக்கண்டுந் தேறூர் விழியிலா மாந்தர்
குழக்கன்று மூத்தெரு தாய்ச்சில நாளில்
விழக்கண்டுந் தேறூர் வியனுல கோரே. க

178 ஆண்டு பலவுங் கழிந்தன அப்பனைப்
பூண்டுகொண் டாரும் புகுந்தறி வார்இல்லை
நீண்டன காலங்கள் நீண்டு கொடுக்கினுந்
தூண்டு விளக்கின் சுடரறி யாரே. உ

179 தேய்ந்தற் றொழிந்த இளமை கடைமுறை
ஆய்ந்தற்ற பின்னை அரிய கருமங்கள்
பாய்ந்தற்ற கங்கைப் படர்சடை நந்தியை
ஓர்ந்துற்றுக் கொள்ளும் உயிருள்ள போதே. ங

180 விரும்புவர் முன்னென்னை மெல்லியன் மாதர்
கரும்பு தகர்த்துக் கடைக்கொண்ட நீர்போல்
அரும்பொத்த மென்முலை ஆயிழை யார்க்குக்
கரும்பொத்துக் காஞ்சிரங் காயும்ஒத் தேனை. ச

181 பாலன் இளையன் விருத்தன் எனநின்ற
காலங் கழிவன கண்டும் அறிகிலார்
ஞாலங் கடந்தண்டம் ஊடறுத் தானடி
மேலுங் கிடந்து விரும்புவன் நானே. ஞ

182 காலை எழுந்தவர் நித்தலும் நித்தலும்
மாலை படுவதும் வாணாள் கழிவதுஞ்
சாலும்அவ் வீசன் சலவிய ஞகிலும்
ஏல நினைப்பவர்க் கின்பஞ்செய் தானே. ட

183 பருவுசி ஐந்துமோர் பையினுள் வாழும்
பருவுசி ஐந்தும் பறக்கும் விருகம்
பருவுசி ஐந்தும் பனித்தலைப் பட்டாற்
பருவுசிப் பையும் பறக்கின்ற வாறே. ட

184 கண்ணதுங் காய்கதி ரோனும் உலகினை
உண்ணின் றளக்கின்ற தொன்றும் அறிகிலார்
விண்ணுற் றுறு வாரையும் வினையுறு வாரையும்
எண்ணுறும் மூப்பதில் ஈர்ந்தொழிந் தாரே. அ

185 ஒன்றிய ஈரெண் கலையும் உடனுற
நின்றது கண்டு நினைக்கிலர் நீசர்கள்
கன்றிய காலன் கருக்குழி வைத்துபின்
சென்றதில் வீழ்வர் திகைப்பொழி யாரே. கூ

186 எய்திய காளில் இளமை கழியாமை
எய்திய காளில் இசைபிறல் ஏத்துமின்
எய்திய காளில் எறிவ தறியாமல்
எய்திய காளில் இருந்துகண் டேனே. கo

14. உயிர் நிலையாமை

187 தழைக்கின்ற செந்தளிர்த் தண்மலர்க் கொம்பில்
இழைக்கின்ற தெல்லாம் இறக்கின்ற கண்டும்
பிழைப்பின்றி எம்பெரு மானடி ஏத்தார்
அழைக்கின்ற போதறி யாரவர் தாமே. க

188 ஐவர்க் கொருசெப் விளைந்து கிடந்தது
ஐவரும் அச்செய்யைக் காத்து வருவர்கள்
ஐவர்க்கு நாயகன் ஓலை வருதலால்
ஐவரும் அச்செய்யைக் காவல்விட் டாரே. உ

189 மத்தளி ஒன்றுள தாளம்இ ரண்டுள
அத்துள்ளே வாழும் அரசரும் அஞ்சுள்ள
அத்துள்ளே வாழும் அரசனும் அங்குளன்
மத்தளி மண்ணைப் மயங்கிய வாறே. ங

190 வேங்கட நாதனை வேதாந்தக் கூத்தனை
வேங்கடத் துள்ளே விளையாடு நந்தியை
வேங்கடம் என்றே விரகறி யாதவர்
தாங்கவல் லாருயிர் தாமறி யாரே. ச

191 சென்றுணர் வான்திசை பத்துந் திவாகரன்
அன்றுணர் வால்அளக் கின்ற தறிகிலர்
நின்றுண ராரிந் நிலத்தின் மனிதர்கள்
பொன்றுணர் வாரிற் புணர்க்கின்ற மாயமே. ரு

192 மாறு திருத்தி வரம்பிட்ட பட்டிகை
பீறு மதனைப் பெரிதுணர்ந் தாரிலை
கூறுங் கருமயிர் வெண்மயி ராவது
ஈறும் பிறப்புமொ ராண்டெனும் நீரே. சு

193 துடிப்பிடி பானைக்கும் ஒன்றே அரிசி
அடிப்பிடி மூன்றிற்கும் அஞ்சொரி கொள்ளி
அடுத்தெரி யாமற் கொடுமின் அரிசி
விடுத்தன நாள்களும் மேற்சென் றனவே. எ

194 இன்புறு வண்டிங் கினமலர் மேற்போய்
உண்பது வாச மதுபோல் உயிர்நிலை
இன்புற நாடி நினைக்கிலு மூன்றெழு
கண்புற நின்ற கருத்துள்நில் லானே. அ

195 ஆம்விதி நாடி அறஞ்செய்மின் அந்நிலம்
போம்விதி நாடிப் புனிதனைப் போற்றுமின்
காம்விதி வேண்டுமெ தென்சொலின் மானிடர்
ஆம்விதி பெற்ற அருமைமவல் லார்க்கே. கூ

196 அவ்வியம் பேசி அறங்கெட நில்லன்மின்
வெவ்விய ஞகிப் பிறர்பொருள் வவ்வன்மின்
செவ்விய ஞகிச் சிறந்துண்ணும் போதொரு
தவ்விக்கொ டுண்மின் தலைப்பட்ட போதே. கூ

15. கோல்லாமை

197 பற்றுய நற்குரு பூசைக்கும் பன்மலர்
மற்றோர் அணுக்களைக் கொல்லாமை ஒண்மலர்
நற்றூர் நடுக்கற்ற தீபமுஞ் சித்தமும்
உற்றுறும் ஆவி அமர்ந்திடம் உச்சியே. சு

198 கொல்லிடு குத்தென்று கூறிய மாக்களை
வல்லடிக் காரர் வலிக்கயிற் றூற்கட்டிச்
செல்லிடு நில்லென்று தீவாய் நரகிடை
நில்லிடும் என்று நிறுத்துவர் தாமே. உ

16. புலால் மறுத்தல்

199 போல்லாப் புலாலை நுகரும் புலையரை
எல்லாருங் காண இயமன்றன் தூதுவர்
செல்லாகப் பற்றித் தீவாய் நரகத்தில்
மல்லாக்கத் தள்ளி மறித்துவைப் பாரே. க

200 கொலையே களவுகட் காமம் பொய்கூறல்
மலைவான பாதக மாம்அவை நீக்கித்
தலையாஞ் சிவனடி சார்ந்தின்பஞ் சார்ந்தோர்க்
கிலையாம் இவைஞாண னைந்தத் திருத்தலே. உ

17. பிறன்மனை நயவாமை

201 ஆத்த மனையாள் அகத்தில் இருக்கவே
காத்த மனையாளைக் காமுறுங் காளையர்
காப்ச்ச பலாவின் கனிபுண்ண மாட்டாமல்
ஈச்சம் பழத்துக் கிடருற்ற வாறே. க

202 திருத்தி வளர்த்தநீ தார் தேமாங் கனியை
அருத்தமென் றெண்ணி அறையிற் புதைத்துப்
பொருத்தமி லாத புளிமாங் கொம்பேறிக்
கருத்தறி யாதவர் காலற்ற வாறே. உ

203 பொருள்கொண்ட கண்டனும் போதகை யாளும்
இருள்கொண்ட மின்வெளி கொண்டுநின் றேருரும்
மருள்கொண்டு மாதர் மயலுறு வார்கள்
மருள்கொண்ட சிந்தனை மாற்றகில் லாரே. ங

18. மகளிர் இழிவு

204 இலைகல வாயினும் எட்டி பழுத்தாற்
குலைகல வாங்கனி கொண்டுணை லாகா
முலைகலங் கொண்டு முறுவல்செய் வார்மேல்
விலகுறு நெஞ்சினை வெய்துகொள் ளீரே. க

205 மனைபுகு வார்கள் மனைவினை நாடில்
சுனைபுகு நீர்போற் சுழித்துடன் வாங்குங்
கனவது போலக் கசிந்தெழும் இன்பம்
நனவது போலவும் நாடவொண் ணுதே. உ

206 இயலுறும் வாழ்க்கை இளம்பிடி மாதர்
புயலுறப் புல்லிப் புணர்ந்தவர் எய்தும்
மயலுறும் வானவர் சார்வித னென்பார்
அயலுறப் பேசி அகன்றொழிந் தாரே. ங

207 வையகத் தேமட வாரொடுங் கூடியென்
மெய்யகத் தேருளம் வைத்த விதியது
கையகத் தேகரும் பாலையின் சாறுகொள்
மெய்யகத் தேபெறு வேம்பது வாமே. ச

208 கோழை ஒழுக்கங் குளமூடு பாசியில்
ஆழ நடுவார் அளப்புறு வார்களைத்
தாழத் துடக்கித் தடுக்ககில் லாவிடில்
பூழை நுழைந்தவர் போகின்ற வாறே. ஞ

19. நல்குரவு

209 புடைவை கிழிந்தது போயிற்று வாழ்க்கை
அடைபப்பட் டார்களும் அன்பில ரானார்
கொடையில்லை கோளில்லை கொண்டாட்ட மில்லை
நடையில்லை நாட்டில் இயங்குகின் றார்கட்கே. க

210 பொய்க்குழி தூர்ப்பான் புலரி புலருதென்
றக்குழி தூர்க்கும் அரும்பண்டந் தேடுவீர்
எக்குழி தூர்த்தும் இறைவனை ஏத்துமின்
அக்குழி தூரும் அழுக்கற்ற போதே. உ

211 கற்குழி தூரக் கனகமுந் தேதடுவர்
அக்குழி தூர்க்கை யாவர்க்கும் அரியது
அக்குழி தூர்க்கும் அறிவை அறிந்தபின்
அக்குழி தூரும் அழுக்கற்ற வாறே. ங

212 தொடர்ந்தெழு சுற்றம் வினையினுந் தீய
கடந்தேதார் ஆவி கழிவதன் முன்னை
உடந்தாரு காலத் துணர்விளக் கேற்றித்
தொடர்ந்துநின் றவ்வழி தூர்க்கலு மாமே. ச

213 அறுத்தன ஆறினும் ஆனின மேவி
அறுத்தனர் ஐவரும் எண்ணிலி துன்பம்
ஒறுத்தன வல்வினை ஒன்றல்ல வாழ்வை
வெறுத்தனன் ஈசனை வேண்டிநின் றானே. ஞ

20. அக்கினி காரியம்

214 வசையில் விழுப்பொருள் வானும் நிலனுந்
திசையுந் திசையெறு தேவர் குழாமும்
விசையம் பெருகிய வேத முதலாம்
அசைவிலா அந்தணர் ஆகுதி வேட்கிலே. க

215 ஆகுதி வேட்கும் அருமறை அந்தணர்
போகதி நாடிப் புறங்கொடுத் துண்ணுவர்
தாம்விதி வேண்டித் தலைப்படு மெய்ந்நெறி
தாமறி வாலே தலைபட்ட வாறே. உ

216 அணைதுணை அந்தணர் அங்கியுள் அங்கி
அணைதுணை வைத்ததின் உட்பொரு ளான
இணைதுணை யாமத் தியங்கும் பொழுது
துணையணை யாயதோர் தூய்நெறி யாமே. ங

217 போதிரண் டோதிப் புரிந்தருள் செய்திட்டு
மாதிரண் டாகி மகிழ்ந்துட னேநிற்குந்
தாதிரண் டாகிய தண்ணம் பறவைகள்
வேதிரண் டாகி வெறிக்கின்ற வாறே. ச

218 நெய்நின் றொளியும் நெடுஞ்சுட ரேசென்று
மைநின் றொளியும் வகையறி வார்கட்கு.
மைநின் றவிழ்ந்தரு மத்தின மாம்என்றுஞ்
செய்நின்ற செல்வம் தீயது வாமே. ந

219 பாழி அகலும் எரியுந் திரிபோலிட்
டூழி அகலும் உறுவினை நோய்பல
வாழிசெய் தங்கி உதிக்க அவைவிழும்
வீழிசெய் தங்கி வினைசுடு மாமே. சு

220 பெருஞ்செல்வங் கேடென்று முன்னே படைத்த
வருஞ்செல்வம் தந்த தலைவனை நாடும்
வருஞ்செல்வத் தின்பம் வரவிருந் தெண்ணி
அருஞ்செல்வத் தாகுதி வேட்கநின் றூரே. எ

221 ஒண்சுட ரானை உலப்பிலி நாதனை
ஒண்சுட ராகி என்னுள்ளத் திருக்கின்ற
கண்சுட ரோன்உல கேழுங் கடந்தஅத்
தண்சுட ரோமத் தலைவனு மாமே. அ

222 ஓமத்துள் அங்கியின் உள்ளுநன் எம்இறை
ஈமத்துள் அங்கி இரதங்கொள் வானுளன்
வேமத்துள் அங்கி விளைவு வினைக்கடல்
கோமத்துள் அங்கி குரைகடல் தானே. க

223 அங்கி நிறுத்தும் அருந்தவர் ஆரணத்
தங்கி இருக்கும் வகையருள் செய்தவர்
எங்கும் நிறுத்தி இளைப்பப் பெரும்பதி
பொங்கி நிறுத்தும் புகழது வாமே. கo

21. அந்தண ரோழுக்கம்

224 அந்தணர் ஆவோர் அறுதொழில் பூண்டுளோர்
செந்தழல் ஓம்பிமுப் போதும் நியமஞ்செய்
தந்தவ நற்கரு மத்துநின் றுங்கிட்டுச்
சந்திபும் ஓதிச் சடங்கறுப் போர்களே. க

225 வேதாந்தங் கேட்க விருப்பொடு மூப்பதப்
போதாந்த மான பிரணவத் துள்புக்கு
நாதாந்த வேதாந்த போதாந்த நாதனை
ஈதாந்தம் எனுதுகண் டின்புறு வோர்களே. உ

226 காயத் திரியே கருதுசா வித்திரி
ஆய்தற் குவப்பர் மந்திரமாங் குன்னி
நேயத் தேதேறி நினைவுற்று நேயத்தாய்
மாயத்துள் தோயா மறையோர்கள் தாமே. ங

227 பெருநெறி யான பிரணவம் ஓர்ந்து
குருநெறி யாலுரை கூடினால் வேதத்
திருநெறி யான கிரியை யிருந்து
சொருபம தானோர் துகளில்பார்ப் பாரே. ச

228 சத்திய முந்தவம் தான்அவன் ஆதலும்
எய்த்தகும் இந்தியம் ஈட்டியே வாட்டலும்
ஒத்த உயிர்கள் உண்டா யுணர்வுற்றுப்
பெத்தம் அறுத்தலு மாகும் பிரமமே. ஞ

229 வேதாந்தங் கேட்க விரும்பிய வேதியர்
வேதாந்தங் கேட்டுந்தம் வேட்கை ஒழிந்திலர்
வேதாந்த மாவது வேட்கை ஒழிந்திடம்
வேதாந்தங் கேட்டவர் வேட்கைவிட் டாரே. ட

230 நூலுஞ் சிகையும் நுவலிற் பிரமமோ
நூலது காப்பாச நுண்சிகை கேசமாம்
நூலது வேதாந்தம் நுண்சிகை ஞானமாம்
நூலுடை அந்தணர் காணும் நுவலிலே. ண

231 சத்தியம் இன்றித் தனிஞானந் தானின்றி
ஒத்த விடையம்விட் டோரும் உணர்வின்றிப்
பத்தியும் இன்றிப் பரன்உண்மை யின்றிப்
பித்தேறும் மூடர் பிராமணர் தாம்அன்றே. அ

232 திருநெறி யாகிய சித்தசித் தின்றிக்
குருநெறி யாலே குருபதஞ் சேர்ந்து
கரும நியமாதி கைவிட்டுக் காணுங்
துரிய சமாதியாந் தூய்மறை யோர்க்கே. ௫

233 மறையோ ரவரே மறையவ ராஞல்
மறையோர்தம் வேதாந்த வாய்மையில் தூய்மை
குறையோர்தன் மற்றுள்ள கோலா கலமென்
றறிவோர் மறைதெரிந் தந்தண ராமே. ௫0

234 அந்தண்மை பூண்ட அருமறை அந்தத்துச்
சிந்தைசெய் அந்தணர் சேருஞ் செழும்புவி
நந்துதல் இல்லை நரபதி நன்முகும்
அந்தியுஞ் சந்தியும் ஆகுதி பண்ணுமே. ௫௫

235 வேதாந்த ஞானம் விளங்க விதியிலோர்
நாதாந்த போதம் நணுகிய போக்கது
போதாந்த மாம்பரன் பாற்புகப் புக்கதால்
நாதாந்த முத்தியுஞ் சித்தியும் நண்ணுமே. ௫௨

236 ஒன்றும் இரண்டும் ஒருங்கிய காலத்து
நன்றும் இருந்தும் நலம்பல பேசினும்
வென்று விளங்கும் விகிர்தனை நாடுவர்
சென்று வணங்குந் திருவுடை யோரே. ௫௩

237 தானே விடும்பற் றிரண்டுந் தரித்திட
நானே விடப்படு மேதான்றை நாடாது
பூமேவு நான்முகன் புண்ணிய போகஞுய்
ஓமேவும் ஓரா குதிஅவி உண்ணவே. ௫௪

22. இராச தோடம்

238 கல்லா அரசனுங் காலனும் கேரொப்பர்
கல்லா அரசனிற் காலன் மிகநல்லன்
கல்லா அரசன் அறம்ஓரான் கொல்லென்பான்
நல்லாரைக் காலன் நணுகுநில் லானே. ௫

239 நான்றோறும் மன்னவன் நாட்டில் தவிநறி
நான்றோறும் நாடி அவிநறி நாடானேல்
நான்றோறும் நாடு கெடுமூட நண்ணுமால்
நான்றோறுஞ் செல்வம் நரபதி குன்றுமே. உ

240 வேட நெறிநில்லார் வேடம்பூண் டென்பயன்
வேட நெறிநிற்போர் வேடம் மெய்வேடமே
வேட நெறிநில்லார் தம்மை விறல்வேந்தன்
வேட நெறிசெய்தால் வீடது வாகுமே. ஊ

241 மூடங் கெடாதோர் சிகைநூல் மூதற்கொள்ளில்
வாடும் புவியும் பெருவாழ்வு மன்னனும்
பீடொன் றிலரெனும் ஆதலாற் போர்த்துணைக்
காடம் பற்றாற் சிகையறுத் தான்நன்றே. எ

242 ஞானமி லாதார் சடைசிகை நூல்நண்ணி
ஞானிகள் போல நடிக்கின் றவர்தம்மை
ஞானிக ளாலே நரபதி சோதித்து
ஞானமூண் டாக்குதல் நலமாகும் நாட்டிற்கே. ஏ

243 ஆனைபும் பாவைபும் மற்றற வோரையுந்
தேவர்கள் போற்றுந் திருவேடத் தாரையுங்
காவலன் காப்பவன் காவா தொழிவனேல்
மேவும் மறுமைக்கு மீளா நரகமே. ஐ

244 திறந்தரு முத்திபுஞ் செல்வமும் வேண்டின்
மறந்தும் அறநெறி யேஆற்றல் வேண்டுஞ்
சிறந்தீர் ஞாலஞ் செய்தாழில் யாவையும்
அறந்திடல் வேந்தனுக் காறிலொன் றுமே. ஒ

245 வேந்தன் உலகை மிகநன்று காப்பது
வாய்ந்த மனிதர்கள் அவ்வழி யாநிற்பர்
போர்ந்திவ் வுலகைப் பிறர்கொள்ளத் தாங்கொள்ளப்
பாய்ந்த புலியன்ன பாவகத் தானே. ஓ

246 கால்கொண்டு கட்டுடக் கனல்கொண்டு மேலெற்றிப்
பால்கொண்டு சோமன் முகம்பற்றி உண்ணுதோள்
மால்கொண்டு தேறலை உண்ணும் மருளரை
மேல்கொண்டு தண்டஞ்செய் வேந்தன் கடனே. கூ

247 தத்தஞ் சமயத் தகுதியில் லாதாரை
அத்தன் சிவன்சொன்ன ஆகம நூல்நெறி
எத்தண் டமுஞ்செயும் அம்மையில் இம்மைக்கே
மெய்த்தண்டஞ் செய்வதவ் வேந்தன் கடனே. கo

23. வானச் சிறப்பு

248 அழுதூறு மாமழை நீரது வேலை
அழுதூறும் பன்மரம் பார்மிசை தோற்றுங்
கழுகூறு தெங்கு கரும்பொடு வாழை
அழுதூறுங் காஞ்சிரை ஆங்கது வாமே. க

249 வரையிடை நின்றிழி வான்நீர் அருவி
உரையில்லை உள்ளத் தகத்துநின் றாறு
நுரையில்லை மாசில்லை நுண்ணிய தெண்ணீர்க்
கரையில்லை எந்தை கழுமணி யாறே. உ

24. தானச் சிறப்பு

250 ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன்மின்
பார்த்திருந் துண்மின் பழம்பொருள் போற்றன்மின்
வேட்கை யுடையீர் விரைந்தொல்லை உண்ணன்மின்
காக்கை கரைந்துண் ணுங்கா லம்அறி மினே. க

25. அறஞ்செய்வான் திறம்

251 தாமறி வாரண்ணல் தாள்பணி வாரவர்
தாமறி வாரறந் தாங்கின் றுரவர்
தாமறி வார்சில தத்துவ ராவர்கள்
தாமறி வாக்குத் தமர்பர னேமே. க

252 யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உண் ணும்போ தொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே. உ

253 அற்றுநின் ருருண் ணும்உளே ணஅறனென் னுங்
கற்றன போதங் கமழ்பவர் மானிடர்
உற்றுநின் ருங்கொரு கூவற் குளத்தினிற்
பற்றிவந் துண் ணும்பயன் அறி யாரே. ங

254 அழுக்கினை ஓட்டி அறிவை நிறையீர்
தழுக்கிய காளில் தருமமுஞ் செய்யீர்
விழித்திருந் தென்செய்வீர் வெம்மை பரந்து
விழிக்கவன் றென்செய்வீர் ஏழைநெஞ் சீரே. ச

255 தன்னை அறியாது தானல என்னுதிங்
கின்மை யறியா திளையரென் ரோராது
வன்மையில் வந்திடுங் கூற்றம் வருமுன்னந்
தன்மையின் நல்ல தவஞ்செய்யும் நீரே. ஞ

256 துறந்தான் வழிமுதற் சுற்றமும் இல்லை
இறந்தான் வழிமுதல் இன்பமும் இல்லை
மறந்தான் வழிமுதல் வந்திலன் ஈசன்
அறந்தான் அறியும் அளவறி வாரே. ஃ

257 தான்தவஞ் செய்வதாஞ் செய்தவத் தவ்வழி
மான்தெய்வ மாக மதிக்கும் மனிதர்கள்
ஊன்தெய்வ மாக உயிர்க்கின்ற பல்லுயிர்
நான்தெய்வம் என்று நமன்வரு வானே. எ

258 தினைக்கும் வினைக்கடல் தீர்வுறு தோணி
இளைப்பினை நீக்கும் இருவழி உண்டு
கினைக்குந் தனக்கும்அக் கேடில் புகழோன்
வினைக்குந் தவம்அறம் மேற்றுணை யாமே. அ

259 பற்றது வாய்நின்ற பற்றினைப் பார்மிசை
அற்றம் உரையான் அறநெறிக் கல்லது
உற்றுங்க ளால்ஒன்றும் ஈந்தது வேதுணை
மற்றண்ணல் வைத்த வழிகொள்ளு மாறே. க

26. அறஞ்செயான் திறம்

260 எட்டி பழுத்த இருங்கனி வீழ்ந்தன
ஒட்டிய கல்லறஞ் செய்யா தவர்செல்வம்
வட்டிகொண் டீட்டியே மண்ணின் முகந்திடும்
பட்டிப் பதகர் பயன்அறி யாரே. க

261 ஒழிந்தன காலங்கள் ஊழியும் போயின
கழிந்தன கற்பனை நாளுங் குறுகிப்
பிழிந்தன போலத்தம் பேரிடர் ஆக்கை
அழிந்தன கண்டும் அறம்அறி யாரே. உ

262 அறம்அறி யார்அண்ணல் பாதம் நினையுந்
திறம்அறி யார்சிவ லோக நகர்க்குப்
புறம்அறி யார்பலர் பொய்ம்மொழி கேட்டு
மறம்அறி வார்பகை மன்னிநின் றாரே. ங

263 இருமலுஞ் சோகையும் ஈளையும் வெப்புந்
தருமஞ்செய் யாதவர் தம்பால தாகும்
உருமிடி நாக முரோணி கழலைத்
தருமஞ்செய் வார்பக்கல் தாழுகி லாவே. ச

264 பரவப் படுவான் பரமனை ஏத்தார்
இரவலர்க் கீதலி யாயினும் ஈயார்
கரகத்தால் நீராட்டிக் காலை வளர்க்கார்
நரகத்தில் நிற்றிரோ நாள்எஞ்சி னீரே. ஞ

265 வழிநடப் பாரின்றி வாளினர் உலகங்
கழிநடப் பார்கடந் தார்கருப் பாரும்
வழிநடக் கும்வினை மாசற வோட்டிட
வழிநடக் கும்மள வீழ்ந்தொழிந் தாரே. ட

266 கனிந்தவர் ஈசன் கழலடி காண்பர்
துணிந்தவர் ஈசன் துறக்கம தாள்வர்
மணிந்தவர் மாளுந் துணையுமொன் றின்றி
மெலிந்த சினத்தினுள் வீழ்ந்தொழிந் தாரே. எ

267 இன்பம் இடரென் றிரண்டுற வைத்தது
மூன்பவர் செய்கையி னூலே முடிந்தது
இன்பம் அதுகண்டும் ஈகிலாப் பேதைகள்
அன்பிலார் சிந்தை அறம்அறி யாரே. அ

268 கெடுவது மாவதுங் கேடில் புகழோன்
நடுவல்ல செய்தின்ப நாடவும் ஓட்டான்
இடுவதும் ஈவதும் எண்ணுமின் இன்பம்
படுவது செய்யிற் பசுவது வாமே. சு

269 செல்வங் கருதிச் சிலர்பலர் வாழ்வெனும்
புல்லறி வாளரைப் போற்றிப் புலராமல்
இல்லங் கருதி இறைவனை ஏத்துமின்
வில்லி இலக்கெய்த விற்குறி யாமே. கo

27. அன்புடைமை

270 அன்பு சிவம்இரண் டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே. க

271 பொன்னைக் கடந்திலங் கும்புலித் தோலினன்
மின்னிக் கிடந்து மினிரும் இளம்பிறை
துன்னிக் கிடந்த சுடுபொடி பூசிக்குப்
பின்னிக் கிடந்ததென் பேரன்பு தானே. உ

272 என்பே விறகா இறைச்சி அறுத்திட்டுப்
பொன்போற் கனலிற் பொரிய வறுப்பினும்
அன்போ டுருகி அகங்குழை வார்க்கன்றி
என்போன் மணியினை எய்தவொண் ணாதே. ங

273 ஆர்வம் உடையவர் காண்பர் அரன்தன்னின்
ஈரம் உடையவர் காண்பார் இணையடி
பாரம் உடையவர் காண்பார் பவந்தன்னைக்
கோர நெறிகொடு கொங்குபுக் காரே. ச

274 என்னன் புருக்கி இறைவனை வத்துமின்
முன்னன் புருக்கி முதல்வனை நாடுமின்
பின்னன் புருக்கிப் பெருந்தகை நந்திபுந்
தன்னன் பெனக்கே தலைநின்ற வாறே. ஞ

275 தாமரை காலந் சுபம்புவென் றேறத்திலும்
வாமரை காலம் வழித்துணை யாய்நிற்குந்
தேமரை பாற்திகழ் கொன்றை அணிசிவன்
தாமரை வண்ணமன்னன் அன்பில்நின் றூனே. ஃ

276 முன்படைத் தின்பம் படைத்த முதலினை
அன்படைத் தெம்பெரு மானை அறிகிலார்
வன்படைத் திந்த அகலிடம் வாழ்வினில்
அன்படைத் தான்தன் அகலிடத் தானே. எ

277 கருத்துறு செம்பொன்செய் காப்கதிர்ச் சோதி
இருத்தியும் வைத்தும் இறைவனென் றேறத்தியும்
அருத்தியுள் ஈசனை யாரருள் வெண்டில்
விருத்தி கொடுத்திடும் விண்ணவர் கோனே. அ

278 நித்தலுந் துஞ்சும் பிறப்பைபுஞ் செப்துவன்
வைத்த பரிசறிந் தேது மனிதர்கள்
இச்சையு ளேவைப்பர் எந்தை பிரான்என்று
நச்சியே அண்ணலை நாடுகி லாரே. க

279 அன்பினுள் ளான்புறத் தானுட லாயுளான்
முன்பினுள் ளான்முனி வர்க்கும் பிரானவன்
அன்பினுள் ளாகி அமருந் அரும்பொருள்
அன்பினுள் ளார்க்கே அணைதுணை யாமே. கo

28. அன்பு செய்வாரை அறிவன் சிவன்

280 இகழ்ந்ததும் பெற்றதும் ஈசன் அறியும்
உகந்தருள் செய்திடும் உத்தம நாதன்
கொழுந்தன்பு செய்தருள் கூரவல் லார்க்கு
மகிழ்ந்தன்பு செய்யு மருளது வாமே. க

281 இன்பப் பிறவிக் கியல்வது செய்தவன்
துன்பப் பிறவித் தொழில்பல என்னினும்
அன்பிற் கலவிசெய் தாதிப் பிரான்வைத்த
முன்பிப் பிறவி முடிவது தானே. உ

282 அன்புறு சிந்தையின் மேலெழும் அவ்வொளி
இன்புறு கண்ணியொ டேற்க இசைந்தன
துன்புறு கண்ணியைத் தாடுந் துடக்கற்று
நண்புறு சிந்தையை நாடுமின் நீரே. ங

283 புணர்ச்சியுள் ஆயிழை மேல்அன்பு போல
உணர்ச்சியுள் ஆங்கே ஒடுங்கவல் லாருக்
குணர்ச்சியில் லாது குலாவி உலாவி
அணைத்தலும் இன்பம் அதுவித்து வாமே. ச

284 உற்றுநின் றுரொடு மத்தகு சோதியைச்
சித்தர்கள் என்றுந் தெரிந்தறி வார்இல்லை
பத்திமை யாலே பணிந்தடி யார்தொழ
முத்தி கொடுத்தவர் முன்புநின் றுனே. ஞ

285 கண்டேன் கமழ்தரு கொன்றையி னன்அடி
கண்டேன் கரியுரி யான்றன் கழலிணை
கண்டேன் கமல மலர்உறை வானடி
கண்டேன் கழலதென் அன்பினுள் யானே. ட

286 கம்பனை நாளை விதப்பொரு ளாகுமென்
றும்பரில் வானவர் ஓதுந் தலைவனை
இன்பனை இன்பத் திடைநின் றிரதிக்கும்
அன்பனை யாரும் அறியகி லாரே. ண

287 முன்பு பிறப்பும் இறப்பும் அறியாதார்
அன்பில் இறைவனை யாம்அறி வோம்என்பர்

இன்பப் பிறப்பும் இறப்பும் இலாகந்தி
அன்பிலவினை அறியகி லாரே. அ

288 ஈசன் அறியும் இராப்பக லுந்தன்னைப்
பாசத்துள் வைத்துப் பரிவுசெய் வார்களைத்
தேசுற் றறிந்து செயலற் றிருந்திடில்
ஈசன்வந் தெம்மிடை ஈட்டினின் றூனே. கூ

289 விட்டுப் பிடிப்பதென் மேதகு சோதியைத்
தொட்டுத் தொடர்வன் துலையாப் பெருமையை
எட்டுமென் னருயி ராய்நின்ற ஈசனை
மட்டுக் கலப்பது மஞ்சன மாமே. கo

29. கல்வி

290 குறிப்பறிந் தேதனுடல் உயிரது கூடிச்
செறிப்பறிந் தேன்மிகு தேவர் பிரானை
மறிப்பறி யாதுவந் துள்ளம் புகுந்தான்
கறிப்பறி யாமிகுங் கல்விகற் றேனே. க:

291 கற்றறி வாளர் கருதிய காலத்துக்
கற்றறி வாளர் கருத்திலோர் கண்ணுண்டு
கற்றறி வாளர் கருதி உரைசெய்யுங்
கற்றறி காட்டக் கபலுள வாக்குமே. உ

292 நிற்கின்ற போத நிலையுடை யான்கழல்
கற்கின்ற செம்மின் கழிந்தறும் பாவங்கள்
சொற்குன்றல் இன்றித் தொழுமின் தொழுதபின்
மற்றொன் றிலாத மணிவிளக் காமே. ங

293 கல்வி யுடையார் கழிந்தோடிப் போகின்றூர்
பல்வி யுடையார் பாம்பரிந் துண்கின்றூர்
எல்லியுங் காலையும் எத்தும் இறைவனை
வல்லியுள் வாதித்த காயமு மாமே. ச

294 துணையது வாய்வருந் தூயநற் சோதி
துணையது வாய்வருந் தூயநற் சொல்லாந்

துணையது வாய்வருந் தூயநற் கந்தந்
துணையது வாய்வருந் தூயநற் கல்வியே. ந

295 நூலொன்று பற்றி நுனியேற மாட்டாதார்
பாலொன்று பற்றிலுற் பண்பின் பயன்கெடுங்
கோலொன்று பற்றிலுற் கூடா பறவைகள்
மாலொன்று பற்றி மயங்குகின் றார்களே. சு

296 ஆய்ந்துகொள் வார்க்கரன் அங்கே வெளிப்படுந்
தோய்ந்த நெருப்பது தூய்மணி சிந்திடும்
ஏய்ந்த இளமதி எட்டவல் லார்கட்கு
வாய்ந்த மனமல்கு நூலெணி பாமே. எ

297 வழித்துணை யாய்மருந் தாயிருந் தார்முன்
கழித்துணை யாங்கற் றிலாதவர் சிந்தை
ஒழித்துணை யாம்உம் பராப்உல கேழும்
வழித்துணை யாம்பெருந் தன்மைவல் லானே. அ

298 பற்றது பற்றிற் பரமனைப் பற்றுமின்
முற்றது எல்லா முதல்வன் அருள்பெறில்
கிற்ற விரகிற் கினரொளி வானவர்
கற்றவர் போன்பம் உற்றுநின் றாரே. க

299 கடலுடை யான்மலை யாஇனத் தூகத்
துடலுடை யான்பல ஊழிதொ றாழி
அடல்விடை யேறும் அமரர்கள் நாதன்
இடமுடை யார்நெஞ்சத் தில்லிருந் தானே. கo

30. கேள்வி கேட்டமைதல்

300 அறங்கேட்டும் அந்தணர் வாய்மொழி கேட்டும்
மறங்கேட்டும் வானவர் மந்திரங் கேட்டும்
புறங்கேட்டும் பொன்னுரை மேனியெம் ஈசன்
திறங்கேட்டும் பெற்ற சிவகதி தானே. க

301 தேவர் பிரான்தனைத் தெய்வ மூர்த்தியை
யாவர் ஒருவர் அறிவார் அறிந்தபின்

ஓதுமின் கேண்மின் உணர்மின் உணர்ந்துபின்
ஓதி உணர்ந்தவர் ஓங்கின்ன ரூரே. உ

302 மபன்பணி கேட்பது மாநந்தி வேண்டின்
அபன்பணி கேட்பது அரன்பணி யாலே
சிவன்பணி கேட்பவர் தேவரு மாவர்
பபன்பணி கேட்பது பற்றது வாமே.

303 பெருமான் இவனென்று பேசி யிருக்குந்
திருமா னிடர்பின்னைத் தேவரு மாவர்
வருமா தவர்க்கு மகிழ்ந்தருள் செய்பும்
அருமா தவத்தெங்கள் ஆதிப் பிரானே. ச

304 ஈசன் அருளும் இறப்பும் பிறப்பையும்
பேசி யிருந்து பிதற்றி மகிழ்வெய்தி
நேசமு மாகும் நிகழொளி யாய்நின்று
வாச மலர்க்கந்த மன்னினின் ரூனே. ஞ

305 விழுப்பமுங் கேள்வியும் மெய்நின்ற ஞானத்
தொழுக்கமுஞ் சிந்தை உணர்கின்ற போது
வழுக்கி விடாவிடில் வானவர் கோனும்
இழுக்கின்றி எண்ணிலி காலமு தாமே. ட

306 சிறியார் மணற்சோற்றில் தேக்கிடு மாபோல்
செறிவால் அணுபோகஞ் சித்திக்கும் என்னில்
குறியாத தொன்றைக் குறியாதார் தம்மை
அறியா திருந்தார் அவராவர் அன்றே. ண

307 உறுதுணை யாவ துயிருடம் புடம்பும்
உறுதுணை யாவ துலகுறு கேள்வி
செறிதுணை யாவது சிவனடிச் சிந்தை
பெறுதுணை கேட்கிற் பிறப்பில்லை தானே. அ

308 புகழுநின் ரூர்க்குடம் புராணன்னெம் ஈசன்
இகழுநின் ரூர்க்குடம் இடும்பைக் கிடமா
மகிழுநின் ரூதிபை ஓதி உணராக்
கழியுநின் ரூர்க்கொரு கற்பசு வாமே. க

309 வைத்துணர்ந் தான்மனத் தோடும்வாய் பேசி
ஒத்துணர்ந் தான்உரு ஒன்றொடொன் றுவ்வா
தச்சுழன் றுணி கலங்கினும் ஆதியை
நச்சுணர்ந் தார்க்கே நணுகலு மாமே. ௯0

31. கல்லாமை

310 கல்லா தவருங் கருத்தறி காட்சியை
வல்லா ரெனில்அருட் கண்ணுன் மதித்துளோர்
கல்லாதார் உண்மைபற் றுநிற்பர் கற்றோருங்
கல்லாதார் இன்பங் காணுகி லாரே. ௯

311 வல்லார்கள் என்றும் வழியொன்றி வாழ்கின்றூர்
அல்லா தவர்கள் அறிவு பலஎன்பார்
எல்லா இடத்தும் உளன்எங்கள் தம்இறை
கல்லா தவர்கள் கலப்பறி யாரே. ௯௨

312 நில்லா நிலையை நிலையாக நெஞ்சத்து
நில்லாக் குரம்பை நிலையென் றுணர்வீர்காள்
எல்லா வுயிர்க்கும் இறைவனே யாயினுங்
கல்லாதார் நெஞ்சத்துக் காணவொண் ணுதே. ௯௩

313 கில்லேன் வினைத்துய ராக்கு மயலானேன்
கல்லேன் அரனெறி அறியாத் தகைமையின்
வல்லேன் வழங்கும் பொருளே மனத்திலுட்
கல்லேன் கழியநின் றூடவல் லேனே. ௯௪

314 நில்லாது சீவன் நிலையன் றெனவெண்ணி
வல்லார் அறத்துந் தவத்துளுறும் ஆயினுர்
கல்லா மனிதர் கயவர் உலகினில்
பொல்லா வினைத்துயர் போகஞ்செய் வாரே. ௯௫

315 விண்ணினின் உள்ளே விளைந்த விளங்கனி
கண்ணினின் உள்ளே கலந்தங் கிருந்தது
மண்ணினின் உள்ளே மதித்து மதித்துநின்
றுண்ணி எழுதி இளைத்துவிட் டாரே. ௯௬

316 கணக்கறிந் தார்க்கன் றிக் காணவொண் ணாது
கணக்கறிந் தார்க்கன் றிக் கைகூடா காட்சி
கணக்கறிந் துண்மையைக் கண்டுண்ட நிற்குங்
கணக்கறிந் தார்கல்வி கற்றறிந் தாரே. எ

317 கல்லாத மூடரைக் காணவும் ஆகாது
கல்லாத மூடர்சொல் கேட்கக் கடன்அன்று
கல்லாத மூடர்க்குக் கல்லாதார் கல்லராம்
கல்லாத மூடர் கருத்தறி யாரே. அ

318 கற்றுஞ் சிவஞானம் இல்லாக் கலதிகள்
சுற்றமும் வீடார் துரிசறூர் மூடர்கள்
மற்றும் பலதிசை காணர் மதியிலோர்
கற்றன்பில் நிற்போர் கணக்கறிந் தார்களே. கூ

319 ஆதிப் பிரான்அம ரர்க்கும் பரஞ்சுடர்
சோதி அடியார் தொடருந் பெருந்தெய்வம்
ஓதி உணரவல் லோம்என்பர் உள்நின்ற
சோதி நடத்துந் தொடர்வறி யாரே. கo

32. நடுவு நிலைமை

320 நடுவுநின் றார்க்கன்றி ஞானமும் இல்லை
நடுவுநின் றார்க்கு நாகமும் இல்லை
நடுவுநின் றார்நல்ல தேவரு மாவர்
நடுவுநின் றார்வழி நாணும்நின் றேனே. க

321 நடுவுநின் றுன்நல்ல கார்முகில் வண்ணன்
நடுவுநின் றுன்நல்ல நான்மறை யோதி
நடுவுநின் றார்சிலர் ஞானிக ளாவோர்
நடுவுநின் றார்நல்ல நம்பனு மாமே. உ

322 நடுவுநின் றார்சிலர் ஞானிக ளாவர்
நடுவுநின் றார்சிலர் தேவரு மாவர்
நடுவுநின் றார்சிலர் நம்பனு மாவர்
நடுவுநின் றுரொடு நாணும்நின் றேனே. ங

323 தோன்றிய எல்லாந் துடைடப்பன் அவனன்றி
ஏன்றுநின் றுரென்றும் ஈசன் இணையடி
மூன்றுநின் றுர்முதல் வன்திரு நாமத்தை
நான்றுநின் றுர்ந்தி வாகிநின் றுரே. க

33. கள்ளுண்ணாமை

324 கழுநீர்ப் பசுப்பெறிற் கயக்கதாறும் தேரா
கழுநீர் விடாய்த்துத்தங் காயஞ் சுருக்கும்
முழுநீர்க் கள்ளுண்டோர் முறைமை அகன்றுர்
செழுநீர்ச் சிவன்றன் சிவானந்தத் தேறலே. க

325 சித்தம் உருக்கிச் சிவமான் சமாதியில்
ஒத்த சிவானந்தத் தோவாத தேறலைச்
சுத்த மதுவுண்ணாச் சுவானந்தம் விட்டிடா
நித்தல் இருத்தல் கிடத்தல்கீழ்க் காலே. உ

326 காமமுங் கள்ளுங் கலதிகட் கேயாகும்
மாமல முஞ்சம யத்துள் மயலுறும்
போமதி யாகும் புனிதன் இணையடி
யோமய ஆனந்தத் தேறல் உணர்வுண்டே. ங

327 வாமத்தோர் தாழும் மதுவுண்டு மாள்பவர்
காமத்தோர் காமக்கள் ளுண்டே கலங்குவர்
ஓமத்தோர் உள்ளொளிக் குள்ளே உணர்வர்கள்
நாமத்தோர் அன்றே நணுகுவர் தாமே. ச

328 உள்ளுண்மை ஓரார் உணராரா பசுபாசம்
வள்ளன்மை நாதன் அருளினின் வாழ்வுறூர்
தெள்ளுண்மை ஞானச் சிவயோகஞ் சேர்வுறூர்
கள்ளுண்ணும் மாந்தர் கருத்தறி யாரே. ஞ

329 மயக்குஞ் சமய மலமன்னு மூடர்
மயக்கு மதுவுண்ணு மாமூடர் தேரார்
மயக்குறு மாமாயை மாயையின் வீடு
மயக்கில் தெளியின் மயக்குறும் அன்றே. ட

330 மயங்குந் தியங்குங்கள் வாய்மை அழிக்கும்
இயங்கும் மடவார்த்தம் இன்பமே எய்தி
முயங்கும் நயங்கொண்ட ஞானத்து மூர்த்தார்
இயங்கும் இடையரு ஆனந்தம் எய்துமே. எ

331 இராப்பகல் அற்ற இடத்தே இருந்து
பராக்கற ஆனந்தத் தேறல் பருகார்
இராப்பகல் அற்ற இறையடி இன்பத்
திராப்பகல் மாயை இரண்டிடத் தேனே. அ

332 சத்தியை வேண்டிச் சமயத்தோர் கள்ளுண்பர்
சத்தி அழிந்தது தம்மை மறத்தலால்
சத்தி சிவஞானந் தன்னில் தலைப்பட்டுச்
சத்திய ஞான ஆ னந்தத்திற் சார்தலே. கூ

333 சத்தன் அருள்தரிற் சத்தி அருளுண்டாஞ்
சத்தி அருள்தரிற் சத்தன் அருளுண்டாஞ்
சத்தி சிவமாம் இரண்டுந்தன் னுள்ளைவக்கச்
சத்தியம் எண்சித்தித் தன்மையு மாமே. கூ

334 தத்துவம் நீக்கி மருள்நீக்கித் தாணுவிப்
பொய்த்தவம் நீக்கிமெய்ப் போகத்துட் போகியே
மெய்த்த சகமுண்டு விட்டுப் பரானந்தச்
சித்திய தாக்குஞ் சிவானந்தத் தேறலே. கக

335 யோகிகள் கால்கட்டி ஒண்மதி ஆனந்தப்
போத அமுதைதப் பொசித்தவர் எண்சித்தி
மோகியர் கள்ளுண்டு மூடராய் மோகமூற்
றுகும் மதத்தால் அறிவழிந் தாரே. கஉ

336 உண்ணீர் அமுத முறுமூ றலைத்திறந்
தெண்ணீர் குரவன் இணையடித் தாமரை
கண்ணீர் சமாதியி னுடிநீ ரானலங்
கண்ணுற் றுடேசென்று கால்வழி காணுமே. கஉ

முதல் தந்திரம் முற்றிற்று.

இரண்டாந் தந்திரம்

34. அகத்தியம்

337 நடுவுநில் லாதிவ் வுலகஞ் சரிந்து
கெடுகின்ற தெம்பெரு மானென்ன ஈசன்
நடுவுள அங்கி அகத்திய நீபோய்
மூடுகிய வையத்து முன்னிரென் ருனே. க

338 அங்கி உதயம் வளர்க்கும் அகத்தியன்
அங்கி உதயஞ்செய் மேல்பா லவனிடு
மங்கி உதயஞ்செய் வடபால் தவமுனி
எங்கும் வளங்கொள் இலங்கொளி தானே உ

35. பதிவலியில் வீரட்டம் எட்டு

339 கருத்துறை அந்தகன் தன்போல் அசுரன்
வரத்தின் உலகத் துயிர்களை எல்லாம்
வருத்தஞ்செய் தானென்று வானவர் வேண்டக்
குருத்துயர் சூலங்கைக் கொண்டுகொன் ருனே. க

340 கொலையிற் பிழைத்த பிரசா பதியைத்
தலையைத் தடிந்திட்டுத் தானங்கி யிட்டு
நிலையுல குக்கிவன் வேண்டுமென் றெண்ணித்
தலையை யரிந்திட்டுச் சந்திசெய் தானே. உ

341 எங்கும் பரந்தும் இருநிலந் தாங்கியுந்
தங்கும் படித்தவன் தாளுணர் தேவர்கள்
பொங்கும் சினத்துள் அயன்தலை முன்னற
அங்(கு)அச் சுதனை உதிரங்கொண் டானே. ங

342 எங்கும் கலந்துமென் உள்ளத் தெழுகின்ற
அங்க முதல்வன் அருமறை யோதிபாற்
பொங்குஞ் சலந்தரன் போர்செய்ய நீர்மையின்
அங்கு விரற்குறித் தாழிசெய் தானே. ச

343 அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
மூப்புரஞ் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
மூப்புர மாவது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை யாரறி வாரே. ந

344 மூத்தீக் கொளுவி முழங்கெரி வேள்வியுள்
அத்தி யுரியர வுவ தறிகிலர்
சத்தி கருதிய தாம்பல தேவரும்
அத்தியின் உள்ளெழுக் தன்று கொலையே. சு

345 மூலத் துவாரத்து மூளும் ஒருவனை
மேலைத் துவாரத்து மேலுற நோக்கிழுற்
காலுற்றுக் காலினைக் காய்ந்தங்கி யோகமாய்
ஞாலக் கடவுள் நலமாய் இருந்தானே. எ

346 இருந்த மனத்தை இசைய இருத்திப்
பொருந்தி யிலிங்க வழியது போக்கித்
திருந்திய காமன் செயலழித் தங்கண்
அருந்தவ யோகங் கொறுக்கை அமர்ந்தானே. அ

36. இலிங்க புராணம்

347 அடிசேர்வன் என்னளம் ஆதியை நோக்கி
முடிசேர் மலமக ணர்மக ளாகித்
திடமார் தவஞ்செய்து தேவர் அறியப்
படியார அர்ச்சித்துப் பத்திசெய் தாளே. க

348 திரிகின்ற மூப்புரஞ் செற்ற பிரானை
அரியனென் றெண்ணி அயர்வுற வேண்டா
புரிவுடை யாளர்க்குப் பொய்யலன் ஈசன்
பரிவொடு நின்று பரிசறி வானே. உ

349 ஆழி வலங்கொண் டயன்மால் இருவரும்
ஊழி வலஞ்செய்ய ஒண்சுட ராதியும்
ஆழி கொடுத்தனன் அச்சுதற் கவ்வழி
வாழிப் பிரமற்கும் வாள்கொடுத் தானே. ங

350 தாங்கி இருபது தோளுந் தடவரை
ஓங்க எடுத்தவன் ஒப்பில் பெருவலி
ஆங்கு நெரித்தம ராவென் றழைத்தபின்
நீங்கா அருள்செய்தான் நின்மலன் தானே. ச

351 உறுவ(து) அறிதண்டி ஒண்மணற் கூட்டி
அறுவகை ஆன்ஐந்தும் ஆட்டத்தன் தாதை
செறுவகை செய்து சிதைப்ப முனிந்து
மறுமழு வால்வெட்டி மாலிபெற் றானே. ஞ

352 ஓடிவந் தெல்லாம் ஒருங்கிய தேவர்கள்
வாடி முகமும் வருத்தத்துத் தாஞ்சென்று
நாடி இறைவா நமனன்று கும்பிட
ஈடில் புகழோன் எழுகவென் றானே. ட

37. தக்கன் வேள்வி

353 தந்தை பிரான்வெகுண் டான்தக்கன் வேள்வியை
வெந்தழல் உளேட புறப்பட விண்ணவர்
மூந்திய பூசை முடியார் முறைகெட்டுச்
சிந்தினர் அண்ணல் சினஞ்செய்த போதே. க

354 சந்தி செயக்கண் டெழுகின் றிதாணும்
எந்தை யிவனல்ல யாமே உலகினிற்
பந்தஞ்செய் பாசத்து வீழ்ந்து தவஞ்செய்ய
அந்தமி லாணும் அருள்புரிந் தானே. உ

355 அப்பரி சேயய னர்பதி வேள்வியுள்
அப்பரி சேயங்கி அதிசய மாகிலும்
அப்பரி சேயது நீர்மையை யுள்கலந்
தப்பரி சேசிவன் ஆலிக்கின் றானே. ங

356 அப்பரி சேஅயன் மால்முதல் தேவர்கள்
அப்பரி சேயவ ராகிய காரணம்
அப்பரி சங்கி யுளதாளும் உள்ளிட்
டப்பரி சாகி அலர்ந்திருந் தானே. ச

357 அலர்ந்திருந் தானென் றமரர் துதிப்பக்
குலந்தருங் கீழுங்கி கோளுறு நோக்கிச்
சிவந்த பரமிது சென்று கதுவ
உவந்த பெருவழி யோடிவந் தானே. ரு

358 அரிபிர மன்தக்கன் அருக்க னுடனே
வருமதி வாலை வன்னிகல் இந்திரன்
சிரமுக நாசி சிறந்தகை தோள்தான்
அரனருள் இன்றி அழிந்தகல் லோரே. சூ

359 செவிமந் திரஞ்சொல்லுஞ் செய்தவத் தேவர்
அவிமந் திரத்தின் அடுக்கள கோலிச்
செவிமந் திரஞ்செய்து காமுற நோக்குங்
குவிமந் திரங்கொல் கொடியது வாமே. எ

360 கல்லார் கவகுண்டம் ஒன்பதும் இன்புறப்
பல்லார் அமரர் பரிந்தருள் செய்கென
வில்லாற் புரத்தை விளங்கெரி கோத்தவன்
பொல்லா அசுரர்கள் பொன்றும் படிக்கே. அ

361 தெளிந்தார் கலங்கினும் நீகலங் காதே
அளிந்தாங் கடைவதெம் ஆதிப் பிரானை
விளிந்தா னதுதக்கன் வேள்வியை வீயச்
சுளிந்தாங் கருள்செய்த தூய்மொழி யானே. கூ

38. பிரளயம்

362 கருவரை மூடிக் கலந்தெழும் வெள்ளத்
திருவருங் கோவென் றிகல இறைவன்
ஒருவனும் நீருற ஓங்கொளி யாகி
அருவரை யாய்நின் றருள்புரிந் தானே. க

363 அலைகடல் ஊடறுத் தண்டத்து வானோர்
தலைவன் எனும்பெயர் தான்றலை மேற்கொண்
டுலகார் அழற்கண் டுள்வீழா தோடி
அலைவாயில் வீழாமல் அஞ்சலென் றானே. உ

364 தண்கடல் விட்ட தமரருந் தேவரும்
எண்கடல் சூழெம் பிரானென் றிறைஞ்சுவர்
விண்கடல் செய்தவர் மேலெழுந் தப்புறங்
கண்கடல் செய்யுங் கருத்தறி யாரே. ௫

365 சமைக்கவல் லானைச் சயம்புவென் றேத்தி
அமைக்கவல் லாரிவ் வுலகத்து ளாரே
திகைத்ததெண் ணீரிற் கடலொலி ஓசை
மிகைக்கொள அங்கி மிகாமைவைத் தானே. ௬

366 பண்பழி செய்வழி பாடுசென் றப்புறங்
கண்பழி யாத கமலத் திருக்கின்ற
நண்பழி யாளனை நாடிச்சென் றச்சிரம்
விண்பழி யாத விருத்திகொண் டானே. ௭

39. சக்கரப்பேறு

367 மால்போ தகனென்னும் வண்மைக்கிங் காங்காரங்
கால்போ தங்கை யிலேடுத்தரச் சக்கர
மேல்போக வெள்ளி மலையும ராபதி
பார்போக மேழும் படைத்துடை யானே. ௮

368 சக்கரம் பெற்றுநல் தாமோ தரன்தாளும்
சக்கரந் தன்னைத் தரிக்கவொண் ணுமையால்
மிக்கரன் தன்னை விருப்புடன் அர்ச்சிக்கத்
தக்கநற் சத்தியைத் தான்கூறு செய்ததே. ௯

369 கூறது வாகக் குறித்துநற் சக்கரங்
கூறது செய்து கொடுத்தனன் மாலுக்குக்
கூறது செய்து கொடுத்தனன் சத்திக்குக்
கூறது செய்து தரித்தனன் கோலமே. ௰

370 தக்கன்றன் வேள்வி தகர்த்தநல் வீரர்பால்
தக்கன்றன் வேள்வியில் தாமோ தரன்தாளுஞ்
சக்கரந் தன்னைச் சசிமுடி மேல்விட
அக்கி உமிழ்ந்தது வாயுக் கரத்திலே. ௰௧

40. எலும்புங் கபாலமும்

371 எலும்புங் கபாலமும் ஏந்தி எழுந்த
வலம்படன் மணிமுடி வானவ ராதி
எலும்புங் கபாலமும் ஏந்திலு ணுகில்
எலும்புங் கபாலமும் இற்றுமண் ணுமே. க

41. அடிமுடி தேடல்

372 பிரமனும் மாலும் பிரானேகான் என்னப்
பிரமன்மால் தங்கள்தம் பேதைமை யாலே
பரமன் அனலாய்ப் பரந்துமுன் நிற்க
அரனடி தேடி அரற்றுகின் றூரே. க

373 ஆமே முலகுற நின்றளம் அண்ணலுந்
தாமே முலகில் தழற்பிழம் பாய்நிற்கும்
வானே முலகுறும் மாமணி கண்டீனை
நானே அறிந்தேன் அவன்ஆண்மை யாலே. உ

374 ஊனுய் உயிராய் உணர்வுங்கி யாய்முன்னுஞ்
சேணுய்வா னேங்கித் திருவுரு வாய்அண்டத்
தாணுவும் ஞாயிறுந் தண்மதி யுங்கடந்
தாண்முழு தண்டமு மாகினின் றூனே. ங

375 நின்றூன் நிலமுழு தண்டத்துள் நீளியன்
அன்றே யவன்முடி வுஞ்சின ராய்ந்தது
சென்றூர் இருவர் திருமுடி மேற்செல
நன்றுங் கழலடி நாடவொண் ணுதே. ச

376 சேவடி ஏத்துஞ் செறிவுடை வானவர்
மூவடி தாவென் றூனும் முனிவரும்
பாவடி யாலே பதஞ்செய் பிரமனுந்
தாவடி யிட்டுத் தலைப்பெய்து மாறே. ஞ

377 தானக் கமலத் திருந்த சதுமுகன்
தானக் கருங்கட லாழித் தலைவனும்
ஊனத்தின் உள்ளே உயிர்போல் உணர்கின்ற
தானப் பெரும்பொருள் தன்மைய தாமே. ட

378 ஆலிங் கனஞ்செய் தெழுந்த பரஞ்சுடர்
மேலிங்ங ன் வைத்தவே தார் மெய்ந்நெறி முன்கண்
டாலிங் கனஞ்செய் துலகம் வலம்வருங்
கோலிங் கமைமஞ்சருள் கூடலு மாமே. எ

379 வாள்கொடுத் தானை வழிபட்ட தேவர்கள்
ஆள்கொடுத் தெம்போல் அரனை அறிகிலர்
ஆள்கொடுத் தின்பங் கொடுத்துக்கோ ளாகத்
தாள்கொடுத் தானடி சாரகி லாரே. அ

380 ஊழி வலஞ்செய்தங் கோரும் ஒருவற்கு
வாழி சதுமுகன் வந்து வெளிப்படும்
வீழித் தலைநீர் விதித்தது தாவென
ஊழிக் கதிரோன் ஒளியைவென் றானே. கூ

42. சர்வ சிருஷ்டி

381 ஆதியோ டந்தம் இலாத பராபரம்
போதம தாகப் புணருங் பராபரை
சோதி யதனிற் பரந்தோன்றத் தோன்றுமாங்
தீதில் பரையதன் பால்திகழ் நாதமே. க

382 நாதத்தில் விந்துவும் நாதவிந் துக்களில்
தீதற் றகம்வந்த சிவன்சத்தி என்னவே
பேதித்து ஞானங் கிரியை பிறத்தலால்
வாதித்த விச்சையில் வந்தெழும் விந்துவே. உ

383 இல்லது சத்தி இடந்தனில் உண்டாகிக்
கல்லொளி போலக் கலந்துள் ளிருந்திடும்
வல்லது ஆக வழிசெய்த அப்பொருள்
சொல்லது சொல்லிடில் தூராதி தூரமே. ங

384 தூரத்திற் சோதி தொடர்ந்தொரு சத்தியாய்
ஆர்வத்து நாதம் அணைந்தொரு விந்துவாய்ப்
பாரச் சதாசிவம் பார்முதல் ஐந்துக்கும்
சார்வத்துச் சத்திஓர் சாத்துமா னதே. ச

385 மானின்கண் வாணுகி வாயு வளர்ந்திடும்
கானின்கண் நீருங் கலந்து கடினமாய்த்
தேனின்கண் ஐந்துஞ் செறிந்தைந்து பூதமாய்ப்
பூவின்கண் நின்று பொருந்தும் புவனமே. ரு

386 புவனம் படைப்பான் ஒருவன் ஒருத்தி
புவனம் படைப்பார்க்குப் புத்திரர் ஐவர்
புவனம் படைப்பானும் பூமிசை யாளுய்
புவனம் படைப்பானப் புண்ணியன் தானே. சூ

387 புண்ணியன் நந்தி பொருந்தி உலகெங்கும்
தண்ணிய மானே வளர்த்திடுஞ் சுத்தியுங்
கண்ணியல் பாகக் கலவி முழுதுமாய்
மண்ணியல் பாக மலர்ந்தெழு பூவிலே. எ

388 நீரகத் தின்பம் பிறக்கும் நெருப்பிடை
காயத்திற் சோதி பிறக்கும்அக் காற்றிடை
ஓர்வுடை நல்லுயிர்ப் பாதம் ஒலிசத்தி
நீரிடை மண்ணின் நிலைப்பிறப் பாமே. அ

389 உண்டுல கேழும் உமிழ்ந்தான் உடனுகி
அண்டத் தமரர் தலைவனும் ஆதியுங்
கண்டச் சதுமுகக் காரணன் தன்னுடும்
பண்டிவ் வுலகம் படைக்கும் பொருளே. கூ

390 ஓங்கு பெருங்கடல் உள்ளுறு வாளுடும்
பாங்கார் கயிலைப் பராபரன் தானும்
வீங்குங் கமல மலர்மிசை மேலயன்
ஆங்குயிர் வைக்கும் அதுவுணர்ந் தானே. கூ

391 காரணன் அன்பிற் கலந்தெங்கும் நின்றவன்
காரணன் நின்ற நடுவுட லாய்நிற்கும்
பாரணன் அன்பிற் பதஞ்செய்யும் நான்முகன்
ஆரண மாய்உல காயமர்ந் தானே. கூ

392 பயன்னனி தாம்பரு மாமணி செய்ய
கயன்னனி தாகிய கம்பன்வன் றுண்டு

அயன்ஒளி யாயிருந் தங்கே படைக்கும்
பயனெளி தாம்வய ணங்கெதளிந் தேதனே. கஉ

393 போக்கும் வரவும் புனிதன் அருள்புரிந்
தாக்கமுஞ் சிந்தைய தாகின்ற காலத்து
மேக்கு மிகநின்ற எட்டுத் திசையொடுங்
தாக்குங் கலக்குந் தயாபரன் தானே. கஙு

394 நின்றுயி ராக்கு நிமலன்என் றுருயிர்
ஒன்றுயி ராக்கும் அளவை உடலுற
முன்துய ராக்கும் உடற்குந் துணையதா
நன்றுயிர்ப் பானே நடுவுநின் றூனே. கச

395 ஆகின்ற தன்மையில் அக்கணி கொன்றையன்
வேகின்ற செம்பொனின் மேலணி மேனியன்
போகின்ற சீவன் புகுந்துட லாய்உளன்
ஆகின்ற தன்மைசெய் ஆண்டகை யானே. கஞ

396 ஒருவன் ஒருத்தி விளையாடல் உற்றூர்
இருவர் விளையாட்டும் எல்லாம் விளைக்கும்
பருவங்கள் தோறும் பயன்பல வான
திருவொன்றிற் செய்கை செகழுற்று மாமே. கசு

397 புகுந்தறி வான்புவ னுபதி அண்ணல்
புகுந்தறி வான்புரி சக்கரத் தண்ணல்
புகுந்தறி வான்மலர் மேலுறை புத்தேள்
புகுந்தறி யும்முடிக் காகினின் றூரே. கஎ

398 ஆணவச் சத்தியும் ஆம்அதில் ஐவருங்
காரிய காரண ஈசர் கடைமுறை
பேணிய ஐந்தொழி லால்விந்து விற்பிறந்(து) கஅ
ஆணவம் நீங்கா தவரென லாகுமே.

399 உற்றமுப் பாலொன்று மாயாள் உதயமா
மற்றைய மூன்று மாயோ தயம்விந்து
பெற்றவள் நாதம் பரையிற் பிறத்தலால்
உற்ற பரசிவன் தொல்விளை யாட்டிதே. கக

400 ஆகாய மாதி சதாசிவ ராதியென்
போகாத சத்தியுட் போந்துடன் போந்தனர்
மாகாய ஈசன் அரன்மால் பிரமனும்
ஆகாயம் பூமி காண அளித்தலே. ௨0

401 அளியார் முக்கோணம் வயிந்தவந் தன்னில்
அளியார் திரிபுரை யாம்அவள் தானே
அளியார் சதாசிவ மாகி அமைவாள்
அளியார் கருமங்கள் ஐந்துசெய் வாளே. ௨௪

402 வாரணி கொங்கை மதேன்மணி மங்கலி
காரணி காரிய மாகக் கலந்தவள்
வாரணி ஆரணி வானவர் மோகினி
பூரணி போதாதி போதழு மாமே. ௨௨

403 நின்றது தாணுய் நிறைந்த மகேசுரன்
சென்றங் கியங்கும் அரன்திரு மாலவன்
மன்றது செய்புடம் மலர்மிசை மேலயன்
என்றிவ ராக இசைந்திருந் தானே. ௨௩

404 ஒருவனு மேஉல கேழும் படைத்தான்
ஒருவனு மேஉல கேழும் அளித்தான்
ஒருவனு மேஉல கேழும் துடைத்தான்
ஒருவனு மேஉல கோடுயிர் தானே. ௨௪

405 சென்தா மரைவண்ணன் தீவண்ணன் எம்இறை
மைந்தார் முகில்வண்ணன் மாயஞ்செய் பாசத்தும்
கொந்தார் குழலியர் கூடிய கூட்டத்தும்
அந்தார் பிறவி அறுத்துநின் றானே. ௨௫

406 தேடுந் திசைளட்டுஞ் சீவன் உடல்உயிர்
கூடும் பிறவிக் குணஞ்செய்த மாகந்தி
ஊடு மவர்தம துள்ளத்துள் ளேநின்று
நாடும் வழக்கமும் நான்அறிந் தேனே. ௨௬

407 ஓராய மேஉல கேழும் படைப்பதும்
ஓராய மேஉல கேழும் அளிப்பதும்
ஓராய் மேஉல கேழும் துடைப்பதும்
ஓராய மேஉல கோடுயிர் தானே. உஎ

408 நாதன் ஒருவனும் கல்ல இருவருங்
கோது குலத்தொடுங் கூட்டிக் குழைத்தனர்
எது பணியென் றிசைபும் இருவருக்
காதி இவனே அருளுகின் றானே. உஅ

409 அப்பரி சண்பத்து நான்கு நூ றாயிரம்
மெய்ப்பரி செய்தி விரிந்துபி ராய்நிற்கும்
பொய்ப்பரி செய்திப் புகலும் மனிதர்கட்
கிப்பரி சேஇருள் மூடினின் றானே. உக

410 ஆதித்தன் சந்திரன் அங்கினண் பாலர்கள்
போதித்த வாறெலி பொங்கிய நீர்புவி
வாதித்த சத்தாதி வாக்கு மனுதிகள்
ஓதுற்ற மாயையின் விந்துவின் உற்றதே. உஏ

43. திதி

411 புகுந்துநின் றான்வெளி யாய்இரு ளாகிப்
புகுந்துநின் றான்புகழ் வாய்இகழ் வாகிப்
புகுந்துநின் றான்உட லாய்உயி ராகிப்
புகுந்துநின் றான்புந்தி மன்னினின் றானே. க

412 தானே திசையொடு தேவரு மாய்நிற்குந்
தானே உடலுயிர் தத்துவ மாய்நிற்குந்
தானே கடல்மலை யாதியு மாய்நிற்குந்
தானே உலகில் தலைவனு மாமே. உ

413 உடலாய் உயிராய் உலகம தாகிக்
கடலாய்க் கார்முகில் நீர்பொழி வானுய்
இடையாய் உலப்பிலி எங்குந்தா னாகி
அடையார் பெருவழி அண்ணல்நின் றானே. கூ

414 தேதுங் திசைசுட்டுஞ் சீவன் உடல்உயிர்
கூடு மரபிற் குணஞ்செய்த மாநந்தி
ஊடும் அவர்தம துள்ளத்து ளேநின்று
நாடும் வழக்கமும் நான்அறிந் தேனே. க

415 தாளொரு காலந் தனிச்சுட ராய்நிற்குந்
தாளொரு கால்சண்ட மாருத மாய்நிற்குந்
தாளொரு காலந் தண்மழை யாய்நிற்குந்
தாளொரு காலந்தண் மாயனு மாமே. ங

416 அன்பும் அறிவும் அடக்கமு மாய்நிற்கும்
இன்பமும் இன்பக் கலவியு மாய்நிற்கும்
முன்புறு காலமும் ஊழியு மாய்நிற்கும்
அன்புற ஐந்தில் அமர்ந்துநின் றானே. ச

417 உற்று வினைவான் அவனே உலகினைப்
பெற்று வினைவான் அவனே பிறவினைச்
சுற்றிய சாலும் குடமூஞ் சிறுதூதை
மற்றும் அவனே வினையவல் லானே. ஞ

418 உள்ளுயிர்ப் பாடுட லாகின்ற் றுன்நந்தி
வெள்ளுயி ராகும் வெளியாய்ப் நிலங்கொளி
உள்ளுயிர்க் கும்உணர் வேபுட ஞுட்பரந்
தள்ளுயி ராவண்ணந் தாங்கினின் றானே. ட

419 தாங்கருந் தன்மையுந் தானவை பல்லுயிர்
வாங்கிய காலத்து மற்றோர் பிறிதில்லை
ஓங்கி எழுமைக்கும் யோகாந்த மவ்வழி
தாங்கின் றுளும்அத் தாரணி தானே. ஈ

420 அணுகினுஞ் சேயவன் அங்கியிற் கூடி
நணுகினும் ஞானக் கொழுந்தான்று நல்கும்
பணிகினும் பார்மிசைப் பல்லுயி ராகித்
தணிகினும் மண்ணுடல் அண்ணல்செப் வானே. உ

44. சங்காரம்

421 அங்கிசெய் தீசன் அகலிடஞ் சுட்டது
அங்கிசெய் தீசன் அலைகடற் சுட்டது
அங்கிசெய் தீசன் அசுரரைச் சுட்டது
அங்கியவ் வீசற்குக் கைஅம்பு தானே. க

422 இலயங்கள் மூன்றினும் ஒன்றுகற் பாந்த
நிலையன் றழிந்தமை நின்றுணர்ந் தேனல்
உலைதந்த மெல்லரி போலும் உலகம்
மலைதந்த மானிலந் தான்வெந் ததுவே. உ

423 பதஞ்செய்யும் பாரும் பனிவரை எட்டும்
உதஞ்செய்யும் ஏழ்கடல் ஓதம் முதலாங்
குதஞ்செய்யும் அங்கி கொளுவியா காசம்
விதஞ்செய்யும் நெஞ்சில் வியப்பில்லை தானே. ங

424 கொண்டல் வரைநின் றிழிந்த குலக்கொடி
அண்டத்துள் ஊறி யிருந்தெண் டிரையாகி
ஒன்றின் பதஞ்செய்த ஓம்என்ற அப்புறக்
குண்டத்தின் மேல்அங்கி கோலிக்கொண் டானே. ச

425 நித்தசங் காரம் உறக்கத்து நீள்மூடம்
வைத்தசங் காரமுஞ் சாக்கிரா தீதமாஞ்
சுத்தசங் காரந் தொழிலற்ற கேவலம்
உய்த்தசங் காரம் பரன்அருள் உண்மையே. ஞ

426 நித்தசங் காரம் இரண்டுடல் நீவுதல்
வைத்தசங் காரமும் மாயாசங் காரமாஞ்
சுத்தசங் காரம் மனாதீதந் தோய்வுறல்
உய்த்தசங் காரஞ் சிவன்அருள் உண்மையே. ட

427 நித்தசங் காரங் கருவிடர் நீக்கிலை
ஒத்தசங் காரம் உடலுயிர் நீவுதல்
சுத்தசங் காரம் அதீதத்துட் டோய்வுறல்
உய்த்தசங் காரம் பரனருள் உண்மையே. ண

428 நித்தசங் காரமும் நீடிளைப் பாற்றலின்
வைத்தசங் காரமும் மன்னும் அனுதியிற்
சுத்தசங் காரமுந் தோயாப் பரன்அருள்
உய்த்தசங் காரமும் காலாம் உதிக்கிலே. அ

429 பாழே முதலா எழும்பயிர் அப்பயிர்
பாழாய் அடங்கினும் பண்டைப்பாழ் பாழாகா
வாழாச்சங் காரத்தின் மாலயன் செய்தியாம்
பாழாம் பயிராய் அடங்கும்அப் பாழிலே. கூ

430 தீயவைத் தார்மின்கள் சேரும் வினைதனை
மாயவைத் தான்வைத்த வன்பதி ஒன்றுண்டு
காயம்வைத் தான்கலந் தெங்கும் நினைப்பதோர்
ஆயம்வைத் தாளுணர் வாரவைத் தானே. கo

45. திரோபவம்

431 உள்ளத் தொருவனை உள்ளுறு சோதியை
உள்ளம்விட் டோராடி நீங்கா ஒருவனை
உள்ளமுந் தானும் உடனே இருக்கினும்
உள்ளம் அவனை உருவறி யாதே. க

432 இன்பப் பிறவி படைத்த இறைவனுந்
துன்பஞ்செய் பாசத் துயருள் அடைத்தனன்
என்பிற் கொளுவி இசைந்துறு தோற்றசை
முன்பிற் கொளுவி முடிகுவ தாமே. உ

433 இறையவன் மாதவன் இன்பம் படைத்த
மறையவன் மூவரும் வந்துடன் கூடி
இறையவன் செய்த இரும்பொறி யாக்கை
மறையவன் வைத்த பரிசறி யாதே. ங

434 காண்கின்ற கண்ணெளி காதல்செய் தீசனை
ஆண்பெண் அலியுரு வாய்நின்ற ஆதியை
ஊண்படு நாவுடை நெஞ்சம் உணர்ந்திட்டுச்
சேண்படு பொய்கைச் செயலறை யாரே. ச

435 தெருளுநம் உலகிற்குந் தேவர்க்கும் இன்பம்
அருளுநம் வகைசெய்யும் ஆதிப் பிரானுஞ்
சுருளுஞ் சுடருறு தூவெண் சுடரும்
இருளும் அறுநின் றிருட்டறை யாமே. ந

436 அரைக்கின் றருள்தரும் அங்கங்கள் ஓசை
உரைக்கின்ற ஆசையும் ஒன்றுடொன் றுவ்வாப்
பரக்கும் உருவமும் பாரகந் தாணுப்க்
கரக்கின் றவைசெய்த காண்டகை யானே. சு

437 ஒளித்துவைத் தேதனுள் ளாறவுணர்ந் தீசனை
வெளிப்பட்டு நின்றருள் செய்திடு மீண்டே
களிப்பொடுங் காதன்மை என்னும் பெருமை
வெளிப்பட் டிறைஞ்சிணை வேட்சியு மாமே. எ

438 நின்றது தாணுப் நிறைந்த மகேசுரன்
சென்றங் கியங்கி யரன்திரு மாலவன்
நன்றது செய்யும் மலர்மிசை மேலயன்
என்றிவ ராகி இசைந்திருந் தானே. அ

439 ஒருங்கிய பாசத்துள் உத்தம சித்தின்
இருங்கரை மேலிருந் தின்புற நாடி
வருங்கரை ஓரா வகையினிற் கங்கை
அருங்கரை மேணில் அழுக்கற லாமே. கூ

440 மண்ணென்று தான்பல நற்கல மாயிடும்
உண்ணின்ற யோனிகட் கெல்லாம் ஒருவனே
கண்ணென்று தான்பல காணுந் தனக்காணை
அண்ணலும் இவ்வண்ண மாகின்ற னானே. கo

46. அநுக்கிரகம்

441 எட்டுத் திசையும் எறிகின்ற காற்றொடு
வட்டத் திரையனல் மாநிலம் ஆகாயம்
ஓட்டி உயிர்நிலை என்னுமிக் காயப்பை
கட்டி அவிழ்ப்பன் கண்ணுதல் காணுமே. க

442 உச்சியில் ஓங்கி ஒளிதிகழ் காதத்தை
நச்சியே இன்பங்கொள் வாக்கு நமன்இல்லை
விச்சும் விரிசுடர் மூன்றும் உலகுக்குத்
தச்ச மவனே சமைக்கவல் லானே. உ

443 குசவன் திரிகையில் ஏற்றிய மண்ணைக்
குசவன் மனத்துற்ற தெல்லாம் வனைவன்
குசவனைப் போல்எங்கள் கோன்நந்தி வேண்டில்
அசைவில் உலகம் அதுஇது வாமே. ஊ

444 விடைபுடை யான்விகிர் தன்மிகு பூதப்
படைபுடை யான்பரி சேஉல காக்குங்
கொடைபுடை யான்குணம் என்குண மாகுஞ்
சடைபுடை யான்சிந்தை சார்ந்துநின் றானே. ச

445 உகந்துநின் றேபடைத் தான்உல கேழும்
உகந்துநின் றேபடைத் தான்பல ஊழி
உகந்துநின் றேபடைத் தான்ஐந்து பூதம்
உகந்துநின் றேஉயிர் ஊன்படைத் தானே. ந

446 படைத்துடை யான்பண் டுலகங்கள் ஏழும்
படைத்துடை யான்பல தேவரை முன்னே
படைத்துடை யான்பல சீவரை முன்னே
படைத்துடை யான்பர மாகிநின் றானே. ப

447 ஆதி படைத்தனன் ஐம்பெரும் பூதம்
ஆதி படைத்தனன் ஆசில்பல் ஊழி
ஆதி படைத்தனன் எண்ணிலி தேவரை
ஆதி படைத்தவை தாங்கிநின் றானே. ம

448 அகன்றான் அகலிடம் ஏழுமொன் றாகி
இவன்றா னெனநின் றெளியனும் அல்லன்
சிவன்றான் பலபல சீவனும் ஆகி
நவின்றான் உலகுறு நம்பனு மாமே. ய

449 உண்ணின்ற சோதி உறநின்ற ஓருடல்
விண்ணின் றமரர் விரும்பும் விழுப்பொருள்
மண்ணின்ற வாறேர் புகழ்திரு மேனியன்
கண்ணின்ற மாமணி மாபோத மாமே. கூ

450 ஆரும் அறியாத அண்டத் திருவுருப்
பாரமுத லாகப் பயிலுங் கடத்திலே
நீரினிற் பால்போல நிற்கின்ற நேர்மையைச்
சோராமற் காணுஞ் சுகம்அறிந் தேனே. கo

47. கர்ப்பக்கிரியை

451 ஆக்குகின் றுன்முன் பிரிந்த இருபத்தஞ்
சாக்குகின் றுனவ ணுதினம் ஆருயிர்
ஆக்குகின் றுன்கர்ப்பக் கோளகை புள்ளிருந்
தாக்குகின் றுன்அவன் ஆவ தறிந்தே. க

452 அறிகின்ற மூலத்தின் மேல்அங்கி அப்புச்
செறிகின்ற ஞானத்துச் செந்தாள் கொளுவிப்
பொறைநின்ற இன்னுயிர் போந்துற நாடிப்
பறிகின்ற பத்தெனும் பாரஞ்செய் தானே. உ

453 இன்புறு காலத் திருவர்முன் பூறிய
துன்புறு பாசத் துயர்மனை வாளுளன்
பண்புறு காலமும் பார்மிசை வாழ்க்கையும்
அன்புறு காலத் தமைத்தொழிந் தானே. ங

454 கருவை ஒழிந்தவர் கண்டகால் மூவேழ்
புருடன் உடலில் பொருந்துமற் றோரார்
திருவின் கருக்குழி தேடிப் புகுந்த
துருவம் இரண்டாக ஓடி விழுந்தே. ச

455 விழுந்தது லிங்கம் விரிந்தது யோனி
ஒழிந்த முதல்ஐந்தும் ஈரைந்தொ டேறிப்
பொழிந்த புனல்பூதம் போற்றுங் கரணம்
ஒழிந்த நுதல்உச்சி உள்ளே ஒளித்தே. ஞ

456 பூவின் மணத்தைப் பொருந்திய வாயுவுந்
தாவி உலகில் தரிப்பித்த வாறுபோல்
மேவிய சீவனில் மெல்லநீள் வாயுவுங்
கூவி அவிழுங் குறிக்கொண்ட போதே. சூ

457 போகின்ற எட்டுப் புகுகின்ற பத்தெட்டு
மூழ்கின்ற மூத்தனும் ஒன்பது வாய்தலும்
நாகமும் எட்டுடன் நாலு புரவியும்
பாகன் விடானெனிற் பன்றியு மாமே. எ

458 ஏறு எதிர்க்கில் இறைபவன் ஞானகும்
மாறு எதிர்க்கில் அரியவன் ஞானகும்
நேரொக்க வைக்கின் நிகர்போதத் தானகும்
பேரொத்த மைந்தனும் பேர சானுமே. அ

459 ஏயங் கலந்த இருவர்தஞ் சாயத்துப்
பாயுங் கருவும் உருவா மெனப்பல
காயங் கலந்தது காணப் பதிந்தபின்
மாயங் கலந்த மலையல மானதே. கூ

460 கர்ப்பத்துக் கேவல மாயாள் கினைக்கூட
நிற்குந் துரியமும் பேதித்து நினைவெழு
வற்புறு காமியம் எட்டாதல் மாயேயனுந்
சொற்புறு தூய்மறை வாக்கினுஞ் சொல்லே. கூ

461 என்பால் மிடைந்து நரம்பு வரிக்கட்டிச்
செம்பால் இறைச்சி திருந்த மனைசெய்து
இன்பால் உயிர்நிலை செய்த இறையோங்கும்
நன்பால் ஒருவனை நாடுகின் றேனே. கக

462 பதஞ்செய்யும் பால்வண்ணன் மேனிப் பகலோன்
இதஞ்செய்யு மொத்துடல் எங்கும் புகுந்து
குதஞ்செய்யும் அங்கியின் கோபந் தணிப்பான்
விதஞ்செய்யு மாறே விதித்தொழிந் தானே. கஉ

463 ஓழிபல செய்யும் வினையுற்ற நாளை
வழிபல நீராடி வைத்தெழு வாங்கிப்

பழிபல செய்கின்ற பாசக் கருவைச்
சுழிபல வாங்கிச் சுடாமல்வைத் தானே. கஙூ

464 சுக்கில நாடியில் தோன்றிய வெள்ளியும்
அக்கிர மத்தே தோன்றுமவ் வியோனியும்
புக்கிடும் எண்விரல் புறப்பட்டு கால்விரல்
அக்கரம் எட்டும்என் சாணது வாகுமே. கச

465 போகத்துள் ஆங்கே புகுந்த புனிதனுங்
கோசத்துள் ஆகங் கொணர்ந்த கொடைத்தோழில்
எகத்துள் ஆங்கே இரண்டெட்டு மூன்றைறந்து
மோகத்துள் ஆங்கொரு மூட்டைசெய் தானே. கஞ

466 பிண்டத்தில் உள்ளுறு பேதைப் புலன்ஐந்தும்
பிண்டத்தி னூடே பிறந்து மரித்தது
அண்டத்தின் உள்ளுறு சீவனும் அவ்வகை
அண்டத்து நாதத் தடமர்ந்திடுக் தானே. கசு

467 இலைப்பொறி யேற்றி யெனதுடல் ஈசன்
துலைப்பொறி யிற்கரு ஐந்துட னூட்டி
நிலைப்பொறி மூப்பது நீர்மை கொளுவி
உலைப்பொறி ஒன்பதில் ஒன்றுசெய் தானே. கஎ

468 இன்புற் றிருவர் இசைவித்து வைத்தமண்
துன்பக் கலசம் அணைவான் ஒருவனே
ஒன்பது நீர்ச்சால் கலசம் பதினெட்டு
வெந்தது சூளை விளைந்தது தானே. கஅ

469 அறியீ ருடம்பினி லாகிய வாறும்
பிறியீ ரதனிற் பெருகுங் குணங்கள்
செறியீ ரவற்றினுட் சித்திகள் இட்ட
தறியவீ ரைந்தினு ளானது பிண்டமே. கஙூ

470 உடல்வைத்த வாறும் உயிர்வைத்த வாறும்
மடைவைத்த ஒன்பது வாய்த்தலும் வைத்துத்
திடம்வைத்த தாமரைச் சென்னியுள் ஆங்கிக்
கடைவைத்த ஈசனைக் கைகலந் தேனே. உ0

471 கேட்டுநின் றேன்னங்குங் கேடில் பெருஞ்சுடர்
மூட்டுகின் றுன்முதல் யோனி டையனவன்
கூட்டுகின் றுன்குழம் பின்கரு வைவபுரு
நீட்டுநின் றுகத்து கோர்பட்ட வாறே. உக

472 பூவுடன் மொட்டுப் பொருந்த அலர்ந்தபின்
காவுடைத் தீபங் கலந்து பிறந்திடும்
நீரிடை நின்ற குமிழி நிழலதாய்ப்
பாருடல் எங்கும் பரந்தெட்டும் பற்றுமே. உஉ

473 எட்டினுள் ஐந்தாகும் இந்திரி யங்களும்
கட்டிய மூன்று காணமு மாய்விடும்
ஓட்டிய பாச உணர்வென்னுங் காயப்பை
கட்டு அவிழ்த்திடுங் கண்ணுதல் காணுமே. உங

474 கண்ணுதல் காமங் கலந்துடம் பாயிடைப்
பண்ணுதல் செய்து பசுபாசம் நீங்கிட
எண்ணிய வேதம் இசைந்த பரப்பினை
மண்முத லாக வகுத்துவைத் தானே. உச

475 அருளல்ல தில்லை அரனவன் அன்றி
அருளில்லை யாதலி னவ்வோர் உயிரைத்
தருகின்ற போதிரு கைத்தாயர் தம்பால்
வருகின்ற கண்பு வகுத்திடுங் தானே. உந

476 வகுத்த பிறவியை மாதுகல் லாளுந்
தொகுத்திருள் நீக்கிய சோதி யவனும்
பகுத்துணர் வாகிய பல்லுயிர் எல்லாம்
வகுத்துள்ளும் நின்றதோர் மாண்பது வாமே. உசு

477 மாண்பது வாக வளர்கின்ற வன்னியுங்
காண்பது ஆண்பெண் அலியெனுங் கற்பனை
பூண்பது மாதா பிதாவழி போலவே
ஆம்பதி செய்தானச் சோதிதன் ஆண்மையே. உன

478 ஆண்மிகில் ஆணுகும் பெண்மிகிற் பெண்ணுகும்
பூணிரண் டொத்துப் பொருந்தில் அலியாகுந்

தாண்மிகு மாகில் தரணி முழுதாளும்
பாணுவ மிக்கிடில் பாய்ந்ததும் இல்லையே. உஅ

479 பாய்ந்தபின் னஞ்சோடில் ஆயுளும் நாழுகும்
பாய்ந்தபின் னூலொடில் பாரினில் எண்பதாம்
பாய்ந்திடும் வாயுப் பகுத்தறிந் திவ்வகை
பாய்ந்திடும் யோகிக்குப் பாய்ச்சலு மாமே. உக

480 பாய்கின்ற வாயுக் குறையிற் குறளாகும்
பாய்கின்ற வாயு விளைக்கின் முடமாகும்
பாய்கின்ற வாயு நடுப்படிற் கூனுகும்
பாய்கின்ற வாயுமா தாக்கில்லைப் பார்க்கிலே. ஙo

481 மாதா உதரம் மலமிகில் மந்தனும்
மாதா உதரம் சலமிகில் மூங்கையாம்
மாதா உதரம் இரண்டொகில் கண்ணில்லை
மாதா உதரத்தில் வந்த குழவிக்கே. ஙக

482 குழவியும் ஆணும் வலத்தது வாகில்
குழவியும் பெண்ணும் இடத்தது வாகில்
குழவியும் இரண்டாம் அபான னெதிர்க்கில்
குழவி அலியாகுங் கொண்டகால் ஒக்கிலே. ஙஉ

483 கொண்டகல் வாயு இருவர்க்கும் ஒத்தெழில்
கொண்ட குழவியுங் கோமள மாயிடுங்
கொண்டகல் வாயு இருவர்க்குங் குழறிடில்
கொண்டதும் இல்லையாங் கோல்வளை யாட்கே. ஙங

484 கோல்வளை உந்தியிற் கொண்ட குழவியுந்
தால்வளை புள்ளே தயங்கிய சோதியாம்
பால்வளர்ந் துள்ளே பகலவன் பொன்னுருப்
போல்வளர்ந் துள்ளே பொருந்துரு வாமே. ஙச

485 உருவம் வளர்ந்திடும் ஒண்டிங்கள் பத்திற்
பருவம தாகவே பாரினில் வந்திடும்
மருவி வளர்ந்திடு மாயையி னூலே
அருவம தாவதிங் காரறி வாரே. ஙரு

486 இட்டான் அறிந்திலன் ஏற்றவள் கண்டிலள்
தட்டான் அறிந்தும் ஒருவர்க் குரைத்திலன்
பட்டாங்கு சொல்லும் பரமனும் அங்குளன்
கெட்டேன் இம்மாயையின் கீழ்மையெவ் வாறே. ஈஏ

487 இன்புற நாடி இருவருஞ் சந்தித்துத்
துன்புறு பாசத்தில் தோன்றி வளர்ந்தபின்
முன்புற நாடி நிலத்தின்முன் தோன்றிய
தொன்புற நாடிநின் றேதலு மாமே. ஈக

488 குயிற்குஞ்சு முட்டையைக் காக்கைக் கூட்டிட்டால்
அயிர்ப்பின்றிக் காக்கை வளர்க்கின் றதுபோல்
இயக்கில்லைப் போக்கில்லை யேனென்ப தில்லை
மயக்கத்தால் காக்கை வளர்க்கின்ற வாறே. ஈஅ

489 முதற்கிழங் காய்முளை யாய்அம் முளைப்பின்
அதற்புத லாய்ப்பல மாய்நின் றளிக்கும்
அதற்கது வாய்இன்ப மாவது போல
அதற்கது வாய்நிற்கும் ஆதிப் பிரானே. ஈக

490 ஏனோர் பெருமைய ஞகினும் எம்மிறை
ஊனே சிறுமைபுள் உட்கலந் தங்குளன்
வானோர் அறியும் அளவல்ல மாதேவன்
தானே அறியுந் தவத்தினி னுள்ளே. ஈ0

491 பரத்திற் கரைந்து பதிந்தநற் காயம்
உருத்தரித் திவ்வுடல் ஓங்கிட வேண்டித்
திரைக்கடல் உப்புத் திரண்டது போலத்
திரித்துப் பிறக்குந் திருவரு ளாலே. ஈக

48. மூவகைச்சீவ வர்க்கம்

492 சத்தி சிவன்வினை யாட்டால் உயிராக்கி
ஒத்த இருமாயா கூட்டத் திடைபூட்டிச்
சுத்தம தாகுந் துரியம் பிரிவித்துச்
சித்தம் புகுந்து சிவமய மாக்குமே. க

493 விஞ்ஞானர் கால்வரு மெய்ப்பிர ளாகலத்
தஞ்ஞானர் மூவருந் தாங்கு சகலத்தின்
அஞ்ஞானர் மூவரு மாகும் பதின்மராம்
விஞ்ஞான ராதியர் வேற்றுமை தானே. ௨

494 விஞ்ஞானர் கேவலத் தாரது விட்டவர்
தஞ்ஞானர் அட்டவித் தேசராஞ் சார்ந்துளோர்
எஞ்ஞானர் ஏழ்கோடி மந்திர நாயகர்
மெய்ஞ்ஞானர் ஆணவம் விட்டுநின் றூரே. ௩

495 இரண்டா வதில்முத்தி எய்துவர் அத்தனை
இரண்டாவ துள்ளே இருமல பெத்தர்
இரண்டாகு நூற்றெட்டு ருத்திரர் என்பர்
மூரண்சேர் சகலத்தர் மும்மலத் தாரே. ௪

496 பெத்தத்த சித்தொடு பேண்முத்தச் சித்தது
ஒத்திட் டிரண்டிடை யூடுற்றூர் சித்துமாய்
மத்தது மும்மலம் வாட்டுகை மாட்டாதார்
சத்தத் தமிழ்ந்து சகலத்து ளாரே. ௫

497 சிவமாகி ஐவகைத் திண்மலஞ் செற்றோர்
அவமாகார் சித்தர் முத்தாந்தத் து வாழ்வார்
பவமான தீர்வோர் பசுபாசம் அற்றோர்
நவமான தத்துவம் நாடிக்கண் டோரே. ௬

498 விஞ்ஞானர் ஆணவ கேவல மேவுவோர்
விஞ்ஞானர் மாயையில் தங்கும் இருமலர்
அஞ்ஞானர் அச்சக லத்தர் சகலராம்
விஞ்ஞான ராதிகள் ஒன்பான்வே றுயிர்களே. ௭

499 விஞ்ஞான கன்மத்தால் மெய்யகங் கூடிய
அஞ்ஞான கன்மத்தி னல்சுவர் யோனிபுக்
கெஞ்ஞான மெய்தீண்டி யேயிடை யிட்டுப்போய்
மெஞ்ஞான ராகிச் சிவமேவல் உண்மையே. ௮

500 ஆணவங் துற்ற வவித்தா கனவற்றோர்
காணிய விந்துவா காத சகலாதி
ஆணவ மாதி யடைந்தா ரவரன்றே
சேணுயர் சத்தி சிவதத்துவ மாமே. க

49. பாத்திரம்

501 திலமத் தனையே சிவஞானிக் கீந்தால்
பலமுத்தி சித்தி பரபோக முந்தரும்
நிலமத் தனைபொன்னை நின்மூடர்க் கீந்தால்
பலமற் றேபர போகமுங் குன்றுமே. க

502 கண்டிருந் தாருயிர் உண்டிடுங் காலனைக்
கொண்டிருந் தாருயிர் கொள்ளுங் குணத்தினை
கன்றுணர்ந் தார்க்கருள் செய்திடு நாதனைச்
சென்றுணர்ந் தார்சிலர் தேவரு மாமே. உ

503 கைவிட்டி லென்கரு வாகிய காலத்து
மெய்விட்டி லென்விகிர் தன்னடி தேடுவன்
பொய்விட்டு நானே புரிசடை யானடி
நெய்விட் டிலாத விடிஞ்சிலு மாமே. ங

504 ஆவன ஆவ அழிவ அழிவன
போவன போவ புகுவ புகுவன
காவலன் போர்ந்தி காட்டிடத்துக் கண்டவன்
ஏவன செய்யும் இளங்கிளை யோனே. ச

50. அபாத்திரம்

505 கோல வறட்டைக் குனிந்து குளகிட்டுப்
பாலைக் கறந்து பருகுவ தேயொக்குஞ்
சீலமும் நோன்பும் இலாதவர்க் கீந்தது
காலங் கழிந்த பயிரது ஆகுமே. க

506 ஈவது யோக இயம நியமங்கள்
சார்வ தறிந்தன்பு தங்கு மவர்க்கன்றி
ஆவ தறிந்தன்பு தங்கா தவர்களுக்
கீவ பெரும்பிழை யென்றுகொ ளீரே. உ

507 ஆமா றறியான் அதிபஞ்ச பாதகன்
தோமாறும் ஈசற்குந் தூய குரவற்குங்
காமாதி விட்டோர்க்குந் தரல்தந்து கற்பிப்போன்
போமா நரகிற் புகான்போதங் கற்கவே. ஈ

508 மண்மலி யத்தினை மாதனம் ஈயினும்
அண்ணல் இவனென்றே யஞ்சலி யத்தனைப்
எண்ணி யிறைஞ்சாதார்க் கீந்த இருவரும்
நண்ணுவர் ஏழா நரகக் குழியிலே. ச

51. தீர்த்தம்

509 உள்ளத்தின் உள்ளே உளபல தீர்த்தங்கள்
மெள்ளக் குடைந்துநின் றூடார் வினைகெடப்
பள்ளமும் மேடும் பரந்து திரிவரே
கள்ள மனமுடைக் கல்வியி லோரே. க

510 தளியறி வாளர்க்குத் தண்ணிதாய்த் தோன்றுங்
குளியறி வாளர்க்குக் கூடவும் ஒண்ணுன்
வளியறி வாளர்க்கு வாய்க்கிலும் வாய்க்குந்
தெளியறி வாளர்தஞ் சிந்தையு ளானே. உ

511 உள்ளத்தின் உள்ளே உணருங் ஒருவனைக்
கள்ளத்தி னருங் கலந்தறி வார்இல்லை
வெள்ளத்தை நாடி விடுமவர் தீவினைப்
பள்ளத்தி லிட்டதோர் பந்தருள் ளானே. ங

512 அறிவார் அமரர்கள் ஆதிப் பிரானைச்
செறிவா னுறைபதஞ் சென்று வலங்கொள்
மறியார் வளைக்கை வருபுனற் கங்கைப்
பொறியார் புனல்மூழ்கப் புண்ணிய ராமே. ச

513 கடலிற் கெடுத்துக் குளத்தினிற் காண்டல்
உடலுற்றுத் தேடுவார் தம்மையொப் பாரிலர்
திடமுற்ற நந்தி திருவரு ளாற்சென்
றுடலிற் புகுந்தமை ஒன்றறி யாரே. ஞ

514 கலந்தது நீர துடம்பிற் கறுக்குங்
கலந்தது நீர துடம்பிற் சிவக்குங்
கலந்தது நீர துடம்பில் வெளுக்குங்
கலந்தது நீர்நிலங் காற்றது வாமே. கூ

52. திருக்கோயிலிழிவு

515 தாவர லிங்கம் பறித்தான்றில் தாபித்தால்
ஆவதன் முன்னே அரசு நிலைகெடுந்
சாவதன் முன்னே பெருநோய் அடுத்திடுங்
காவலன் போர்ந்தி கட்டுரைத் தானே. கூ

516 கட்டுவித் தார்மதிற் கல்லொன்று வாங்கிடில்
வெட்டுவிக் கும்அபி டேகத் தரசரை
மூட்டுவிக் கும்முனி வேதிய ராயினும்
வெட்டுவித் தேதவிடும் விண்ணவன் ஆணையே. உ

517 ஆற்றரு கோய்மிக் கவனி மழையின்றிப்
போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்
கூற்றுதைத் தான்திருக் கோயில்க ளெல்லாஞ்
சாற்றிய பூசைகள் தப்பிடில் தானே. ங

518 முன்னவ னர்கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றுங்
கன்னங் களவு மிகுத்திடுங் காசினி
என்னரு நந்தி எடுத்துரைத் தானே. ச

519 போர்கொண்ட பார்ப்பான் பிரான்தன்னை அர்ச்சித்தாற்
போர்கொண்ட வேந்தர்க்குப் பொல்லா வியாதியாம்
பார்கொண்ட நாட்டுக்குப் பஞ்சமு மாம்என்றே
சீர்கொண்ட நந்தி தெரிந்துரைத் தானே. ஞ

53. அதோமுக தெரிசனம்

520 எம்பெரு மான்இறை வாமுறை யோஎன்று
வம்பவிழ் வானோர் அசுரன் வலிசொல்ல
அம்பவள மேனி அறுமுகன் போயவர்
தம்பகை கொல்லென்ற தற்பரன் தானே. ட

521 அண்டமொ டெண்டிசை தாங்கும் அதோமுகங்
கண்டங் கறுத்த கருத்தறி வாரில்லை
உண்டது நஞ்செ-ன் றுரைப்பர் உணர்விலோர்
வெண்டலை மாலை விரிசடை யோற்கே. உ

522 செய்தான் அறியுஞ் செழுங்கடல் வட்டத்துப்
பொய்யே புரைத்துப் புகழும் மனிதர்கள்
மெய்யே புரைக்கில் விண்ணோர் தொழச்செய்வன்
மைதாழ்ந் திலங்கு மிடறுடை யோனே. ங

523 நந்தி எழுந்து நடுவுற ஓங்கிய
சென்றீக் கலந்துட் சிவனென நிற்கும்
மூன்றிக் கலந்தங் குலகம் வலம்வரும்
அந்தி இறைவன் அதோமுக மாமே. ச

524 அதோமுகங் கீழண்ட மான புராணன்
அதோமுகத் தன்னெறிம் எங்கு முயலுஞ்
சதோமுகத் தொண்மலர்க் கண்ணிப் பிராணும்
அதோமுகன் ஊழித் தலைவனு மாமே. ஞ

525 அதோமுக மாமல ராயது கேளுந்
அதோமுகத் தாலொரு நாழுப் விரிந்து
அதோமுக மாகிய அந்தமில் சத்தி
அதோமுக மாகி அமர்ந்திருந் தானே. ட

54. சிவநிந்தை

526 தெளிவுறு ஞானத்துச் சிந்தையின் உள்ளே
அளிவுறு வாரம ராபதி நாடி
எளியனென் றீசனை நீசர் இகழில்
கிளியொன்று பூனைபிற் கீழது வாகுமே. க

527 முளிந்தவர் வானவர் தானவர் எல்லாம்
விளிந்தவர் மெய்ந்நின்ற ஞானம் உணராார்
அளிந்தமு தூறிய ஆதிப் பிரானைத்
தளிந்தவர்க் கல்லது தாங்கஞண் ணுதே. உ

528 அப்பகை யாலே அசுரருந் தேவரும்
நற்பகை செய்து நடுவே முடிந்தனர்
எப்பகை யாகிலும் எய்தார் இறைவனைப்
பொய்ப்பகை செப்பினும் ஒன்றுபத் தாமே. ங

529 போகமும் மாதர் புலவி யதுநினைந்
தாகமும் உள்கலந் தங்குள ளுதவில்
வேதிய ராயும் விகிர்தனும் என்கின்ற
நீதியுள் ஈசன் நினைப்பொழி வாரே. ச

55. குருநிந்தை

530 பெற்றிருந் தாரையும் பேணுர் கயவர்கள்
உற்றிருந் தாரை உளவன சொல்லுவர்
கற்றிருந் தார்வழி உற்றிருந் தாரவர்
பெற்றிருந் தாரன்றி யார்பெறும் பேறே. க

531 ஓரெழுத் தொருபொருள் உணரக் கூறிய
சிரெழுத் தாளரைச் சிதையச் செப்பினோர்
ஊரிடைச் சுணங்கணைப் பிறந்துங் கோருகம்
வாரிடைக் கிருமியாய் மாய்வர் மண்ணிலே. உ

532 பத்தினி பத்தர்கள் தத்துவ ஞானிகள்
சித்தங் கலங்கச் சிதைவுகள் செய்தவர்
அத்தமும் ஆவியும் ஆண்டொன்றில் மாண்டிடுஞ்
சத்தியம் ஈது சதாகந்தி ஆணையே. ஙு

533 மந்திரம் ஓரெழுத் துரைத்த மாதவர்
சிந்தையில் நொந்திடத் தீமைகள் செய்தவர்
நந்திய சுணங்கணைப் பிறந்து நாறுரு
வந்திடும் புலையராய் மாய்வர் மண்ணிலே. ச

534 ஈசனடியார் இதயங் கலங்கிடத்
தேசமும் நாடுஞ் சிறப்பும் அழிந்திடும்
வாசவன் பீடமும் மாமன்னர் பீடமும்
நாசமு தாகுமே நங்நந்தி யாணையே. ஞ

535 சன்மார்க்க சற்குருச் சந்நிதி பொய்வரின்
நன்மார்க்க முங்குன்றி ஞானமுந் தங்காது
தொன்மார்க்க மாய துறையும் மறந்திட்டுப்
பன்மார்க்க முங்கெட்டுப் பஞ்சமு மாமே. கூ

536 கைப்பட்ட மாமணி தானிடை கைவிட்டு
மெய்ப்பட்ட கல்லெச் சுமப்போன் விதி போன்றுங்
கைப்பட்ட நெய்பால் தயிர்நிற்கத் தானறக்
கைப்பிட்டுண் பான்போன் றும் கன்மிஞானிக் கொப்பே.

56. மயேசுரநிந்தை

537 ஆண்டான் அடியவ ரார்க்கும் விரோதிகள்
ஆண்டான் அடியவர் ஐயமேற் றுண்பவர்
ஆண்டான் அடியாரை வேண்டாது பேசினோர்
தாந்தாம் விழுவது தாழ்நர காகுமே. க

538 ஞானியை நிந்திப் பவனும் நலனென்றே
ஞானியை வந்திப் பவனுமே நல்வினை
யான கொடுவினை தீர்வா ரவன்வயம்
போன பொழுதே புகுஞ்சிவ போகமே. உ

57. பொறையுடைமை

539 பற்றினின் றுர்நெஞ்சிற் பல்லிதான் ஒன்றுண்டு
மூற்றிக் கிடந்தது மூக்கையும் காவையுந்
தெற்றிக் கிடந்து சிதைக்கின்ற சிந்தையுள்
வற்று தொழிவது மாகமை யாமே. க

540 ஓலக்கஞ் சூழ்ந்த உலப்பிலி தேவர்கள்
பாலொத்த மேனியன் பாதம் பணிந்துய்ய
மாலுக்கும் ஆதிப் பிரமற்கும் மன்னவன்
ஞாலத் திவன்மிக நல்லனென் றூரே. உ

541 ஞானம் விளைந்தவர் நம்மிட மன்னவர்
சேனை வளைந்து திசைதொறுங் கைதொழ
ஊனை விளைத்திடும் உம்பர்த்தம் ஆதியை
ஏனை வளைந்தருள் எட்டலு மாமே. ங

542 வல்வகை யாலும் மனையிலும் மன்றிலும்
பல்வகை யாலும் பயிற்றிப் பதஞ்செய்யுங்
கொல்லையி னின்று குதிகொள்ளுங் கூத்தனுக்
கெல்லையி லாத விலயமுண் டாமே. க

58. பேரியாரைத் துணைக்கோடல்

543 ஓடவல் லார்தம ரோடு கடாவுவன்
பாடவல் லாரொலி பார்மிசை வாழ்வன்
தேடவல் லார்க்கருள் தேவர் பிராணெடுங்
கூடவல் லாரடி கூடுவன் யானே. க

544 தாமிடர்ப் பட்டுத் தளிர்போல் தயங்கினும்
மாமனத் தங்கண்டு வைத்த திலையாகும்
நீயிடர்ப் பட்டிருந் தென்செய்வாய் நெஞ்சமே
போமிடத் தென்னெடும் போதுகண் டாயே. உ

545 அறிவார் அமரர் கலிவனை நாடிச்
செறிவார் பெறுவர் சிலர்த்தத் துவத்தை
நெறிதான் மிகமிக நின்றருள் செய்யும்
பெரியா ருடன்கூடல் பேரின்ப மாமே. ங

546 தார்சடை யான்றன் தமராய் உலகினிற்
போர்புக ழானெந்தை பொன்னடி சேருவர்
வாயடை யாவுள்ளந் தேர்வார்க் கருள்செய்யுங்
கோவடைத் தற்நெறி கூடலு மாமே. ச

547 உடையான் அடியார் அடியா ருடன்போய்ப்
படையா ரழன்மேனிப் பதிசென்று புக்கேன்
கடையார நின்றவர் கண்டறி விப்ப
உடையான் வருகென ஓலமென் றூரே. ஞ

548 அருமைமவல் லான்கலி ஞானத்துள் தோன்றும்
பெருமைமவல் லோன்பிற விச்சுழி நீங்கும்
உரிமை வல்லோன்உணர்ந் தூழி யிருக்குந்
திருமைமவல் லாரொடு சேர்ந்தனன் யானே. ட

இரண்டாந் தந்திரம் முற்றிற்று

மூன்றாந் தந்திரம்

59. அட்டாங்க யோகம்

549 உரைத்தன வற்கரி ஒன்று மூடிய
நிரைத்த இராசி நிரைமூறை எண்ணிப்
பிரச்சதம் எட்டும் பேசியே நந்தி
நிரைத்த இயமம் நியமஞ்செய் தானே. க

550 செய்த இயம நியமஞ் சமாதிசென்
றய்யப் பராசத்தி உத்தர பூருவ
மெய்த கவச நியாசங்கள் மூத்திரை
எய்த வுரைசெய்வன் இந்நிலை தானே. உ

551 அங்நெறி இங்நெறி என்ன தட்டாங்கத்
தன்னெறி சென்று சமாதியி லேநின்மின்
நன்னெறி செல்வார்க்கு ஞானத்தி லேகலாம்
புன்னெறி யாகத்திற் போக்கில்லை யாகுமே. ங

552 இயம நியமமே எண்ணிலா ஆசனம்
நயமுறு பிராணயாமம் பிரத்தி யாகாரஞ்
சயமிகு தாரணை தியானஞ் சமாதி
அயமுறும் அட்டாங்க மாவது மாமே. ச

60. இயமம்

553 எழுந்துநீர் பெய்யினும் எட்டுத் திசையுஞ்
செழுந்த னியமங்கள் செய்மினென் றண்ணல்
கொழுந்தண் பவளக் குளிர்சடை போடே
அழுந்திய நால்வர்க் கருள்புரிந் தானே. க

554 கொல்லான்பொய் கூறான் களவிலான் எண்குணன்
நல்லான் அடக்க முடையான் நடுச்செய்ய
வல்லான் பகுந்துண்பான் மாசிலான் கட்காமம்
இல்லா னியமத் திடையின்நின் றானே. உ

61. நியமம்

555 ஆதியை வேதத்தின் அப்பொரு ளாஇனைச்
சோதியை அங்கே சுடுகின்ற அங்கியைப்
பாதியுள் மன்னும் பராசத்தி யோடுடன்
நீதி யுணர்ந்து நியமத்த னுமே. க

556 தூய்மை அருளொண் சுருக்கம் பொறைசெவ்வை
வாய்மை நிலைமை வளர்த்தலே மற்றிவை
காமங் களவு கொலையெனக் காண்டலை
நேமியீ ரைந்து நியமத்த னுமே. உ

557 தவஞ்செபஞ் சந்தோடம் ஆத்திகந் தானஞ்
சிவன்றன் விரதமே சித்தாந்தக் கேள்வி
மகஞ்சிவ பூசையொண் மதிசொல்லீர் ஐந்து
நிவம்பல செய்பின் நியமத்த னுமே. ங

62. ஆதனம்

558 பங்கய மாதி பரந்தபல் ஆதனம்
அங்குள வாம்இரு நாலும் அவற்றினுள்
சொங்கில்லை யாகச் சுவத்திக மெனமிகத்
தங்க இருப்பத் தலைவனு மாகுமே. க

559 ஓரணை யப்பத மூருவின் மேலேறிட்
டார வலித்ததன் மேல்வைத் தழகுறச்
சீர்திகழ் கைகள் அதனைத்தன் மேல்வைக்கப்
பார்திகழ் பத்மா சனமென லாகுமே. உ

560 துரிசில் வலக்காலைத் தோன்றவே மேல்வைத்து
அரிய முழங்காளி லங்கையை நீட்டி
உருசி யொடுமூடல் செவ்வே யிருத்திப்
பரிசு பெறுமது பத்திரா சனமே. ங

561 ஒக்க அடியிணை யூருவில் ஏறிட்டு
மூக்கி யுடலில முழங்கை தனில்ஏற்றித்
தொக்க அறிந்து துளங்கா திருந்திடற்
குக்குட ஆசனங் கொள்ள லு மாமே. அ

562 பாத முழந்தாளிற் பாணி களைநீட்டி
ஆதர வோடும்வாய் அங்காந் தழகுறக்
கோதில் நயனங் கொடிமூக்கி லேயுறச்
சீர்திகழ் சிங்கா தனமெனச் செப்புமே. ங

563 பத்திரங் கோழுகம் பங்கயங் கேசரி
சொத்திரம் வீரஞ் சுகாதனம் ஓரேழு
முத்தம மாமுது ஆசனம் எட்டிடட்டுப்
பத்தொடு நூறு பலஆ சனமே. சு

63. பிராணயாமம்

564 ஐவர்க்கு நாயகன் அவ்வூர்த் தலைமகன்
உய்யக்கொண் டேறுங் குதிரைமற் றொன்றுண்டு
மெய்யர்க்குப் பற்றுக் கொடுக்குங் கொடாதுபோய்ப்
பொய்யரைத் துள்ளி விழுத்திடுந் தானே. ஙு

565 ஆரிய னல்லன் குதிரை இரண்டுள
வீசிப் பிடிக்கும் விரகறி வாரில்லை
கூரிய நாதன் குருவின் அருள்பெற்றால்
வாரிப் பிடிக்க வசப்படுந் தானே. உ

566 புள்ளினும் மிக்க புரவியை மேற்கொண்டாற்
கள்ளநண்ண வேண்டாங் தானே களிதருந்
துள்ளி நடப்பிக்குஞ் சோம்பு தவிர்ப்பிக்கும்
உள்ளது சொன்னேம் உணர்வுடை யோருக்கே. ஙூ

567 பிராணன் மனத்தொடும் போரா தடங்கிப்
பிராண னிருக்கிற் பிறப்பிறப் பில்லை
பிராணன் மடைமாறிப் பேச்சறி வித்துப்
பிராண னடைபேறு பெற்றுண்டீர் நீரே. ஙா

568 ஏறுதல் பூரகம் ஈரெட்டு வாமத்தால்
ஆறுதல் கும்பம் அறுபத்து காலதில்
ஊறுதல் முப்பத் திரண்டதி ரேசகம்
மாறுதல் ஒன்றின்கண் வஞ்சக மாமே. ஙி

569 வளியினை வாங்கி வயத்தில் அடக்கில்
பளிங்கொத்துக் காயம் பழுக்கினும் பிஞ்சாந்
தெளியக் குருவின் திருவருள் பெற்றால்
வளியினும் வேட்டு வளியது மாமே. ச

570 எங்கே இருக்கினும் பூரி இடத்திலே
அங்கே யதுசெய்ய ஆக்கைக் கழிவில்லை
அங்கே பிடித்தது விட்டள வுஞ்செல்லச்
சங்கே குறிக்கத் தலைவனு மாமே. எ

571 ஏற்றி இறக்கி இருகாலும் பூரிக்குங்
காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாரில்லை
காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாளர்க்குக்
கூற்றை யுதைதக்குங் குறியது வாமே. அ

572 மேல்கீழ் நடுப்பக்க மிக்குறப் பூரித்துப்
பாலாம் இரேசகத் தாலுட் பதிவித்து
மாலாகி யுந்தியுட் கும்பித்து வாங்கவே
ஆலாலம் உண்டான் அருள்பெற லாமே. க

573 வாமத்தில் ஈரெட்டு மாத்திரை பூரித்தே
எழுற்ற முப்பத் திரண்டும் இரேசித்துக்
காழுற்ற பிங்கலைக் கண்ணுக இவ்விரண்
டோமத்தால் எட்டெட்டுக் கும்பிக்க உண்மையே. கo

574 இட்ட தவ்வீ டிளகா திரேசித்துப்
புட்டிப் படத்தச காடியும் பூரித்துக்
கொட்டிப் பிராணன் அபானனுங் கும்பித்து
கட்டம் இருக்க நமனில்லை தானே. கக

575 புறப்பட்டுப் புக்குத் திரிகின்ற வாயுவை
நெறிப்பட வுள்ளே நின்மல மாக்கில்
உறுப்புச் சிவக்கும் உரோமங் கறுக்கும்
புறப்பட்டுப் போகான் புரிசடை யோனே. கஉ

576 கூடம் எடுத்துக் குடிபுக்க மங்கையர்
ஓடுவர் மீளுவர் பன்னிரண் டங்குலம்
நீடுவர் எண்விரல் கண்டிடப்பர் நால்விரல்
கூடிக் கொளிற்கோல அஞ்செழுத் தாமே. கஙு

577 பன்னிரண் டானை பகல்இர வுள்ளது
பன்னிரண் டானையைப் பாகன் அறிகிலன்
பன்னிரண் டானையைப் பாகன் அறிந்தபின்
பன்னிரண் டானைக்குப் பகல்இர வில்லையே. கச

64. பிரத்தியாகாரம்

578 கண்டுகண் டுள்ளே கருத்துற வாங்கிடிற்
கொண்டுகொண் டுள்ளே குணம்பல காணலாம்
பண்டுகந் தெங்கும் பழமறை தேடியை
இன்றுகண் டிங்கே இருக்கலு மாமே. க

579 நாபிக்குக் கீழே பன்னிரண் டங்குலந்
தாபிக்கு மந்திரந் தன்னை அறிகிலர்
தாபிக்கு மந்திரந் தன்னை அறிந்தபின்
கூவிக்கொண் டீசன் குடியிருந் தானே. உ

580 மூலத் திருவிரல் மேலுக்கு மூன்நின்ற
பாலித்த யோனிக் கிருவிரற் கீழ்நின்ற
கோலித்த குண்டலி யுள்ளெழுஞ் செஞ்சுடர்
ஞாலத்து நாபிக்கு நால்விரற் கீழதே. ஙு

581 நாசிக் கதோமுகம் பன்னிரண் டங்குலம்
நீசித்தம் வைத்து நினையவும் வல்லீரேல்
மாசித்த மாயோகம் வந்து தலைப்பெய்துந்
தேகத்துக் கென்றுந் சிதைவில்லை யாகுமே. ச

582 சோதி இரேகைச் சுடரொளி தோன்றிடிற்
கோதில் பரானந்தம் என்றே குறிக்கொண்மின்
நோய்திகழ் கண்டத்தே நிலவொளி எய்திலுல்
ஓதுவ துன்னுடல் உன்மத்த மாமே. ஞ

583 மூலத் துவாரத்தை மொக்குர மிட்டிரு
மேலைத் துவாரத்தின் மேல்மனம் வைத்திரு
வேலொத்த கண்ணே வெளியில் விழித்திரு
காலத்தை வெல்லுங் கருத்திது தானே. க

584 எருவிடும் வாசற் கிருவிரன் மேலே
கருவிடும் வாசற் கிருவிரற் கீழே
உருவிடுஞ் சோதியை உள்கவல் லார்க்குக்
கருவிடுஞ் சோதி கலந்துநின் றூனே. எ

585 ஒருக்கால் உபாதியை ஒண்சோதி தன்னைப்
பிரித்துணர் வந்த உபாதிப் பிரிவைக்
கரைத்துணர் வன்னல் கரைதல்உள் நோக்கல்
பிரத்தியா காரப் பெருமைய தாமே. அ

586 புறப்பட்ட வாயுப் புகவிடா வண்ணங்
திறப்பட்டு நிச்சயஞ் சேர்ந்துடன் நின்றூல்
உறப்பட்டு நின்றது உள்ளழும் அங்கே
புறப்பட்டுப் போகான் பெருந்தகை யானே. க

587 குறிப்பினின் உள்ளே குவலயந் தோன்றும்
வெறுப்பிருள் நீக்கி விகிர்தனை காடுஞ்
சிறப்புறு சிந்தையைச் சிக்கென் றுணரில்
அறிப்புறு காட்சி அமரரு மாமே. க0

65. தாரணை

588 கோணை மனத்தைக் குறிக்கொண்டு கீழ்க்கட்டி
வீணைத்தண் டூடே வெளியுறத் தாழைக்கிக்
காணைக்கண் கேளாச் செவியென் றிருப்பார்க்கு
வாணுள் அடைக்கும் வழியது வாமே. க

589 மலையார் சிரத்திடை வானீர் அருவி
நிலையாரப் பாயும் நெடுநாடி யூடே
சிலையார் பொதுவில் திருநட மாடுந்
தொலையாத ஆனந்தச் சோதிகண் டேனே. உ

590 மேலை நிலத்தினுள் வேதகப் பெண்பிள்ளை
மூல நிலத்தில் எழுகின்ற மூர்த்தியை
ஏல எழுப்பி இவளுடன் சந்திக்கப்
பாலனும் ஆவான் பார்ந்தி ஆணையே. ஈ

591 கடைவாச லெக்கட்டிக் காலை எழுப்பி
இடைவாசல் நோக்கி இனிதுள் இருத்தி
மடைவாயிற் கொக்குப்போல் வந்தித் திருப்பார்க்
குடையாமல் ஊழி இருக்கலு மாமே. உ

592 கலந்த உயிருடன் காலம் அறியில்
கலந்த உயிரது காலின் நெருக்கங்
கலந்த உயிரது காலது கட்டிற்
கலந்த உயிருடல் காலமும் நிற்குமே. ஊ

593 வாய்திற வாதார் மனத்திலோர் மாடுண்டு
வாய்திறப் பாரே வளியிட்டுப் பாய்ச்சுவர்
வாய்திற வாதார் மதியிட்டு மூட்டுவர்
கோய்திற வாவிடிற் கோழையு மாமே. ஋

594 வாழலு மாம்பல காலும் மனத்திடைப்
போழ்கின்ற வாயு புறம்படாப் பாய்ச்சுறில்
ஏழுசா லேகம் இரண்டு பெருவாய்தல்
பாழி பெரியதோர் பள்ளி அறையே. எ

595 நிரம்பிய ஈரைந்தில் ஐந்திவை போனல்
இரங்கி விழித்திருந் தென்செய்வை பேதாய்
வர்ம்பினைக் கோலி வழிசெய்கு வார்க்குக்
குரங்கினைக் கொட்டை பொதியலு மாமே. ஏ

596 முன்னம் வந்தனர் எல்லாம் முடிந்தனர்
பின்னை வந்தவர்க் கென்ன பிரமாணம்
முன்னுறு கோடி உறுகதி பேசிடில்
என்ன மாயம் இடிகரை நிற்குமே. ஐ

104 ஆதிப் பிரானும் அணிமணி வண்ணனும்
ஆதிக் கமலத் தலர்மிசை யானுஞ்
சோதிக்கில் மூன்றுந் தொடர்ச்சியில் ஒன்றெனுஞ்
பேதித் துலகம் பிணங்குகின் றார்களே. உ

105 ஈசன் இருக்கும் இருவினைக் கப்புறம்
பீசம் உலகிற் பெருந்தெய்வ மானது
ஈசன் அதுஇது என்பார் நினைப்பிலார்
தூசு பிடித்தவர் தூரறிந் தார்களே. ங

106 சிவன்முதல் மூவரோ டைவர் சிறந்த
அவைமுதல் ஆறிரண் டொன்றுடொன் றாகும்
அவைமுதல் வித்துவம் நாதமும் ஓங்கச்
சவைமுதற் சங்கரன் தன்பெயர் தானே. ச

107 பயன்அறிந் தவ்வழி எண்ணும் அளவில்
அயனெடு மால்நமக் கன்னியம் இல்லை
நயனங்கள் மூன்றுடை நந்தி தமராம்
வயனம் பெறுவீர்அவ் வானவ ராலே. ஞ

108 ஓலக்கஞ் சூழ்ந்த உலப்பிலி தேவர்கள்
பாலொத்த மேனி பணிந்தடி யேன்தொழ
மாலுக்கும் ஆதிப் பிரமற்கும் ஒப்புநீ
ஞாலத்து நம்மடி நல்கிடென் றாரே. ட

109 வானவர் என்றும் மனிதர்இவர் என்றுந்
தேனமர் கொன்றைச் சிவனருள் அல்லது
தானமர்ந் தோருந் தனித்தெய்வம் மற்றில்லை
ஊனமர்ந் தோரை உணர்வது தானே. எ

110 சோதித்த பேரொளி மூன்றைந் தெனநின்ற
ஆதிக்கண் ஆவ தறிகிலர் ஆதர்கள்
நீதிக்கண் ஈசன் நெடுமால் அயன்என்று
பேதித் தவரைப் பிதற்றுகின் றாரே. அ

604 நாட்டம் இரண்டும் நடுமூக்கில் வைத்திடில்
வாட்டமும் இல்லை மனைக்கும் அழிவில்லை
ஓட்டமும் இல்லை உணர்வில்லைத் தானில்லை
தேட்டமும் இல்லைச் சிவனவ னுமே. எ

605 நயனம் இரண்டும் நாசிமேல் வைத்திட்
டுயிர்வெழா வாயுவை உள்ளே அடக்கித்
துயரற நாடியே தூங்கவல் லார்க்குப்
பயனிது காயம் பயமில்லைத் தானே. அ

606 மணிகடல் யானை வார்குழல் மேகம்
அணிவண்டு தும்பி வளைபேரி கையாழ்
தணிந்தெழு நாதங்கள் தாமிவை பத்தும்
பணிந்தவர்க் கல்லது பார்க்கவொண் ணாதே. கூ

607 கடலொடு மேகங் களிறெருடும் ஓசை
அடலெழும் வீணை அண்டரண் டத்துச்
சுடர்மணி வேணுச் சுரிசங்கின் ஓசை
திடமறி யோகிக்கல் லாற்றெரி யாதே. கo

608 ஈசன் இயல்பும் இமையவர் ஈட்டமும்
பாசம் இயங்கும் பரிந்துயி ராய்நிற்கும்
ஓசை யதன்மணம் போல விடுவதோர்
ஓசையாம் ஈசன் உணரவல் லார்க்கே. கக

609 நாத முடிவிலே நல்லாள் இருப்பது
நாத முடிவிலே நல்யோகம் இருப்பது
நாத முடிவிலே நாட்டம் இருப்பது
நாத முடிவிலே நஞ்சுண்ட கண்டனே. கஉ

610 உதிக்கின்ற ஆறினும் உள்ளங்கி ஐந்துந்
துதிக்கின்ற தேசுடைத் தூங்கிருள் நீங்கி
அதிக்கின்ற ஐவருள் நாதம் ஒடுங்கக்
கதிக்கொன்றை ஈசன் கழல்சேர லாமே. கங

611 பள்ளி அறையிற் பகலில இருளில்லை
கொள்ளி அறையிற் கொளுந்தாமற் காக்கலாம்
ஒள்ளி தறியிலோ ரோசன நீளிது
வெள்ளி அறையில் விடிவில்லைத் தானே. கக

612 கொண்ட விரதங் குறையாமற் ரூணென்றித்
தண்டுடன் ஓடித் தலைப்பட்ட யோகிக்கு
மண்டல மூன்றினும் ஒக்க வளர்ந்தபின்
பிண்டமும் ஊழி பிரியா திருக்குமே. கஙி

613 அவ்வவர் மண்டல மாம்பரி சொன்றுண்டு
அவ்வவர் மண்டலத் தவ்வவர் தேவராம்
அவ்வவர் மண்டலம் அவ்வவர்க் கேவரில்
அவ்வவர் மண்டல மாயமற் ரோர்க்கே. கசு

614 இலைக்கின்ற நெஞ்சத் திருட்டறை உள்ளே
மூலைக்கின்ற மண்டலம் மூன்றினும் ஒன்றித்
துலைப்பெரும் பாசந் துருவிடு மாகில்
இலைப்பின்றி மார்கழி ஏற்றம தாமே. கச

615 மூக்குணை மூடற வாயுவை மூலத்தே
சிக்கென மூடித் திரித்துப் பிடித்திட்டுத்
தக்க வலமிடம் நாழிகை சாதிக்க
வைக்கும் உயிர்நிலை வானவர் கோனே. கஅ

616 கடலித்த நாபிக்கு நால்விரன் மேலே
மடலித்த வாணிக் கிருவிரல் உள்ளே
கடலித் திருந்து கருதவல் லார்கள்
சடலத் தலைவனைத் தாமறிந் தாரே. கஙி

617 அறிவாய சத்தென்னு மாரு றகன்று
செறிவான மாயை சிதைத்தரு ளாலே
பிறியாத பேரரு ளாயிடும் பெற்றி
நெறியான அன்பர் நிலையறிந் தாரே. உ0

67. சமாதி

618 சமாதி யமாதியிற் ரூன்செல்லக் கூடும்
சமாதி யமாதியிற் ரூனெட்டுச் சித்தி
சமாதி யமாதியில் தங்கிறைக் கன்றே
சமாதி யமாதி தலைப்படுந் தானே. க

619 விந்துவும் நாதமும் மேருவில் ஓங்கிடிற்
சந்தியி லான சமாதியிற் கூடிடும்
அந்த மிலாத அறிவின் அரும்பொரூள்
சுந்தரச் சோதியுந் தோன்றிடுந் தானே. உ

620 மன்மனம் எங்குண்டு வாயுவும் அங்குண்டு
மன்மனம் எங்கில்லை வாயுவும் அங்கில்லை
மன்மனத் துள்ளே மகிழ்ந்திருப் பார்க்கு
மன்மனத் துள்ளே மறைலைய மாமே. ங

621 விண்டலர் கூபமும் விஞ்சத் தடவியுங்
கண்டுணர் வாகக் கருதி யிருப்பார்கள்
செண்டு வெளியிற் செழுங்கிரி யத்திடை
கொண்டு குதிரை குசைசெறுத் தாரே. ச

622 மூல நாடி முகட்டல குச்சியுள்
நாலு வாசல் நடுவுள் இருப்பிர்கள்
மேலை வாசல் வெளியுறக் கண்டபின்
காலன் வார்த்தை கனவிலும் இல்லையே. ஞ

623 மண்டலம் ஐந்து வரைகளும் ஈராறு
கொண்டிட நிற்குங் குடிகளும் ஆறெண்மர்
கண்டிட நிற்குங் கருத்து நடுவாக
உண்டு நிலாவிடும் ஓடும் பதத்தையே. ஃ

624 பூட்டொத்து மெய்யிற் பொறிப்பட்ட வாயுவைத்
தேட்டற்ற வங்நிலஞ் சேரும் படிவைத்து
நாட்டத்தை மீட்டு நயனத் திருப்பார்க்குத்
தோட்டத்து மாம்பழந் தூங்கலு மாமே. எ

625 உருவறி யும்பரி சொன்றுண்டு வாளேர்
கருவரை பற்றிக் கடைந்தமு தண்டார்
அருவரை யேறி அமுதுண்ண மாட்டார்
திருவரை யாமனங் தீர்ந்தற்ற வாறே. அ

626 நம்பனை யாதியை நான்மறை ஓதியைச்
செம்பொனின் உள்ளே திகழ்கின்ற சோதியை
அன்பினை யாக்கி யருத்தி ஓடுக்கிப்போய்க்
கொம்பேறிக் கும்பிட்டுக் கூட்டமிட் டாரே. சு

627 மூலத்து மேலது மூச்சது ரத்தது
காலத் திசையிற் கலக்கின்ற சந்தினில்
மேலைப் பிறைபினில் நெற்றிநேர் நின்ற
கோலத்தின் கோலங்கள் வெவ்வேறு கொண்டதே.

628 கற்பனை யற்றுக் கனல்வழி பேசென்று
சிற்பனை எல்லாஞ் சிருட்டித்த பேரொளிப்
பொற்பினை நாடிப் புணர்மதி யோடுற்றுத்
தற்பர மாகத் தகுந்தண் சமாதியே. கக

629 தலைப்பட் டிருந்திடத் தத்துவங் கூடும்
வலைப்பட் டிருந்திடும் மாதுநல் லாளுங்
குலைப்பட் டிருந்திடுங் கோபம் அகலுங்
துலைப்பட் டிருந்திடுந் தூங்கவல் லார்க்கே. கஉ

630 சோதித் தனிச்சுட ராய்நின்ற தேவனும்
ஆதியும் உள்நின்ற சிவனு மாகுமால்
ஆதிப் பிரமன் பெருங்கடல் வண்ணனும்
ஆதி அடிபணிந் தன்புறு வாரே. கங

631 சமாதிசெப் வார்க்குத் தகும்பல யோகஞ்
சமாதிகள் வேண்டாம் இறையுட னேகிற்
சமாதிதா னில்லைத் தானவ னாகிற்
சமாதியில் எட்டெட்டுச் சித்தியும் எய்துமே. கச

68. அட்டாங்க யோகப்பேறு

இயமம்

632 போதுகந் தேறும் புரிசடை யானடி
யாதுகந் தாரம ராபதிக் கேகெல்வர்
ஏதுகந் தாணிவன் என்றருள் செய்திடு
மாதுகந் தாடிடு மால்விடை யோனே. க

நியமம்

633 பற்றிப் பதத்தன்பு வைத்துப் பரன்புகழ்
கற்றிருந் தாங்கே கருது மவர்கட்கு
முற்றெழுந் தாங்கே முனிவர் எதிர்வரத்
தெற்றுஞ் சிவபதஞ் சேரலு மாமே. உ

ஆசனம்

634 வருந்தித் தவஞ்செய்து வானவர் கோவாய்த்
திருந்தம ராபதிச் செல்வன் இவனெனத்
தருந்தண் முழவங் குழலும் இயம்ப
இருந்தின்பம் எய்துவர் ஈசன் அருளே. ங

பிராணயாமம்

635 செம்பொற் சிவகதி சென்றெய்துங் காலத்துக்
கும்பத் தமரர் குழாம்வந் தெதிர்கொள்ள
எம்பொற் றலைவன் இவணு மெனச்சொல்ல
இன்பக் கலவி இருக்கலு மாமே. ச

பிரத்தியாகாரம்

636 சேருறு காலந் திசைநின்ற தேவர்கள்
ஆரிவன் என்ன அரணும் இவனென்ன
ஏருறு தேவர்கள் எல்லாம் எதிர்கொள்ளக்
காருறு கண்டனை மெய்கண்ட வாறே. ஞ

காரணை

637 கல்வழி நாடி. கடமன்வழி மாற்றிடுஞ்
சொல்வழி யாளர் சுருங்காப் பெருங்கொடை
இல்வழி யாளர் இமையவர் எண்டிசைப்
பல்வழி எய்திலும் பார்வழி யாகுமே. சு

தியானம்

638 தூங்கவல் லார்க்குத் துணையேழ் புவனமும்
வாங்கவல் லார்க்கு வலிசெய்து நின்றிடுங்
கேங்கவல் லார்க்குத் திசைக்கும் அழுதழுங்
காங்கவல் லார்க்குங் கன்னிட மாமே. எ

சமாதி

639 காரிய மான உபாதியைத் தான்கடங்
காரிய காரணம் ஏழுந்தன் பாலுற
ஆரிய காரண மாய தவத்திடைக்
காரியல் தற்பரஞ் சேர்தல் சமாதியே. அ

69. அட்டமாசித்தி

பாகாயப் பிரவேசம்

640 பணிந்தெண் திசைபும் பரமன நாடித்
துணிந்தெண் திசைபுங் தொழுதெம் பிரானை
அணிந்தெண் திசையினும் அட்டமா சித்தி
தணிந்தெண் திசைசென்று தாபித்த வாறே. க

641 பரிசறி வானவர் பண்பன் அடியெனத்
துரிசற நாடியே தூவெளி கண்டேன்
அரிய தெனக்கில்லை அட்டமா சித்தி
பெரிதருள் செய்து பிறப்பறுத் தானே. உ

642 குரவன் அருளிற் குறிவழி மூலன்
பரையின் மணமிகு சங்கட்டம் பார்த்துத்
தெரிதரு சாம்பவி கேசரி சேரப்
பெரிய சிவகதி பேறெட்டாஞ் சித்தியே. ங

643 காயாதி பூதங் கலிகால மாயையில்
ஆயா தகல அறிவொன் றணுதியே
ஓயாப் பதியதன் உண்மையைக் கூடிஞல்
வீயாப் பரகாயம் மேவலு மாமே. ச

644 இருபதி ஞபிரத் தெண்ணூ றுபே தம்
மருவிய கன்ம மாமந்த யோகந்
தருமிவை காய உழைப்பாகுந் தானே
அருமிரு நான்காய் அடங்குமா சித்திக்கே. ஞ

645 மதிதனில் ஈராறுப் மன்னுங் கலியின்
உதய மதுகா லொழியவோ ரெட்டுப்
பதியும்ஈ ராறுண்டு பற்றறப் பார்க்கில்
திதமான ஈராறு சித்திக ளாமே. சு

646 நாடும் பிணியாகு நஞ்சனுஞ் சூழ்ந்தக்கால்
நீடுங் கலிகல்வி நீள்மேதை கூர்ஞானம்
பீடொன்றி ஞல்வாயாச் சித்திபே தத்தின்
நீடுந் துரங்கேட்டல் நீண்முடி வீராறே. எ

647 ஏழா னதிற்சண்ட வாயுவின் வேகியாந்
தாழா நடைடபல யோசனை சார்ந்திடுந்
சூழான ஓரெட்டில் தோன்று நரைதிரை
தாழான ஒன்பதிற் ருன்பர காயமே. அ

648 ஈரைந்திற் பூரித்துத் தியான உருத்திரன்
ஏர்வொன்று பன்னென்றில் ஈராறும் எண்சித்தி
சீரொன்று மேலெழ கீழெழ புவிச்சென்று
ஏரொன்று வியாபியாய் நிற்றல்ஈ ராறே. கூ

649 தானே அணுவுஞ் சகத்துத்தன் னொய்ம்மையும்
மானக் கனமும் பரகாயத் தேகமுந்
தானவ தும்பர காயஞ்சேர் தன்மையும்
ஆனத வுண்மையும் வியாபியு மாம்எட்டே. கo

650 தாங்கிய தன்மையுந் தானணுப் பல்லுயிர்
வாங்கிய காலத்து மற்றோர் குறையில்லை

யாங்கே எழுந்தோம் அவற்றுள் எழுந்துமிக்
கோங்கி வரமுத்தி மூந்திய வாறே. கக

651 மூந்திய மூந்நூற் றறுபது காலமும்
வந்தது நாழிகை வான்முத லாயிடச்
சிந்தை செயச்செய மண்முதல் தேர்ந்தறிந்
துந்தியுள் நின்று வுதித்தெழு மாறே. கஉ

652 சித்தந் திரிந்து சிவமய மாகியே
மூத்தந் தெரிந்துற்ற மோனர் சிவமுத்தர்
சுத்தம் பெறலாம் ஐந்தில் தொடக்கற்றோர்
சித்தம் பரத்தில் திருநடத் தோரே. கஊ

653 ஒத்தஇவ் வொன்பது வாயுவும் ஒத்தன
ஒத்தஇவ் ஒன்பதின் மிக்க தனஞ்செயன்
ஒத்தஇவ் வொன்பதில் ஒக்க இருந்திட
ஒத்த வுடலும் உயிரும் இருந்தவே. கஎ

654 இருக்குந் தனஞ்செயன் ஒன்பது காலில்
இருக்கும் இருநூற் றிருபத்து மூன்றாய்
இருக்கு மூடலி லிருந்தில வாகில்
இருக்கும் உடலது வீங்கி வெடித்தவே. கஏ

655 வீங்குங் கழலை சிரங்கொடு குட்டமும்
வீங்கும் வியாதிகள் சோகை பலவதாய்
வீங்கிய வாதமுங் கூனு முடமதாய்
வீங்கு வியாதிகள் கண்ணில் மருவியே. கஐ

656 கண்ணில் வியாதி புரோகந் தனஞ்செயன்
கண்ணிலிவ் வாணிகள் காச மவனல்லன்
கண்ணினிற் கூர்மன் கலந்தில ணுதலாற்
கண்ணினிற் சோதி கலந்ததும் இல்லையே. கக

657 நாடியின் ஓசை நயனம் இருதயந்
தூடி யளவுஞ் சுடர்விடு சோதியைத்
தேவருள் ஈசன் திருமால் பிரமனும்
ஓவற நின்றங் குணர்ந்திருந் தாரே. கஅ

658 ஒன்பது வாசல் உடையதோர் பிண்டத்துள்
ஒன்பது நாடி யுடையதோ ரோரிடம்
ஒன்பது நாடி ஒடுங்கலல் லார்கட்(கு)
ஒன்பது காட்சி யிலைபல வாமே, ௧௯

659 ஓங்கிய அங்கிக்கீழ் ஒண்சுழு னைச்செல்ல
வாங்கி இரவி மதிவழி ஓடிடத்
தாங்கி உலகங்கள் ஏழுந் தரித்திட
ஆங்கது சொன்னேம் அருவழி யோர்க்கே. ௨0

660 தலைப்பட்ட வாறண்ணல் தையலை நாடி
வலைப்பட்ட பாசத்து வன்பிணை மான்போல்
துலைப்பட்ட நாடியைத் தூவழி செய்தால்
விலைக்குண்ண வைத்ததோர் வித்தது வாமே. ௨௧

661 ஓடிச் சென்றங்கே ஒருபொருள் கண்டவர்
நாடிபி னுள்ளாக நாதம் எழுப்புவர்
தேடிச்சென் றங்கே தேனை முகந்துண்டு
பாடியுள் நின்ற பகைவரைக் கட்டுமே. ௨௨

662 கட்டிட்ட தாமரை ஞாளத்தில் ஒன்பது
மட்டிட்ட கன்னியர் மாதுடன் சேர்ந்தனர்
கட்டிட்டு நின்று களங்கனி யூடுபோய்ப்
பொட்டிட்டு நின்று பூரண மானதே. ௨௩

663 பூரண சத்தி எழுமூன் றறையாக
ஏரணி கன்னியர் எழுநூற்றஞ் சாக்கிரர்
காரணன் நான்முக னுதிய ஐவர்க்குங்
காரண மாகிக் கலந்து விரிந்ததே. ௨௪

664 விரிந்து குவிந்து விளைந்தஇம் மங்கை
கரந்துள் எழுந்து கரந்தங் கிருக்கிற்
பரந்து குவிந்தது பார்முதற் பூதம்
இரைந்தெழு வாயு விடத்தினில் ஓங்கே. ௨௫

665 இடையொடு பிங்கலை என்னும் இரண்டு
மடைபடு வாயுவு மாறியே நிற்குந்

தடையவை யாறேழுந் தண்சுட ருள்ளே
மிடைவளர் மின்கொடி தன்னில் ஒடுங்கே. உசு

666 ஒடுங்கி ஒடுங்கி யுணர்ந்தங் கிருக்கில்
அடங்கி அடங்கிடும் வாயு வதனுள்
மடங்கி மடங்கிடு மன்னுயி ருள்ளே
நடங்கொண்ட கூத்தனும் நாடுகின் றானே. உஎ

667 நாடியின் உள்ளே நாதத் தொனியுடன்
தேடி யுடன்சென்ற திருவினைக் கைக்கொண்டு
பாடியுள் நின்ற பகைவரைக் கட்டிடு
மாடி ஒருகை மணிவிளக் கானதே. உஅ

668 அணுமா தி சித்திக ளானவை கூறில்
அணுவில் அணுவின் பெருமையில் கோண்மை
இணுகாத வேகார் பரகாய மேவல்
அணுமைத் தனையெங்குந் தானது லென்றெட்டே.

669 எட்டா கியசித்தி யோரெட்டி யோகத்தாற்
கிட்டாப் பிராணனே செய்தாற் கிடைத்திடும்
ஓட்டா நடுநாடி மூலத்த னல்பாலை
விட்டான் மதியுண்ண வம்வரு மேலதே. கூ

670 சித்திக ளெட்டன்றிச் சேரெட்டி யோகத்தாற்
புத்திக ளானவை எல்லாம் புலப்படுந்
சித்திகள் எண்சித்தி தானந் திரிபுரை
சத்தி அருள்தரத் தானுள வாகுமே. கூக

அணிமா

671 எட்டிவை தன்னே டெழிற்பரங் கைகூடப்
பட்டவர் சித்தர் பரலோகஞ் சேர்தலால்
இட்டம துள்ளே இறுக்கல் பரகாட்சி
எட்டு வரப்பு மிடந்தானின் றெட்டுமே. கூஉ

672 மந்தர மேறு மதிபாலை வைமாற்றிக்
கந்தாய்க் குழியிற் கசடற வல்லார்க்குத்

தந்தின்றி நற்காய மியலோகஞ் சார்வாகும்
அந்த வுலகம் அணுமாதி யாமே. ௫௫

673 முடிந்திட்டு வைத்து முபங்கிலோ ராண்டில்
அணிந்த அணிமாகை தாணும் இவனுங்
தணிந்தவப் பஞ்சினுங் தாமெய்ப்ப தாகி
மெலிந்தங் கிருந்திடும் வெல்லவொண் ணுதே. ௫௬

லகிமா

674 ஆகின்ற வத்தனி நாயகி தன்னுடன்
போகின்ற தத்துவம் எங்கும் புகலதாய்ச்
சாகின்ற காலங்கள் தன்வழி நின்றிடின்
மாய்கின்ற தையாண்டின் மாலகு வாகுமே. ௫௭

675 மாலகு வாகிய மாயனைக் கண்டபின்
தாமெளி யாகித் தழைத்தங் கிருந்திடும்
பாலொளி யாகிப் பரந்தெங்கு நின்றது
மேலொளி யாகிய மெய்ப்பொருள் காணுமே. ௫௮

மகிமா

676 மெய்ப்பொருள் சொல்லிய மெல்லிய லாளுடன்
கற்பொரு ளாகிய தத்துவங் கூடிடக்
கைப்பொரு ளாகக் கலந்திடு மோராண்டின்
மைப்பொரு ளாகு மகிமாவ தாகுமே. ௫௯

677 ஆகின்ற காலொளி யாவது கண்டபின்
போகின்ற காலங்கள் போவது மில்லையாம்
மேனின்ற காலம் வெளியுற நின்றன
தாழ்கின்ற காலங்கள் தன்வழி யாகுமே. ௫௰

678 தன்வழி யாகத் தழைத்திடு ஞானமுங்
தன்வழி யாகத் தழைத்திடும் வையகங்
தன்வழி யாகத் தழைத்த பொருளெல்லாந்
தன்வழி தன்னரு ளாகுநின் றூனே. ௫௱

பிராத்தி

679 நின்றன தத்துவ நாயகி தன்னுடன்
கண்டன பூதப் படையவை யெல்லாங்
கொண்டவை யோராண்டு கூட இருந்திடில்
விண்டது வேகல்ல பிராத்திய தாகுமே. ச0

கரிமா

680 ஆகின்ற மின்னெளி யாவது கண்டபின்
பாகின்ற பூவிற் பரப்பனை காணலா
மேனின்ற காலம் வெளிபுற நின்றது
போகின்ற காலங்கள் போவது மில்லையே. ச1

681 போவதொன் றில்லை வருவது தானில்லை
சாவதொன் றில்லை தழைப்பது தானில்லை
காமத மில்லை தமரகத் தின்னெளி
யாவது மில்லை யறிந்துகொள் வார்க்கே. ச2

682 அறிந்த பராசத்தி யுள்ளே அமரில்
பறிந்தது பூதப் படையவை யெல்லாங்
குவிந்தவை யோராண்டு கூட இருக்கில்
விரிந்த பரகாய மேவலு மாமே. ச3

பிராகாமியம்

683 ஆன விளக்கொளி யாவ தறிகிலர்
மூல விளக்கொளி முன்னே யுடையவர்
கான விளக்கொளி கண்டுகொள் வார்கட்கு
மேலை விளக்கொளி வீடெளி தாநின்றே. ச4

ஈசத்துவம்

684 நின்ற சதாசிவ நாயகி தன்னுடன்
கண்டன பூதப் படையவை எல்லாங்
கொண்டவை யோராண்டு கூடி யிருந்திடிற்
பண்டைய வீசன் தத்துவ மாகுமே. ச5

685 ஆகின்ற சந்திரன் தன்னெளி யாயவன்
ஆகின்ற சந்திரன் தட்பமு மாயிடும்
ஆகின்ற சந்திரன் தன்கலை கூடிடில்
ஆகின்ற சந்திரன் தானவ னாமே. சஉ

686 தானே படைத்திட வல்லவ னாயிடுந்
தானே யளித்திட வல்லவ னாயிடுந்
தானே சங்காரத் தலைவனு மாயிடுந்
தானே யிவனெனுந் தன்மைய னாமே. சஎ

687 தன்மைய தாகத் தழைத்த கலையினுள்
பன்மைய தாகப் பரந்தஜம் பூதத்தை
வன்மைய தாக மறித்திடில் ஓராண்டின்
மென்மைய தாகிய மெய்ப்பொருள் காணுமே. சஅ

வசித்துவம்

688 மெய்ப்பொரு ளாக விளைந்தது வேதனின்
நற்பொரு ளாகிய நல்ல வசித்துவங்
கைப்பொரு ளாகக் கலந்த உயிர்க்கெல்லாந்
தற்பொரு ளாகிய தன்மைய னாகுமே. சஉ

689 தன்மைய தாகத் தழைத்த பகலவன்
மென்மைய தாகிய மெய்ப்பொருள் கண்டிடின்
பொன்மைய தாகப் புலன்களும் போயிட
நன்மைய தாகிய நற்கொடி காணுமே. நக

690 நற்கொடி யாகிய நாயகி தன்னுடன்
அக்கொடி யாகம் அறிந்திடில் ஓராண்டு
பொற்கொடி யாகிய புவனங்கள் போய்வருங்
கற்கொடி யாகிய காழக னாமே. நஉ

691 காமரு தத்துவ மானது வந்தபின்
பூமரு கந்தம் புவனம தாயிடும்
மாமரு வுன்னிடை மெய்த்திரு மானுய்
நாமரு வும்ஒளி நாயக மானதே. நஉ

692 நாயக மாகிய நல்லொளி கண்டபின்
தாயக மாகத் தழைத்தங் கிருந்திடும்
போயக மான புவனங்கள் கண்டபின்
பேயக மாகிய பேரொளி காணுமே. நூ

693 பேரொளி யாகிய பெரியஅவ் வெட்டையும்
பாரொளி யாகப் பதைப்பறக் கண்டவன்
தாரொளி யாகத் தரணி முழுதுமாம்
ஓரொளி யாகிய காலொளி காணுமே. நூ

694 காலோ டுயிருங் கலக்கும் வகைசொல்லிற்
காலது அக்கொடி நாயகி தன்னுடன்
காலது ஐஞ்ஞூற் றொருபத்து மூன்றையுங்
காலது வேண்டிக் கொண்டஇவ் வாறே. நூ

695 ஆறது வாகும் அமிர்தத் தலையினுள்
ஆறது ஆயிர முந்நூற் றொடைஞ்சுள
ஆறது வாயிர மாகு மருவழி
ஆறது வாக வளர்ப்ப திரண்டே. நூ

696 இரண்டினின் மேலே சதாசிவ நாயகி
இரண்டது கால்கொண் டெழுவகை சொல்லில்
இரண்டது ஆயிரம் ஐம்பதோ டொன்றுய்த்
திரண்டது காலம் எடுத்ததும் அஞ்சே. நூ

697 அஞ்சுடன் அஞ்சு முகமுள நாயகி
அஞ்சுடன் அஞ்சது வாயுத மாவது
அஞ்சது வன்றி இரண்டது வாயிரம்
அஞ்சது காலம் எடுத்துரும் ஒன்றே. நூ

698 ஒன்றது வாகிய தத்துவ நாயகி
ஒன்றது கால்கொண் டீர்வகை சொல்லிடில்
ஒன்றது வென்றிகொள் ஆயிரம் ஆயிரம்
ஒன்றது காலம் எடுத்துரு முன்னே. நூ

699 முன்னெழும் அக்கலை நாயகி தன்னுடன்
முன்னுறு வாயு முடிவகை சொல்லிடின்

மூன்றுறும் ஐம்பத் தொன்றுடன் அஞ்சுமாய்
மூன்றுறு வாயு முடிவகை யாமே. ௬0

700 ஆய்வரும் அத்தனி நாயகி தன்னுடன்
ஆயவரு வாயு அளப்பது சொல்லிடில்
ஆய்வரும் ஐஞ்ஞூற்று மூப்பதொ டொன்பது
மாய்வரு வாயு வளப்புள் ளிருந்ததே. ௬௧

701 இருநிதி யாகிய எந்தை யிடத்து
இருநிதி வாயு இயங்கு நெறியில்
இருநூற்று மூப்பத்து மூன்றுடன் அஞ்சாய்
இருநிதி வாயு இயங்கும் எழுத்தே. ௬௨

702 எழுகின்ற சோதியுள் நாயகி தன்பால்
எழுகின்ற வாயு இடமது சொல்லில்
எழுநூற் றிருபத் தொன்பா னதுநாலாய்
எழுந்துடன் அங்கி இருந்ததிவ் வாறே. ௬௩

703 ஆறது கால்கொண் டிரதம் விளைத்திடம்
ஏழது கால்கொண் டிரட்டி இறக்கிட
எட்டது கால்கொண் டிடவகை யொத்தபின்
ஒன்பது மாநிலம் ஒத்தது வாயுவே. ௬௪

704 சந்திரன் சூரியன் தற்பரன் தாணுவிற்
சந்திரன் தாணுந் தலைப்படுந் தன்மையைச்
சந்தியி லேகண்டு தாணுஞ் சகழுகத்
துந்திச் சமாதி யுடையொளி யோகியே. ௬௫

705 அணங்கற்ற மாதல் அருஞ்சுன நீவல்
வணங்குற்ற கல்விமா ஞான மிகுத்தல்
சுணங்குற்ற வாயர் சித்திதூரங் கேட்டல்
நுணங்கற் றிரோதல்கால் வேகத்து நுந்தலே. ௬௬

706 மரணஞ் சுரைவிடல் வண்பர காயம்
இரணஞ் சேர்பூமி இறந்தோர்க் களித்தல்
அரணன் திருவுற வாதன்மூ வேழாங்
கரணுறு கேள்வி கணக்கறிந் தோனே. ௬௭

707 ஓதம் ஒலிக்கும் உலகை வலம்வந்து
பாதங்கள் நோவ நடந்தும் பயனில்லை
காதலில் அண்ணலைக் காண இனியவர்
நாதன் இருந்த நகரறி வாரே. ௬௭

708 மூல முதல்வேதா மாலரன் முன்னிற்கக்
கோலிய ஐம்முகன் கூறப் பரவிந்து
சாலப் பரநாதம் விந்துத் தனிநாதம்
பாலித்த சத்தி பரைபரன் பாதமே. ௬௮

709 ஆதார யோகத் ததிதே வொடுஞ்சென்று
மீதான தற்பரை மேவும் பரவெளி
மேதாதி யீரெண் கலைசெல்ல மீதானி
ஓதா அசிந்தமீ தானந்த யோகமே. ௬௯

710 மதியழும் ஞாயிறும் வந்துடன் கூடித்
துதிசெய் பவரவர் தொல்வா னவர்கள்
விதியது செய்கின்ற மெய்யடி யார்க்குப்
பதியது காட்டும் பரமன்நின் றூனே. ௭0

711 கட்டவல் லார்கள் கரந்தெங்குந் தானுவர்
மட்டவிழ் தாமரை யுள்ளே மணஞ்செய்து
பொட்டெழக் குத்திப் பொறியெழுத் தண்டிட்டு
நட்டறி வார்க்கு நமனில்லை தானே. ௭௨

70. கலி நிலை

712 காதல் வழிசெய்த கண்ணுதல் அண்ணலைக்
காதல் வழிசெய்து கண்ணுற நோக்கிடிற்
காதல் வழிசெய்து கங்கை வழிதருங்
காதல் வழிசெய்து காக்கலு மாமே. ௭

713 காக்கலு மாகுங் கரணங்கள் நான்கையுங்
காக்கலு மாகுங் கலைபதி னைறையுங்
காக்கலு மாகுங் கலந்தகல் வாயுவுங்
காக்கலு மாகுங் கருத்துற நில்லே. ௮

714 நிலைபெற நின்றது நேர்தரு வாயு
சிலைபெற நின்றது தீபமும் ஒத்துக்
கலைவழி நின்ற கலப்பை அறியில்
அலைவற வாகும் வழியிது வாமே. ங

715 புடையொன்றி நின்றிடும் பூதப் பிராணை
மடையொன்றி நின்றிட வாய்த்த வழியுஞ்
சடையொன்றி நின்றஅச் சங்கர நாதன்
விடையொன்றி லேறியே வீற்றிருந் தானே. ச

716 இருக்கின்ற காலங்கள் ஏதும் அறியார்
பெருக்கின்ற காலப் பெருமையை நோக்கி
ஒருக்கின்ற வாயு வொளிபெற நிற்கத்
தருக்கொன்றி நின்றிடுஞ் சாதக னுமே. ஞ

717 சாதக மானஅத் தன்மையை நோக்கியே
மாதவ மான வழிபாடு செய்திடும்
போதக மாகப் புகலுறப் பாய்ச்சினல்
வேதக மாக விளைந்து கிடக்குமே. ட

718 கிடந்தது தானே கிளர்பயன் மூன்று
நடந்தது தானேஉள் நாடியுள் நோக்கிப்
படர்ந்தது தானே பங்கய மாகத்
தொடர்ந்தது தானேஅச் சோதியுள் நின்றே. எ

719 தானே எழுந்தஅத் தத்துவ நாயகி
ஊனே வழிசெய்தெம் உள்ளே யிருந்திடும்
வானோர் உலகின்ற அம்மை மதித்திடத்
தேனே பருகிச் சிவாலய மாகுமே. அ

720 திகழும் படியே செறிதரு வாயு
அழியும் படியை அறிகில ராருஞ்
அழியும் படியை அறிந்தபின் நந்தி
திகழ்கின்ற வாயுவைச் சேர்தலு மாமே. க

721 சோதனை தன்னில் துரிசறக் காணலாம்
நாதனும் நாயகி தன்னிற் பிரியுநாள்
சாதன மாகுங் குருவை வழிபட்டு
மாதன மாக மதித்துக்கொள் ளீரே. ௯0

722 ஈராறு கால்கொண் டெழுந்த புரவியைப்
போராமற் கட்டிப் பொரிதுண்ணை வல்லீரேல்
நீரா யிரமும் நிலமாயிரத் தாண்டும்
போராது காயம் பிரான்நந்தி ஆணையே. ௯௯

723 ஓசையில் ஏழும் ஒளியின்கண் ஐந்தும்
நாசியின் மூன்றும் நாவில் இரண்டுந்
தேசியும் தேசனுந் தன்னிற் பிரியுநாள்
மாசறு சோதி வகுத்துவைத் தானே. ௯௨

71. சரீரசித்தி உபாயம்

724 உடம்பார் அழியில் உயிராஃர் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே. ௯

725 உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டான்என்
றுடம்பினை யானிருந் தோம்புகின் றேனே. ௨

726 சுழித்துக் கொடுக்கவே சுற்றிக் கழியுங்
கழற்றி மலத்தைக் கமலத்தைப் பூரித்
துழற்றிக் கொடுக்கும் உபாயம் அறிவார்க்
கழற்றித் தவிர்த்துடல் அஞ்சன மாமே. ௩

727 அஞ்சனம் போன்றுட லேயறு மந்தியில்
வஞ்சக வாத மறுமத்தி யானத்திற்
செஞ்சிறு காலேயிற் செய்திடிற் பித்தறும்
நஞ்சறச் சொன்மேனம் நரைதிரை நாசமே. ௪

728 மூன்று மடக்குடைப் பாம்பிரண் டெட்டுள
வேன்ற வியந்திரம் பன்னிரண் டங்குலம்
நான்றவிம் முட்டை யிரண்டையுங் கட்டியிட்
டேன்றி யிருக்க உடம்பழி யாதே.

729 நாறும் அறுபதும் ஆறும் வலம்வர
நாறும் அறுபதும் ஆறும் இடம்வர
நாறும் அறுபதும் ஆறும் எதிரிட
நாறும் அறுபது மாறும் புகுவரே.

730 சத்தியார் கோயி லிடம்வலஞ் சாதித்தான்
மத்தியா னத்திலே வாத்தியங் கேட்கலாந்
தித்தித்த கூத்துஞ் சிவனும் வெளிப்படுஞ்
சத்தியஞ் சொன்னேனுஞ் சதாசங்கி ஆணையே.

731 திறத்திறம் விந்துத் திகழு மகார
முறப்பெற வேநினைந் தோதுஞ் சகார
மறிப்பது மந்திர மன்னிய நாத
மறப்பெற யோகிக் கறநெறி யாமே.

732 உந்திச் சுழியி னுடனோர் பிராணனைச்
சிந்தித் தெழுப்பிச் சிவமந் திரத்தினல்
மூந்தி முகட்டின் நிறுத்தி அபானனைச்
சிந்தித் தெழுப்பச் சிவனவ னாமே.

733 மாறு மலக்குதந் தன்மே லிருவிரற்
கூறு இலிங்கத்தின் கீழே குறிக்கொண்மின்
ஆறு உடம்பிடை அண்ணலும் அங்குளன்
கூறு உபதேசங் கொண்டது காணுமே.

734 நீல நிறனுடை நேரிழை யாளொடுஞ்
சாலவும் புல்லிச் சதமென் றிருப்பார்க்கு
ஞாலம் அறிய நரைதிரை மாறிடும்
பாலனு மாவர் பராசங்கி ஆணையே.

735 அண்டஞ் சுருங்கில் அதற்கோ ரழிவில்லை
பிண்டஞ் சுருங்கிற் பிராணன் நிலைபெறும்
உண்டி சுருங்கில் உபாயம் பலவுள
கண்டங் கறுத்த கபாலியு மாமே. கஉ

736 பிண்டத்துள் உற்ற பிழைக்கடை வாசலை
அண்டத்துள் உற்று அடுத்தடுத் தேகிடில்
வண்டிச் சிக்கு மலர்க்குழல் மாதராள்
கண்டிச் சிக்குநற் காயமு மாமே. கஙு

737 சுழலும் பெருங்கூற்றுத் தொல்லைமுன் சீறி
அழலும் இரதத்துள் அங்கியுள் ஈசன்
கழல்கொள் திருவடி காண்குறில் ஆங்கே
நிழலுளுங் தெற்றுளும் நிற்றலு மாமே. கச

738 நான்கண்ட வன்னியும் நாலு கலையேழுந்
தான்கண்ட் வாயுச் சரீர முழுதோடும்
ஊன்கண்டு கொண்ட வுணர்வு மருந்தாக
மான்கன்று நின்று வளர்கின்ற வாறே. கருு

739 ஆகுஞ் சனவேத சத்தியை அன்புற
நீர்கொள நெல்லின் வளர்கின்ற நேர்மையைப்
பாகு படுத்திப் பல்கோடி களத்திலை
ஊழ்கொண்ட மந்திரந் தன்னுல் ஒடுங்கே. கசு

72. காலசக்கரம்

740 மதிவட்ட மாக வரையைபந்து நாடி
இதுவிட்டிங் கீரா றமர்ந்த அதனுற்
பதிவட்டத் துள்நின்று பாலிக்கு மாறு
மதுவிட்டுப் போமாறு மாயலுற் றேனே. க

741 உற்றறி வைந்தும் உணர்ந்தறி வாறழுங்
கற்றறி வெட்டுங் கலந்தறி வொன்பதும்
பற்றிய பத்தும் பலவகை நாழிகை
அற்றறி யாது அழிகின்ற வாறே. உ

742 அழிகின்ற ஆண்டவை ஐயைஞ்சு மூன்று
மொழிகின்ற மூப்பத்து மூன்றென்ப தாகுங்
கழிகின்ற காலறு பத்திரண் டென்ப
தெழுகின்ற ஈரைம்ப தெண்ணாற் றிருந்தே. கூ

743 திருந்து தினமத் தினத்தி னெடுநின்
றிருந்தறி நாளொன் றிரண்டெட்டு மூன்று
பொருந்திய நாளொடு புக்கறிந் தோதங்கி
வருந்துத லின்றி மனைபுக லாமே. கூ

744 மனைபுகு வீரும் மகத்திடை நாடி
னவிரு பத்தஞ்சும் ஈரா றதனல்
தனையறிந் தேதறட்டுத் தற்குறி யாறு
வினையறி யாறு விளங்கிய நாலே. கூ

745 நாலுங் கடந்தது நால்வரும் நாலைஞ்சு
பாலுங் கடந்தது பத்துப் பதினைஞ்சு
கோலுங் கடந்த குணத்தாண்டு மூவிரண்
டாலுங் கடந்தெதான் ஞாறி வாரே. கூ

746 ஆறும் இருபதுக் கையைஞ்சு மூன்றுக்குந்
தேறு மிரண்டு மிருபத்தெ டாறினை
கூறு மதியொன் றினுக்கிரு பத்தேழு
வேறு பதியங்க ணுள்விதித் தானே. எ

747 விதித்த இருபத்தெட் டொடுமூன் றறையாகத்
தொகுத்தறி மூப்பத்து மூன்று தொகுமின்
பதித்தறி பத்தெட்டும் பாரா திகணல்
உதித்தறி மூன்றிரண் டொன்றின் முறையே. அ

748 முறைமுறை யாய்ந்து முயன்றில ராகில்
இறையிறை யார்க்கும் இருக்க அரிது
மறையது காரண மற்றொன்று மில்லை
பறையறை யாது பணிந்து முடியே. கூ

749 முடிந்த தறியார் முயல்கின்ற மூர்க்கர்
இடிஞ்சில் இருக்க விளக்கெரி கொண்டு

கடிந்தனன் மூளக் கதுவவல் லார்க்கு
நடந்திடும் பாரினில் நண்ணலு மாமே. கo

750 நண்ணலு சிறுவிர ணுைக மூன்றுக்கும்
பின்னிய மார்பிடைப் போராமல் ஓத்திடுஞ்
சென்னியின் மூன்றுக்குஞ் சேரவே நின்றிடும்
உன்னி யுணர்ந்திடும் ஓவியந் தானே. கக

751 ஓவிய மான வுணர்வை அறிமின்கள்
பாவிக ளித்தின் பயனறி வாரில்லை
தீவினை யாமுடன் மண்டல மூன்றுக்கும்
பூவில் இருந்திடும் புண்ணியத் தண்டே. கஉ

752 தண்டுடன் ஓடித் தலைப்பெய்த போகிக்கு
மண்டல மூன்று மகிழ்ந்துடல் ஓத்திடுங்
கண்டவர் கண்டனர் காணர் விளைப்பயன்
பிண்டம் பிரியப் பிணங்குகின் றதே. கங

753 பிணங்கி அழிந்திடும் பேறது கேள்நீ
அணங்குட னெதிர்த்த லறு விரியின்
வணங்குட னேவந்த வாழ்வு குலைந்து
சுணங்கனுக் காகச் சுழல்கின்ற வாறே. கச

754 சுழல்கின்ற வாறின் துணைமலர் காணுன்
தழலிடைப் புக்கிடுந் தன்னு ளிலாமற்
கழல்கண்டு போம்வழி காணவல் லாற்குக்
குழல்வழி நின்றிடுங் கூத்தனு மாமே. கரு

755 கூத்தன் குறியிற் குணம்பல கண்டவர்
சாத்திரந் தன்னைத் தலைப்பெய்து நிற்பார்கள்
பார்த்திருந் துள்ளே அனுபோக நோக்கிடில்
ஆத்தனு மாகி யலர்ந்திரு மொன்றே. கசு

756 ஒன்றில வளர்ச்சி உலப்பிலி கேளினி
நன்றென்று மூன்றுக்கு நாளது சென்றிடுஞ்
சென்றிடு மூப்பதுஞ் சேர இருந்திடிற்
குன்றிடைப் பொன்திகழ் கூத்தனு மாமே. கள

757 கூத்தவன் ஒன்றிடுங் கூர்மை அறிந்தங்கே
ஏத்துவர் பத்தினில் எண்டிசை தோன்றிடப்
பார்த்து மகிழ்ந்து பதுமரை நோக்கிடிற்
சாத்திடு நாறு தலைப்பெய்ய லாமே. கஅ

758 சாத்திடு நாறு தலைப்பெய்து நின்றவர்
காத்துடல் ஆயிரங் கட்டுறக் காண்பர்கள்
சேர்த்துடல் ஆயிரஞ் சேர இருந்தவர்
மூத்துடன் கோடி யுகமது வாமே. கக

759 உகங்கோடி கண்டும் ஒசிவற நின்று
அகங்கோடி கண்டு ளயர்வறக் காண்பர்கள்
சிவங்கோடி விட்டுச் செறிய இருந்தங்
குகங்கோடி கண்டடங் குயருறு வாரே. உ0

760 உயருறு வாருல கத்தொடுங் கூடிப்
பயனுறு வார்பலர் தாமறி யாமற்
செயலுறு வார்சிலர் சிந்தையி லாமற்
கயலுறு கண்ணியைக் காணகி லாரே. உக

761 காணகி லாதார் கழிந்தோடிப் போவர்கள்
நாணகி லாதார் நயம்பேசி விடுவர்கள்
காணகி லாதார் கழிந்த பொருளெலாங்
காணகி லாமற் கழிகின்ற வாறே. உஉ

762 கழிகின்ற அப்பொருள் காணகி லாதார்
கழிகின்ற அப்பொருள் காணலு மாகுங்
கழிகின்ற வுள்ளே கருத்துற நோக்கிற்
கழியாத அப்பொருள் காணலு மாமே. உங

763 கண்ணன் பிறப்பிலி காணந்தி யாயுள்ளே
எண்ணுங் திசையுடன் ஏகாந்த ணுபிடுங்
திண்ணென் றிருக்குஞ் சிவகதி யாநிற்கும்
நண்ணும் பதமிது நாடவல் லார்கட்கே. உச

764 காடவல் லார்க்கு கமணில்லை கேடில்லை
காடவல் லார்கள் கரபதி யாய்நிற்பர்
தேடவல் லார்கள் தெரிந்த பொருளிது
கூடவல் லார்கட்குக் கூறலு மாமே. உந

765 கூறும் பொருளி தகார வுகாரங்கள்
தேறும் பொருளிது சிந்தைபுள் நின்றிடக்
கூறு மகாரங் குழல்வழி போயிட
ஆறும் அமர்ந்திடும் அண்ணலு மாமே. உசு

766 அண்ணல் இருப்பிட மாரும் அறிகிலர்
அண்ணல் இருப்பிடம் ஆய்ந்துகொள் வார்களுக்
கண்ணல் அழிவின்றி உள்ளே அமர்ந்திடும்
அண்ணலைக் காணில் அவனிவ ணுகுமே. உஎ

767 அவனிவ ணுகும் பரிசறி வாரில்லை
அவனிவ ணுகும் பரிசது கேள்நீ
அவனிவ ணிரண்டை ஒளிபிறை யுள்ஒன் றறிடும்
அவனிவன் வட்டம தாகிநின் றானே. உஅ

768 வட்டங்க ளேழு மலர்ந்திடும் உம்முளே
சிட்டன் இருப்பிடஞ் சேர அறிகிலீர்
ஓட்டி யிருந்துள் உபாயம் உணர்ந்திடக்
கட்டி இருப்பிடங் காணலு மாகுமே. உக

769 காணலு மாகும் பிரமன் அரியென்று
காணலு மாகுங் கறைக்கண்டன் ஈசனைக்
காணலு மாகுஞ் சதாசிவ சத்தியுங்
காணலு மாகுங் கலந்துடன் வைத்தே. உo

73. ஆயுள் பரிட்சை

770 வைத்தகை சென்னியில் சேரிதாய்த் தோன்றிடில்
உத்தம மிக்கிடில் ஓராறு திங்களா
மத்த மிகுத்திட் டிரட்டிய தாயிடில்
நித்தல் உயிர்க்கொரு திங்களில் ஓசையே. க

771 ஓசையும் ஈசனும் ஒக்கும் உணர்வின்கண்
ஓசையி றந்தவர் ஈசனை உள்குவர்
ஓசை யிறந்தவர் நெஞ்சினுள் ஈசனும்
ஓசை யுணர்ந்த வுணர்வித்து வாமே. உ

772 ஆமே அழிகின்ற வாயுவை நோக்கிடில்
நாமே உறைகின்ற நன்மை யளித்திடும்
பூமேல் உறைகின்ற போதகம் வந்திடுந்
தாமே யுலகில் தலைவனு மாமே. ஊ

773 தலைவ னிடம்வலஞ் சாதிப்பார் இல்லை
தலைவ னிடம்வல மாயிடில் தைபல்
தலைவ னிடம்வலந் தன்வழி யஞ்சில்
தலைவ னிடம்வலந் தன்வழி நூறே. எ

774 ஏறிய வாறினில் எண்பது சென்றிடுந்
தேறிய ஏழிற் சிறக்கும் வகையெண்ணில்
ஆறொரு பத்தாய் அமர்ந்த இரண்டைபுந்
தேறியே நின்று தெளியிவ் வகையே. ஏ

775 இவ்வகை எட்டும் இடம்பெற ஓடிடில்
அவ்வகை ஐம்பதே யென்ன அறியலாஞ்
செவ்வகை ஒன்பதுஞ் சேரவே நின்றிடின்
மூவ்வகை யாமது மூப்பத்து மூன்றே. ஐ

776 மும்மூன் றும் ஒன்றும் முடிவுற நின்றிடில்
எண்மூன் றும் நாலும் இடவகை யாய்நிற்கும்
ஐம்மூன் றும் ஓடி அகலவே நின்றிடிற்
பன்மூன் றொரு டோரா று பார்க்கலு மாமே. ஒ

777 பார்க்கலு மாகும் பகல்முப் பதுமாகில்
ஆகலு மாகுமவ வாறிரண் டுள்ளிட்டுப்
போக்கலு மாகும் புகலற ஒன்றெனில்
தேக்கலு மாகுந் திருத்திய பத்தே. ஓ

778 ஏயிரு காலும் இயல்புற ஓடிடிற்
பாயிரு காலும் பகையற நின்றிடும்

தேய்வுற மூன்றுந் திகழுவே நின்றிடில்
ஆயுரு வாமென் றளக்கலு மாமே. கூ

779 அளக்கும் வகைநா லுடம் அவ்வழியே ஓடில்
விளக்கும் ஒருநா லுமெய்ப்பட நிற்கும்
துளக்கும் வகையைந்துந் தூய்நெறி ஓடில்
களக்க மறமூன்றிற் காணலு மாமே. கூ

780 காணலு மாகுங் கருதிய பத்தேதாடிற்
காணலு மாகுங் கலந்த இரண்டையும்
காணலு மாகுங் கலப்பற மூவைந்தேதற்
காணலு மாகுங் கருத்துற ஒன்றே. கூ

781 கருதும் இருபதிற் காணலு முகும்
கருதிய ஐயைந்திற் காண்பது மூன்றும்
கருதும் இருப துடனுறு காணிற்
கருதும் இரண்டெனக் காட்டலு மாமே. கூ

782 காட்டலு மாகுங் கலந்திரு பத்தேழில்
காட்டலு மாகுங் கலந்தெழும் ஒன்றெனக்
காட்டலு மாகுங் கலந்திரு பத்தெட்டிற்
காட்டலு மாகுங் கலந்தா ரைந்தே. கூ

783 ஈரைந்தும் ஐந்தும் இருமூன்றும் எட்டுக்கும்
பாரஞ்சி நின்ற பகைபத்து நாளாகும்
வாரஞ்செய் கின்ற வகையாறஞ் சாமாகில்
ஓரஞ்சொ டொன்றொன் றெனவொன்று நாளே. கூ

784 ஒன்றிய நாள்கள் ஒருமூப்பத் தொன்றுகிற்
கன்றிய நாளுங் கருத்துற மூன்றுகுந்
தென்றுயிர் நாலெட்டுந் தேரவே நின்றிடின்
மன்றியல் பாகு மனையில் இரண்டே. கூ

785 மனையில்ஒன் றுகும் மாதமு மூன்றுஞ்
சுனையில்ஒன் றுகத் தொனித்தனன் நந்தி
வினையற வோங்கி வெளிசெய்து நின்றுல்
தனையுற நின்ற தலைவனு மாமே. கூ

786 ஆரு மறியார் அளக்கின்ற வன்னியை
ஆரு மறியார் அளக்கின்ற வாயுவை
ஆரு மறியார் அழிகின்ற அப்பொருள்
ஆரு மறியா அறிவறிந் தேனே. கஎ

787 அறிவது வாயுவொ டைந்தறி வாய
அறிவா வதுதான் உலகுயி ரத்தின்
பிறிவுசெய் யாவகை பேணியுள் காடிற்
செறிவது நின்று திகழு மதுவே. கஅ

788 அதுவரு ளும்மரு ளான துலகம்
பொதுவரு ளும்புக ழாளர்க்கு ளாரு
மதுவரு ளும்மலர் மங்கையர் செல்வி
இதுவருள் செய்யும் இறையவ ளுமே. கக

789 பிறப்பது சூழ்ந்த பெருந்தகை நந்தி
குறிப்பது கூடிய கோலக் குரம்பைப்
பழப்பதி யாவது பற்றறும் பாசம்
அழப்படி செய்வார்க் ககலு மதியே. உ0

74. வாராசரம்

790 வெள்ளிவெண் திங்கள் விளங்கும் புதனிடம்
ஒள்ளிய மந்தன் இரவிசெவ் வாய்வலம்
வள்ளிய பொன்னே வளரும் பிறைபிடந்
தெள்ளிய தேய்பிறை தான்வல மாமே. க

791 வெள்ளிவெண் திங்கள் விளங்கும் புதன்மூன் றுந்
தள்ளி இடத்தே தயங்குமே யாமாகில்
ஒள்ளிய காயத்துக் கூன மிலையென்று
வள்ளல் நமக்கு மகிழ்ந்துரைத் தானே. உ

792 செவ்வாய் வியாழஞ் சனிஞாயி றேஎன்னும்
இவ்வா றறிகின்ற யோகி இறைவனே
ஒவ்வாத வாயு வலத்துப் புரியவிட்
டவ்வா றறிவார்க்கவ் வானந்த மாமே. உக

793 மாறி வருமிரு பான்மதி வெய்பவன்
எறி இழியும் இடைபிங் கலையிடை
ஊறும் உயிர்நடு வேயுயி ருக்கிரந்
தேறி அறிமின் தெரிந்து தெளிந்தே. ச

794 உதித்து வலத்திடம் போகின்ற போது
அதிர்த்தஞ்சி யோடுத லாமகன் ஞருரும்
உதித்தது வேமிக வோடிடு மாகில்
உதித்த விராசி யுணர்ந்துகொ ளநற்றே. ஞ

795 நடுவுநில் லாமல் இடம்வலம் ஓடி
அடுகின்ற வாயுவை அந்தணன் கூடி
இடுகின்ற வாறுசென் றின்பணி சேர
முடிகின்ற தீபத்தின் முன்னுண்டென் ஞனே. ஞ

796 ஆயும் பொருளும் அணிமலர் மேலது
வாயு விதமும் பதிஞ ரூளவழி
போய மனத்தைப் பொருகின்ற வாதாரம்
ஆயுவ நாளு முகுர்த்தமு மாமே. ஏ

75. வாரசூலம்

797 வாரத்திற் சூலம் வரும்வழி கூறுங்கால்
நேரொத்த திங்கள் சனிகிழக் கேயாகும்
பாரொத்த சேய்புதன் உத்தரம் பாலுநாள்
நேரொத்த வெள்ளி குடக்காக நிற்குமே. க

798 தெக்கணை மாகும் வியாழத்துச் சேர்திசை
அக்கணி சூலமு மாமிடம் பின்னுகில்
துக்கமும் இல்லை வலமுன்னே தோன்றிடின்
மிக்கது மேல்விளை மேன்மேல் விளையுமே. உ

76. கேசரி யோகம்

799 கட்டடக் கழன்று கீழ்நான்று வீழாமல்
அட்டத்தைதக் கட்டி அடுப்பை அணைகோலி
விட்டத்தைப் பூட்டி மேற்பனையைத் தாட்கோத்து
கட்ட மிருக்க நமனில்லை தானே. க

800 வண்ணான் ஒலிக்குஞ் சதுரப் பலகைமேற்
கண்ணாறு மோழை படாமற் கரைகட்டி
விண்ணாறு பாய்ச்சிக் குளத்தை நிரப்பிஞல்
அண்ணாந்து பார்க்க அழுக்கற்ற வாறே. உ

801 இடக்கை வலக்கை இரண்டையும் மாற்றித்
துதிக்கைபால் உண்பார்க்குச் சோரவும் வேண்டாம்
உறக்கத்தை நீக்கி உணரவல் லார்கட்
கிறக்கவும் வேண்டாம் இருக்கலு மாமே. ங

802 ஆய்ந்துரை செய்யில் அழுதநின் ஞாறிடும்
வாய்ந்துரை செய்யும் வருகின்ற காலத்து
நீந்துரை செய்யில் நிலாமண் டலமதாய்ப்
பாய்ந்துரை செய்தது பாலிக்கு மாறே. ச

803 நாவின் நுனியை நடுவே விசிறிடிற்
சிவனும் அங்கே சிவனும் உறைவிடம்
மூவரு மூப்பத்து மூவருந் தோன்றுவர்
சாவதும் இல்லைச் சதகோடி யூனே. ஞ

804 ஊனூறல் பாயும் உயிர்வரை உச்சிமேல்
வானூறல் பாயும் வகைபற்றி வாரில்லை
வானூறல் பாயும் வகைபற்றி வாளர்க்குத்
தேனூறல் உண்டு தெளியலு மாமே. ட

805 மேலையண் ணுவில் விரைந்திரு காலிடிற்
காலனும் இல்லைக் கதவுந் திறந்திடும்
ஞாலம் அறிய நரைதிரை மாறிடும்
பாலனு மாவன் பராநந்தி ஆணையே. ண

806 நந்தி முதலாக நாமேலே யேறிட்டுச்
சந்தித் திருக்கில் தரணி முழுதாளும்
பந்தித் திருக்கும் பகலோன் வெளியாகச்
சிந்தித் திருப்பவர் தீவினை யாளரே. த

807 தீவினை யாடத் திகைத்தங் கிருந்தவர்
நாவினை நாடின் நமனுக் கிடமில்லை

பாவினை நாடிப் பயனறக் கண்டவர்
தேவினை யாடிய தீங்கரும் பாமே. கூ

808 தீங்கரும் பாகவே செய்தொழி லுள்ளவர்
ஆங்கரும் பாக அடையநா வேறிட்டுக்
கோங்கரும் பாகிய கோணை நிமிர்த்திட
ஊன்கரும் பாகிவே ஊனீர் வருமே. கo

809 ஊனீர் வழியாக வுண்ணுவை யேறிட்டுத்
தேனீர் பருகிச் சிவாய நமவென்று
கானீர் வரும்வழி கங்கை தருவிக்கும்
வானீர் வரும்வழி வாய்ந்தறி வீரே. கக

810 வாய்ந்தறிந் துள்ளே வழிபாடு செய்தவர்
காய்ந்தறி வாகக் கருணை பொழிந்திடும்
பாய்ந்தறிந் துள்ளே படிக்கத வொன்றிட்டுக்
கோய்ந்தறிந் துள்ளுறை கோயிலு மாமே. கஉ

811 கோயிலின் உள்ளே குடிசெய்து வாழ்பவர்
தாயினும் நல்லார் தரணி முழுதுக்கும்
காயினும் நல்லவர் காய்ந்தவர் தம்முளுந்
தீயினுந் தீயரத் தீவினை யாளர்க்கே. கஙி

812 தீவினை யாளர்தஞ் சென்னியி லுள்ளவன்
பூவினை யாளர்தம் பொற்பதி யானவன்
பாவினை யாளர்தம் பாவகத் துள்ளவன்
மாவினை யாளர் மதியிலுள் ளானே. கச

813 மதியி னெழுங்கதிர் போலப் பதிணெழுப்ப
பதிமனை நூறுநூற் றிருபத்து காலாய்க்
கதிமனை யுள்ளே கணைகள் பரப்பி
எதிர்மலை யாமல் இருந்தனன் தானே. கஞ

814 இருந்தனள் சத்திபு மக்கலை சூழ
இருந்தனள் கன்னியு மந்தி வாக
இருந்தனள் மானோர் முகநில வார
இருந்தனள் தானும் அமுதம் பொழிந்தே. கசு

815 பொழிந்த இருவெள்ளி பொன்மண் ணைடையில்
வழிந்துள் ளிருந்தது வான்முத லங்குக்
கழிந்தது போகாமற் காக்கவல் லார்க்குக்
கொழுந்தது வாகுங் குணமது தானே. கஎ

816 குணமது வாகிய கோமள வல்லி
மணமது வாக மகிழ்ந்தங் கிருக்கில்
தனமது வாகிய தத்துவ ஞானம்
இனமது வாக இருந்தனன் தானே. கஅ

817 இருந்த பிராணனும் உள்ளே எழுமாம்
பரிந்தஇத் தண்டுடன் அண்டம் பரிய
விரிந்தஅப் பூவுடன் மேலெழ வைக்கின்
மலர்ந்தது மண்டலம் வாழலு மாமே. கக

818 மண்டலத் துள்ளே மனவொட்டி யாணத்தைக்
கண்டகத் தங்கே கருதியே கீழ்க்கட்டிப்
பண்டகத் துள்ளே பகலே ஒளியாகக்
குண்டலக் காதனுங் கூத்தொழிந் தானே. உ0

819 ஒழிகின்ற வாயுவும் உள்ளே அமருங்
கழிகின்ற வாயுவுங் காக்கலு மாகும்
வழிகின்ற காலத்து வட்டக் கழலைப்
பழிகின்ற காலத்துப் பையகற் றீரே. உக

820 பையினி னுள்ளே படிக்கத வொன்றிடின்
மெய்யினி னுள்ளே விளங்கும் ஒளியதாங்
கையினுள் வாயுக் கதித்தங் கெழுந்திடின்
மையணி கோயில் மணிவிளக் காமே. உஉ

821 விளங்கிடும் வாயுவை மேலெழ உன்னி
கலங்கிடுங் கண்டத்து நாபியி னுள்ளே
வணங்கிடு மண்டலம் வாய்த்திடக் கும்பிச்
சுணங்கிட நின்றவை சொல்லலு மாமே. உங

822 சொல்லலு மாயிரு மாகத்து வாயுவுஞ்
சொல்லலு மாகு மண்ணீர்க் கடினமுஞ்
சொல்லலு மாகும் இவையஞ்சுங் கூடிடிற்
சொல்லலு மாந்தூர தெரிசனங் தானே. உச

823 தூர தரிசனஞ் சொல்லுவன் காணலாங்
காராருங் கண்ணி கடைஞான முட்பெய்தி
ஏராருந் தீபத் தெழிற்சிந்தை வைத்திடிற்
பாரா ருலகம் பகன்முன்ன தாமே. உரு

824 முன்னெழு காபிக்கு முக்கால் விரற்கீழே
பன்னெழு வேதப் பகலொளி புண்டென்னும்
நன்னெழு நாதத்து நற்றீபம் வைத்திடத்
தன்னெழு கோபில் தலைவனு மாமே. உசு

77. பரியங்க யோகம்

825 பூசு வனவெல்லாம் பூசிப் புலர்த்திய
வாச நறுங்குழல் மாலையுஞ் சாத்திக்
காயக் குழலி கலவி யொடுங்கலந்
தூசித் துளையுறத் தூங்காது போகமே. க

826 போகத்தை யுன்னலே போகாது வாயுவு
மோகத்தை வெள்ளியு மீளும் வியாழத்தில்
சூதொத்த மென்முலை யாளுநற் சூதனுந்
தாதிற் குழைந்து தலைகண்ட வாறே. உ

827 கண்டனுங் கண்டியுங் காதல்செய் யோகத்து
மண்டலங் கொண்டிரு பாலும் வெளிநிற்கும்
வண்டியை மேற்கொண்டு வானீர் உருட்டிடத்
தண்டொரு காலுந் தளராது அங்கமே. உக

828 அங்கப் புணர்ச்சியு மாகின்ற தத்துவ
மங்கத்தில் விந்து வருகின்ற போகத்துப்
பங்கப் படாமற் பரிகரித் துத்தம்மைத்
தங்கிக் கொடுக்கத் தலைவனு மாமே. உஎ

829 தலைவனு மாயிடுந் தன்வழி ஞானங்
தலைவனு மாயிடுந் தன்வழி போகங்
தலைவனு மாயிடுந் தன்வழி யுள்ளே
தலைவனு மாயிடுந் தன்வழி அஞ்சே. ந

830 அஞ்சு கடிகைமேல் ஆறுங் கடிகையில்
துஞ்சுவ தொன்றுத் துணைவி துணைவன்பால்
நெஞ்சு நிறைந்தது வாய்கொளா தென்றது
பஞ்ச கடிகை பரியங்க யோகமே. சு

831 பரியங்க யோகத்துப் பஞ்ச கடிகை
அரியஇவ் வியோகம் அடைந்தவர்க் கல்லது
சரிவளை முன்கைச்சி சந்தனக் கொங்கை
உருவித் தழுவ ஒருவற்கொண் ணுதே. எ

832 ஒண்ணுத யோகத்தை உற்றவ ராரென்னில்
விண்ணுர்ந்த கங்கை விரிசடை வைத்தவன்
பண்ணுர் அழுதினைப் பஞ்ச கடிகையில்
எண்ணு மெனவெண்ணி இருந்தான் இருந்தே. அ

833 ஏய்ந்த பிராயம் இருபது மூப்பதும்
வாய்ந்த குழலிக்கு மன்னர்க்கு மானந்தம்
வாய்ந்த குழலியோ டைந்து மலர்ந்திடச்
சோர்ந்தன சித்தமுஞ் சோர்வில்லை வெள்ளிக்கே. கூ

834 வெள்ளி யுருகிப் பொன்வழி ஓடாமே
கள்ளத்தட் டானுர் கரியிட்டு மூடினுர்
கொள்ளி பறியக் குழல்வழி யேசென்று
வள்ளியுண் ணுவில் அடக்கிவைத் தாரே. கo

835 வைத்த இருவருந் தம்மின் மகிழ்ந்துடன்
சித்தங் கலங்காது செய்கின்ற ஆனந்தம்
பத்து வகைக்கும் பதினெண் கணத்துக்கும்
வித்தக ணுய்நிற்கும் வெங்கதி ரோனே. கக

836 வெங்கதி ருக்குஞ் சனிக்கும் இடைநின்ற
நங்கையைப் புல்லிய நம்பிக்கோ ரானந்தந்

தங்களிற் பொன்னிடை வெள்ளிதா ழாமுனைக்
திங்களிற் செவ்வாய் புதைத்திருந் தாரே. கஉ

837 திருத்திப் புதினைத் திருத்தல்செய் வார்க்குக்
கருத்தழ காலே கலந்தங் கிருக்கில்
வருத்தமு மில்லையா மங்கை பங்கற்குந்
துருத்தியில் வெள்ளியுஞ் சோரா தெழுமே. கஊ

838 எழுகின்ற தீயைமுன் னேகொண்டு சென்றிட்டால்
மெழுகுரு கும்பரி செய்திடும் மெய்யே
உழுகின்ற தில்லை ஒளியை அறிந்தபின்
விழுகின்ற தில்லை வெளியறி வார்க்கே. கச

839 வெளியை அறிந்து வெளியி னடுவே
ஒளியை அறியி னுளிழுறி யாமே
தெளிவை அறிந்து செழுஞாந்தி யாலே
வெளியை அறிந்தனன் மேலறி யேனே. கஎ

840 மேலாந் தலத்தில் விரிந்துவ ராரெனின்
மாலாந் திசைமுகன் மாஞந்தி யாயவர்
நாலா நிலத்தி னடுவான வப்பொருள்
மேலா யுரைத்தனர் மின்னிடை யாளுக்கே. கஅ

841 மின்னிடை யாளுமின் னுளனுங் கூட்டத்துப்
பொன்னிடை வட்டத்தின் உள்ளே புகப்பெய்து
தன்னெறு தன்னைத் தலைப்பெய்ய வல்லார்என்
மன்னிடைப் பல்லூழி வாழலு மாமே. கக

842 வாங்க லிறுதலை வாங்கலில் வாங்கிய
வீங்க வலிக்கும் விரகறி வாரில்லை
வீங்க வலிக்கும் விரகறி வாளரும்
ஓங்கிய தன்னை உதம்பண்ணி னோரே. கஆ

843 உதமறிந் தங்கே ஒருசுழிப் பட்டாற்
கதமறிந் தங்கே கபாலங் கறுக்கும்
இதமறிந் தென்றும் இருப்பாள் ஒருத்தி
பதமறிந் தும்முளே பார்கடிந் தாளே. கஙு

844 பாரில்லை நீரில்லைப் பங்கயம் ஒன்றுண்டு
தாரில்லை வேரில்லை தாமரை பூத்தது
ஊரில்லைக் காணும் ஒளியது ஒன்றுண்டு
கீழில்லை மேலில்லைக் கேள்வியிற் பூவே. ௨0

78. அழரிதாரணை

845 உடலிற் கிடந்த வுறுதிக் குடிநீர்க்
கடலிற் சிறுகிணற் றேற்றமிட் டாலொக்கும்
உடலில் ஒருவழி ஒன்றுக் கிறைக்கில்
கடலைப் படாதுயிர் காடலு மாமே. ௪

846 தெளிதரும் இந்தச் சிவநீர் பருகில்
ஒளிதரு மோராண்டில் ஊனமொன் றில்லை
வளியுறும் எட்டின் மனமும் ஒடுங்குங்
களிதருங் காயங் கனகம தாமே. ௨

847 நாறு மிளகு நுகருஞ் சிவத்தினீர்
மாறும் இதற்கு மருந்தில்லை மாந்தர்கள்
தேறில் இதனைத் தெளியுச்சி கப்பிடின்
மாறும் இதற்கு மறுமயி ராமே. ௫

848 கரையரு கேநின்ற கானல் உவரி
வரைவரை என்பர் மதியிலா மாந்தர்
நுரைதிரை நீக்கி நுகரவல் லார்க்கு
நரைதிரை மாறு நமனுமங் கில்லையே. ௪

849 அளக நன்னுத லாயோ ரதிசயங்
களவு காயங் கலந்தஇந் நீரிலே
மிளகு நெல்லியும் மஞ்சளும் வேம்பிடில்
இளகும் மேனி இருளுங் கபாலமே. ௯

850 வீர மருந்தென்றும் விண்ணோர் மருந்தென்றும்
நாரி மருந்தென்றும் நந்தி அருள்செய்தான்
ஆதி மருந்தென் றறிவார் அகலிடஞ்
சோதி மருந்திது சொல்லவொண் ணாதே. ௰

79. சந்திர யோகம்

851 எய்து மதிக்கலை சூக்கத்தி லேறியே
எய்துவ தூலம் இருவகைப் பக்கத்துள்
எய்துங் கலைபோல ஏறி இறங்குமாந்
துய்யது சூக்கத்துத் தூலத்த காயமே. க

852 ஆகின்ற சந்திரன் சூரியன் அங்கியுள்
ஆகின்ற ஈரெட்டொ டாறிரண் டூரைந்துள்
ஏகின்ற வக்கலை யெல்லா மிடைவழி
ஆகின்ற யோகி அறிந்த அறிவே. உ

853 ஆறுற தாங்கலை ஆதித்தன் சந்திரன்
நாறு நலங்கினர் நூலங் கவர்கொளப்
பேறுங் கலைமூற்றும் பெருங்கால் ஈரெட்டி
மாறுக் கதிர்கொள்ளு மற்றங்கி கூடினே. ங

854 பத்தும் இரண்டும் பகலோன் உயர்கலை
பத்திரை டாறும் உயர்கலை பான்மதி
ஒத்தநல் அங்கிய தெட்டிடட் டுயர்கலை
அத்திறன் நின்றமை ஆய்ந்துகொள் வீரே. ச

855 எட்டிடட் டனலின் கலையாகும் ஈராறுட்
சுட்டப் படுங்கதி ரோனுக்குஞ் சூழ்கலை
கட்டப் படுமீ ரெட்டா மதிக்கலை
ஓட்டப் படாஇவை ஒன்றோடொன் றாமே. ஞ

856 எட்டெட்டும் ஈராறும் ஈரெட்டுந் தீக்கதிர்
சுட்டிட்ட சோமனில் தோன்றுங் கலைபதினாஞ்
கட்டப் படுந்தார கைகதிர் நாலுள
கட்டிட்ட தொண்ணூற்றொ டாறுங் கலாதீட. ட

857 எல்லாக் கலையும் இடைபிங் கலைநடுச்
சொல்லா நடுநாடி யூடே தொடர்பூரகத்
தெல்லா எழுப்பிச் சிரத்துடன் சேர்த்தபின்
கல்லோர் திருவடி கண்ணினிற் போதே. ண

858 அங்கியிற் சின்னக் கதிரிரண் டாட்டத்துத்
தங்கியு தாரகை யாகுஞ் சசிபாலு
வங்கிய தாரகை யாகும் பரையொளி
தங்கு நவசக்ர மாகுந் தரணிக்கே. அ

859 தரணி சலங்கனல் காற்குக்க வானம்
அரணிய பாலு அருந்திங்கள் அங்கி
மூரணிய தாரகை முன்னிய ஒன்பான்
பிரணவ மாகும் பெருநெறி தானே. கூ

860 தாரகை மின்னுஞ் சசிதேயும் பக்கத்துத்
தாரகை மின்னு சசிவளர் பக்கத்துத்
தாரகை பூவிற் சகலத்தி யோனிகள்
தாரகைத் தாரகை தாணுஞ் சொரூபமே. கo

861 மூற்பதி னஞ்சின் மூலைத்துப் பெருத்திடும்
பிற்பதி னஞ்சிற் பெருத்துச் சிறுத்திடும்
அப்பதி னஞ்சும் அறிபவல் லாக்கட்குச்
செப்பரி யான்கழல் சேர்த்தலு மாமே. கக

862 அங்கி எழுப்பி யருங்கதிர் ஊட்டத்துத்
தங்குஞ் சசியால் தாமம்ஐந் தைந்தாகிப்
பொங்கிய தாரகை யாம்புலன் போக்கறத்
திங்கள் கதிரங்கி சேர்கின்ற யோகமே. கஉ

863 ஒன்றிய ஈரெண் கலைபும் உடலுற
நின்றது கண்டும் நினைக்கிலர் நீதர்கள்
கன்றிய காலன் கருத்துழி வைத்தபின்
சென்றதில் வீழ்வர் திகைப்பொழி யாரே. கங

864 அங்கி மதிகூட வாகும் கதிரொளி
அங்கி கதிர்கூட வாகு மதியொளி
அங்கி சசிகதிர் கூடவத் தாரகை
தங்கி யதுவே சகலமு மாமே. கச

865 ஈராறு பெண்கலை எண்ணிரண் டாண்கலை
போராமற் புக்குப் பிடித்துக் கொடுவந்து

கோகநத் தோன்றும் நெருப்புற வெய்யில்
ஆரா தனந்தம் ஆனந்த மானதே. கரு

866 காணும் பரிதியின் காலை இடத்திட்டு
மாணும் மதியுகன் காலை வலத்திட்டுப்
பேணியே யிவ்வா றிழையாமற் செய்வீரேல்
ஆணி கலங்காதவ் வாயிரத் தாண்டே. கசு

867 பாலிக்கும் நெஞ்சம் பறையோசை ஒன்பதில்
ஆலிக்கும் அங்கே அமரர் பராபரன்
மேலைக்கு முன்னே விளக்கொளி யாய்நிற்குங்
காலைக்குச் சங்கு கதிரவன் தானே. கஎ

868 கதிரவன் சந்திரன் காலம் அளக்கும்
பொதிரவு ளுள்ளன பொழிமழை நிற்கும்
அதிரவ னண்டப் புறஞ்சென் றடர்ப்ப
எதிரவ னீச னிடமது தானே. கஅ

869 உந்திக் கமலத் துதித்தெழுந் தோதினை
அந்திக்கு மந்திர மாரும் அறிகிலார்
அந்திக்கு மந்திர மாரும் அறிந்தபின்
தந்தைதக்கு முன்னே மகன்பிறக் தானே. கக

870 ஊதியம் ஏதும் அறியார் உரைப்பிலும்
ஓதியும் ஏதும் அறியாத ஊமர்கள்
ஆதியும் அந்தமும் அந்திக்க வல்லீரேல்
வேதியன் அங்கே வெளிப்படுத் தானே. உ

871 பாம்பு மதியைத் தினலுறும் பாம்பினைத்
தீங்கு கதிரையுஞ் சோதித் தனலுறும்
பாம்பு மதியும் பகைதீர்த் துடன்கொளீ இ
நீங்கல் கொடானே நெடுந்தகை யானே. உக

872 அயின்றது வீழ்வள வந்துயில் இன்றிப்
பயின்ற சசிவீழ் பொழுதில் துயின்று
கயந்தரு பூரண உள்ள கடத்தி
வியந்தரு பூரண மேவுஞ் சசியே. உஉ

873 சகியுதிக் கும்அள வுந்துயி லின்றிச்
சகியுநித் தானேல் தனதூண் அருந்திச்
சகிசரிக் கின்றள வுந்துயி லாமற்
சகிசரிப் பின்கட்டன் கண்டுயில் கொண்டதே. உஏ

874 ஊழி பிரியா திருக்கின்ற யோகிகள்
காழிகை யாக கமனை அளப்பர்கள்
ஊழி முதலாய் உயர்வார் உலகினில்
தாழுவல் லார்இச் சகிவன்ன ராமே. உசு

875 தண்மதி பானுச் சரிபூமி யேசென்று
மண்மதி காலங்கள் மூன்றும் வழிகண்டு
வெண்மதி தோன்றிய காளில் விளைந்தபின்
தண்மதி வீழ்வள விற்கண மின்றே. உஙி

876 வளர்கின்ற ஆதித்தன் தன்கலை யாறுந்
தளர்கின்ற சந்திரன் தன்கலை யாறு
மலர்ந்தெழு பன்னிரண் டங்குலம் ஓடி
அலர்ந்து விழுந்தமை யாரறி வாரே. உசூ

877 ஆழுயிர்த் தேய்மதி காளை யெனல்விந்து
போம்வழி எங்கணும் போகாது யோகிக்குக்
காழுற இன்மையிற் கட்டுண்ணு மூலத்தில்
ஓமதி யத்துள்விட் டுரைபுணர் வாலே. உஎ

878 வேறுறச் செங்கதிர் மெய்க்கலை யாழுடுஞ்
சூறுற நான்குந் தொடர்ந்துற வேநிற்கும்
ஈறிலி னன்கலை யீரைந்தா டேமதித்
தாறுட் கலையுள் அகலுவா வாமே. உஅ

879 உணர்விந்து சோணி உறவினன் வீசும்
புணர்விந்து வீசுங் கதிரிற் குறையில்
உணர்வும் உடம்பும் உலையொக்க நிற்கில்
உணர்வும் உடம்பும் ஒருகால் விடாவே. உக

880 விடாத மனம்பவ னத்தொடு மேவி
கடாவு சிவசங்கின் நாதங் கொளுவிக்

கடாவிடா ஐம்புலன் கட்டுண்ணும் வீடு
படாதன இன்பம் பருகார் அழுதமே. ௫0

881 அழுதப் புனல்வரு மாற்றங் கரைமேற்
குமிழிக் குட்சுட ரைந்தையுங் கூட்டிச்
சமையத்தண் டோட்டித் தரிக்கவல் லார்க்கு
நமன்இல்லை நற்கலை நாள்இல்லை தானே. ௫௪

882 உண்ணீ ரழுத முறுழு றலைத்திறந்
தெண்ணீர் இணையடித் தாமரைக் கேசெலத்
தெண்ணீர்ச் சமாதி யமர்ந்துதீ ராநலங்
கண்ணுற் றெடேசென்று கால்வழி மாறுமே. ௫௨

883 மாறு மதியும் மதித்திரு மாறின்றித்
தாறு படாமல் தண்டோடே தலைப்படில்
ஊறு படாதுடல் வேண்டும் உபாயமும்
பாறு படாஇன்பம் பார்மிசைப் பொங்குமே. ௫௬

மூன்றாந் தந்திரம் முற்றிற்று.

நாலாந் தந்திரம்

80. அசனை

884 போற்றுகின் றேன்புகழ்ந் தும்புகல் ஞானத்தைத்
தேற்றுகின் றேன்சிந்தை நாயகன் சேவடி
சாற்றுகின் றேன்அறை யோசிவ யோகத்தை
ஏற்றுகின் றேன்நகம் பிரான்ஓர் எழுத்தே. க

885 ஓரெழுத் தாலே உலகெங்குந் தாணுகி
ஈரெழுத் தாலே இணைசந்தங் கிருவராய்
மூவெழுத் தாலே முளைக்கின்ற சோதியை
மாவெழுத் தாலே மயக்கமே உற்றதே. உ

886 தேவ ருறைகின்ற சிற்றம் பலம்என்றுந்
தேவ ருறைகின்ற சிதம்பரம் என்றுந்
தேவர் உறைகின்ற திருஅம் பலமென்றுந்
தேவர் உறைகின்ற தென்பொது வாமே. ங

887 ஆமேபொன் னம்பலம் அற்புதம் ஆனந்தம்
ஆமே திருக்கூத் தனவரத தாண்டவம்
ஆமே பிரளய மாகும்அத் தாண்டவம்
ஆமேசங் காரத் தருந்தாண் டவங்களே. ச

888 தாண்டவ மான தனியெழுத் தோரெழுத்
தாண்டவ மான தணுக்கிர கத்தாழில்
தாண்டவக் கூத்துத் தனிநின்ற தற்பரந்
தாண்டவக் கூத்துத் தமனியந் தானே. ஞ

889 தானே பரஞ்சுடர் தத்துவ மாய்நிற்குந்
தானே அகார உகாரம தாய்நிற்குந்
தானே பரஞ்சுடர் தத்துவக் கூத்துக்குத்
தானே தனக்குத் தராதலந் தானே. ட

890 தராதல மூலைக்குத் தற்பர மாபரன்
தராதலம் வெப்பு நமவா சியவாந்
தராதலஞ் சொல்லிற் றுன்வா சியவாகுந்
தராதல மோகந் தயாவாசி யாமே. எ

891 ஆமே சிவங்கள் அகார உகாரங்கள்
ஆமே பரங்கள் அறியா விடம்என்ப
ஆமே திருக்கூத் தடங்கிய சிற்பரம்
ஆமே சிவகதி ஆனந்த மாமே. அ

892 ஆனந்த மூன்றும் அறிவிரண் டொன்றுகும்
ஆனந்தஞ் சிவாய அறிவார் பலரில்லை
ஆனந்த மோடும் அறியவல் லார்கட்கு
ஆனந்தக் கூத்தாப் அகப்படுந் தானே. கூ

893 பதுவ திரண்டும் பலகலை வல்லார்
பதுவ தோங்காரம் பஞ்சாக் கரங்கள்
பதுவது சங்காரத் தாண்டவப் பத்தி
பதுவது கோணம் பரந்திடும் வாறே. கo

894 வாறே சதாசிவ மாநிலை ஆகமம்
வாறே சிவகதி வண்திறை புன்சினையும்
வாறே திருக்கூத்து ஆகம வசனங்கள்
வாறே பொதுவாகு மன்றின் அமலமே. கக

895 அமலம் பதிபசு பாசங்கள் ஆகமம்
அமலந் திரோதாயி யாகுமா னந்தமாம்
அமலஞ்சொல் ஆணவ மாயை காமியம்
அமலந் திருக்கூத்தங் காமிடந் தானே. கஉ

896 தானே தனக்குத் தலைவனு மாய்நிற்குந்
தானே தனக்குத் தன்மலை யாய்நிற்குந்
தானே தனக்குத் தன்மய மாய்நிற்குந்
தானே தனக்குத் தலைவனு மாமே. கஉ

897 தலைவனு மாய்நின்ற தற்பரக் கூத்தனைத்
தலைவனு மாய்நின்ற சற்பாத் திரத்தைத்

தலைவனு மாய்நின்ற தாதைவிழ் ஞானத்
தலைவனு மாய்நின்ற தாளிணை தானே. கச

898 இணையார் திருவடி எட்டெழுத் தாகும்
இணையார் கழலிணை யீரைஞ்சு தாகும்
இணையார் கழலிணை ஐம்பத்தொன் ருகும்
இணையார் கழலிணை எழா யிரமே. கஞ

899 எழா யிரமாய் இருபதாய் மூப்பதாய்
எழா யிரத்தும் எழுகோடி தாணுகி
எழா யிரத்துயிர் எண்ணிலா மந்திரம்
எழா யிரண்டாய் இருக்கின்ற வாறே. கக

900 இருக்கின்ற மந்திரம் எழா யிரமாம்
இருக்கின்ற மந்திரம் எத்திறம் இல்லை
இருக்கின்ற மந்திரஞ் சிவன்திரு மேனி
இருக்கின்ற மந்திரம் இவ்வண்ணந் தானே. கஎ

901 தானே தனக்குத் தகுநட்டங் தாணுகுந்
தானே அகார உகாரம தாய்நிற்குந்
தானே ரீங்காரத் தத்துவக் கூத்துக்குத்
தானே உலகில் தனிநடந் தானே. கஅ

902 நடமிரண் டொன்றே நளினம தாகும்
நடமிரண் டொன்றே நமன்செய்யுங் கூத்து
நடமிரண் டொன்றே நகைசெயா மந்திரம்
நடஞ்சிவ லிங்கம் நலஞ்செம்பு பொன்னே. கக

903 செம்புபொன் ணுகுஞ் சிவாய நமவென்னிற்
செம்புபொன் ணுகத் திரண்டது சிற்பரஞ்
செம்புபொன் ணுகும் ஹரீயுங் கிரீயுமெனச்
செம்புபொன் ணன திருவம் பலமே. உ0

904 திருவம் பலமாகச் சீர்ச்சக் கரத்தைதத்
திருவம் பலமாக ஈராறு கீறித்
திருவம் பலமாக இருபத்தைதஞ் சாக்கித்
திருவம் பலமாகச் செபிக்கின்ற வாறே. உக

905 வாழ்ந சிவாய நமச்சி வாயநம
வாழ்ந செபிக்கில் வரும்சேம் பிறப்பில்லை
வாழ்ந அருளால் வளர்கூத்துக் காணலாம்
வாழ்ந செபிக்கில் வருஞ்செம்பு பொன்னே. உஉ

906 பொன்னன மந்திரம் புகலவும் ஓண்ணுது
பொன்னன மந்திரம் பொறிகிஞ்ச கத்தாகும்
பொன்னன மந்திரம் புனைபுண்டி பூரிக்கிற்
பொன்னுகும் வல்லோர்க் குடம்புபொற் பாதமே.உங

907 பொற்பாதங் காணலாம் புத்திரர் உண்டாகும்
பொற்பாதத் தாணையே செம்புபொன் னாயிடும்
பொற்பாதங் காணத் திருமேனி யாயிடும்
பொற்பாத நன்னாடஞ் சிந்தின சொல்லுமே. உச

908 சொல்லு மொருகூட்டிற் புக்குச் சுகிக்கலாம்
நல்ல மடவார் நயந்துட னேவருஞ்
சொல்லீனும் பாசச் சுடர்ப்பாம்பு நீங்கிநஞ்
சொல்லுங் திருக்கூத்தின் சூக்குமந் தானே. உந

909 சூக்குமம் என்ன யிரஞ்செபித் தாலுமேற்
சூக்கும மான வழியிடைக் காணலாஞ்
சூக்கும மான வினையைக் கெடுக்கலாஞ்
சூக்கும மான சிவனதா னந்தமே. உசு

910 ஆனந்தம் ஆனந்தம் ஒன்றென் றறைந்திட
ஆனந்தம் ஆனந்தம் ஆ-ஈ-உஊ-ஏ-ஓமென் றைந்திடம்
ஆனந்தம் ஆனந்தம் அஞ்சும தாயிடும்
ஆனந்தம் ஆனந்தம் அம்-ஹரீம்-அம்-கூம்-ஆம்-ஆகுமே.

911 மேனி யிரண்டும் விலகாமல் மேல்கொள்ள
மேனி யிரண்டு மிகார விகாரியா
மேனி யிரண்டும் உஊ-ஆ-ஈ-ஏ-ஓ-என் னும்
மேனி யிரண்டும் ஈ-ஓ-உஊ-ஆ-ஏ-கூத்தாமே. உஅ

912 கூத்தே சிவாய நமமசி வாயிடுங்
கூத்தே-ஈ-உள-ஆ-ஏ-ஓம்-சிவாயநம வாயிடுங்
கூத்தே-ஈ-உள-ஆ-ஏ-ஓம் சிவயநம வாயிடுங் [மாறே.
கூத்தே-இ-உள-ஆ-ஏ-ஓம் நமசிவாய கோளொன்று

913 ஒன்றிரண் டாடவோ ரொன்று மூடனை
ஒன்றினின் மூன்றுட ஓரேழும் ஒத்தாட
ஒன்றிலுல் ஆடவோர் ஒன்பதும் உடனை
மன்றினில் ஆடினன் மாணிக்கக் கூத்தே. ௫

81. திருவம்பலச் சக்கரம்

914 இருந்தஇவ் வட்டங்கள் ஈராறி ரேகை
இருந்த இரேகைமேல் ஈரா றிருத்தி
இருந்த மனைகளும் ஈராறு பத்தொன்
றிருந்த மனையொன்றில் எய்துவன் றானே. க

915 தாளென்றி வாழிடந் தன்னெழுத் தேயாகுந்
தாளென்று மங்கான்குந் தன்பே ரெழுத்தாகுந்
தாளென்று நாற்கோணந் தன்னந் தெழுத்தாகுந்
தாளென்றி லேயொன்று மவ்வரன் தானே. உ

916 அரகர என்ன அரியதொன் றில்லை
அரகர என்ன அறிகிலர் மாந்தர்
அரகர என்ன அமரரும் ஆவர்
அரகர என்ன அறும்பிறப் பன்றே. ங

917 எட்டு நிலையுள எங்கோன் இருப்பிடம்
எட்டினில் ஒன்றும் இருமூன்றும் ஈரேழும்
ஓட்டிய விந்துவும் நாதமும் ஓங்கிடப்
பட்டது மந்திரம் பான்மொழி பாலே. ச

918 மட்டவிழ் தாமரை மாதுநல் லாளுடன்
ஓட்டி இருந்த உபாயம் அறிகிலர்
விட்ட எழுத்தை விடாத எழுத்துடன்
கட்டவல் லாருயிர் காக்கவல் லாரே. ஞ

919 ஆல மாக அமர்ந்தபஞ் சாக்கரம்
ஆல மாக அமர்ந்தவித் தூலம்போய்
ஆல மாக வறிகின்ற சூக்குமம்
ஆல மாக அமர்ந்திருந் தானே. ௯

920 இருந்தஇவ் வட்டம் இருமூன்றி ரேகை
இருந்த வதனுள் இரேகை யைந்தாக
இருந்த அறைகள் இருபத்தைஞ் சாக
இருந்த அறையொன்றில் எய்து மகாரமே. ௧

921 மகார நடுவே வளைத்திடுஞ் சத்தியை
ஓகாரம் வளைத்திட் டும்பினைத் தேற்றி
அகாரந் தலையாய் இருகண் சிகாரமாய்
நகார வகாரநற் காலது நாடுமே. ௮

922 நாடும் பிரணவ நடுவிரு டக்குமும்
ஆடி மவர்வாய் அமர்ந்தங்கு நின்றது
நாடு நடுவுண் முகநட சிவாய
வாடுந் சிவாயநம புறவட்டத் தாயதே. ௯

923 ஆயுஞ் சிவாய நமமசி வாயந
வாயு நமசிவா யயநம சிவாயந
வாயுமே வாய நமசியெனு மந்திர
மாயுஞ் சிகாரந் தொட்டந்தத் தடைவிலே. ௰

924 அடைவினில் ஐம்பதும் ஐயைந் தறையின்
அடையும் அறையொன்றுக் கீரெழுத் தாக்கி
அடைய மகாரத்தில் அந்தமாம் சுழிவ்வும்
அடைவின் எழுத்தைதம் பத்தொன்றும் அமர்ந்தே.

925 அமர்ந்த அரகர வாம்புற வட்டம்
அமர்ந்த அரிகரி யாமத னுள்வட்டம்
அமர்ந்த அசனை யாம்அத னுள்வட்டம்
அமர்ந்தஇ ரேகையும் ஆகின்ற சூலமே. ௧௨

926 சூலத் தலையினில் தோற்றிடுஞ் சத்தியுஞ்
சூலத் தலையினிற் சூழும்ஓங் காரத்தால்

சூலத் திடைவெளி தோற்றிடும் அஞ்செழுத்
தாலப் பதிக்கும் அடைவது வாமே. கஙு

927 அதுவாம் அகார இகார உகாரம்
அதுவாம் எகாரம் ஓகார மதஞ்சாம்
அதுவாகுஞ் சக்கர வட்டமேல் வட்டம்
பொதுவாம் இடைவெளி பொங்குநம் பேரே. கச

928 போர்பெற் றதுமூல மந்திரம் பின்னது
சோர்வுற்ற சக்கர வட்டத்துட் சந்தியின்
கோர்பெற் றிருந்திட நின்றது சக்கரம்
ஏர்பெற் றிருந்த இயல்பிது வாமே. கஞ

929 இயலுமிம் மந்திரம் எய்தும் வழியின்
செயலும் அறியத் தெளிவிக்கு நாதன்
புயலும் புனலும் பொருந்தங்கி மண்விண்
முயலும் எழுத்துக்கு முன்ன இருந்தே. கசு

930 ஆறெட் டெழுத்தின்மே லாறும் பதிணுலும்
ஏறிட் டதன்மேலே விந்துவும் நாதமுஞ்
சீறிட்டு நின்று சிவாய நமவென்னக்
கூறிட்டு மும்மலங் கூப்பிட்டுப் போமே. கஎ

931 அண்ணல் இருப்ப தவளக் கரத்துளே
பெண்ணினல் லாளரும் பிரானக் கரத்துளே
எண்ணி இருவர் இசைந்தங் கிருந்திடப்
புண்ணிய வாளர் பொருளறி வார்களே. கஅ

932 அவ்விட்டு வைத்தங் கரவிட்டு மேல்வைத்து
இவ்விட்டுப் பார்க்கில் இலிங்கம தாய்நிற்கும்
மவ்விட்டு மேலே வளியுறக் கண்டபின்
தொம்மிட்டு நின்ற சுடர்க்கொழுந் தாமே. கஙு

933 அவ்வுண்டு சவ்வுண் டனைத்துமங் குள்ளது
கவ்வுண்டு நிற்குங் கருத்தறி வாரில்லை
கவ்வுண்டு நிற்குங் கருத்தறி வாளர்க்குச்
சவ்வுண்ட சத்தி சதாசிவன் தானே. உ0

934 அஞ்செழுத் தாலே அமர்ந்தனன் நந்தியும்
அஞ்செழுத் தாலே அமர்ந்தபஞ் சாக்கரம்
அஞ்செழுத் தாகிய வக்கர சக்கரம்
அஞ்செழுத் துள்ளே அமர்ந்திருந் தானே. ௳

935 கூத்தனைக் காணுங் குறிபல பேசிடிற்
கூத்த னெழுத்தின் முதலெழுத் தோதினர்
கூத்தனெ டொன்றிய கொள்கைய ராய்நிற்பர்
கூத்தனைக் காணுங் குறியது வாமே. ௴

936 அத்திசைக் குள்நின்ற அனலெ ழுப்பியே
அத்திசைக் குள்நின்ற நவ்வெழுத் தோதினல்
அத்திசைக் குள்நின்ற அந்த மறையனை
அத்திசைக் குள்ளுற வாக்கினன் தானே. ௵

937 தானை யளித்திடுக் கையலை நோக்கினல்
தானை யளித்திட்டு மேலுற வைத்திடுக்
தானை யளித்த மகாரத்தை ஓதிடத்
தானை யளித்தசேதார் கல்லொளி யாகுமே. ௶

938 கல்லொளி யேயென நின்ற வடதிசை
கல்லொளி யேயென நின்றனன் இந்திரன்
கல்லொளி யேயெனக் காட்டிநின் றூனே. ௷

939 தானை யெழுகுணக் தண்சுட ராய்நிற்குங்
தானை யெழுகுணம் வேதமு மாய்நிற்குங்
தானை யெழுகுண மாவதும் ஓதிடில்
தானை யெழுந்த மறையவ னுமே. ௸

940 மறையவ னுக மதித்த பிறவி
மறையவ னுக மதித்திடக் காண்பர்
மறையவன் அஞ்செழுத் துண்ணிற்கப் பெற்ற
மறையவன் அஞ்செழுத் தாமது வாகுமே. ௹

941 ஆகின்ற பாதமு மங்கவாய் நின்றிடும்
ஆகின்ற நாபிபுள் அங்கே மகாரமாம்

ஆகின்ற சீயிரு தோள்வவ்வாய்க் கண்டபின்
ஆகின்ற வச்சுட ரவ்வியல் பாமே. ௨அ

942 அவ்வியல் பாய இருமூன் றெழுத்தையுஞ்
செவ்வியல் பாகச் சிறந்தனன் நந்தியும்
ஓவ்வியல் பாக ஒளியுறு நோக்கிடிற்
பவ்வியல் பாகப் பரந்துநின் றூனே. ௨௯

943 பரந்தது மந்திரம் பல்லுயிர்க் கெல்லாம்
வரந்தரு மந்திரம் வாய்த்திட வாங்கித்
துரந்திடு மந்திரஞ் சூழ்பகை போக
உரந்தரு மந்திரம் ஓமென் றெழுப்பே. ௩0

944 ஓமென் றெழுப்பித்தன் உத்தம நந்தியை
நாமென் றெழுப்பி நடுவெழு தீபத்தை
ஆமென் றெழுப்பியவ் வாறறி வார்கள்
மாமன்று கண்டு மகிழ்ந்திருந் தாரே. ௩௪

945 ஆகின்ற சக்கரத் துள்ளே எழுத்தைந்தும்
பாகொன்றி நின்ற பதங்களில் வாத்திக்கும்
ஆகின்ற ஐம்பத் தோரெழுத் துள்நிற்கப்
பாகொன்றி நிற்கும் பராபரன் தானே. ௩௨

946 பரமாய அஞ்செழுத் துள்நடு வாகப்
பர்மாய நவசிம பார்க்கில் மவயநசி
பரமாய சியநம வாம்பரத் தோதிற்
பரமாய வாசி மயநமாய் நின்றே. ௩௩

947 நின்ற எழுத்துக்கள் நோர்தரு பூதமும்
நின்ற எழுத்துக்கள் நோர்தரு வண்ணமும்
நின்ற எழுத்துக்கள் நோர்தர நின்றிடில்
நின்ற எழுத்துள்ளும் நின்றனன் தானே. ௩௮

948 நின்றது சக்கரம் நீளுடம் புவியெல்லாம்
மன்றது வாய்நின்ற மாயகன் னுடனைக்
கன்றது வாகக் கறந்தனன் நந்தியுங்
குன்றிடை நின்றிடுங் கொள்கைய னுமே. ௩௯

949 கொண்டஇச் சக்கரத் துள்ளே குணம்பல
கொண்டஇச் சக்கரத் துள்ளே குறியைந்து
கொண்டஇச் சக்கரங் கூத்தன் எழுத்தைந்துங்
கொண்டஇச் சக்கரத் துள்நின்ற கூத்தே. ௫௮

950 வெளியிவி ரேகை யிரேகையி லத்தலை
சுளியில் உகாரமாஞ் சுற்றிய வன்னி
நெளிதரு கால்கொம்பு நேர்விந்து நாதந்
தெளியும் பிரகாரஞ் சிவமந் திரமே. ௫௯

951 அகார வுகார சிகார நடுவாய்
வகாரமோ டாறும் வளியுடன் கூடிச்
சிகார முடனே சிவன்சிந்தை செய்ய
ஓகார முதல்வன் உவந்துநின் றானே. ௬௦

952 அற்ற விடத்தே அகாரம தாவது
உற்ற விடத்தே யுறுபொருள் கண்டிடச்
செற்றம் அறுத்த செழுஞ்சுடர் மெய்ப்பொருள்
குற்றம் அறுத்த பொன்போலுங் குளிகையே. ௬௧

953 அவ்வென்ற போதினில் உவ்வெழுத் தாவித்தால்
உவ்வென்ற முத்தி யுருகிக் கலந்திடும்
மவ்வென்றென் னுள்ளே வழிப்பட்ட நந்தியை
எவ்வணஞ் சொல்லுகேன் எந்தை இயற்கையே. ௬௨

954 நீரில் எழுத்திவ் வுலக ரறிவது
வானில் எழுத்தொன்று கண்டறி வாரில்லை
யாரிவ் வெழுத்தை அறிவா ரவர்கள்
ஊனில் எழுத்தை உணர்கிலர் தாமே. ௬௩

955 காலை நடுவுறக் காயத்தில் அக்கரம்
மாலை நடுவுற ஐம்பது மாவன
மேலை நடுவுற வேதம் விளம்பிய
மூலம் நடுவுற முத்திதந் தானே. ௬௪

956 காவியின் கீழது கல்ல எழுத்தொன்று
பாவிக ளத்தின் பயனறி வாரில்லை

ஓவிய ராலும் அறியவொண் ணாதது
தேவியுந் தானுந் திகழ்ந்திருந் தானே. சஉ

957 அவ்வொடு சவ்வென்ற தாலுற்ற மந்திரம்
அவ்வொடு சவ்வென்ற தாரும் அறிகிலர்
அவ்வொடு சவ்வென்ற தாரும் அறிந்தபின்
அவ்வொடு சவ்வும் அணுகிடு மாமே. சச

958 மந்திரம் ஒன்றுள் மலரால் உதிப்பது
உந்தியி னுள்ளே உதயம்பண் ணுநிற்குந்
சந்திசெய் யாநிற்பர் தாம தறிகிலர்
அந்தி தொழுதுபோ யார்த்தகன் றூர்களே. சந

959 சேவிக்கு மந்திரஞ் செல்லுந் திசைபெற
ஆவிக்குள் மந்திரம் ஆதார மாவன
பூவுக்குள் மந்திரம் போக்கற நோக்கிடில்
ஆவிக்குள் மந்திரம் அங்குச மாமே. சஎ

960 அருவினில் அம்பரம் அங்கெழு காதம்
பெருகு துடியிடை பேணிய விந்து
மருவி யகார சிகார நடுவாய்
உருவிட வூறு முறுமந் திரமே. சன

961 விந்துவும் நாதமும் மேவி யுடன்கூடிச்
சந்திர னேடே தலைப்படு மாயிடில்
அந்தர வானத் தமுதம்வந் தூறிடும்
அங்குதி மந்திரம் ஆகுதி யாமே. சஅ

962 ஆறெழுத் தோதும் அறிவார் அறிகிலர்
ஆறெழுத் தொன்றுக ஓதி உணராக்கள்
வேறெழுத் தின்றி விளம்பவல் லார்கட்கு
ஓரெழுத் தாலே உயிர்பெற லாமே. சக

963 ஓதும் எழுத்தோ டுயிர்க்கலை மூவைஞ்சும்
ஆதி எழுத்தவை ஐம்பதோ டொன்றென்பர்
சோதி எழுத்தினில் ஐயிரு மூன்றுள
நாத எழுத்திட்டு நாடிக்கொள் ளீரே. நo

964 விந்துவி லுஞ்சுழி நாதம் எழுந்திடப்
பந்தத் தலையிற் பதிறுறு கலையதாங்
கந்தர வாகரங் காலுடம் பாயிரண்
அந்தமும் இன்றியே ஐம்பத்தி தான் முயலே. நுக

965 ஐம்ப தெழுத்தே அனைத்தும்வே தங்களும்
ஐம்ப தெழுத்தே அனைத்தாக மங்களும்
ஐம்ப தெழுத்தே யுமாவ தறிந்தபின்
ஐம்ப தெழுத்தும்போய் அஞ்செழுத் தாமே. நுஉ

966 அஞ்செழுத் தாலந்து பூதம் படைத்தனன்
அஞ்செழுத் தாற்பல யோனி படைத்தனன்
அஞ்செழுத் தாவிவ் வகலிடந் தாங்கினன்
அஞ்செழுத் தாலே அமர்ந்துநின் முனே. நுங

967 வீழ்ந்தெழு லாம்விகிர் தன்திரு நாமத்தைச்
சோர்ந்தொழி யாமல் தொடங்கும் ஒருவற்குச்
சார்ந்த வினைத்துயர் போகத் தலைவனும்
போந்திடும் என்னும் புரிசடை யோனே. நுச

968 உண்ணு மருந்தும் உலப்பிலி காலமும்
பண்ணுறு கேள்வியும் பாடலு மாய்நிற்கும்
விண்ணின் றமரர் விரும்பி அடிதொழ
எண்ணின் றெழுத்தஞ்சு மாகின்ற முனே. நுஞ

969 ஐந்தின் பெருமையே அகலிட மாவதும்
ஐந்தின் பெருமையே ஆலய மாவதும்
ஐந்தின் பெருமையே யறவோன் வழக்கமும்
ஐந்தின் வகைசெயப் பாலனு மாமே. நுசு

970 வேரெழுத் தாய்விண்ணுய் அப்புற மாய்நிற்கும்
நீரெழுத் தாய்நிலந் தாங்கியும் அங்குளன்
சீரெழுத் தாய்அங்கி யாயுயி ராமெழுத்
தோரெழுத் தீசனும் ஒண்சுட ராமே. நுஎ

971 காலாம் எழுத்தேதாசை ஞாலம் உருவது
காலாம் எழுத்தினுள் ஞாலம் அடங்கிற்று

நாலாம் எழுத்தே நவிலவல் லார்கட்கு
நாலாம் எழுத்து நன்னெறி தானே. நஅ

972 இலைந்தனள் எந்திழை என்னுள மேவி
நயந்தன எங்கே நமசிவ என்னும்
பயந்தனை யோரும் பதமது பற்றும்
பெயர்ந்தனன் மற்றும் பிதற்றறுத் தேனே. நக

973 ஆமத் தினிதிருந் தன்ன மயத்தினை
ஓமத்தி லேபுதம் பண்ணும் ஒருத்தின்
நாம நமசிவ என்றிருப் பாருக்கு
சேமத் தலைவி நிலவினின் றூளே. சo

974 பட்ட பரிசே பரமஞ் செழுத்தினின்
இட்ட மறிந்திட் டிரவு பகல்வர
நட்டம தாடு நடுவே நிலயங்கொண்
டட்டதே சப்பொரு ளாகினின் றூளே. சக

975 அகாரம் உபிரே உகாரம் பரமே
மகார மலமாய் வருமூப் பதத்திற்
சிகாரஞ் சிவமாய் வகாரம் வடிவமாய்
அகாரம் உபிரென் றறையல மாமே. சஉ

976 நகார மகார சிகார நடுவாய்
வகாரம் இரண்டும் வளியுடன் கூடி
ஓகார முதற்கொண் டொருக்கால் உரைக்க
மகார முதல்வன் மனத்தகத் தானே. சந

977 அஞ்சுள வாணை அடவியுள் வாழ்வன
அஞ்சுக்கும் அஞ்செழுத் தங்குச மாவன
அஞ்சையுங் கூடத் தடுக்கவல் லார்கட்கே
அஞ்சாதி யாதி அகம்புக லாமே. சச

978 ஐந்து கலையில் அகராதி தன்னிலே
வந்த நகராதி மாற்றி மகராதி
நந்தியை மூலத்தே நாடிப் பரையொடுந்
சந்திசெய் வார்க்குச் சடங்கில்லை தானே. சஞ

979 மருவுஞ் சிவாயமே மன்னும் உபிருந்
அருமந்த போகமும் ஞானமு மாகுந்
தெருள்வந்த சிவனர் சென்றிவற் றூலே
அருள்தங்கி யச்சிவ மாவது வீடே. சுசு

980 அஞ்சுக அஞ்செழுத் துண்மை அறிந்தபின்
நெஞ்சகத் துள்ளே நிறையும் பராபரம்
வஞ்சக மில்லை மனைக்குடம் அழிவில்லை
தஞ்ச மிதுவென்று சாற்றுகின் றேனே. சுன

981 சிவாயவொ டவ்வே தெளிந்துளத் தோதச்
சிவாயவொ டவ்வே சிவனுரு வாகுஞ்
சிவாயவொ டவ்வுந் தெளியவல் லார்கள்
சிவாயவொ டவ்வே தெளிந்திருந் தாரே. சுஅ

982 சிகார வகார யகார முடனே
நகார மகார நடுவுற நாடி
ஓகார முடனே ஒருகா லுரைக்க
மகார முதல்வன் மதித்துநின் றூனே. சுக

983 நம்முதல் ஓரைந்தின் நாதங் கருமங்கள்
அம்முதல் ஐந்தில் அடங்கிய வல்வினை
சிம்முத லுள்ளே தெளியவல் லார்கட்குத்
தம்முத லாகுஞ் சதாசிவந் தானே. எ0

984 நவமுஞ் சிவமும் உபிர்பர மாகுந்
தவமொன் றிலாதன தத்துவ மாகுஞ்
சிவமொன்றி யாப்பவ ராதர வால்அச்
சிவமென்ப தாமும் எனுந்தெளி வுற்றதே. எக

985 கூடிய எட்டும் இரண்டுங் குவிந்தறி
நாடிய நந்தியை ஞானத்துள் ளேவைத்து
ஆடிய ஐவரும் அங்குற வாவர்கள்
தேடி அகனைத் தெளிந்தறி யீரே. எஉ

986 எட்டும் இரண்டும் இனிதறி கின்றிலர்
எட்டும் இரண்டும் அறியாத ஏழையர்

எட்டும் இரண்டும் இருமூன்று நான்கெனப்
பட்டது சித்தாந்த சன்மார்க்க பாதமே. எஉ

987 எட்டு வரையின்மே லெட்டு வரைகீறி
இட்ட நடுவுள் இறைவன் எழுத்தொன்றில்
வட்டத்தி லேயறை நாற்பத்தெட் டுமிட்டுச்
சிட்டஞ் செழுத்துஞ் செபிசீக் கிரமே. எக

988 தானவர் சட்டர் சதிரர் இருவர்கள்
ஆனஇம் மூவரோ டாற்றவ ராதிகள்
ஏனப் பதினைந்தும் விந்துவும் நாதமுஞ்
சேனையுஞ் செய்சிவ சக்கரந் தானே. எந

989 பட்டன மாதவ மாறும் பராபரம்
விட்டனர் தம்மை விகிர்தா கமனென்பர்
எட்டனை யாயினும் ஈசன் திறத்திறம்
ஒட்டுவன் பேசுவன் ஒன்றறி யேனே. எங

990 சிவன்முதல் மூவரோ டைவர் சிறந்த
அவைமுதல் ஆறிரண் டொன்றுடொன் றுன
அவைமுதல் விந்துவும் நாதமும் ஓங்கச்
சவைமுதல் சங்கரன் தன்பெயர் தானே. எச

991 வித்தாஞ் செகமய மாக வரைகீறி
நத்தார் கலைகள் பதிணுறு நாட்டிப்பின்
உத்தாரம் பன்னிரண் டாதி கலைதொகும்
பத்தாம் பிரம சடங்குபார்த் தோதிடே. எஅ

992 கண்டெழுந் தேன்கம லம்மல ருள்ளிடை
கொண்டொழிந் தேன்உடன் கூடிய காலத்துப்
பண்டழி யாத பதிவழி யேசென்று
நண்பழி யாமே நமவென லாமே. எக

993 புண்ணிய வானவர் பூமழை தூவினின்
றெண்ணுவர் அண்ணல் இணையடி மந்திரம்
கண்ணுவர் கண்ணி நமஎன்று நாமத்தைக்
கண்ணென உன்னிக் கலந்துநின் றூரே. அ0

994 ஆறெழுத் தாவ தாறு சமயங்கள்
ஆறுக்கு காலே இருபத்து காலென்பர்.
சாவித் திரியில் தலையெழுத் தொன்றுள
தேதிக்க வல்லார் பிறவியற் றார்களே. அக

995 எட்டினில் எட்டறை யிட்டோடா றறையிலே
கட்டிய ஒன்றெட்டாய்க் காண நிறையிட்டுச்
சுட்டி இவற்றைப் பிரணவஞ் சூழ்ந்திட்டு
மட்டும் உயிர்கட் குமாபதி யாணுண்டே. அஉ

996 கம்முதல் அவ்வொடு காவின ராகியே
அம்முத லாகிய எட்டிடை யுற்றிட்டு
உம்முத லாகவே உணர்பவர் உச்சிமேல்
உம்முத லாயவன் உற்றுநின் றானே. அஊ

997 நின்ற அரசம் பலகைமேல் நேராக
ஒன்றிட மவ்விட்டு ஓலையிற் சாதகந்
துன்று மெழுகையுள் பூசிச் சுடரிடைத்
தன்ற வெதுப்பிடத் தம்பனங் காணுமே. அஎ

998 காண விறளிப் பலகை யடன்றிசை
மரணமிட் டெட்டின் மகார வெழுத்திட்டு
வரணமி லெங்காயம் பூசி யடுப்பிடை
மூரணிற் புதைத்திட மோகன மாகுமே. அஏ

999 ஆங்கு வடமேற்கில் ஐயனர் கோட்டத்திற்
பாங்கு படவே பலாசப் பலகையிற்
காங்கரு மேட்டிற் கடுப்பூசி விந்துவிட்
டோங்காமல் வைத்திடும் உச்சா டனத்துக்கே. அஐ

1000 உச்சியம் போதில் ஒளிவன்னி மூலையிற்
பச்சோலை யிற்பஞ்ச காயத்தைப் பாரித்து
மூச்சது ரத்தின் முதுகாட்டில் வைத்திட
அச்சமற மேலோர் மாரணம் வேண்டிலே. அன

1001 எப்ப வரிகார மேட்டின்மே லேபூசி
எப்ப வகாரம் உகாரம் எழுத்திட்டு
வாய்ந்தேதார் வில்லம் பலகை வசியத்துக்
கேய்ந்தவைத் தெண்பதி ணுபிரம் வேண்டிலே. அ

1002 எண்ணைக் கருடனை எட்டின் உகாரமிட்
டென்ணைப் பொன்னெளி எழுவெள்ளி பூசிடா
வெண்ணைவற் பலகைபி லிட்டுமேற் கேகோக்கி
எண்ணை வெழுத்தாடென் ணுபிரம் வேண்டிலே.

82. அருச்சனை

1003 அம்புய நீலங் கழுநீ ரணிநெய்தல்
வம்பவிழ் பூகமும் மாதவி மந்தாரந்
தும்பை வகுளஞ் சுரபுன்னை மல்லிகை
சென்பகம் பாதிரி செவ்வந்தி சாத்திடே. க

1004 சாங்கம தாகவே சந்தொடு சந்தனந்
தேங்கமழ் குங்குமங் கர்ப்பூரங் காரகிற்
பாங்கு படப்பனி நீராற் குழைத்துவைத்
தாங்கே அணிந்துநீர் அர்ச்சிபும் அன்பொடே. உ

1005 அன்புட னேநின் றழுதகமும் எற்றியே
பொன்செய் விளக்கும் புகைதீபந் திசைதோறுந்
துன்பம் அகற்றித் தொழுவோர் நினையுங்கால்
இன்புட னேவந் தெய்திடும் முத்தியே. ங

1006 எய்தி வழிப்படில் எய்தா தனவில்லை
எய்தி வழிப்படில் இந்திரன் செல்வமுன்
எய்தி வழிப்படில் எண்சித்தி உண்டாகும்
எய்தி வழிப்படில் எய்திடும் முத்தியே. ச

1007 நண்ணும் பிறதார நீத்தார் அவித்தார்
மண்ணிய நைவேத் தியமது சந்தான
நண்ணிய பஞ்சாங்க நண்ணுஞ் செபமென்னு
மன்னு மனபவ னத்தொடு வைகுமே. ஞ

1008 வேண்டார்கள் கன்மம் விமலனுக் காட்பட்டோர்
வேண்டார்கள் கன்ம மதிலிச்சை யற்றபேர்
வேண்டார்கன் கன்மம் மிகுசிவ யோகிகள்
வேண்டார்கள் கன்மம் மிகுதியோ ராய்ந்தன்பே. சூ

1009 அறிவரு ஞானத் தெவரும் அறியார்
பொறிவழி தேடிப் புலம்புகின் றூர்கள்
நெறிமின யுள்ளே நிலைபெற நோக்கில்
எறிமணி யுள்ளே இருக்கலு மாமே. எ

1010 இருளரம் வெளியும்போல் இரண்டாம் இதய
மருளறி யாமையும் மன்னு மறிவு
மருளினை விட்டறி யாமை மயங்கு
மருளஞ் சிதைத்தோ ரவர்களா மன்றே. அ

1011 தானவ ளாக அவனோதா னுயிட
ஆன இரண்டில் அறிவன் சிவமாகப்
போனவ னன்பிது காலாம் மரபுறத்
தானவ ளுகுமோ ராசித்த தேவரே. கூ

1012 ஓங்கார மூந்திக்கிழ் உற்றிடும் எங்காரம்
நீங்கா வகாரமும் நீள்கண்டத் தாயிடும்
பாங்கார் நகாரம் பயில்நெற்றி புற்றிடும்
வீங்காகும் விந்துவும் நாதமே லாகுமே. கஅ

1013 நமவது வாசன மான பசுவே
சிவமது சித்திச் சிவமாம் பதியே
நமவற வாதி நாடுவ தன்றுஞ்
சிவமாகு மாமோனஞ் சேர்தல்மெய் வீடே. கக

1014 தெளிவரு நாளிற் சிவஅழு தூறும்
ஒளிவரு நாளில் ஓரொட்டில் உகளும்
ஒளிவரும் அப்பதத் தோரிரண் டாகில்
வெளிதரு நாதன் வெளியாய் இருந்தே. கஉ

83. நவகுண்டம்

1015 நவகுண்ட மானவை நாலுரை செய்யின்
நவகுண்டத் துள்ளெழு நற்றீபந் தானும்
நவகுண்டத் துள்ளெழு நன்மைகள் எல்லாம்
நவகுண்ட மானவை நாலுரைப் போனே. க

1016 உரைத்திடுங் குண்டத்தின் உள்ளேழுக் காலும்
நகைத்தெழு நாற்கோண நன்மைகள் ஐந்தும்
பகைத்திடு முப்புரம் பாரங்கி யோடே
மிகைத்தெழு கண்டங்கள் மேலறி யோமே. உ

1017 மேலறிந் துள்ளே வெளிசெய்த வப்பொருள்
காலறிந் துள்ளே கருத்துற்ற செஞ்சுடர்
பாரறிந் தண்டஞ் சிறகற நின்றது
நானறிந் துள்ளே நாடிக்கொண் டேனே. ங

1018 கொண்டஇக் குண்டத்தின் உள்ளெழு சோதியாய்
அண்டங்கள் ஈரேழு மாக்கி அழிக்கலாம்
பண்டையுள் வேதம் பரந்த பரப்பெலாம்
இன்றுசொல் நூலாய் எடுத்துரைத் தேனே. ச

1019 எடுத்தவக் குண்டத் திடம்பதி னுறிற்
பதித்த கலைகளும் பாலித்து நிற்குங்
கதித்தனல் உள்ளெழுக் கண்டுகொள் வார்க்கே
கொதித்தெழும் வல்வினை கூடகி லாவே. ஞ

1020 கூடமுக் கூடத்தின் உள்ளெழு குண்டத்துள்
ஆடிய ஐந்தும் அகம்புறம் பாய்நிற்கும்
பாடிய பன்னீ ரிராசியும் அங்கெழு
நாடிக்கொள் வார்கட்கு நற்சுடர் தானே. ட

1021 நற்சுட ராகுஞ் சிரமுக வட்டமாங்
கைச்சுட ராகுங் கருத்துற்ற கைகளிற்
பைச்சுடர் மேனி பதைப்புற் றிலிங்கமும்
நற்சுட ராமெழு கல்லதென் னுளே. எ

1022 கல்லெதன் முனை நடைக்குற்ற காயகந்
சொல்லெதன் முனை சுடர்முடி பாதமா •
டெல்லைதின் முனை வினவகில் லாதவர்
கல்லெதன் முனையுங் கற்றுமின் னனை. அ

1023 வின்னை விளம்பிறை மேவிய குண்டத்துக்
சொன்னெல் இரண்டுந் சுடர்காகந் திக்கெங்கும்
பன்னெடு காகம் பரந்த பரந்சுடர்
என்னைகத் துள்ளை இடங்கொண்ட வாறே. கூ

1024 இடங்கொண்ட பாதம் எழுற்சுட ரேக
கடங்கொண்ட பாதங்கள் கன்னி தற்குச்
சகங்கொண்ட னைகிரன் டாறுக் கனைழப்ப
முகங்கொண்ட செந்சுடர் முக்கனை னுக்கே. கo

1025 முக்கணன் முனை முழுச்சுட ராயவன்
அக்கணன் முனை அகிலமும் உண்டவன்
திக்கனை னுகித் திகையெட்டிங் கண்டவன்
எக்கணன் முனுக்குடம் எக்தை பிரானே. கக

1026 எக்தை பிரானுக் கிருமூன்று வட்டமாய்த்
தக்ததன் முன்னை சண்முகத் தோன்றலாற்
கக்தன் சுவாமி கலக்தங் கிருத்தலான்
மைக்தன் இவனென்று மாட்டிக்கொள் ளீரே. கஉ

1027 மாட்டிய குண்டத்தின் உள்ளெழு மேகத்துள்
ஆட்டிய காலொன்றும் இரண்டும் அலர்ந்திடம்
வாட்டிய கையிரண் டொன்று பணைத்தெழு
கோட்டுஞ் சுரிவர் கல்லிலாளி காளை. கஎ

1028 கல்லிலாளி யாக கடைத்துல கெங்குங்
கல்லிலாளி யாகக் கலக்துள் இருந்திடம்
சொல்லிலாளி யாகத் தொடர்ந்த உயிர்க்கெலாங்
கல்லிலாளி கண்ணுறு மாகின்ன முனை. கஅ

1029 நின்றனிக் குண்டடம் நிலையாறு கோணமாய்ப்
பண்ணடையில் வட்டம் பணைத்தெழு மாமுறங்

கொண்டஇத் தத்துவம் உள்ளே கலந்தெழ
விண்ணுறை நாதம் என்ன எதிக்கலு மாமே. கஙு

1030 எடுக்கின்ற பாதங்கண் மூன்ற தெழுத்தைக்
கடுத்த முகம்இரண் டாறுகண் ணைகப்
படுத்தெண் ணுநா வெழுகொம்பொரு நாலும்
அடுத்தெழு கண்ணன தந்தமி லாற்கே. கசு

1031 அந்தமில் லானுக் ககலிடந் தானில்லை
அந்தமில் லானை அளப்பவர் தாமில்லை
அந்தமில் லானுக் கடுத்தசொற் றுணில்லை
அந்தமில் லானை அறிந்துகொள் பத்தே. கஎ

1032 பத்திட்டங் கெட்டிட் டாறிட்டு நாலிட்டு
மட்டிட்ட குண்டம் மலர்ந்தெழு தாமரை
கட்டிட்டு நின்று கலந்தமெய் யாகமும்
பட்டிட்டு நின்றது பார்ப்பதி பாலே. கஅ

1033 பார்ப்பதி பாகன் பரந்தகை நாலஞ்சு
காற்பதி பத்து முகம்பத்துக் கண்களும்
பூப்பதி பாதம் இரண்டு சுடர்முடி
நாற்பது சோத்திரம் நல்லிரு பத்தஞ்சே. கக

1034 அஞ்சிட்ட கோலம் அளப்பன ஐயைந்தும்
மஞ்சிட்ட குண்ட மலர்ந்தங் கிருத்தலால்
பஞ்சிட்ட சோதி பரந்த பரஞ்சுடர்
கொஞ்சிட்ட வன்னியைக் கூடுதன் முத்தியே. உ0

1035 முத்திநற் சோதி முழுச்சுட ராயவன்
கற்றற்று நின்றூர் கருத்துள் இருந்திடும்
பற்றற நாடிப் பரந்தொளி யூடுபோய்ச்
செற்றற் றிருந்தவர் சேர்ந்திருந் தாரே. உக

1036 சேர்ந்த கலையஞ்சுஞ் சேருமிக் குண்டமும்
ஆர்ந்த திசைகளும் அங்கே அமர்ந்திடும்
பாய்ந்தஐம் பூதமும் பார்க்கின்ற வன்னியைக்
காய்ந்தவர் என்றுங் கலந்தவர் தாமே. உஉ

1037 மெய்கண்ட மாம்விரி நீருல கேழையும்
உய்கண்டஞ் செய்த ஞாநவீனச் சேநமின்
செய்கண்ட ஞானந் திருந்திய தேவர்கள்
பொய்கண்டம் இல்லாப் பொருள்கலக் காசே. உக

1038 கலந்திரு பாதம் இருகர மாகு
மலர்ந்திரு குண்ட மகாரத்தோர் மூக்கு
மலர்ந்தெழு செம்முக மற்றைக்கண் நெற்றி
உணர்ந்திரு குஞ்சியங் குக்கட மைக்கே. உச

1039 உத்தமன் சோதி உளதினொ ருபாலைப்
மத்திம ரூகி மலர்ந்தங் கிருந்திடம்
பச்சிம திக்கும் பரந்து குழிந்தன
சத்திமா ரூகத் தழைத்த கொடியே. உஙி

1040 கொடியா றுசென் றுகுலாவிய குண்டம்
அடியிரு கோணமாய் அந்தமும் ஒக்கும்
படியே முலகும் பரந்த சடைபை
மடியாது கண்டவர் மாதன மாமே. உசு

1041 மாதன மாக வளர்கின்ற வண்ணியைச்
சாதன மாகச் சமைந்த குருவென்று
போதன மாகப் பொருந்த உலகாளும்
பாதன மாகப் பரிந்தது பார்க்கே. உஎ

1042 பார்த்திடம் எங்கும் பரந்தெழு சோதியை
ஆத்தும காகவே யாய்ந்தறி வாரில்லை
காத்துட லுள்ளே கருதி இருந்தவர்
மூத்துடல் கோடி யுகங்கண்ட வாறே. உஅ

1043 உகங்கண்ட ஒன்பது குண்டமும் ஒக்க
அகங்கண்ட யோகியுள் நாடி எழுப்பும்
பயங்கண்டு கொண்டஇப் பாய்கரு வொப்பச்
சகங்கண்டு கொண்டது சாதன மாமே. உக

1044 சாதனை நாலு தழல்மூன்று வில்வயம்
வேதனை வட்டம் விளையாறு பூநிலை
போதனை போனைதஞ்சு பொற்கய வாரண
நாதனை நாடு நவகோடி தானே. ௫

84. சத்திபேதம் – திரிபுரை சக்கரம்

1045 மாமாயை மாயை வயிந்தவம் வைகரி
ஓமாயை உள்ளொளி ஓராறு கோடியில்
தாமான மந்திரஞ் சத்திதன் மூர்த்திகள்
ஆமா யலவாந் திரிபுரை யாங்கே. ௬

1046 திரிபுரை சுந்தரி அந்தரி சிந்துரப்
பரிபுரை நாரணி யாம்பல வன்னத்தி
இருள்புரை ஈசி மகேஸ்மனி என்ன
வருபல வாய்நிற்கு மாமாது தானே. ௭

1047 தாரு அமைந்தவம் மூப்புரந் தன்னிடைத்
தானை மூவுரு வோருருத் தன்மையள்
தானை பொன்செம்மை வெண்ணிறத் தாள்கல்வி
தானை போகமும் முத்தியும் நல்குமே. ௮

1048 நல்குந் திரிபுரை நாதநா தாந்தங்கள்
பல்கும் பரவிந்து பாரண்ட மானவை
நல்குஞ் பரைஅபி ராமி அகோசரி
புல்கு மருளுமப் போதந்தந் தாளுமே. ௯

1049 தாளணி நூபுரஞ் செம்பட்டுத் தாணுடை
வாரணி கொங்கை மலர்க்கன்னல் வாளிவில்
ஏரணி அங்குச பாசம் எழில்மூடி
காரணி மாமணிக் குண்டலக் காதிக்கே. ௰

1050 குண்டலக் காதி கொலைவிற் புருவத்தள்
கொண்ட வரத்த நிறமன்னு கோலத்தள்
கண்டிகை யாரங் கதிர்முடி மாமதிச்
சண்டிகை நாற்றிசை தாங்கிநின் றாளே. ௱

1051 நின்ற திரிபுரை நீளரும் புராதனி
குன்றலில் மோகினி மாதிருக் குஞ்சிகை
கன்றறி கண்டிகை நாற்காற் கரீடணி
துன்றிய கற்சுத்த காமரைச் சுத்தையே. எ

1052 சுத்தவம் பாரத் தனத்தி சுகோதயள்
வத்துவ மாயா ரூபாசத்தி மாபரை
அத்தகை யாவும் அறிணரணி தாணுமாய்
வைத்தவக் கோல மதியவ ளாகுமே. அ

1053 அவளை யறியா அமரரும் இல்லை
அவளன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை
அவளன்றி ஐவரால் ஆவதொன் றில்லை
அவளன்றி யூர்புகு மாறறி யேனே. கூ

1054 அறிவார் பராசத்தி ஆனந்தம் என்பர்
அறிவா ரருவுரு வாமவள் என்பர்
அறிவார் கருமம லவளிச்சை என்பர்
அறிவார் பரனு மவளிடத் தானே. கo

1055 தானெங் குளனங் குளதையன் மாதேவி
ஊனெங் குள அங் குள்ளுயிர்க் காவலன்
வானெங் குள அங் குளேவந்து மப்பாலாம்
கோனெங்கும் நின்ற குறிபல பாரே. கக

1056 பராசத்தி மாசத்தி பல்வகை யாலுங்
தராசத்தி யாய்நின்ற தன்மை புணராய்
உராசத்தி ஊழிகள் தோறும் உடனே
புராசத்தி புண்ணிய மாகிய போகமே. கஉ

1057 போகஞ்செய் சத்தி புரிகுழ லாளொடும்
பாகஞ்செய் தாங்கே பராசத்தி யாய்நிற்கும்
ஆகஞ்செய் தாங்கே அடியவர் நாள்தொறும்
பாகஞ்செய் ஞானம் படர்கின்ற கொம்பே. கங

1058 கொம்பனை யாளைக் குவிமுலை மங்கையை
வம்பவிழ் கோதையை வானவர் நாடியைச்

சம்பவ னத்திரு மேனிச் சிறுமியை
நம்பிதான் உள்னே நயந்துவைத் தேனை. கக

1059 வைத்த பொருளும் மருவுயிர்ப் பன்மையும்
பத்து முகமும் பரையும் பராபரைச்
சித்தக் கரணச் செயல்களுஞ் செய்திடுஞ்
சத்தியும் வித்தைத் தலையவ ளாமே. கஙு

1060 தலைவி தடமுலை மேல்நின்ற னையல்
தோலைவில் தவஞ்செயுந் தாய்நெறித் தோகை
கலைபல வென்றிடுங் கன்னியென் உள்ளம்
நிலைபெற இங்கே நிறைந்துநின் றாளை. கஙூ

1061 நின்றவள் நேரிழை நீள்கலை யோடுற
என்றன் அகம்படிந் தேதழுல குந்தாழ
மன்றது வொன்றி மலைன்மனி மங்கலி
ஒன்றெலை டொன்றிநின் றெத்தடைந் தாளை. கஙு

1062 ஓத்தடங் குங்கம லத்திடை யாயிழை
அத்தகை செய்கின்ற வாய பெருமபதி
மத்தடை கின்ற மலைன்மனி மங்கலி
சித்தடைக் குமவழி தேர்ந்துணை ராள்களை. கஙு

1063 உணர்ந்துட னேநிற்கும் உள்ளொளி யாகி
மணங்கமழ் பூங்குழல் மங்கையுந் தானும்
புணர்ந்துட னேநிற்கும் போதருங் காலைக்
கணிந்தெழு வார்க்குக் கதியளிப் பாளை. கஙூ

1064 அளியொத்த பெண்பிள்ளை ஆனந்த சுந்தரி
புளியுறு புன்பழம் போலுள்ளை நோக்கித்
தெளியுறு வித்துச் சிவகதி காட்டி
ஒளியுற வைத்தென்னை உய்யவுண் டாளை. உ0

1065 உண்டில்லை என்ற துருச்செய்து நின்றது
வண்டில்லை மன்றினுள் மன்னி நிறைந்தது
கண்டிலர் காரண காரணி தம்மொடு
மண்டல மூன்றுற மன்னினின் றாளை. உக

1066 நின்ற ளவன்கன் உடலும் உயிருமாய்ச்
சென்றுள் கிவகதி சேரும் பராசத்தி
ஒன்றுக என்னுட் புகுந்துணர் வாகியே
நின்றுள் பரஞ்சுடர் ஏடங்ணை யாளே. ௨௨

1067 ஏடங்ணை நங்ணை இறைளங்கள் முக்கண்ணி
வேடம் படிகம் விரும்பும்வெண் தாமரை
பாடுந் திருமுறை பார்ப்பதி பாதங்கள்
சூடுமின் சென்னிவாய்த் தோத்திரஞ் சொல்லுமே.

1068 தோத்திரஞ் செய்து தொழுது துணையடி
வாய்த்திட வத்தி வழிபடு மாறிரும்
பார்த்திடு மங்குச பாசம் பசுங்கரும்
பார்த்திடும் பூம்பிள்ளை யாகுமாம் ஆதிக்கே. ௨௪

1069 ஆதி விக்மிருத் தண்டடுத்த மால்தங்ணை
நீதி மலரின்மேல் நேரிழை நாமத்தைப்
பாதியில் வைத்துப் பல்காற் பயில்விரேல்
சோதி மிருத்துமுக் காலமுங் தோன்றுமே. ௨௫

1070 மேதாதி ஈரெட்டு மாகிய மெல்லியல்
வேதாதி நூலின் விளங்கும் பராபரை
ஆதார மாகியே ஆய்ந்த பரப்பினள்
நாதாதி நாதத்து நல்லரு ளாளே. ௨௬

1071 அருள்பெற் றவர்சொல்ல வாரீர் மனிதர்
பொருள்பெற்ற சிந்தைப் புவரை பதியார்
மருளுற்ற சிந்தையை மாற்றி யருமைப்
பொருளுற்ற சேவடி போற்றுவன் நானே. ௨௭

1072 ஆன வராக முகத்தி பதத்தினள்
ஈன வராகம் இடிக்கும் முசலத்தோ
டேனை யுழுபடை ஏந்திய வெண்ணைகை
ஊன மறவுணர்ந் தாருள த் தோங்குமே. ௨௮

1073 ஓங்காரி என்பா ளவளொரு பெண்பிள்ளை
நீங்காத பச்சை நிறத்தை யுடையவள்
ஆங்காரி யாகியே ஐவரைப் பெற்றிட்டு
ரீங்காரத் துள்ளே யினிதிருந் தாளே. உக

1074 தானே தலைவி யெனநின்ற தற்பரை
தானே யுயிர்வித்துத் தந்த பதிலுலும்
வானோர் தலமும் மனமும்நற் புத்தியுந்
தானே சிவகதி தன்மையு மாமே. உஎ

85. வயிரவி மந்திரம்

1075 பன்னிரண் டாங்கலை யாதி பயிரவி
தன்னில் அகாரமு மாயையுங் கற்பித்துப்
பன்னிரண் டாதியோ டந்தம் பதிலுலுஞ்
சொன்னிலை சோடச மந்தமென் றோதிடே. ஏ

1076 அந்தம் பதிலுலும் அதுவே வயிரவி
மூந்து நடுவும் முடிவு முதலாகச்
சிந்தைக் கமலத் தெழுகின்ற மாசத்தி
அந்தமும் ஆதியு மாகிநின் றாளே. ஐ

1077 ஆகின்ற மூவரும் அங்கே அடங்குவர்
போகின்ற பூதம் பொருந்து புராதரர்
சார்கின்ற சார்வுழிச் சாரார் சதிர்பெறப்
போகுந் திரிபுரை புண்ணியத் தோரே. ஒ

1078 புண்ணிய நந்தி புனிதன் திருவாகும்
எண்ணிய நாட்கள் இருபத்தேழ் சூழ்மதி
பண்ணிய வன்னி பகலோன் மதியீறு
திண்ணிய சிந்தைதன் தென்னனு மாமே. ஓ

1079 தென்னன் திருநந்தி சேவகன் தன்னெடும்
பொன்னங் கிரியிற் பூதலம் போற்றிடும்
பன்னும் பரிபிடி யந்தம் பகவனே
டுன்னுந் திரிபுரை ஓதிநின் றூணுக்கே. ஔ

1080 ஓதிய நந்தி உணருந் திருவருள்
நீதியில் வைத நெறிவந் துரைசெய்புடம்
போதம் இருபத் தெழுநான் புணர்மதி
சோதி வயிரவி சூலம்வந் தாளுமே. சூ

1081 சூலங் கபாலங்கை ஏந்திய சூலிக்கு
காலாங் கரமூல காகபா சாங்குச
மாலங் கயனறி யாத வடிவுக்கு
மேலங்க மாய்நின்ற மெல்லிய லாளே. எ

1082 மெல்லியல் வஞ்சி விடமி கலைஞானி
சொல்லிய கிஞ்சுக நிறமன்று சேயிழை
கல்லியல் ஒப்பது காணுங் திருமேனி
பல்லிய லாடையும் பன்மணி தானே. அ

1083 பன்மணி சந்திர கோடி திருமுடி
சொன்மணி குண்டலக் காதி புழைக்கண்ணி
நன்மணி சூரிய சோம நயனத்தள்
பொன்மணி வன்னியும் பூரிக்கின் றாளே. கூ

1084 பூரித்த பூவிதழ் எட்டிணைக் குள்ளேயோர்
ஆரியத் தாளெண்டடங் கெண்மர் கன்னியர்
பாரித்த பெண்கள் அறுபத்து நால்வருந்
சாரித்துச் சத்தினைத் தாங்கள்கண் டாரே. கo

1085 கண்ட சிலம்பு வளைசங்கு சக்கரம்
எண்டிசை யோகி இறைவி பராசத்தி
அண்டமொ டெண்டிசை தாங்கும் அருட்செல்வி
புண்டரி கத்தினுட் பூசனை யாளே. கக

1086 பூசனை கந்தம் புனைமலர் மாகோடி
யோசனை பஞ்சத் தொலிவந் துரைசெய்யும்
வாசமி லாத மணிமந் திரயோகந்
தேசந் திகழுந் திரிபுரை காணே. கஉ

1087 காணும் பலபல தெய்வங்கள் வெவ்வேறு
பூணும் பலபல பொன்போலத் தோற்றிடும்

நீடவுந்த சிவனும் பிரமனும் மாபவுங்
காடவுந் தலிலிநற் காரணி காணே. ௯

1088 காரணி மந்திரம் ஓதுங் கமலத்துப்
பூரண கும்ப விதேசம் பொருந்திய
காரணி கந்தி கடிவங் குரைசெய்த
ஆரண வேதநூல் அந்தமு மாமே. ௯௮

1089 அந்த கதிவிரல் ஆதி சிறுவிரல்
வந்த வழிமுறை மாறி யுரைசெய்புஞ்
செந்தமி ழாதி தெளிந்து வழிபடு
கந்தி இதனை கவழுரைத் தானே. ௯௯

1090 உரைத்த கவசத்தி ஒன்று முடிய
நிரைத்த விராகி நெடுமுறை எண்ணிப்
பிரைச்சகம் எட்டுமுன் பேசிய கந்தி
நிரைத்து நியதி நியமஞ்செய் தானே. ௯௰

1091 காமக் குழலி கணைக்கண்ணி உள்நின்ற
சேமத் திருளற வீசும் இளங்கொடி
ஓமப் பெருஞ்சுடர் உள்ளெழு நுண்புகை
சேமித் தழுதெரு மீண்டது காணே. ௯௧

1092 காணும் இருதய மந்திர முங்கண்டு
பேணு கமமென்று பேசுந் தலைமேலே
வேணு கடிவு மிகநின்ற வாகுதி
பூணு கடுவென்ற வந்தஞ் சிகையே. ௯௨

1093 சிகைநின்ற வந்தக் கவசங்கொண் டாதிப்
பகைநின்ற வங்கத்தைப் பாரென்று மாறித்
தொகைநின்ற நேத்திர மூத்திரை சூலம்
வகைநின்ற யோனி வருத்தலு மாமே. ௯௩

1094 வருத்த மிரண்டுந் சிறுவிரன் மாறிப்
பொருத்தி அணிவிரற் சுட்டிப் பிடித்து
நெரித்நொன்ற வைத்து நெடிது கடிவே
பெருத்த விரலிரண் டுள்புக்குப் பேசே. ௯௪

1095 பேசிய மந்திரம் இகாரம் பிரித்துரை
கூசமி லாத சகாரத்தை முன்கொண்டு
வாசிப் பிரானன் உபதேச மாகைக்குக்
கூசிய விந்து வுடன்கொண்டு கூவே. உக

1096 கூவிய சிவன் பிரானன் முதலாகப்
பாவிய சவ்வுடன் பண்ணும் யகாரத்தை
மேவிய மாயை விரிசங்கு முத்திரை
தேவி கருவுள் திகழ்ந்துநின் றூளே. உஉ

1097 நின்ற வயிரவி நீலி நிசாசரி
ஒன்றும் இரண்டும் ஒருங்கிய உள்ளத்துச்
சென்றருள் காயகி தேவர் பிரானுக்கே
கன்றருள் ஞாலத்து காடுடுந் சாற்றியே. உங

1098 சாற்றிய வேதஞ் சராசரம் ஐம்பூதம்
காற்றினை முக்கண்ணி காடும் இருள்வெளி
தோற்றும் உயிர்ப்பன்மை சோதி பராபரை
ஆற்றலொ டாய்ந்நிற்கும் ஆதி முதல்வியே. உச

1099 ஆதி வயிரவி கன்னித் துணைமன்னி
ஓதி புணரில் உடலுயிர் ஈசனும்
பேதை உலகிற் பிறவிகள் காசமாம்
ஓத வுலவாத கோலமொன் றுகுமே. உருு

1100 கோலக் குழலி குலாய புருவத்தள்
நீலக் குவளை மலரன்ன கண்ணினுள்
ஆலிக்கும் இன்னமு தானந்த சுந்தரி
மேலைச் சிவத்தை வெளிப்படுத் தாளே. உசு

1101 வெளிப்படு வித்து விளைவறி வித்துத்
தெளிப்படு வித்தென் சிந்தையு ளுள்ளே
களிப்படு வித்துக் கதிர்ப்படு சோதி
ஒளிப்படு வித்தென்னை உய்யக்கொண் டாளே. உஎ

1102 கொண்டனள் கோலங் கோடி அனேகங்கள்
கண்டனள் எண்ணெண் கலையின்கண் மாலைகள்

விண்டனள் தேவிலி விரிகதிர் மூன்றையுங்
கண்டவி மேல்நின்று கையல்நல் லாளை. உஅ

1103 கையல்நல் லாளைத் தவத்தின் தலைவியை
மையலி னோக்கும் மீனன்மனி மங்கையைப்
பையநின் றேத்திப் பணிமின் பணிந்தபின்
வெய்ய பவமினி மேவகி லாவே. உக

1104 வேயன தோளி விளைபுறு மென்மலர்
ஏய குழலி இளம்பிறை யந்திழை
தூய சடைமுடிச் சூலினி சுந்தரி
ஏயென துள்ளத் தினிதிருந் தாளே. உ0

1105 இனியவி தன்மூலை இருக்குங் குமரி
தனியொரு நாயகி தானை தலைவி
தனிப்படு வித்தனள் சார்வு படுத்து
தனிப்படு வித்துள்ளம் நாடிநின் றூளே. உக

1106 நாடிகள் மூன்று நடுவெழு ஞாளத்துக்
கூடி இருந்த குமரி குலக்கன்னி
பாடகச் சீறடிப் பைம்பொற் சிலம்பொலி
ஊடக மேவி உறங்குகின் றூளை. உஉ

1107 உறங்கு மளவின் மனீனன்மனி வந்து
கறங்கு வளைக்கைக் கழுத்தாரப் புல்லிப்
பிறங்கொளித் தம்பலம் வாயில் உமிழ்ந்திட்
டிறங்கலை யாவென் றுபாயஞ்செய் தாளே. உங

1108 உபாயம் அளிக்கும் ஒருத்தியென் உள்ளத்
தபாயம் அறக்கெடுத் தன்பு விளைத்துச்
சுவாலை விளக்குஞ் சுழியகத் துள்ளே
அவானை அடக்கிவைத் தஞ்சலென் றூளே. உச

1109 அஞ்சொல் மொழியாள் அருந்தவப் பெண்பிள்ளை
செஞ்சொல் மடமொழி சீருடைச் சேயிழை
தஞ்சமென் றெண்ணித்தன் சேவடி போற்றுவார்க்
கின்சொல் அளிக்கும் இறைவியென் றூரே. உஞ

1110 ஆருயி ராயும் அருந்தவப் பெண்பிள்ளை
காரியல் கோதையள் காரணி காரணி
ஊரும் உயிருடம் உலகும் ஓதிக்கிடங்
கோரியென் உள்ளங் குலாவினின் றூளே. ௧௬

1111 குலாவிய கோலக் குடரியென் னுள்ளம்
நிலாவி யிருந்து நெடுநாள் அணைந்துடம்
உலாவி இருந்துணர்ந் துச்சியி னுள்ளே
கலாவி யிருந்த கலைத்தலை யாளே. ௧௭

1112 கலைத்தலை நெற்றியோர் கண்ணுடைக் கண்ணுள்
மூலைத்தலை மங்கை முயங்கி இருக்குஞ்
சிலைத்தலை யாய தெரிவினை நோக்கி
அலைத்தபூங் கொம்பினள் அங்கிருந் தாளே. ௧௮

1113 இருந்தனள் ஏந்திழை என்னுள்ள மேவிப்
பொருந்திய நால்விரல் புக்கனள் புல்லித்
திருந்திய தாணுவிற் சேர்ந்துடன் ஒன்றி
அருந்தவ மெய்தினள் ஆதியி னூளே. ௧௯

1114 ஆதி யனாதி யகாரணி காரணி
சோதிய சோதி சுகபர சுந்தரி
மாது சமாதி மனோன்மணி மங்கலி
ஓதியென் னுள்ளத் துடனினை யாளே. ௨0

1115 இணைந்தனள் ஏந்திழை என்னுள்ள மேவி
நயந்தனள் அங்கே நமசிவ என்னும்
அயன்தனை யோரும் பதமது பற்றும்
பெயர்ந்தனள் மற்றும் பிதற்றறுத் தாளே. ௨௧

1116 பிதற்றிக் கழிந்தனர் பேதை மனிதர்
முயற்றியின் முத்தி அருளும் முதல்வி
கயற்றிகழ் முக்கண் ணுங் கம்பலைச் செவ்வாய்
முகத்தருள் நோக்கமும் முன்னுள்ள தாமே. ௨௨

1117 உள்ளத் திதயத்து நெஞ்சத் தொருமூன் றுள்
பிள்ளைத் தடமுள்ளே பேசப் பிறந்தது

வள்ளற் றிருவின் வயிற்றினுள் மாமாயைக்
கள்ள வுளியின் கருத்தாகுங் கன்னியே. சஎ

1118 கன்னியுங் கன்னி அழிந்திலள் காதலி
துன்னியுங் கைவரைப் பெற்றனள் தூய்மொழி
பன்னிய நன்னூற் பகவரும் அங்குள
ரன்னை இம் மாயை இருளது தானே. சஅ

1119 இருளது சத்தி வெளியது தம் அண்ணல்
பொருளது புண்ணியர் போகத்துள் இன்பம்
தெருளது சிந்தையைத் தெய்வமென் றெண்ணில்
அருளது செய்யுமன்னம் ஆதிப் பிரானே. சஏ

1120 ஆதி அனுதியும் ஆய பராசத்தி
பாதி பராபரை மேலுறை பைந்தொடி
மாது சமாதி மனோன்மணி மங்கலி
ஓதுமென் னுள்ளத் துடன்முகிழ்த் தாளே. சஐ

1121 ஓதிய வண்ணங் கலையின் உயர்கலை
ஆதியில் வேதமே யாமென் றறிகிலர்
சாதியும் பேதமுந் தத்துவ மாய்நிற்பள்
ஆதியென் றோதினள் ஆவின் கிழத்தியே. சன

1122 ஆவின் கிழத்திகல் லாவடு தண்டுறை
நாவின் கிழத்தி கலம்புகழ்ந் தேத்திடுந்
தேவின் கிழத்தி திருவாஞ் சிவமங்கை
மேவுங் கிழத்தி விளைகடிந் தாளே. சஒ

1123 விளைகடிந் தாருள்ளத் துள்ளொளி மேவித்
தினையடைந் தோர்க்கெல்லாந் தத்துவ மாய்நிற்பள்
எனையடி மைக்கொண்ட வந்திழை ஈசன்
கணவனைக் காண அனுதியு மாமே. சகூ

1124 ஆதி அனுதி அகாரணி காரணி
வேதம தாய்ந்தனள் வேதியர்க் காய்நின்று
சோதி தனிச்சுடர் சொரூப மாய்நிற்கும்
பாதி பராபரை பன்னிரண் டாதியே. நூ

1125 அளந்தேன் அகலிடத் தந்தமும் ஈறும்
அளந்தேன் அகலிடத் தாதிப் பிராணை
அளந்தேன் அகலிடத் தாவெணு பெண்ணும்
அளந்தேன் அவனருள் ஆய்ந்துணர்ந் தேனே. க

1126 உணர்ந்திலர் ஈசனை ஊழிசெய் சத்தி
புணர்ந்தது பூரணம் புண்ணியர் தங்கள்
கணங்களைத் தன்னருள் செய்கின்ற கன்னி
கொணர்ந்த வழிகொண்டு கும்பக மாமே. உ

1127 கும்பக் களிறைந்துங் கோலொடு பாகனும்
வம்பில் திகழும் மணிமுடி வண்ணனும்
இன்பக் கலவி இனிதுறை தைபலும்
அன்பிற் கலவியு ளாயொழிந் தாரே. ங

1128 இன்பக் கலவியில் இட்டெழு கின்றதோர்
அன்பிற் புகவல்ல ணும்எங்கள் அப்பனுந்
துன்பக் குழம்பில் துயருறும் பாசத்துள்
என்பிற் பராசத்தி என்னம்மை தானே. ச

1129 என்னம்மை என்னப்பன் என்னுங் கெருக்கற்று
உன்னம்மை ஊழித் தலைவனும் அங்குளன்
மன்னம்மை யாகி மருவி யுரைசெய்யும்
பின்னம்மை யாய்நின்ற பேர்நந்தி தானே. ஞ

1130 தார்மேல் உறைகின்ற தண்மலர் நான்முகன்
பார்மேல் இருப்ப தொருநூறு தானுள
பூமேல் உறைகின்ற போதகம் வந்தனள்
நாமேல் உறைகின்ற நாயகி ஆணையே. ட

1131 ஆணைய மாய்வருந் தாது ளிருந்தவர்
மாணைய மாய மனத்தை ஒருக்கிப்பின்
பாணைய மாய பரத்தை அறிந்தபின்
தாணையு மாய தலைதனன் தானே. ண

1132 தானே எழுந்தஇத் தத்துவ நாயகி
வானேர் எழுந்து மதியை விளக்கினள்
தேனேர் எழுகின்ற தீபத் தொளியுடன்
மானே நடமுடை மன்றறி யீரே. அ

1133 அறிவான மாயையும் ஐம்புலக் கூட்டத்
திறிவான மங்கை அருளது சேரிற்
பிறியா அறிவறி வாருளம் பேணு
நெறியாய சித்த நினைந்திருந் தாளே. கூ

1134 இரவும் பகலும் இலாத விடத்தே
குரவஞ்செய் கின்ற குழலியை நாடி
அரவஞ்செய் யாமல் அருளுடன் தூங்கப்
பருவஞ்செய் யாததோர் பாலனு மாமே. கo

1135 பாலனு மாகும் பராசத்தி தன்னெடு
மேலனு காவிந்து நாதங்கள் விட்டிட
மூலம சாமெனும் முத்திக்கு நேர்படச்
சாலவு மாய்நின்ற தற்பரத் தாளே. கக

1136 நின்ற பராசத்தி நீள்பரன் தன்னெடு
நின்றறி ஞானமும் இச்சையு மாய்நிற்கும்
நன்றறி யுங்கிரி யாசத்தி நண்ணவே
டன்றன வற்றுள் மருவிடுந் தானே. கஉ

1137 மருவொத்த மங்கையுந் தானும் உடனே
உருவொத்து நின்றமை ஒன்றும் உணரார்
கருவொத்து நின்று கலக்கின போது
திருவொத்த சிந்தைவைத் தெந்தைதன் னானே. கஙு

1138 சிந்தையின் உள்ளே திரியுஞ் சிவசத்தி
விந்துவும் நாதமு மாயே விரிந்தனள்
சந்திர பூமி சடாதரி சாத்தவி
அந்தமொ டாதிய தாம்வண்ணத் தாளே. கச

1139 ஆறி யிருந்த அமுத டயோதரி
மாறி யிருந்த வழியறி வாரில்லைத்

தேறி யிருந்துரல் திடத் தொளியுடன்
ஊறி யிருந்தனன் உள்ளுணர் டோர்க்கே. கஞ

1140 உடையவன் அங்கி உருத்திர சோதி
னிடையவன் எறி னினைங்கி யிருக்குங்
கடையவர் போயிருங் கண்டவர் தெஞ்சுக்
கடையது வாகிய சாதகர் தாமே. கக

1141 தாமேல் உறைவிடம் ஆனி மூனது
பாமேல் இருப்பது னெட்டு நாலள
தூமேல் உறைகின்ற புண்ணியம் வந்தனன்
பாமேல் உறைகின்ற மைபந்தி காடு பாதீன. கன

1142 மைபந்தி காடு பாருநம் பரமை னிருந்திடத்
தின்றிகாடு பாகத் திருந்தரு சோதியோம்
விண்டிகாடு பாகி வினைங்கி வருதலாற்
பெண்டிகாடு பாக கடந்த துலகே. கஅ

1143 கடந்தது மட்மலர் நாலுடன் அஞ்சாய்
இருந்தனர் கன்னிகள் எட்டுடன் ஒன்பூப்
படர்ந்தது தன்வழி பங்கயத் துள்ளன
தொடர்ந்தது உள்வழி சோதி யதுத்தே. ககூ

1144 அதுக்குந் தாமரை ஆதி இருப்பிடம்
எதுக்குந் தாமரை இல்லகத் துள்ளது
மதுக்குந் தாமரை மத்தகத் தேதென்ல
முதுக்குந் தாமரை மூச்சது ரத்தே. உ0

1145 மூச்சது ரத்தே எழுந்த மூனைச்சுடர்
எச்சது ரத்தும் இடம்பெற வோடக்
கைச்சது ரத்துக் கடந்துள் ஒளிபெற
எச்சது ரத்துடம் இருந்தனள் தானே. உக

1146 இருந்தனள் தன்முகம் ஆறுது காலாய்ப்
பரந்தன வாயு திசைதிசை தோறுங்
குவிந்தன மூத்தின் முகவொளி நோக்கி
நடந்தது தேறல் அதாமுகம் அம்பே. உஉ

1147 அம்பன்ன கண்ணி அரிவை மதேனென்மனி
கொம்பன்ன நுண்ணிடை கோதை குலாவிய
செம்பொன்செய் யாக்கை செறிகமழ் காடொறும்
நம்பனை நோக்கி நவிலுகின் றாளே. உங

1148 நவிலும் பெருந்தெய்வம் நான்மறைச் சந்தி
துகிலுடை யாடை நிலம்பொதி பாதம்
அகிலமும் அண்ட முழுதுஞ்செம் மாந்து
புகலுழைச் சோதி புனையநிற் பாளே. உச

1149 புனையபவல் லாள்புவ னத்திறை எங்கள்
வனையபவல் லாள்அண்ட கோடிகள் உள்ளே
புனையபவல் லாள்மண்ட லத்தாளி தன்னைப்
புனையபவல் லாளையும் போற்றியென் பேனே. உஞ

1150 போற்றியென் பென்புவ னபதி அம்மையென்
ஆற்றலுள் நிற்கும் அருந்தவப் பெண்பிள்ளை
சீற்றங் கடிந்த திருநுதற் சேயிழை
கூற்றங் துரக்கின்ற கொள்ளைப் தொடியே. உசு

1151 தொடியார் தடக்கைச் சுகோதய சுந்தரி
வடிவார் திரிபுரை பாமங்கை சங்கைச்
செடியார் வினைகெடச் சேர்வரை என்றென்
அடியார் வினைகெடுத் தாதியு மாமே. உஎ

1152 மெல்லிசைப் பாவை வியோமத்தின் மென்கொடி
பல்லிசைப் பாவை பயன்தரு பைங்கொடி
புல்லிசைப் பாவையைப் போகத் துரந்திட்டு
வல்லிசைப் பாவை மனம்புகுந் தாளே. உஅ

1153 தாவித்த வப்பொருள் தானவன் எம்மிறை
பாவித் துலகம் படைக்கின்ற காலத்து
மேவிப் பராசத்தி மேலொடு கீழ்தொடர்ந்
தாவிக்கு மப்பொருள் தானது தானே. உக

1154 அதுவிது என்பர் அவனை அறியார்
கதிவர நின்றதோர் காரணங் காணர்
மதுவிரி பூங்குழல் மாமங்கை நங்கை
திதமது உன்னுர்கள் தேர்ந்தறி யாரே. ௬0

87. ஆதாரவாதேயம்

1155 நாலிதழ் ஆறில் அவிர்ந்தது தொண்ணூறு
தானிக ழானவை நாற்பத்து நாலுள
பாலித ழானவள் பங்கய மூலமாய்த்
தானித ழாகித் தரித்திருக் காளே. ௯

1156 தரித்திருக் காளவள் தன்னெனி நோக்கி
விரித்திருக் காளவள் வேதப் பொருளைக்
குறித்திருக் காளவள் கூறிய ஐந்து
மறித்திருக் காளவள் மாதுகல் லாளே. ௮

1157 மாதுகல் லாருமம் மணனன் இருந்திடப்
பாதிகல் லாருமம் பகவனு மானது
சோதிகல் லாளைத் துணைப்பெய்ய வல்லிரேல்
வேதனை தீர்தரும் வெள்ளைட யாமே. ௯

1158 வெள்ளைட யானிரு மாமிகு மாமலர்க்
கள்ளைட யாரக் கமழ்குழ லார்மன
மள்ளைட யாளும் வகைத்திற மாய்நின்ற
பெண்ணெரு பாகம் பிறவிபெண் ணேமே. ௰

1159 பெண்ணெரு பெண்ணைப் புணர்ந்திடும் பேதைமை
பெண்ணிடை ஆணும் பிறந்து கிடந்தது
பெண்ணுடை ஆணென் பிறப்பறிந் தீர்க்கின்ற
பெண்ணுடை ஆணிடைப் பேச்சற்ற வாறே. ௰௧

1160 பேச்சற்ற நற்பொருள் காணும் பெருந்தகை
மாச்சற்ற சோதி மணிவண்மனி மங்கையாங்
காச்சற்ற சோதி கடவு ளுடன்புணர்ந்
தாச்சற்ற னுட்புகுந் தாவிக்குந் தானே. ௰௨

1161 ஆனித்குங் கன்னி அரிவை மகிணன்மனி
பானித் துலகிற் பரந்துபெண் ணாகும்
வேலைத் தலைவிளை வேத முதல்வியை
ஆலித் தொருவன் உகந்துநின் றானே. எ

1162 உகந்துநின் றான்நம்பி ஒண்ணுதற் கண்ணே
நிகந்துநின் றான்நகம் முழைழுக நோக்கி
உகந்துநின் றான்இவ் உலகங்கள் எல்லாம்
உகந்துநின் றான்அவ டன்றே டொகுத்தே. அ

1163 குத்து முலைச்சி குழைந்த மருங்கினள்
துத்தி விரிந்த சுணங்கினள் தூமொழி
புத்தகச் சிறுபப் பாவை புணர்விளைத்
தொத்த கருத்துச் சொல்லகி லேனே. கூ

1164 சொல்லவொண் ணாத அழற்பொதி மண்டலஞ்
செல்லவொண் ணாது திகைத்தங் கிருப்பர்கள்
வெல்லவொண் ணாத விளைத்தனி நாயகி
மல்லவொண் ணாத மகிணன்மனி தானே. கo

1165 தானை இருநிலந் தாங்கிவிண் ணாய்நிற்குந்
தானை சுடுமங்கி நாயிறுந் திங்களுந்
தானை மழைபொழி தைபலு மாய்நிற்குந்
தானை வடவரைத் தண்சுடற் கண்ணே. கக

1166 கண்ணுடை யாளைக் கலந்தங் கிருந்தவர்
மண்ணுடை யாரை மனித்தரிற் கூட்டொணாப்
பண்ணுடை யார்கள் பதைப்பற் றிருந்தவர்
விண்ணுடை யார்களை மேலுறக் கண்டே. கஉ

1167 கண்டென் டிசைபுங் கலந்து வருங்கன்னி
பண்டென் டிசைபும் பராசத்தி யாய்நிற்கும்
விண்டென் டிசைபும் விரைமலர் கைக்கொண்டு
தொண்டென் டிசைபுந் தொழுதின்ற கன்னியே. கஙி

1168 கன்னி ஒளியென நின்றவிச் சந்திரன்
மன்னி யிருக்கின்ற மாளிகை சென்றிறஞ்

சென்னி யிருப்பிடஞ் சேர்பதி னையுடன்
பன்னி யிருப்பப் பராசக்தி யாமே. கச

1169 பராசக்தி யென்றென்று பல்வகை யாதுக்
தராசத்தி யான தலைப்பிர மாணி
இராசத்தி யாமள வாகமத் தானாகுங்
குராசத்தி கோலம் பலவுணர்ந் தீதின. கஞ

1170 உணர்ந்துல கேழுமுங் யோகினி சத்தி
உணர்ந்துயி ராய்நிற்கும் உன்னதன் ஈசன்
புணர்ந்தொரு காலத்துப் போகம தாதி
இணைந்து பரமென் றிசைந்திது காண. கஙு

1171 இதுவப் பெருந்தகை எம்பெரு மானும்
மோதுவக் கல்வியும் போகமு மாகி
மதுவக் குழனி மலைவன்மனி மங்கை
அதுவக் கல்வியுள் ஆயுழி யோகமே. கன

1172 யோகநற் சத்தி ஞானபீடக் தானகும்
யோகநற் சத்தி ஞானமுகந் தெற்காகும்
யோகநற் சத்தி உகர நிலைகும்
யோகநற் சத்திகாள் உத்தரத் தேரே. கஞ

1173 தோற்றெழு மேலாஞ் சிவனங்கி யோதிற
வார்ந்தெழு மாயையு மந்தம தாய்நிற்கும்
ஓர்ந்தெழு விந்துவும் நாதமும் ஓங்கிடக்
கூர்ந்தெழு கின்றனள் கோல்வளை தானை. கஙு

1174 தானை வாறெட்ட தாம்பரைக் குண்மிளை
தானை வாறு மீரேழுஞ் சமகலை
தானை விந்து சகமே பரமெனுக்
தானும் பரவா தனையெனத் தக்கதே. உ0

1175 தக்க பராவித்தை தானிரு பானேழிற்
றக்கெழு மோருத் திரஞ்சொல்லச் சொல்லவே
மிக்கிடும் எண்சத்தி வெண்ணிற முக்கண்ணி
தொக்க கதையோடு தொன்முத்திரை யாளே. உக

1176 மூத்திரை மூன்றின் முடிந்தமெய்ஞ் ஞானத்தள்
தத்துவ மாயல்ல வாய சகலத்தள்
வைத்த பராபர ணைய பராபரை
சத்தியு மானந்த சத்தியுங் கொங்கே. உஉ

1177 கொங்கின்ற கொம்பின் குரும்பைக் குலாங்கன்னி
பொங்கிய குங்குமத் தொளிபொ ருந்தினள்
அங்குச பாச மெனுமகி லங்கனி
தங்கு மவள்மனை தானறி வாயே. உங

1178 வாயு மனமுங் கடந்த மேலுண்மனி
பேயுங் கணமும் பெரிதுடைப் பெண்பிள்ளை
ஆயும் அறிவுங் கடந்த அரணுக்குத்
தாயும் மகளுநல் தாரமு மாமே. உச

1179 தாரமு மாகுவள் தத்துவ மாய்நிற்பள்
காரண காரிய மாகுங் கலப்பினள்
பூரண விந்துப் பொதிந்த புராதனி
பாரள வாந்திசை பத்துடை யாளே. உரு

1180 பத்து முகமுடை யாள்நம் பராசத்தி
வைத்தனள் ஆறங்க நாலுடன் மூன்வேதம்
ஒத்தனள் ஆகாரம் ஒன்றுடன் ஓங்கியே
நித்தமாய் நின்றுளெம் நேரிழை கூறே. உசு

1181 கூறிய கன்னி குலாய புருவத்தள்
சீறிய ளாயுல கேழுந் திகழ்ந்தவள்
ஆரிய நங்கை யழுத பயோதரி
பேருயி ராளி பிறிவறுத் தாளே. உஎ

1182 பிறிவின்றி நின்ற பெருந்தகைப் பேதை
குறியொன்றி நின்றிடுங் கோமளக் கொம்பு
பொறியொன்றி நின்று புணர்ச்சிசெய் தாங்கே
அறிவொன்ற நின்றனள் ஆருயி ருள்ளே. உஅ

1183 உள்ளத்தி னுள்ளே யுடனிருந் தைவர்தங்
கள்ளத்தை நீக்கிக் கலந்துட னேபுல்கிக்

கொள்ளத் தவிகெறி கூடிய இன்பத்து
வள்ளற் றலைவி மருட்டிப் புரிந்தே. உக

1184 புரிந்தருள் செய்கின்ற போகமா சத்தி
இருந்தருள் செய்கின்ற இன்பம் அறியார்
பொருந்தி யிருந்த புதல்வீடு வண்ணத்
திருந்த விலக்கில் இனிதிருந் தானே. ஊ0

1185 இருந்தனள் ஏத்திழை என்னுளம் மேவித்
திருந்து புணர்ச்சியில் தேர்ந்துணர்ந் தன்னி
நிரந்தர மாகிய நிரதி சயமொடு
பொருந்த விலக்கிற் புணர்ச்சி அறிதே. ஊக

1186 அறுதி தென்னு மளவாகி னீங்கித்
துறுதியது செய்து சுழியுறு தோக்கில்
விதியது தன்னினும் வென்றிட லாகும்
மதிமல ரான்சொன்ன மண்டல மூன்றே. ஊஉ

1187 மூன்றுள மண்டலப் மோகினி சேர்விடம்
என்றுள சார நிறமுகலி உச்சியில்
தோன்று மிலக்குற வாகுதல் மாமாயை
என்றனள் எழிரண் டிருந்துமா டீறே. ஊங

1188 இந்துவி னின்றெழு காதம் இரவிபோல்
வந்துபின் காக்கின் மதித்தெழுங் கண்டத்தில்
உந்திய சோதி இதயத் தெழுஞ்ஞரி
இந்துவின் மேலுற்ற ஈறது தானே. ஊச

1189 ஈறது தான்முதல் எண்ணிரண் டாயிர
மாறுதல் இன்றி மலைவச மாயெழில்
தூறது செய்யுஞ் சுகந்தச் சுழியது
பேறது செய்து பிறந்திருந் தாளே. ஊரு

1190 இருந்தனள் ஏத்திழை ஈறதி லாகத்
திருந்திய ஆனந்தஞ் செங்கெறி கண்ணிப்
பொருந்து புவனங்கள் போற்றிசெய் தேத்தி
வருந்த இருந்தனள் மங்கைகல் லாளே. ஊசு

1191 மங்கையும் மாமனுங் கம்மொடு கூடிநின்
றங்குலி கூட்டி அகம்புறம் பார்த்தனர்
கொங்கைகொல் லாளநங் குமாரர்கள் ஐவருந்
தங்களின் மேவிச் சடங்குசெய் தாரே. கூ

1192 சடங்கது செய்து தவம்புரி வார்கள்
கடந்தனி னுள்ளே கருதுவ ராகில்
தொடர்ந்தெழு சோதி துளைவழி ஏறி
அடங்கிடும் அன்பின தாயிழை பாலே. கூஅ

1193 பாலித் திருக்கும் பனிமல ராறினும்
ஆலித் திருக்கும் அவற்றின் அகம்படி
சீலத்தை நீக்கத் திகழ்ந்தெழு மந்திர
மூலத்து மேலது முத்தது வாமே. கூக

1194 முத்து வதனத்தி முகந்தொறு முக்கண்ணி
சத்தி சதிரி சகளி சடாதரி
பத்துக் கரத்தி பராபரன் பைந்தொடி
விக்தகி என்னுள்ள மேவினின் றாளே. சா

1195 மேவிய மண்டலம் மூன்றுடன் கீழோரி
தாவிய நற்பதத் தண்மதி யங்கதிர்
மூவருங் கூடி முதல்வியாய் முன்னிற்பார்
ஓவிலு மேலிடம் உள்ளொளி யாமே. சாக

1196 உள்ளொளி மூவிரண் டோங்கிய அங்கங்கள்
வெள்ளொளி அங்கியின் மேவி அவரொடுங்
கள்ளவிழ் கோதைக் கலந்துட னேநிற்குங்
கொள்ள விசுத்திக் கொடியது தாமே. சாஉ

1197 கொடியது ரேகை குருவள் இருப்பப்
படியது வாருணப் பைங்கழ லீசன்
வடிவது வானந்தம் வந்து முறையே
இடமுதல் ஆறங்கம் எந்திழை யாளே. சாஎ

1198 எந்திழை யாளநம் இறைவர்கள் மூவருங்
காந்தார மாறுங் கலைமுதல் ஈரெட்டு

மாந்த குளத்தியு மக்திர ராயவுந்
சார்ந்தனர் வுந்த இருந்தனர் சுத்தியு. சச

1199 சுத்தியென் பாளொரு சாதகப் பெண்பிள்ளை
மூத்திக்கு நாயகி என்ப தறிகில்
பத்தினைப் பாழில் உருத்தவுப் பாலிகள்
கத்திய நாய்போற் கதறுகின் றூரே. சஞ

1200 ஆரே திருவின் திருவடி காண்பர்கள்
சேரேநின் றேறி நிலையவும் வல்லார்க்குச்
சீரோர் குழலி கமல மலரன்ன
சீரேயுந் தேவடி சிக்கறுமைக் காரே. சக

1201 சிக்கையில் வைத்துச் சிராதியி லேவைத்து
மூக்கையில் வைத்துநுந்தம் மூலத்தி லேவைத்து
நிக்கையில் வையோ நிலைவதி லேவைத்துச்
சுக்கையில் வைத்துச் சமாதிசெய் வீரே. சஎ

1202 சமாதிசெய் வார்கட்குத் தான்மூ லமாகிச்
சிவாதியி லாருஞ் சிலர்துக லாலை
கவாதியி லாக கயக்கறு ஓதில்
உவாதி அவரைக் குறையில காமே. சஅ

1203 உறைபதி தோறும் முறைமுறை மேவி
நறைகமழ் கோதையை நாடொறு நண்ணி
மறைபுட னேநிற்கு மற்றுள்ள நான்கும்
இறைதினைப் போதினில் எய்திட லாமே. சக

1204 எய்திட லாகும் இருவினை யின்பயன்
கொய்குளிர் மேனிக் குமரி குலாங்கன்னி
மைதவழ் கண்ணிநன் மாதுரி கையொடு
கைதவம் இன்றிக் கருத்துறும் வாறே. நo

1205 கருத்துறுங் காலங் கருது மனமுங்
திருத்தி யிருந்தவை சேரு நிலத்து
ஒருத்தியை உன்னி உணர்ந்திடு மண்மேல்
இருத்திடும் எண்குணம் எய்தலும் ஆமே. நக

1206 ஆடையொன் றேறி அகட்படி யாயினை
நாடன் றேதியெம் உள்ளொளி யாய்நிற்கும்
தாட நறுங்குழல் தையலைக் கண்டபின்
சோட நறுமலர் சூடினின் றூளே. நஉ

1207 சூடிடம் அங்குச பாசத் துளைவழி
கூடிடம் இருவினைக் கோலக்கைக் குண்டிகை
காடிடம் இருபத நன்னெடு நுத்திரம்
ஆடிடஞ் சிற்புனை ஆடக மாமே. நஊ

1208 ஆமயன் மாலரன் ஈசன் சதாசிவன்
தாமடி சூடினின் றெய்தினர் தம்பதங்
காமனுஞ் சாமன் இரவி கனலுடன்
சோமனும் வந்தடி சூடினின் றூளே. நக

1209 சூடும் இளம்பிறை சூலி கபாலினி
நீடும் இளம்விகாடி நின்மலி நேரிழை
காடு நடுவிடை ஞான மூருவின்
றூடி மதன்வழி அண்ட முதல்வியே. நஎ

1210 அண்ட முதலாய் அவனிபரி யந்தங்
கண்டதொன் றில்லைக் கனங்குழை யல்லது
கண்டனுங் கண்டிபு மாகிய காரணங்
குண்டிகை கோளினை கண்டத னூலே. நகூ

1211 ஆலமுண் டானமு தாங்கவர் தம்பதஞ்
சாலவந் தெய்துந் தவத்தின்பந் தான்வருங்
கோலிவந் தெய்துங் குவிந்த பதவையோ
டேலவந் தீண்டி இருந்தனள் மேலே. நஎ

1212 மேலாம் அருந்தவம் மேன்மேலும் வந்தெய்தக்
காலால் வருந்திக் கழிவர் கணத்திடை
காலா களினின் றெத்திகட் டுச்சிதன்
மேலா மெழுத்தின ளாமத்தி னூளே. நஅ

1213 ஆமத் தினிதிருந் தன்ன மயத்தினள்
ஓமத்தி லேயும் ஒருத்தி பொருந்தினள்

காம கமகிவ என்றிருப் பார்க்கு
சேமத் துணைவி நிலாவிகின் றாளா. நிக

1214 நிலாமய மாகிய நீள்படு கத்தின்
சிலாமய மாகுஞ் செழுக்த னைத்தின்
சுலாமய மாகுந் சுரிகுழற் கோதை
கலாமய மாகக் கலக்துநின் றாளா. சுஐ

1215 கலக்துநின் றுள்கன்னி காதல னேறுக்
கலக்துநின் றுளுயிர்க் கற்பின எல்லாக்
கலக்துநின் றுள்கலி னானங்கள் எல்லாக்
கலக்துநின் றுள்கன்னி காவ்பூ மாதிட. சுக

1216 காலவி னங்குங் கருக்துட் அருக்தியுக்
கூலவி னென்றுகுங் கூட இணைத்தனள்
மாலினி மாகுவி மக்திர சண்முகை
பாலினி பாலவன் பாகம காமே. சுஉ

1217 பாகம் பராசுக்தி யைம்பான் சடைமுடி
எகம் இருகயம் ஈரைக்து நின்டுய
மோக முகமைக்து முக்கண் முகங்தொறும்
காகம் உரித்து கடஞ்செய்யும் காதக்கே. சுங

1218 காதனு காலொன் பதின்மருங் கூடுநின்
றேதிடுங் கூட்டங்கள் ஓரைக் துள அவை
வேதனும் ஈரொன்ப தின்மருக் தேவிநின்
றுதியும் அந்தமு மாகிநின் றாளா. சுச

1219 ஆகின்ற காள்கலி ஐம்பத் தொருவர்கள்
ஆகினின் றுள்களில் ஆருயி ராமவள்
ஆகினின் றுளுட னுகிய சக்கரத்
தாகினின் றுளவன் ஆயிழை பாடே. சுரு

1220 ஆயிழை யாளொடு மாதிப் பரமிடம்
ஆயதொ ரண்டவை யாறும் இரண்டுள
ஆய மனந்தொ றறுமுக மவைதனில்
ஏயவார் குழலி இனிதுநின் றாளா. சுசு

1221 நின்றனள் நேரிழை யோடுடன் நேர்பட
இன்றே னகம்படி ஏழும் உயிர்ப்பெய்துந்
துன்றிய வோரொன் பதின்மருஞ் சூழலுள்
ளொன்றுபர் வோதி யுணர்ந்துநின் றாளை. கூ

1222 உணர்ந்தெழு மந்திரம் ஓமெனும் உள்ளே
மணந்தெழு மாங்கதி யாகிய தாகுங்
குணர்ந்தெழு சூதனுஞ் சூதியுங் கூடிக்
கணந்தெழுங் காணுமக் காழுகை யாமே. கூஅ

1223 ஆமது வங்கியும் ஆதியும் ஈசனும்
மாமது மண்டல மாருக மாதியும்
ஏமது சீவன் சிகையங் கிருண்டிடக்
கோமலர்க் கோதையுங் கோதண்ட மாகுமே. கூக

1224 ஆகிய கோதண்டத் தாகு மதேனன்மனி
ஆகிய ஐம்ப துடனே அடங்கிடும்
ஆகும் பராபரை யோடப் பரையவள்
ஆகு மவள்ஐங் கருமத்தள் தானே. எ0

1225 தானிகழ் மோகினி சார்வான யோகினி
தோன டபழுடை யாரடி போற்றுவர்
ஆனஎ ராவியி னுகிய வச்சிவந்
தாறும் பரசிவ மேலது தானே. எக

1226 தானந்த மேலே தருஞ்சிகை தன்னுடன்
ஆனந்த மோகினி யாம்பொற் றிருவொடு
மோனையில் வைத்து மொழிதரு கூறது
வானவை யோமெனும் அவ்வுயிர் மாக்கமே. எஉ

1227 மாக்கங்கள் என்ற மதேனன்மனி மங்கலி
யாக்கும் அறிய வரியா ளவளாகும்
வாக்கு மனமும் மருவியொன் றுப்விட்ட
நோக்கும் பெருமைக்கு நுண்ணறி வாமே. எங

1228 நுண்ணறி வாகும் நுழைபுலன் மாந்தர்க்குப்
பின்னறி வாகும் பிரானறி வத்தடன்

செங்கதி யாகுஞ் சிவகதி சேர்வார்க்குத்
தன்னெறி யாவது சன்மார்க்க மாதேடி. எச

1229 சன்மார்க்க மாகச் சமைகுரு மார்க்கமுந்
துன்மார்க்க மானவை சொல்லாத் துரந்திடம்
நன்மார்க்கத் தேவரும் நன்னெறி யாவதுந்
சன்மார்க்கத் தேவியுந் சத்தியன் பாரே. எஞ

1230 சத்தியும் காலுஞ் சபம்புவட் அல்லது
மூத்தினை யாரும் மூகலறி வாரில்லை
அத்திசேடல் விந்துடல் அந்தி படுத்தக்கான்
மந்தியி லேறு வழியது வாதேடி. எக

1231 அதுவித்து மென்றவை மேகழி யாதீத
மதுவினி தூங்குழல் மங்கைகள் லாளைப்
பதிமது மேவிப் பணியவல் லார்க்கு
விதிவழி தன்னையும் வென்றிட லாமே. எஎ

1232 வென்றிட லாகுட் விதிவழி தன்னையும்
வென்றிட லாகும் விளைப்பெருட் பாசத்தை
வென்றிட லாகும் விழைபுலன் தன்னையும்
வென்றிடு மங்கைதன் மெய்புணர் வோர்க்கே. எஅ

1233 ஓரைம் பதின்மருள் ஒன்றியே நின்றது
பாரம் பரியத்து வந்த பரமிது
மாரங் குழலாளும் அப்பதி தானுமுன்
சாருஞ் பதமிது சத்திய மாமே. எக

1234 சத்திபி னேது சபம்புவும் சேர்படில்
வித்தது வின்றியே எல்லாம் விளைந்தன
அந்தகை யாகிய ஐம்பத் தொருவருஞ்
சித்தது மேவித் திருந்திடு வாரே. அ0

1235 திருந்து சிவனுஞ் சிலாதுத லாளுடம்
பொருந்திய வானவர் போற்றிசெய் தேத்த
அருந்திட அவ்விடம் ஆரமு தாக
இருந்தனள் தானங் கினம்பிறை என்றே. அக

1236 என்றுடம் எழுகின்ற வேரினை யெய்திணர்
கன்றது வாகுவர் கார்குழ லாளொடு
மன்றரு கங்கை மதியொடு மாதவர்
துன்றிய காரணை சோதிநின் ரூளே. அஉ

1237 நின்றனள் நேரிழை யாளொடு நேர்படை
ஒன்றிய வுள்ளொளி யாலே யுணர்ந்தது
சென்ற பிராணிகள் சிக்கதிபில் வேண்டிய
துன்றிடு ஞானங்கள் தோன்றிடுக் தானே. அஊ

1238 தோன்றிடும் வேண்டுரு வாகிய தூய்நெறி
ஈன்றிடு மாங்கவள் எய்திய பல்கலை
மான்றரு கண்ணியும் மாரனும் வந்திதிர்
சான்றது வாகுவர் தாமவ ளாயுமே. அசு

1239 ஆயும் அறிவுங் கடந்தணு வாரணி
மாயம தாகி மதோமதி யாயிடுஞ்
சேய அரிவை சிவானந்த சுந்தரி
நேயம தாநெறி யாகுநின் ரூளே. அஎ

1240 நெறியது வாய்நின்ற நேரிழை யாளைப்
பிறிவது செய்யாது பிஞ்ஞக னேடுங்
குறிபது கூடிக் குறிக்கொண்டு நோக்கும்
அறிவொடும் ஆங்கே அடங்கிட லாமே. அஏ

1241 ஆமயன் மாலரன் ஈசன்மா லாங்கதி
ஓமய மாகிய ஒன்பதும் ஒன்றிடத்
தேமய லுளந் தெளிதென என்றிடும்
மாமய மானது வந்தெய்த லாமே. அஐ

1242 வந்தடி போற்றுவர் வானவர் தானவர்
இந்து மூதலாக எண்டிசை யோர்களுங்
கொந்தணி புங்குழ லாளொடு கோனையும்
வந்தன செய்யும் வழிநவில் வீரே. அஅ

1243 நவிற்றுநன் மந்திரம் நன்மலர் தூபங்
கவற்றிய கந்தங் கவர்ந்தெரி தீபம்

பயிற்றும் உலகினிற் பார்ப்பதி பூசை
அவிக்கொண்ட சோதிக்தேகார் அர்ச்சனை தானே. அகூ

1244 தாங்கி உலகில் தரித்த பராபரன்
ஓங்கிய காலத் தொருவன் உலப்பிலி
பூங்கினி தங்கும் புரிகுழ லாளன்று
பாங்குடன் ஏற்பப் பராசத்தி போற்றே. கo

1245 பொற்கொடி மாதர் புனைகழல் எத்துவர்
அற்கொடி மாதுணை யார்வத் தலைமகன்
நற்கொடி மாதை நயனங்கண் மூன்றுளன்
விற்கொடி மாதை விரும்பி விளங்கே. கக

1246 விளங்கொளி யாய விரிசுடர் மாலை
துளங்கு பராசத்தி தூங்கிருள் நீங்கக்
களங்கொள் மணியுடன் காம விதேறுகட்
டுளங்கொ ளிலம்பியம் ஒன்று தொடதே. கஉ

1247 தொடங்கி உலகினிற் சோதி மணாளன்
அடங்கி இருப்பதென் அன்பின் பெருமை
விடங்கொள் பெருஞ்சடை மேல்வரு கங்கை
ஒடுங்கி யுமையொடும் ஓருரு வாமே. கங

1248 உருவம் பலவுயி ராய்வல்ல நக்தி
தெருவம் புகுந்தமை தேர்வுற நாடிற்
புரிவளைக் கைச்சியெம் பொன்னனி மாதை
மருவி இறைவன் மகிழ்வன மாயமே. கச

1249 மாயம் புணர்க்கும் வளர்சடை யானடித்
தாயம் புணர்க்குஞ் சலநதி அமலனைக்
காயம் புணர்க்குங் கலவியுள் மாசத்தி
ஆயம் புணர்க்குமவ் விடையோனியு மாமே. கஞ

1250 உணர்ந்தாழிந் தேனவ ணமெங்கள் ஈசனைப்
புணர்ந்தாழிந் தேன்புவ னபதி யாரை
அணைந்தாழிந் தேனெங்கள் ஆதிதன் பாதம்
பிணைந்தாழிந் தேன்றன் அருள்பெற்ற வாறே. கஙு

1251 பெற்றாள் பெருமை பெரிய மேனன்மனி
நற்றாள் இறைவனே நற்பயனே என்பர்
கற்றான் அறியுங் கருத்தறி வாக்கட்குப்
பொற்றாள் உலகம் புகல்தனி யாமே. கூன

1252 தனியா யகன்றமே டென்னஞ்சம் நாடி
இனியார் இருப்பிடம் ஏழுல கென்பர்
பனியான் மலர்ந்தபை போதுகை ஏந்திக்
கனியாய் நினைவதென் காரணம் அம்மையே. கூஅ

1253 அம்மனை அம்மை அரிவை மேனன்மனி
செம்மனை செய்து திருமங்கை யாய்நிற்கும்
இம்மனை செய்த இன்னில மங்கையும்
அம்மனை யாகி அமர்ந்துநின் றாளே. கூக

1254 அம்மையபும் அத்தனும் அன்புற்ற தல்லது
அம்மையபும் அத்தனு மாரறி வாரென்னை
அம்மையொ டத்தனும் யானும் உடனிருந்
தம்மையொ டத்தனை யான்புரிந் தேனே. கூ00

88. ஏரோளிச் சக்கரம்

1255 ஏரொளி யுள்ளெழு தாமரை காலிதழ்
ஏரொளி விந்துவி லுலைழு காதமாம்
ஏரொளி யக்கலை எங்கும் நிறைந்தபின்
ஏரொளிச் சக்கர மங்கடு வன்னியே. க

1256 வன்னி யெழுத்தவை மாபலம் உள்ளன
வன்னி யெழுத்தவை வானுற ஓங்கின
வன்னி யெழுத்தவை மாபெருஞ் சக்கரம்
வன்னி யெழுத்திடு வாறது சொல்லுமே. உ

1257 சொல்லிய விந்துவும் ஈராறு நாதமாஞ்
சொல்லிடு மப்பதி யவ்வெழுத் தாவன
சொல்லிடு நூறொடு நாற்பத்து நாலுரு
சொல்லிடு சக்கர மாய்வரு மேலதே. ங

1258 மேல்வரும் விந்துவு மவ்விவை முத்தாய்விடும்
மேல்வரு காதமும் ஓங்கும் எழுத்துடன்
மேல்வரு மப்பதி யவ்விவை முத்தோன்
மேல்வரு சக்கர மாய்வரு ஞாலீடே. க

1259 ஞாலமு காக விரிக்கது சக்கரம்
ஞாலமு காயிரம் விந்துவும் காதமும்
ஞாலமு காயிரு மப்பதி போசனை
ஞாலமு காக விரிக்க தெழுத்தே. ங

1260 விரிக்க எழுத்தது விந்துவும் காதமும்
விரிக்க எழுத்தது சக்கர மாக
விரிக்க எழுத்தது மேல்வை நட்ட மூடி
விரிக்க எழுத்தினில் அப்புறம் அப்பே. ச

1261 அப்பது வாக விரிக்கது சக்கரம்
அப்பினில் அப்புறம் அவ்வன லாயிரம்
அப்பினில் அப்புறம் மாருக மாயிழை
அப்பினில் அப்புறம் ஆகாச மாமே. ஈ

1262 ஆகாச அக்கர மாவது சொல்லீடில்
ஆகாச அக்கரத் துள்ளன எழுத்தவை
ஆகாச அவ்விவை முத்தாகிச் சிவானந்தம்
ஆகாச அக்கர மாவ தறிமினே. அ

1263 அறிந்திடுஞ் சக்கரம் ஐயஞ்ச விந்நூ
அறிந்திடுஞ் சக்கர காத முதலா
அறிந்திடும் அவ்விவை முத்தப் பதி யோர்க்கும்
அறிந்திடும் அப்பக லோனிலை யாமே. கூ

1264 அம்முதல் ஆறுமவ் வாதி எழுத்தாகும்
அம்முதல் ஆறுமவ் வம்மை எழுத்தாகும்
இம்முதல் காலும் இருந்திடு வன்னியே
இம்முத லாகும் எழுத்தவை எல்லாம். கூ

1265 எழுத்தவை நூறெழு காற்பத்து காலும்
எழுத்தவை யாறது வந்தடி வன்னி

எழுத்தவை யங்கடு வச்சுட ராகி
எழுத்தவை தான்முதல் அந்தமு மாமே. ககூ

1266 அந்தமும் ஈறு முதலா னவையற
அந்தமும் அப்பதி னெட்டுடன் ஆதலால்
அந்தமும் அப்பதின் மூன்றில் அமர்ந்தபின்
அந்தமும் இந்துகை யாருட மானதே. கஉ

1267 ஆவின மானவை முந்நூற் றறுபது
மாவின மப்பதி னைந்தின மாயுறு
மாவின மப்பதி னெட்டுட னுயுறு
மாவின மக்கதி ரோன்வர வந்தே. கஊ

1268 வந்திடும் ஆகாசம் ஆறது காழிகை
வந்திடும் அக்காரம் மூப்பது ராசியும்
வந்திடு காளது முந்நூற் றறுபதும்
வந்திடு ஆண்டு வகுத்துரை யவ்வியே. க஋

1269 அவ்வின மூன்றுமவ் வாடது வாய்வருங்
கெவ்வின மூன்றுங் கிளர்தரு வேரதாஞ்
சவ்வின மூன்றுங் கழைத்திடுந் தண்டதாம்
இவ்வின மூன்றும் இராசிக ளெல்லாம். க஌

1270 இராசியுட் சக்கரம் எங்கும் நிறைந்தபின்
இராசியுட் சக்கர மென்றறி விந்துவாம்
இராசியுட் சக்கர காதமும் ஓத்தபின்
இராசியுட் சக்கரம் நின்றிடு மாறே. கஐ

1271 நின்றிடு விந்துவென் றுள்ள எழுத்தெல்லாம்
நின்றிடு காதமும் ஓங்கும் எழுத்துடன்
நின்றிடு மப்பதி யவ்வெழுத் தேவரில்
நின்றிடு மப்புறக் தாரகை யானதே. கக

1272 தாரகை யாகச் சமைந்தது சக்கரந்
தாரகை மேலோர் தழைத்தது பேரொளி
தாரகை சந்திரன் நற்பக லோன்வரத்
தாரகை தாரகை தாரகை கண்டதே. கஎ

1273 கண்டிடு சக்கரம் விந்து வளர்வதாங்
கண்டிடு நாதமுங் தன்மேல் எழுந்திடக்
கண்டிடு வன்னிக் கொழுந்தன வொத்திபின்
கண்டிடு மப்புறங் காரொளி யானதே. ௧௯

1274 காரொளி அண்டம் பொதிந்துல கெங்கும்
பாரொளி நீரொளி சாரொளி காலொளி
வாலொளி ஓக்க வளர்ந்து கிடந்துபின்
நேரொளி ஒன்றாய் நிறைந்தங்கு நின்றதே. ௨0

1275 நின்றது அண்டமும் நீளமும் புவியெலாம்
நின்றவிவ் வண்ட நிலைபெறக் கண்டிட
நின்றவிவ் வண்டமு மூல மலமோக்கும்
நின்றவிவ் வண்டம் பலமது விந்துவே. ௨௧

1276 விந்துவும் நாதமும் ஓக்க விழுந்திடில்
விந்துவும் நாதமும் ஓக்க விரையுதாம்
விந்திற் குறைந்திடு நாதம் எழுந்திடில்
விந்துவை எண்மடி கொண்டது வீசமே. ௨௨

1277 வீசம் இரண்டுள நாதத் தெழுவன
வீசமும் ஒன்று விளைந்திடு மேலுற
வீசமும் நாதமும் எழுந்துடன் ஒத்தபின்
வீசமும் விந்து விரிந்தது காணுமே. ௨௩

1278 விரிந்தது விந்துவுங் கெட்டது வீசம்
விரிந்தது விந்துவும் நாதத் தளவினில்
விரிந்தது வட்கட்ட எட்டிடட்டு மாகில்
விரிந்தது விந்து விரையது வாமே. ௨௪

1279 விரையது விந்து விளைந்தன எல்லாம்
விரையது விந்து விளைந்த உயிருடம்
விரையது விந்து விளைந்தவிஞ் ஞாலம்
விரையது விந்து விளைந்தவன் தானே. ௨௫

1280 விளைந்த எழுத்தது விந்துவும் நாதமும்
விளைந்த எழுத்தது சக்கர மாக

விளைந்த எழுத்தவை மெய்ப்பினுள் நிற்கும்
விளைந்த எழுத்தவை மந்திர மாமே. ௨௫

1281 மந்திரஞ் சக்கர மானவை சொல்லிடில்
தந்திரத் துள்ளெழுத் தொன்றொரி வட்டமாங்
கந்தரத் துள்ளு மிரேகையில் ஒன்றில்லை
பந்தம தாகும் பிரணவம் உன்னிடே. ௨௭

1282 உன்னிட்ட வட்டத்தில் ஓத்தெழு மந்திரம்
பின்னிட்ட ரேகை பிழைப்பது தானில்லை
தன்னிட் டெழுந்த தகைப்பறப் பின்னிற்கப்
பன்னிட்ட மந்திரம் பார்க்கலு மாமே. ௨௮

1283 பார்க்கலு மாகும் பகையறு சக்கரங்
காக்கலு மாகுங் கருத்தில் தடமெங்கும்
நோக்கலு மாகும் நுணுக்கற்ற நுண்பொருள்
ஆக்கலு மாகும் அறிந்துகொள் வார்க்கே. ௨௯

1284 அறிந்திடுஞ் சக்கர மாதி யெழுத்து
விரிந்திடுஞ் சக்கர மேலெழுத் தம்மை
பரிந்திடுஞ் சக்கரம் பாரங்கி நாலும்
குவிந்திடுஞ் சக்கரங் கூறலு மாமே. ௩0

1285 கூறிய சக்கரத் துள்ளெழு மந்திரம்
மாறியல் பாக அமைந்து விரிந்திடுந்
தேறிய அஞ்சுடன் சேர்ந்தெழு மாரண
மாறியல் பாக மதித்துக்கொள் வார்க்கே. ௩௧

1286 மதித்திடும் அம்மையும் மாமாது மாகும்
மதித்திடும் அம்மையு மங்கனல் ஓக்கும்
மதித்தங் கெழுந்தவை காரண மாகில்
கொதித்தங் கெழுந்தவை கூடகி லாவே. ௩௨

1287 கூடிய தம்பனம் மாரணம் வசியம்
மாடியல் பாக அமைந்து செறிந்திடும்
பாடியுள் ளாகப் பகைவரும் வந்துறூர்
தேடியுள் ளாகத் தெளிந்துகொள் வார்க்கே. ௩௩

1288 தெளிந்திடுஞ் சக்கர மூலத்தி னுள்ளே
அளிந்த வகாரத்தை யங்கு வாக்கிக்
குளிர்ந்த வரனைக் கூடியுள் வைத்து
வளிந்தவை யங்கெழு காடிய காலே. ஈச

1289 காலனை முக்கால் மூழுதணும் மந்திரம்
ஆலித் தெழுந்தமைந் தூறி எழுந்ததாய்ப்
பாலித் தெழுந்து பகையற நின்றபின்
மாலுற்ற மந்திர மாறிக்கொள் வார்க்கே. ஈரு

1290 கொண்டஇம் மந்திரங் கூத்தன் எழுத்ததாய்ப்
பண்டையுள் நாவிற் பகையற வின்டபின்
மன்று நிறைந்த மணிவிளக் காயிடும்
இன்றும் இதயத் தெழுந்து நமவெனே. ஈசு

89. வயிரவச் சக்கரம்

1291 அறிந்த பிரதமையோ டாறு மறிஞ்சு
அறிந்தவச் சுத்தமி மேஷிவை குற்றம்
அறிந்தவை யொன்றுவிட் டொன்றுபத் தாக
அறிந்து வலமது வாக நடவே. க

1292 நடந்து வயிரவன் சூல கபாலி
கடந்த பகைவனைக் கண்ணது போக்கித்
தொடர்ந்த வுயிரது வுண்ணும் பொழுது
படர்ந்த வுடல்கொடு பந்தாட லாமே. உ

1293 ஆமேவப் பூண்டரு ளாதி வயிரவன்
ஆமே கபாலமுஞ் சூலமுங் கைக்கொண்டங்
காமே தமருக பாசமுங் கையது
வாமே சிரத்தொடு வாளது கையே. ஊ

1294 கையவை யாறுங் கருத்துற நோக்கிடு
மெய்யது செம்மை விளங்கு வயிரவன்
துய்யரு ளத்தில் துளங்குமெய் யுற்றதாய்ப்
பொய்வகை விட்டுநீ பூசனை செய்யே. ஊ

1295 பூசனை செய்யப் பொருந்தியோ ராயிரம்
பூசனை செய்ய மதுவுட னுடுமால்
பூசனை சாந்து சவாது புழுகுநெய்
பூசனை செய்துநீர் பூசலை வேண்டுமே. ஙு

1296 வேண்டிய வாறு கலகமு மாயிடும்
வேண்டிய ஆறினுண் மெய்யது பெற்றபின்
வேண்டிய வாறு வரும்வழி நீடட
வேண்டிய வாறது வாகுங் கருத்தே. சூ

90. சாம்பவி மண்டலச் சக்கரம்

1297 சாம்பவி மண்டலச் சக்கரஞ் சொல்லிடில்
ஆம்பதம் எட்டாக விட்டிடின் மேலதாங்
காண்பதந் தத்துவ காலுள் நயனமும்
காம்பதங் கண்டபின் காடறிந் தோமே. க

1298 காடரி மண்டலம் கல்லவிக் குண்டத்துக்
கோடற வீதியுங் கொடார்ந்துள் இரண்டழி
பாடறி பத்துடன் ஆறு நடுவீதி
ஏடற காலெங் திடவகை யாமே. உ

1299 காலெங் திடவகை யுள்ளதோர் மண்டலம்
காலுகல் வீதியுள் கல்லஇ விங்கமாய்
காலுகற் கோணமும் கங்கா விலிங்கமாய்
காலுகற் பூகடு கண்ணலவ் வாறே. ங

1300 ஆறிரு பத்துகா லஞ்செழுத் தஞ்சையும்
வேறுரு வாக விளைந்து கிடந்தது
தேறி நிருமல சிவாய நமவென்று
கூறுமின் கூறிற் குறைகளுந் இல்லையே. ச

1301 குறைவதும் இல்லை குரைகழற் கூடு
மறைவது மாரண மவ்வெழுத் தாகித்
திறமது வாகத் தெளியவல் லார்க்கு
இறவில்லை என்றென் றியம்பினர் காணே. ஞ

1302 காணும் பொருளெங் கருதிய தெய்வமும்
பேணும் பதியும் பெருகிய தீர்த்தமும்
ஊணும் உணர்வும் உறக்கமுங் தானுகக்
காணுங் கனகமுங் காரிகை யாமே. சூ

1303 ஆமே எழுத்தஞ்சு மாம்வழி யேயாகப்
போமே யதுதானும் போம்வழி யேபோனல்
காமே நினைத்தன செய்யலு மாகும்
பார்மேல் ஒருவர் பகையில்லை தானே. எ

1304 பகையில்லை என்றும் பணிந்தவர் தம்பால்
நகையில்லை நாணுநம் நன்மைக ளாகும்
வினையில்லை என்றும் விருத்தமும் இல்லை
தகையில்லை தானுஞ் சலமது வாமே. அ

1305 ஆரும் உரைசெய்ய லாமஞ் செழுத்தாலே
யாரும் அறியாத ஆனந்த ரூபமாம்
பாரும் விசும்பும் பகலும் மதியதி
ஊனும் உயிரும் உணர்வது வாமே. கூ

1306 உணர்ந்தெழு மந்திரம் ஓமெனும் உள்ளே
அணைந்தெழு மாங்கத னுதிய தாகுங்
குணர்ந்தெழு சூதனுஞ் சூதியுங் கூடிக்
கணந்தெழுங் காணுமக் காமுகை யாலே. கo

91. புவனபதி சக்கரம்

1307 ககராதி யோரைந்துங் காணிய பொன்மை
அகராதி யோரா றரத்தமே போலும்
சகராதி யோர்நான்குந் தான்சுத்த வெண்மை
ககராதி மூவித்தை காமிய முத்தியே க

1308 ஓரில் இதுவே உரையும்இத் தெய்வத்தைத்
தேரிற் பிறிதில்லை யாமென்று செப்பக்கேள்
வாரித் திரிகோண மனமின்ப முத்தியுந்
தேரில் அறியுஞ் சிவகாயந் தானே. உ

1309 ஏக பராசத்தி ஈசற்காம் அங்கமே
யாகம் பராவித்தை யாழுத்தி சித்தியே
ஏகம் பராசத்தி யாகச் சிவகுரு
யோகம் பராசத்தி உண்மைளட் டாமே. கூ

1310 எட்டா கியசத்தி எட்டாகும் யோகத்துக்
கட்டாகு நாதாந்தத் தெட்டுங் கலப்பித்த
தொட்டாத விந்துவுந் தானற் றொழிந்தது
கிட்டா தொழிந்தது கீழான மூடர்க்கே. கூ

1311 ஏதும் பலமா மியந்திரா சன்னடி
ஓதிக் குருவின் உபதேசம் உட்கொண்டு
நீதங்கும் அங்க நியாசந் தனைப்பண்ணிச்
சாதங் கெடச்செம்பிற் சட்கோணந் தானிடே. கூ

1312 சட்கோணந் தன்னில் ஸ்ரீம்ஹ்ரீம் தானிட்டு
அக்கோண மாறின் தலையில்ரீங் காரமிட்
டெக்கோண முஞ்சூழ எழில்வட்டம் இட்டுப்பின்
மிக்கிரெட் டக்கர மம்முதன் மேலிடே. கூ

1313 இட்ட இதழ்கள் இடையங் தரத்திலே
அட்டஹவ் விட்டதின் மேலே உவ்விட்டுக்
கிட்ட இதழ்களின் மேலே கிரோம்சிரோம்
இட்டுவா மத்தாங் கிரோங்கென்று மேவிடே. எ

1314 மேவிய சக்கர மீது வலத்திலே
கோவை யடைவே குரோங்சிரோங் கென்றிட்டுத்
தாவில்ரீங் காரத்தாற் சக்கரஞ் சூழ்ந்து
பூவைப் புவனை பதியைப்பின் பூசியே. அ

1315 பூசிக்கும் போது புவனை பதிதன்னை
ஆசற் றகத்தினில் ஆவா கனம்பண்ணிப்
பேசிய பிராணப் பிரதிட்டை யதுசெய்து
தேசுற் றிடவே தியான மதுசெய்யே. கூ

1316 செய்ய திருமேனி செம்பட் டுடைதாஙங்
கைபிற் படையங் குசபாசத் தோடபய
மெய்யில் அணிகலன் இரத்தின மாமேனி
துய்ய முடியும் அவயவத்தில் தோற்றமே. ௯0

1317 தோற்போர்வை நீக்கித் துதித்தடைவிற் பூசித்துப்
பாற்போ னகமங் திரத்தாற் பயின்றேறத்தி
காற்பால காரதா யாசுவா காளன்று
சீர்ப்பாகச் சேடத்தை மாற்றிப்பின் சேவியே. ௯௯

1318 சேவிப் பதன்முன்னே தேவியைபுத் வாகனத்தாற்
பாவித் திதய கமலத்தே பதிவித்தங்
கியாவர்க்கும் எட்டா இயந்திர ராசன
நீவைத்துச் சேமி நினைந்தது தருமே. ௯௨

92. நவாக்கரி சக்கரம்

1319 நவாக்கரி சக்கர நாணுரை செய்யின்
நவாக்கரி ஒன்று நவாக்கரி யாக
நவாக்கரி எண்பத் தொருவகை யாக
நவாக்கரி யக்கிலீ சொளமுத லீறே. ௯

1320 சௌமுதல் அவ்வொடு வெளவுட னுங்கிரீம்
கௌவு ருமையுளுங் கலந்திரீம் சிரீமென்
றெவ்வில் எழுங்கிலீ மந்திர பாதமாச்
செவ்வுள் எழுந்து சிவாய நமவென்னே. ௨

1321 நவாக்கரி யாவது நானறி வித்தை
நவாக்கரி யுள்ளெழும் நன்மைகள் எல்லாம்
நவாக்கரி மந்திர நாவுளே ஓத
நவாக்கரி சத்தி நலந்தருந் தானே. ௩

1322 நலந்தரு ஞானமுங் கல்வியும் எல்லாம்
உரந்தரு வல்வினை யும்மைவிட் டோடிச்
சிரந்தரு தீவினை செய்வ தகற்றி
வரந்தரு சோதியும் வாய்த்திடுங் காணே. ௪

1323 கண்டிடுஞ் சக்கரம் வெள்ளிபொன் செம்பிடை
கொண்டிடும் உள்ளே குறித்த வினைகளை
வென்றிடு மண்டலம் வெற்றி தருவிக்கும்
நின்றிடுஞ் சக்கரம் நினைக்கு மளவே. ரு

1324 நினைத்திடு மச்சிரீ மக்கிலீ மீறு
நினைத்திடுஞ் சக்கர மாதிபு மீறு
நினைத்திடு நெல்லொடு டுல்லினை யுள்ளே
நினைத்திடும் அருச்சனை நேர்தரு வாளே. சூ

1325 நேர்தரு மத்திரு நாயகி யானவள்
யாதொரு வண்ணம் அறிந்திடும் பொற்பூவை
கார்தரு வண்ணங் கருதின கைவரும்
கார்தரு வண்ணம் கடந்திடு நீயே. எ

1326 கடந்திடும் பாரினில் நன்மைகள் எல்லாங்
கடந்திடுங் காலனும் எண்ணிய நாளுந்
படர்ந்திடு நாமமும் பாய்கதிர் போல
அடைந்திடு வண்ணம் அடைந்திடு நீயே. அ

1327 அடைந்திடும் பொன்வெள்ளி கல்லுடன் எல்லாம்
அடைந்திடு மாதி யருளுந் திருவும்
அடைந்திடும் அண்டத் தமரர்கள் வாழ்வும்
அடைந்திடும் வண்ணம் அறிந்திடு நீயே. கூ

1328 அறிந்திடு வார்கள் அமரர்க ளாகத்
தெரிந்திடு வானோர் தேவர்கள் தேவன்
பரிந்திடும் வானவன் பாய்புனல் சூடி
மூரிந்திடு வானை முயன்றிடு நீரே. கo

1329 நீர்பணி சக்கரம் நேர்தரு வண்ணங்கள்
பாரணி யும்ஹரீ முன்பூ மீறுந்
தாரணி யும்புகழ்த் தையல்கல் லாள்தன்னைக்
காரணி யும்பொழிற் கண்டுகொள் ளீரே. கக

1330 கண்டுகொள் ளுந்தனி நாயகி தன்னையும்
மொண்டுகொ ளும்முக வசியம தாயிடும்

பண்டுகொ ளும்பர மாய பரஞ்சுடர்
நின்றுகொ ளும்நிலை பேறுடை யாளையே. கஉ

1331 பேறுடை யாள்தன் பெருமையை எண்ணிடில்
நாடுடை யார்களும் நம்வச மாகுவர்
மாறுடை யார்களும் வாழ்வது தானிலை
கூறுடை யாளையுங் கூறுமின் நீரே. கஙு

1332 கூறுமின் எட்டுத் திசைக்குந் தலைவியை
யாறுமின் அண்டத் தமரர்கள் வாழ்வென
மாறுமின் வையம் வரும்வழி தன்னையுந்
தேறுமின் நாயகி சேவடி சேர்ந்தே. கச

1333 சேவடி சேரச் செறிய இருந்தவர்
காவடி யுள்ளே கவின்றுநின் றேத்துவர்
பூவடி யிட்டுப் பொலிய இருந்தவர்
மாவடி காணும் வகையறி வாரே. கஞ

1334 ஐம்முத லாக வளர்ந்தெழு சக்கரம்
மைம்முத லாக அமர்ந்தீ மீளுகும்
அம்முத லாகி யவர்க்குடை யாடினை
மைம்முத லாக வழுத்திடு நீயே. கசு

1335 வழுத்திடு நாவுக் கரசிவள் தன்னைப்
பகுத்திடும் வேதமெய் யாகம மெல்லாந்
தொகுத்தொரு நாவிடை சொல்லவல் லாளை
முகத்துளும் முன்னெழுக் கண்டுகொ ளீரே. கஎ

1336 கண்டஇச் சக்கரம் நாவில் எழுதிடிற்
கொண்டஇம் மந்திரங் கூத்தன் குறியதா
மன்றினுள் வித்தைபு மாலுடர் கையதாய்
வென்றிடும் வையக மெல்லியல் மேவியே. கஅ

1337 மெல்லிய லாகிய மெய்ப்பொரு ளாடன்னைச்
சொல்லிய லாலே தொடர்ந்தங் கிருந்திடும்
பல்லிய லாகப் பரந்தெழு நாள்பல
நல்லியல் பாலே நடந்திடுந் தானே. கஙு

1338 கடந்திடு காவினுள் நன்மைகள் எல்லாந்
தொடர்ந்திடுந் சொல்லொடு சொற்பொருள் தானும்
கடந்திடுங் கல்விக் கரசிவ னாகப்
படர்ந்திடும் பாரிற் பகையில்லை தானே. ௨0

1339 பகையில்லை கௌமுத லியது வீரு
நகையில்லை சக்கர நன்றறி வார்க்கு
மிகையில்லை சொல்லிய பல்லுரு வெல்லாம்
வகையில்லை யாக வணங்கிடுந் தானே. ௨௪

1340 வணங்கிடுந் தத்துவ நாயகி தன்னை
நலங்கிடு கல்லுயி ரானவை யெல்லாங்
கலங்கிடுங் காம வெகுளி மயக்கந்
துலங்கிடுஞ் சொல்லிய சூழ்வினை தானே. ௨௨

1341 தானே கழறித் தணியவும் வல்லணுப்
தானே நினைத்தவை சொல்லவும் வல்லணுப்
தானே தனிநடங் கண்டவள் தன்னையுந்
தானே வணங்கித் தலைவனு மாமே. ௨௩

1342 ஆமே யனைத்துயி ராகிய அம்மையுந்
தாமே சகலமும் ஈன்றவுத் தையலும்
ஆமே யவளடி போற்றி வணங்கிடிற்
போமே வினைகளும் புண்ணிய முகுமே. ௨௪

1343 புண்ணிய முகிப் பொருந்தி உலகெங்கும்
கண்ணிய முகிக் கலந்தங் கிருந்திடுந்
தண்ணிய முகித் தரணி முழுதுக்கும்
அண்ணிய முகி அமர்ந்திருந் தானே. ௨௫

1344 தானது கம்மிறீக் கௌவது ஈரும்
கானது சக்கர நன்றறி வார்க்கெல்லாம்
கானது கன்னி கலந்த பராசத்தி
கேளது வையங் கிளரொளி யானதே. ௨௬

1345 ஒளிக்கும் பராசத்தி உள்ளே அமரிற்
களிக்கும்இச் சிந்தையிற் காரணங் காட்டித்

தெளிக்கு மழைபுடன் செல்வமுண் டாக்கும்
அளிக்கும் இவளை அறிந்துகொள் வாக்கே. உஎ

1346 அறிந்திடுந் சக்கரம் அருச்சுன னேமேடை
எறிந்திடும் வையத் திடரவை காணின்
மறிந்திடு மன்னனும் வந்தென செய்யும்
பொறிந்திடுந் சிந்தை புகையில்லை தானே. உஅ

1347 புகையில்லை சொல்லிய பொன்னெளி யுண்டாங்
குகையில்லை கொல்வ திலாமையி னேலே
வகையில்லை வாழ்கின்ற மன்னுயிர்க் கெல்லாஞ்
சிகையில்லை சக்கரஞ் சேர்ந்தவர் தாமே. உக

1348 சேர்ந்தவர் என்றுந் திசையொளி யானவர்
காய்ந்தெழு மேல்வினை காணகி லாதவர்
பாய்ந்தெழும் உள்ளொளி பாரிற் பரந்தது
மாய்ந்தது காரிருள் மாலெளி தானே. ஙo

1349 ஒளியது வெளமுன் கிரீமது ஈரங்
களியது சக்கரங் கண்டறி வார்க்குத்
தெளிவது ஞானமுஞ் சிந்தையுந் தேறப்
பணிவது பஞ்சாக் கரமது வாமே. ஙக

1350 ஆமே சதாசிவ நாயகி யானவள்
ஆமே அதோமுகத் துள்ளறி வானவள்
ஆமே சுவையொளி யூறுரூசை கண்டவள்
ஆமே யனைத்துயிர் தன்னுரு மாமே. ஙஉ

1351 தன்னுரு மாகித் தரணி முழுதுங்கொண்
டென்னுரு மாகி இடம்பெற நின்றவள்
மண்ணுரும் நீரனல் காலுரும் வானுருங்
கண்ணுரும் மெய்புருங் காணலு மாமே. ஙங

1352 காணலு மாகுங் கலந்துயிர் செய்வன
காணலு மாகுங் கருத்து ளிருந்திடிற்
காணலு மாகுங் கலந்து வழிசெயக்
காணலு மாகுங் கருத்துற நில்லே. ஙச

1353 நின்றிடும் ஏழு புவனமும் ஒன்றுகக்
கண்டிடும் உள்ளங் கலந்தெங்குந் தாணுகக்
கொண்டிடும் வையங் குணம்பல தன்னையும்
விண்டிடும் வல்வினை மெய்ப்பொரு ளாகுமே. ஈரு

1354 மெய்ப்பொரு ளெளமுதல் வெளவது ஈருக்
கைப்பொரு ளாகக் கலந்தெழு சக்கரந்
தற்பொரு ளாகச் சமைந்தமு தேற்வரி
நற்பொரு ளாக நடுவிருந் தாளே. ஈசு

1355 தாளதி னுள்ளே சமைந்தமு தேற்வரி
காலது கொண்டு கலந்துற வீசிடில்
நாளது நாளும் புதுமைகள் கண்டபின்
கேளது காயமுங் கேடில்லை காணுமே. ஈஎ

1356 கேடில்லை காணுங் கிளரொளி கண்டபின்
நாடில்லை காணும் நாண்முத லற்றபின்
மாடில்லை காணும் வரும்வழி கண்டபின்
காடில்லை காணுங் கருத்துற் றிடத்துக்கே. ஈஅ

1357 உற்றிட மெல்லாம் உலப்பில்பா ழாக்கிக்
கற்றிட மெல்லாங் கதிவெளி யானது
மற்றிட மில்லை வழிபில்லை தானில்லைச்-
சற்றிட மில்லை சலிப்பற நின்றிடே. ஈகூ

1358 நின்றிடும் ஏழ்கடல் ஏழ்புவி எல்லாம்
நின்றிடும் உள்ளம் நினைத்தவை தாமெனைக்கும்
நின்றிடுஞ் சத்தி நிலைபெறக் கண்டிட
நின்றிடும் மேலை விளக்கொளி தானே. ச0

1359 விளக்கொளி யெளமுத லெளவது ஈரு
விளக்கொளி சக்கரம் மெய்ப்பொரு ளாகும்
விளக்கொளி யாகிய மின்கொடி யாளை
விளக்கொளி யாக விளங்கிடு நீயே. சக

1360 விளங்கிடு மேல்வரு மெய்ப்பொருள் சொல்லின்
விளங்கிடு மெல்லிய லானது வாகும்

விளங்கிடு மெய்ன்ற ஞானப் பொருளை
விளங்கிடு வாக்கள் விளங்கினர் தானே. சஉ

1361 தானே வெளியென எங்கும் நிறைக்குவள்
தானே பரமம் வெளியது வானவள்
தானே சகலமு மாக்கி அழித்குவள்
தானே யனைத்துள அண்ட சகலமே. சஊ

1362 அண்டத்தி னுள்ளே அளப்பரி தானவள்
பிண்டத்தி னுள்ளே பெருவெளி கண்டவள்
குண்டத்தி னுள்ளே குணம்பல காணினுங்
கண்டத்தில் நின்ற கலப்பறி யாள்தானே. சக

1363 கலப்பறி யாள்கடல் சூழுல கெல்லாம்
உலப்பறி யாருட லோடுயிர் தன்னைச்
சிலப்பறி யாச்சில தேவரை நாடித்
தலைப்பறி யாகச் சமைத்தவர் தானே. சஎ

1364 தானே எழுத்தஞ் சக்கரஞ் சொல்லிடன்
மானே மதிவரை பத்திட்டு வைத்தபின்
தேனே யிரேகை திகைப்பற வொன்பதில்
தானே கலந்த வரையெண்பத் தொன்றுமே. சஏ

1365 ஒன்றிய சக்கரம் ஓதிடும் வேளையில்
வென்றிகொள் மேனி மதிவட்டம் பொன்மையாங்
கன்றிய ரேகை கலந்திடுஞ் செம்மையில்
என்றிய லம்மை எழுத்தவை பச்சையே. சஐ

1366 எய்ந்த மாவரி தன்னில் எழுதிய
வாய்ந்தஇப் பெண்ணெண்பத் தொன்றில் நிலைத்தபின்
காய்ந்தவி நெய்புட் கலந்துடன் ஓமமு
மாந்தலத் தாழுயி ராகுதி பண்ணுமே. சஒ

1367 பண்ணிய பொன்னைப் பரப்பற நீபிடி
எண்ணிய காட்களில் இன்பமும் எய்திடும்
கண்ணிய காமமும் கான்முகன் ஒத்தபின்
துண்ணென தேயகற் சேர்க்கலு மாமே. சகூ

1368 ஆகின்ற சந்தனங் குங்குமங் கத்தூரி
போகின்ற சாந்து சவாது புழுகுநெய்
ஆகின்ற கற்பூர மாகோ சனநீருஞ்
சேர்கின்ற ஒன்பதுஞ் சேரநீ வைத்திடே. நூ

1369 வைத்திடும் பொன்னுடன் மாதவ நோக்கிடிற்
கைச்சிறு கொங்கை கலந்தெழு கன்னிபைத்
தச்சிது வாகச் சமைந்தஇம் மந்திரம்
அர்ச்சனை யாயிரம் ஆயிரஞ் சிந்தியே நூ

1370 சிந்தையி னுள்ளே திகழ்தரு சோதியாய்
எந்தை கரங்கள் இருமூன்றும் உள்ளது
பந்தமா சூலம் படைபாசம் வில்லம்பு
முந்தை கிலீமெழு முன்னிருந் தாளே. நூ

1371 இருந்தனர் சத்திகள் அறுபத்து நால்வர்
இருந்தனர் கன்னிகள் எண்வகை எண்மர்
இருந்தனர் சூழ எதிர்சக் கரத்தே
இருந்த காமிரு வில்லம்பு கொண்டே. நூ

1372 கொண்ட கனகங் குழைமுடி யாடையாய்க்
கண்டஇம் முத்தங் கனல்திரு மேனியாய்ப்
பண்டமர் சோதிப் படரித ழானவள்
உண்டங் கொருத்தி உனரவல் லாருக்கே. நூ

1373 உணர்ந்திருந் துள்ளே ஒருத்தியை நோக்கிற்
கலந்திருந் தெங்குங் கருணை பொழியும்
மணந்தெழும் ஓசை யொளியது காணுங்
தணந்தெழு சக்கரந் தான்தரு வாளே. நூ

1374 தருவழி யாகிய தத்துவ ஞானங்
குருவழி யாகுங் குணங்களுள் நின்று
கருவழி யாகுங் கணக்கை யறுத்துப்
பெருவழி யாக்கும் பேரொளி தானே. நூ

1375 பேரொளி யாய பெரிய பெருஞ்சுடர்
சீரொளி யாகித் திகழ்தரு நாயகி

காரொளி யாகிய கன்னிகை பொன்னிறம்
பாரொளி யாகிப் பரந்துநின் றூளை. நெ

1376 பரந்த கரம்இரு பங்கயம் ஏந்திக்
குவிந்த கரமிரு கொப்புளிர்ப் பாணி
பரிந்தருள் கொங்கைகண் முத்தார் பவளம்
இருந்தநல் லாடை மணிபொதிந் தன்றே. நஅ

1377 மணிமுடி பாதஞ் சிலம்பணி மங்கை
அணிபல வன்றி யருளில்லை யாகுந்
தணிபவர் நெஞ்சினுள் தன்னரு ளாகிப்
பணிபவர்க் கன்றே பரகதி யாமே. நக

1378 பரந்திருந் துள்ளே அறுபது சத்தி
கரந்தன கன்னிகள் அப்படி சூழ
மலர்ந்திரு கைபின் மலரவை ஏந்தச்
சிறந்தவர் எத்துஞ் சிறீம்தன மாமே. நஎ

1379 தனமது வாகிய தைபலி நோக்கி
மனமது வோடி மறிக்கிலோ ராண்டிற்
கனமலை யற்றுக் கருதிய நெஞ்சந்
தினகர னரிட செய்திய தாமே. நஏ

1380 ஆகின்ற மூலத் தெழுந்த முழுமலர்
போகின்ற பேரொளி யாய மலரதாய்ப்
போகின்ற பூரண மாக நிறைந்தபின்
சேர்கின்ற செந்தழல் மண்டல மானதே. நஐ

1381 ஆகின்ற மண்டலத் துள்ளே அமர்ந்தவள்
ஆகின்ற ஐம்பத் தறுவகை யானவள்
ஆகின்ற ஐம்பத் தறுசத்தி நேர்தரு
ஆகின்ற ஐம்பத் தறுவகை சூழுமே. நஒ

1382 சூழ்ந்தெழு சோதி சுடர்முடி பாதமாய்
ஆழ்கணி முத்தம் அழகிய மேனியுந்
தாங்கிய கையவை தார்கினி ஞானமாய்
ஏந்து கரங்கள் எடுத்தமர் பாசமே. நஓ

1383 பாசமு தாகிய வேரை யறுத்திட்டு
தேசமீ தாக நினைத்திரு மும்மூளை
நாசமு தெல்லாம் நடந்திடும் ஐயாண்டிற்
காசினி மேலமர் கண்ணுத லாகுமே. சுரு

1384 கண்ணுடை நாயகி தன்னரு ளாம்வழி
பண்ணுறு நாதப் பகைபற நின்றிடில்
விண்ணமர் சோதி விளங்க வறிவங்கா
மண்ணுடை நாயகி மண்டல மாகுமே. சுசு

1385 மண்டலத் துள்ளே மலர்ந்தெழு கீபத்தைக்
கண்டகத் துள்ளே கருதி யிருந்திடும்
விண்டகத் துள்ளே விளங்கி வருதலால்
நண்டகத் துள்ளன்னை நாயகி யாமே. சுன

1386 நாயகி நாடிக் கடமலர் மண்டலத்
தோயாங்கி னெழுங்கலிக் குள்ளுணர் வானவள்
எங்க வருமிறப் பெண்ணி யறுத்திட
வாங்கிய நாதம் வலியுட னுகுமே. சுஅ

1387 நாயகி நன்மணி பூணரம்
பூயகி பொன்முடி யாடையாம்
பாயகி பாலொத்த வண்ணத்துள்
ஆயகி அங்கமர்ந் தாளே. சுக

1388 அன்றிரு கையில் அளந்த பொருள்முறை
இன்றிரு கையில் எடுத்தவெண் குண்டிகை
மன்றது காணும் வழியது வாகவே
கண்டங் கிருந்தவர் காரணி காணுமே. எ0

1389 காரணி சத்திகள் ஐம்பத் திரண்டெனக்
காரணி கன்னிகள் ஐம்பத் திருவராய்க்
காரணி சக்கரத் துள்ளே கரந்தெங்குங்
காரணி தன்னரு ளாகிநின் றாளே. எக

1390 நின்றஇச் சத்தி நிலைபெற நின்றிடற்
கண்டஇவ் வன்னி கலந்திடும் ஓராண்டிற்

கொண்ட விரதநீர் குன்றுமல் நின்றிடின்
மன்றினி லாடி மணிபது காணுமே. எஉ

1391 கண்டஇச் சத்தி இருதய பங்கயங்
கொண்டஇத் தத்துவ நாயகி யானவள்
பண்டையவ் வாயுப் பகையை யறுத்திட
இன்றென் மனத்துள் இனிதிருந் தாளை. எஊ

1392 இருந்தவிச் சத்தி இருகா லுகையிற்
பரந்தஇப் பூங்கிளி பாச மழுவாள்
கரந்திடு கேடகம் வில்லட்டு கொண்டங்
குரந்தங் கிருந்தவள் கூத்துகந் தாளை. எச

1393 உகந்தனள் பொன்முடி முத்தா மாகப்
பரந்த பவளமும் பட்டாடை சாத்தி
மலர்ந்தெழு கொங்கை மணிக்கச் சணிந்து
தழைந்தங் கிருந்தவள் தான்பச்சை யாமே. எந

1394 பச்சை இவளுக்குப் பாங்கிமார் ஆறுபட்டு
கொச்சையார் எண்மர்கள் கூடி வருதலாற்
கச்சணி கொங்கைகள் கையிரு காப்பதாய்
எச்ச விடைக்கி இனிதிருந் தாளை. எசு

1395 தாளது னுள்ளே தாங்கிய சோதியைக்
காலது வாகக் கலந்துகொள் என்று
மாலது வாக வழிபாடு செய்துநீ
பாலது போலப் பரந்தெழு விண்ணிலே. என

1396 விண்ணமர் நாபி இருதய மாங்கிடைக்
கண்ணமர் கூபங் கலந்து வருதலாற்
பண்ணமர்ந் தாதித்த மண்டல மானது
தண்ணமர் கூபந் தழைத்தது காணுமே. எஅ

1397 கூபத்துச் சத்தி குளிர்முகம் பத்துள
தாபத்துச் சத்தி தயங்கி வருதலால்
ஆபத்துக் கைகள் அடைந்தன காலங்து
பாசம் அறுக்கப் பரந்தன சூலமே. எக

1398 கூலக்கண் டொள்வாள் சுடர்ப்பறை ஞானமாய்
மேலம்பு தடமுக மாகினி விற்கொண்டு
காலம்பூப் பாசம் மழுகத்தி னைக்கொண்டு
கோலஞ்சீர் சங்கு குவிந்தனை எண்ணேழே. அ0

1399 எண்ணைமர் சத்திகள் நாற்பத்து நாலுடன்
எண்ணைமர் சத்திகள் நாற்பத்து நால்வராம்
எண்ணிய பூவிக ழுள்ளே யிருந்துவள்
எண்ணிய எண்ணங் கடந்துநின் றாளே. அக

1400 கடந்தவள் பொன்முடி மாணிக்கத் தோடு
தொடர்ந்தணி மூத்து பவளங்கச் சாகப்
படர்ந்தல்குற் பட்டாடை பாதச் சிலம்பு
மடந்தை சிறியவள் வந்துநின் றாளே. அஉ

1401 நின்றுநிச் சத்தி நிரந்தர மாகவே
கண்டநி மேரு வணிடாதி நாலெகிப்
பண்டைய வானின் பகட்டை யறுத்திட்
டொன்றிய தீபம் உணர்ந்தார்க் குண்டாமே. அங

1402 உண்டோர் அதோமுகம் உத்தம மானது
கண்டஇச் சத்தி சதாசிவ நாயகி
கொண்ட முகமைந்து கூறுங் கரங்களும்
நன்றிரண் டாகவே மூன்றுநா லானதே. அச

1403 கன்மணி சூலங் கபாலங் கிளிபுடன்
பன்மணி நாகம் மழுகத்தி பந்தாகுங்
கன்மணி தாமரைக் கையில் தமருகம்
பொன்மணி பூணாரம் பூசின யானதே. அஞ

1404 பூசனைச் சத்திகள் எண்ணிலவர் சூழவே
தேசவள் கன்னிகள் நாற்பத்து நேரதாய்க்
காசினிச் சக்கரத் துள்ளே கலந்தவள்
மாசடை யாமல் மகிழ்ந்திருந் தார்களே. அசு

1405 தாரத்தி னுள்ளே தங்கிய சோதியைப்
பாரத்தி னுள்ளே பரந்துள் எழுந்திட

வேதது வொன்றிநின் றெண்ணு மதேயைடையக்
காதது போலக் கலந்தெழு மண்ணீரே: அன

1406 மண்ணில் எழுந்த அகார உகாரங்கள்
விண்ணில் எழுந்து சிவாய கடவென்று
கண்ணில் எழுந்தது காண்பரி தன்றிகால்
கண்ணில் எழுந்தது காட்சி தரனன்றே. அஅ

1407 என்றங் கிருந்த அழுத கலியினைடச்
சென்றங் கிருந்த அழுத பதேயாகரி
கண்டங் கரமிரு வெள்ளிடபான் மண்ணைட
கொண்டங் கிருந்தது வண்ணம் அழுதே. அக

1408 அழுதம தாக அழகிய மேனி
படிகம தாகப் பரந்தெழு முள்ளை
குழுதம தாகக் குளிர்ந்தெழு முத்துக்
கெழுதம தாகிய கேடிலி தானை. கூ0

1409 கேடிலி சந்திகள் முப்பத் தறுவரும்
காடுவி கன்னிகள் காலொன் பதின்மரும்
பூவிலி பூவிதழ் உள்ளை யிருந்திவர்
காளிலி தன்னை கறைகிநின் றார்களை. கூக

1410 நின்றது புந்தி நிறைந்திடும் வன்னியுங்
கண்டது சோதி கருத்துள் இருந்திடக்
கொண்டது வோராண்டு கூடி வருகைக்கு
விண்ட வெளகாரம் விளங்கின அன்றே. கூஉ

1411 விளங்கிடு வானிடை நின்றவை யெல்லாம்
வணங்கிடு மண்டலம் மன்னுயி ராக
கலங்கினர் கன்மைகள் காரண மெனத்துச்
சுணங்கிடை நின்றிவை சொல்லலு மாமே. கூங

1412 ஆமே அதேதாமுக மேலே அழுதமாய்த்
தாமே யுகாரந் தழைத்தெழுஞ் சோமனுங்
காமேல் வருகின்ற கற்பக மானது
பூமேல் வருகின்ற பொற்கொடி யானதே. கூச

1413 பொற்கொடி யாளுடைப் பூசனை செய்திட
அக்கனி யாகிய ஆங்காரம் போயிடும்
மற்கட மாகிய மண்டலந் தன்னுளே
பிற்கொடி யாகிய பேதையைக் காணுமே. கூடு

1414 பேதை யிவளுக்குப் பெண்மை அழகாகுந்
தாதை யிவளுக்குத் தாயுவு மாய்நிற்கும்
மாதை யவளுக்கு மண்ணுறுந் திலகமாய்க்
கோதைதாள் சூழக் குவிந்திடங் காணுமே. கூசு

1415 குவிந்தனர் சத்திகள் மூப்பத் திருவர்
நடந்தனர் கன்னிகள் நாலெண்மர் சூழப்
பரந்தது ஆகிய பங்கயத் துள்ளே
இருந்தனள் காணும் இடம்பல கொண்டே. கூன

1416 கொண்டடங் கிருந்தனர் கூத்தன் ஒளியினைக்
கண்டடங் கிருந்தனர் காரணத் துள்ளது
பண்டை மறைகள் பரந்தெங்குந் தேடுமாம்
இன்றென் மனத்துளே இல்லடைந் தானுமே. கூஅ

1417 இல்லடைந் தாயுக்கும் இல்லாத தொன்றில்லை
இல்லடைந் தாயுக் கிரப்பது தானில்லை
இல்லடைந் தாயுக் கிமையவர் தாமொவ்வார்
இல்லடைந் தாயுக்கு இல்லாதில் லானையே. கூகூ

1418 ஆனை மயக்கும் அறுபத்து நாற்றறி
ஆனை யிருக்கும் அறுபத்து நாலொளி
ஆனை யிருக்கும் அறுபத்து நாலறை
ஆனையுங் கோடும் அறுபத்து நாலிலே. கூ00

நாலாந் தந்திரம் முற்றிற்று.

ஐந்தாந் தந்திரம்

93. சுத்த சைவம்

1419 உளநும் உலகமும் ஒக்கப் படைக்கின்று
பேதறி வானன் பெருமை குறித்துடன்
மேருவும் மூவுல காளி யிலக்கெழுந்
தாணி கால்வகைச் சைவமு மாமே.

1420 சுத்தமும் அசுத்தமுஞ் சுகசத்தங் தான்மன்னி
சித்தமும் அசித்தமுஞ் சேர்வுற மேதித்த
சுத்தகம் அசுத்தமுஞ் சேர்வுற மேன்மையு
நித்தகம் பரஞ்சுத்த மைவர்க்கு நேயமே.

1421 கற்பன கற்றுக் கசிவுமன்று மெய்ப்பொருள்
மூற்பத ஞான மூலமுமை கண்ணியே
சொற்பத மேவித் துரிசற்று மேலான
தற்பரங் கண்டுதீனார் சைவசித் தாந்தரே.

1422 மெய்தாந்தஞ் சுத்தகம் விளங்கிய சித்தாந்த
காதாந்தங் கண்டோர் கதிக்கற்ற காட்சியர்
பூதாந்த போதாந்த மாகப் புனைந்தெய்ப்ப
காதாந்த பூரணர் ஞானதே யத்தரே.

94. அசுத்த சைவம்

1423 இணையார் திருவடி வத்துஞ் சிரங்கத்
தினையார் இணைக்குழை யீரணை மூக்கினை
குணமா நிணைக்கண்ட மாலையுங் குன்று
தனைவாஞ் சரியை கிரியையி னர்க்தீக.

1424 காதுப்பொ னர்ந்த கதிக்கன் இரண்டுசேர்த்
தோதுந் திருமேனி யுட்கட் டிரண்டுடன்
சோதனை செய்து துவாதெச மார்க்கராய்
ஓதி யிருப்பார் ஒருசைவ ராகுமே.

1425 கண்டங்கள் ஒன்பதுங் கண்டவர் கண்டனர்
கண்டங்கள் ஒன்பதுங் கண்டாய் அரும்பொருள்
கண்டங்கள் ஒன்பதுங் கண்டவர் கண்டமாங்
கண்டங்கள் கண்டோடார் கடிஞ்சுத்த சைவரே. ரு

1426 ஞானி புவியெழு கன்னூ லினைத்துடன்
மோன திசையும் முழுஎண்ணென் சித்தியும்
எனை நிலமும் எழுதா மறையீறுங்
கோனெறி தன்னையுங் காணுங் குணத்தனே. சு

95. மார்க்க சைவம்

1427 பொன்னுற் சிவசாத னம்பூதி சாதனம்
நன்மார்க்க சாதனம் மாஞான சாதனந்
துன்மார்க்க சாதனந் தோன்றுத சாதனஞ்
சன்மார்க்க சாதன மாஞ்சுத்த சைவர்க்கே. க

1428 கேடறு ஞானி கிளர்ஞான பூபதி
பாடறு வேதாந்த சித்தாந்த பாகத்தின்
ஊடுறு ஞாலை தபவுண்மை முத்தியோன்
பாடுறு சுத்தசை வப்பத்த நித்தனே. உ

1429 ஆகமம் ஒன்பா னதிலான நாலெழு
மோகமி லுலெழு முப்பேத முற்றுடன்
வேகமில் வேதாந்த சித்தாந்த மெய்மையொன்
றாக முடிந்த வருஞ்சுத்த சைவமே. ங

1430 சுத்தம் அசுத்தந் துரியங்கள் ஓரேழுஞ்
சுத்தும் அசுத்துங் தணைந்த பராபரை
உய்த்த பராபரை யுள்ளாம் பராபரை
அத்தன் அருட்சத்தி யாயெங்கு மாமே. ச

1431 சுத்தும் அசுத்துங் தணைந்தவர் தாணுகிச்
சித்தும் அசித்துங் தெரியாச் சிவோகமாய்
முத்தியுள் ஆனந்த சத்தியுள் மூழ்கினர்
சித்தியு மங்கே சிறந்துள தானே. ஞ

1432 தன்னைப் பரனைச் சதாசிவன் என்கின்ற
மன்னைப் பதிபசு பாசத்தை டாசற்ற
முன்னைப் பழமல முன்கட்டை வீட்டினை
உன்னத் தகுஞ்சுத்த சைவர் உபாயமே. கூ

1433 பூரணந் தன்னிலை வைத்தற்ற வப்போதே
மாரண மந்த மதித்தானந் தத்தோடு
நேரென ஈராறு நீதி நெடும்போகங்
காரண மாஞ்சுத்த சைவர்க்குக் காட்சியே. எ

1434 மாறுத ஞான மதிப்பற மாயோகந்
தேறுத சிந்தையைத் தேற்றிச் சிவமாக்கிப்
பேறுன பாவினை பேணி நெறிநிற்றல்
கூறுகு ஞானி சரிதை குறிக்கிலே. அ

1435 வேதாந்தங் கண்டோர் பிரமமித் தியாதரர்
கோதாந்தங் கண்டோர் கடுக்கற்ற யோகிகள்
வேதாந்த மல்லாத சித்தாந்தங் கண்டிலர்
சாதா ரணமன்ன சைவர் உபாயமே. கூ

1436 விண்ணினைச் சென்றுறு காவியன் மேகங்கள்
கண்ணினைச் சென்றுறு காப்பல காட்சிகள்
எண்ணினைச் சென்றுறு காம லெனைப்படும்
அண்ணலைச் சென்றுறு காபச பாசமே. கo

1437 ஒன்றும் இரண்டும் இலதுமாய் ஒன்றுக
நின்று சமய நிராகார நீங்கியே
நின்று பராபரை நேயத்தைப் பாதத்தாற்
சென்று சிவமாதல் சித்தாந்த சித்தியே. கக

96. கடுஞ்சுத்த சைவம்

1438 வேடங் கடந்து விகிர்தன்றன் பான்மேவி
ஆடம் பரமின்றி ஆசாபா சஞ்செற்றுப்
பாடொன்று பாசம் பசுத்துவம் பாழ்படச்
சாடுஞ் சிவமோ தகுசுத்த சைவரே. கூ

1439 உடலான ஐக்கையும் ஓராறும் ஐந்து
படலான மாமாயை மற்றுள்ள தீவப்
படலான சிகவல் பாசக் துடைத்துத்
திடமாத் தனையுற்றல் சிந்தாந்த டார்க்கமே. உ

1440 சுத்தச் சிவனுரை யானதில் தோயாமல்
பூத்தப் பகப்பொருள் முத்திவித் தாமூலம்
அத்தனை யான்மா அதீன அடைந்தற்றூற்
சுத்தச் சிவடாவ தீசுத்த சைவதீர. ங

1441 தானென்றுந் தானென்றும் தாடுதான் சாரதீவ
தானென்று தானென்ற நிரண்டுலாத் தற்பதந்
தானென்று தானென்ற தத்துவ நல்கலால்
தானென்று தானென்றுஞ் சாற்றகில் லேனே. ச

1442 சாற்றரி தாகிய தத்துவஞ் சித்தித்தால்
ஆற்றரி தாகிய ஐந்தும் அடங்கிடும்
சேற்றிகழ் ஞானம் விளக்கொளி யாய்நிற்கும்
பாற்பட சாபுச்சிய மாகும் பதியே. ஞ

97. சரியை

1443 நோக்கிடு மூல சரியை நெறியிதென்
றூய்க்திடுங் காலாங்கி கஞ்ச மலையமான்
ஓர்க்திடுங் கந்துரு கேண்மின்கள் பூதலத்
தோர்க்திடுஞ் சுத்த சைவத் துயிரதே. க

1444 உயிர்க்குயி ராய்நிற்றல் ஒண்ஞான பூசை
உயிர்க்கொளி நோக்கல் மகாயோக பூசை
உயிர்ப்பெறு மாவா கனம்புறப் பூசை
செயிற்கடை நேசஞ் சிவபூசை யாமே. உ

1445 நாடு நகரமும் நற்றிருக் கோயிலுங்
தேடித் திரிந்து சிவபெரு மான்னென்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாய்க் கொள்வனே. ங

1446 பத்தர் சரிதை படுவோர் கிரியையோர்
அத்தகு தொண்டர் அருள்வேடத் தாகுவோர்
சுத்த வியமாதி சாதகர் தூயோராகர்
சித்தர் சிவஞானஞ் சென்றெய்து வோர்களே. க

1447 சார்ந்தமெய்ஞ் ஞானத்தோர் தானவ ளுயிரினோர்
சேர்ந்தவெண் யோகத்தர் சித்தர் சமாதியோர்
ஆய்ந்த கிரியையோர் அருச்சனை தப்பாதோர்
கோர்ந்த சரியையோர் நீள்நிலத் தோரே. ங

1448 கிரியை யோகங்கள் கிளர்ஞான பூசை
அரிய சிவனுரு அமரும் அருபக்
தெரியும் பருவத்துத் தோர்ந்திடும் பூசை
உரியன கேடுத் துயர்பூசை யாமே. ச

1449 சரியாதி நான்குந் தருஞான நான்கும்
விரிவான வேதாந்த சித்தாந்த மாறும்
பொருளான தூகந்தி பொன்னகர் போந்து
மருளாகு மாந்தர் வணங்கலைத் தானே. ஞ

1450 சமையம் பலசுத்திக் தன்செயல் அற்றிடம்
அமையும் விசேடமும் அரன்மந் திரசுத்தி
சமைய நிருவாணங் கலாசுத்தி யாகும்
அமைமன்னு ஞானமார்க் கம்அபி டேகமே. ட

98. கிரியை

1451 பத்துத் திசையும் பரமொரு தெய்வமுண்
டெத்திக் கிலரில்லை என்பதின் அமலர்க்
கொத்துத் திருவடி நீழல் சரணைனத்
தத்தும் வினைக்கடல் சாராது காணுமே. த

1452 காணுறு கோடி கடிகமழ் சந்தனம்
வாணுறு மாமல ரிட்டு வணங்கினும்
ஊனினை நீக்கி உணர்பவர்க் கல்லது
தேனமர் பூங்கழல் சேரவொண் ணாதே. ந

1453 கோனக்கன் முயே குரைகழல் ஏத்துமின்
ஞானக்கன் முகிய நடுவே யுழிதரும்
வானக்கன் முகிய வானவர் கைதொழு
மானக்கன் றீசன் அருள்வள்ள மாமே. ங

1454 இதுபணிந் தெண்டிசை மண்டலம் எல்லாம்
அதுபணி செய்கின் றவனொரு கூறன்
இதுபணி மானுடர் செய்பணி யீசன்
பதிபணி செய்வது பத்திமை காணே. ச

1455 பத்தன் கிரியை சரியை பயில்வுற்றுச்
சுத்த அருளால் துரிசற்ற யோகத்தில்
உய்த்த நெறியுற் றுணர்கின்ற ஞானத்தாற்
சித்தங் குருவரு ளாற்சிவ மாகுமே. ஞ

1456 அன்பின் உருகுவ ரனுதம் பணிசெய்வன்
செம்பொன்செய் மேனி கமலத் திருவடி
முன்புகின் முங்கே மொழிவ தெனக்கருள்
என்பிறவுட் சோதி இலங்குகின் முனே. ட

99. யோகம்

1457 நேறிவழி யேசென்று நேர்மையுள் ஒன்றித்
தறியிருந் தாற்போல் தம்மை யிருத்திச்
சொறியினுங் தாக்கினுங் துண்ணென் றுணராக்
குறியறி வாளர்க்குக் கூடலு மாமே. க

1458 ஊழிதோ றூழி உணர்ந்தவர்க் கல்லால்
ஊழிதோ றூழி யுணரவுந் தாணெட்டான்
ஆழி அமருஞ் அரியயன் என்றுளார்
ஊழி முயன்றும் ஒருச்சியு ளானே. உ

1459 பூவினிற் கந்தம் பொருந்திய வாறுபோற்
சீவனுக் குள்ளே சிவமணம் பூத்தது
ஓவியம் போல உணர்ந்தறி வாளர்க்கு
காவி யமணந்த கடுதறி யாமே. ங

1460 உய்க்தனம் என்பிர் உறுபொருள் காண்கிலீர்
கக்த மலிற் கலக்கின்ற கத்தினைச்
சிக்தை புறிவே தெளிக்திருள் நீங்கிலுல்
முக்தைப் பிறவிக்கு மூலவித் தாமே.

1461 எழுத்தொடு பாடலும் என்னைன் கலியும்
பழித்தலைப் பாசப் பிறவியும் நீங்கா
வழித்தலைச் சோமனே டங்கி யருக்கன்
வழித்தலைச் செய்யும் வகையுணர்ந் தேனே.

1462 விரும்பிநின் றேசெய்யிற் மெய்த்தவ ராகும்
விரும்பிநின் றேசெய்யின் மெய்யுரை யாகும்
விரும்பிநின் றேசெய்யின் மெய்த்தவ மாகும்
விரும்பிநின் றேசெய்யில் விண்ணவ னுகுமே. சூ

1463 பேணிற் பிறவா உலகருள் செய்திடுங்
காணில் தனது கலவியு ளாகிற்கும்
காணில் சுரக தெறிக்கே வழிசெயும்
ஊனிற் சுடுமங்கி யுத்தமன் ருனே. எ

1464 ஒத்தசெங் கோலார் உலப்பிலி மாதவர்
எத்தனை யாயிரம் வீழ்ந்தனர் எண்ணிலி
சித்தர்கள் தேவர்கள் மூவர் பெருமையாய்
அத்த னிவனென்றே அன்புறு வார்களே. அ

1465 யோகிக்கு யோகாதி மூன்றுள கொண்டுற்றோர்
ஆகத் தகுகிரி யாதி சரியையாக்
தாகத்தை விட்ட சரியையொன் ரும்ஒன் றுள்
ஆதித்தன் பத்தியுள் அன்புவைத் தேனே. கூ

1466 யோகச் சமயமே யோகம் பலவுன்னல்
யோக விசேடமே அட்டாங்க யோகமாம்
யோகநிர் வாணமே யுற்ற பரோதயம்
யோக அபிடேகமே ஒண்சித்தி யுற்றலே. கo

100. ஞானம்

1467 ஞானத்தின் மிக்க அறமெறி காட்டில்லை
ஞானத்தின் மிக்க சமயமும் நன்றன்று
ஞானத்தின் மிக்கவை நன்முத்தி கல்காவா
ஞானத்தின் மிக்கார் நரான்மிக் காரே. க

1468 சுத்தமுஞ் சுத்த மனலுக் குகுமனம்
உய்த்த வினாவு முணர்த்தும் அகங்கையுஞ்
சித்தமென் றிம்மூன் றுஞ் சிந்திக்குஞ் செப்பையும்
சுத்தங் கடந்தவர் பெற்றசன் மார்க்கமே. உ

1469 தன்பால் உலகுந் தனக்கரு காவதும்
அன்பா லெனக்கரு ளாவது மாவன
என்பார்கள் ஞானமும் எய்துஞ் சிவோகமும்
பின்பாலின் றேபமும் பெற்றிடுங் தானே. ங

1470 இருக்குஞ் சேம இடம்பிரம மாகும்
வருக்கஞ் சராசர மாகும் உலகங்
கருக்கிய ஆசார மெல்லாங் தருமே
திருக்கமில் ஞானத்தைதத் தேர்ந்துணர்ந் தோர்க்கே. ச

1471 அறிவும் அடக்கமும் அன்பும் உடனே
பிறியா ஈகர்மன்னும் பேரரு ளானன்
குறியுங் குணமுங் குரைகழல் நீங்கா
நெறியறி வார்க்கிது நீர்த்தானி யாமே. ஞ

1472 ஞானம் விளைந்தழு கின்றதோர் சிங்தையுள்
ளனம் விளைந்திதி ரேகாண் வழிதொறுங்
கூனல் மதிமண் டலத்திதிர் நீர்கண்டு
ஊனம் அறுத்துநின் றெண்சுட ராகுமே. சு

1473 ஞானிக் குடன்குண ஞானத்தில் நான்குமா
மோனிக் கிவையொன் றுங் கூடாமுன் மோகித்து
மேனிற்ற லாஞ்சத்தி வித்தை விளைத்திடுங்
தானிக் குலத்தோர் சரியை கிரியையே. எ

1474 ஞானத்தின் ஞாலுதி நான்குமா ஞானிக்கு
ஞானத்தின் ஞானமே நாமென நின்றுமல்
ஞானத்தில் யோகமே நாதாக்த நல்லொளி
ஞானக் கிரியையே கன்முத்தி நாடலே. அ

1475 கண்ணிய ஞானத்தின் ஞாலுதி கண்ணுவீவான்
புண்ணிய பாவங் கடக்த பினைக்கற்றீரன்
கண்ணிய நேயங் கரைஞானங் கண்டுனோன்
திண்ணிய சுத்தன் சிவழுத்தன் சித்தனே. கூ

1476 ஞானச் சமயமே நாடுக் தீனக்காண்டன்
ஞான விசேடமே நாடு பரோதய
ஞானநிர் வாணமே கன்றறி வானரூன்
ஞானபி டேகமே நற்குரு பாதமே. கo

101. சன்மார்க்கம்

1477 சாற்றுஞ்சன் மார்க்கமாக் கற்சிவ தத்துவத்
தோற்றங்க ளான சுருதிச் சடர்கண்டு
சீற்றம் ஒழிந்து சிவயோக சித்தராய்க்
கூற்றத்தை வென்றூர் குறிப்பறிக் தார்களே. கூ

1478 சைவப் பெருமைத் தனிநா யகன்நந்தி
உய்ய வகுத்த குருநெறி ஒன்றுண்டு
தெய்வச் சிவநெறி சன்மார்க்கஞ் சேர்ந்துய்ய
வையத்துள் ளார்க்கு வகுத்துவைத் தானே. உ

1479 தெரிசிக்கப் பூசிக்கச் சிந்தனை செய்யப்
பரிசிக்கக் கீர்த்திக்கப் பாதுகஞ் சூடக்
குருபத்தி செய்யுங் குவலயத் தோர்க்குத்
தருமூத்திச் சார்பூட்டுஞ் சன்மார்க்கந் தானே. ங

1480 தெளிவறி யாதார் சிவனை யறியார்
தெளிவறி யாதார் சிவனு மாகார்
தெளிவறி யாதார் சிவமாக மாட்டார்
தெளிவறி யாதவர் தீரார் பிறப்பே. ச

1481 தானவ னுகித் தானைந்தா மலஞ்செற்று
மோனமே தாமொழிப் பான்முத்த ராவது
மீனமில் நூனூறு பூதியில் இன்பமுங்
தானவ னுயற்ற லானசன் மார்க்கமே. ந

1482 சன்மார்க்கத் தார்க்கு முகத்தெதி ரீடமுஞ்
சன்மார்க்கத் தார்க்குஞ் இடத்தெதி ரெய்வமுஞ்
சன்மார்க்கத் தார்க்கு வருக்கந் தரிசனம்
எம்மார்க்கத் தார்க்கும் இயம்புவன் கேண்மினே. சு

1483 சன்மார்க்க சாதனந் தான்ஞான னேயமாம்
பின்மார்க்க சாதனம் பேணையர்க் காய்நிற்கும்
துன்மார்க்கம் விட்ட துரியத் துரிசற்றூர்
சன்மார்க்கந் தானவ னுகுஞ்சன் மார்க்கமே. எ

1484 சன்மார்க்க மெய்த வருமருந் சீடர்க்குப்
பின்மார்க்க மூன்றும் பெறவியல் பாமென்றூல்
நன்மார்க்கந் தானே சிவனெறி நாடலே
சொன்மார்க்க மென்னச் சுருதிகைக் கொள்ளுமே. அ

1485 அன்னிய பாசமும் ஆகுங் கருமமும்
முன்னும் அவத்தையும் மூலப் பகுதியும்
பின்னிய ஞானமும் பேதாதி பேதமுந்
தன்னெறிங் கண்டவர் சன்மார்க்கத் தோரே. கூ

1486 பசுபாச நீக்கிப் பதியுடன் கூட்டிக்
கசியாத நெஞ்சங் கசியக் கசிவித்
தொகியாத வுண்மைச் சொரூபோ தயத்துற்
றகைவான தில்லாமை யானசன் மார்க்கமே. கo

1487 மார்க்கஞ்சன் மார்க்கிகள் கிட்ட வகுப்பது
மார்க்கஞ்சன் மார்க்கமே யன்றிமற் றொன்றில்லை
மார்க்கஞ்சன் மார்க்க மெனுநெறி வைகாதோர்
மார்க்கஞ்சன் மார்க்க மாஞ்சித்த யோகமே. கக

102. சகமார்க்கம்

1488 சன்மார்க்கந் தானென சகமார்க்க மானது
மன்மார்க்க மாமுத்தி சித்திக்குள் ளைப்பதாம்
பின்மார்க்க மானது பேராப் பிறந்திறந்
துன்மார்க்க ஞானத் துபாதியு மாதீமே. க

1489 மாநுவந் துவாதச மார்க்கமில் லாதார்
குருவுஞ் சிவனுஞ் சமயமுங் கூடார்
வெருவுந் திருமகள் வீட்டுல்லை யாகும்
உருவுங் கினையும் நரகங்கிழப் பாதே. உ

1490 யோகச் சமாதியின் உள்ளே யகலிடம்
யோகச் சமாதியின் உள்ளே யுளரொளி
யோகச் சமாதியின் உள்ளே யுளசத்தி
யோகச் சமாதி யுகந்தவர் சித்தரே. ங

1491 யோகமும் போகமும் யோகியர்க் காகுமால்
யோகஞ் சிவரூபம் உற்றிடம் உள்ளத்தோர்
போகம் புவியிற் புரிடார்த்த சித்திய
தாகும் இரண்டும் அழியாத யோகிக்கே. ச

1492 ஆதார சோதனை யாணவ சுத்திகள்
மேதாதி யீரென் கலாக்கத்து விண்ணொளி
போதா லயத்துப் புலன்கர ணம்புந்தி
சாதா ரணங்கெட லாஞ்சக மார்க்கமே. ஞ

1493 பிணங்கிநிற் கின்றனை ஐக்கையும் பின்னை
அணங்கி யெறிவ னாயிர்மன வாளாற்
கணம்பதி னெட்டுங் கருதும் ஒருவன்
வணங்கவல் லான்சிக்தை வக்துநின் றானே. ட

1494 வளங்கனி யொக்கும் வளநிறத் தார்க்கும்
வளங்கனி யொப்பதோர் வாய்மைய னாகும்
உளங்கனிந் துள்ள முகந்திருப் பார்க்குப்
பழங்கனிக் துள்ளே பகுந்துநின் றானே. ண

103. சற்புத்திர மார்க்கம்

1495 மேவிய சற்புத்திர மார்க்க மெய்த்தொழில்
தாவிப்ப தாஞ்சக மார்க்கஞ் சகத்தொழில்
ஆவ திரண்டும் அகன்று சகமார்க்கத்
தேவியோ டொன்றல் சன்மார்க்கத் தெளிவதே. க

1496 பூசித்தல் வாசித்தல் போற்றல் செபித்திடல்
ஆசற்ற நற்றவம் வாய்மை அழுக்கின்மை
நேசித்திட் டன்னமும் நீசுத்தி செய்தன்மற்
றூசற்ற சற்புத் திரமார்க்க மாகுமே. உ

1497 அறுகாற் பறவை அலர்தேர்ந் தழலும்
மறுகா கரையன்னந் தாமரை நீலங்
குறுகா கறுடலர் கொய்வன கண்டுஞ்
சிறுகாஞ் அறநெறி சேரகி லாரே. ங

1498 அருங்கரை யாவது அவ்வடி நீழற்
பெருங்கரை யாவது பிஞ்ஞக ணீண
வருங்கரை யேகின்ற மன்னுயிர்க் கெல்லாம்
ஒருங்கரை யாயுல கேழினைத் தானே. ச

1499 உயர்ந்தும் பணிந்தும் முகந்துந் தழுவி
வியந்தும் அரனடிக் கேழுறை செய்மின்
பயந்தும் பிறவிப் பயனது வாகும்
பயந்து பரிக்கிலப் பான்மைய னுமே. ஞ

1500 நின்று தொழுவன் கிடந்தெம் பிரான்தன்னை
என்றுந் தொழுவன் எழிற்பரஞ் சோதியைத்
துன்று மலர்தூவித் தொழுமின் தொழுந்தோறுஞ்
சென்று வெளிப்படுந் தேவர் பிரானே. ட

1501 திருமன்னுஞ் சற்புத்திர மார்க்கச் சரியை
உருமன்னி வாழும் உலகத்தீர் கேண்மின்
கருமன்னு பாசங் கைகூம்பத் தொழுது
இருமன்னு நாடோறும் இன்புற் றிருந்தே. எ

104. தாசமார்க்கம்

1502 எளியனல் தீப மிடல்மலர் கொய்தல்
அளிதின் மெழுக லதுதூர்த்தல் வாழ்த்தல்
பளிமணி பற்றல் பன்மந் தனமாதி
தளிதொழில் செய்வது தான்தாச மார்க்கமே. க

1503 அதுவிது வாதிப் பரமென் றகல்வர்
இதுவழி யென்றங் கிறைஞ்சின ரில்லை
விதிவழி யேசென்று வேர்த்தின காடு
மதுவிது நெஞ்சில் தணிக்கின்ற வாறே. உ

1504 அந்திப்பன் திங்க ளதன்பின்பு ஞாயிறு
சிந்திப்பன் என்றும் ஒருவன் செறிகழல்
வந்திப்ப வானவர் தேவின காடோறும்
வந்திப்ப தெல்லாம் வகையின் முடிந்ததே. ங

1505 அண்ணலே வானவர் ஆயிரம் போற்சொல்லி
உன்னுவர் உள்மகிழ்ந் துண்ணின் றடிதொழுக்
கண்ணவ னென்று கருது மவர்கட்குப்
பண்ணவன் போன்பு பற்றினின் றானே. ச

1506 வாசித்தும் பூசித்தும் மாமலர் கொய்திட்டும்
பாசிக் குளத்தில்வீழ் கல்லாம் மனம்பார்க்கின்
மாசற்ற சோதி மணிமிடற் றண்ணலே
நேசத் திருந்த நினைவறி யாரே. ஞ

105. சாலோகம்

1507 சாலோக மாதி சரியாதி யிற்பெறுஞ்
சாலோகஞ் சாமீபந் தங்குஞ் சரியையால்
மாலோகஞ் சேரில் வழியாகுஞ் சாரூபம்
பாலோகம் இல்லாப் பரனுரு வாமே. க

1508 சமயங் கிரியையிற் றன்மனங் கோயில்
சமய மனுமுறை தானே விசேடஞ்
சமயத்து மூலந் தனைத்தேறன் மூன்றுஞ்
சமயாபி டேகந் தானஞ் சமாதியே. உ

106. சாமீபம்

1509 பாசம் பசுவான தாகும்இச் சாலோகம்
பாச மருளான தாகும்இச் சாமீபம்
பாசந் சிரமான தாகும்இச் சாரூபம்
பாசங் கரைபதி சாயுச் சியமே. க

107. சாரூபம்

1510 தங்கிய சாரூபக் தானைட்டாம் யோகமாங்
தங்குஞ் சன்மார்க்கந் தனிலன்றிக் கைகூடா
அங்கத் துடல்சித்தி சாதன ராகுவர்
இங்கிவ ராக விழிவற்ற யோகமே. க

1511 சாயிலலோ கத்தினைச் சார்ந்த பொழுதே
சாயிலடை தாகுஞ் சராசரம் போலப்
பாயிலுங் குருவின் பதிபுக்க போதே
சாயிலை இறைவன் கதிர்வடி வாமே. உ

108. சாயுச்சியம்

1512 சைவஞ் சிவஞ்டன் சம்பந்த மாவது
சைவத் தினைபறிந் தேசிவஞ் சாருதல்
சைவஞ் சிவத்தன்னைச் சாராமல் நீவுதற்
சைவஞ் சிவானந்தஞ் சாயுச் சியமே. க

1513 சாயுச் சியஞ்சாக் கிராதிதஞ் சாருதல்
சாயுச் சியமூப சாந்தத்துத் தங்குதற்
சாயுச் சியஞ்சிவ மாதல் முடிவிலாச்
சாயுச் சியமனத் தானந்த சத்தியே. உ

109. சத்திநிபாதம் - மந்தம்

1514 இருட்டறை மூலை யிருந்த குமரி
குருட்டுக் கிழவனைக் கூடல் குறித்துக்
குருட்டினை நீக்கிக் குணம்பல காட்டி
மருட்டி யவனை மணம்புரிந் தாளே. க

1515 தேம்புல னென திசையது சிந்திக்கில்
ஆம்புல னையறி வார்க்கமு காய்நிற்குக்
தேம்புல னென தெனிவறி வார்க்குக்
கோம்புல னுடைய கொல்லையு மாமே. உ

1516 இருள்நீக்கி யெண்ணில் பிறவி கடந்தி
அருள்நீங்கா வண்ணமே யாதி யருளரும்
மருள்நீங்கா வானவர் கோமினுதிங் கூடிப்
பொருள்நீங்கா இன்பம் புலம்பயில் தானை. ஙு

1517 இருள்சூ ழுலையில் இருந்தது காடும்
பொருள்சூழ் வினைக்கது புக்கெரிக் காற்போன்
மருளசூழ் மடிபக்கத்து மாமலர் நந்தி
அருள்சூழ் இறைவனும் அம்மைமு மாமே. சு

110. சத்திநிபாதம் - மந்ததரம்

1518 மருட்டிப் புனைந்து மடிக்கமும் நீக்கி
வெருட்டி வினைபோதுத் தின்பம் வினைத்துக்
குருட்டினை நீக்கிக் குணம்பல காட்டி
அருட்டிகழ் ஞான மதுபுரிந் தானே. ஞ

1519 கன்னித் துணைபடிக் காடிய ஆடவர்
கன்னித் துணைபடிக் காடுங் கருத்திலர்
கன்னித் துணைபடிக் காடுங் கருத்துண்டேற்
பின்னைப் பிறவி பிறிதில்லை தானே. ட

1520 செய்யன் கரியன் வெளியன்கற் பச்சையன்
எய்த வுணர்ந்தவர் எய்வர் இறைவனை
மைவென் றகன்ற பகுரி போர்த்தவெங்
கையி னிவனென்று காதல்செய் வீரே. ண

1521 எய்திய காலங்கள் எத்தனை யாயினுங்
கையலுங் காலுங் தனிகா யகமென்பர்
வைகலுங் தன்னை வணங்கு மவர்கட்குக்
கையிற் கருமஞ்செய் காட்டது வாமே. த

1522 கண்டிகொண் டோடமிரண் டுந்தொடர்ந் தாங்கொளி
பண்டுபண் டோயும் பரமன் பரஞ்சுடர்
வண்டிகொண் டாடு மலர்வார் சடையண்ணல்
நின்றுகண் டார்க்கிருள் நீக்கினின் றூனே. ரு

111. சத்திநிபாதம் - தீவிரம்

1523 அண்ணிக்கும் பெண்பிள்ளை அப்பனுர் தோட்டத்தில்
எண்ணிக்கும் எழேழ் பிறவி யுணர்விக்கும்
உண்ணிற்ப தெல்லாம் ஒழிய முதல்வனைக்
கண்ணுறற் றுநின்ற கனியது வாகுமே. க

1524 பிறப்பை யறுக்கும் பெருந்தவம் கல்கும்
மறப்பை யறுக்கும் வழிபட வைக்குங்
குறப்பெண் குவிமுலை கோமள வல்லி
சிறப்பொடு பூசனை செய்யநின் றூர்க்கே உ

1525 தாங்குமின் எட்டுத் திசைக்குந் தலைமகன்
பூங்கமழ் கோதைப் புரிகுழ லாளொடும்
ஆங்கது சேரும் அறிவுடை யார்கட்குத்
தூங்கொளி நீலந் தொடர்தலு மாமே. ங

1526 கறுகிறு ஞானக் கொழுந்தொன் றுங் கல்கும்
பனிகிறும் பன்மலர் தூவிப் பணிவன்
அறுகிய தொன்றறி யாத வொருவன்
அறுகும் உலகெங்கு மாவியு மாமே. ச

112. சத்திநிபாதம் - தீவிரதரம்

1527 இருவினை யொப்பில் இன்னருட் சத்தி
குருவென வந்து குணம்பல நீக்கித்
தருமெனு ஞானத்தால் தன்செய லற்றூல்
திரிமலந் தீர்ந்து சிவனவ னாமே. க

1528 இரவும் பகலும் இலாத இடத்தே
குரவஞ் செய்கின்ற குழலியை உன்னி
அரவஞ்செய் யாமல் அவளுடன் சேரப்
பரிவொன்றி லாளும் பராபரை தானே. உ

1529 மாலை விளக்கும் மதியமும் ஞாயிறுஞ்
சால விளக்குந் தனிச்சுடர் அண்ணலுள்
ஞானம் விளக்கிய காதன்என் உள்புகுந்
தூனை விளக்கி யுடனிருந் தானே. ங

113. புறச்சமய தூஷணம்

1530 ஆயத்துள் நின்ற அறுசம யங்களுங்
காயத்துள் நின்ற கடவுளைக் காண்கிலா
மாயக் குழியில் விழுவர் மனமக்கள்
பாசத்தில் உற்றுப் பதைக்கின்ற வாறே. க

1531 உள்ளத்து ளேதான் கரந்தெங்கும் நின்றவன்
வள்ளல் தலிவன் மலருறை மாதவன்
பொள்ளற் குரம்பைப் புகுந்து புறப்படுங்
கள்ளத் தலிவன் கருத்தறி யார்களே. உ

1532 உள்ளத்தும் உள்ளன் புறத்துள்ளன் என்பவர்க்
குள்ளத்தும் உள்ளன் புறத்துள்ளன் எம்மிறை
உள்ளத்தும் இல்லை புறத்தில்லை என்பவர்க்
குள்ளத்தும் இல்லை புறத்தில்லை தானே. ங

1533 ஆறு சமயமுங் கண்டவர் கண்டிலர்
ஆறு சமயப் பொருளுமம் அவனலன்
தேறுமின் தேறித் தெளிமின் தெளிந்தபின்
மாறுதல் இன்றி மனைபுக லாமே. ச

1534 சிவமல்ல தில்லை பறையே சிவமாந்
தவமல்ல தில்லை தலைப்படு வார்க்கிங்கு
அவமல்ல தில்லை அறுசம யங்கள்
தவம்வல்ல நந்திதாள் சார்ந்துய்யு நீரே. ஞ

1535 அண்ணலை நாடிய ஆறு சமயமும்
விண்ணவ ராக மிகவும் விரும்பியே
முண்ணின் றழியு முயன்றில ராதலான்
மண்ணின் றொழியும் வகையறி யார்களே. ட

1536 சிவகதி யேகதி மற்றுள்ள வெல்லாம்
பவச்சி பாசப் பிறவியொன் றுண்டி
தவகதி கன்னெதி கேரொன்று தோன்றில்
அவகதி மூவரு மவ்வகை யாமே. எ

1537 தூறு சமயம் உளவா நுவலுங்கால்
ஆறு சமயமவ் வாறுட் படுவன
கூறு சமயங்கள் கொண்ட நெறிநில்லா
ஈறு பரநெறி யில்லா நெறியன்றே. அ

1538 கத்துங் கழுகைகள் போலுங் கலதிகள்
சுத்த சிவனெங்குந் தோய்வுற்று நிற்கின்றான்
குற்றந் தெளியாதார் குணங்கொண்டு கோதாட்டார்
பித்தேதறி வாருமும் பிறந்திறப் பாரே. கூ

1539 மயங்குகின் றூரு மதிதெளிந் தாரும்
முயங்கி யிருவினை முழைழுகப் பாச்சி
இயங்கிப் பெறுவரே லீறது காட்டிற்
பயங்கெட் டவர்க்கோர் பரநெறி யாமே. கo

1540 சேயன் அணியன் பிணியிலன் போர்ந்தி
தாயன் துளக்கற நோக்கவல் லாட்கட்கு
மாயன் மயக்கிய மானுட ராமவர்
காயம் விலைக்குங் கருத்தறி யார்களே. கக

1541 வழியிரண் டுக்குமோர் வித்தது வான
பழியது பார்மிசை வாழ்தல் உறுதல்
சுழியறி வாளன்றன் சொல்வழி முன்னின்
றழிவறி வார்நெறி நாடநில் லாரே. கஉ

1542 மாதவர் எல்லாம் மாதேவன் பிரான்என்பர்
நாதம தாக அறியப் படுநந்தி
பேதஞ்செய் யாதே பிரான்என்று கைதொழில்
ஆதியும் அந்நெறி யாகின்ற னானே. கஙு

1543 அரனெறி யப்பனை யாதிப் பிரானை
உரநெறி யாகி யுளம்புகுந் தானைப்
பரநெறி தேடிய பத்தர்கள் சித்தம்
பரனறி யாவிடிற் பல்வகைத் தாரமே. கச

1544 பரிசறி வானவன் பண்டன் பகலோன்
பெரிசறி வானவர் பேற்றில் திகழ்ந்
துரிசற நீநினை தூய்மணி வண்ணன்
அரிதவன் வைத்த அறநெறி தானே. கஞ

1545 ஆன சமயம் அதுஇது நன்றெனும்
மாய மனிதர் மயக்க மதுவொழி
கானங் கடந்த கடவுளை நாடுமின்
ஊனங் கடந்த வுருவது வாமே. கசு

1546 அங்நெறி நாடி அமரர் முனிவருந்
செந்நெறி கண்டார் சிவனெனப் பெற்றூர்பின்
முன்னெறி நாடி முதல்வன் அருளிலார்
சென்னெறி செல்லார் திகைக்கின்ற வாறே. கஎ

1547 உறுமா றறிவதும் உள்நின்ற சோதி
பெறுமா றறியிற் பிணக்கொன்றும் இல்லை
அறுமா றதுவான வங்கியு ளாங்கே
இறுமா றறிகிலர் ஏழைகள் தாமே. கஅ

1548 வழிநடக் கும்பரி சொன்றுண்டு வையங்
கழிநடக் குண்டவர் கற்பனை கேட்பர்
சுழிநடக் குந்துய ரம்மது நீக்கிப்
பழிநடப் பார்க்குப் பரவலு மாமே. கக

1549 வழிசென்ற மாதவம் வைகின்ற போது
பழிசெல்லும் வல்வினைப் பற்றறுத் தாங்கே
வழிசெல்லும் வல்வினை யார்திறம் விட்டிட்
டுழிசெல்லில் உம்பர் தலைவன்முன் னுமே. உ0

114. நிராகாரம்

1550 இமையங்க ளாய்நின்ற தேவர்கள் ஆறு
சமையங்கள் பெற்றனர் சாத்திரம் ஓதி
யமைபறிக் தோமென்ப ராதிப் பிராஅங்
கமைபறிக் காருட் கலந்துநின் றூனே. க

1551 பாங்கமர் கொன்றைப் படர்சடை யானடி
தாங்கு மனிதர் தரணியில் நேரொப்பர்
நீங்கிய வண்ணம் நினைவுசெய் யாதவர்
வங்கி உலகில் இருந்தழு வாரே. உ

1552 இருந்தழு வாரும் இயல்புகெட் டாரும்
அருந்தவ மேற்கொண்டங் கண்ணீல எண்ணில்
வருந்தா வகைசெய்து வானவர் கோனும்
பெருந்தண்மை கல்கும் பிறப்பிலி தானே. ங

1553 தாபறி வாளர் துணைவர் நினைப்பிலர்
பாபறி வாளர் படுபயன் றூணுண்பர்
காபறி வாளர் கலந்து பிறப்பர்கள்
நீபறி வார்நெடு மாழுகி லாமே. ச

1554 அறிவுடன் கூடி அழைத்தோர் தோணி
பறியுடன் பாரம் பழம்பதி சிந்துங்
குறியது கண்டுங் கொடுவினை யாளர்
செறிய நினைக்கிலர் சேவடி தானே. ஞ

1555 மன்னும் ஒருவன் மருவு மமைமையன்
என்னின் மனிதர் இகழ்வாவ் வேவைழகள்
துன்னி மனமே தொழுமின் துணையிலி
கன்னையும் அங்கே தலைப்பட லாமே. ட

1556 ஓங்காரத் துள்ளொளி உள்ளே உதயமுற்
றூங்கார மற்ற அனுபவங் கைகூடார்
சாங்கால மூன்றுர் பிறவாமை சார்வுறூர்
நீங்காச் சமயத்துள் நின்றெழுந் தார்களே. ண

115. உட்சமயம்

1557 இமையவர் தம்மையும் எம்மையும் முன்னம்
அமைய வகுத்தவன் ஆதி புராணன்
சமையங்க ளாறுந்தன் றூனிலை நாட
அமையங் குழல்கின்ற ஆதிப் பிரானை. க

1558 ஒன்றது பேரூர் வழியா றதற்குள
என்றது போல இருமுச் சமயமும்
நன்றிது தீதிது என்றுரை யாளர்கள்
குன்று குரைத்தெழு நாயையொத் தார்களே. உ

1559 சைவப் பெருநடைத் தனிநா யகன்கண்டீ
உய்ய வுயிர்க்கின்ற வூண்சுடர்க் கந்தினை
மெய்ய பெருநடையர்க் கன்பதின இன்பந்தி சைய்
வையத் தலிவதின வந்தனைடக் குய்ப்பினே. ங

1560 சிவனவன் வைத்தசீர் சிவ்ய நெறியிற்
பவனவன் வைத்த படிவழி நாட
இவனவன் என்ப தறியுமவ் வாய்கட்
கவனவ னங்குள நாங்கட னீடே. ச

1561 ஆடமா றுரைக்கும் அறுசம யாதிக்குப்
போடமா றுகாணில்லை புண்ணிய மல்லதங்
காமமாம் வழிபோக்கும் அவ்வே றுயிர்க்கட்கும்
போமமாறவ் வாதாரப் பூங்கொடி யாளனே. ஞ

1562 அரனெறி யாவ தறிந்தேத்தும் நாவுந்
சிலதெறி தேடுந் திருந்தவக் காலும்
உரதெறி யுள்ளக் கடல்கடந் தேறுந்
தரதெறி நின்ற தனிச்சுடர் தானே. ட

1563 தேர்ந்த அரனை அடைந்த சிவநெறி
போர்ந்தவர் உன்னிப் பெயர்ந்த பெருவழி
ஆர்ந்தவர் அண்டத்துப் புக்க அருள்நெறி
போந்து புனைந்து புணர்நெறி யாமே. எ

1564 ஈரு மனத்தை யிரண்டற வீசுமின்
ஊரும் சகாரத்தை ஓதுமின் லேதியே
வாரு மரனெறி மன்னியே மூன்னியத்
தூரும் சுடரொளி தோன்றலு மாமே.

1565 மினற்குறி யாளனை வேதியர் வேதத்
தனற்குறி யாளனை ஆதிப் பிரான்தன்னை
நினைக்குறி யாளனை ஞானக் கொழுந்தி
னயக்குறி காணில் அரனெறி யாமே. கூ

1566 ஆய்ந்துணை நாள்களின் ஆன்மாச் சதுர்பல
வாய்ந்துணை நாவகை நின்ற அரனெறி
பாய்ந்துணர் வார்அரன் சேவடி கைதொழு
தோர்ந்துணர் செய்வதோர் இன்பமு மாமே. கூC

1567 சைவ சமயத் தனிநா யகன்நந்தி
உய்ய வகுத்த குருநெறி ஒன்றுண்டு
தெய்வச் சிவநெறி சன்மார்க்கஞ் சேர்ந்துய்ய
வையத்து ளார்க்கு வகுத்துவைத் தானே. கக

1568 இத்தவம் அத்தவம் என்றிரு பேரிடும்
பித்தரைக் காணின் நகுமெங்கள் பேர்நந்தி
எத்தவ மாகிலென் எங்குப் பிறக்கிலென்
ஒத்துணர் வார்க்கொல்லை யூர்புக லாமே. கூஉ

1569 ஆமே பிரான்முகம் ஐந்தொடு மாருயிர்
ஆமே பிராணுக் கதேதாமுக மாறுள
காமே பிராணுக்குத் தன்சிர மாலைக்கும்
காமே பிராணுக்கு காரியல் பாமே. கஙூ

1570 ஆதிப் பிராணுல கேழும் அளந்தவன்
ஓதக் கடலும் உயிர்களு மாய்நிற்கும்
பேதிப் பிலாமையின் நின்ற பராசத்தி
ஆதிக்கட் டெய்வமும் அந்தமு மாமே. கச

1571 ஆய்ந்தறி வார்கள் அமரர்வித் திடாதசர்
ஆய்ந்தறி யாவண்ணம் நின்ற அதனைறீ
ஆய்ந்தறிந் தேனவன் சேவடி ணகுதழ
ஆய்ந்தறிந் தேனிம்மை அம்மைகண் டேனை. கநி

1572 அறியவொண் ணுகவ் வடம்பின் படினை
அறியவொண் ணுக அறுவகை யாக்கி
அறியவொண் ணுக அறுவகைக் கோசத்
தறியவொண் ணுகதீதார் அண்டடம் பதிந்தீதை. கசு

ஐந்தாம் தந்தி முற்றிற்று

ஆறாந் தந்திரம்

116. சிவகுரு தரிசனம்

1573 பத்திப் பணித்துப் பரவு மடிகல்கிச்
சுத்த வரையால் துரிசறச் சோதித்துச்
சுத்தும் அசுத்துஞ் சதசத்துங் காட்டலாற்
சித்தம் இறையே சிவகுரு வாமே. க

1574 பாசத்தைக் கூட்டியே கட்டிப் பறித்திட்டு
நேசித்த காயம் விடுவித்து நேர்நேரே
கூசற்ற முத்திபிற் கூட்டலா நாட்டத்த
தாசற்ற சற்குரு அம்பல மாமே. உ

1575 சித்திகள் எட்டொடுந் திண்சிவ மாக்கிய
சுத்தியும் எண்சத்திச் தூய்மையும் யோகத்துச்
சத்தியும் மந்திர சாதக போதமும்
பத்தியும் நாதன் அருளிற் பயிலுமே. ங

1576 எல்லா வுலகிற்கும் அப்பாலோன் இப்பாலாய்
கல்லார் உள்ளத்து மிக்கருள் கல்கலால்
எல்லாரும் உய்யக்கொண் டிங்கே அளித்தலாற்
சொல்லார்ந்த நற்குருச் சுத்த சிவமே. ச

1577 தேவனுஞ் சுத்த குருவும் உபாயத்துள்
பாவையும் மூன்று புனக்கண் டுரைபாலே
மூவாப் பசுபாச மாற்றியே முத்திப்பால்
யாவையும் நல்குங் குருபரன் அன்புற்றே. ஞ

1578 சுத்த சிவன்குரு வாய்வந்து தூய்மைசெய்
தத்தின கல்கருள் காண அதிமூடர்
பொய்த்தகு கண்ணன் நமரென்பர் புண்ணியர்
அத்தன் இவனென் றடிபணி வாரே. ஃ

1579 உண்மையிற் பொய்மை ஒழித்தலும் உண்மைப்பார்
திண்மையும் ஒண்மைச் சிவமாய அவ்வரன்
வண்மையும் எட்டெட்டுச் சித்தி மயக்கமும்
அண்ணல் அருளன்றி யாரறி வாரே. என

1580 சிவனே சிவஞானி யாதலாற் சுத்த
சிவனே யெனஅடி சேரவல் லார்க்கு
நவமான தத்துவ நன்முத்தி நண்ணுடம்
பவமான தின்றிப் பரலோக மாமே. அ

1581 குருவே சிவமெனக் கூறினன் நந்தி
குருவே சிவமென் பதுகுறித் தோரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவே யுரையுணர் வற்றதோர் கோவே. க

1582 சித்தம் யாவையுஞ் சிந்தித் திருந்திடும்
அத்தம் உணர்த்துவ தாகும் அருளாலே
சித்தம் யாவையுந் தின்சிவ மானக்கால்
அத்தனும் அவ்விடத் தேயமர்ந் தானே. க

1583 தானந்தி சீர்மையுட் சந்தித்த சீர்வைத்த
கோனந்தி யெந்தை குறிப்பறி வாரில்லை
வானந்தி யென்று மகிழும் ஒருவற்குத்
தானந்தி யங்கித் தனிச்சுட ராமே. க

1584 திருவாய சித்தியும் முத்தியும் சீர்மை
மருளா தருளும் மயக்கறும் வாய்மைப்
பொருளாய வேதாந்த போதமும் நாதன்
உருவாய் வரவிடி லோரஞ் ஞதே. க

1585 பத்தியும் ஞானவை ராக்கிய மும்பர
சித்திக்கு வித்தாஞ் சிவோகமே சேர்தலான்
முத்தியின் ஞான மூலத்தலால் அம்மூல
சத்தி யருள்தரில் தானெளி தாமே. க

1586 பின்னெய்த வைத்தீதார் இன்பப் பிறப்பினை
முன்னெய்த வைத்த முதல்வனை எம்மிறை
தன்னெய்துங் காலத்துத் தானே வெளிப்படு
மன்னெய்த வைத்த மனமது தானே. கச

1587 சிவமான ஞானந் தெளியவொண் சித்தி
சிவமான ஞானந் தெளியவொண் முத்தி
சிவமான ஞானஞ் சிவபரத்தே யேகச்
சிவமான ஞானஞ் சிவானந்த நல்குமே. கரு

1588 அறிந்துணர்ந் தேனிவ் வகலிட முற்றுஞ்
செறிந்துணர்ந் தேதித் திருவருள் பெற்றேன்
மறந்தொழிந் தேன்மதி மாண்டவர் வாழ்க்கை
பிறிந்தொழிந் தேனிப் பிறவியை நானே. கசு

1589 தரிக்கின்ற பல்லுயிர்க் கெல்லாந் தலைவன்
இருக்கின்ற தன்மையை ஏதும் உணரார்
பிரிக்கின்ற இத்தப் பினைக்குறுத் தெல்லாங்
கருக்கொண்ட ஈசனைக் கண்டுகொண் டேனே. கஎ

117. திருவடிப் பேறு

1590 இசைந்தெழும் அன்பில் எழுந்த படியே
பசைந்தெழும் ஈசரைப் பாசத்துள் ஏகச்
சிவந்த குருவந்து சென்னிகை வைக்க
உவந்த குருபதம் உள்ளத் துவந்ததே. க

1591 தாடந்த போதே தலைதந்த எம்மிறை
வாடந்த ஞான வலியையுந் தந்திட்டு
வீடந்த மின்றியே யாள்கென விட்டருட்
பாடின் முடிவைத்துப் பார்வந்து தந்ததே. உ

1592 தானவ னுகிச் சொரூபத் துவந்திட்டு
ஆன சொரூபங்கள் நான்கும் அகற்றின
ஏனைய முத்திரை யீந்தாண்ட நன்னந்தி
தானடி முற்சூட்டித் தாபித்த துண்மையே. உக

1593 உரையற் றுணர்வற் றுயிர்பர டற்றுத்
திரையற்ற நீர்போல் சிவடாகல் தீர்த்துக்
கரையற்ற சக்காதி நான்குங் கடந்த
சொரூபத் திருந்தினன் சொல்லிறக் தாமே. ச

1594 குரவன் உயிர்முச் சொருபமுங் கைக்கொண்
டரிய பொருண்முத் திரையாகச் சொன்ற
பெரிய பிரானடி நக்தி பேச்சற்
றுருகிட என்னினயங் குய்யக்கொண் டானே. ஞ

1595 பேச்சற்ற இன்பத்துப் பேரானக் தக்திசெ
மாச்சற்ற என்னைச் சிவமாக்கி டாள்வித்துக்
காச்சற்ற சோதி கடன்முன்று கைக்கொண்டு
வாச்ச புகழ்மாளத் தாள்தக்து மன்னுமே. ட

1596 நியத்தும் காட்டத்தும் என்றன் சிரத்தும்
பதிவித்த பாதப் பராபரன் நக்தி
கதிவைத்த வாறும் மெய்காட் டியவாறும்
விதிவைத்த வாறும் விளம்பவொண் ணாதே. ண

1597 திருவடி வைத்தென் சிரத்தருன் நோக்கிப்
பெருவடி வைத்தந்த போர்நந்தி தன்னைக்
குருவடி விற்கண்ட கோனையெங் கோனைக்
கருவழி வாற்றிடக் கண்டுகொண் டேனே. ட

1598 திருவடி ஞானஞ் சிவமாக்கு விக்குந்
திருவடி ஞானஞ் சிவலோகஞ் சேர்க்குந்
திருவடி ஞானஞ் சிறைமல மீட்குந்
திருவடி ஞானமே தின்சித்தி முத்தியே. ஠

1599 மேல்வைத்த வாறுசெய் யாவிடின் மேல்வினை
மால்வைத்த சிக்கதனை மாயமா காக்கிடும்
பால்வைத்த சென்னிப் படரொளி வானவன்
தாள்வைத்த வாறு தரிப்பித்த வாறே. ஡

1600 கழலார் கமலத் திருவடி என்னும்
நிழல்சேரப் பெற்றேன் நெடுமால் அறியா
அழல்சேரும் அங்கியுள் ஆதிப் பிரானுங்
குழல்சேரும் என்னுயிர்க் கூடுங் குலைத்தே. ககூ

1601 மூடுமன்ன ராகிமூ வுலகமு தாள்வர்
அடுமன்னர் இன்பத் தளவில்லை கேட்கின்
மூடுமன்ன ராய்நின்ற தேவர்கள் ஈசன்
குடுமன்ன ராய்க்குற்ற மற்றுநின் றூரே. கஉ

1602 வைத்தேன் அடிகள் மனத்தினுள் ளேகான்
பொய்த்தே யெரியும் புலன்வழி போகாமல்
எய்த்தேன் உழலும் இருவினை மாற்றிட்டு
மெய்த்தேன் அறிந்தேனவ் வேதத்தின் அந்தமே.

1603 அடிசார லாமண்ணல் பாத மிரண்டும்
முடிசார வைத்தனர் முன்னை முனிவர்
படிசார்ந்த இன்பப் பழவடி வெள்ளக்
குடிசார் நெறிகூடி நிற்பவர் கொள்ளைகே. கங

1604 மந்திர மாவது மாமருந் தாவது
தந்திர மாவதுந் தானங்க ளாவதுஞ்
சுந்தர மாவதுந் தூய்நெறி யாவதும்
எந்தை பிரான்தன் இணையடி தானே. கஙு

118. ஞாதுரு ஞானஞேயம்

1605 நீங்காச் சிவானந்த ஞேயத்தே நின்றிடப்
பாங்கான பாசம் படாரா படரினும்
ஆங்கார நீங்கி யதனிலே நிற்கவே
நீங்கா அழுத நிலைபெற லாமே. க

1606 ஞேயத்தே நின்ஞேர்க்கு ஞாலுதி நின்றிடும்
ஞேயத்தின் ஞாதுரு ஞேயத்தில் வீடாகும்
ஞேயத்தின் ஞேயத்தை ஞேயத்தை யுற்றவர்
ஆயத்தில் நின்ற அறிவறி வாரே. உ

1607 தாமினன் றவினன் றிரண்டாகுக் கத்துமக்
தாமினன் றவினன் றிரண்டுக் கனிற்சின்றி
தாமினன்ற பூவை யவனடி சாஞ்திறல்
தாமினன் றவினன்ன கல்லெதான் றுன்றிற. க

1608 வைச்சன வாழ்நூ டாற்றி யெதினவைத்து
மெச்சப் பரன்றன் வியாத்துவ சேமிட்டி
நிச்சய டாக்கிச் சிவடாக்கி நீநயத்தான்
அச்சங் கெடுத்தென்னை யாண்டனன் கத்தியே. ச

1609 மூன்றின யறிவுறி யாதலும் மூடச்சேடாற்
பின்றின யுறிவுறி யாமடனையப் பெடுத்தான்
தன்றின யுறியப் பரஞ்சித் தறிசெவத்
தென்றின யுறினித் திருத்தனன் கத்தியே. ஞ

1610 காணைத கண்ணுடன் கேனாத கேள்விபுங்
கோணைத கோபமுங் கூடாத கூட்டமும்
காணைத காணாமும் காதாக்த கோதமுங்
காணை யெனவாக்து காட்டினன் கத்தியே. ஃ

1611 மோனங்கை வக்கோர்க்கு முத்தியுங் கைகூடும்
மோனங்கை வக்கோர்க்குச் சித்தியும் மூன்னிற்கும்
மோனங்கை வக்தூமை யாமொழி மூற்றுங்கான்
மோனங்கை வக்தைதங் கருமமும் மூன்னுமே. எ

1612 மூத்தினை மூன்றின் மூடுக்கது மூன்றன்பால்
வைத்த கலிகால் நான்மடடங் கான்மாற்றி
உய்த்தவைத் தானத்துத் தொண்குரு பாதத்தே
பெத்த மறுக்கோர் பிறந்திற வாமே. அ

1613 மேலைச் சொருபங்கள் மூன்று மிகுசத்தி
பாலித்த மூத்தினை பற்றும் பரஞானி
ஆலித்த நட்டமே நேயம் புகுந்தற்ற
மூலச் சொருபன் மொழினூ தருவனே. கூ

119. துறவு

1614 இறப்பும் பிறப்பும் இருணமயும் நீங்கித்
துறக்குந் தவங்கண்ட சோதிப் பிரானை
மறப்பில ராய்ந்தித்தம் வாய்மொழி வாக்கட்
கறப்பதி காட்டும் அமரர் பிரானே. க

1615 பிறந்தும் இறந்தும்படல் பேதைமை யாலே
மறந்து மலஇருள் நீங்க மறைந்து
சிறந்த சிவனருள் சேர்பரு வத்துத்
துறந்த வுயிர்க்குச் சுடரொளி யாமே. உ

1616 அறவன் பிறப்பிலி யாரும் இலாதான்
உறைவது காட்டகம் உண்பது பிச்சை
துறவுளுங் கண்டீர் துறந்தவர் தம்மைப்
பிறவி யறுத்திடும் பித்தன்கண் டீரே. ங

1617 நெறியைப் படைத்தான் நெருஞ்சில் படைத்தான்
நெறியில் வழுவின் நெருஞ்சில் முட்பாயும்
நெறியில் வழுவா தியங்கவல் லார்க்கு
நெறியின் நெருஞ்சில்முட் பாயகி லாவே. ச

1618 கேடுங் கடமையுங் கேட்டுவந் தைதவரும்
காடு வளைந்தது கான்கட வேனலென்
ஆடல் விடையுடை அண்ணல் திருவடி
கூடுந் தவஞ்செய்த கொள்கையன் றானே. ஞ

1619 உழுவன் உழுவுழ வானம் வழங்க
உழுவன் உழுவினிற் பூத்த குவளை
உழுவன் உழுத்தியர் கண்ணெனக்கும் என்றிட்
டுழுவன் அதனை யுழுவொழிந் தானே. ட

1620 மேல்துறந் தண்ணல் விளங்கொளி கூற்றுவன்
கால்துறந் தார்க்கவன் கண்ப னவாவினி
கார்துறந் தார்க்கவன் கண்ணுத லாய்நிற்கும்
பார்துறந் தார்க்கே பதஞ்செய லாமே. ண

1621 காகமும் ஒன்று படம்ஐக்து காலது
போகமுட் புற்றிற் பொருந்தி நிறைக்கது
ஆக மிரண்டும் படம்விரித் தாட்டொழிக்
தேகப் படஞ்செய் துடம்பிட மாமே. அ

1622 அகன்றார் வழிமுதல் ஆதிப் பிரானும்
இவன்று னெனநின் றெளியனும் அல்லன்
சிவன்றாள் பலபல சிவனு மாகும்
கயன்றான் வரும்வழி காமறி யோமே. கூ

1623 தூம்பு திறந்தன ஒன்பது வாய்களும்
ஆம்பற் குழலியின் கஞ்சனிப் பட்டது
வெம்பேறி தோக்கினன் டீகாமன் கூளைபிற்
கூம்பேறிக் தோயிலிற் பூக்கின்ற வாறே. கo

120. தவம்

1624 ஓதிங்கி நிலைபெற்ற வுத்தமர் உள்ளம்
கடுங்குவ திவ்வி கடவுடைக் கிவ்வி
இடும்பையும் இவ்வி இராப்பகல் இவ்வி
படும்பயன் இவ்வி பற்றுவிட் டோர்க்கே. கூ

1625 எம்மா ருயிரும் இருநிலக் தோற்றமுஞ்
செம்மா தவத்தின் செயலின் பெருமையும்
அம்மான் திருவருட் பெற்றவர்க் கல்லா(து)
இம்மா தவத்தின் இயல்பறி யாரே. உ

1626 பிறப்பறி யார்பல பிச்சைசெய் மாந்தர்
சிறப்பொடு வேண்டிய செல்வம் பெறுவர்
மறப்பில ராகிய மாதவஞ் செய்வார்
பிறப்பினை நீக்கும் பெருமைபெற் றாரே. ஙூ

1627 இருந்து வருந்தி எழிற்றவஞ் செய்பும்
பெருந்தன்மை யாளரைப் பேதிக்க வென்றே
இருந்திந் திரனே யெவரே வரினுங்
திருந்துந்தஞ் சிந்தை சிவனவன் பாலே. ஙூ

1628 காந்துங் காந்திலன் கண்ணுக்குந் தோன்றுன்
பாந்த சடையன் பசும்பொன் நிறத்தன்
ஆருந்தவர்க் கல்லால் அணுகலு மாகான்
வினைந்து தொழப்படும் வெண்மதி யானே. ரு

1629 பின்னெய்த வைத்தபோர் இன்பப் பிறப்பினை
முன்னெய்த வைத்த முதல்வனை எம்மிறை
தன்னெய்துங் காலத்துத் தானே வெளிப்படும்
மன்னெய்த வைத்த மனமது தானே. சு

1630 அமைச்சரும் ஆனைக் குழாமும் அரசும்
பகைத்தெழும் பூசலுட் பட்டார் நடுவே
அமைத்தோர் ஞானமும் ஆத்தமும் நோக்கி
இமைத்தழி யாதிருந் தார்தவத் தாரே. எ

1631 சாத்திரம் ஓதுஞ் சதுர்களை விட்டுநீர்
மாத்திரைப் போது மறித்துள்ளே நோக்குமின்
பார்த்தவப் பார்வை பசுமரத் தாணிபோல்
ஆர்த்த பிறவி அகலவிட் டோடுமே. அ

1632 தவம்வேண்டு ஞானந் தலைப்பட வேண்டில்
தவம்வேண்டா ஞான சமாதிகை கூடில்
தவம்வேண்டா மச்சக சன்மார்க்கத் தோர்க்குத்
தவம்வேண்டா மாற்றந் தனையறி யாரே. கூ

121. தவ தூடணம்

1633 ஓதலும் வேண்டாம் உயிர்க்குயி ருள்ளுற்றூற்
காதலும் வேண்டாமெய்க் காய மிடங்கண்டாற்
சாதலும் வேண்டாஞ் சமாதிகை கூடினுற்
போதலும் வேண்டாம் புலன்வழி போகார்க்கே. க

1634 கத்தவும் வேண்டாங் கருத்தறிந் தாறினுற்
சத்தமும் வேண்டாஞ் சமாதிகை கூடினுற்
சுத்தமும் வேண்டாங் துடக்கற்று நிற்றலாற்
சித்தமும் வேண்டாஞ் செயலற் றிருக்கிலே. உ

1635 விளவறி வார்பண்டை மெய்த்தவஞ் செய்வார்
விளவறி வார்பண்டை மெய்யுரை செய்வார்
விளவறி வார்பண்டை மெய்யுறஞ் செய்வார்
விளவறி வார்விண்ணின் மண்ணின்மிக் கோரே. ங

1636 கூடித் தவஞ்செய்து கண்டேடன் குரைகழல்
தேடித் தவஞ்செய்து கண்டேடன் சிவகதி
வாடித் தவஞ்செய்வ தேதவம் இவைகளைக்
தூடிற் பலவுல கோரைத் தவரே. ச

1637 மனத்துறை மாகடல் ஏழுங் கைநீத்தித்
தவத்திடை யாளர்தஞ் சார்வத்து வந்தார்
பவத்திடை யாளர் அவர்பணி தேகட்கின்
முகத்திடை கத்தினை முக்தரு மாமே. ஞ

1638 மனத்திடை நின்ற மதிவாள் உரவி
னினத்திடை நிக்கி னிரண்டற வீர்த்துப்
புனத்திடை அஞ்சும் போகாமல் மறித்தால்
தவத்திடை யோரெனி தன்னினுள் யாமே. ட

1639 ஓத்து மிகவு நின்றுனை யுரைப்பது
பத்தி கொடுக்கும் பணிக்கடி யார்தாழ
முத்தி கொடுக்கும் முனிவ னெனும்பதந்
சுத்தான செய்வது தான்தவக் தானே. ண

1640 இலைதொட்டுப் பூப்பறித் தெந்தைதக்கென் றெண்ணி
மலர்தொட்டுக் கொண்டேடன் வரும்புனல் காணேன்
தலைதொட்ட தூல்கண்டு தாழ்ந்ததென் உள்ளக்
தலைதொட்டுக் கண்டேடன் தவங்கண்ட வாறே. த

1641 படர்சடை மாதவம் பற்றிய பத்தர்க்
கிடரடை யாவண்ணம் ஈசன் அருளும்
இடரடை செய்தவர் மெய்த்தவ நோக்கில்
உடரடை செய்வ தொருமனத் தாமே. ந

1642 ஆற்றிற் கிடந்த மூதலைகண் டஞ்சிப்போய்
சாற்றுக் கரடிக் கெதிர்ப்பட்ட தன்னைக்கும்
கோற்றுத் தவஞ்செய்யார் நூலறி யாதவர்
சோற்றுக்கு நின்று சுழல்கின்ற வாறே. ௪0

1643 பழுக்கின்ற வாறும் பழமுண்ணு மாறுங்
குழுக்கன்று துள்ளியக் கோணியைப் புல்காற்
குழுக்கன்று கொட்டிலிற் கட்டவல் லார்க்குள்
இழுக்காது கெஞ்சத் திடவொன்று மாமே. ௪௪

1644 சித்தஞ் சிவமாகச் செய்தவம் வேண்டாவால்
சித்தஞ் சிவானந்தஞ் சேர்ந்தோர் உறவுண்டால்
சித்தஞ் சிவமாக வேசித்தி முத்தியாஞ்
சித்தஞ் சிவமாதல் செய்தவப் பேறே. ௪உ

122. அருளுடைமையின் ஞானம் வருதல்

1645 பிரானருள் உண்டெனில் உண்டுநற் செல்வம்
பிரானருள் உண்டெனில் உண்டுநன் ஞானம்
பிரானரு ளிற்பெருந் தன்மையும் உண்டு
பிரானரு ளிற்பெருந் தெய்வமு மாமே. ஈ

1646 தமிழ்மண் டலம்ஐந்துந் தாவிய ஞானம்
உமிழ்வது போல உலகந் திரிவர்
அவிழு மனமும்எம் ஆதி யறிவுந்
தமிழ்மண் டலம்ஐந்துந் தத்துவ மாமே. உ

1647 புண்ணிய பாவம் இரண்டுள பூமியில்
கண்ணுறும் பொழுதறி வார்சில ஞானிகள்
எண்ணி இரண்டையும் வேறறுத் தப்புறத்
தண்ணல் இருப்பிடம் ஆய்ந்துகொள் வீரே. ஊ

1648 முன்னின் றருளு முடிகின்ற காலத்து
நன்னின் றுலகில் நடுவுயி ராய்நிற்கும்
பின்னின் றருளும் பிறவியை நீக்கிடும்
முன்னின் றெனக்கொரு முத்திதந் தானே. ஏ

1649 சிவனரு ளாற்சிலர் தேவரு மாவர்
சிவனரு ளாற்சிலர் தெய்வத்தே டோம்பர்
சிவனரு ளால்வினை சேரகி லாமை
சிவனருள் கூறில்அச் சிவலோக மாமே. ரு

1650 புண்ணியன் எந்தை புனிதன் இணையடி
கண்ணி விளக்கென ஞானம் விளைந்தது
மண்ணவ ராவதும் வானவ ராவதும்
அண்ணல் இறைவன் அருள்பெற்ற போதே. சு

1651 காயத்தே சேறி மனப்பாகன் கைகூட்ட
மாயத்தே சேறி மயங்கு மவையுணர்
சேயத்தே சேறி நிமலன் அருள்பெற்றால்
ஆயத்தே சேறி யவனிவ னுமே. எ

1652 அவ்வுல கத்தே பிறக்கில் உடலொடும்
அவ்வுல கத்தே யருங்கவர் காடுவர்
அவ்வுல கத்தே யரனடி கூடுவர்
அவ்வுல கத்தே யருள்பெறு வாரே. அ

1653 கதிர்கண்ட காந்தங் கனலின் வடிவாம்
மதிகண்ட காந்தம் மணிநீர் வடிவாஞ்
சதிகொண்ட சாக்கி யெரியின் வடிவாம்
எரிகொண்ட ஈசன் எழில்வடி வாமே. கூ

1654 நாடும் உறவுங் கலந்தெங்கள் நந்தியைத்
தேடுவன் தேடிச் சிவபெரு மான்என்று
கூடுவன் கூடிக் குணைகழற் கேசெல்ல
வீடு மளவும் விடுகின்றி லேனே. கூ

123. அவவேடம்

1655 ஆடம் பரங்கொண் டடிசிலுண் பான்பயன்
வேடங்கள் கொண்டு வெருட்டிடும் பேதைகாள்
ஆடியும் பாடியும் அழுதும் அரற்றியுந்
தேடியுங் காணீர் சிவனவன் தாள்களே. கூ

1656 ஞானமில் லாள்வேடம் பூண்டிந்த நாட்டிடை
ஈனமே தேசெய்த் திரந்துண் டிருப்பினும்
மான கலங்கெடும் அப்புவி யாதலால்
ஈனவர் வேடங் கழிப்பித்தல் இன்பமே. உ

1657 இன்பமும் துன்பமும் நாட்டா ரிடத்துள்ள
நன்செயல் புன்செய லாலந்த நாட்டிற்காம்
என்ப இறைநாடி நாடோறும் நாட்டினின்
மன்பதை செப்பஞ் செயின்வையம் வாழுமே. ங

1658 இழிகுலத் தோர்வேடம் பூண்பர் மேலெய்த
வழிகுலத் தோர்வேடம் பூண்பர் தேவாகப்
பழிகுலத் தாகிய பாழ்சண்ட ராணர்
கழிகுலத் தோர்கள் கலையப்பட் டோரே. ச

1659 பொய்த்தவஞ் செய்வார் புகுவர் நரகத்துப்
பொய்த்தவஞ் செய்தவர் புண்ணிய ராகாரேற்
பொய்த்தவம் மெய்த்தவம் போகத்துட் போக்கியஞ்
சத்திய ஞானத்தால் தங்குந் தவங்களே. ஞ

1660 பொய்வேடம் பூண்பர் பொசித்தல் பயனுக
மெய்வேடம் பூண்போர் மிகுபிச்சை கைக்கொள்வர்
பொய்வேடம் மெய்வேடம் போலவே பூணினும்
உய்வேட மாகும் உணர்ந்தறிந் தோர்க்கே. ட

124. தவவேடம்

1661 தவமிக் கவரே தலையான வேடர்
அவமிக் கவரே யதிகொலை வேடர்
அவமிக் கவர்வேடத் தாகாரவ் வேடந்
தவமிக் கவர்க்கன்றித் தாங்கவொண் ணுதே. க

1662 பூதி யணிவது சாதன மாதியிற்
காதணி தாம்பிர குண்டலங் கண்டிகை
ஓதி யவர்க்கும் உருத்திர சாதனந்
தீதில் சிவயோகி சாதனந் தேரிலே. உ

1663 யோகிக் கிடுமது வுட்கட்டுக் கஞ்சனி
தோகைக்குப் பாசத்துச் சுற்றுஞ் சடைப்பதான்
மூகத்து கீறணி யாங்கக் கபாலஞ்
சிகத்த மாத்திரை திண்பிரம் பாகுமே. ங

1664 காதணி குண்டலங் கண்டிகை காதுமூம்
வாதுகற் சங்கும் உயர்கட்டி கப்பரை
எதமில் பாதுகம் யோகாத்த மாதனம்
எதமில் யோகபட் டந்தண்டம் ஈரைந்தே. ச

125. திருநீறு

1665 நூலுஞ் சிகையும் உளராய்ந்தின் மூடர்கள்
தாலது வேகாந்தம் நூன்சிகை ஞானமாம்
பாலொன்றும் அந்தணர் பார்ப்பார் பரமுயிர்
ஓரொன்று நிரண்டெனில் ஓங்காரம் ஓதிலே. ஈ

1666 கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை
மங்காமற் பூசி மகிழ்வதே யாமாகில்
தங்கா வினைகளுஞ் சாருந் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்வதே. உ

1667 அரசுட னாலத்தி யாகும்அக் காரம்
விரவு கனலில் வியனுரு மாறி
நிரவபன் நின்மலன் தாள்பெற்ற நீதர்
உருவம் பிரமன் உயர்குல மாமே. ஊ

126. ஞானவேடம்

1668 ஞானமி லார்வேடம் பூண்டும் நரகத்தர்
ஞானமுள் ளார்வேடம் இன்றெனில் நன்முத்தர்
ஞானமுள தாக வேண்டுவோர் நக்கன்பால்
ஞானமுள வேட நண்ணிநிற் போரே. எ

1669 புன்ஞான நோர்வேடம் பூண்டும் பயனில்லை
நன்ஞான நோர்வேடம் பூணார் அருள்நண்ணித்
துன்ஞான நோர்சட யத்துரி சுள்ளோர்
பின்ஞான நோரொன்றும் பேசகில் லாரே. ஏ

1670 சிவஞானி கட்குஞ் சிவயோகி கட்கும்
அவமான சாதனம் ஆகாது தேரில்
அவமா மவர்க்கது சாதன நான்கும்
உவமான மில்பொருள் உள்ளுற லாமே. ங

1671 கத்திக் திரிவர் கழுவடி நாய்போற்
கொத்திக் திரிவர் குரக்களி ஞானிகள்
ஒத்துப் பொறியும் உடலும் இருக்கவே
செத்துத் திரிவர் சிவஞானி யோர்களே. ச

1672 அடியா ரவரே யடியா ரலாதார்
அடியாரு மாகாரவ் வேடமு மாகார்
அடியார் சிவஞான மானது பெற்றோர்
அடியா ரலாதார் அடியார்கள் அன்றே. ஞ

1673 ஞானிக்குச் சுத்த வேடமும் நல்லவாந்
தானுற்ற வேடமுந் தற்சிவ யோகமே
ஆனவவ் வேடம் அருண்ஞான சாதனம்
ஆனது மாமொன்றும் ஆகா தவனுக்கே. ட

1674 ஞானத்தி னேற்பத நண்ணுஞ் சிவஞானி
தானத்தில் வைத்த தனியால யத்தனும்
மோனத்த னுதலின் மூத்தனுஞ் சித்தனும்
ஏனைத் தவசி இவனென லாகுமே. ண

1675 தானன்றித் தன்மையுந் தானவ னுதலும்
ஏனைய வச்சிவ மான இயற்கையுந்
தானுறு சாதக மூத்திரை சாத்தலு
மேனமும் நந்தி பதமுத்தி பெற்றதே. அ

127. சிவவேடம்

1676 அருளால் அரனுக் கடிமைய தாகிப்
பொருளாந் தனதுடற் பொற்பதி நாடி
இருளான தின்றி யிருஞ்செயல் அற்றோர்
தெருளாம் அடிமைச் சிவவேடத் தாரே. க

1677 உடலில் துவக்கிய வெடம் உயிர்க்காகா
உடல்கழன் றுல்வெடம் உடனே கழலும்
உடலுயிர் உண்ணெடியன் றிறக்துகொள் ளாதார்
கடலில் அகப்பட்ட கட்டையொத் தாரே. உ

1678 மயலற் றிருளற்று மாமன மற்றுக்
கயலுற்ற கண்ணியர் கையினைக் கற்றுக்
கயலற் றவரோதுக் காமே காமாகிச்
செயலற் றிருப்பார் சிவலோடத் தாரே. ங

1679 ஓதுங் குறிஞைக் குரைதின்னம் பற்றுமின்
வெடங்கொண் டென்செய்வீர் வேண்டா மனிதீர
காதுமின் கந்தியை கம்பெரு மான்குன்றைத்
தேதும்பின் பப்பொருள் சென்றெய்த லாமே. ச

128. அபக்குவன்

1680 குருட்டினை நிக்குங் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நிக்காக் குருவினைக் கொள்வர்
குருங்குங் குருங்குங் குருட்டாட்டம் ஆடிக்
குருங்குங் குருங்குங் குழிவிழு மாறே. க

1681 மனத்தில் எழுந்தோர் மாயக்கண் ணோட
நினைப்பின் அதனின் நிழலுங் காணார்
வினைப்பயன் போக விளக்கியுங் கொள்ளார்
புறக்கடை இச்சித்துப் போகின்ற வாறே. உ

1682 எயினில் என்னென மாட்டார் பிரசைகள்
வாய்முலை பெய்ய மதுரநின் றூறிநிற்
காய்முலை யாவ தறியார் தமருளார்
உளரிலை செய்புட் உருவினி தானே. ங

1683 வாயொன்று சொல்லி மனமொன்று சிந்தித்து
நீயொன்று செய்யல் உறுதி நெடுங்தகாய்
தீயென்றிங் குன்னைத் தெளிவன் தெளிந்தபின்
பேயென்றிங் கென்னைப் பிறர்தெளி யாரே. ச

1684 பஞ்சத் துரோகத்திப் பாதகர் தம்மை
யஞ்சச் சமயத்தோர் வேந்தன் அருந்தண்டம்
விஞ்சச் செய்திப் புவிவேறே விடாவிடிற்
பஞ்சத்து ளாய்புவி மூற்றும்பா ழாகுமே. நு

1685 தவத்திடை நின்றவர் தாமுண் ணுங்கன் மஞ்
சிவத்திடை நின்றது தேவர் அறியார்
தவத்திடை நின்றறி யாதவர் எல்லாம்
பவத்திடை நின்றதோர் பாடது வாமே. சூ

1686 கன்றலுங் கந்தலுங் கருமஞ் செய்தலும்
தின்றலுஞ் சுவைத்தலுந் தீமை செய்தலும்
பின்றலும் பிறங்கலும் பெருமை கூறலும்
என்றிவை இறைபால் இயற்கை அல்லவே. எ

1687 விடுவ தறியார் வெளிகாண மாட்டார்
விடியில் வெளியில் விழிக்கவு மாட்டார்
கடியதோ ருண்ணிமை கட்டுமின் காண்மின்
விடியாமை காக்கும் விளக்கது வாமே. அ

1688 வைத்த பசுபாச மாற்று நெறிவைகிப்
பெத்த மறமுத்த ருகிப் பிறழ்வுற்றுத்
தத்துவ முன்னித் தலைப்படா தவ்வாறு
பித்தான சிடனுக் கியப் பெறுதானே. கூ

1689 மன்னும் மலம்ஐந்தும் மாற்றும் வகையோரான்
துன்னிய காமாதி தோயுந் தொழில்நீங்கான்
பின்னிய பொய்யன் பிறப்பிறப் பஞ்சாதான்
அன்னிய ருவன் அசற்சீட ருமே. கo

129. பக்குவன்

1690 தொழிலறி வாளர் சுருதிகண் ணுகப்
பழுதறி யாத பரம குருவை
வழியறி வார்கல் வழியறி வாளர்
அழிவறி வார்மற்றை யல்லா தவரே. க

1691 பணைத்தெழுந் தேன்பர மாவுறை காடு
யணைத்தெழுந் தேன்இனி யாரொடுங் கூடேன்
சினைத்தடு மென்வினை சிக்கென நீர
உணைத்துணை யாயுகந் தாண்டரு ளாயே. உ

1692 பணைக்கின்ற போதே பரமென்னும் வித்தை
வினைக்கின்ற வித்தினை மேல்நின்று நோக்கிச்
சினைக்கின்ற சிந்தையைச் செவ்வே நிறுத்தி
இணைக்கின்ற அன்பருக் கியலு மாமே. ஊ

1693 கொள்ளுறும் கல்ல குருவினைக் கொள்ளுக
உள்ள பொருளுடல் ஆவி யுடன்னுக
என்னுந் தினைபுடம் இடைவிடா தேநின்று
தென்னி யறியுஞ் சிவபதந் தானே. எ

1694 சோதி விசாகந் தொடர்ந்திரு தேள்கண்டு
ஓதிய தானை உணர்வது தானென்று
நீதியுள் நீர்மை நினைக்கவர்க் கல்லது
ஆதியும் எதுமம் அறியகி லாதே. ஏ

1695 தொழிலாத மாமணித் தூய்ஞான சிந்தை
எழிலால் இறைவன் இடங்கொண்ட போதே
விழலார் விறலாடம் வினையது போகக்
கழலார் திருவடி கண்டரு ளாமே. ஐ

1696 சாத்திக னுப்பர சுத்துவந் தாலுன்னி
ஆத்திக பேத நெறிதோற்ற மாகியே
ஆர்த்த பிறவியி னஞ்சி யறநெறி
சாத்தவல் லானவன் சற்சீட னுமே. ஒ

1697 சத்தும் அசத்துமெவ் வாறெனத் தாலுன்னிச்
சித்தை யுருக்கிச் சிவனருள் கைகாட்டப்
பத்தியின் ஞானம் பெறப்பணிந் தானந்தச்
சத்தியில் இச்சைத் தகுவோன்சற் சீடனே. ஓ

1698 அடிவைத் தருளுநி யாசானின் றுன்னு
அடிவைத்த மாமுடி மாயப் பிறவி
அடிவைத்த காய அருட்சத்தி யாலே
அடிபெற்ற ஞானத்த ஞசற்று ளோனே. சு

1699 சீராரு ஞானத்தின் இச்சை செலச்செல்ல
வாராத காதல் குருபரன் பாலாகச்
சாராத சாதக நான்குந்தன் பாலுற்றோன்
ஆராயும் ஞானத்த ணமடி வைக்கவே. கட

1700 உணர்த்து மதிபக்கு வர்க்கே யுணர்த்தி
இணக்கிற் பாபரத் தெல்லையுள் இட்டுக்
குணக்கொடு தெற்குத் தரபச்சி மங்கொண்
டுணர்த்துமி லுவுடை யாள்தன்னை யுன்னியே. கக

1701 இறையடி தாழ்ந்தை வணக்கமும் எய்திக்
குறையது கூறிக் குணங்கொண்டு போற்றச்
சிறையுடல் நீயறக் காட்டிச் சிவத்தோ
டறிவுக் கறிவிப்போன் சன்மார்க்கி யாமே. கஉ

1702 வேட்கை விடுநெறி வேதாந்த மாதலால்
வாழ்க்கைப் புனல்வழி மாற்றிச்சித் தாந்தத்து
வேட்கை விடுமிக்க வேதாந்தி பாதமே
தாழ்க்குந் தலையினேன் சற்சிட ணமே. கங

1703 சற்குணம் வாய்மை தயாவினே கந்தண்மை
சற்குரு பாதமே சாயைபோல் நீங்காமே
சிற்பர ஞானந் தெளியத் தெளிவோர்தல்
அற்புத மேதோன்ற லாகுஞ்சற் சீடனே. கச

ஆறாந் தந்திரம் முற்றிற்று.

130. ஆறுதாம்

1704 தாவம் திருமன் றும்சாத்தும் சாதங்கள்
சேவடிமேல் நின்று குறிகொள் படுதலும்
மூவுங்கண் டாங்கே முடுத்து மூலன்றிரண் டிற்
காவுங்கண் டானடி காணலு மாமே. க

1705 சாது தாந்தித் சாபட்டம் அந்தத்தின்
மேதாதி தாதாத்த மீசாட் டயாத்தின்
போதாய லுய்த்து வினாத் தனிற்போத
மேதாதி யாதார மீதான உன்னாடியே. உ

1706 பேனென்றுங் கிடந்தன் றிரண்டாய்க் காலுங்கால்
தானென்றுஞ் சானென்றுந் தன்மைகள் ஓராறும்
பாலைக்கு மாகிப் பரந்த பாபரம்
காசினன்று கும்பக மாகின்ற ஞானே. ங

1707 ஆதார மேதாதின யாலுடி சுத்திகண்
மேதாதி யீரெண் கலாத்தத்து விண்ணொளி
போதாய லுய்த்துப் புலன்கர ணைம்புத்தி
சாதா ரணங்கெட்டான் ஞன்சக மாம்க்கமே. ச

1708 மேதாதி யாலே விடாதே மனைத்தூண்டி
ஆதார சோதனை அத்துவ சோதனை
தாதாத மாகவே தானழுச் சாதித்தால்
ஆதாரஞ் செய்போக மாவது காயமே. ஞ

1709 ஆறந்த மூங்கூடி யாகும் உடம்பினிற்
கூறிய வாதார மற்றுங் குறிக்கொண்மின்
ஆறிய வக்கர மைம்பதின் மேலே
ஊறிய வாதாரத் தோரெழுத் தாமே. ட

1710 ஆகும் உடம்பும் அழிகின்ற அவ்வுடல்
போகும் உடம்பும் பொருந்திய வாறுதான்
ஆகிய வக்காரம் ஐம்பது தத்துவம்
ஆகும் உடம்புக்கும் ஆறந்த மாமே. எ

1711 ஆயு மலரின் அணிமலர் மேலது
வாய இதழும் பதிணுறும் அங்குள
தாய அறிவு சிவானந்த மாகிப்போய்
மேய அறிவாய் விளைந்தது தானே. அ

131. அண்ட லிங்கம்

1712 இலிங்கம தாவ தியாரும் அறியார்
இலிங்கம தாவ தெண்டிசை யெல்லாம்
இலிங்கம தாவ தெண்ணெண் கலையும்
இலிங்கம தாக எடுத்த துலகே. க

1713 உலகில் எடுத்தது சத்தி முதலா
உலகில் எடுத்தது சத்தி வடிவாய்
உலகில் எடுத்தது சத்தி குணமாய்
உலகம் எடுத்த சதாசிவன் தானே. உ

1714 போகமும் முத்தியும் புத்தியுஞ் சித்தியும்
ஆகமும் ஆறு தத்துவத் தப்பாலாம்
எகமும் நல்கி யிருக்குஞ் சதாசிவம்
ஆகம வத்துவா வாறுஞ் சிவமே. ங

1715 எத்தினர் எண்ணிலி தேவரெம் ஈசனை
வாழ்த்தினர் வாசப் பசுந்தென்றல் வள்ளலென்
றேத்தினர் அண்டங் கடந்தப் புறநின்று
காத்தனன் என்னுங் கருத்தறி யாரே. ச

1716 ஒண்சுட ரோன்அயன் மால்பிர சாபதி
ஒண்சுட ரான இரவியோ டிந்திரன்
கண்சுட ராகிக் கலந்தெங்குந் தேவர்கள்
கண்சுட ராயெங்கும் நற்பர மாமே. ஞ

1717 தாடபத் தூண்மணிம் றுதாயம் மாண்டிடன்
டாடபத் தூண்மட வழிபடி மாரிஸ்ஸே
டாடபத் தூண்மட வழிபடி மாரிஸ்ஸே
தூடத்த் தூன்றின்ற மொற்றிகட டாதுதிர். கூ

1718 தூப விமானமுக் தூட்ட தாதுடன்
தூப சுதாசிய டாதுதும் தூக்குடம்
தூப பளிடிடம் பத்திர மிட்டபம்
தூப தரனிலு தூப்தூனிகான் மாங்கிக.
தூப தரனிலு தூப்தூனிகான் மாங்கிக. ஏ

1719 மூத்துடன் மாலயிக்கம் மிடம்த்ரு மன்ன முக்
கொத்துடம் மிகட்ட மிலம்த்ரு மிகட்டாம்
நிதுத்தனறன முகட்ட டனால டாங்கபாட
உய்த்துத்தின் சாதவம் தூடனை மிக்கதிட. அ

1720 தூன்றுத் தூர்திகப் பாத்தூய்ய மிடழுதுடன்
கன்றிய மிகம்ப சுனதிர தூத்சுவம்
வன்றிறல் மிகஞ்சுல் மிடதுமுட வின்லம்மிபான்
மிறவ்றியம் மிகான்னற மிதுர்சிவ மிக்கதிட. கூ

1721 மனறயவர் தூர்ச்சின வண்படி தக்தான்
இனறயவர் தூர்ச்சின மியமிபான் முகுங்
குனறவிலா வசியர்க்குக் மிகாடன டாகுக்
துனறபுனடச் சூத்திரர் மிதால்வான மிங்கதிட. கo

1722 அதுவணைர்க் மிதாமிறை தன்னடைய காட
எதுவணை ராவனை நின்றனன் சுசன்
டுதுவணைர் வான டுவனங்கள் எட்டும்
இதுவணைர்க் மிதன்றுடல் மிதாமிறல்மிதாண் டாமின.

1723 அகலிட டாயநி யாமல் அடங்கும்
உகலிட டாய்ந்தின்ற வுனத வுள்மின
பகலிட டாமுனம் பாவ விஞசன்
புகலிட டாய்ந்தின்ற புண்ணியன் முனை. கூ

1724 போது புனைகழல் பூமிய தாவது
மாது புனைமுடி வானக மாவது
நீதிபுள் ஈசன் உடல்விசும் பாய்நிற்கும்
ஆதி யுறநின்ற தப்பரி சாமே. கஇ

1725 தரையுற்ற சத்தி தனிலிங்கம் விண்ணுந்
திரைபொரு நீரது மஞ்சன சாலை
வரைதவழ் மஞ்சுநீர் வாணுடு மாலை
கரையற்ற நந்தி கலையுந்திக் காமே. கச

132. பிண்ட லிங்கம்

1726 மானுட ராக்கை வடிவு சிவலிங்கம்
மானுட ராக்கை வடிவு சிதம்பரம்
மானுட ராக்கை வடிவு சதாசிவம்
மானுட ராக்கை வடிவு திருக்கூத்தே. க

1727 உலந்திலர் பின்னும் உளரென நிற்பர்
நிலந்தரு நீர்தெளி யூனைவை செய்யப்
புலந்தரு பூதங்கள் ஐந்தும் ஒன்றுக
வலந்தரு தேவரை வந்திசெய் யீரே. உ

1728 கோயில்கொண் டன்றே குடிகொண்ட ஐவரும்
வாயில்கொண் டாங்கே வழிநின் றருளுவர்
தாயில்கொண் டாற்போல் தலைவனென் னுட்புக
வாயில்கொண் டீசனு மாளவந் தானே. ஙஇ

1729 கோயில்கொண் டானடி கொல்லைப் பெருமறை
வாயில்கொண் டானடி நாடிகள் பத்துள
பூசைகொண் டான்புல னைந்தும் பிறகிட்டு
வாயில்கொண் டானெங்கள் மாநந்தி தானே. ஙச

133. சதாசிவ லிங்கம்

1730 கூடிய பாதம் இரண்டும் படிமிசை
பாடிய கையிரண் டெட்டுப் பரந்தெழுந்
தேடு முகம்ஐந் துசெங்கையின் மூவைந்து
நாடுஞ் சதாசிவ நல்லொளி மூர்த்தே. ஙக

1731 வேதா நெடுமால் உருத்திரன் மேலீசன்
மீதான ஐம்முகன் விந்துவும் நாதமும்
ஆதார சத்தியு மந்தச் சிவனெடுஞ்
சாதா ரணமாஞ் சதாசிவந் தானே. உ

1732 ஆகின்ற சத்தியின் உள்ளே கலைநிலை
ஆகின்ற சத்தியின் உள்ளே கதிரெழு
ஆகின்ற சத்தியின் உள்ளே அமர்ந்தபின்
ஆகின்ற சத்திபுள் அத்திசை பத்தே. ஊ

1733 அத்திசைக் குள்ளே அமர்ந்தன ஆறங்கம்
அத்திசைக் குள்ளே அமர்ந்தன நால்வேதம்
அத்திசைக் குள்ளே அமர்ந்த சரியையோ
டத்திசைக் குள்ளே அமர்ந்த சமயமே. எ

1734 சமயத் தெழுந்த அவத்தையீ ரைந்துள
சமயத் தெழுந்த இராசி ஈராறுள
சமயத் தெழுந்த சதிரீரா றெட்டுள
சமயத் தெழுந்த சதாசிவந் தானே. ஏ

1735 கடுவு கிழக்குத் தெற்குத் தரமேற்கு
கடுவு படிகநற் குங்கும வண்ணம்
அடைவுள வஞ்சனஞ் செவ்வரத் தம்பால்
அடியேற் கருளிய முகமிவை அஞ்சே. ஐ

1736 அஞ்சு முகமுள ஐம்மூன் றுகண் ணுள
அஞ்சிணை டஞ்சு கரதலந் தாணுள
அஞ்சுடன் அஞ்சா யுதமுள கம்பியென்
நெஞ்சு புகுந்து நிறைந்துநின் றனே. ஒ

1737 சத்தி தராதல மண்டஞ் சதாசிவஞ்
சத்தி சிவமிக்க தாபர சங்கமஞ்
சத்தி யுருவம் அருவஞ் சதாசிவஞ்
சத்தி சிவதத்துவ மூப்பத் தாறே. ஓ

1738 தத்துவ மாவ தருவஞ் சராசரந்
தத்துவ மாவ தருவஞ் சுகோதயந்

தத்துவம் எல்லாஞ் சகலமு மாய்நிற்குந்
தத்துவ மாகுஞ் சதாசிவன் தானே. கூ

1739 கூறுமி னூறு சதாசிவன் எம்மிறை
வேறோர் உரைசெய்து மிகைப்பொரு ளாய்நிற்கு
மேறுரை செய்திதாழில் வானவர் தம்மொடு
மாறுசெய் வானென் மனம்புகுந் தானே. கo

1740 இருளார்ந்த கண்டமும் ஏந்து மழுவுஞ்
சுருளார்ந்த செஞ்சடைச் சோதிப் பிறையும்
அருளார்ந்த சிந்தையிடம் ஆதிப் பிராணைத்
தெருளார்ந்தென் உள்ளே தெளிந்திருந் தேனே. கக

1741 சத்திதான் நிற்கின்ற ஐம்முகஞ் சாற்றிடில்
உத்தமம் வாம முரையத் திருந்திடுந்
தத்துவம் பூருவந் தற்புரு டன்சிர
மத்தகு கோர மகுடத்தீ சானனே. கஉ

1742 நாணுநல் லீசான நடுவுச்சி தாணுகுந்
தாணுவின் றன்முகந் தற்புருட மாகுங்
காணும் அகோரம் இருதயங் குய்யமா
மாணுற வாமமாஞ் சத்திநற் பாதமே. கங

1743 நெஞ்சு சிரஞ்சிகை நீள்கவ சங்கண்ணம்
வஞ்சமில் விந்து வளர்நிறம் பச்சையாஞ்
செஞ்சுறு செஞ்சுடர் சேகரி மின்னுகுஞ்
செஞ்சுடர் போலுந் தெசாயுதந் தானே. கச

1744 எண்ணில் இதயம் இறைஞான சத்தியாம்
விண்ணிற் பரைசிர மிக்க சிகையாதி
வண்ணக் கவசம் வனப்புடை இச்சையாம்
பண்ணுங் கிரியை பரநேத் திரத்திலே. கஞ

1745 சத்திநாற் கோணஞ் சலமூற்று நின்றிடுஞ்
சத்தி அறுகோணஞ் சயனத்தை யுற்றிடுஞ்
சத்திநல் வட்டஞ் சலமூற் றிருந்திடுஞ்
சத்தி யுருவாஞ் சதாசிவன் தானே. கசு

1746 மானந்தி எத்தனை காலம் அழைக்கினும்
தானந்தி யஞ்சின் தனிச்சுட ராய்நிற்கும்
கானந்தி யுந்தி கடந்து கடலத்தின்
மேனந்தி ஒன்பதின் மேவிநின் றானே. கஎ

1747 ஒன்றிய வாறும் உடலி னுடன்கிடந்
தென்றுமெம் மீச னடக்கும் இயல்பது
தென்றலைக் கேறத் திருந்து சிவனடி
நின்று தொழுதேனென் னெஞ்சத்தி னுள்ளே. கஅ

1748 உணர்ந்தேன் உலகினில் ஒண்பொரு ளானைக்
கொணர்ந்தேன் குவலயங் கோயிலென் நெஞ்சம்
புணர்ந்தேன் புனிதனும் பொய்யல்ல மெய்யே
பணிந்தேன் பகலவன் பாட்டு மொலியே. கக

1749 ஆங்கவை மூன்றினும் ஆதழல் வீசிடத்
தாங்கிடும் ஈரேழு தானடு வானதில்
ஓங்கிய ஆதியும் அந்தமு மாமென
ஈங்கிவை தம்முடல் இந்துவு மாமே. உ0

1750 தன்மேனி தற்சிவ லிங்கமாய் நின்றிடுந்
தன்மேனி தானுஞ் சதாசிவ மாய்நிற்குந்
தன்மேனி தற்சிவன் தற்சிவா னந்தமாந்
தன்மேனி தாணுகுந் தற்பரந் தானே. உக

1751 ஆரும் அறியார் அகார மவனென்று
பாரு முகாரம் பரந்திட்ட நாயகி
தாரம் இரண்டுந் தரணி முழுதுமாய்
மாறி யெழுந்திடும் ஓசைய தாமே. உஉ

1752 இலிங்கநற் பீடம் இசையும் ஓங்காரம்
இலிங்கநற் கண்ட நிறையு மகாரம்
இலிங்கத்துள் வட்ட நிறையும் உகாரம்
இலிங்க மகார நிறைவிந்து நாதமே. உங

134. ஆத்ம லிங்கம்

1753 அகார முதலா யனைத்துமாய் நிற்கும்
உகார முதலா யுயிர்ப்பெய்து நிற்கும்
அகார வுகாரம் இரண்டு மறியில்
அகார வுகாரம் இலிங்கம தாமே. க

1754 ஆதார மாதேய மாகின்ற விந்துவு
மேதாதி நாதமு மீதே விரிந்தன
ஆதார விந்து அதிபீட நாதமே
போதாவி லிங்கப் புணர்ச்சிய தாமே. உ

1755 சத்தி சிவமாம் இலிங்கமே தாபரஞ்
சத்தி சிவமாம் இலிங்கமே சங்கமஞ்
சத்தி சிவமாம் இலிங்கஞ் சதாசிவஞ்
சத்தி சிவமாகுந் தாபரந் தானே. ங

1756 தானே ரெழுகின்ற சோதியைக் காணலாம்
வானே ரெழுகின்ற ஐம்ப தமர்ந்திடம்
பூநே ரெழுகின்ற பொற்கொடி தன்னுடன்
தானே ரெழுகின்ற வகாரம தாமே. ச

1757 விந்துவும் நாதமும் மேவு மிலிங்கமாம்
விந்துவ தேதபீட நாதமி லிங்கமாம்
அந்த இரண்டையும் ஆதார தெய்வமாய்
வந்த குருவைவந்துஞ் செய்யு மவையைங்தே. ஞ

1758 சத்திநற் பீடந் தகுநல்ல ஆன்மா
சத்திநற் கண்டந் தகுவித்தை தாணுகுஞ்
சத்திநல் லிங்கந் தகுஞ்சிவ தத்துவஞ்
சத்திநல் லான்மாச் சதாசிவந் தானே. ட

1759 மனம்புகுந் தென்னுயிர் மன்னிய வாழ்க்கை
மனம்புகுந் தின்பம் பொழிகின்ற போது
நலம்புகுந் தென்னெடு நாதனை நாடும்
இலம்புகுந் தாதியு மேற்கொண்ட வாறே. எ

1760 பராபரன் எந்தை பனிமதி சூடி
தராபரன் தன்னடி யார்மனக் கோயிற்
சிராபரன் தேவர்கள் சென்னியின் மன்னு
மராமரன் மன்னி மனத்துறைந் தானே. அ

1761 பிரானல்ல நாமெனிற் பேதை யுலகங்
குராலென்னு மென்மனங் கோயில்கொள் ஈசன்
அராநின்ற செஞ்சடை அங்கியும் நீரும்
பொராநின் றவர்செய்யப் புண்ணியன் தானே. சு

1762 அன்றுநின் முன்கிடந் தானவன் என்று
சென்றுநின் றெண்டிசை வத்துவர் தேவர்கள்
என்றுநின் றேத்துவன் எம்பெரு மான்தன்னை
ஒன்றியென் உள்ளத்தின் உள்ளிருந் தானே. கூ

135. ஞான லிங்கம்

1763 உருவும் அருவும் உருவோ டுருவும்
மருவு பரசிவன் மன்பல் லுயிர்க்குங்
குருவு மெனநிற்குங் கொள்கைய னுகுந்
தருவென நல்குஞ் சதாசிவன் தானே. கூ

1764 காலான கீழ துருவ நடுநிற்க
மேலான நான்கு மருவு மிகநாப்பண்
காலான ஒன்று மருவுரு கண்ணலாற்
பாலா மிலையாம் பரசிவன் தானே. உ

1765 தேவர் பிரானைத் திசைமுக நாதனை
நால்வர் பிரானை நடுவுற்ற நந்தியை
ஏவர் பிரானென் றிறைஞ்சுவா ரவ்வழி
யாவர் பிரானடி அண்ணலு மாமே. ஊ

1766 வேண்டிநின் றேதொழு தேன்வினை போயற
ஆண்டொரு திங்களும் நாளும் அளக்கின்ற
காண்டகை யாளெதிங் கன்னி புணரினும்
மூண்டகை மாறினும் ஒன்றது வாமே. எ

1767 ஆதி பரந்தெய்வம் அண்டத்து நற்றெய்வஞ்
சோதி யடியார் தொடருந் பெருந்தெய்வம்
நீதியுள் மாதெய்வ நின்மலன் எம்மிறை
பாதியுள் மன்னும் பராசத்தி யாமே. ந

1768 சத்திக்கு மேலே பராசத்தி தன்னுள்ளே
சுத்த சிவபதந் தோயாத தூவொளி
அத்தன் திருவடிக் கப்பாலைக் கப்பாலாம்
ஒத்தவு மாமீசன் தாளன வுண்மையே. சு

1769 கொழுந்தினைக் காணிற் குவலயந் தோன்றும்
எழுந்திடங் காணில் இருக்கலு மாகும்
பரந்திடங் காணிற் பார்ப்பதி மேலே
திரண்டெழுக் கண்டவன் சிந்தைய னானே. எ

1770 எந்தை பரமனும் என்னம்மை கூட்டமும்
மூந்த வுரைத்து முறைசொல்லின் ஞானமாஞ்
சந்தித் திருந்த விடம்பெருங் கண்ணியை
உந்தியின் மேல்வைத் துகந்திருந் தானே. அ

1771 சத்தி சிவன்விளை யாட்டாம் உயிராகி
ஒத்த இருமாயா கூட்டத் திடையூட்டிச்
சுத்தம தாகுந் துரியம் பிறிவித்துச்
சித்தம் புகுந்து சிவமக மாக்குமே. கூ

1772 சத்தி சிவன்றன் விளையாட்டுத் தாரணி
சத்தி சிவமுமாஞ் சிவன்சத் தியுமாகுஞ்
சத்தி சிவமன்றித் தாபரம் வேறில்லை
சத்திதான் என்றுஞ் சமைந்துரு வாகுமே. கo

136. சிவ லிங்கம்

1773 குரைக்கின்ற வாரிக் குவலய நீரும்
பரக்கின்ற காற்றுப் பயில்கின்ற தீயும்
நிரைக்கின்ற வாறிவை நீண்டகன் ஞாண
வரைத்து வலஞ்செயு மாறறி யேனே. க

1774 வரைத்து வலஞ்செப்பு மாறிங்கொன் றுண்டு
நிரைத்து வருகங்கை நீர்மல ரேந்தி
உரைத்தவன் நாமம் உணரவல் லார்க்குப்
புரைத்தெங்கும் போகான் புரிசடை யோனே. உ

1775 ஒன்றெனக் கண்டேயெம் ஈசன் ஒருவனே
கன்றென் றடியினை நானவ னைத்தாழ
வென்றைறம் புலனு மிகக்கிடந் தின்புற
அன்றென் றருள்செய்யும் ஆதிப் பிரானே. ங

1776 மலர்ந்த அயன்மால் உருத்திரன் மகேசன்
பலந்தரும் ஐம்முகன் பரவிந்து நாதம்
கலந்தருஞ் சத்தி சிவன்வடி வாகிப்
பலந்தரு லிங்கம் பராகந்தி யாமே. ச

1777 மேவி யெழுகின்ற செஞ்சுட ரூடுசென்
ரூவி எழுமள வன்றே உடலுற
மேவப் படுவதும் விட்டு நிகழ்வதும்
பாவித் தடக்கிற் பரகதி தானே. ஞ

137. சம்பிரதாயம்

1778 உடல்பொருள் ஆவி உதகத்தாற் கொண்டு
படர்வினை பற்றறப் பார்த்துக்கை வைத்து
நொடியின் அடிவைத்து நுண்ணுணர் வாக்கிக்
கடியப் பிறப்பறக் காட்டினன் நந்தியே. க

1779 உயிருஞ் சரீரமும் ஒண்பொரு ளான
வியவார் பரமும்பின் மேவும் பிராணன்
செயலார் சிவமுஞ் சிற்சத்தி யாதிக்கே
உயலார் குருபரன் உய்யக்கொண் டானே. உ

1780 பச்சிம திக்கிலே வைத்தஆ சாரியன்
நிச்சலும் என்ன நினையென்ற வப்பொருள்
உச்சிக்குங் கீழது வுண்ணுக்கு மேலது
வைச்ச பதமிது வாய்திற வாதே. ங

1781 பெட்டிடித் தெங்கும் பிதற்றித் திரிவேனை
யொட்டிடித் துள்ளமர் மாசெலாம் வாங்கிப்பின்
றட்டொக்க மாறினன் தன்னையும் என்னையும்
வட்டம தொத்தது வாணிபம் வாய்த்ததே. ௧

1782 தரிக்கின்ற பல்லுயிர்க் கெல்லாந் தலைவன்
இருக்கின்ற தன்மையை யேதும் உணரார்
பிரிக்கின்ற விந்து பிணக்கறுத் தெல்லாங்
கருக்கொண்ட ஈசனைக் கண்டுகொண் டேனே. ௨

1783 கூடும் உடல்பொருள் ஆவி குறிக்கொண்டு
நாடி யடிவைத் தருண்ஞான சத்தியால்
பாடல் உடலினிற் பற்றற நீக்கியே
கூடிய தானவ னுங்குளிக் கொண்டே. ௩

1784 கொண்டா னடியேன் அடிமை குறிக்கொள்ளக்
கொண்டான் உயிர்பொருள் காயக் குழாத்தினைக்
கொண்டான் பலழுற்றுந் தந்தவன் கோடலாற்
கொண்டா னெனவொன்றுங் கூறகி லேனே. ௪

1785 குறிக்கின்ற தேகழுந் தேகியுங் கூடி
நெறிக்கும் பிராணன் நிலைபெற்ற சீவன்
பறிக்கின்ற காயத்தைப் பற்றிய நோய்மை
பிறக்க அறியாதார் பேயுடன் ஒப்பரே. ௫

1786 உணர்வுடை யார்கட் குலகழுந் தோன்றும்
உணர்வுடை யார்கட் குறுதுய ரில்லை
உணர்வுடை யார்கள் உணர்ந்தவக் காலம்
உணர்வுடை யார்கள் உணர்ந்துகண் டாரே. ௬

1787 காயப் பரப்பில் அலைந்து துரியத்துச்
சால விரிந்து குவிந்து சகலத்தில்
ஆயவவ் வாறு றடைந்து திரிந்தோற்குத்
தூய அருள்தந்த நந்திக்கென் சொல்வதே. ௭

1788 நானென நீயென வேறில்லை நண்ணுதல்
ஊனென வுயிர்என்ன வுடனின்று
வானென வானவர் நின்று மனிதர்கள்
தேனென இன்பந் திளைக்கின்ற வாறே. கக

1789 அவனும் அவனும் அவனை யறியார்
அவனை யறியில் அறிவானும் இல்லை
அவனும் அவனும் அவனை யறியில்
அவனும் அவனும் அவனிவ னுமே. கஉ

1790 நானிது தானென நின்றிவ னுடோறும்
ஊனிது தானுயிர் போலுணர் வாளன்
வானிரு மாமுகில் போற்பொழி வாளுளன்
நானிது வம்பர நாதனு மாமே. கஙு

1791 பெருந்தன்மை தானென யானென வேறும்
இருந்தது மில்லைய தீசன் அறியும்
பொருந்தும் உடலுயிர் போலுமை மெய்யே
திருந்தமுன் செய்கின்ற தேவர் பிரானே. கச

138. திருவருள் வைப்பு

1792 இருபத மாவ திரவும் பகலும்
உருவது வாவ துயிருடம் உடலும்
அருளது வாவ தறமுங் தவமும்
பொருளது வுள்நின்ற போகம தாமே. க

1793 காண்டற் கரியன் கருத்திலன் நந்தியுந்
தீண்டற்குஞ் சார்தற்குஞ் சேயனுத் தோன்றிடும்
வேண்டிக் கிடந்து விளக்கொளி யானெஞ்சம்
ஈண்டிக் கிடந்தங் கிருளறு மாமே. உ

1794 குறிப்பினின் உள்ளே குவலயந் தோன்றும்
வெறுப்பிருள் நீங்கில் விகிர்தனும் நிற்குஞ்
செறிப்புறு சிந்தையைச் சிக்கென நாடில்
அறிப்புறு காட்சி அமரரு மாமே. ஊ

1795 தேர்ந்தறி யாமையின் சென்றன காலங்கள்
போர்ந்தறி வானெங்கள் பிஞ்ஞகன் எம்மிறை
ஆர்ந்தறி வாரறி வேதுணை யாமெனச்
சார்ந்தறி வான்பெருந் தன்மைவல் லானே. ச

1796 தானே யறியும் வினைகள் அழிந்தபின்
நானே யறிகிலன் நந்தி யறியுங்கொல்
ஊனே யுருகி யுணர்வை யுணர்ந்தபின்
தேனே யினையணங் தேவர் பிரானே. ஞ

1797 நானறிந் தன்றே பிருக்கின்ற தீசனை
வானறிந் தாரறி யாது மயங்கினர்
ஊனறிந் துள்ளே யுயிர்க்கின்ற ஒண்சுடர்
தானறி யான்பின்னர் யாரறி வாரே. கூ

1798 அருளெங்கு மான அளவை யறியார்
அருளே நுகரமு தானதுந் தேரார்
அருளெங் கருமத் ததிசூக்க முன்னர்
அருளெங்குங் கண்ணனை காரறி வாரே. எ

1799 அறிவில் அணுக அறிவது கல்கிப்
பொறிவழி யாசை புகுத்திப் புணர்ந்திட்
டறிவது வாக்கி அடிபடருள் கல்குஞ்
செறிவொடு நின்றூர் சிவமாயி னாரே. அ

1800 அருளிற் பிறந்திட் டருளில் வளர்ந்திட்
டருளில் அழிந்திளைப் பாறி மறைந்திட்
டருளான ஆனந்தத் தாரமு தூட்டி
அருளால் என்னந்தி யகம்புகுந் தானே. கூ

1801 அருளால் அமுதப் பெருங்கடல் ஆட்டி
அருளால் அடிபுனைந் தார்வமுந் தந்திட்
டருளான ஆனந்தத் தாரமு தூட்டி
அருளால் என்னந்தி யகம்புகுந் தானே. கo

1802 பாசத்தி லிட்ட தருளந்தப் பாசத்தின்
நேசத்தை விட்ட தருளந்த நேசத்திற்

கூசற்ற முத்தி யருளந்தக் கூட்டத்தின்
நேசத்துத் தோன்று நிலையரு ளாமே. கக

1803 பிறவா நெறிதந்த பேரரு ளாளன்
மறவா அருள்தந்த மாதவன் நந்தி
அறவாழி அந்தணன் ஆதிப் பராபரன்
உறவாகி வந்தென் உளம்புகுந் தானே. கஉ

1804 அகம்புகுந் தானடி யேற்கரு ளாலே
அகம்புகுந் துந்தெரி யானரு ளில்லோர்க்
ககம்புகுந் தானந்த மாக்கிச் சிவமாய்
அகம்புகுந் தானந்தி யானந்தி யாமே. கங

1805 ஆயும் அறிவோ டறியாத மாமாயை
ஆய கரணம் படைக்கும்ஐம் பூதமு
மாய பலவிந் திரிய மவற்றுடன்
ஆய வருளேந்து மாமருட் செய்கையே. கச

1806 அருளே சகலமு மாய பவுதிகம்
அருளே சராசர மாய வமலமே
இருளே வெளியே யெனுமெங்கும் ஈசன்
அருளே சகளத்த னன்றியின் றாமே. கரு

1807 சிவமொடு சத்தி திகழ்நாதம் விந்து
தவமான ஐம்முகன் ஈசன் அரனும்
பவமுறு மாலும் பதுமத்தோன் ஈறு
நவமவை யாகி நடிப்பவன் தானே. கசு

1808 அருட்கண்ணி லாதார்க் கரும்பொருள் தோன்று
அருட்கண்ணு ளோர்க்கெதிர் தோன்றும் அரனே
இருட்கண்ணி னேர்க்கங் கிரவியுந் தோன்றுத்
தெருட்கண்ணி னேர்க்கெங்குஞ் சிவொளி யாமே. கஎ

1809 தானே படைத்திடுந் தானே அளித்திடுந்
தானே துடைத்திடுந் தானே மறைத்திடுந்
தானே யிவைசெய்து தான்முத்தி தந்திடுந்
தானே வியாபித்த லீலவ னுமாமே. கஅ

1810 தலையான நான்குந் தனதரு வாகும்
மலையா வருவுரு வாகுஞ் சதாசிவம்
நிலையான கீழ்நான்கு நீடுரு வாகுந்
துலையா இவைமூற்று மாயல்ல தொன்றே. ககூ

1811 ஒன்றது வாலே உலப்பிலி தாணுகி
நின்றது தான்போல் உயிர்க்குயி ராய்நிலை
துன்றி யவையல்ல வாகுந் துணையென்ன
நின்றது தான்விளை யாட்டென்னுள் நேயமே. உ0

1812 நேயத்தே நின்றிடும் நின்மலன் சத்தியோ
டாயக் குடிலையுள் நாதம் அடைந்திட்டுப்
போயக் கலைபல வாகப் புணர்ந்திட்டு
வீயத் தகாவிந்து வாக விளையுமே. உக

1813 விளையும் பரவிந்து தானே வியாபி
விளையுந் தனிமாயை மிக்கமா மாயை
கிளையொன்று தேவர் கிளர்மனு வேதம்
அளவொன் றிலாவண்ட கோடிக ளாமே. உஉ

139. அருளொளி

1814 அருளிற் றலைநின் றறிந்தழுந் தாதார்
அருளிற் றலைநில்லார் ஐம்பாச நீங்கார்
அருளிற் பெருமை யறியார் செறியார்
அருளிற் பிறந்திட் டறிந்தறி வாரே. க

1815 வாரா வழிதந்த மாநந்தி போர்நந்தி
ஆரா அமுதளித் தானந்தி போர்நந்தி
போரா யிரமுடைப் பெம்மான்பே ரொன்றினில்
ஆரா அருட்கடல் ஆடுகென் றானே. உ

1816 ஆடியும் பாடியும் அழுதும் அரற்றியுந்
தேடியுங் கண்டேன் சிவன்பெருந் தன்மையைக்
கூடிய வாறே குறியாக் குறிதந்தென்
ஊடுநின் றானவன் தன்னரு ளூற்றே. ங

1817 உற்ற பிறப்பும் உறுமல மானதும்
பற்றிய மாயாப் படல மெனப்பண்ணி
அத்தனை நீயென் றடிவைத்தான் போர்ந்தி
கற்றன விட்டேன் கழல்பணிந் தேனே. க

1818 விளக்கினை யேற்றி வெளியை அறிமின்
விளக்கினின் முன்னே வேதனை மாறும்
விளக்கை விளக்கும் விளக்குடை யார்கள்
விளக்கில் விளங்கும் விளக்கவர் தாமே. ங

1819 ஒளியும் இருளும் ஒருகாலுந் தீர
ஒளியு ளோர்க்கன்றே ஒழியா தொளியும்
ஒளியிருள் கண்ட கண்போல வேறுள்
ஒளியிருள் நீங்க வுபிர்சிவ மாமே. ச

1820 புறமே திரிந்தேனைப் பொற்கழல் சூட்டி
நிறமே புகுந்தென்னை நின்மல னாக்கி
அறமே புகுந்தெனக் காரமு தீந்த
திறமேதென் றெண்ணித் திகைத்திருந் தேனே. ஞ

1821 அருளது வென்ற அகலிடம் ஒன்றும்
பொருளது வென்ற புகலிடம் ஒன்றும்
மருளது நீங்க மனம்புகுந் தானைத்
தெருளுறும் பின்னைச் சிவகதி யாமே. ட

1822 கூறுமின் னீர்முன் பிறந்திங் கிறந்தமை
வேறொரு தெய்வத்தின் மெய்ப்பொருள் நீக்கிடும்
பாறணி யும்முடல் வீழவிட் டாருயிர்
தேறணி வோமிது செப்பவல் லீரே. ண

140. சிவபூசை

1823 உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிராணர்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கங்
கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே. த

1824 வேட்டவி யுண்ணும் விரிசடை நந்திக்குக்
காட்டவும் நாமிலங் காலையும் மாலையும்
ஊட்டவி யாவன வுள்ளங் குளிர்விக்கும்
பாட்டவி காட்டுதும் பாலவி யாமே. உ

1825 பான்மொழி பாகன் பராபரன் தாளுகு
மான சதாசிவன் தன்னையா வாகித்து
மேன்முகம் ஈசான மாகவே கைக்கொண்டு
சின்முகஞ் செய்யச் சிவனவ னாகுமே. ங

1826 நினைவதும் வாய்மை மொழிவது மல்லாற்
கனைகழல் ஈசனைக் காண வரிதாங்
கனைகழல் ஈசனைக் காண்குற வல்லார்
புனைமலர் நீர்கொண்டு போற்றவல் லாரே. ச

1827 மஞ்சன மாலை நிலாவிய வானவர்
நெஞ்சினுள் ஈசன் நிலைபெறு காரணம்
அஞ்சடு தாம்உட சாரம்எட் டெட்டொடும்
அஞ்சலி யோடுங் கலந்தர்ச்சித் தார்களே. ஞ

1828 புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு
அண்ணல் அதுகண் டருள்புரி யாநிற்கும்
எண்ணிலி பாவிகள் எம்மிறை யீசனை
நண்ணறி யாமல் கழுவுகின் றாரே. ட

1829 அத்த னவதீர்த்த மாடும் பரிசுகேள்
ஒத்தமெய்ஞ் ஞானத் துயர்ந்தார் பதத்தைச்
சுத்தம தாக விளக்கித் தெளிக்கவே
முத்தியா மென்றுநம் மூலன் மொழிந்ததே. ண

1830 மறப்புற்று விவ்வழி மன்னினின் றுலுஞ்
சிறப்பொடு பூநீர் திருந்தமுன் ஏந்தி
மறப்பின்றி யுன்னை வழிபடும் வண்ணம்
அறப்பெற வேண்டும் அமரர் பிரானே. த

1831 ஆரா தனையும் அமரர் குழாங்களுந்
தீராக் கடலும் நிலத்தும தாய்நிற்கும்

போரா யிரமும் பிரான்திரு நாமமும்
ஆரா வழியெங்கள் ஆதிப் பிரானே. ௯

1832 ஆனைந்தும் ஆட்டி அமரர் கணந்தொழுத்
தானந்த மில்லாத் தலைவன் அருளது
தேனுந்து மாமலர் உள்ளே தெளிந்தேதார்
பாரைங் குணமும் படைத்துநின் றானே. ௧0

1833 உழைக்கொண்ட பூசீர் ஒருங்குடன் ஏந்தி
மழைக்கொண்ட மாமுகின் மேற்சென்று வாளேர்
தழைக்கொண்ட பாசந் தயங்கநின் றேத்தப்
பிழைப்பின்றி எம்பெரு மானரு ளாமே. ௧௧

1834 வெள்ளக் கடலுள் விரிசடை நந்திக்கு
உள்ளக் கடற்புக்கு வார்சுமை பூக்கொண்டு
கள்ளக் கடல்விட்டுக் கைதொழ மாட்டாதார்
அள்ளக் கடலுள் அழுந்துகின் றாரே. ௧௨

1835 கழிப்படுத் தண்கடற் கௌவை புடைத்து
வழிப்படு வார்மலர் மொட்டறி யார்கள்
பழிப்படு வாய்பல நும்பழி வீழ
வெளிப்படு வோருச்சி மேவினின் றானே. ௧௩

1836 பயனறி வொன்றுண்டு பன்மலர் தூவிப்
பயனறி வார்க்கரன் தானே பயிலும்
நயனங்கள் மூன்றுடை யானடி சேர
வயனங்க ளாலென்றும் வந்துநின் றானே. ௧௪

1837 எத்துவர் மாமலர் தூவித் தொழுதுநின்
ஏர்த்திதம தீசன் அருட்சே வடியென்றன்
மூர்த்தியை மூவா முதலுரு வாய்நின்ற
தீர்த்தனை யாருந் துதித்துண ராரே. ௧௫

1838 தேவர்க ளோடிசை வந்துமண் ணேடுறும்
பூவொடு நீர்சுமந் தேத்திப் புனிதனை
மூவரிற் பன்மை முதல்வனுய் நின்றருள்
நீர்மையை யாவர் நினைக்கவல் லாரே. ௧௬

1839 உழைக்கவல் லோர்கடு நீர்மல ரேந்திப்
பிழைப்பின்றி யீசன் பெருந்தவம் பேணி
இழைக்கொண்ட பாதத் தினமலர் தூவி
மழைக்கொண்டல் போலவே மன்னிநில் லீரே. கஎ

1840 வென்று விரைந்து விரைப்பணி யென்றனர்
நின்று பொருந்த இறைபணி சேர்படத்
துன்று சலமலர் தூவித் தொழுதிடிற்
கொண்டிடு நித்தலுங் கூறிய வன்றே. கஅ

1841 சாத்தியும் வைத்துஞ் சயம்புவென் றேத்தியும்
ஏத்தியு நாளு மிறையை யறிகிலார்
ஆத்தி மலக்கிட் டகத்திழுக் கற்றக்கான்
மாத்திக்கே செல்லும் வழியது வாமே. கக

1842 ஆவிக் கமலத்தின் அப்புறத் தின்புற
மேவித் திரியும் விரிசடை நந்தியைக்
கூவிக் கருதிக் கொடுபோய்ச் சிவத்திடைத்
தாவிக்கு மந்திரந் தாமறி யாரே. உ0

1843 சாணைகத் துள்ளே அழுந்திய மாணிக்கங்
காணு மளவுங் கருத்தறி வாரில்லை
பேணிப் பெருக்கிப் பெருக்கி நினைவோர்க்கு
மாணிக்க மாலை மனம்புகுந் தானே. உக

1844 பெருந்தன்மை நந்தி பிணங்கிருள் நேமி
இருந்தன்மை யாலுமென் நெஞ்சிடங் கொள்ள
வருந்தன்மை யாளனை வானவர் தேவர்
தருந்தன்மை யாளனைத் தாங்கிநின் றூரே. உஉ

1845 சமைய மலசுத்தி தன்செயல் அற்றிடும்
அமையும் விசேடமு மானமந் திரசுத்தி
சமையநிர் வாணங் கலாசுத்தி யாகும்
அமைமன்னு ஞான மாணர்க் கபிடேகமே. உங

1846 ஊழிதோ றூழி யுணர்ந்தவர்க் கல்லது
ஊழில் உயிரை யுணரவுந் தாணெட்டா
ஆழி யமரும் அரியயன் என்றுளோர்
ஊழி கடந்துமோ ருச்சிபு ளானே. உ

141. குருபூசை

1847 ஆகின்ற நந்தி யடித்தா மரைபற்றிப்
போகின் றுபதேசம் பூசிக்கும் பூசையும்
ஆகின்ற ஆதார மாறு றதனின்மேற்
போகின்ற பொற்பையும் போற்றுவன் யானே. க

1848 காணுறு கோடி கடிகமழ் சந்தனம்
வாணுற மாமல ரிட்டு வணங்கினும்
ஊனினை நீக்கி யுணர்பவர்க் கல்லது
தேனமர் பூங்கழல் சேரவொண் ணுதே. உ

1849 மேவிய ஞானத்தின் மிக்கிடன் மெய்ப்பரன்
ஆவயின் ஞான நெறிநிற்றல் அர்ச்சனை
ஓவற வுட்பூ சனைசெய்யில் உத்தமஞ்
சேவடி சேரல் செபலறல் தானே. ங

1850 உச்சியுங் காலையும் மாலையும் ஈசனை
நச்சுமின் நச்சி நமவென்று நாமத்தை
விச்சுமின் விச்சி விரிசுடர் மூன்றினும்
நச்சுமின் போர்நந்தி நாயக ணுகுமே. ச

1851 புண்ணிய மண்டலம் பூசைநூ றுகுமாம்
பண்ணிய மேனியும் பத்துநூ றுகுமாம்
எண்ணிலிக் கைய மிடிற்கோடி யாகுமாற்
பண்ணிடில் ஞானியுண் பார்க்கில் விசேடமே. ஞ

1852 இந்துவும் பானுவும் இலங்குந் தலத்திடை
வந்தித்த தெல்லாம் அசுரார்க்கு வாரியாம்
இந்துவும் பானுவும் இலங்காத் தலத்திடை
வந்தித்தல் நந்திக்கு மாபூசை யாமே. ட

1853 இந்துவும் பானுவு மென்றெழு கின்றதோர்
விந்துவும் நாதமு மாகிமீ தானத்தே
சிந்தனை சாக்கிரா தீதத்தே சென்றிட்டு
நந்தியைப் பூசிக்க நற்பூசை யாமே. எ

1854 மனபவ னங்களை மூலத்தான் மாற்றி
அனித வுடற்பூத மாக்கி யகற்றிப்
புனிதன் அருள்தனிற் புக்கிருந் தின்பத்
தனியுறு பூசை சதாசிவற் காமே. அ

1855 பகலும் இரவும் பயில்கின்ற பூசை
இயல்புடை யீசர்க் கிணைமல ராகப்
பகலும் இரவும் பயிலாத பூசை
சகலமுந் தான்கொள்வன் தாழ்சடை யோனே. கூ

1856 இராப்பகல் அற்ற இடத்தே யிருந்து
பராக்கற ஆனந்தத் தேதறல் பருகி
இராப்பக லற்ற இறையடி யின்பத்
திராப்பகல் மாயை இரண்டிடத் தேனே. கஂ

142. மகேசுவர பூசை

1857 படமாடக் கோயில் பகவற்கொன் றீயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கங் காகா
நடமாடக் கோயில் நம்பர்க்கொன் றீயில்
படமாடக் கோயில் பகவற்க தாமே. க

1858 தண்டாறு சிந்தை தபோதனர் தாமகிழ்ந்
துண்டது மூன்று புவனமும் உண்டது
கொண்டது மூன்று புவனமுங் கொண்டதென்
றெண்டிசை நந்தி எடுத்துரைத் தானே. உ

1859 மாத்திரை யொன்றினின் மன்னி யமர்ந்துறை
யாத்தனுக் கீந்த அருமம்பொரு ளானது
மூர்த்திகள் மூவர்க்கு மூவேழ் குரவர்க்குந்
தீர்த்தம தாமது தேர்ந்துகொள் வீரே. ங

1860 அகரம் ஆயிரம் அந்தணர்க் கீயிலென்
சிகரம் ஆயிரஞ் செய்து முடிக்கிலென்
பகரு ஞானி பகலூண் பலத்துக்கு
நிகரிலை என்பது நிச்சயந் தானே. ச

1861 ஆறிடும் வேள்வி அருமறை நூலவர்
கூறிடும் அந்தணர் கோடிபே ருண்பதில்
நீறிடுந் தொண்டர் நினைவின் பயனிலை
பேறெனில் ஓர்பிடி பேறது வாகுமே. ஞ

1862 எறுடை யாயிறை வாளம்பி ராஎன்று
நீறிடு வாரடி யார்நிகழ் தேவர்கள்
ஆறணி செஞ்சடை யண்ண லிவரென்று
வேறணி வார்க்கு வினையில்லை தானே. ட

1863 சீர்ந்தி கொண்டு திருமுக மாய்விட்ட
போர்ந்தி யென்னும் பிறங்கு சடையனை
நாலைந்து கொந்து வருமள வுஞ்சொல்லப்
போர்ந்தி யென்னும் பிதற்றிழி யேனே. ண

1864 அழிதக வில்லா அரனடி யாரைத்
தொழுதகை ஞாலத்துத் தூங்கிருள் நீங்கும்
பழுது படாவண்ணம் பண்பினை நாடித்
தொழுதெழ வையகத் தோரின்ப மாமே. த

1865 பகவற்கே தாகிலும் பண்பில ராகிப்
புகுமத்த ராய்நின்று பூசனை செய்யும்
முகமத்தே நா டொத்துநின் றாழிதோ றாழி
அகமத்த ராகினின் ழுய்ந்தொழிந் தாரே. ந

1866 வித்தக மாகிய வேடத்தர் உண்டவுண்
அத்தன் அயன்மால் அருந்திய வண்ணமாஞ்
சித்தந் தெளிந்தவர் சேடம் பருகிடின்
முத்தியா மென்றுநம் மூலன் மொழிந்ததே. ப

1867 தாழ்விலர் பின்னும் முயல்வ ரருந்தவம்
ஆழ்வினை யாழ அவர்க்கே அறஞ்செய்யும்
ஆழ்வினை நீக்கி அருவினை தன்னெடும்
போழ்வினை தீர்க்கும்அப் பொன்னுல காமே. ஙங

143. அடியார் பெருமை

1868 திகைக்குரி யாரெனு தேவனை நாடும்
வகைக்குரி யாரெனு வாதி யிருக்கிற்
பகைக்குரி யாரில்லைப் பார்மழை பெய்யும்
அகக்குறை கேடில்லை யவ்வுல குக்கே. ச

1869 அவ்வுல கத்தே பிறந்தவ் வுடலொடும்
அவ்வுல கத்தே அருந்தவ நாடுவர்
அவ்வுல கத்தே அரனடி கூடுவர்
அவ்வுல கத்தே அருள்பெறு வாரே. ஞ

1870 கொண்ட குறியுங் குலவரை யுச்சியும்
அண்டரும் அண்டத் தமரரும் ஆதியும்
எண்டிசை யோரும்வந் தென்கைத் தலத்தினுள்
உண்டெனில் நாமினி உய்ந்தொழிந் தோமே. ட

1871 அண்டங்கள் ஏழும் அகண்டமும் ஆவியுங்
கொண்ட சராசர முற்றுங் குணங்களும்
பண்டை மறையும் படைப்பளிப் பாதியுங்
கண்ட சிவனுமென் கண்ணன்றி யில்லையே. ட

1872 பெண்ணல்ல ஆணல்ல பேடல்ல மூடத்துள்
உள்நின்ற சோதி ஒருவர்க் கறியொணைக்
கண்ணின்றிக் காணுஞ் செவியின்றிக் கேட்டிடும்
அண்ணல் பெருமையை ஆய்ந்தது மூப்பே. ண

1873 இயங்கும் உலகினில் ஈசன் அடியார்
மயங்கா வழிசெல்வர் வானுல காள்வர்
புயங்களு மெண்டிசை போதுபா தாள
மயங்காப் பகிரண்ட மாமுடி தானே. ஠

1874 அகம்படி கின்றகம் ஐயனை யோருரும்
அகம்படி கண்டவர் அல்லலிற் சேரார்
அகம்படி யுட்புக் கறிகின்ற நெஞ்சம்
அகம்படி கண்டாம் அழிக்கலும் எட்டே. எ

1875 கழிவு முதலுங் காதற் றுணையும்
அழிவுட தாய்நின்ற ஆதிப் பிரானைப்
பழியும் புகழும் படுபொருள் முற்றும்
ஒழியுமென் னுயி யுழவுகொண் டானே. அ

1876 என்தாயோ டென்னப்பன் எழேழ் பிறவியும்
அன்றே சிவனுக் கெழுதிய ஆவணம்
ஒன்று யுலகம் படைத்தான் எழுதினன்
நின்றுன் முகில்வண்ணன் எரெழுந் தாயே. கூ

1877 துணிந்தா ரகம்படி துன்னி உறையும்
பணிந்தா ரகம்படி பாற்பட் டொழுகும்
அணிந்தா ரகம்படி யாதிப் பிரானைக்
கணிந்தா ரொருவர்க்குக் கைவிட லாமே. கo

1878 தலைமிசை வானவர் தாழ்சடை நந்தி
மிலைமிசை வைத்தனன் மெய்ப்பணி செய்யப்
புலைமிசை நீங்கிய பொன்னுல காளும்
பலமிசை செய்யும் படர்சடை யோனே. கக

1879 அறியாப் பருவத் தரனடி யாரைக்
குறியால் அறிந்தின்பங் கொண்ட தடிமை
குறியார் சடைமுடி கட்டி நடப்பார்
மறியார் புனல்மூழ்க மாதவ மாமே. கஉ

1880 அவன்பால் அணுகியே அன்புசெய் வார்கள்
சிவன்பால் அணுகுதல் செய்யவும் வல்லன்
அவன்பால் அணுகியே நாடு மடியார்
இவன்பாற் பெருமை இலயம தாமே. கஙு

1881 மூன்னிருந் தார்முழு தெண்கணத் தேவர்கள்
எண்ணிறந் தன்பால் வருவர் இருநிலத்
தெண்ணிரு நாலு திசையந் தரமொக்கப்
பன்னிரு காதம் பதஞ்செய்யும் பாரே. கச

1882 சிவயோகி ஞானி செறிந்தஅத் தேசம்
அவயோகம் இன்றி அறிவோருண் டாகும்
நவயோகங் கைகூடு நல்லியல் காணும்
பவயோகம் இன்றிப் பரலோக மாமே. கஞ

1883 மேலுணர் வான்மிகு ஞாலம் படைத்தவன்
மேலுணர் வான்மிகு ஞாலம் கடந்தவன்
மேலுணர் வார்மிகு ஞாலத் தமரர்கள்
மேலுணர் வாய்சிவன் மெய்யடி யார்களே. கசு

144. போசன விதி

1884 எட்டுத் திசையும் இறைவ னடியவர்க்
கட்ட அடிசில் அமுதென் றெதிர்கொள்வர்
ஓட்டி யொருநிலம் ஆள்பவர் அந்நிலம்
விட்டுக் கிடக்கில் விருப்பறி யாரே. க

1885 அச்சிவன் உள்நின்ற அருளை அறிந்தவர்
உச்சியம் போதாக வுள்ளமர் கோவிற்குப்
பிச்சை பிடித்துண்டு பேத மறநினைந்
திச்சைவிட் டேகாந்தத் தேறி யிருப்பரே. உ

145. பிட்சா விதி

1886 விச்சுக் கலமுண்டு வேவிச்செய் ஒன்றுண்டு
உச்சிக்கு முன்னே யுழவு சமைந்தது
அச்சங்கெட் டச்செய அறுத்துண்ண மாட்டாதார்
இச்சைசக்குப் பிச்சை இரக்கின்ற வாறே. க

1887 பிச்சைய தேற்றுன் பிரமன் தலைதன்னில்
பிச்சைய தேற்றுன் பிரியா அறஞ்செய்யப்
பிச்சைய தேற்றுன் பிரமன் சிரங்காட்டிப்
பிச்சைய தேற்றுன் பிரமன் பரமாகவே. உ

1888 பரந்துல கேழும் படைத்த பிரானை
இரந்துணி என்பார்கள் எற்றுக் கிரக்கும்
நிரந்தர மாக நினையும் அடியார்
இரந்துண்டு தன்கழல் எட்டச்செய் தானே. ஈ

1889 வரவிருந் தான்வழி நின்றிடும் ஈசன்
தரவிருந் தான்தன்னை நல்லவர்க் கின்பம்
பொரவிருந் தான்புக லேபுக லாக
வரவிருந் தாலறி யானென்ப தாமே. ச

1890 அங்கார் பசியும் அவாவும் வெகுளியுங்
தங்கார் சிவனடி யார்சரீ ரத்திடைப்
பொங்கார் புவனத்தும் புண்ணிய லோகத்துங்
தங்கார் சிவனைத் தலைப்படு வாரே. ஞ

1891 மெய்யக ஞான மிகத்தெளிந் தார்களுங்
கைபக நீண்டார் கடைத்தலைக் கேசெல்வர்
ஐயம் புகாமல் இருந்த தவசியார்
வையகம் எல்லாம் வரவிருந் தாரே. ஃ

146. முத்திரை பேதம்

1892 நாலேழு மாறவே நண்ணிய முத்திரை
பாலான மோன மொழியிற் பதிவித்து
மேலான நந்தி திருவடி மீதுய்ய
கோலா கலங்கெட்டுக் கூடுநன் முத்தியே. க

1893 துரியங்கண் மூன்றுந் சொருகிட னகி
அரிய வுரைத்தார மங்கே யடக்கி
மருவிய சாம்பவி கேசரி புண்மை
பெருகிய ஞானம் பிறழ்முத் திரையே. உ

1894 சாம்பவி நந்தி தன்னருட் பார்வையாம்
ஆம்பவ மில்லா அருட்பாணி முத்திரை
ஓம்பயில் ஓங்கிய வுண்மைய கேசரி
நாம்பயில் நாதன்மெய்ஞ் ஞானமுத் திரையே. ங

1895 தானத்தி னுள்ளே சதாசிவ னுயிடும்
ஞான்த்தி னுள்ளே நற்சிவ மாதலால்
ஏனைச் சிவமாஞ் சொரூப மறைந்திட்ட
மோனத்து முத்திரை முத்தாந்த முத்தியே. ச

1896 வாக்கு மனமும் இரண்டு மவுனமாம்
வாக்கு மவுனத்து வந்தாலு மூங்கையாம்
வாக்கு மனமும் மவுனமாஞ் சுத்தரே
யாக்குமச் சுத்தத்தை யாரறி வார்களே. ஞ

1897 யோகத்தின் முத்திரை யோரட்ட சித்தியாம்
ஏகத்த ஞானத்து முத்திரை எண்ணுங்கால்
ஆகத் தகுவேத கேசரி சாம்பவி
யோகத்துக் கேசரி யோகமுத் திரையே. ட

1898 யோகியெண் சித்தி அருளொலி வாதனை
போகிதன் புத்தி புருடார்த்த நன்னெறி
யாகுகன் சத்தியும் ஆதார சோதனை
ஏகமுங் கண்டொன்றில் எய்திநின் றானே. ண

1899 துவாதச மார்க்கமென் சோடச மார்க்கமாம்
அவாவறு மீரை வகையங்க மாறுந்
தவாவறு வேதாந்த சித்தாந்தத் தன்மை
நவாவக மோடுன்ன னற்சுத்த சைவமே. த

1900 மோனத்து முத்திரை முத்தர்க்கு முத்திரை
ஞானத்து முத்திரை நாதர்க்கு முத்திரை
தேனிக்கு முத்திரை சித்தாந்த முத்திரை
கானிக்கு முத்திரை கண்ட சமயமே. ந

1901 தூநெறி கண்ட சுவடு நடுவெழும்
பூநெறி கண்டது பொன்னக மாய்நிற்கும்
மேனெறி கண்டது வெண்மதி மேதினி
நீனெறி கண்டுள நின்மல னாமே. ப

147. பூரணக்குகைநெறிச் சமாதி

1902 வளர்பிறை யிற்றேவர் தம்பாலின் மன்னி
உளரொளி பானுவின் உள்ளே யொடுங்கித்
தளர்விற் பிதிர்பதந் தங்கிச் சகியுள்
உளதுறும் யோகி யுடல்விட்டாற் றூனே. க

1903 தானிவை யொக்குஞ் சமாதிகை கூடாது
போன வியோகி புகலிடம் போந்துபின்
ஆனவை தீர நிரந்தர மாயோகம்
ஆனவை சேர்வார் அருளின்சார் வாகியே. உ

1904 தானிவ் வகையே புவியோர் நெறிதங்கி
ஆன சிவயோகத் தாமாறு மவ்விந்து
தானதி லந்தச் சிவயோகி யாகுமுன்
ஊனத்தோர் சித்திவந் தோர்காய மாகுமே. ங

1905 சிவயோகி ஞானி சிதைந்துடல் விட்டால்
தவலோகஞ் சேர்ந்துபின் றூன்வந்து கூடிச்
சிவயோக ஞானத்தாற் சேர்ந்தவர் நிற்பர்
புவலோகம் போற்றுநர் புண்ணியத் தோரே. ச

1906 ஊனமின் ஞானிகல் யோகி யுடல்விட்டால்
தானற மோனச் சமாதியுள் தங்கியே
தானவ ணுகும் பரகாயஞ் சாராதே
ஊனமின் முத்தராய் மீளார் உணர்வுற்றே. ஞ

1907 செத்தார் பெறும்பய ணுவது எதெனில்
செத்துநீர் சேர்வது சித்தினைக் கூடிடில்
செத்தா ரிருந்தார் செகத்தில் திரிமலஞ்
செத்தார் சிவமாகி யேசித்தர் தாமே. ட

1908 உன்னக் கருவிட் டுரவோ னரனருள்
பன்னப் பரனே யருட்குலம் பாலிப்பன்
என்னப் புதல்வர்க்கும் வேண்டி யிடுஞானி
தன்னிச்சைக் கீச னுருச்செய்யுந் தானே. ண

1909 எங்குஞ் சிவமா யருளா மிதயத்துத்
தங்குஞ் சிவஞானிக் கெங்குமாந் தற்பரம்
அங்காங் கெனநின்று சகமுண்ட வான்தோய்தல்
இங்கே யிறந்திதங்கு மாய்நிற்கும் ஈசனே. அ

148. சமாதிக் கிரியை

1910 அந்தமின் ஞானிதன் னுகந் தீயினில்
வெந்திடு முடலாம் வெப்புத் தீயினில்
நொந்தது நாய்நரி நுகரி னுண்செரு
வந்துநாப் நரிக்குண வாகும்வை யகமே. க

1911 எண்ணிலா ஞானி யுடலெரி தாவிடில்
அண்ணல்தங் கோயில் அழலிட்ட தாங்கொக்கும்
மண்ணின் மழைழவிழா வைபகம் பஞ்சமாம்
எண்ணரு மன்னர் இழப்பார் அரசே. உ

1912 புண்ணிய மாமவர் தம்மைமப் புதைப்பது
நண்ணி யனல்கோக்கில் நாட்டில் அழிவாகும்
மண்ணி லழியில் அலங்கார பங்கமாம்
மண்ணுல கெல்லா மபங்குமனல் மண்டியே. ங

1913 அந்தமில் ஞானி அருளை அடைந்தக்கால்
அந்த வுடல்தான் குகைசெய்ப திருத்திடில்
சுந்தர மன்னருந் தொல்புவி யுள்ளோரும்
அந்தமில் இன்ப அருள்பெறு வாரே. ச

1914 கவமிகு சாணலே கல்லாழுந் செய்து
குவைமிகு சூழவைஞ் சாணகக் கோட்டித்
தவமிகு குகைமுக் கோணமுச் சாணக்கிப்
பவமறு நற்குகை பத்மா சனமே. ஞ

1915 தன்மனை சாலை குளங்கரை யாற்றிடை
நன்மலர்ச் சோலை நகரினற் பூமி
உன்னருங் கானம் உயர்ந்த மலைச்சாரல்
இந்நிலந் தான்குகைக் கெய்துஞ் இடங்களே. ட

1916 நற்குகை நால்வட்டம் பஞ்சாங்க பாதமாய்
நிற்கின்ற பாத கவபாத நேர்விழுப்
பொற்பம ரோசமும் மூன்றுக்கு மூன்றணி
நிற்பவர் தாஞ்செய்யும் நேர்மைய தாமே. எ

1917 பஞ்ச லோகங்கள் கவமணி பாரித்து
விஞ்சப் படுத்ததன் மேலா சனமிட்டு
மூஞ்சி படுத்துவெண் ணீறிட் டதன்மேலே
பொன்செய் நற்சுண்ணம் பொதியலு மாமே. அ

1918 கள்குகை நால்வட்டம் படுத்ததன் மேற்சாரக்
கள்ளவிழ் தாமங் களபங்கத் தூரியுங்
தெள்ளிய சாந்து புழுகுபன் னீர்சேர்த்து
ஒள்ளிய தூபம் உவந்திடு வீரே. கூ

1919 ஓதிடும் வெண்ணீற்றுல் உத்தூளங் குப்பாய
மீதினி லிட்டாச னத்தினின் மேல்வைத்துப்
போதறு சுண்ணமும் நீறும் பொலிவித்து
மீதி லிருத்தி விரித்திடு வீரே. கூ

1920 விரித்தபின் றற்சாரு மேவுதல் செய்து
பொரித்த கறிபோ னகமின நீருங்
குருத்தலம் வைத்தேதார் குழைமுகம் பார்வை
தரித்தபின் மேல்வட்டஞ் சாத்திடு வீரே. கூ

.921 மீது சொரிந்திடும் வெண்ணீறுஞ் சுண்ணமும்
போது பலகொண்டு தர்ப்பைபுல்:வில்வமும்
பாத வுதகத்தான் மஞ்சனஞ் செய்துபார்
மீதுமூன் றுக்குமூன் றணிநிலஞ் செய்யுமே. கூ

.922 ஆதன மீதில் அரசு சிவலிங்கம்
போதும் இரண்டினில் ஒன்றைத் தாபித்து
மேதகு சந்நிதி மேவுத் தரம்பூர்வங்
காதலிற் சோடசங் காணுப சாரமே. கூ

149. விந்துற்பனம்

1923 உதயத்தில் விந்துவில் ஓங்குகுண் டலியும்
உதயக் குடிலில் வயிந்தவம் ஒன்பான்
விதியிற் பிரமாதி கள்மிகு சத்தி
கதியிற் காணங் கலைவை காியே. க

1924 செய்திடும் விந்துபே தத்திறன் ஐயைந்துஞ்
செய்திடு நாதபே தத்திற னுலாறுஞ்
செய்திடு மற்றவை யீரிரண் டிற்றிறஞ்
செய்திடு மாறுறு சேர்த்தத் துவங்களே. உ

1925 வந்திடு பேத மெலாம்பர விந்து
தந்திடு மாமாயை வாகேசி தற்பரை
உந்து குடிலையோ டேமுறு குண்டலி
விந்துவில் இங்கான்கு மேவா விளங்குமே. ங

1926 விளங்கு நிவிர்த்தாதி மேவக ராதி
வளங்கொள் உகார மகாரத் துள்விந்து
களங்கமில் நாதாந்தங் கண்ணினுள் நண்ணி
உளங்கொள் மனுதியுள் அந்தமு மாமே. ச

1927 அந்தமும் ஆதியு மாகிப் பராபரன்
வந்த வியாபி யெனலாய வந்நெறி
கந்தம தாகிய காரண காரியங்
தந்தைதங் கருமமுந் தான்செய்யும் வீயமே. ஞ

1928 வீயம தாகிய விந்துவின் சத்தியால்
ஆய வகண்டமும் அண்டமும் பாரிப்படக்
காயஜம் பூதமுங் காரிய மாயையில்
ஆயிட விந்து அகம்புற மாகுமே. ட

1929 புறமகம் எங்கும் புகுந்தொளிர் விந்து
நிறமது வெண்மை நிகழ்நாதஞ் செம்மை
உறமகிழ் சத்தி சிவபாத மாயுட்
டிறனிரு வீடனிக் குஞ்செயற் கொண்டே. ண

1930 கொண்டஇவ் விந்து பரமம்போற் கோதற
நின்ற படங்கட மாய்நிலை நிற்றலிற்
கண்டக லாதியின் காரண காரியத்
தண்டம் அனைத்துமாய் மாமாயை யாகுமே. அ

1931 அதுவித்தி லேநின்றங் கண்ணிக்கு நந்தி
இதுவித்தி லேயுள வாற்றை யுணராஎர்
மதுவித்தி லேமல ரன்னம தாகிப்
பொதுவித்தி லேநின்ற புண்ணியன் தானே. கூ

1932 வித்தினி லன்றி முளையில்லை அம்முளை
வித்தினி லன்றி வெளிப்படு மாறில்லை
வித்தும் முளையும் உடனன்றி வேறல்ல
அத்தன்மை யாகும் அரனெறி காணுமே. கo

1933 அருந்திய வன்ன மவைமூன்று கூறும்
பொருந்து முடன்மனம் போமல மென்னத்
திருந்து முடன்மன மாங்கூறு சேர்ந்திட்
டிருந்தன மூன்றுள் இரதமு தாகுமே. கக

1934 இரத முதலான ஏழ்தாது மூன்றின்
உரிய தினத்தின் ஒருபுற் பனிபோல்
அரிய துளிவிந்து வாகுமேழ் மூன்றின்
மருவிய விந்து வளருங்கா யத்திலே. கஉ

1935 காயத்தி லேமூன்று நாளிற் கலந்திட்டுக்
காயத்துட் டன்மன மாகுங் கலாவிந்து
நேயத்தே நின்றோர்க்கு நீங்கா விடாமையின்
மாயத்தே செல்வோர் மனத்தோ டழியுமே. கங

1936 அழிகின்ற விந்து அளவை யறியார்
கழிகின்ற தன்னையுட் காக்கலுங் தேரார்
அழிகின்ற காயத் தழிந்தயர் வற்றோர்
அழிகின்ற தன்மை யறிந்தாழி யாரே. கச

150. விந்துஜயம் - போகசரவோட்டம்

1937 பார்க்கின்ற மாதரைப் பாரா தகன்றுபோய்
ஓர்க்கின்ற வுள்ளம் உருக அழல்மூட்டிப்
பார்க்கின்ற கண்ணுதை பாழ்பட மூலத்தே
சேர்க்கின்ற யோகி சிவயோகி தானே. க

1938 தானே யருளாற் சிவயோகந் தங்காது
தானேயக் காமாதி தங்குவோ னும்மூட்குந்
தானே யதிகாரந் தங்கிற் சடங்கெடும்
ஊனே யவற்றுள் ளுயிரோம்பா மாயுமே. உ

1939 மாயாள் வசத்தே சென்றிவர் வேண்டில்
ஓயா இருபக்கத் துள்வளர் பக்கத்துள்
ஏயாவெண் ணுளின்ப மேற்பனி மூன்றிரண்
டாயா அபரத்து ளாதிநாள் ஆறுமே. ங

1940 ஆறைந்து பன்னென்று மன்றிச் சகமார்க்கம்
வேறன்பு வேண்டுவோர் பூவரிற் பின்னந்தோ
டேறும் இருபத் தொருநா ளிடைத்தோங்கும்
ஆறின் மிகுத்தோங்கும் அக்காலஞ் செப்பவே. ச

1941 செப்பும் அளவில் திருநான் முகூர்த்தமே
எய்புங் கலிகாலம் இந்து பருதிகால்
நையுமிடத் தோடினன் காம நூல்நெறி
செய்க வலமிடங் தீர்ந்து விடுக்கவே. ஞ

1942 விடுங்காண் முனைந்திந் திரியங்க ளாப்போல்
நடுங்கா திருப்பானும் ஐயைந்து நண்ணப்
படுங்காதன் மாதின்பாற் பற்றற விட்டுக்
கடுங்காற் கரணங் கருத்துறக் கொண்டே. ட

1943 கொண்ட குணனே நலனேநற் கோமளம்
பண்டை யுருவே பகர்வாய் பவளமே
மிண்டு தனமே மிடைய விடும்போதிற்
கண்ட கரணமுட் செல்லக்கண் டேவிடே. எ

1944 விட்டபின் கர்ப்பவுற் பத்தி விதியிலே
தொட்டுறுங் காலங்கள் தோன்றக் கருதிய
கட்டிய வாணுள்சா ராள்குணங் கீழ்மைசீர்ப்
பட்ட நெறியிதென் றெண்ணியும் பார்க்கவே. அ

1945 பார்த்திட்டு வையத்துப் பரப்பற் றுருப்பெற்று
வார்ச்செற்ற கொங்கை மடந்தையை நீக்கியே
சேர்த்துற் றிருதிங்கள் சேரா தகலினும்
மூப்புற்றே பின்னுளி லாமெல்லா முள்ளவே. கூ

1946 வித்திடு வோர்க்கன்றி மேலோர் விளைவில்லை
வித்திடு வோர்க்கன்றி மிக்கோ ரறிவில்லை
வித்தினில் வித்தை விதற வுணர்வதேல்
மத்தி லிருந்ததோர் மாங்கனி யாமே. கo

1947 கருத்தினில் அக்கர மாயுவி மியாவுங்
கருத்துளன் ஈசன் கருவுயி ரோடுங்
கருத்தது வித்தாய்க் காரண காரியங்
கருத்துறு மாறிவை கற்பனை தானே. கக

1948 ஓழியாத விந்து வுடன்நிற்க நிற்கும்
அழியாப் பிராணன் அதிபலஞ் சத்தி
ஓழியாத புத்தி தபஞ்செப மோனம்
அழியாத சித்திபுண் டாம்விந்து வற்றிலே. கஉ

1949 வற்ற அனலெக் கொளுவி மறித்தேதற் றித்
துற்ற சுழியனல் சொருகிச் சுடருற்று
முற்று மதியத் தமுதை முறைமுறை
செற்றுண் பவரே சிவயோகி யாரே. கஙி

1950 யோகியும் ஞானியும் உத்தம சித்தனும்
யோகியும் ஞான புரந்தர னுவோனும்
மோக முறினு முரையமிர் துண்போனும்
ஆகிய விந்து அழியாத அண்ணலே. கச

1951 அண்ணல் உடலாகி யவ்வனல் விந்துவும்
மண்ணிடை மாய்க்கும் பிராணனும் விந்துவுங்

கண்ணுங் கனலிடைக் கட்டிக் கலந்தெரித்
துண்ணில் அமிர்தாகி யோகிக் கறிவாமே. கஞ

1952 அறியா தழிகின்ற வாதலால் நாளும்
பொறியால் அழிந்து புலம்புகின் றார்கள்
அறிவாய் கனவி லதீதம் புரியச்
செறிவா யிருந்து சேரவே மாயுமே. கஙு

1953 மாதரை மாய வருங்கூற்ற மென்றுன்னக்
காதல தாகிய காமங் கழிந்திடுந்
சாதலு மில்லை சதகோடி யாண்டினுஞ்
சோதியி னுள்ளே துரிசறுங் காலமே. கச

1954 காலங் கடந்தவன் காண்விந்து செற்றவன்
காலங் கடந்தழிந் தான்விந்து செற்றவன்
காலங்க ளின்விந்து செற்றுற்ற காரிகை
காலின்கண் வந்த கலப்பறி யாரே. கஅ

1955 கலக்குநாள் முன்னுள் தன்னிடைக் காதல்
நலத்தக வேண்டில்அங் நாரி யுதரக்
கலத்தின் மலத்தைதத்தண் சீதத்தைதப் பித்தை
விலக்கு வனசெய்து மேலணை வீரே. கக

1956 மேலா நிலத்தெழு விந்துவும் நாதமுங்
கோலால் நடத்திக் குறிவழி யேசென்று
பாலாம் அமிர்துண்டு பற்றறப் பற்றிலுல்
மாலா னதுமாள மாளுமவ் விந்துவே. உ0

1957 விந்து விளைவும் விளைவின் பயன்முற்றும்
அந்த வழிவும் அடக்கத்தில் ஆக்கமும்
நந்திய நாசமும் நாதத்தாற் பேதமுங்
தந்துணர் வோர்க்குச் சயமாகும் விந்துவே. உக

1958 விந்துவென் வீசத்தை மேவிய மூலத்து
நந்திய அங்கியி னுலே நயந்தெரித்
தந்தமில் பானு அதிகண்ட மேலேற்றிச்
சந்திரன் சார்புறத் தண்ணழு தாமே. உஉ

1959 அழுதச் சசிவிந்து வாம்விந்து மாள
அழுதப் புனலோடி அங்கியின் மாள
அழுதச் சிவபோகம் ஆதலாற் சித்தி
அழுதப் பலாவன மாங்குறும் யோகிக்கே. உடு

1960 யோகமவ் விந்து ஓழியா வகைபுணர்ந்
தாகம் இரண்டுங் கலந்தாலு மாங்குரூப்
போகஞ் சிவபோகம் போகிகற் போகமா
மோகங் கெடமுயங் கார்மூடர் மாதர்க்கே. உச

1961 மாத ரிடத்தே செலுத்தினும் அவ்விந்து
காதலி னல்விடார் யோகங் கலந்தவர்
மாதர் உயிராசை கைக்கொண்டே வாடுவர்
காதலர் போன்றங்ஙன் காதலாஞ் சாற்றிலே. உஞ

1962 சாற்றிய விந்து சயமாகுஞ் சத்தியால்
ஏற்றிய மூலத் தழலே யெழமூட்டி
காற்றிசை யோடா கடுகாடி காதத்தே
டாற்றி யழுதம் அருந்தவிந் தாமே. உஞ

1963 விந்துவும் நாதமும் மேவக் கனல்மூல
வந்த வனன்மயிர்க் கால்தோறும் மன்னிடச்
சிந்தனை மாறச் சிவமக மாகவே
விந்துவு மாளுமெய்க் காயத்தில் வித்திலே. உன

1964 வித்துக்குற் றுண்பான் விளைவறி யாதவன்
வித்துக்குற் றுண்ணுமல் வித்துச்சுட் டுண்பவன்
வித்துக்குற் றுண்பானில் வேறல னீற்றவன்
வித்துக்குற் றுண்ணுமல் வித்துவித் தானன்றே. உஅ

1965 அன்னத்தில் விந்து அடங்கும் படிகண்டு
மன்னப் பிராணனும் விந்து மறித்திட்டு
மின்னெத்த விந்துநா தாந்தத்து விட்டிட
வன்னத் திருவிந்து மாபுங்கா யத்திலே. உக

1966 அன்னம் பிராணனென் றூர்க்கு மிருவிந்து
தன்னை யறிந்துண்டு சாதிக்க வல்லார்க்குச்

சொன்ன மாமுரு தோன்றும்என் சித்தியாம்
அன்னவ ரெல்லாம் அழிவற நின்றதே. ௬0

1967 நின்ற சிகாரம் நினைக்கும் பிராணனுய்
ஒன்று மகாரம் ஒருமூன்றே டொன்றவை
சென்று பராசத்தி விந்து சயந்தன்னை
ஒன்ற வுரைக்க வுபதேசந் தானே. ௬௪

1968 தானே யுபதேசந் தானல்லா தொன்றில்லை
வானே யுயர்விந்து வந்த பதினன்கு
மானே ரடங்க அதன்பின்பு புத்தியுந்
தானே சிவகதி தன்மையு மாமே. ௬௨

1969 விந்துவும் நாதமும் விளைய விளைந்தது
வந்தஇப் பல்லுயிர் மன்னுயி ருக்கெலாம்
அந்தமும் ஆதியு மாமந் திரங்களும்
விந்து அடங்க விளையுஞ் சிவோகமே. ௬௩

1970 வறுக்கின்ற வாறு மனத்துலா வெற்றி
நிறுக்கின்ற வாறுமந் நீள்வரை யொட்டிப்
பொறிக்கின்ற வாறுமப் பொல்லா வினையை
அறுக்கின்ற நாள்வரும் அத்திப் பழமே. ௬௪

1971 விந்துவும் நாதமும் மேவி யுடன்கூடிச்
சந்திர னேடே தலைப்படு மாயிடில்
அந்தர வானத் தமுதம்வந் தூறிடும்
அங்குதி மந்திரம் ஆகுதி யாகுமே. ௬௫

1972 மனத்தொடு சத்து மனஞ்செவி யென்ன
இனத்தெழு வார்கள் இசைந்தன நாடி
மனத்தில் எழுகின்ற வாக்கு வசனங்
கனத்த இரதமக் காமத்தை நாடிலே. ௬௬

1973 சத்தமுஞ் சத்த மனமும் மனக்கருத்
தொத்தறி கின்ற விடமும் அறிகிலர்
மெய்த்தறி கின்ற விடமறி வாளர்க்கு
அத்தன் இருப்பிடம் அவ்விடந் தானே. ௬௭

1974 உரமடி மேதினி யுந்தியி லப்பாம்
விரவிய தன்முலை மேவிய கீழங்கி
கருமுலை மீமிசை கைக்கிழிற் காலாம்
விரவிய கந்தர மேல்வெளி யாமே. கூ அ

151. ஆதித்தநிலை - அண்டாதித்தன்

1975 செஞ்சுட ரோன்முத லாகிய தேவர்கள்
மஞ்சுடை மேரு வலம்வரு காரணம்
எஞ்சுட ரீசன் இறைவன் இணையடி
தஞ்சுட ராக வணங்குந் தவமே. க

1976 பகலவன் மாலவன் பல்லுயிர்க் கெல்லாம்
புகலவ னுய்ந்ின்ற புண்ணிய காதன்
இகலற ஏழுல கும்முற வோங்கும்
பகலவன் பல்லுயிர்க் காதிபு மாமே. உ

1977 ஆதித்தன் அன்பிலை டாயிர காமமுஞ்
சோதியி னுள்ளே சுடரொளி யாய்நிற்கும்
வேதியர் வேண்டினும் விண்ணவர் சொல்லினும்
ஆதியில் அன்பு பழுக்கின்ற வாறே ங

1978 தானே யுலகுக்குத் தத்துவ னுய்நிற்குந்
தானே யுலகுக்குத் தையலு மாய்நிற்குந்
தானே யுலகுக்குச் சம்புவு மாய்நிற்குந்
தானே யுலகுக்குத் தண்சுட ராகுமே. ச

1979 வலையமுக் கோணம் வட்டம் அறுகோணந்
துலையிரு வட்டந் துய்ய விதமெட்டில்
அலையுற்ற வட்டத்தில் ஈரெட் டிதழாம்
மலைவற் றுதித்தனன் ஆதித்த னுமே. ஞ

1980 ஆதித்த னுள்ளி லானமுக் கோணத்திற்
சோதித் திலங்குநற் சூரிய னுலாங்
கேத முறுங்கேணி சூரிய னெட்டிற்
சோதிதன் னீட்டிற் சோடசந் தானே. ட

1981 ஆதித்த னேடே அவனி யிருண்டது
பேதித்த காலும் பிதற்றிக் கழிந்தது
சோதிக்குள் நின்று துடியிடை செய்கின்ற
வேதப் பொருளை விளங்குகி லீரே. எ

1982 பாருக்குக் கீழே பகலோன் வரும்வழி
யாருக்குங் காணவொண் ணாத அரும்பொருள்
நீருக்குந் தீக்கு நடுவே யுதிப்பவன்
ஆருக்கும் எட்டாதம் ஆதித்தன் தானே. அ

1983 மண்ணை யிடந்ததின் கீழொடும் ஆதித்தன்
விண்ணை யிடந்து வெளிசெய்து நின்றிடுங்
கண்ணை யிடந்து களிதந்த வானந்தம்
எண்ணுங் கிழமைக் கிசைந்துநின் றானே. க

1984 பாரை யிடந்து பகலோன் வரும்வழி
யாரும் அறியார் அருங்கடை நூலவர்
தீரன் இருந்த திருமலை சூழென்பர்
ஊரை யுணர்ந்தார் உணர்ந்திருந் தாரே. க0

152. பிண்டாதித்தன்

1985 நின்றும் இருந்துங் கிடந்தும் நடந்தும்
கன்றிய நந்திக் கருத்துள் இருந்தனன்
கொன்று மலங்கள் குழல்வழி யோடிட
வென்று விளங்கும் விரிசுடர் காணுமே. க

1986 ஆதித்தன் ஓடி யடங்கும் இடங்கண்டு
சாதிக்க வல்லவர் தம்மை யுணர்ந்தவர்
பேதித் துலகம் பிதற்றும் பிதற்றெல்லாம்
ஆதித்த னேடே யடங்குகின் றாரே. உ

1987 உருவிப் புறப்பட் டுலகை வலம்வந்து
சொருகிக் கிடக்குந் துறையறி வாரில்லை
சொருகிக் கிடக்குந் துறையறி வாளர்க்
குருகிக் கிடக்குமென் னுள்ளன்பு தானே. ங

153. மனவாதித்தன்

1988 எறிகதிர் ஞாயிறு மின்பனி சோருஞ்
எறிகதிர் சோமன் எதிர்நின் றெறிப்ப
விரிகதி ருள்ளே வியங்குமென் ஆவி
ஒருகதி ராகில் உவாவது வாமே. க

1989 சந்திரன் சூரியன் தான்வரிற் பூசினை
முந்திய பாலுவில் இந்துவந் தேய்முறை
அந்த இரண்டும் உபய நிலத்திற்
சிந்தை தெளிந்தார் சிவமாயி ருரே. உ

1990 ஆகுங் கலியோ டருக்கன் அனல்மதி
ஆகுங் கலியிடை நான்கென லாமென்பார்
ஆகும் அருக்கன் அனல்மதி யோடொன்ற
ஆகுமப் பூரணை யாமென் றறியுமே ங

1991 ஈரண்டத் தப்பால் இயங்கிய வவ்வொளி
ஓரண்டத் தார்க்கும் உணரா வுணர்வது
பேரண்டத் தூடே பிறங்கொளி யாய்நின்ற
தாரண்டத் தக்கா ரறியத்தக் காரே. ச

1992 ஒன்பதின் மேவி யுலகம் வலம்வரும்
ஒன்பது மீசன் இயலறி வாரில்லை
மூன்பதின் மேவி முதல்வன் அருளிலார்
இன்ப மிலாரிருள் சூழ்நின் றுரே. ஞ

154. ஞானுதித்தன்

1993 விந்து அபரம் பரமிரண் டாய்விரிந்
தந்த அபரம் பரநாத மாகியே
வந்தன தம்மிற் பரங்கலி யாதிவைத்
துந்தும் அருணை தயமென்ன வுள்ளத்தே. க

1994 உள்ள அருணை தயத்தெழும் ஓசைதான்
தெள்ளநம் பரநாதத் தின்செய லென்பதால்
வள்ளல் பரவிந்து வைகரி யாதிவாக்
குள்ளன ஐங்கலைக் கொன்றும் உதயமே. உ

1995 தேவர் பிரான்திசை பத்துத யஞ்செய்பும்
மூவர் பிரானென முன்னொரு காலத்து
நால்வர் பிரான்நடு வாபுரை யாநிற்கும்
மேவு பிரான்னென்பர் விண்ணவர் தாமே. ஈ

1996 பொய்யிலன் மெய்யன் புவனை பதியெந்தை
மையிருள் நீக்கு மதியங்கி ஞாயிறு
செய்யிருள் நீக்குந் திருவுடை நந்தியென்
கையிருள். நீங்கக் கலந்தெழுந் தானே. உ

1997 தனிச்சுட ரெற்றித் தயங்கிருள் நீங்க
அனித்திடு மேலை யருங்கனி யூறல்
கனிச்சுட ராய்நின்ற கயிலையில் ஈசன்
நனிச்சுடர் மேல்கொண்ட வண்ணமு மாமே. ஊ

1998 நேரறி வாக நிரம்பிய பேரொளி
போரறி யாது புவனங்கள் போய்வருந்
தேரறி யாத திசையொளி யாயிடும்
ஆரறி வாரிது நாயக மாமே. ஏ

1999 மண்டலத் துள்ளே மலர்ந்தெழும் ஆதித்தன்
கண்டிடத் துள்ளே கதிரொளி யாயிடுஞ்
சென்றிடத் தெட்டுத் திசையெங்கும் போய்வரும்
நின்றிடத் தேநிலை நேரறி வார்க்கே. ஐ

2000 நாபிக்கண் ணுசி நயன நடுவிணுங்
தூபியோ டைந்துஞ் சுடர்விடு சோதியைத்
தேவர்கள் ஈசன் திருமால் பிரமனும்
மூவரு மாக வுணர்ந்திருந் தாரே. ஒ

155. சிவாதித்தன்

2001 அன்றிய பாச இருளுமஞ் ஞானமுஞ்
சென்றிடு ஞானச் சிவப்பிர காசத்தால்
ஒன்று மிருசுட ராம்அரு ணோதயங்
துன்றிருள் நீங்குதல் போலத் தொலைந்ததே. ஓ

2002 கடங்கடந் தோறுங் கதிரவன் தோன்றில்
அடங்கிட மூடில் அவற்றில் அடங்கான்
விடங்கொண்ட கண்டனு மேவிய காயத்
தடங்கிட நின்றதும் அப்பரி சாமே. உ

2003 தானே விரிசுடர் மூன்றுமொன் றுய்ந்திற்குந்
தானே யபன்மா லெனநின்று தாபிக்குந்
தானே யுடலுயிர் வேறன்றி நின்றுளன்
தானே வெளியொளி தானிருட் டாமே. ங

2004 தெய்வச் சுடரங்கி ஞாயிறுந் திங்களும்
வையம் புனல்அனல் மாருதம் வானகஞ்
சைவப் பெரும்பதி தாங்கிய பல்லுயிர்
ஐவர்க் கிடமிடை யாறங்க மாமே. ச

156. பசுவிலக்கணம் - பிராணன்

2005 உன்னும் அளவில் உணருங் ஒருவனைப்
பன்னு மறைகள் பயிலும் பரமனை
என்னுள் இருக்கும் இளையா விளக்கினை
அன்ன மயமென் றறிந்துகொண் டேனே. க

2006 அன்ன மிரண்டுள ஆற்றங் கரையினில்
துன்னி யிரண்டுந் துணைப்பிரி யாதன்னந்
தன்னில யன்னந் தனியொன்ற தென்றக்கால்
பின்ன மடவன்னம் பேறணு காதே. உ

157. புருடன்

2007 வைகரி யாதியு மாயா மலாதியும்
பொய்கரி யான புருடாதி பேதமும்
மெய்கரி ஞானங் கிரியா விசேடத்துச்
செய்கரி யீசன் அநாதியே செய்ததே. க

2008 அணுவில் அணுவினை ஆதிப் பிரானை
அணுவில் அணுவினை ஆயிரங் கூறிட்
டணுவில் அணுவை அணுகவல் லார்கட்
கணுவில் அணுவை அணுகலு மாமே. உ

2009 படர்கொண்ட ஆலதின் வித்தது போலச்
சுடர்கொண் டணுவினைத் தூவழி செய்ய
இடர்கொண்ட பாச இருளற வோட்டி
நடர்கொண்ட நல்வழி நாடலு மாமே. ங.

2010 அணுவுள் அவனும் அவனுள் அணுவுங்
கணுவற நின்ற கலப்ப துணரார்
இணையிலி யீச னவனெங்கு மாகித்
தணிவற நின்றனன் சராசரந் தானே. ச

158. சீவன்

2011 மேவிய சீவன் வடிவது சொல்லிடில்
கோவின் மயிரொன்று நூறுடன் கூறிட்டு
மேவிய கூறது ஆயிர மாயிரு
ஆவியின் கூறுநூ றாயிரத் தொன்றே. க

2012 ஏனோர் பெருமைய னாயினும் எம்மிறை
ஊனே சிறுமையின் உட்கலந் தங்குளன்
வானோர் அறிபு மளவல்லன் மாதேவன்
தானே யறியுந் தவத்தின் அளவே. உ

2013 உண்டு தெளிவன் உரைக்க வியோகமே
கொண்டு பயிலுங் குணமில்லை யாயினும்
பண்டு பயிலும் பயில்சீவ னர்பின்னைக்
கண்டு சிவனுருக் கொள்வர் கருத்துளே. ங

2014 மாயா புவாதி வசத்தாகுஞ் சேதனத்
தாய குருவரு ளாலே யதில்தூண்ட
ஓயும் உபாதியோ டொன்றினென் றூதுயிர்
ஆய துரியம் புகுந்தறி வாகுவே. ச

159. பசு

2015 கற்ற பசுக்கள் கதறித் திரியினுங்
கொற்ற பசுக்கள் குறிகட்டி மேயினு
முற்ற பசுக்கள் ஒருகுடம் பால்போது
மற்றைப் பசுக்கள் வற்றல்பசு தானே. க

2016 கொல்லையின் மேயும் பசுக்களைச் செய்வதென்
எல்லை கடப்பித் திறைவ னடிகூட்டி
வல்லசெய் தாற்ற மதித்தபின் அல்லது
கொல்லைசெய் நெஞ்சங் குறிப்பறி யாதே. உ

160. போதன்

2017 சீவ னெனச்சிவ னென்னதே வில்லை
சீவ னுர்சிவ னுரை யறிகிலர்
சீவ னுர்சிவ னுரை யறிந்தபின்
சீவ னுர்சிவ னுயிட் டிருப்பதே. க

2018 குணவிளக் காகிய கூத்தப் பிரானும்
மணவிளக் காகிய மன்னுயிர்க் கெல்லாம்
பணவிளக் காகிய பல்தலை நாகங்
கணவிளக் காகிய கண்காணி யாகுமே. உ

2019 அறிவாய் அறியாமை நீங்கி யவனை
பொறிவாய் ஒழிந்தெங்கும் தானன போதன்
அறிவா யவற்றினுட் டானு யறிவன்
செறிவாகி நின்ற அச் சீவனு மாகுமே. ங

2020 ஆருறின் தன்மை அறியா திருந்தேதனுக்
காருறின் தன்மை அறிவித்தான் பேர்நந்தி
ஆருறின் தன்மை அருளால் அறிந்தபின்
ஆருறுக் கப்புற மாகினின் றானே. ச

2021 சிவமா கியஅருள் நின்றறிந் தோரார்
அவமா மலமைந்து மாவ தறியா
தவமான செய்து தலைப்பறி கின்றூர்
நவமான தத்துவ நாடகி லாரே. ஞ

2022 நாடோறும் ஈசன் நடத்துந் தொழில்உன்னர்
நாடோறும் ஈசன் நயந்தூட்டல் நாடிடார்
நாடோறும் ஈசன்நல் லோர்க்கருள் கல்கலால்
நாடோறும் நாடார்கள் நாள்வினை யாளரே. ட

161. ஐந்திந்திரிய மடக்கு மருமை

2023 ஆக மதத்தன ஐந்து களிறுள
ஆக மதத்தறி யோடணை கின்றில
பாகனு மெய்த்தவை தாழும் இளைத்தபின்
யோகு திருந்துதல் ஒன்றறி யோமே. க

2024 கருத்தினன் னூல்கற்றுக் கால்கொத்திப் பாகன்
திருத்தலும் பாய்மாத் திகைத்தன்றிப் பாயா
எருத்துற வேறி யிருக்கிலு மாங்கே
வருத்தினும் அம்மா வழிநட வாதே. உ

2025 புலமைந்து புள்ளைந்து புட்சென்று மேயும்
நிலமைந்து நீரைந்து நீர்மையும் ஐந்து
குலமொன்று கோல்கொண்டு மேய்ப்பான் ஒருவன்
உலம்வந்து போம்வழி யொன்பது தானே. ங

2026 அஞ்சுள சிங்கம் அடவியில் வாழ்வன
அஞ்சுமம்போய் மேய்ந்துதம் அஞ்சக மேபுகும்
அஞ்சின் உகிரும் எயிறும் அறுத்திட்டால்
எஞ்சா திறைவனை எய்தலு மாமே. ச

2027 ஐவர் அமைச்சருள் தொண்ணூற் றறுவர்கள்
ஐவரு மைந்தரு மாளக் கருதுவர்
ஐவரு மைந்து சினத்தொடே நின்றிடில்
ஐவர்க் கிறையிறுத் தாற்றகி லோமே. ஞ

2028 சொல்லகில் லென்சுடர்ச் சோதியை நாடொறுஞ்
சொல்லகில் லென்திரு மங்கையும் அங்குள
வெல்லகில் லென்புலன் ஐந்துடன் தன்னையுங்
கொல்லநின் றேடுங் குதிரையொத் தேனே. ட

2029 எண்ணினி யில்லி யுடைத்தவ் விருட்டறை
எண்ணினி யில்லியோ டேகிற் பிழைதரும்
எண்ணினி யில்லியோ டேகாமை காக்குமேல்
எண்ணினி யில்லதோர் இன்பம தாமே. ண

2030 விதியின் பெருவலி வேலைசூழ் வையந்
துதியின் பெருவலி தொல்வான் உலகம்
மதியின் பெருவலி மானுடர் வாழ்க்கை
நிதியின் பெருவலி நீர்வலி தானே. அ

162. ஐந்திந்திரியம் அடக்கு முறைமை

2031 குட்ட மொருமுழ முள்ள தரைமுழம்
வட்டம் அமைந்தோர் வாவியுள் வாழ்வன
பட்டன மீன்பல பரவன் வலைகொணர்ந்
திட்டனன் யாமினி யேதமி லோமே. க

2032 கிடக்கும் உடலிற் கிளரிந் திரியம்
அடக்க லுறுமவன் தானே யமரன்
விடக்கிரண் டின்புற மேவுறு சிங்கை
நடக்கின் நடக்கும் நடக்கு மளவே. உ

2033 அஞ்சு மடக்கடக் கென்பர் அறிவிலார்
அஞ்சு மடக்கும் அமரரும் அங்கிலை
அஞ்சு மடக்கில் அசேதன மாமென்றிட்
டஞ்சு மடக்கா அறிவறிந் தேனே. ங

2034 முழக்கி யெழுவன மும்மத வேழம்
அடக்க அறிவென்னுங் கோட்டையை வைத்தேன்
பிழைத்தன வோடிப் பெருங்கேடு மண்டிக்
கொழுத்தன வேழங் குலைக்கின்ற வாறே. ச

2035 ஐந்தில் ஒடுங்கில் அகலிட மாவது
ஐந்தில் ஒடுங்கில் அருந்தவ மாவது
ஐந்தில் ஒடுங்கில் அரன்பத மாவது
ஐந்தில் ஒடுங்கில் அருளுடை யாரே. ஞ

2036 பெருக்கப் பிதற்றிலென் பேய்த்தோர் நினைக்தென்
விரித்த பொருட்கெல்லாம் வித்தாவ துள்ளம்
பெருக்கிற் பெருக்குஞ் சுருக்கிற் சுருக்கும்
அருத்தமும் அத்தனை ஆய்ந்துகொள் வாக்கே. ட

2037 இலைக்கின்ற வாறறிந் தின்னுயிர் வைத்த
கிலைக்கொன்று மீசனைக் கேடில் புகழோன்
தலைக்கொன்ற காகமஞ் சாடல் ஒடுக்கத்
துலைக்கொண்ட தவ்வழி தூங்கும் படைத்தே. எ

2038 பாய்ந்தன பூதங்கள் ஐந்தும் படரொளி
சார்ந்திடு ஞானத் தறியினிற் பூட்டிட்டு
வாய்ந்துகொள் ஆனந்த மென்னும் அருள்செய்யில்
வேய்ந்துகொள் மேலை விதியது தானே. அ

2039 கடக்கின்ற கந்தியை காடோறு முன்னில்
படர்க்கின்ற சிந்தையைப் பைய வொடுக்கிக்
குறிக்கொண்ட சிந்தை குறிவழி நோக்கில்
வடக்கொடு தெற்கு மனக்கோயி லாமே. கூ

2040 சென்றன காழிகை நாள்கள் சிலபல
நின்றது நீள்பொருள் நீர்மேல் எழுத்தொத்து
வென்று புலன்கள் விரைந்து விடுமின்கள்
குன்று விழுவதில் தாங்கலு மாமே. க0

2041 போற்றிசைத் துப்புனி தன்திரு மேனியைப்
போற்றிசெய் மீட்டே புலனைந்தும் புத்தியால்
நாற்றிசைக் கும்பின்னை யாருக்கு நாதனை
ஊற்றுகை யுள்ளத் தொதுங்கலு மாமே. கக

2042 தரிக்கின்ற நெஞ்சஞ் சகளத்தி னுள்ளே
அரிக்கின்ற ஐவரை யாரும் உணரார்
சிரிக்கின்ற வாறு சிலபல பேசில்
வரிக்கொண்ட மைசூழ் வரையது வாமே. கஉ

2043 கைவிட லாவதொன் றில்லை கருத்தினுள்
எய்தி யவனை யிசையிலுல் ஏத்துமின்
ஐவ ருடைய அவாவினில் தோன்றிய
பொய்வ ருடைய புலன்களுந் ஐந்தே. கங

163. அசற்குரு நெறி

2044 உணர்வொன் றிலாமூடன் உண்மையோ ராதோன்
கணுவின்றி வேதா கமமெறி காணுன்
பணிவொன் றிலாதோன் பரநிந்தை செய்வோன்
அணுவின் குணத்தோன் அசற்குரு வாமே. க

2045 மந்திர தந்திர மாயோக ஞானமும்
பந்தமும் வீடுந் தரிசித்துப் பார்ப்பவர்
சிந்தனை செய்யாத் தெளிவியா தூண்பொருட்
டந்தக ராவோர் அசற்குரு வாமே. உ

2046 ஆமா றறியாதோன் மூடன் அதிமூடன்
காமாதி நீங்காக் கலதி கலதிகட்
காமாற சத்தறி விப்போன் அறிவிலோன்
கோமா னலசனத் தாகுங் குரவனே. ங

2047 கற்பாய கற்பங்கள் நீக்காமற் கற்பித்தால்
தற்பாவங் குன்றுந் தனக்கே பகையாகும்
கற்பால் அரசுக்கு காட்டுக்கும் கேடென்றே
முற்பாலே கந்தி மொழிந்துவைத் தானே. ச

2048 குருடர்க்குக் கோல்காட்டிச் செல்லுங் குருடர்
மூரணும் பழங்குழி வீழ்வர்கள் முன்பின்
குருடரும் வீழ்வர்கள் முன்பின் னறவே
குருடரும் வீழ்வார் குருடரோ டாகியே. ஞ

164. சற்குரு நெறி

2049 தாடந் தளிக்குந் தலைவனே சற்குரு
தாடந்து தன்னை யறியத் தரவல்லோன்
தாடந்து தத்துவா தீதத்துச் சார்சிவன்
தாடந்து பாசந் தணிக்கு மவன்சத்தே. க

2050 தவிரவைத் தான்வினை தன்னடி யார்கொள்
தவிரவைத் தான்சிரத் தோடுதன் பாதந்
தவிரவைத் தான்நமன் தூதுவர் கூட்டந்
தவிரவைத் தான்பிற வித்துயர் தானே. உ

2051 கறுத்த இரும்பே கனகடை தாணுன்
மறித்திரும் பாகா வகையது போலக்
குறித்தஅப் போதே குருவருள் பெற்றுன்
மறித்துப் பிறிவியில் வந்தணு கானே. ஈ

2052 பாசத்தை நீக்கிப் பரனேடு தன்னையும்
நேசத்து நாடி மலமற நீக்குவோர்
ஆசற்ற சற்குரு வாவோர் அறிவற்றுப்
பூசற் கிரங்குவோர் போதக் குருவன்றே. உ

2053 நேயத்தே நிற்கும் நிமலன் மலமற்ற
நேயத்தை நல்கவல் லோனித்தன் சுத்தனே
ஆயதத வாதத துவமூணாந தாங்கற்ற
நேயர்க் களிப்பவன் நீடுங் குரவனே. ஊ

2054 பரிசன வேதி பரிசித்த தெல்லாம்
வரிசை தருபொன் வகையாகு மாபோற்
குருபரி சித்த குவலயம் எல்லாந்
திரிமலந் தீர்ந்து சிவகதி யாமே. ஏ

2055 தானே யெனநின்ற சற்குரு சந்நிதி
தானே யெனநின்ற தன்மை வெளிப்படில்
தானே தனைப்பெற வேண்டுந் சதுர்பெற
ஊனே யெனநினைந் தோர்ந்துகொள் உன்னிலே. ஐ

2056 வருவழி போம்வழி மாயா வழியைக்
கருவழி கண்டவர் காணு வழியைப்
பெருவழி யாகந்தி பேசும் வழியைக்
குருவழி யேசென்று கூடலு மாமே. ஒ

2057 குருவென் பவனே வேதாக மங்கூறும்
பரவின்ப ணுகிச் சிவயோகம் பாவித்
தொருசிந்தை யின்றி உயர்பாச நீக்கி
வருநல் குரவன்பால் வைக்கலு மாமே. ஓ

2058 சத்தும் அசத்துஞ் சதசத்துந் தான்காட்டிச்
சித்தும் அசித்துஞ் சிவபாத் தேசோத்துச்

சுத்த மசுத்த மறச்சுக மானசொல்
அத்தன் அருட்குரு வாமமவன் கூறிலே: ௯0

2059 உற்றிடும் ஐம்மலம் பாச வுணர்வினுற்
பற்றறு நாதன் அடிபிற் பணிதலாற்
சுற்றிய பேதந் துரியமூன் முல்வாட்டித்
தற்பர மேவுவோர் சாதக ராமே. ௯௧

2060 எல்லாம் இறைவன் இறைவி யுடனின்பம்
வல்லார் புலனும் வருங்கால் உயிர்தோன்றிச்
சொல்லா மலமைம் தடங்கிபிட் டோங்கியே
செல்லாச் சிவகதி சேர்தல் விளையாட்டே. ௯௨

2061 ஈனப் பிறவியில் இட்டது மீட்டுட்டித்
தானத்து ளிட்டுத் தனையூட்டித் தாழ்த்தலும்
ஞானத்தின் மீட்டலும் நாட்டலும் வீடுற்று
மோனத்துள் வைத்தலும் முத்தன்றன் செய்கையே.

2062 அத்த னருளின் விளையாட் டிடைஞ்சடைந்
சித்தொ டுசித்தறத் தெளிவித்த சீவனைச்
சுத்தனு மாக்கித் துடைத்து மலத்தினைச்
சுத்துட னேங்கரு மத்திடுந் தன்மையே. ௯௩

2063 ஈசத்து வங்கடந் தில்லையென் றப்புறம்
பாசத்து ளேயென்றும் பாவியும் அண்ணலே
நேசத்து ளேநின்ற நின்மலன் எம்மிறை
தேசத்தை யெல்லாந் தெளியவைத் தானே. ௯௪

2064 மாணிக்க மாலை மலர்ந்தெழு மண்டலம்
ஆணிப்பொ னின்றங் கழுதம் விளைந்தது
பேணிக்கொண் டுண்டார் பிறப்பற் றிருந்தார்கள்
ஊணுக் கிருந்தார் உணராத மாக்களே. ௯௫

2065 அசத்தெதாடு சத்தும் அசத்சத்து நீங்க
இசைத்திடு பாசப்பற் நீங்கறு மாறே
அசைத்திரு மாயை அணுத்தானு மாங்கே
இசைத்தானு மொன்றறி விப்போன் இறையே. ௯௬

2066 ஏறு நெறியே மலத்தை எரித்தலால்
ஈறில் உரையால் இருளை யறுத்தலான்
மாறிற் பசுபாசம் வாட்டலால் வீடுக
கூறு பரனே குருவாம் இயம்பிலே. கஅ

165. கூடாவொழுக்கம்

2067 கண்காணி யில்லென்று கள்ளம் பலசெய்வார்
கண்காணி யில்லா விடமில்லை காணுங்கால்
கண்காணி யாகக் கலந்தெங்கு நின்றுணக்
கண்காணி கண்டார் களவொழிந் தாரே. க

2068 செய்தான் அறியுஞ் செழுங்கடல் வட்டத்துப்
பொய்தான் மிகவும் புலம்பும் மனிதர்கள்
மெய்தான் உரைக்கில்வின் ணோர்தாழச் செய்வன்
மைதாழ்ந் திலங்கு மிடறுடை யோனே. உ

2069 பத்திவிற் றுண்டு பகலைக் கழிவிடு
மத்தகர்க் கன்றே மறுபிறப் புள்ளது
வித்துக்குற் றுண்டு விளைபுலம் பாழ்செய்யும்
பித்தர்கட் கென்றும் பிறப்பில்லை தானே. ங

2070 வடக்கு வடக்கென்பர் வைத்ததொன் றில்லை
நடக்க வுறுவரே ஞானமி லாதார்
வடக்கில் அடங்கிய வையகம் எல்லாம்
அகத்தில் அடங்கும் அறிவுடை யோர்க்கே. ச

2071 காயக் குழப்பனைக் காயநன் னுடனைக்
காயத்தி னுள்ளே கமழ்கின்ற நந்தியைத்
தேயத்துளே யெங்குந் தேடித் திரிவர்கள்
காயத்துள் நின்ற கருத்தறி யாரே. ஞ

2072 சுண்காணி யாகவே கையகத் தேயெழுங்
கண்காணி யாகக் கருத்து ளிருந்திடுங்
கண்காணி யாகக் கலந்து வழிசெய்புங்
கண்காணி யாகிய காதலன் தானே. ட

2073 கன்னி யொருசிறை கற்றோர் ஒருசிறை
மன்னிய மாதவஞ் செய்வோர் ஒருசிறைத்
தன்னியல் புன்னி யுணர்ந்தோர் ஒருசிறை
என்னிது ஈசன் இயல்பறி யாரே. எ

2074 காணுத கண்ணிற் படலமே கண்ணெளி
காணுத வர்கட்குங் காணுத வவ்வொளி
காணுத வர்கட்குங் கண்ணும் பெருங்கண்ணைக்
காணுது கண்டார் களவொழிந் தாரே. அ

2075 பித்தன் மருந்தால் தெளிந்து பிரகிருதி
உய்த்தான்று மாபோல் விழியுந்தன் கண்ணெளி
அத்தன்மை யாகல்போல் நந்தி அருள்தரச்
சித்தந் தெளிந்தேன் செயலொழிந் தேனே. கூ

2076 பிரான்மய மாகப் பெயர்ந்தன எட்டும்
பராமய மென்றெண்ணிப் பள்ளி யுணரார்
சுராமய முன்னிய சூழ்வினை யாளர்
நிராமய மாக நினைப்பொழிந் தாரே. க0

2077 ஒன்றிரண் டாகிநின் றொன்றியொன் றுயிரினைக்
கொன்றும் இரண்டும் ஒருகாலுங் கூடிடா
ஒன்றிரண் டென்றே யுரைதரு வோர்க்கெலாம்
ஒன்றிரண் டாய்நிற்கும் ஒன்றுடொன் றுனதே. கக

2078 உயிரது நின்றுல் உணர்வெங்கு நிற்கும்
அயரறி வில்லையா லாருடல் வீழும்
உயிரும் உடலும் ஒருங்கிக் கிடக்கும்
பயிருங் கிடந்துள்ளப் பாங்கறி யாரே. கஉ

2079 உயிரது வேறு யுணர்வெங்கு மாகும்
உயிரை யறியில் உணர்வறி வாகும்
உயிரன் றுடலே விழுங்கு முணர்வை
அயரும் பெரும்பொரு ளாங்கறி யாரே. கஊ

2080 உலகாணி யொண்சுடர் உத்தம சித்தன்
நிலவாணி ஐந்தினுள் நேருற நிற்குஞ்
சிலவாணி யாகிய தேவர் பிரானைத்
தலைவாணி செய்வது தன்னை யறிவதே. கச

2081 தானந்த மாமென நின்ற தனிச்சுடர்
ஊனந்த மாயுல காய்நின்ற வொண்சுடர்
தேனந்த மாய்நின்ற சிற்றின்ப நீயொழி
கோனந்த மில்லாக் குணத்தரு ளாமே. கரு

2082 உன்முத லாகிய வூனுயிர் உண்டெனுங்
கன்முத லீசன் கருத்தறி வாரில்லை
நன்முத லேறிய நாம மறநின்றூல்
தன்முத லாகிய தத்துவ மாமே. கசு

2083 இந்தியம் அந்தக் கரண மிவையுயிர்
வந்தன சூக்க வுடலன்று மானது
தந்திடும் ஐவித்தத் தால்தற் புருடனு
மூந்துள மன்னு மாறுறு முடிவிலே. கஎ

166. கேடு கண்டிரங்கல்

2084 வித்துப் பொதிவார் விரைவிட்டு நாற்றுவார்
அற்றதம் வாணுள் அறிகிலாப் பாவிகள்
உற்ற வினைத்துயர் ஒன்றும் அறிகிலார்
முற்றெரி தீயின் முனிகின்ற வாறே. க

2085 போது சடக்கெனப் போகின் றதுகண்டும்
வாதுசெய் தென்னே மனிதர் பெறுவது
நீதியு ளேநின்று நின்மலன் தாள்பணிந்
தாதியை அன்பில் அறியகில் லார்களே. உ

2086 கடன்கொண்டு நெற்குத்துக் கையரை யூட்டி
உடம்பினை யோம்பி உயிராத் திரிவார்
தடங்கொண்ட சாரல் தழல்முரு டேறி
இடங்கொண் டுடலார் கிடக்கின்ற வாறே. ஙு

2087 விரைந்தன்று கால்வர்க்கு மெய்ப்பதி சூழ்ந்து
புரந்தகல் லால்நிழற் புண்ணியன் சொன்ன
பரந்தன்னை யோராப் பழிமொழி யாளர்
உரந்தன்மை யாக வொருங்கின்ன் மூர்களே. சு

2088 நின்ற புகழும் நிறைதவத் துண்மையும்
என்றும்எம் மீசன் அடியவர்க் கேகல்கும்
அன்றி யுலக மதுவிது தேவென்று
குன்றுகை யாலே குறைப்பட்ட வாறே. நு

2089 இன்பத்து ளேபிறந் தின்பத்து ளேவளர்ந்
தின்பத்து ளேநினைக் கின்ற திதுமறந்
துன்பத்து ளேசிலர் சோறிரு கூறையென்
துன்பத்து ளேநின்று தூங்குகின் மூர்களே. சூ

2090 பெறுதற் கரிய பிறவியைப் பெற்றும்
பெறுதற் கரிய பிரானடி பேணார்
பெறுதற் கரிய பிராணிகள் எல்லாம்
பெறுதற் கரியதோர் பேறிழந் தாரே. எ

2091 ஆர்வ மனமும் அளவில் இளமையும்
ஈரமும் கல்லவென் றின்புறு காலத்துத்
தீர வருவதோர் காமத் தொழில்நின்று
மாதவன் இன்ப மறந்தொழிந் தார்களே. அ

2092 இப்பரி சேயிள ஞாயிறு போலுரு
அப்பரி சங்கியின் உள்ளுறை யம்மானை
இப்பரி சேசுக மத்துறை யீசனை
மெய்ப்பரி சேவின வாதிருந் தோமே. கூ

2093 கூடகில் லார்குரு வைத்த குறிகண்டு
நாடகில் லார்நயம் பேசித் திரிவார்கள்
பாடகில் லாரவன் செய்த பரிசறிந்
தாடவல் லாரவர் பேறெது வாமே. கo

2094 நெஞ்சு நிறைந்தங் கிருந்த நெடுஞ்சுடர்
நஞ்செம் பிரானென்று நாதனை நாடொறும்

துஞ்சு மளவுந் தொழுமின் தொழாவிடில்
அஞ்சற்று விட்டதோர் ஆணையு மாமே. கக

2095 மிருக மனிதர் மிக்கோர் பறவை
ஒருவர்செய் தன்புவைத் துன்னுத தில்லை
பருகுவ ரோடுவர் பார்ப்பயன் கொள்வர்
திருமரு மாதவஞ் சேர்ந்துணர்ந் தாரே. கஉ

2096 நீதியி லோர்பெற்ற பொன்போல் இறைவனைச்
சோதியி லாருந் தொடர்ந்தறி வாரில்லை
ஆதி பயனென் றமரர் பிரானென்ற
நாதியே வைத்தது நாடுகின் றேனே. கஙூ

2097 இருந்தேன் மலரினங் தின்புற வண்டு
பெருந்தேன் இழைக்கின்ற பெற்றிமை யோரார்
வருந்தேன் நுகராது வாய்படு தேனை
அருந்தேனை யாரும் அறியகி லாரே. கச

2098 கருத்தறி யாது கழிந்தன காலம்
அருத்தியுள் ளான்அம ராபதி நாதன்
ஒருத்தனுள் ளானுல கத்துயிர்க் கெல்லாம்
வருத்தில் லாது வழுக்குகின் றூரே. கஞ

2099 குதித்தோடிப் போகின்ற கூற்றமுஞ் சார்வாய்
விதித்தன நாள்களும் வீழ்ந்து கழிந்த
விதிர்த்திருந் தென்செய்தீ ராறுதி ராகிற்
கொதிக்கின்ற கூழில் துடுப்பிட லாமே. கசு

2100 கரையரு காறுக் கழனி விளைந்த
திரையரு காமுன்னம் சேர்ந்தின்பம் எய்தும்
வரையரு கூறிய மாதவ நோக்கின்
நரையுரு வாச்செல்லு நாளில வாமே. கஎ

2101 வரவறி வாஜன மயங்கிருண் ஞாலத்
திரவறி வாஜன யெழுஞ்சுடர்ச் சோதியை
அரவறி வார்முன் னெருதெய்வ மென்று
விரவறி யாமலே மேல்வைத்த வாறே. கஅ

167. இதோபதேசம்

2102 மறந்தொழி மண்மிசை மன்னுப் பிறவி
இறந்தொழி காலத்தும் ஈசனை உள்கும்
பறந்தல மந்து படுதுயர் தீர்ப்பான்
சிறந்த சிவநெறி சிந்தைசெய் யீரே. க

2103 செல்லு மளவுஞ் செலுத்துமின் சிந்தையை
வல்ல பரிசால் உரைமின்கள் வாய்மையை
இல்லை யெனினும் பொருதுளன் எம்மிறை
நல்ல வரனெறி நாடுமி னீரே. உ

2104 ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நடமனில்லை நாணுமே
சென்றே புகுங்கதி யில்லைநுஞ் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைத் துய்ம்மினே. ங

2105 போற்றிசெ யுத்தண் கயிலைப் பொருப்பனை
நாற்றிசைக் குந்நடு வாய்நின்ற நம்பனைக்
காற்றிசைக் குங்கமழ் ஆக்கைபைக் கைக்கொண்டு
கூற்றுதைத் தான்றன்னைக் கூறினின் றுய்ம்மினே. ச

2106 இக்காய நீக்கி யினியொரு காயத்திற்
புக்குப் பிறவாமற் போம்வழி நாடுமின்
எக்காலத் திவ்வுடல் வந்திதமக் கானதென்
றக்கால முன்ன அருள்பெற லாமே. ஞ

2107 போகின்ற வாறே புகுகின்ற அப்பொருள்
ஆகின்ற போது மரனறி வானுளன்
சாகின்ற போதுந் தலைவனை நாடுமின்
ஆகின்ற அப்பொருள் அக்கரை யாகுமே. ட

2108 பறக்கின்ற வொன்று பயனுற வேண்டின்
இறக்கின்ற காலத்தும் ஈசனை யுள்குஞ்
சிறப்பொடு சேருஞ் சிவகதி பின்னைப்
பிறப்பொன் றிலாமையும் பேருல காமே. ண

2109 கூடியும் நின்றுங் தொழுதெம் மிறைவனைப்
பாடியு ளேநின்று பாதம் பணிமின்கள்
ஆடியு ளேநின் றறிவுசெய் வார்கட்கு
நீடிய வீற்றுப் பசுவது வாமே. அ

2110 விடுகின்ற சீவனுர் மேலெழும் போது
நடுநின்று நாடுமின் நாதன்தன் பாதங்
கெடுகின்ற வல்வினை கேடில் புகழோன்
இடுகின்றுன் உம்மை இமையவ ரோடே. கூ

2111 ஏறுடை யாயிறை வாளம் பிரானென்று
நீறிடு வாரடி யார்நிகழ் தேவர்கள்
ஆறணி செஞ்சடை யண்ணல் திருவடி
வேறணி வார்க்கு வினையில்லை தானே. க0

2112 இன்புறு வீர்அறிந் தேளம் இறைவனை
அன்புறு வீர்தவஞ் செய்யுமெய்ஞ் ஞானத்துப்
பண்புறு வீர்பிற வித்தொழி லேநின்று
துன்புறு பாசத் துழைத்தொழிந் தீரே. கக

2113 மேற்கொள்ள லாவதோர் மெய்த்தவம் ஒன்றுண்டு
மேற்கொள்ள லாவதோர் மெய்த்தாளும் ஒன்றுண்டு
மேற்கொள்ள லாவதோர் மெய்ந்நெறி ஒன்றுண்டு
மேற்கொள்ள லாம்வண்ணம் வேண்டினின் றேர்க்கே.

2114 சார்ந்தவர்க் கின்பங் கொடுக்குந் தழல்வண்ணன்
போர்ந்தவர்க் கின்னுப் பிறவி கொடுத்திடுங்
கூர்ந்தவர்க் கங்கே குரைகழல் காட்டிடுஞ்
சேர்ந்தவர் தேவரைச் சென்றுணர் வாரே. கஉ

2115 முத்தியை ஞானத்தை முத்தமிழ் ஓசையை
எத்தனை காலமும் ஏத்துவர் ஈசனை
நெய்த்தலைப் பால்போல் நிமலனும் அங்குளன்
அத்தகு சோதி யதுவிரும் பாரே. கச

2116 நியமத்த ணகிய நின்மலன் வைத்த
உகமெத் தனையென் றெருவருந் தேறூர்
பவமத்தி லேவந்து பாய்கின்ற தல்லாற்
சிவமத்தை யொன்றுந் தெளியகில் லாரே. கரு

2117 இங்கித்தை வாழ்வு மெனைத்தே ரகிதழுந்
துஞ்சொத்த காலத்துத் தூய்மணி வண்ணனை
விஞ்சத் துறையும் விகிர்தா எனநின்னை
நஞ்சற் றவர்க்கன்றி நாடவொண் ணுதே. கசு

2118 பஞ்சமு மாம்புவி சற்குரு பால்மூன்னி
வஞ்சக ரானவர் வைகில் அவர்தம்மை
அஞ்சுவன் நாதன் அருநர கத்திடுந்
செஞ்சநிற் போரைத் தெரிசிக்கச் சித்தியே. கள

2119 சிவனை வழிபட்டார் எண்ணிலாத் தேவர்
அவனை வழிபட்டங் காமாறுன் றில்லை
அவனை வழிபட்டங் காமாறு காட்டுங்
குருவை வழிபடிற் கூடலு மாமே. கஎ

2120 கரருஞ் சுரரும் பசுபாச நண்ணிக்
கருமங்க ளாலே கழிதலிற் கண்டு
குருவென் பவன்ஞானி கோதில ணைற்
பரமென்றல் அன்றிப் பகர்வொன்று மின்றே. கக

2121 ஆட்கொண் டவர்தனி நாயகன் அன்புற
மேற்கொண் டவர்வினை போயற நாடொறும்
நீர்க்கின்ற செஞ்சடை நீளன் உருவத்தின்
மேற்கொண்ட வாறலி வீவித்து ளானே. உ0

ஏழாந் தந்திரம் முற்றிற்று.

168. உடலிற் பஞ்சபேதம்

2122 காயப்பை யொன்று சரக்குப் பலவுள
மாயப்பை யொன்றுண்டு மற்றுமோர் பையுண்டு
காயப்பைக் குள்நின்ற கள்வன் புறப்பட்டால்
மாயப்பை மண்ணு மயங்கிய வாறே. க

2123 அத்தன் அமைத்த உடலிரு கூறினிற்
சுத்தம தாகிய சூக்குமஞ் சொல்லுங்காற்
சத்த பரிச ரூப ரசகந்தம்
புத்திமா னங்காரம் புரியட்ட காயமே. உ

2124 எட்டினில் ஐந்தாகும் இந்திரி யங்களுங்
கட்டிய மூன்று கரணமு மாயிடும்
ஓட்டிய பாசம் உணர்வது வாகவே
கட்டி யவிழ்த்திடுங் கண்ணுதல் காணுமே. ங

2125 இரதம் உதிரம் இறைச்சிதோல் மேதை
மருவிய வத்தி வழும்பொடு மச்சை
பரவிய சுக்கிலம் பாழாம் உபாதி
உருவ மாலாலுடல் ஒன்றென லாமே. ச

2126 ஆரே அறிவார் அடியின் பெருமையை
யாரே அறிவார் அங்கவர் நின்றது
யாரே அறிவார் அறுபத்தெட் டாக்கையை
யாரே அறிவார் அடிக்காவ லானதே. ஞ

2127 எண்சா ணளவால் எடுத்த வுடம்புக்குட்
கண்கால் உடலிற் கரக்கின்ற கைகளிற்
புண்கால் அறுபத்தெட் டாக்கை புணர்க்கின்ற
நண்பால் உடம்புதன் னுலுடம் பாமே. ட

2128 உடம்புக்கும் நாலுக்கும் உயிராய சீவன்
ஓடுங்கும் பரனே டொழியாப் பிரமங்
கடந்தாறு நின்ற கணக்கது காட்டி
அடங்கியே அற்றது ஆரறி வாரே. எ

2129 ஆறந்த மாகி நடுவுடன் கூடுலல்
தேறிய மூவாறுஞ் சிக்கென் றிருந்திடுங்
கூறுங் கலைகள் பதினெட்டுங் கூடியே
ஊறும் உடம்பை உயிருடம் பெண்ணுமே. அ

2130 மெய்யினில் தூல மிருந்த முகத்தையும்
பொய்யினிற் சூக்கம் பொருந்தும் உடலையுங்
கையினில் துல்லியங் காட்டும் உடலையும்
ஐயன் அடிக்குள் அடங்கும் உடம்பே. கூ

2131 காயுங் கடும்பரி கால்வைத்து வாங்கல்போற்
சேய விடமண்மை செல்லவும் வல்லது
காயத் துகிர்போர்வை யொன்றுவிட் டோங்கொன்றிட்
டேயு மவரென்ன ஏய்ந்திடுங் காயமே. கூ

2132 நாக முடலுரி போலுகல் லண்டச
மாக நுவிற் கறுமறந் தல்லது
போகலு மாகும் அரனரு ளாலேசென்
றேகு மிடஞ்சென் றிருபயன் உண்ணுமே. கூ

2133 உண்டு நரக சுவர்க்கத்தில் உள்ளன
கண்டு விடுஞ்சூக்கங் காரண மாச்செலப்
பண்டு தொடரப் பரகாய யோகிபோற்
பிண்டம் எடுக்கும் பிறப்பிறப் பெய்தியே. கூ

2134 தானவ ணுகிய தற்பரந் தாங்கிநேன்
ஆனவை மாற்றிப் பரமத் தடைந்திடும்
ஏனை யுபிர்வினைக் கெய்து மிடஞ்சென்றும்
வானும் நிலனும் புகுந்தும் வருந்துமே. கூ

2135 ஞானிக்குக் காயஞ் சிவமே தனுவாகும்
ஞானிக்குக் காயம் உடம்பே யதுவாகும்
மேனிற்கும் யோகிக்கு விந்துவும் நாதமும்
மோனிக்குக் காயமுப் பாழ்கெட்ட முத்தியே. கச

2136 விஞ்ஞானத் தோர்க்கா ணவமே மிகுதனு
எஞ்ஞானத் தோர்க்குத் தனுமாயை தானென்ப
அஞ்ஞானத் தோர்க்குக் கன்மந் தனுவாகும்
மெஞ்ஞானத் தோர்க்குச் சிவதனு மேவுமே. கஙு

2137 மலமென் றுடம்பை மதியாத வுளமர்
தலமென்று வேறு தரித்தமை கண்டீர்
நலமென் றிதனையே நாடி யிருக்கிற்
பலமுள்ள காயத்திற் பற்றுமிவ் வண்டத்தே. கசு

2138 நல்ல வசனத்து வாக்கு மனுதிகள்
மெல்ல விளையாடும் விமலன் அகத்திலே
அல்ல செவிசத்த மாதி மனத்தையும்
மெல்லத் தரித்தார் முகத்தார் பசித்தே. கஎ

169. உடல் விடல்

2139 பண்ணுகுங் காமம் பயிலும் வசனமும்
விண்ணும் பிராணன் விளங்கிய சத்தமும்
புண்ணும் உடலிற் பொருந்து மனத்தையும்
அண்ணுந்து பார்க்க அழியும் உடம்பே. க

2140 அழிகின்ற வோருடம் பாகுஞ் செவிகண்
கழிகின்ற காலவ் விரதங்கள் தானம்
மொழிகின்ற வாக்கு முடிகின்ற நாடி
ஒழிகின்ற வுளனுக் குறுதுணை யில்லையே. உ

2141 இலையா மிடையில் எழுகின்ற காம
மூலவாய நெஞ்சத்து மூழ்கும் உளத்துத்
தலையாய மின்னுடல் தாங்கித் திரியுஞ்
சிலையாய சித்தஞ் சிவமுன் னிடைக்கே. ஙு

170. அவத்தைதபேதம் - கீழாலவத்தை

2142 ஐயைந்து மத்திமை யானது சாக்கிரங்
கைகண்ட பன்னென்கிற் கண்டங் கனவென்பர்
பொய்கண்டி லாத புருட னிதயஞ்சுழினை
மெய்கண் டவணுந்தி யாகுந் துரியமே. க

2143 மூப்பதோ டாறின் முதல்நனை ஐந்தாகச்
செப்பதி னென்காய்த் திகழ்ந்திரண் டொன்றுகி
அப்பதி யாகும் நியதி முதலாகச்
செப்புஞ் சிவமீறுய்த் தோர்ந்துகொள் ளீரே. உ

2144 இந்திய மீரைந் தீரைந்து மாத்திரை
மந்திர மாய்நின்ற மாருதம் ஈரைந்தும்
அந்தக் கரணம் ஒருநான்கும் ஆன்மாவும்
பந்தவச் சக்கரப் பாலது வாகுமே. ங

2145 பாரது பொன்மை பசுமை யுடையது
நீரது வெண்மை செம்மை நெருப்பது
காரது மாருதங் கறுப்பை யுடையது
வானகந் தூம மறைந்துநின் றூரே. ச

2146 பூதங்கள் ஐந்தும் பொறியுணர் ஐந்துளும்
ஏதம் படஞ்செய் திருந்த புறநிலை
ஓது மலங்குண மாகுமா தாரமோ
டாதி யவத்தைக் கருவிதான் ஊற்றுமே. ஞ

2147 இடவகை சொல்லில் இருபத்தஞ் சானை
படுபர சேனையும் பாய்பரி ஐந்தும்
உடையவன் மத்திமை யுள்ளுறு நால்வர்
அடைய நெடுங்கடை ஐந்தொடு நான்கே. ட

2148 உடம்பும் உடம்பும் உடம்பைத் தழுவி
உடம்பிடை நின்ற உயிரை அறியார்
உடம்பொ டுயிரிடை நட்பறி யாதார்
மடம்புகு நாய்போல் மயங்குகின் றூரே. ண

2149 இருக்கின்ற வாறிரண் டறிகிலர் ஏழைகள்
மூருக்கு மசபையை மாற்றி முகந்து
கருக்கொண்டு காமாரி சார முகந்தேற்
துருக்கொண்டு தொக்க உடலொழி யாதே. அ

2150 ஒளித்திட் டிருக்கும் ஒருபதி னலை
அளித்தனன் என்னுள்ளே ஆரியன் வந்து
அளிக்குங் கலைகளி னலறு பத்து
ஒளித்திட்டு வைத்தான் ஒடுங்கிய சித்தே. கூ

2151 மண்ணினில் ஒன்று மலர்நீரு மருங்காகும்
பொன்னினில் அங்கி புகழ்வளி யாகாயம்
மன்னு மதேபுத்தி யாங்காரம் ஒரொன்றுய்
உன்னின் முடிந்த தொருபூத சயமே. கo

2152 முன்னிக் கொருமகன் மூர்த்திக் கிருவர்
வன்னிக்கு மூவர் வதுவைக்கு நால்வர்
கன்னிக்குப் பிள்ளைகள் ஐவர்மு னளில்லை
கன்னியைக் கன்னியே காதலித் தானே. கக

2153 கண்ட கனவைந்துங் கலந்தன தானைந்துஞ்சென்
றுண்டன நான்கும் ஒருங்கே உணர்ந்தபின்
பண்டைய தாகிப் பரந்த வியாக்கிரத்
தண்டமூந் தானுய் அமர்ந்துநின் றூனே. கஉ

2154 நின்றவன் நிற்கப் பதினலிற் பத்துநீத்
தொன்றிய அந்தக் காணங்கள் நான்குடன்
மன்று கலந்த மனவாழ்க்கை வாதனை
கன்றிய கண்டத்திற் கண்டான் கனவதே. கங

2155 தான மிழந்து தனிபுக் கிதயத்து
மான மழிந்து மதிகெட்டு மாலாகி
ஆன விரிவறி யாவவ் வியத்தத்தின்
மேனி யழிந்து சுழுத்திய தாமே. கச

2156 சுழுனையைச் சேர்ந்துள மூன்றுடன் காட்சி
கெழுமிய சித்தம் பிராணன்றன் காட்சி

ஒழுகக் கமலத்தின் உள்ளே யிருந்து
விழுமப் பொருளுடன் மேவினின் ருனே. கஙு

2157 தானத் தெழுந்து தருக்குந் துரியத்தின்
வானத் தெழுந்துபோய் வையம் பிறகிட்டுக்
கானத் தெழுந்த கருத்தின் தலையிலே
ஊனத் துவித்தைதவிட் டுமனின் ருனே. கசு

2158 ஊமை யெழுத்தொடு பேசும் எழுத்துறில்
ஆமை யகத்தினில் அஞ்சும் அடங்கிடும்
ஓமய முற்றது வுள்ளொளி பெற்றது
காமய மற்றது காமறி யோமே. கஎ

2159 துரிய மிருப்பதுஞ் சாக்கிரத் துள்ளே
நரிகள் பதிணலு நஞ்சுண்டு செத்தன
பரிய புரவியும் பாறிப் பறந்தது
துரிய மிறந்திடஞ் சொல்லவொண் ணுதே. கஅ

2160 மாரு மலைமந்தான் மன்னு மவத்தையின்
வேரூய மாயா தநுகர ணுதிக்கிங்
கீரூகா தேனவ் வுயிரும் பிறந்திறந்
தாரூத வல்வினை யாலடி யுண்ணுமே. கஙு

2161 உண்ணுந்தன் னூடாடா தூட்டிடு மாயையும்
அண்ணல் அருள்பெற்ற முத்திய தாவது
நண்ண லிலாவுயிர் ஞானத்தி னுற்பிறந்
தெண்ணுறு ஞானத்தின் கோர்முத்தி எய்துமே. உ0

2162 அதிமூட நித்திரை யாணவ நந்த
அதனு ளுணர்வோ னருங்கன்ம முன்னித்
திதமான கேவல மித்திறஞ் சென்று
பரமாகா வையவத் தைப்படு வானே. உசு

2163 ஆசான்முன் னேதுயில் மாண வகரைத்
தேசாய தண்டால் எழுப்புஞ் செயல்போல்
ஈசாய வீசனு நீடாண வத்தரை
ஏசாத மாயாடன் னுலே எழுப்புமே. உஉ

2164 மஞ்சொடு மந்தா கினிகுட மாமென
விஞ்சிறி வில்லோன் விளம்பு மிகுமதி
எஞ்சலி லொன்றெனு மாறென இவ்வுடல்
அஞ்சுணு மன்னனன் றேபோ மளவே. உங

2165 படியுடை மன்னவன் பாய்பரி ஏறி
வடிவுடை மாநகர் தான்வரும் போது
அடியுடை ஐவரும் அங்குறை வோருந்
துடியில்லம் பற்றித் துயின்றனர் தாமே. உச

2166 நேரா மலத்தை நீடைந் தவத்தையின்
நேரான வாறுன்னி நீடு நனவினில்
நேரா மலமைந்து நேரே தரிசித்து
நேராம் பரத்துடன் நிற்பது நித்தமே. உஞ

171. மத்திய சாக்கிராவத்தை

2167 சாக்கிர சாக்கிரந் தன்னில் திரோதாயி
சாக்கிர சொப்பனந் தன்னிடை மாமாயை
சாக்கிரந் தன்னிற் சுழுத்திதற் காமியஞ்
சாக்கிரந் தன்னில் துரியத்து மாயையே. க

2168 மாயை எழுப்புங் கலாதியை மற்றதின்
நேய விராகாதி ஏய்ந்த துரியத்துத்
தோயுஞ் சுழுனை கருநரு வுந்துன்னி
ஆயின னந்தச் சகலத்து ளானே. உ

2169 மேவிய அந்தகன் விழிகட் குருடனை
மாவயின் முன்னடிக் காணு மதுகண்டு
மேவுந் தடிகொண்டு சொல்லும் விழிபெற
மூவயி னுன்மா முயலுங் கருமமே. ங

2170 மத்திம மொத்த சிலந்தி வலயத்துள்
ஒத்தங் கிருந்து உயிருண்ணு மாறுபோல்
அத்தனும் ஐம்பொறி யாடகத் துள்நின்று
சத்த முதல்ஐந்துந் தானுண்ணு மாறே. ச

2171 வைச்சன வச்சு வகைபிரு பத்தஞ்சு
மூச்சு முடனீண வாமிரு வன்னுளன்
பிச்சன் பெரியன் பிறப்பிலி என்றென்று
நச்சி யவனருள் நாணுப்ந்த வாறே. ரு

2172 காலா றுடன்புரு டனற்றத் துவமூடன்
வேரூன ஐயைந்து மெய்ப்புரு டன்பரங்
கூரு விபோமம் பரமெனக் கொண்டனன்
வேரூன நாலெழு வேதாந்த தத்வமே. சூ

2173 ஏலங்கொண் டாங்கே இடையொடு பிங்கலை
கோலங்கொண் டாங்கே குணத்தி னுடன்புக்கு
மூலங்கொண் டாங்கே முறுக்கிமுக் கோணிலுங்
காலங்கொண் டானடி காணலு மாமே. எ

2174 நாடிகள் பத்தும் நலந்திகழ் வாயுவும்
ஓடிய காலில் ஒடுங்கி யிருந்திடுங்
கூடிய காமங் குளிக்கும் இரதமும்
நாடிய நல்ல மனமும் உடலிலே. அ

2175 ஆவன ஆவ அழிவ அழிவன
போவன போவ புகுவ புகுவன
காவலன் போர்ந்தி காட்டித்துக் கண்டவன்
ஏவன செய்யும் இலங்கிழை யோனே. கூ

2176 பத்தொடு பத்துமோர் மூன்றும் பகுதியும்
உய்த்த துரியமும் உள்ளுணர் காலமும்
மெய்த்த விபோமமு மேலைத் துரியமுந்
தத்துவ நாலே டெனவுன்னத் தக்கதே. கூ

2177 விளங்கிடு முந்நூற்று முப்பதோ டொருபான்
தளங்கொ ளிரட்டிய தாறு கடந்தால்
வணங்கிடு மைம்மலம் வாயு வெழுந்து
விளங்கிடு மவ்வழி தத்துவ நின்றே. கூ

2178 நாலொரு கோடியே நாற்பத்தெண் ணாயிர
மேலுமோ ரைந்நூ றுவே றுயடங்கிடும்
பாலவை தொண்ணூ றோடு டாறுட் படுமவை
கோலிய ஐயைந்து ளாகுங் குறிக்கிலே. கஉ

2179 ஆகின்ற தொண்ணூ றோடு டாறும் பொதுவென்பர்
ஆகின்ற வாறு றருஞ்சைவர் தத்துவம்
ஆகின்ற நாலேழ் வேதாந்தி வயிணவர்க்
காகின்ற நாலாறை யைந்துமாயா வாதிக்கே. கஊ

2180 தத்துவ மானது தன்வழி நின்றிடில்
வித்தக ருகி விளங்கி யிருக்கலாம்
பொய்த்தவ மாமவை போயிடு மவ்வழி
தத்துவ மாவ தகார எழுத்தே. கக

2181 அறிவொன் றிலாதன ஐயேழ மொன்றும்
அறிகின்ற என்னை அறியா திருந்தேன்
அறிகின்ரு ய் நீயென் றருள்செய்தார் நந்தி
அறிகின்ற நானென் றறிந்துகொண் டேனே. கஎ

2182 சாக்கிர சாக்கிர மாதி தனில்ஐந்தும்
ஆக்கு மலாவத்தை யைந்து நனவாதி
போக்கி யிவற்ரெடும் பொய்யான வாரூறு
நீக்கி நெறிநின்ரென் ருகியே நிற்குமே. கஏ

2183 ஆணவ மாதி மலமைம் தலோடணுக்
காணவ மாதிநான் காமாற் காரணுக்கு
ஆணவ மாதி மூன்றீ சர்க் கிரண்டென்ப
ஆணவ மொன்றே சதாசிவற் காவதே. கஐ

172. அத்துவாக்கள்

2184 தத்துவம் ஆரூறு தன்மனு வேழ்கோடி
மெய்த்தகு வன்னம்ஐம் பாரெனறு மேதினி
ஒத்திரு நூற்றிரு பான்நான்கெண் பாரென்று
வைத்த பதங்கலை யோரைந்தும் வந்தவே. கக

2185 நாடிய மண்டல மூன்று நலந்தெரிந்
தோடு மவரோ டுள்ளிரு பத்தைஞ்சுங்
கூடுவர் கூடிக் குறிவழி யேசென்று
தேடிய பின்னர்த் திகைத்திருந் தார்களே. உ

2186 சாக்கிர சாக்கிர மாதித் தலையாக்கி
ஆக்கிய தூல மளவாக்கி அதீதத்துத்
தாக்கிய வன்பான தாண்டவஞ் சார்ந்தது
தேக்குஞ் சிவமாதல் ஐந்துஞ் சிவாயமே. ஊ

173. சுத்த நனவாதி பருவம்

2187 நனவாதி தூலமே சூக்கப் பகுதி
அனதான வைஜந்தும் விந்துவின் சத்தி
தனதா முயிர்விந்து தானின்று போந்து
கனவா நனவிற் கலந்ததிவ் வாறே. க

2188 நனவில் அதீதம் பிறந்தார் கிடந்தார்
நனவில் துரியம் நிகழ்ந்தார் தவழ்ந்தார்
நனவிற் சுழுத்தி நடந்தார் வளர்ந்தார்
நனவிற் கனவோட னன்செய்தி யானதே. உ

2189 செறியுங் கிரியை சிவதத் துவமாம்
பிறிவிற் சுகயோகம் பேரருள் கல்வி
குறிதற் றிருமேனி குணம்பல வாகும்
அறிவில் சராசரம் அண்டத் தளவே. ங

2190 ஆதி பரஞ்சிவஞ் சத்தி சதாசிவம்
ஏதமில் ஈசன்நல் வித்தியா தத்துவம்
போதங் கலிகால நியதிமா மாயை
நீதியீ ருக நிறுத்தினன் என்னே. ச

2191 தேசு திகழ்சிவஞ் சத்தி சதாசிவம்
ஈசன் அனல்வித்தை இராகங் கலிகால
மாசகல் வித்தை நியதி மகாமாயை
ஆசில் புருடாதி ஆன்மாவீ ருறே. ஞ

2192 ஆணவ மாயையுங் கன்மமு மாமலங்
காணு முளைக்குத் தவுடுமி யான்மாவுந்
தாணுவை யொவ்வாமற் றண்டுல மாய்நிற்கும்
பேணுவாய் மற்றுநின் பாசம் பிரித்தே. கூ

2193 பசுக்கள் பலவண்ணம் பாலொரு வண்ணம்
பசுக்களை மேய்க்கின்ற ஆயன் ஒருவண்ணம்
பசுக்களை மேய்க்கின்ற ஆயன்கோல் போடிற்
பசுக்கள் தலைவனைப் பற்றி விடாவே. எ

2194 உடலிந் தியமனம் ஒண்புத்தி சித்தம்
அடலொன் றகந்தை அறியாமை மன்னிக்
கெடுமவ் வுயிர்மயல் மேலுங் கிளைத்தால்
அடைவது தானேழ் நரகத்து ளாயே. அ

2195 தற்றொரி யாத வதீதந்தற் காணவஞ்
சொற்றொரி கின்ற துரியஞ்சொற் காமியம்
பெற்ற சுழுத்திப்பின் பேசுறுங் காதலா
மற்றது வுண்டிடக் கனகன வாதலே. க

2196 கனவிற் கனவில்லை ஐந்து கனவிற்
கனவிலாச் சூக்குமங் காணுஞ் சுழுத்தி
தனவுண் பகுதியே தற்கூட்டு மாயை
கனவிற் றூரிய மதீதந் தலைவந்தே. கo

2197 ஆறுறில் ஐயைந் தகல நவநவ
வாறு மவைவிட வாகு நவக்கவ
வேறுன ஐந்தும் விடவே கவுவினில்
ஈறுஞ் சுழுத்தி யிதின்மாயை தானே. கக

2198 மாயையில் வந்த புருடன் துரியத்தில்
ஆய முறைவிட் டதுவுந்தா னன்றுகிச்
சேயகே வலவிந் துடன்செல்லச் சென்றக்கால்
ஆய தனுவின் பயனில்லை யாமே. கஉ

2199 அதீதத் துரியத் தறிவனும் ஆன்மா
அதீதத் துரிய மதனுற் புரிந்தால்

அதீதத் தெழுந்தறி வாகிய மானன்
முதிய அனலிற் றுரியத்து முற்றுமே. கஙு

2200 ஐயைந்து பத்துடன் ஆனது சாக்கிரங்
கைகண்ட ஐயைந்திற் கண்டங் கனவென்பர்
பொய்கண்ட மூவர் புருடன் சுழுனையின்
மெய்கண் டவனுந்தி மேவல் இருவரே. கச

2201 புரியட் டகமே பொருந்தல் கனவு
புரியட் டகந்தன்னின் மூன்று கனவு
புரியட் டகத்தில் இரண்டு சுழுத்தி
புரியட் டகத்தொன்று புக்கல் துரியமே. கஞ

2202 நனவின் நனவு புலனில் வழுக்கம்
நனவிற் கனவு நினைத்தல் மறத்தல்
நனவிற் சுழுத்திபுண் ணுடல் இலாமை
நனவில் துரிய மதீதத்து நந்தியே. கசு

2203 கனவின் நனவுபோற் காண்டல் நனவாங்
கனவினிற் கண்டு மறத்தல் கனவாங்
கனவிற் சுழுத்தியுங் காணுமை காணல்
அனுமாதி செய்தலி லான துரியமே. கஎ

2204 சுழுத்தி நனவொன்றுங் தோன்றுமை தோன்றல்
சுழுத்தி கனவதன் உண்மை சுழுத்தியிற்
சுழுத்தி யறிவறி வாலே யழிகை
சுழுத்தித் துரியமாஞ் சொல்லறும் பாழே. கஅ

2205 துரிய நனவா மிதழுணர் போதந்
துரியக் கனவா மகழுணர் போதந்
துரியச் சுழுத்தி விியோமந் துரியந்
துரியம் பரமெனத் தோன்றிடுந் தானே. கஙு

2206 அறிவறி கின்ற அறிவு நனவாம்
அறிவறி யாமை யடையக் கனவாம்
அறிவறி யவ்வறி யாமை சுழுத்தி
அறிவறி வாகு மான துரியமே. உ0

2207 தானெங்கு மாயவ னம்மலந் தான்விட்டு
ஞானந் தனதுரு வாகி நயந்தபின்
தானெங்கு மாய்நெறி நின்றது தான்விட்டு
மேனந்தச் சூக்க மவைவன்ன மேவிட்டே. உக

2208 ஐயைந்து மாறுமோ ரைந்து நவுவினில்
எய்யு நனவு கனவு சுழுத்தியா
மெய்புரும்பின் சூக்கமும் மெய்ப்பகுதி மாயை
ஐயமுந் தானவ னத்துரி யத்தனே. உஉ

2209 ஈதென் றறிந்திலன் இத்தனை காலமும்
ஈதென் றறிந்தபின் ஏதும் அறிந்திலேன்
ஈதென் றறியும் அறிவை அறிந்தபின்
ஈதென் றறியும் இயல்புடை யோனே. உங

2210 உயிர்க்குயி ராகி யுருவா யருவாய்
அயற்புணர் வாகி யறிவாய்ச் செறிவாய்
நயப்புறு சத்தியும் நாதன் உலகாதி
இயற்பின்றி யெல்லாம் இருண்மூட மாமே. உச

2211 சத்தி யிராகத்திற் சூனல் லுயிராகி
ஒத்துறு பாச மலமைம்தோ டாறுறு
தத்துவ பேதஞ் சமைத்துக் கருவியும்
வைத்தனன் ஈசன் மலமறு மாறே. உரு

2212 சாக்கிரா தீதத்தி லாணவந் தன்னுண்மை
சாக்கிரா தீதந் துரியத்திற் சூனுறச்
சாக்கிரா தீதத்தில் ஆணவந் தான்விடாச்
சாக்கிரா தீதம் பரனுண்மை தங்குமே. உசு

2213 மலக்கலப் பாலே மறைந்தது சத்தி
மலக்கலப் பாலே மறைந்தது ஞானம்
மலக்கலப் பாலே மறைந்தனன் தாணு
மலக்கலப் பற்சூன் மதியொளி யாமே. உஎ

2214 திகைக்கின்ற சிந்தைதுள் சிங்கங்கள் மூன்று
நகைக்கின்ற நெஞ்சுள் நரிக்குட்டி நான்கு

வகைக்கின்ற நெஞ்சினுள் ஆணைக்கன் றைந்து
பகைக்கின்ற நெஞ்சுக்குப் பாவிரண் டாமே. உஅ

2215 கதறு பதினெட்டுக் கண்களும் போகச்
சிதறி எழுந்திடுஞ் சிந்தையை நீரும்
விதறு படாமுன்னம் மெய்வழி நின்மூல்
அதிர வருவதோர் ஆணையு மாமே. உக

2216 ஈனவகத் தேயொரு காலந்தும் வீடக்
கனவகத் தேயுட் கரணங்க ளோடு
மூனவகத் தேநின் றுதறியுட் புக்கு
நினவகத் தின்றிச் சுழுத்தினின் றூனே. கo

2217 நின்றவன் ஆசான் நிகழ்துரி யத்தனுய்
ஒன்றி யுலகின் நியமாதிக ளுற்றுச்
சென்று துரியாதீ தத்தே சிலகாலம்
நின்று பரனுப் நின்மல னாமே. கக

2218 ஆனவவ் வீசன் அதீதத்தில் வித்தையாத்
தானுல குண்டு சதாசிவ மாசத்தி
மேனிகள் ஐந்தும்போய் விட்டுச் சிவமாகி
மோன மடைந்தொளி மூலத்த னாமே. கஉ

2219 மண்டல மூன்றினுள் மாயோன் னுடலினைக்
கண்டுகொண் டுள்ளே கருதிக் கழிகின்ற
விண்டலர் தாமரை மேலொன் றுங் கீழாகத்
தண்டமுந் தாண யகத்தினுள் ளாமே. கங

2220 போதறி யாது புலம்பின புள்ளின
மாதறி யாவகை நின்று மயங்கின
வேதறி யாவணம் நின்றனன் எம்மிறை
சூதறி வாருச்சி சூடினின் றூரே. கச

2221 கருத்தறிந் தோன்பது கண்டமும் ஆங்கே
பொருத்தறிந் தோன்புவ னுபதி நாடித்
திருத்தறிந் தேன்மிகு தேவர் பிரானை
வருத்தறிந் தேன்மன மன்னினின் றூனே. கஞ

2222 ஆன விளக்கொளி தூண்டு மவனின்ன
தான் விளக்கொளி பாழ்மூல சாதனத்
தான விதிமூலத் தானத்தில் அவ்விளக்
கேனை மதிமண்ட லங்கொண் டெரியுமே. ௹௳

2223 உண்ணுதம் ஐவர்க்கு மண்டை யொதுங்கிய
விண்ணுட நின்ற வெளியை வினவுறில்
அண்ணுந்து பார்த்தவர் கூடிய சந்தியிற்
கண்ணுடி காணுங் கருத்தறி தன்றே. ௹௴

2224 அறியாத வற்றை அறிவான் அறிவான்
அறிவான் அறியாதான் தன்னறி வாகான்
அறியா தவத்தை அறிவானைக் கூட்டி
அறியா தறிவானை யாரறி வாரே. ௹௵

2225 துரிய தரிசனஞ் சொற்றீரும் வியோமமம்
அரியன தூடணை மந்நன வாதி
பெரியன கால பரம்பிற் றுரியம்
அரிய அதீதம் அதீதத்த தாமே. ௹௶

2226 மாயையிற் சேதனன் மன்னும் பகுதியோன்
மாயையின் மற்றது நீவுதன் மாயையாங்
கேவல மாகுஞ் சகலமா யோனியுள்
தோயும் மனிதர் துரியத்துட் சீவனே. ௺

174. கேவல் சகல் சுத்தம்

2227 தன்னை யறிசுத்தன் றற்கேவ லன்றுணும்
பின்ன முறநின்ற பேத சகலனும்
மன்னிய சத்தசத் துச்சத சத்துடன்
துன்னுவர் தத்தந் தொழிற்கள வாகவே. க

2228 தானே தனக்குப் பகைவனும் நட்டானுந்
தானே தனக்கு மறுமையும் இம்மையுந்
தானே தான்செய்த வினைப்பயன் துய்ப்பானுந்
தானே தனக்குத் தலைவனு மாமே. உ

2229 ஆமுயிர் கேவல மாமாயை இன்னடங்
காமுயிர் மாயை எறிப்ப அறிவுற்றுக்
காமிய மாயேய முங்கல வாநிற்பத்
தாமுறு பாசஞ் சகலத்த தாமே. ௫

2230 சகல அவத்தையிற் சார்ந்தோர் சகலர்
புகலு மலமூ வகையும் புணர்ந்தோர்
நிகரின் மலரோன்மா னீடுபல் தேவர்கள்
நிகழ்நரர் கீட மந்தமு மாமே. ச

2231 தாவிய மாயையில் தங்கும் பிரளய
மேவிய மற்ற துடம்பாய்மிக் குள்ளன
ஓவல் இலக்கணர் ஒன்றிய சீகண்டர்
ஆவயி னூற்றெட் டருத்திர ராமே. ஞ

2232 ஆகின்ற கேவலத் தாணவத் தானவ
ராகின்ற வித்தேச ராமனங் தாதிய
ராகின்ற எண்மர் எழுகோடி மந்திர
ராகின்ற ஈசர் அதிகரு மாமே. சு

2233 ஆமவ ரிற்சிவ னுரருள் பெற்றுளோர்
போமலந் தன்னுற் புகழ்விந்து நாதம்விட்
டோமய மாகி யொடுங்கலி னின்மலந்
தோமறு சுத்தா வவத்தைத் தொழிலே. எ

2234 ஓரினு மூவகை நால்வகை யும்முள
தேரி லிவைகே வலமாயை சேரிச்சை
சாரிய லாயவை தாமே தணப்பவை
வாரிவைத் தீசன் மலமறுத் தானே. அ

2235 பொய்யான போதாந்த மாமூறும் விட்டகன்
றெய்யாமை நீங்கவே எய்தவன் தாளுகி
மெய்யாஞ் சராசர மாய்வெளி தன்னுட்புக்
கெய்தாம லெய்துஞ்சுத் தாவத்தை யென்பதே. கூ

2236 அனுதி பசுவியாத்தி யாகு மிவனை
அனுதியில் வந்த மலம்ஐந்தால் ஆட்டி

அனுதியிற் கேவல மச்சக லத்திட்டு
அனுதி பிறப்பறச் சுத்தத்து ளாகுமே. ௯0

2237 அந்தரஞ் சுத்தாவத் தைதே வலத்தாறு
தந்தோர்தஞ் சுத்தகே வலத்தற்ற தற்பரத்
தின்பால் துரியத் திடையே யறிவுறத்
தன்பால் தனையறி தத்துவந் தானே. ௯௪

2238 ஐயைந் தொடுங்கும் ஆன்மாவில் ஆன்மாவும்
மெய்கண்டு சுத்த அவத்தையில் வீடாகுந்
துய்யவவ் வித்தை மூதன்மூன் றுந் தொல்சத்தி
ஐய சிவஞ்சித்தி யாந்தோற்ற மவ்வாறே. ௯௫

2239 ஐயைந்து மான்மாவில் ஆறே டடங்கிடு
மெய்கண்ட மேன்மூன்று மேவுமெய் யோகத்தில்
கைகண்ட சத்தி சிவபாகத் தேகாண
எய்யும் படியடங் குங்காலேழ் எய்தியே. ௯௬

2240 ஆணவத் தாரொான் றறியாத கேவலர்
பேணிய மாயைப் பிரளயா கலராகுங்
காணும் உருவினர் காணுமை காண்பவே
பூணுஞ் சகலர்முப் பாசமும் புக்கோரே. ௯௭

2241 ஆணவ மாகும் விஞ்ஞான கலருக்குப்
பேணிய மாயை பிரளயா கலருக்கே
ஆணவ மாயையுங் கன்ம மூன்றுமே
காணுஞ் சகலர்க்குக் காட்டு மலங்களே. ௯௮

2242 கேவலந் தன்னிற் கிளர்ந்தவிஞ் ஞாகலர்
கேவலந் தன்னிற் கிளர்விந்து சத்தியால்
ஆவயிற் கேவலத் தச்சக லத்தையும்
மேவிய மந்திர மாமாயை மெய்ம்மையே. ௯௯

2243 மாயையின் மன்னும் பிரளயா கலர்வந்து
மாயையுந் தோன்ற வகைநிற்க ஆணவ
மாய சகலத்துக் காமிய மாமாயை
ஏயமன் னாற்றெட் டருத்திரர் என்பவே. ௧00

2244 மும்மலங் கூடி முயங்கி மயங்குவோர்
அம்மெய்ச் சகலத்தர் தேவர் சுரர்நரர்
மெய்ம்மையில் வேதா விரிமிகு கீடாந்தத்
தம்முறை யோனிபுக் கார்க்குஞ் சகலரே. கஅ

2245 சுத்த அவத்தையில் தோய்ந்தவர் மும்மலச்
சத்தசத் தோடத் தனித்தனி பாசமும்
மத்த இருள்சிவ ணன கதிராலே
தொத்தற விட்டிடச் சுத்தரா வார்களே. கக

2246 தற்கே வலம்முத்தி தானே தனிமையாம்
பிற்பாற் சகலங் கலாதிப் பிறிவதாஞ்
சொற்பாற் புரிசுத்த கேவலஞ் சாக்கிரந்
தற்பாற் புரிவது தற்சுத்த மாமே. உ0

2247 அறிவின்றி முத்தன் அராகாதி சேரான்
குறியொன்றி லாநித்தன் கூடான் கலாதி
செறியுஞ் செயலிலான் றினங்கற்ற வல்லோன்
கிறியன் மலவியாபி கேவலந் தானே. உக

2248 விந்துவும் மாயையும் மேவுங் கிரியையுஞ்
சந்தத ஞான பரையுந் தனுச்சத்தி
விந்துவின் மெய்ஞ்ஞான மேவும் பிரளயர்
வந்த சகலசுத் தான்மாக்கள் வையத்தே. உஉ

2249 கேவல மாதியிற் பேதங் கிளக்குறிற்
கேவல மூன்றுங் கிளருஞ் சகலத்துள்
ஆவயின் மூன்று மதிசுத்த மூடவே
ஓவலில் லாவொன்பா ணுற்றுணர் வோர்கட்கே. உங

2250 கேவலத்திற் கேவலம் அதீதா தீதங்
கேவலத் திற்சக லங்கள் வயிந்தவங்
கேவலத் திற்சுத்தங் கேடில்விஞ் ஞாகலர்க்
காவயி னுதன் அருண்மூர்த்தி தானே. உச

2251 சகலத்திற் கேவலஞ் சாக்கிரா தீதஞ்
சகல சகலமே சாக்கிர சாக்கிரஞ்

சகலத்திற் சுத்தமே தற்பரா வத்தை
சகலத்தில் இம்மூன்று தன்மையு மாமே. உருு

2252 சுத்தத்திற் சுத்தமே தொல்சிவ மாகுதல்
சுத்தத்திற் கேவலந் தொல்லுப சாந்தமாஞ்
சுத்த சகலந் துரிய விலாசமாஞ்
சுத்தத்தில் இம்மூன்றுஞ் சொல்லலு மாமே. உசு

2253 சாக்கிர சாக்கிரந் தன்னிற் கனவொடுஞ்
சாக்கிரந் தன்னிற் சுழுத்தி துரியமே
சாக்கிரா தீதந் தனிற்சுகா னந்தமே
ஆக்கு மறையாதி ஐம்மல பாசமே. உஎ

2254 சாக்கிரா தீதத்திற் ரூனறு மாணவஞ்
சாக்கிரா தீதம் பராவத்தை தங்காது
ஆக்கு பரோபாதி யாஉப சாந்தத்தை
நோக்கு மலங்குண நோக்குத லாகுமே. உஅ

2255 பெத்தமும் முத்தியும் பேணுந் துரியமுஞ்
சுத்த வதீதமுந் தோன்றுமற் ரூனைனும்
அத்தன் அருளென் றருளால் அறிந்தபின்
சித்தமும் இல்லை செயலில்லை தானே. உக

2256 எய்திய பெத்தமும் முத்தமும் என்பன
எய்தும் அரனரு ளேவினை யாட்டோ
டெய்தி டுயிர்சுத்தத் திடுநெறி என்னவே
எய்தும் உயிரிறை பாலறி வாமே. உo

2257 ஐம்மலத் தாரு மதித்த சகலத்தர்
ஐம்மலத் தாரு மருவினைப் பாசத்தர்
ஐம்மலத் தார்சுவர்க் கந்நெறி யாள்பவர்
ஐம்மலத் தாரர ணர்க்கறி வோரே. உக

2258 கருவி லதீதங் கலப்பிக்கு மாயை
அரிய துரிய மதிலுண்ணும் ஆசையும்
உரிய சுழுனை முதலெட்டுஞ் சூக்கத்
தரிய கணத்தூலம் அந்நன வாமே. உஉ

2259 ஆணவ மாகும் அதீதமேன் மாயையும்
பூணுந் துரியஞ் சுழுத்திபொய்க் காமியம்
பேணுங் கனவும் மாமாயை திரோதாயி
காணு நனவில் மலக்கலப் பாகுமே. ௧௬

2260 அரன்முத லாக அறிவோன் அதீதத்தன்
அரன்முத லாமாயை தங்கிச் சுழுனை
கருமம் உணர்ந்து மாமாயைக் கைக்கொண்டோர்
அருளு மறைவார் சகலத்துற் றுரே. ௧௭

2261 உருவுற்றுப் போகமே போக்கியந் துற்று
மருவுற்றுப் பூதம னுதியான் மன்னி
வருமச் செயல்பற்றிச் சத்தாதி வைகிக்
கருவுற் றிடுஞ்சீவன் காணுஞ் சகலத்தே. ௧௮

2262 இருவினை யொத்திட இன்னருட் சத்தி
மருவிட ஞானத்தில் ஆதன மன்னிக்
குருவினைக் கொண்டருட் சத்திமுன் கூட்டிப்
பெருமல நீங்கிப் பிறவாமை சுத்தமே. ௧௯

2263 ஆறுறு மாறதின் ஐயைந் தவத்தையோ
டூறு மதீதத் துரியத் திவனெய்தப்
பேறுன ஐவரும் போம்பிர காசத்து
நீறுர் பரஞ்சிவ மாதேய மாகுமே. ௨௦

2264 தன்னை யறியா துடலெமுன் தானென்றுன்
தன்னைமுன் கண்டான் துரியந் தனைக்கண்டான்
உன்னுந் துரியமும் ஈசனை டொன்றுக்கால்
பின்னையும் வந்து பிறந்திடுந் தானே. ௨௧

2265 சாக்கிரந் தன்னில் அதீதந் தலைப்படில்
ஆக்கிய வந்த வயிந்தவ மானந்த
நோக்கும் பிறப்பறு நோன்முத்தி சித்தியாம்
வாக்கும் மனமும் மருவல்செய் யாவே. ௨௨

2266 அப்பும் அனலும் அகலத்து ளேவரும்
அப்பும் அனலும் அகலத்து ளேவாரா
அப்பும் அனலும் அகலத்து ளேதெனில்
அப்பும் அனலுங் கலந்ததவ் வாறே. ச0

2267 அறுநான்கு சுத்தம் அதிசுத்தா சுத்தம்
உறுமேழு மாயை உடனங்தே சுத்தம்
பெறுமா றிவைமூன்றுங் கண்டத்தாற் பேதித்
துறுமாயை மாமாயை யான்மாவி னேடே. சக

2268 மாயைகைத் தாயாக மாமாயை யீன்றிட
வாய பரசிவன் தந்தையாய் நிற்கவே
ஏயும் உயிர்க்கே வலசகலத் தெய்தி
ஆய்தரு சுத்தமுந் தான்வந் தடையுமே. சஉ

175. பராவத்தை

2269 அஞ்சுங் கடந்த அணுதி பரந்தெய்வ
நெஞ்சம தாய நிமலன் பிறப்பிலி
விஞ்சும் உடலுயிர் வேறு படுத்திட
வஞ்சத் திருந்த வகையறிந் தேனே. க

2270 சத்தி பராபரஞ் சாந்தி தனிலான
சத்தி பரானந்தந் தன்னிற் சுடர்விந்து
சத்திய மாயை தனுச்சத்தி ஐந்துடன்
சத்தி பெறுமுயிர் தானங்கத் தாறுமே. உ

2271 ஆறுறுக் கப்பால் அறிவார் அறிபவர்
ஆறுறுக் கப்பால் அருளார் பெறுபவர்
ஆறுறுக் கப்பால் அறிவாம் அவர்கட்கே
ஆறுறுக் கப்பால் அரனினி தாமே. ஙு

2272 அஞ்சொடு நான்குங் கடந்த்க மேபுக்குப்
பஞ்சணி காலத்துப் பள்ளி துயில்கின்ற
விஞ்சையர் வேந்தனும் மெல்லிய லாளொடு
நஞ்சுற நாடி நயஞ்செய்யு மாறே. ச

2273 உரிய நனைத்துரி யத்தி லிவணும்
அரிய துரிய நனைவாதி மூன்றிற்
பரிய பரதுரி யத்திற் பரனுந்
திரிய வருந்துரி யத்திற் சிவமே. நி

2274 பரமாம் அதீதமே பற்றறப் பற்றப்
பரமாம் அதீதம் பயிலப் பயிலப்
பரமாம் அதீதம் பயிலாத் தபோதனர்
பரமாகார் பாசமும் பற்றென் றறுதே. கூ

2275 ஆயும்பொய்ம் மாயை யகம்புற மாய்நிற்கும்
வாயு மனமுங் கடந்த மயக்கறின்
தூய அறிவு சிவானந்த மாகிப்போய்
வேயும் பொருளாய் விளைந்தது தானே. எ

2276 துரியப் பரியில் இருந்தஅச் சீவனைப்
பெரிய வியாக்கிரத் துள்ளே புகவிட்டு
நரிகளை யோடத் துரத்திய நாதர்க்
குரிய வினைகள்நின் றோலமிட் டன்றே. அ

2277 நின்றஇச் சாக்கிர நீள்துரி யத்தினின்
மன்றனு மங்கே மணஞ்செய்ய நின்றிடும்
மன்றன் மணஞ்செய்ய மாயை மறைந்திடும்
அன்றே யிவனும் அவன்வடி வாமே. கூ

2278 விரிந்திடற் சாக்கிர மேவும் விளக்காய்
இருந்த விடத்திடை யீடான மாயை
பொருந்துந் துரியம் புரியிற்ற ணுகுந்
தெரிந்த துரியத்துத் தீதக லாதே. கூ

2279 உன்னை யறியா துடலுமுன் னானென்றுய்
உன்னை யறிந்து துரியத் துறநின்றுய்
தன்னை யறிந்தும் பிறவி தணவாதால்
அன்ன வியாத்தன் அமலனென் றறிதியே. கூ

2280 கருவரம் பாகிய காயந் துரியம்
இருவருங் கண்டீர் பிறப்பிறப் புற்றூர்

குருவரம் பெற்றவர் கூடிய பின்னை
இருவரு மின்றியொன் றாகின்ற தே. கஉ

2281 அணுவின் துரியத்தி லான நனவும்
அணுவகை விண்கண் ணன கனவும்
அணுவகை விற்பரா தீதஞ் சுழுத்தி
பணியிற் பரதுரி யம்பர மாமே. கஙு

2282 பரதுரி யத்து நனவும் பரந்து
விரிசக முண்ட கனவுமெய்ச் சாந்தி
உருவுறு கின்ற சுழுத்தியும் ஓவத்
தெரியுஞ் சிவதுரி யத்தனு மாமே. கச

2283 பரமா நனவின்பின் பாற்சக முண்ட
திரமார் கனவுஞ் சிறந்த சுழுத்தி
உரமாம் உபசாந்த முற்றல் துறவே
தரணுஞ் சிவதுரி யத்தனு மாமே. கரு

2284 சிவன் துரிய முதலாகச் சீரான
ஆவ சிவன்துரி யாந்தம் அவத்தைபத்
தோவும் பராநந்தி யுண்மைக்குள் வைகியே
மேவிய நாலேழ் விடுத்துநின் றானே. கசு

2285 பரஞ்சிவன் மேலாம் பரமம் பரத்திற்
பரம்பரன் மேலாம் பரநன வாக
விரிந்த கனவிடர் வீட்டுஞ் சுழுனை
உரந்தகு மாநந்தி யாமுண்மை தானே. கள

2286 சார்வாம் பரசிவஞ் சத்தி பரநாதம்
மேலாய விந்து சதாசிவ மிக்கோங்கிப்
பாலாய்ப் பிரமன் அரியம ராபதி
தேவாம் உருத்திரன் ஈசனுங் காணிலே. கஎ

2287 கலப்பறி யார்கடல் சூழுல கேழும்
உலப்பறி யாருட லோடுயிர் தன்னை
அலப்பறிக் கிங்கர சாளகி லாதார்
குறிப்பது கோல மடலது வாமே. கஙு

2288 பின்னை யறியும் பெருந்தவத் துண்மைசெய்
தன்னை யறியில் தயாபரன் எம்மிறை
முன்னை யறிவு முடிகின்ற காலமும்
என்னை யறியலுற் றின்புற்ற வாறே. ௨0

2289 பொன்னை மறைத்தது பொன்னணி பூடணம்
பொன்னின் மறைந்தது பொன்னணி பூடணம்
தன்னை மறைத்தது தன்கர ணங்களாம்
தன்னின் மறைந்தது தன்கர ணங்களே. ௨௧

2290 மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தின் மறைந்தது பார்முதற் பூதமே. ௨௨

2291 ஆறு றகன்று நமவிட் டறிவாகி
வேறுனை தானே யகாரமாய் மிக்கோங்கி
ஈறுர் பரையின் இருளற்ற தற்பரன்
பேறுர் சிவாய அடங்கும்பின் முத்தியே. ௨௩

2292 துரியத்தில் ஓரைந்துஞ் சொல்லக ராதி
விரியப் பரையின் மிகுநாத மந்தம்
புரியப் பரையின் பராவத்தா போதந்
திரியப் பரமந் துரியந் தெரியவே. ௨௪

2293 ஐந்துஞ் சகலத் தருளாற் புரிவற்றுப்
பந்திடுஞ் சுத்த அவத்தைப் பதைப்பினில்
நந்தி பராவத்தை நாடச் சுடர்முனம்
அந்தி யிருள்போலும் ஐம்மல மாறுமே. ௨௫

2294 ஐயைந்து மட்டுப் பகுதியும் மாயையும்
பொய்கண்ட மாமாயை தானும் புருடன்கண்
டெய்யும் படியாய் எவற்றுமாய் அன்றுகி
உய்யும் பராவத்தை யுள்ளுறல் சுத்தமே. ௨௬

2295 நின்றுன் அருளும் பரமுமுன் னேயமும்
ஒன்றுய் மருவும் உருவும் உபாதியுஞ்
சென்று னெனவிடுத் தாங்கிற்செல் லாமையும்
நன்றுன ஞானத்தின் நாதப் பிரானே. உ

176. முக்குண நிர்க்குணம்

2296 சாத்திக மெய்து னவெனச் சாற்றுங்கால்
வாய்த்த இராச்த மன்னுங் கனவென்ப
ஓய்த்திடுந் தாமதம் உற்ற சுழுத்தியாம்
மாய்த்திடு நிற்குண மாசில் துரியமே. க

177. அண்டாதி பேதம்

2297 பேறுபகி ரண்டம் பேதித்த அண்டம்
எறிகடல் ஏழின் மணல்அள வாகப்
பொறியொளி பொன்னணி யென்ன விளங்கிச்
செறியும்அண் டாசனத் தேவர் பிரானே. க

2298 ஆனந்த தத்துவம் அண்டா சனத்தின்மேல்
மேனிஐந் தாக வியாத்தமும் பத்தாறும்
தானந்த மில்லாத தத்துவ மானவை
ஈனமி லாஅண்டத் தெண்மடங் காமே. உ

178. பதினொராந்தானமும் அவத்தையெனக்காணல்

2299 அஞ்சில் அழுதுமோ ரேழின்கண் ஆனந்த
மூஞ்சிலோங் காரமோ ரொன்பான் பதிணென்றில்
வஞ்சக மேநின்று வைத்திடிற் காயமாங்
கிஞ்சுகச் செவ்வாய்க் கிளிமொழி கேளே. க

2300 புருட னுடனே பொருந்திய சித்தம்
அருவமொ டாறும் அதீதத் துரியம்
விரியுஞ் சுழுத்தியின் மிக்குள்ள எட்டும்
அரிய பதிணென்று மாமவ்வ வத்தையே. உ

2301 காட்டும் பதிணென்று ங்கைகலந் தாலுடல்
காட்டி யழுத்திடின் கந்தியல் லாவில்லை
ஆட்டஞ்செய் யாத வதுவிதி யேநினை
ஈட்டு மதுதிடம் எண்ணலு மாமே. க

179. கல்வு செல்வு

2302 கேவலந் தன்னிற் கலவச் சகலத்தின்
மேவுஞ் செலவு விடவரு நீக்கத்துப்
பாவுந் தனைக்காண்டன் மூன்றும் படர்வற்ற
தீதறு சாக்கிரா தீதத்திற் சுத்தமே. க

2303 வெல்லும் அளவில் விடுமின் வெகுளியைச்
செல்லும் அளவுஞ் செலுத்துமின் சிந்தனை
அல்லும் பகலும் அருளுடன் தூங்கிறற்
கல்லும் பிளந்து கடுவெளி யாமே. உ

180. நின்மல்லாவத்தை

2304 ஊனமைக் கிணற்றகத் துள்ளே யுறைவதோர்
ஆனையின் உள்ளே யழுவைகள் ஐந்துள
வாய்மையி னுள்ளே வழுவா தொடுங்குமேல்
ஆனையின் மேலுமோ ராயிரத் தாண்டே. க

2305 காலங்கி நீர்பூக் கலந்தஆ காயம்
மாலங்கி யீசன் பிரமன் சதாசிவன்
மேலஞ்சும் ஓடி விரவவல் லார்கட்குக்
காலனும் இல்லை கருத்தில்லை தானே. உ

2306 ஆன்மாவே மைந்த னுயினன் என்பது
தான்மா மறையறை தன்மை யறிகிலர்
ஆன்மாவே மைந்தன் அரனுக் கிவனென்றல்
ஆன்மாவும் இல்லையால் ஐயைந்தும் இல்லையே. ங

2307 உதய மழுங்கல் ஒடுங்கலிம் மூன்றின்
கதிசாக் கிரங்கன வாதி சுழுத்தி
பதிதரு சேதனன் பற்றுந் துரியத்
ததிசுப னுயனந் தானந்தி யாகுமே. ச

2308 எல்லாந்தன் னுட்டுக யாவுளுந் தாணுகி
நல்லாந் துரியம் புரிந்தக்கால் நல்லுயிர்
பொல்லாத வாறுறுட் போகாது போதமாய்ச்
செல்லாச் சிவகதி சென்றெய்து மன்றே. ரு

2309 காய்ந்த இரும்பு கனலி யகன்றுளும்
வாய்ந்த கனலென வாதனை நின்றுற்போல்
வெய்ந்த காரணம் இறந்த துரியத்துத்
தோய்ந்த கருமத் துரிசக லாதே. சு

2310 ஆன மறையாதி யாமுரு நந்திவந்
தேனை யருள்செய் தெரிநனு வத்தையில்
ஆன வகையை விடுமடைத் தாய்விட
ஆன மலாதீதம் அப்பரந் தானே. எ

2311 சுத்த அதீதஞ் சகலத்தில் தோய்வுறில்
அத்தன் அருள்நீங்கா வாங்கணிற் றுணுகச்
சித்த சுகத்தைத் தீண்டாச் சமாதிசெய்
தத்தனே டொன்றற் கருள்முத லாமே. அ

2312 வேறுசெய் தானிரு பாதியின் மெய்த்தொகை
வேறுசெய் தானென்னை எங்கணும் விட்டுய்த்தான்
வேறுசெய் யாவருட் கேவலத் தேவிட்டு
வேறுசெய் யாவத்தன் மேவினின் றானே. கூ

2313 கறங்கோலை கொள்ளிவட் டங்கட வில்திரை
நிறஞ்சேர் ததிமத்தின் மலத்தே நின்றங்
கறங்காண் சுவர்க்க நரகம் புவிசேர்ந்
திறங்கா வுயிரரு ளாணிவை நீங்குமே. கூ

2314 தானே சிவமான தன்மை தலைப்பட
ஆன மலமு மப்பாச பேதமும்
மான குணமும் பரான்மா வுபாதியும்
பானுவின் முன்மதி போற்பட ராவே. கூ

2315 நெருப்புண்டு நீருண்டு வாயுவும் உண்டங்
கருக்கனுஞ் சோமனும் அங்கே அமருந்

திருத்தக்க மாலுந் திசைமுகன் தானும்
உருத்திர சோதியும் உள்ளத்து ளாரே. கஉ

2316 ஆனைகள் ஐந்தும் அடக்கி அறிவென்னும்
ஞானத் திரிமைக் கொளுவி அதனுட்புக்
கூனை யிருளற நோக்கும் ஒருவற்கு
வானக மேற வழியெளி தாமே. கஙு

2317 ஆடிய காலில் அசைக்கின்ற வாயுவுந்
தாடித் தெழுந்த தமருக ஓசையும்
பாடி யெழுகின்ற வேதா கமங்களும்
நாடியி னுள்ளாக நான்கண்ட வாறே. கச

2318 முன்னை யறிவினிற் செய்த முதுதவம்
பின்னை யறிவினைப் பெற்றால் அறியலாந்
தன்னை யறிவ தறிவாமஃ தன்றிப்
பின்னை யறிவது பேயறி வாகுமே. கரு

2319 செயலற் றிருக்கச் சிவானந்த மாகுஞ்
செயலற் றிருப்பார் சிவயோகந் தேடார்
செயலற் றிருப்பார் செகத்தொடுங் கூடார்
செயலற் றிருப்பார்க்கே செய்தியுண் டாமே. கசு

2320 தானவ னுகுஞ் சமாதிகை கூடினால்
ஆன மலமறும் அப்பசுத் தன்மைபோம்
ஈனமில் காயம் இருக்கும் இருநிலத்
தூனங்கள் எட்டு மொழித்தொன்று வோர்கட்கே. கஎ

2321 தொலையா அரனடி தோன்றுமஞ் சத்தி
தொலையா இருளொளி தோற்ற அணுவுந்
தொலையாத் தொழின்ஞானந் தொன்மையில் நண்ணித்
தொலையாத பெத்தமுத் திக்கிடை தோயுமே. கஅ

2322 தோன்றிய பெத்தமும் முத்தியுஞ் சூழ்சத்தி
மான்றுந் தெருண்டு முயிர்பெறு மற்றவை
தான்தரு ஞானந்தன் சத்திக்குச் சாதனை
மூன்றலில் லாவுள் ளொளிக்கொளி யாமே. கஙு

2323 அறிகின்றி லாதான ஐயேழும் ஒன்றும்
அறிகின்ற என்னை யறியா திருந்தேதன்
அறிகின்றுய் நீயென் றருள்செய்தான் நந்தி
அறிகின்ற நானென் றறிந்துகொண் டேனே. ௨0

2324 தானவ னுகிய ஞானத் தலைவனை
வானவ ராதியை மாமணிச் சோதியை
ஈனமின் ஞானத் தின்னருட் சத்தியை
ஊனமி லாள்தன்னை யூனிடைக் கண்டதே. ௨௧

2325 ஒளியும் இருளும் பரையும் பரையுள்
அளிய தெனலாகும் ஆன்மாவை யன்றி
அளியும் அருளுந் தெருளுங் கடந்து
தெளிய அருளே சிவானந்த மாமே. ௨௨

2326 ஆனந்த மாகும் அனாதி அருட்சத்தியிற்
ஞானந்த மாமுயிர் தானே சமாதிசெய்
தானந்த மாயுணர் வாயுள் ஞணர்வுறிற்
கோனந்தம் வாய்க்கு மகாவாக்கிய மாமே. ௨௩

2327 அறிவிக்க வேண்டாம் அறிவற் றயர்வோர்க்கும்
அறிவிக்க வேண்டாம் அறிவிற் செறிவோர்க்கும்
அறிவுற் றறியாமை யெய்திநிற் போர்க்கே
அறிவிக்கத் தம்மறி வாரறி வோரே. ௨௪

2328 சத்தும் அசத்துஞ் சதசத்துந் தான்கூடிச்
சித்தும் அசித்துஞ் சிவசித்த தாய்நிற்குஞ்
சுத்தம் அசுத்தந் தொடங்காத் துரியத்துச்
சுத்தரா மூன்றுடன் சொல்லற் றவர்களே. ௨௫

2329 தானே யறியான் அறிவிலோன் தானல்லன்
தானே யறிவான் அறிவு சதசத்தென்
ஞனுல் இரண்டும் அனாதி ளாய்நிற்கத்
தானே யறிந்து சிவத்துடன் தங்குமே. ௨௬

2330 தத்துவ ஞானந் தலைப்பட் டவர்கட்கே
தத்துவ ஞானந் தலைப்பட லாய்நிற்குந்

தத்துவ ஞானத்துத் தானவ ணுகவே
தத்துவ ஞாணனந் தந்தான் தொடங்குமே. உள

2331 தன்னை யறிந்து சிவனுடன் தாணுக
மன்னு மலங்குணம் மாளும் பிறப்பறும்
பின்னது சன்முத்தி சன்மார்க்கப் பேரொளி
நன்னது ஞானத்து முத்திரை நண்ணுமே. உஅ

2332 ஞானந்தன் மேனி கிரியை நடுவங்கந்
தானுறும் இச்சை உயிராகத் தற்பரன்
மேனிகொண் டைங்கரு மத்துவித் தாதலான்
மோனிகள் ஞானத்து முத்திரைபெற் றார்களே. உக

2333 உயிர்க்கறி வண்மை யுபிரிக்சை மானம்
உயிர்க்குக் கிரியை யுபிர்மாயை சூக்கம்
உயிர்க்கிவை யூட்டுவோன் ஊட்டு மவனே
உயிர்ச்செய லன்றியவ் வள்ளத்து ளானே. உ0

2334 தொழிலிச்சை ஞானங்கள் தொல்சிவ சீவர்
கழிவற்ற மாமாயை மாயையி ணுகும்
பழியற்ற காரண காரியம் பாழ்விட்
டழிவற்ற சாந்தாதீ தன்சிவ ணுமே. உக

2335 இல்லதும் உள்ளதும் இயாவையுந் தாணுகி
இல்லதும் உள்ளது மாயன்றும் அண்ணலெச்
சொல்லது சொல்லிடில் தூராதி தூரமென்
றெல்லை யுணர்ந்தால் உயிர்க்குயி ராகுமே. உஉ

2336 உயிரிச்சை யூட்டி யுழிதருஞ் சத்தி
உயிரிச்சை வாட்டி யொழித்திடு ஞானம்
உயிரிச்சை யூட்டி யுடனுற லாலே
உயிரிச்சை வாட்டி யுயர்பதந் சேருமே. உங

2337 சேருஞ் சிவமாணுர் ஐம்மலந் தீர்ந்தவர்
ஓரொன்றி லாரைம் மலவிருள் உற்றவர்
பாரின்கண் விண்ணர கம்புகும் பான்மையர்
ஆருங்கண் டோரார் அவையருள் என்றே. உச

2338 எய்தினர் செய்பு மிருமாயா சத்தியின்
எய்தினர் செய்யும் இருஞான சத்தியின்
எய்தினர் செய்யும் இருஞால சத்தியின்
எய்தினர் செய்யும் இறையருள் தானே. ஈ0ரு

2339 திருந்தனர் விட்டார் திருவி னரகந்
திருந்தனர் விட்டார் திருவார் சுவர்க்கந்
திருந்தனர் விட்டார் செறிமலக் கூட்டந்
திருந்தனர் விட்டார் சிவமா யவமே. ஈ0சு

2340 அவமுஞ் சிவமும் அறியார் அறியார்
அவமுஞ் சிவமும் அறிவார் அறிவார்
அவமுஞ் சிவமும் அருளால் அறிந்தால்
அவமுஞ் சிவமும் அவனரு ளாமே. ஈ0எ

2341 அருளான சத்தி யனல்வெம்மை போலப்
பொருளவ ணைகத்தான் போதம் புணருந்
திருளொளி யாய்மீண்டு மும்மல மாகுந்
திருவரு ளானந்தி செம்பொரு ளாமே. ஈ0அ

2342 ஆதித்தன் தோன்ற வரும்பது மாதிகள்
பேதித்த தவ்வினை யாற்செயல் சேதிப்ப
ஆதித்தன் றன்கதி ராலவை சேட்டிப்பப்
பேதித்துப் பேதியா வாறருட் பேதமே. ஈ0ஙு

2343 பேதம் அபேதம் பிறழ்பேதா பேதமும்
போதம் புணர்போதம் போதமும் நாதமும்
நாத முடனுத நாதாதி நாதமும்
ஆதன் அருளின் அருளிச்சை யாமே. ச0

2344 மேவிய பொய்க்கரி யாட்டும் வினையெனப்
பாவிய பூதங்கொண் டாட்டிப் படைப்பாதி
பூவியல் கூட்டத்தாற் போதம் புரிந்தருள்
ஆவியை நாட்டும் அரனரு ளாமே. சக

2345 ஆரு றகன்று தனையறிந் தானவன்
ஈரு கியாவினும் இயாவுந் தனிலெய்த

வேறுப் வெளிபுக்கு வீடுற்று னம்மருள்
தேறுத் தெளிவுற்றுத் தீண்டச் சிவமாமே. சஉ

2346 தீண்டற் கரிய திருவடி நேயத்தை
மீண்டுற் றருளால் விதிவழி யேசென்று
தூண்டிச் சிவஞான மாவினைத் தானேறித்
தாண்டிச் சிவனுடன் சாரலு மாமே. சக

2347 சார்ந்தவர் சாரணர் சித்தர் சமாதியர்
சார்ந்தவர் மெய்ஞ்ஞான தத்துவ சாத்தியர்
சார்ந்தவர் நேயந் தலைப்பட்ட ஆனந்தர்
சார்ந்தவர் சுத்த அருட்டன்மை யாரே. சச

2348 தானென் றவனென் றிரண்டென்பர் தத்துவந்
தானென் றவனென் றிரண்டற்ற தன்மையைத்
தானென் றிரண்டுன்னுர் கேவலத் தானவர்
தானின்றித் தானுகத் தத்துவ சுத்தமே. சஎ

2349 தன்னினில் தன்னை யறியுந் தலைமகன்
தன்னினில் தன்னை யறியத் தலைப்படுந்
தன்னினில் தன்னைச் சார்கில னுகில்
தன்னினில் தன்னையுஞ் சார்தற் கரியவே. சஅ

2350 அறியகி லேனென் றாற்றுதே நீயும்
நெறிவழி யேசென்று நேர்பட்ட பின்னை
இருசுட ராகி இயற்றவல் லானும்
ஒருசுட ராவந்தென் உள்ளத்துள் ளாமே. சன

2351 மண்ணென்று தான்பல நற்கல னுயிடும்
உண்ணின்ற யோனிகட் கெல்லாம் ஒருவனே
கண்ணென்று தான்பல காணுங் தனைக்காண
அண்ணலும் அவ்வண்ண மாகுகின் றனே. சஆ

2352 ஓம்புகின் றனுல கேழையும் உள்நின்று
கூம்புகின் றார்குணத் தின்னெடுங் கூறுவர்
தேம்புகின் றார்சிவஞ் சிந்தைசெய் யாதவர்
கூம்பகில் லார்வந்து கொள்ளலு மாமே. சகூ

2353 குறியறி யார்கள் குறிகாண மாட்டார்
குறியறி யார்கடங் கூடல் பெரிது
குறியறி யாவகை கூடுமின் கூடி
அறிவறி யாவிருந் தன்னழ மாமே. நூ

2354 ஊனே வுயிரோ வுறுகின்ற தேதின்பம்
வானோர் தலைவி மயக்கத் துறநிற்கத்
தானே பெரிதறி வோமென்னு மானுடர்
தானே பிறப்போ டிறப்பறி யாரே. நூக

181. அறிவுதயம்

2355 தன்னை யறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை யறியாமல் தானே கெடுகின்றான்
தன்னை யறியும் அறிவை அறிந்தபின்
தன்னையே யர்ச்சிக்கத் தானிருந் தானே. க

2356 அங்கே யடற்பெருந் தேவரெல் லாந்தொழச்
சிங்கா சனத்தே சிவனிருந் தானென்று
சங்கார் வளையுஞ் சிலம்புஞ் சரிலெனப்
பொங்கார் குழலியும் போற்றினன் றாளே. உ

2357 அறிவு வடிவென் றறியாத என்னை
அறிவு வடிவென் றருள்செய்தான் நந்தி
அறிவு வடிவென் றருளால் அறிந்தே
அறிவு வடிவென் றறிந்திருந் தேனே. ங

2358 அறிவுக் கழிவில்லை யாக்கமும் இல்லை
அறிவுக் கறிவல்ல தாதாரம் இல்லை
அறிவே யறிவை யறிகின்ற தென்றிட்
டறைகின் றனமறை யீறுகள் தாமே. ச

2359 ஆயு மலரின் அணிமலர் தன்மேலே
பாய இதழ்கள் பதிணறும் அங்குள
தூய அறிவு சிவானந்த மாகியே
போய அறிவாய்ப் புணர்ந்திருந் தானே. ஞ

2360 மன்னிநின் ரூரிடை வந்தருண் மாயத்து
முன்னிநின் ரூண மொழிந்தேதன் முதல்வனும்
பொன்னின்வந் தாரேர் புகழ்திரு மேனியைப்
பின்னிநின் றேறனீ பெரியையென் ரூனே. சூ

2361 அறிவறி வாக அறிந்தன்பு செய்மின்
அறிவறி வாக அறியுமிவ் வண்ணம்
அறிவறி வாக அணிமாதி சித்தி
அறிவறி வாக அறிந்தனன் நந்தியே. எ

2362 அறிவறி வென்றங் காற்றும் உலகம்
அறிவறி யாமை யாரும் அறியார்
அறிவறி யாமை கடந்தறி வாளல்
அறிவறி யாமை யழகிய வாறே. அ

2363 அறிவறி யாமையை நீவி யவனே
பொறிவா யொழிந்தெங்குந் தானன போது
அறிவா யவற்றினுள் தாண யறிவின்
செறிவாகி நின்றவன் சீவனு மாமே. க

2364 அறிவுடை யார்நெஞ் சகலிட மாவ
தறிவுடை யார்நெஞ் சருந்தவ மாவ
தறிவுடை யார்நெஞ்சொ டாதிப் பிரானும்
அறிவுடை யார்நெஞ்சத் தங்குநின் ரூனே. கo

2365 மாயனு மாகி மலரோன் இறையுமாய்க்
காயநன் ணட்டுக் கருமூத லானவன்
சேயன் அணியன் திதத்திக்குந் தீங்கரும்
பாயமு தாகிநின் றண்ணிக்கின் ரூனே. கக

2366 என்னை யறிந்திலேன் இத்தனை காலமும்
என்னை யறிந்தபின் ஏதும் அறிந்திலேன்
என்னை யறிந்திட் டிருத்தலுங் கைவிடா
தென்னையிட் டென்னை உசாவுகின் ரூனே. கஉ

2367 மாய விளக்கது நின்று மறைந்திடுந்
தூய விளக்கது நின்று சுடர்விடுங்
காய விளக்கது நின்று கனன்றிடுஞ்
சேய வினைக்கினைத் தேடுகின் றேனே. கஙு

2368 தேடுகின் றேன்திசை யெட்டோ டிரண்டையும்
நாடுகின் றேனல மேயுடை யானடி
பாடுகின் றேன்பர மேதுணை யாமெனக்
கூடுகின் றேன்குறை யாமனத் தாலே. கச

2369 முன்னை முதல்வினை யாட்டத்து முன்வந்தோர்
பின்னைப் பெருமலம் வந்தவர் போர்த்திட்டுத்
தன்னைத் தெரிந்துதன் பண்டைத் தலைவன்தாள்
மன்னிச் சிவமாக வாரா பிறப்பே. கஞ

182. ஆறந்தம்

2370 வேதத்தின் அந்தமும் மிக்கசித் தாந்தமும்
நாதத்தின் அந்தமும் நற்போத அந்தமும்
ஓதத் தகுமெட் டியோகாந்த அந்தமும்
ஆதிக்க லாந்தமும் ஆறந்த மாமே. க

2371 அந்தமோ ராறும் அறிவார் அதிசுத்தர்
அந்தமோ ராறும் அறிவார் அமலத்தர்
அந்தமோ ராறும் அறியார் அவர்தமக்
கந்தமோ டாதி அறியவொண் ணாதே. உ

2372 தானன வேதாந்தந் தானென்னுஞ் சித்தாந்த
மானுத் துரியத் தணுவன் றனைக்கண்டு
தேனர் பராபரஞ் சேர்சிவ யோகமாய்
ஆனு மலமற் றருளுஞ்சித் தியாதலே. ஙு

2373 நித்தம் பராவே டுயிருற்று நீள்மனஞ்
சுத்த முதல்ஐந்துந் தத்துவத் தால்நீங்கிச்
சுத்த மசுத்தந் தொடாரா வகைநினைந்
தத்தன் பரன்பால் அடைதல்சித் தாந்தமே. ச

2374 மேவும் பிரமனே விண்டு உருத்திரன்
மேவுசெய் யீசன் சதாசிவன் மிக்கப்பால்
மேவும் பரவிந்து நாதம் விடாவாறு
றுவும் பொழுதணு வொன்றுள தாமே. ஙு

2375 உள்ள வுயிராறு தாகும் உபாதியைத்
தெள்ளி யகன்றுநா தாந்தத்தைச் செற்றுமேல்
உள்ள இருள்நீங்க வோருணர் வாகுமேல்
எள்ளலின் நாதாந்தத் தெய்திடும் போதமே. கூ

2376 தேடும் இயம நியமாதி சென்றகன்
றாடுஞ் சமாதியில் உற்றுப் படர்சிவன்
பாடுறச் சீவன் பரமாகப் பற்றறக்
கூடும் உபசாந்தம் யோகாந்தக் கொள்கையே. எ

2377 கொள்கையி லான கலாந்தங் குறிக்கொள்ளில்
விள்கையி லான நிவிர்த்தாதி மேதாதிக்
குள்ளன வாம்விந்து வுள்ளே யொடுங்கலுங்
தெள்ளி யதனைத் தெளிதலு மாமே. அ

2378 தெளியு மிவையன்றித் தேரைங் கலிவே
றுளியுள் அமைத்துள்ள தோரவல் லார்கட்
களியவ ணுகிய மந்திரந் தந்திரந்
தெளிவுப தேச ஞானத்தொ டைந்தாமே. கூ

2379 ஆகும் அணுதி கலியா கமவேதம்
ஆகுமத் தந்திர மந்நூல் வழிநிற்றல்
ஆகு மணுதி யுடலல்லா மந்திரம்
ஆகுஞ் சிவபோ தகம்உப தேசமே. கூ

2380 தேசார் சிவமாகுந் தன்ஞானத் தின்கலை
ஆசார நேய மறையுங் கலாந்தத்துப்
பேசா வுரையுணர் வற்ற பெருந்தகை
வாசா மகோசர மாகந்தி தானே. கூக

2381 தானவ ணுகுஞ் சமாதி தலைப்படில்
ஆன கலாந்தகா தாந்தயோ காந்தமும்

ஏனைய போதாந்தம் சித்தாந்த மானது
ஞான மெனனேய ஞாதுரு வாகுமே. கஉ

2382 ஆறந்த முஞ்சென் றடங்குமந் நேயத்தே
ஆறந்த நேயம் அடங்கிடு ஞாதுரு
கூறிய ஞானக் குறியுடன் வீடவே
தேறிய மோனஞ் சிவானந்த வுண்மையே. கங

2383 உண்மைக் கலையாலே ரைந்தான் அடங்கிடும்
உண்மைக் கலாந்தம் இரண்டைடந்தோ டேழந்தம்
உண்மைக் கலையொன்றில் ஈறுய ஈதாந்தத்
துண்மைக் கலைசொல்ல வோரந்த மாமே. கச

2384 ஆவுடை யாளை யரன்வந்து கொண்டபின்
தேவுடை யான்னங்கள் சீர்ந்தி தாடந்து
வீவற வேதாந்த சித்தாந்த மேன்மையைக்
கூவி யருளிய கோனைக் கருதுமே. கரு

2385 கருது மவர்தங் கருத்தினுக் கொப்ப
அருளுரை செய்தருள் ஆகமந் தன்னில்
வருசம யப்புற மாயைமா மாயை
உருவிய வேதாந்த சித்தாந்த வுண்மையே. கசு

2386 வேதாந்தஞ் சித்தாந்தம் வேறிலா மூத்திரை
போதாந்த ஞானம் யோகாந்தம் பொதுவேய
ஈதாந்தம் ஆனந்தஞ் சீரோ தயமாகும்
மூதாந்த முத்திரை மோனத்து மூழ்கவே. கஎ

2387 வேதாந்தந் தன்னில் உபாதிமே லேழ்விட
ஈதாந்த பாசம் விடுநல்ல தொம்பதம்
மீதாந்த காரணை பாதியேழ் மெய்ப்பரன்
போதாந்த தற்பதம் போமசி என்பவே. கஅ

2388 அண்டங்கள் ஏழுங் கடந்தகன் றப்பாலும்
உண்டென்ற பேரொளிக் குள்ளா மூலவொளி
பண்டுறு நின்ற பராசத்தி யென்னவே
கொண்டவ னன்றிநின் றுன்தங்கள் கோவே. கக

2389 கோவுணர்த் துஞ்சத்தி யாலே குறிவைத்துத்
தேவுணர்த் துங்கரு மஞ்செய்தி செய்யவே
பாவனைத் தும்படைத் தர்ச்சனை பாரிப்ப
ஓவனைத் துண்டொழி யாத ஒருவனே. ௨0

2390 ஒருவனை யுன்னுர் உயிர்தனை யுன்னுர்
இருவினை யுன்னுர் இருமாயை யுன்னுர்
ஒருவனு மேயுள் ளுணர்த்திநின் றாட்டி
அருவனு மாகிய ஆதரத் தானே. ௨௧

2391 அரனன்பர் தானம தாகிச் சிவத்து
வருமவை சத்திகள் மூன்று வகுத்திட்
டிரணுறு சந்தி சேட்டிப்ப என்றுந்
திரணுறு தேதாயாச் சிவாகந்தி யாமே. ௨௨

2392 வேதாந்த தோம்பத மேவும் பசுவென்ப
நாதாந்த பாசம் விடநின்ற நன்பதி
போதாந்த தற்பதம் போயிரண் டுயிக்கியஞ்
சாதா ரணஞ்சிவ சாயுச்சிய மாமே. ௨௩

2393 சிவமாதல் வேதாந்த சித்தாந்த மாகும்
அவமவ மாகு மவ்வவ் விரண்டுஞ்
சிவமாஞ் சதாசிவன் செய்தொன்று ணுல்
நவமான வேதாந்த ஞானசித் தாந்தமே. ௨௪

2394 சித்தாந்தத் தேசீவன் முத்திசித் தித்தலாற்
சித்தாந்தத் தேநிற்போர் முத்திசித் தித்தவர்
சித்தாந்த வேதாந்தஞ் செம்பொரு ளாதலால்
சித்தாந்த வேதாந்தங் காட்டுஞ் சிவனேயே. ௨௫

2395 சிவனைப் பரமனுட் சீவனுட் காட்டும்
அவமற்ற வேதாந்த சித்தாந்த மானுன்
நவமுற் றவத்தையில் ஞானஞ் சிவமாந்
தவமிக் குணர்ந்தவர் தத்துவத் தாரே. ௨௬

2396 தத்துவ மாகுஞ் சகள வகளங்கள்
தத்துவ மாம்விந்து நாதஞ் சதாசிவந்

தத்துவ மாகுஞ் சிவன்றன் தற்பரந்
தத்துவ மாஞ்சிவ சாயுச் சியமே. உஎ

2397 வேதமோ டாகமம் மெய்யாம் இறைவன்நூல்
ஓதும் பொதுவுஞ் சிறப்புமென் றுள்ளன
நாதன் உரையவை நாடில் இரண்டந்தம்
பேதம தென்பர் பெரியோர்க் கபேதமே. உஅ

2398 பரானந்தி மன்னுஞ் சிவானந்தம் எல்லாம்
பரானந்த மேன்மூன்றும் பாழுறு னந்தம்
விராமுத்தி ரானந்த மெய்ங்கட னானந்தம்
பொராநின்ற வுள்ளமே பூரிப்பி யாமே. உக

2399 ஆகுங் கலாந்தம் இரண்டந்த நாதாந்தம்
ஆகும் பொழுதிற் கலையைந்தா மாதலில்
ஆகும் அரனேபஞ் சாந்தக னுமென்ன
ஆகு மறையா கமமொழிந் தானன்றே. உக

2400 அன்றுகு மென்னுதை வகையந்தந் தன்னை
ஒன்றுன வேதாந்த சித்தாந்த மூள்ளிட்டு
நின்று வியோகாந்த நேர்படு நேர்பட்டான்
மன்றுடி பாத மருவலு மாமே. உக

2401 அனுதி சிவனேம் மலமற்றப் பாலாய்
அனுதி யடக்கித் தனைக்கண் டானுய்த்
தனுதி மலங்கெடத் தத்துவா தீதம்
விளுவுநீர் பாலாதல் வேதாந்த வுண்மையே. உஉ

2402 உயிரைப் பரனை யுயர்சிவன் தன்னை
அயர்வற் றறிதொந் தத்தசி யதனற்
செயலற் றறிவாகி யுள்ளென் றடங்கி
அயர்வற்ற வேதாந்த சித்தாந்த மாமே. உஉ

2403 மன்னிய சோகமா மாமறை யாளர்தஞ்
சென்னிய தான சிவயோகமாம் ஈதென்ன
அன்னது சித்தாந்த மாமறை யாய்பொருள்
துன்னிய ஆகம நூலெனத் தோன்றுமே. உச

2404 மூதலாகும் வேத முழுதா கமமகப்
பதியான ஈசன் பகர்ந்த திரண்டு
முதிதான வேத முறைமுறை யாலமாக
தகிகாதி வேதாந்த சித்தாந்த மாகமே. ௬

183. பதிபசுபாசம் வேறின்மை

2405 அறிவறி வென்ற அறிவு மனுதி
அறிவுக் கறிவாம் பதியும் அனுதி
அறிவினைக் கட்டிய பாசம் அனுதி
அறிவு பதியிற் பிறப்பறுத் தானே. ௧

2406 பசுப்பல கோடி பிரமன் முதலாய்ப்
பசுக்களைக் கட்டிய பாசமூன் றுண்டு
பசுத்தன்மை நீக்கியப் பாசம் அறுத்தாற்
பசுக்கள் தலைவனைப் பற்றி விடாவே. ௨

2407 கிடக்கின்ற வாறே கிளர்பயன் மூன்று
நடக்கின்ற ஞானத்தை நாடோறு நோக்கித்
தொடக்கொன்றும் இன்றித் தொழுமின் தொழுதாற்
குடக்குன்றி விட்ட விளக்கது வாமே. ௩

2408 பாசஞ்செய் தானைப் படர்சடை நந்தியை
நேசஞ்செய் தாங்கே நினைப்பர் நினைத்தலுங்
கூசஞ்செய் துன்னிக் குறிக்கொள்வ தெவ்வண்ணம்
வாசஞ்செய் பாசத்துள் வைக்கின்ற வாறே. ௪

2409 விட்ட விடமேறு வாறுபோல் வேறுகி
விட்ட பசுபாச மெய்கண்டோன் மேவுறுன்
கட்டிய கேவலங் காணுஞ் சகலத்தைச்
சுட்டு நனவில் அதீதத்துள் தோன்றுமே. ௫

2410 நாடும் பதியுடன் நற்பசு பாசமும்
நீடுமா நித்தன் நிலையறி வாரில்லை
நீடிய நித்தம் பசுபாச நீக்கமும்
நாடிய சைவர்க்கு நந்தி யளித்ததே. ௬

2411 ஆய பதிதான் அருட்சிவ லிங்கமாம்
ஆய பசுவும் அடலே றெனநிற்கும்
ஆய பலிபீட மாகுநற் பாசமாம்
ஆய அரனிலை யாய்ந்துகொள் வார்கட்கே. எ

2412 பதிபசு பாசம் பயில்வியா நித்தம்
பதிபசு பாசம் பகர்வோர்க் காரூக்கிப்
பதிபசு பாசத்தைப் பற்றற நீக்கும்
பதிபசு பாசம் பயில நிலாவே. அ

2413 பதியும் பசுவொடு பாசமும் மேலைக்
கதியும் பசுபாச நீக்கமுங் காட்டி
மதிதந்த வானந்த மாநந்தி காணுங்
துதிதந்து வைத்தனன் சுத்தசை வத்திலே. கூ

2414 அறிந்தணு மூன்றுமே யாங்கணு மாகும்
அறிந்தணு மூன்றுமே யாங்கணு மாக
அறிந்த அணுதி வியாத்தணு மாவன்
அறிந்த பதிபடைப் பானங் கவற்றையே. கo

2415 படைப்பாதி யாவது பரஞ்சிவஞ் சத்தி
இடைப்பால் உயிர்கட் கடைத்திவை தூங்கல்
படைப்பாதி சூக்கத்தைத் தற்பரஞ் செய்யப்
படைப்பாதி தூய மலமப் பரத்திலே. கக

2416 ஆகிய சூக்கத்தை யவ்விந்து நாதமும்
ஆகிய சத்தி சிவபர மேலந்தால்
ஆகிய சூக்கத்தில் ஐங்கரு மஞ்செய்வோன்
ஆகிய தூயவீ சானனு மாமே. கஉ

2417 மேவும் பரசிவ மேற்சத்தி நாதமும்
மேவும் பரவிந்து ஐம்முகன் வேறீசன்
மேவும் உருத்திரன் மால்வேதா மேதினி
ஆகும் படிபடைப் போனர ணுமே. கங

2418 படைப்பு மளிப்பும் பயிலினைப் பாற்றுந்
துடைப்பு மறைப்புமுன் தோன்ற அருளுஞ்
சடத்தை விடுத்த அருளுஞ் சகலத்
தடைத்த அனுதியை ஐந்தென லாமே. கச

2419 ஆறுறு குண்டலி தன்னின் அகத்திட்டு
வேறுகு மாயையின் மும்பான் மிகுத்திட்டங்
கீறுங் கருவி யிவற்றுல் வகுத்திட்டு
வேறும் பதிபசு பாசம்வீ டாகுமே. கந

2420 வீட்கும் பதிபசு பாசமும் மீதுற
வாட்கும் இருவினை யாங்கவற் றுலுணர்ந்
தாட்கு நரக சுவர்க்கத்திற் றுனிட்டு
நாட்குற நான்தங்கு நற்பாச நண்ணுமே. கஙு

2421 நண்ணிய பாசத்தில் நானெனல் ஆணவம்
பண்ணிய மாயையில் உளட்டற் பரிந்தனன்
கண்ணிய சேதனன் கண்வந்த போருள்
அண்ணல் அடிசேர் உபாயம தாகுமே. கச

2422 ஆகும் உபாயமே யன்றி யழுக்கற்று
மோக மறச்சுத்த ஞதற்கு மூலமே
ஆகு மறுவை யழுக்கேற்றி யேற்றல்போல்
ஆகுவ தெல்லாம் அருட்பாச மாகுமே. கஅ

2423 பாசம் பயிலுயிர் தானே பரமுதல்
பாசம் பயிலுயிர் தானே பசுவென்ப
பாசம் பயிலப் பதிபர மாதலாற்
பாசம் பயிலப் பதிபசு வாகுமே. கஙு

2424 அத்தத்தில் உத்தரங் கேட்ட அருந்தவர்
அத்தத்தில் உத்தர மாகும் அருள்மேனி
அத்தத்தி லுலே யணையப் பிடித்தலும்
அத்தத்தில் தம்மை யடைந்துநின் றுரே. உ0

184. அடித்தலையறியும் திறங்கூறல்

2425 காலுந் தலையும் அறியார் கலதிகள்
காலந்தச் சத்தி யருளென்பர் காரணம்
பாலொன்று ஞானமே பண்பார் தலையுயிர்
காலந்த ஞானத்தைதக் காட்டவீ டாகுமே. க

2426 தலையடி யாவ தறியார் காயத்தில்
தலையடி யுச்சியில் உள்ளது மூலங்
தலையடி யான அறிவை யறிந்தோர்
தலையடி யாகவே தானிருந் தாரே. உ

2427 நின்றுன் நிலமுழு தண்டமும் மேலுற
வன்றுள் அசுரர் அமரரும் உய்ந்திடப்
பின்றுன் உலகம் படைத்தவன் போர்ந்தி
தன்று ளிணையென் தலைமிசை யானதே. ங

2428 சிந்தையி னுள்ளே எந்தை திருவடி
சிந்தையும் எந்தை திருவடிக் கீழது
எந்தையும் என்னை யறியகி லாஞகில்
எந்தையை யானும் அறியகி லேனே. ச

2429 பன்னெத பாரொளிக் கப்புறத் தப்பால்
என்ன யகனர் இசைந்தங் கிருந்திட
முன்ன ஒளியு முரைசெய்யா மந்திரஞ்
சொன்னென் கழலிணை சூடிநின் றேனே. ஞ

2430 பதியது தோற்றும் பதமது வைம்மின்
மதியது செய்து மலர்ப்பத மோது
நதிபொதி யுஞ்சடை நாரியோர் பாகன்
கதிசெயுங் காலங்கள் கண்டுகொ ளீரே. ட

2431 தரித்துநின் றனடி தன்னிட நெஞ்சில்
தரித்துநின் றனம ராபதி நாதன்
கரித்துநின் றன்கரு தாதவர் சிந்தை
பரித்துநின் றனப் பரிபாகத் தானே. ண

186. மூப்பதம்

2432 ஒன்றுண்டு தாமரை யொண்மலர் மூன்றுள
தன்றுதை தாளும் இரண்டுள காயத்துள்
நன்றுகக் காய்ச்சிப் பதஞ்செய வல்லார்கட்
கின்றேசென் றீசனை யெய்தலு மாமே. அ

2433 கால்கொண்டென் சென்னியிற் கட்டறக் கட்டற
மால்கொண்ட நெஞ்சின் மயக்கிற் றுயக்கறப்
பால்கொண்ட வென்னைப் பரன்கொள்ள நாடினுண்
மேல்கொண்டென் செம்மை விளம்பவொண் ணுதே. கக

2434 பெற்ற புதல்வர்போற் பேணிய நாற்றமுங்
குற்றமுங் கண்டு குணங்குறை செய்யவேர்
பற்றைய வீச னுயிரது பான்மைக்குச்
செற்றமி லாச்செய்கைக் கெய்தின செய்யுமே. கo

185. முக்குற்றம்

2435 மூன்றுள குற்ற முழுது நலிவன
மான்றிருள் தூங்கி மயங்கிக் கிடந்தன
மூன்றினை நீங்கினர் நீக்கினர் நீங்காதார்
மூன்றினுட் பட்டு முடிகின்ற வாறே. க

2436 காமம் வெகுளி மயக்க மிவைகடிந்
தேமம் பிடித்திருந் தேனுக் கெறிமணி
ஓமெனும் ஓசையி னுள்ளே யுறைவதோர்
தாம மதனைத் தலைப்பட்ட வாறே. உ

186. மூப்பதம்

2437 தோன்றிய தொம்பதந் தற்பதஞ் சூழ்தர
என்ற அசிபதம் இம்மூன்றே டெய்தினேன்
ஆன்ற பராபர மாகும் பிறப்பற
வேன்றனன் மாளச் சிவமா யிருக்குமே. க

2438 போதந் தனையுன்னிப் பூதாதி பேதமும்
ஓதுங் கருவிதொண் ணூறுடன் ஓராறு
பேதமும் நாதாந்தப் பெற்றியிற் கைவிட்டு
வேதஞ்சொல் தொம்பத மாகுதன் மெய்ம்மையே. உ

2439 தற்பூதம் என்றுந் துவம்பதந் தானென்றும்
நிற்ப தசியத்துள் நேரிழை யாள்பதஞ்
சொற்பதத் தாலுந் தொடாரவொண் ணுச்சிவன்
கற்பனை யின்றிக் கலந்துநின் றானே. ஈ

2440 அணுவும் பரமும் அசிபதத் தேய்ந்து
கணுவொன் றிலாத சிவமுங் கலந்தால்
இணையறு பால்தேன் அமுதென இன்பத்
துணையது வாயுரை யற்றிடத் தோன்றுமே. உ

2441 தொம்பதந் தற்பதந் தோன்றும் அசிபதம்
நம்பிய சீவன் பரன்சிவ ணுய்நிற்கும்
அம்பத மேலைச் சொரூபமா வாக்கியஞ்
செம்பொருள் ஆண்டருள் சீர்நந்தி தானே. ஊ

2442 ஐம்ப தறியா தவரு மவர்சிலர்
உம்பனை நாடி யுரைமூப்ப தத்திடைச்
செம்பர மாகிய வாசி செலுத்திடத்
தம்பர யோகமாய்த் தானவ ணுகுமே. ஋

2443 நந்தி யறிவும் நழுவில் அதீதமாம்
இந்தியஞ் சத்தாதி விடவிய ணுகும்
நந்திய மூன்றிரண் டொன்று நலமைந்து
நந்தி னனவாதி மூட்டும் அணுதியே. ஌

2444 பரதுரி யத்து நனவு படியுண்ட
விரிவிற் கனவும் இதனுப சாந்தத்
துரிய சுழுனையு மோவுஞ் சிவன்பால்
அரிய துரியம் அசிபத மாமே. ஐ

187. மூப்பரம்

2445 தோன்றியென் னுள்ளே சுழன்றெழு கின்றதோர்
மூன்று படிமண் டலத்து முதல்வனை
என்றெய்தி யின்புற் றிருந்தே யிளங்கொடி
நான்று கலஞ்செய் கலந்தரு மாறே. ஒ

2446 மன்று நிறைந்தது மாபர மாயது
நின்று நிறைந்தது நேர்தரு நந்தியுங்
கன்று நினைந்தெழு தாயென வந்தபின்
குன்று நிறைந்த குணவிளக் காமே. உ

2447 ஆறுறு தத்துவத் தப்புறத் தப்பரங்
கூறு வுபதேசங் கூறிற் சிவபரம்
வேறுய் வெளிப்பட்ட வேதப் பகவனர்
பேறுக ஆனந்தம் பேணும் பெருகவே. ங

2448 பற்றறப் பற்றிற் பரம்பதி யாவது
பற்றறப் பற்றிற் பரனறி வேபரம்
பற்றறப் பற்றினிற் பற்றவல் லோர்கட்கே
பற்றறப் பற்றிற் பரம்பர மாமே. ச

2449 பரம்பர மான பதிபாசம் பற்றுப்
பரம்பர மாகும் பரஞ்சிவ மேவப்
பரம்பர மான பரசிவா னந்தம்
பரம்பர மாகப் படைப்ப தறிவே. ஞ

2450 நனவிற் கலாதியா நாலொன் றகன்று
தனியுற்ற கேவலந் தன்னில் தானுகி
நினைவுற் றகன்ற அதீதத்துள் நேயங்
தனையுற் றிடத்தானே தற்பர மாமே. ட

2451 தற்சுண்ட தூயமுந் தன்னில் விலாசமும்
பிற்கானுங் தூடணந் தானும் பிறழ்வுற்றுத்
தற்பரன் கால பரமுங் கலந்தற்ற
நற்பரா தீதமு நாடக ராதியே. ண

188. பரலட்சணம்

2452 அதீதத்து ளாகி யகன்றவன் நந்தி
அதீதத்து ளாகி யறிவிலோன் ஆன்மா
மதிபெற் றிருள்விட்ட மன்னுயிர் ஒன்றும்
பதியிற் பதியும் பரவுயிர் தானே. க

2453 ஆதியும் அந்தமும் இல்லா வரும்பதி
சோதிப் பரஞ்சுடர் தோன்றத்தோன் றூமையின்
நீதிய தாய்நிற்கும் நீடிய வப்பர
போதம் உணர்ந்தவர் புண்ணியத் தோரே. உ

2454 துரியங் கடந்து துரியா தீதத்தே
அரிய வியோகங்கொண் டம்பலத் தாடும்
பெரிய பிரானைப் பிரணவக் கூபத்தே
துரியவல் லார்க்குத் துரிசில்லை தானே. ஙூ

2455 செம்மைமுன் னிற்பச் சுவேதந் திரிவபோல்
அம்மெய்ப் பரத்தோ டணுவனுள் ளாயிடப்
பொய்ம்மைச் சகமுண்ட போத வெறும்பாழிற்
செம்மைச் சிவமேரு சேர்கொடி யாகுமே. ச

2456 வைச்ச கலாதி வருதத்து வங்கெட
வெச்ச இருமாயை வேரற வோறுத்
துச்ச பரசிவ மாமுண்மை யொன்றவே
அச்சம் அறுத்தென்னை யாண்டனன் நந்தியே. ஞ

2457 என்னை யறிய இசைவித்த என்னந்தி
என்னை யறிந்தறி யாத விடத்துய்த்துப்
பின்னை யொளியிற் சொருபம் புறப்பட்டுத்
தன்னை யளித்தான் தற்பர மாகவே. சூ

2458 பாந்துஞ் சுருங்கியும் பார்புனல் வாயு
நிரந்த வளியொடு ஞாயிறு திங்கள்
அரந்த அரனெறி யாயது வாகித்
தரந்த விசும்பொன்று தாங்கின் றூனே. எ

2459 சத்தின் நிலையினில் தானன சத்தியுந்
தற்பரை யாய்நிற்குந் தானும் பரற்குடல்
உய்த்தகு மிச்சையில் ஞானதி பேதமாய்
நித்த நடத்து நடிக்குமா நேயத்தே. அ

2460 மேலொடு கீழ்பக்க மெய்வாய்கண் ணுசிகள்
பாலிய விந்து பரையுட் பரையாகக்
கோலிய நான்கலை ஞானங் கொணர்விந்து
சீலமி லாவணுச் செய்திய தாமே. கூ

2461 வேறு மதன்தன்மை போலுமிக் காயத்தில்
ஆறும் உபாதி யனைத்தாகுந் தத்துவம்
பேறும் பரவொளி தூண்டும் பிரகாசமாய்
ஊறு யுயிர்த்துண் டுறங்கிடு மாயையே. கo

2462 தற்பர மன்னுந் தனிமுதற் பேரொளி
சிற்பரந் தானே செகமுண்ணும் போதமுந்
தொற்பதந் தீர்பாழிற் சுந்தரச் சோதிபுக்
கப்புற மற்றதிங் கொப்பில்லை தானே. கக

2463 பண்டை மறைகள் பரவான் உடலென்னுந்
துண்ட மதியோன் துரியாதீ தந்தன்னைக்
கண்டு பரனுமக் காரணை பாதிக்கே
மிண்டி னவன்சுத்த னுகான் வினவிலே. கஉ

2464 வெளிகால் கனலப்பு மேவுமண் ணின்ற
தளியா கியதற் பரங்கா ணவன்முன்
வெளிகால் கனலப்பு மேவுமண் ணின்ற
வெளியாய சத்தி யவன்வடி வாமே. கஊ

2465 மேருவி னேடே விரிகதிர் மண்டலம்
ஆர நினையும் அருந்தவ யோகிக்குச்
சீரார் தவஞ்செய்யிற் சிவனருள் தானுகும்
போவும் வேண்டாம் பிறிதில்லை தானே. கஎ

189. முத்துரியம்

2466 நனவாதி மூன்றினிற் சீவ துரியங்
தனதாதி மூன்றினிற் பாதுரி யந்தான்
நனவாதி மூன்றி னிற்சிவ துரியமா
மினதாகுந் தொந்தத் தசிபதத் தீடே. கo

2467 தாணு நனவில் துரியந்தன் தொம்பதந்
தாணுந் துரிய நனவாதி தான்மூன்றில்
ஆணுப் பரபத மற்ற தருநண
வாணன மேன்மூன்றுந் துரியம் அணுகுமே. உ

2468 அணுவின் துரியத்து நான்கும தாகிப்
பணியும் பரதுரி யம்பயி னன்குந்
தணிவிற் பரமாகிச் சார்மூத் துரியக்
கணுவிலிந் நான்குங் கலந்தவீ ரைந்தே. ங

2469 ஈரைந் தவத்தை யிசைமூத் துரியத்துள்
நேரந்த மாக நெறிவழி யேசென்று
பாரந்த மான பராபரத் தயிக்கியத்
தோரந்த மாமிரு பாதியைச் சேர்த்திடே. ச

2470 தொட்டே யிருமின் துரிய நிலத்தினை
எட்டா தெனினின் றெட்டும் இறைவனைப்
பட்டாங் கறிந்திடிற் பன்னு வுதடுகள்
தட்டா தொழிவதோர் தத்துவந் தானே. ஞ

2471 அறிவா யசத்தென்னு மாறு றகன்று
செறிவாய மாயை சிதைத்தரு ளாலே
பிறியாத பேரரு ளாயிடும் பெற்றி
நெறியான அன்பர் நிலையறிந் தாரே. ட

2472 நனவின் நனவாதி நாலாந் துரியந்
தனதுயிர் தொம்பத மாமாறு போல
வினையறு சீவன் நனவாதி யாகத்
தனைய பரதுரி யந்தற் பதமே. எ

2473 தொம்பதந் தற்பதஞ் சொன்மூத் துரியம்போல்
நம்பிய மூன்றுந் துரியத்து நற்றுமம்
அம்புவி யுன்னு அதிசூக்க மப்பாலைச்
செம்பொருள் ஆண்டருள் சீர்நந்தி தானே. அ

190. ழம்ழத்தி

2474 சீவன்றன் முத்தி யதீதம் பரமுத்தி
ஓயுப சாந்தஞ் சிவமுத்தி யானந்த
மூவயின் முச்சொரூப முத்திமுப் பாலதாய்
ஓவுறு தாரத்தில் உள்ளுநா தாந்தமே. க

2475 ஆவ தறியார் உயிர்பிறப் பாலுறும்
ஆவ தறியும் உயிரருட் பாலுறும்
ஆவதொன் றில்லை யகம்புறத் தென்றகன்
றேவு சிவனுடன் ஒன்றுதன் முத்தியே. உ

2476 சிவமாகி மும்மல முக்குணஞ் செற்றுத்
தவமான மும்முத்தி தத்துவத் தயிக்கியத்
துவமா கியநெறி சோகமென் போர்க்குச்
சிவமாம் அமலன் சிறந்தனன் தானே. ங

2477 சித்தியும் முத்தியுந் தின்சிவ மாகிய
சுத்தியும் முத்தீ தொலைக்குஞ் சுகானந்த
சத்தியும் மேலைச் சமாதியு மாயிடும்
பெத்தம் அறுத்த பெரும்பெரு மானே. ச

191. முச்சோநபம்

2478 ஏறிய வாறே மலம்ஐந் திடைஅடைத்
தாறிய ஞானச் சிவோக மடைந்திட்டு
வேறு மெனமுச் சொரூபத்து வீடுற்றங்
கீறதிற் பண்டைப் பரஞண்மை செய்புமே. க

2479 மூன்றுள மாளிகை மூவர் இருப்பிடம்
மூன்றினின் முப்பத் தாறு முதிப்புள
மூன்றினி னுள்ளே முளைத்தெழுஞ் சோதியைக்
காண்டலுங் காயக் கணக்கற்ற வாறே. உ

2480 உலகம் புடைபெயர்ந் தூழியும் போன
நிலவு சுடரொளி மூன்றுமொன் றுய
பலவும் பரிசொடு பான்மையுள் ஈசன்
அளவும் பெருமையு மாரறி வாரே. ங

2481 பெருவாய் முதலெண் ணும்பே தமேபே தித்
தருவா யுருவாய் அருவுரு வாகிக்
குருவாய் வருஞ்சத்தி கோணுயிர்ப் பன்மை
உருவா யுடனிருந் தொன்றுயன் றேமே. ச

2482 மணியொளி சோடை யிலக்கணம் வாய்த்து
மணியென லாய்நின்ற வாறது போலத்
தணிமுச் சொருபாதி சத்தியாதி சாரப்
பணிவித்த பேர்நந்தி பாதம்பற் றுயே. ஞ

2483 கல்லொளி மாநிறஞ் சோடைக் கதிர்தட்ட
நல்ல மணியொன்றி னுடியொண் முப்பதஞ்
சொல்லறு முப்பாழிற் சொல்லறு பேருரைத்
தல்லறு முத்திராந் தத்தனு பூதியே. ட

2484 உடந்தசெந் தாமரை யுள்ளுறு சோதி
நடந்தசெந் தாமரை நாதந் தகைந்தால்
அடைந்த பயோதரி யட்டி யடைத்தவ்
விடந்தரு வாசலை மேல்திற வீரே. ண

192. முக்கரணம்

2485 இடனெரு மூன்றி லினைந்த வொருவன்
கடனுறு மவ்வுரு வேறெனக் காணுந்
திடமது போலச் சிவபர சீவர்
உடனுறை பேதமும் ஒன்றென லாமே. த

2486 ஒளியை யொளிசெய்து வோமென் றெழுப்பி
வளியை வளிசெய்து வாய்த்திட வாங்கி
வெளியை வெளிசெய்து மேலெழு வைத்துத்
தெளியத் தெளியுஞ் சிவபதந் தானே. ந

2487 மூக்கர ணங்களின் மூர்ச்சைதீர்த் தாவதக்
கைக்கா ரணமென்னத் தந்தனன் காணந்தி
மிக்க மனோன்மனி வேறே தனித்தேக
ஒக்கும துன்மனி யோதுட் சமாதியே. ப

193. முச்சூனிய தொந்தத்தசி

2488 தற்பதந் தொம்பதந் தாணும் அசிபதந்
தொற்பத மூன்றுந் துரியத்துத் தோற்றவே
நிற்ப துயிர்ப்ர னிகழ்சிவ மும்மூன்றின்
சொற்பத மாகுந் தொந்தத் தசியே. க

2489 தொந்தத் தசிமூன்றில் தொல்கா மியமாதி
தொந்தத் தசிமூன்றில் தொல்தா மதமாதி
வந்த மலங்குண மாளச் சிவந்தோன்றின்
இந்துவின் முன்னிருள் ஏகுதல் ஒக்குமே. உ

2490 தொந்தத் தசியையவ் வாசியில் தோற்றியே
அந்த முறையீ ரைந்தாக மதித்திட்டு
அந்த மிலாத அவத்தையவ் வாக்கியத்
துந்து முறையிற் சிவமுன்வைத் தோதிடே. ங

2491 வைத்துச் சிவத்தை மதிசொரு பானந்தத்
துய்த்துப் பிரணவ மாம்உப தேசத்தை
மெய்த்த இதயத்து விட்டிடு மெய்யுணர்ந்
தத்தற் கடிமை யடைந்துநின் றூனே. ச

2492 தொம்பத மாயையுள் தோன்றிடுந் தற்பதம்
அம்பரை தன்னில் உதிக்கும் அசிபதம்
நம்புறு சாந்தியில் நண்ணுமவ் வாக்கியம்
உம்பர் உரைதொந்தத் தசிவாசி யாமே. ஞ

2493 ஆகிய வச்சோயந் தேவதத் தன்னிடத்
தாகிய வைவிட்டாற் காயம் உபாதானம்
ஏகிய தொந்தத் தசியென்ப மெய்யறி
வாகிய சீவன் பரசிவ னுமே. ட

2494 தாமத காமிய மாகித் தகுகுண
மாமல மூன்றும் அகார வுகாரத்தோ
டாமறு மவ்வுமவ் வாயுடன் மூன்றில்
தாமாந் துரியமுந் தொந்தத் தசியதே. ண

194. ழப்பாழ்

2495 காரிய மேழ்கண் டறுமாயப் பாழ்விடக்
காரண மேழ்கண் டறும்போதப் பாழ்விடக்
காரிய காரண வாதனை கண்டறுஞ்
சீருப சாந்தழுப் பாழ்விடத் தீருமே. க

2496 மாயப்பாழ் சீவன் வியோமப்பாழ் மன்பரன்
சேயழுப் பாழெனச் சிவசத்தி யிற்சீவன்
ஆய வியாப்த மெனுழுப்பா ழாம்அந்தத்
தூய சொரூபத்திற் சொல்முடி வாகுமே. உ

2497 எதிரற நாளும் எருதுவந் தேறும்
பதியெனும் நந்தி பதமது கூடக்
கதியெனப் பாழைக் கடந்தந்தக் கற்பனை
உதறிய பாழில் ஒடுங்குகின் றேனே. ங

2498 துரியம் அடங்கிய சொல்லறும் பாழை
அரிய பரம்பரம் என்பர்கள் ஆதர்
அரிய பரம்பரம் என்றே துதிக்கும்
அருநிலம் என்பதை யாரறி வாரே. ச

2499 ஆறுறு நீங்க நமவாதி யகன்றிட்டு
வேறு கியபரை யாவென்று மெய்ப்பரன்
ஈறுன வாசியிற் கூட்டு மதுவன்றே
தேறுச் சிவாய நமவெனத் தேறிலே. ஞ

2500 உள்ளம் உருவென்றும் உருவம் உளமென்றும்
உள்ள பரிசறிந் தோரு மவர்கட்குப்
பள்ளமும் இல்லைத் திடரில்லைப் பாழில்லை
உள்ளமும் இல்லை யுருவில்லை தானே. ட

195. காரிய காரணவுபாதி

2501 செற்றிடுஞ் சீவ வுபாதித் திறனேழும்
பற்றும் பரோபாதி ஏழும் பகருரை
உற்றிடுங் காரிய காரணத் தோடற
அற்றிட வச்சிவ மாகும் அணுவனே. க

2502 ஆறு றாரியோ பாதி யகன்றிட்டு
வேறுய் ரனவு மிகுத்த கணரண
ஆறு றகன்ற சுழுத்தி யதில்லயத்தாப்
பேறு நிலத்துயிர் தொம்பதம் பேசிலே. உ

2503 அகாரம் உயிரே யுகாரம் பரமே
மகாரஞ் சிவமாய் வருமுப் பதத்துச்
சிகாரஞ் சிவமே வகாரம் பரமே
யகாரம் உயிரென் றறையலு மாமே. ங

2504 உயிர்க்குயி ராகி யொழிவற் றழிவற்
றயிர்ப்பறு காரணே பாதி விதிரேகத்
துயிர்ப்புறும் ஈசன் உபமிதத் தாலன்றி
வியர்ப்புறும் ஆணவம் வீடல்செய் யாவே. ச

2505 காரியம் ஏழிற் கலக்கும் கடும்பசு
காரணம் ஏழிற் கலக்கும் பாசிவன்
காரிய காரணங் கற்பனை சொற்பதப்
பாரறும் பாழில் பராபரத் தானே. ஞ

196. உபசாந்தம்

2506 மூத்திக்கு வித்து முதல்வன்தன் ஞானமே
பத்திக்கு வித்துப் பணிந்துற்றுப் பற்றலே
சித்திக்கு வித்துச் சிவபாந் தாணுதல்
சத்திக்கு வித்துத் தனதுப சாந்தமே. க

2507 காரியம் ஏழுங் கரந்திடு மாயையுள்
காரணம் ஏழுங் கரக்குங் கடுவெளி
காரிய காரண வாதனைப் பற்றறப்
பாரண வும்முப சாந்தப் பரிசிதே. உ

2508 அன்ன துரியமே யாத்தும சுத்தியும்
மூன்னிய சாக்கிரா தீதத் துறுபுரி
மன்னு பரங்காட்சி யாவ துடனுற்றுத்
தன்னின் வியாத்தி தனின்உப சாந்தமே. ஈ

2509 ஆறு றமைந்தாண வத்தையுள் நீக்குதற்
பேறுன தன்னை யறிதற்பின் றீர்சுத்தி
கூறுத சாக்கிரா தீதங் குருபரன்
பேறும் வியாத்தம் பிறழுப சாந்தமே. ச

2510 வாய்ந்த வுபசாந்த வாதனை யுள்ளப்போய்
ஏய்ந்த சிவமாத லின்சிவா னந்தத்துத்
தோய்ந்தறல் மோனச் சுகானுபவத் தோடே
ஆய்ந்ததில் தீர்க்கை யானதீ ரைந்துமே. ஞ

2511 பரையின் பரவப ரத்துடன் ஏகமாய்த்
திரையினின் றுகிய தெண்புனல் போலவுற்
றுரையுணர்ந் தாரமு தொக்க வுணர்ந்துளோன்
கரைகண் டானுரை யற்ற கணக்கிலே. ஃ

197. புறங்கூறுமை

2512 பிறையுட் கிடந்த முயலை எறிவான்
அறைமணி வாட்கொண் டவர்தமைப் போலக்
கறைமணி கண்டனைக் காண்குற மாட்டார்
நிறையறி வோமென்பர் நெஞ்சிலர் தாமே. க

2513 கருந்தாட் கருடன் விசும்பூ டிறப்பக்
கருந்தாட் கயத்திற் கரும்பாம்பு நீங்கப்
பெருந்தன்மை பேசுதி நீயொழி நெஞ்சே
அருந்தா அலைகட லாறுசென் றூலே. உ

2514 கருதலர் மாளக் கருவாயில் நின்ற
பொருதலைச் செய்வது புல்லறி வாண்மை
மருவலர் செய்கின்ற மாதவம் ஒத்தால்
தருவலர் கேட்ட தனியும்ப ராமே. ங

2515 பிணங்கவும் வேண்டாம் பெருநில மூற்றும்
இணங்கியெம் மீசனை யீசனென் றுன்னிற்
கணம்பதி னெட்டுங் கழலடி காண
வணங்கெழு காடியங் கன்புற லாமே. ச

2516 என்னிலும் என்னுயி ராய இறைவனைப்
பொன்னிலு மாமணி யாய புனிதனை
மின்னிய வெவ்வுயி ராய விகிர்தனை
உன்னிலும் உன்னும் உறும்வகை யாலே. ந

2517 நின்றும் இருந்துங் கிடந்தும் நிமலனை
ஒன்றும் பொருள்கள் உரைப்பவ ராகிலும்
வென்றைம் புலனும் விரைந்து பிணக்கறுத்
தொன்று புணருமு ஒருவனு மாமே. சு

2518 நுண்ணறி வாயுல காயுல கேழுக்கும்
எண்ணறி வாய்நின்ற எந்தை பிரான்தன்னைப்
பண்ணறி வாளனைப் பாவித்த மாந்தரை
விண்ணறி வாளர் விரும்புகின் றூரே. எ

2519 விண்ணவ ராலும் அறிவறி யான்றன்னைக்
கண்ணற வுள்ளே கருதிடற் காலையில்
எண்ணுற வாகமுப் போது மியற்றினீ
பண்ணிடில் தன்மை பராபர மூமே. அ

2520 ஒன்று யுலகுடன் எழும் பரந்தவன்
பின்று னருள்செய்த பேரரு ளாளவன்
கன்று மனத்தார்தங் கல்வியுள் நல்லவன்
பொன்றுத போது புனைபுக ழானே. கூ

2521 போற்றியென் றேன்னக்தை பொன்னன சேவடி
எற்றியே தென்றும் எறிமணி தானகக்
காற்றின் விளக்கது காய மயக்குறு
மாற்றலுங் கேட்டது மன்றுகண் டேனே. கo

2522 நேடிக்கொண் டென்னுள்ளே நேர்தரு நந்தியை
ஊடுபுக் காருமு உணர்ந்தறி வாரில்லை
கூடுபுக் கேறலுற் றேனவன் கோலங்கண்
மூடிக்கண் டேனுல கேழுங்கண் டேனே. கக

2523 ஆன புகழும் அமைந்தே தார் ஞானமுந்
தேனு மிருக்குஞ் சிறுவரை யொன்றுகண்
ணேமொன் றின்றி யுணர்வுசெய் வார்கட்கு
வானகஞ் செய்பு மறவனு மாமே. கூ

2524 மாமதி யாமதி யாய்நின்ற மாதவர்
தூய்மதி யாகுஞ் சுடர்ப்பர மானந்தந்
தாமதி யாகச் சகமுணச் சாந்திபுக்
காமல மற்றூர் அமைவுபெற் றூரே. கூ

2525 பதமூத்தி மூன்றும் பழுதென்று கைவிட்
டிதமுற்ற பாச இருளைத் துரந்து
மதமற் றெனதியான் மாற்றிவிட் டாங்கே
திதமுற் றவர்கள் சிவசித்தர் தாமே. கூ

2526 சித்தர் சிவத்தைக் கண்டவர் சீருடன்
சுத்தாசுத் தத்துடன் தோய்ந்துந்தோ யாதவர்
மூத்தரம் மூத்திக்கு மூலத்தர் மூலத்துச்
சத்தர் சதாசிவத் தன்மையர் தாமே. கூ

198. அஷ்டதளகமல முக்குண அவத்தை

2527 உதிக்கின்ற இந்திரன் அங்கி யமனுங்
துதிக்கும் நிருதி வருணன்கல் வாயு
மதிக்குங் குபேரன் வடதிசை யீசன்
நிதித்தென் டிசையு நிறைந்துநின் றூரே. க

2528 ஒருங்கிய பூவுமோ ரெட்டித ழாகும்
டிருங்கிய மாயா புரியத னுள்ளே
சுருங்கிய தண்டின் சுழுனையி னூடே
ஒருங்கிய சோதியை ஓர்ந்தெழும் உய்ந்தே. உ

2529 மொட்டலர் தாமரை மூன்றுள மூன்றினும்
விட்டலர் கின்றனன் சோதி விரிசுடர்
எட்டல நுள்ளே இரண்டலர் உள்ளுறிற்
பட்டலர் கின்றதோர் பண்டங் கனவே. ங

2530 ஆறே யருவி யகங்குளம் ஒன்றுண்டு
நூறே சிவகதி நுண்ணிது வண்ணமுங்
கூறே குவிமுலைக் கொம்பனை யாளொடும்
வேறே யிருக்கும் விழுப்பொருள் தானே. சு

2531 திகையெட்டுந் தேரெட்டுந் தேவதை யெட்டும்
வகையெட்டு மாய்ந்ின்ற ஆதிப் பிரானை
வகையெட்டு நான்குமற் றுங்கே நிறைந்து
முகையெட்டும் உள்நின் றுதிக்கின்ற வாறே. நு

2532 ஏழுஞ் சகளம் இயம்புங் கடந்திட்டில்
வாழும் பரமென் றதுகடந் தொன்பதில்
ஊழி பராபரம் ஓங்கிய பத்தினில்
தாழ்வது வான தனித்தன்மை தானே. சூ

2533 பல்லூழி பண்பன் பகலோன் இறையவன்
கல்லூழி ஐந்தினுள் ளேநின்ற வூழிகள்
செல்லூழி யண்டத்துச் சென்றவவ் வூழியுள்
அவ்வூழி யுச்சியு ளொன்றிற் பகவனே. எ

2534 புரியும் உலகினிற் பூண்டவெட் டாஞை
திரியுங் களிற்றொடு தேவர் குழாமும்
எரியு மழையும் இயங்கும் வெளியும்
பரியுமர் காசத்திற் பற்றது தானே. அ

2535 ஊறு மருவி யுயர்வரை யுச்சிமேல்
ஆறின்றிப் பாயும் அருங்குளம் ஒன்றுண்டு
சேறின்றிப் பூத்த செழுங்கொடித் தாமரைப்
பூவின்றிச் சூடான் புரிசடை யோனே. கூ

2536 ஒன்றும் இரண்டும் ஒருங்கிய காலத்து
நின்றும் இருந்தும் நிலம்பல பேசினும்
வென்று மிருந்து விகிர்தனை நாடுவர்
சென்றும் இருந்துந் திருவுடை யோரே. கூ

199. நவாவத்தை நவாபிமானி

2537 தொற்பத விசுவன் றைசதன் பிராஞ்ஞன்
நற்பத விராட்டன்பொன் கர்ப்பனவ் யாகிர்தன்
பிற்பதஞ் சொலிதையன் பிரசா பத்தியன்
பொற்புவி சாந்தன் பொருதபி மானியே. க

2538 நவமா மவத்தை நனவாதி பற்றிற்
பவமா மலங்குணம் பற்றற்றுப் பற்றுத்
தவமான சத்திய ஞானப் பொதுவிற்
றுவமார் துரியஞ் சொலுபம தாமே. உ

2539 சிவமான சிந்தையிற் சீவன் சிதைய
பவமான மும்மலம் பாறிப் பறிய
நவமான ஆந்தத்தின் நற்சிவ போதந்
தவமா மவையாகித் தானல்ல வாகுமே. ங

2540 மூன்சொன்ன வொன்பானின் மூன்னுறு தத்துவந்
தன்சொல்லில் எண்ணத் தகாவொன்பான் வேறுள
பின்சொல்ல லாகுமிவ் வீரொன்பான் போர்த்திட்டுத்
தன்செய்த வாண்டவன் மூன்சிறந் தானே. ச

2541 உகந்தன ஒன்பதும் ஐந்தும் உலகம்
பகர்ந்த பிராணென்னும் பண்பினை நாடி
அகந்தெம்பி ராணென்பன் அல்லும் பகலு
மிகந்தன வல்வினை யோடறுத் தானே. ஞ

2542 நலம்பல காலந் தொகுத்தன நீளங்
குலம்பல வண்ணங் குறிப்பொடுங் கூடும்
பலம்பல பன்னிரு கால நினையும்
நிலம்பல வாறின னீர்மையன் மூனே. ட

2543 ஆதி பராபர மாகும் பராபரை
சோதி பரமுயிர் சொல்லுநற் றத்துவம்
ஓதுங் கலைமாயை யோரிரண் டோர்மூத்தி
நீதியாம் பேதமொன் பானுடன் ஆதியே. ண

2544 தேறுத சிந்தை தெளியத் தெளிவித்து
வேறு நரக சுவர்க்கமும் மேதினி
ஆறுப் பிறப்பும் உயிர்க்கரு ளால்வைத்தான்
வேறுத் தெளியார் வினையுயிர் பெற்றதே. அ

2545 ஒன்பான் அவத்தையுள் ஒன்பான் அபிமானி
நன்பாற் பயிலு நவதத் துவமாதி
ஒன்பானில் நிற்பதோர் முத்துரி யத்துறச்
செம்பாற் சிவமாதல் சித்தாந்த சித்தியே. கூ

200. சுத்தாசுத்தம்

2546 நாசி நுனியினின் நான்குழு விரலிடை
ஈசன் இருப்பிடம் யாரும் அறிகிலர்
பேசி யிருக்கும் பெருமறை யம்மறை
கூசி யிருக்குங் குணமது வாமே. க

2547 கருமங்கள் ஒன்று கருதுங் கருமத்
துரிமைபுங் கன்மமும் முன்னும் பிறவிக்
கருவினை யாவது கண்டகன் றன்பிற்
புரிவன கன்மக் கயத்துட் புகுமே. உ

2548 மாயை மறைக்க மறைந்த மறைப்பொருள்
மாயை மறைய வெளிப்படும் அப்பொருள்
மாயை மறைய மறையவல் லார்கட்குக்
காயமும் இல்லைக் கருத்தில்லை தானே. ங

2549 மோழை யடைந்து முழைதிறந் துள்புக்குக்
கோழை யடைக்கின்ற கண்ணற் குறிப்பினில்
ஆழ அடைத்தங் கனலிற் புறஞ்செய்து
தாழ அடைப்பது தன்வலி யாமே. ச

2550 காயக் குழப்பனைக் காயகன் னுடனைக்
காயத்தி னுள்ளே கமழ்கின்ற நந்தியைத்
தேயத்து ளேயென்றுந் தேடித் திரிபவர்
காயத்துள் நின்ற கருத்தறி யாரே. ஞ

2551 ஆசூசம் ஆசூசம் என்பார் அறிவிலார்
ஆசூச மாமிடம் ஆரும் அறிகிலார்
ஆசூச மாமிடம் ஆரும் அறிந்தபின்
ஆசூச மானிடம் ஆசூச மாமே. சூ

2552 ஆசூச மில்லை அருநிய மத்தருக்
காசூச மில்லை அரனை அர்ச் சிப்பவர்க்
காசூச மில்லையாம் அங்கி வளர்ப்போருக்
காசூச மில்லை அருமறை ஞானிக்கே. எ

2553 வழிபட்டு நின்று வணங்கு மவர்க்குச்
சுழிபட்டு நின்றதோர் தூய்மை தொடங்குங்
குழிபட்டு நின்றவர் கூடார் குறிகள்
கழிபட் டவர்க்கன்றிக் காணவொண் ணுதே. அ

2554 தூய்மணி தூயனல் தூய ஒளிவிடுந்
தூய்மணி தூயனல் தூறறி வாரில்லை
தூய்மணி தூயனல் தூறறி வார்கட்குத்
தூய்மணி தூயனல் தூயவு மாமே. கூ

2555 தூயது வாளா வைத்தது தூநெறி
தூயது வாளா நாதன் திருநாமந்
தூயது வாளா அட்டமா சித்தியுந்
தூயது வாளாத் தூயடிச் சொல்லே. கo

2556 பொருளது வாய்நின்ற புண்ணியன் எந்தை
அருளது போற்றும் அடியவ ரன்றிச்
சுருளது வாய்நின்ற துன்பச் சுழியின்
மருளது வாச்சிந்தை மயங்குகின் றீரே. கக

2557 வினையா மசத்து விளைவ துணரார்
வினைஞானந் தன்னில் வீடலுந் தேரார்
வினைவிட வீடென்னும் வேதமும் ஓதார்
வினையாளர் மிக்க விளைவறி யாரே. கஉ

201. மோக்ஷநிந்தை

2558 பரகதி யுண்டென இல்லையென் போர்கள்
நரகதி செல்வது ஞாலம் அறியும்
இரகதி செய்திடு வார்கடை தோறுந்
துரகதி யுண்ணத் தொடங்குவர் தாமே. க

2559 கூடகில் லார்குரு வைத்த குறிகண்டு
நாடகில் லார்நயம் பேசித் திரிவர்கள்
பாடகில் லாரவன் செய்த பரிசறிந்
தாடவல் லாரவர் பேறிது வாமே. உ

2560 புறப்பட்டுப் போகும் புகுதுமென் னெஞ்சில்
திறப்பட்ட சிந்தையைத் தெய்வமென் றெண்ணி
அறப்பட்ட மற்றப் பதியென் றணைத்தேன்
இறப்பற்றி னேன்இங் கிதென்னென்கின் றானே. ங

2561 திடரிடை நில்லாத நீர்போல ஆங்கே
உடலிடை நில்லா உறுபொருள் காட்டிக்
கடலிடை நில்லாக் கலஞ்சேரு மாபோல்
அடலெரி வண்ணனும் அங்குநின் றானே. ச

2562 தாமரை நூல்போல் தடுப்பார் பரத்தொடும்
போம்வழி வேண்டிப் புறமே யுழிதர்வர்
காண்வழி காட்டக்கண் காணக் கலதிகள்
தீநெறி செல்வான் திரிகின்ற வாறே. ஞ

2563 மூடுதல் இன்றி முடியும் மனிதர்கள்
கூடுவர் நந்தி யவனைக் குறித்துடன்
காடும் மலையுங் கழனி கடந்தோறும்
ஊடும் உருவினை யுன்னகி லாரே. ட

2564 ஆவது தெற்கும் வடக்கும் அமரர்கள்
போவர் குடக்குங் குணக்குங் குறிவழி
நாவினின் மந்திர மென்று நடுவங்கி
வேவது செய்து விளங்கிடு வீரே. ண

2565 மயக்குற நோக்கினும் மாதவஞ் செய்வார்
தமக்குறப் பேசின தாரணை கொள்ளார்
சினக்குறப் பேசின தீவினை யாளர்
தமக்குற வல்வினை தாங்கிநின் றூரே. அ

202. இலக்கணைத் திரயம்

2566 விட்ட விலக்கணை தான்போம் வியோமத்துத்
தொட்டு விடாத துபசாந்தத் தேதொகும்
விட்டு விடாதது மேவுஞ்சத் தாதியிற்
சுட்டு மிலக்கணை தீதஞ் சொலுபமே. க

2567 வில்லின் விசைநாணிற் கோத்திலக் கெய்தபின்
கொல்லுங் களிறைந்துங் கோலொடு சாய்ந்தன
வில்லு னிருந்தெறி கூருங் ஒருவற்குக்
கல்கலன் என்னக் கதிரெதி ராமே. உ

203. தத்துவமசி வாக்கியம்

2568 சீவ துரியத்துத் தொம்பதஞ் சீவனுர்
தாவு பரதுரி யத்தினில் தற்பதம்
மேவு சிவதுரி யத்தசி மெய்ப்பத
மோவி விடுந்தத் துவமசி உண்மையே. க

2569 ஆரு றகன்ற அணுத்தொம் பதஞ்சுத்தம்
ஈரண தற்பதம் எய்துப சாந்தத்துப்
பேரு கியசீவன் நீங்கிப்பிர சாதத்து
வீரண தொந்தத் தசிதத்வ மசியே. உ

2570 ஆகிய வச்சோயந் தேவதத் தன்னிடத்
தாகிய விட்டு விடாத விலக்கணைத்
தாருப சாந்தமே தொந்தத் தசியென்ப
ஆகிய சீவன் பரன்சிவ ணுமே. ங

2571 துவந்தத் தசியே தொந்தத் தசியும்
அவைமன்னு வந்து வயத்தேக மான
தவழுறு தத்துவ மசியே தாந்த
சிவமா மதுஞ்சித் தாந்தவே தாந்தமே. ச

2572 துரியம் அடங்கிய சொல்லறும் பாழை
அரிய பரமென்ப ராகாரி தன்றென்னர்
உரிய பரம்பர மாமொன் றுதிக்கும்
அருநிலம் என்பதை யாரறி வாரே. நி

2573 தொம்பதந் தற்பதஞ் சொல்லும் அசிபதம்
கம்பிய முத்துரி யத்துமே ளடவே
யும்பத மும்பத மாகும் உயிர்ப்பரன்
செம்பொரு ளான சிவமென லாமே. சு

2574 வைத்த துரிய மதிற்சொரு பானந்தத்
துய்த்த பிரணவ மாமுப தேசத்தை
மெய்த்த விதயத்து விட்டிடு மெய்புணர்
வைத்த படியே யடைந்துநின் றூனே. எ

2575 நனவாதி ஐந்தையும் நாதாதியில் வைத்துப்
பினமா மலத்தைப் பின்வைத்துப் பின்சுத்தத்
தனதாஞ் சிவகதி சத்தாதி சாந்தி
மனவாச கங்கெட்ட மன்னனே நாடே. அ

2576 பூரணி யாது புறம்பொன்றி லாமையின்
போரணி யாதது பேச்சொன்றி லாமையில்
ஓரணை யாதது வொன்றுமி லாமையிற்
காரண மின்றியே காட்டுந் தகைமைத்தே. கூ

2577 நீயது வாஞ்ஞை யெனநின்ற பேருரை
ஆயது நானுனேன் என்னச் சமைந்தறச்
சேய சிவமாக்குஞ் சீர்நந்தி பேரருள்
ஆயது வாயனந் தானந்தி யாகுமே. கூ

2578 உயிர்பர மாக உயர்பர சீவன்
அரிய சிவமாக அச்சிவ வேதத்
திரியிலுஞ் சீராம் பராபரன் என்ன
உரிய உரையற்ற வோமய மாமே. கூ

2579 வாய்நாசி யேபுரு மத்தகம் உச்சியில்
ஆய்நாசி யுச்சி முதலவை யாய்நிற்குந்

தாய்நாடி யாதிவாக் காதி சகலாதி
சேய்நா டொளியெனச் சிவகதி யைந்துமே. கஉ

2580 அறிவறி யாமை இரண்டு மகற்றிச்
செறிவறி வாய்ளங்கும் நின்ற சிவனைப்
பிறிவறி யாது பிரானென்று பேணுங்
குறியறி யாதவர் கொள்ளறி யாரே. கங

2581 அறிவார் அறிவன அப்பும் அனலும்
அறிவார் அறிவன அப்புங் கலப்பும்
அறிவான் இருந்தங் கறிவிக்கி னல்லால்
அறிவான் அறிந்த அறிவறி யோமே. கச

2582 அதீதத்துள் ளாகி அகன்றவன் நந்தி
அதீதத்துள் ளாகி அறிவிலோன் ஆன்மா
மதிபெற் றிருள்விட்ட மன்னுயி ரொன்றும்
பதியிற் பதியும் பரவுயிர் தானே. கரு

2583 அடிதாழ முன்னின் றமரர்க ளத்தன்
முடிதாழ ஈசனும் முன்னின் றருளிப்
படிதாழ நீபண்டு பாவித்த தெல்லாங்
கடிதாழக் காணென்னுங் கண்ணுத லானே. கசு

2584 நின்மல மேனி நிமலன் பிறப்பிலி
என்னுளம் வந்திவன் என்னடி யானென்று
பொன்வளர் மேனி புகழ்கின்ற வானவன்
நின்மல மாகென்று நீக்கவல் லானே. கஎ

2585 துறந்துபுக் கொள்ளொளி சோதியைக் கண்டு
பறந்ததென் உள்ளம் பணிந்து கிடந்தே
மறந்தறி யாவென்னை வானவர் கோனும்
இறந்து பிறவாமல் ஈங்குவைத் தானே. கஅ

2586 மெய்வாய்கண் மூக்குச் செவியென்னும் மெய்த்தோற்றத்
தவ்வாய அந்தக் காணம் அகிலமும்
எவ்வா யுயிரும் இறையாட்ட ஆடலாற்
கைவாயி லாநிறை எங்குமெய் கண்டதே. கஙு

204. விசுவக் கிராசம்

2587 அழிகின்ற சாயா புருடனைப் போலக்
கழிகின்ற நீரிற் குமிழியைக் காணில்
எழுகின்ற தீயிற்கப் பூரத்தை யொக்கப்
பொழிகின்ற இவ்வுடற் போமப் பரத்தே. க

2588 உடலும் உயிரும் ஒழிவற ஒன்றிற்
படருஞ் சிவசத்தி தாமே பரமாம்
உடலிவிட் டிந்த உயிரெங்கு மாகிக்
கடையுந் தலையுங் கரக்குஞ் சிவத்தே. உ

2589 செவிமெய்வாய் கண்மூக்குச் சேரிந் திரியம்
அவியின் றியமன மாதிகள் ஐந்தும்
குவிவொன் றிலாமல் விரிந்து குவிந்து
தவிர்வொன் றிலாத சராசரந் தானே. ங

2590 பரனெங்கு மாரப் பரந்துற்று நிற்குந்
திரனெங்கு மாகிச் செறிவெங்கு மெய்தும்
உரனெங்கு மாயுல குண்டு உமிழ்க்கும்
வரமிங்ஙன் கண்டியான் வாழ்ந்துற்ற வாறே. ச

2591 அளந்து துரியத் தறிவினை வாங்கி
உளங்கொள் பரஞ்சகம் உண்ட தொழித்துக்
கிளர்ந்த பரஞ்சிவஞ் சேரக் கிடைத்தால்
விளங்கிய வெட்ட வெளியது மாமே. ஞ

2592 இரும்பிடை நீரென என்னையுள் வாங்கிப்
பரம்பர மான பரமது விட்டே
உரம்பெற முப்பாழ் ஒளியை விழுங்கி
இருந்தன னந்தி இதயத்து ளானே. ட

2593 கரியுண் விளவின் கனிபோல் உயிரும்
உரிய பரமுமுன் னேதுஞ் சிவமும்
அரிய துரியமேல் அகிலமும் எல்லாந்
திரிய விழுங்குஞ் சிவபெரு மானே. ண

2594 அந்தமும் ஆதியும் ஆகும் பராபரன்
தந்தம் பரம்பரன் தன்னிற் பரமுடன்
நந்தமை யுண்டுமெய்ஞ் ஞானமே யாந்தத்தே
நந்தி யிருந்தனன் நாமறி யோமே.

205. வாய்மை

2595 அற்ற துரைக்கில் அருளுப தேசங்கள்
குற்ற மறுத்துபொன் போலுங் கனவிடை
அற்றற வைத்திறை மாற்றற ஆற்றிடில்
செற்றம் அறுத்த செழுஞ்சுட ராகுமே.

2596 எல்லாம் அறியும் அறிவு தனைவிட்டு
எல்லாம் அறிந்தும் இலாபமங் கில்லை
எல்லாம் அறிந்த அறிவினை நானென்னில்
எல்லாம் அறிந்த இறையென லாமே.

2597 தலைநின்ற தாழ்வரை மீது தவஞ்செய்து
மூலைநின்ற மாதறி மூர்த்தியை யாணும்
புலைநின்ற பொல்லாப் பிறவி கடந்து
கலைநின்ற கள்வனைக் கண்டுகொண் டேனே.

2598 தானே யுலகில் தலைவ னெனத்தகுந்
தானே யுலகுக்கோர் தத்துவ மாய்நிற்கும்
வானே மழைபொழி மாமறை கூர்ந்திடும்
ஊனே யுருகிய வுள்ளமொன் றாமே.

2599 அருள்பெற்ற காரணம் என்கொல் அமரில்
இருளற்ற சிந்தை இறைவனை நாடி
மருளறற்ற சிந்தையை மாற்றி அருணைமப்
பொருளறற்ற சேவடி போற்றுவர் தாமே.

2600 மெய்கலந் தாரொடு மெய்கலந் தான்தன்னைப்
பொய்கலந் தார்முன் புகுதா ஒருவனை
உய்கலந் தூழித் தலைவனு மாய்நிற்கும்
மெய்கலந் தின்பம் விளைந்திடும் மெய்யர்க்கே.

2601 மெய்கலந் தாரொடு மெய்கலந் தான்மிகப்
பொய்கலந் தாருட் புகுதாப் புனிதனை
கைகலந் தாவி எழும்பொழு தண்ணலைக்
கைகலந் தார்க்கே கருத்துற லாமே. எ

2602 எய்திய காலத் திருபொழு துஞ்சிவன்
மெய்செயின் மேலை விதியது வாய்நிற்கும்
பொய்யும் புலனும் புகலொன்று நீத்திடில்
ஐயனும் அவ்வழி யாகினின் றனே. அ

2603 எய்துவ தெய்தா தொழிவ திதுவருள்
உய்ய அருள்செய்தான் உத்தமன் சீர்நந்தி
பொய்செய் புலன்நெறி யொன்பதுந் தாட்கொளின்
மெய்யென் புரவியை மேற்கொள்ள லாமே. க

2604 கைகலந் தானைக் கருத்தினுள் நந்தியை
மெய்கலந் தான்தன்னை வேத முதல்வனைப்
பொய்கலந் தார்முன் புகுதாப் புனிதனைப்
பொய்யொழிந் தார்க்கே புகலிட மாமே. கஂ

2605 மெய்த்தாள் அகம்படி மேவிய நந்தியைக்
கைத்தாள்கொண் டாருந் திறந்தறி வாரில்லைப்
பொய்த்தாள் இடும்பையைப் பொய்யற நீவிட்டங்
கத்தாள் திறக்கில் அரும்பேற தாமே. கக

2606 உய்யும் வகையால் உணர்வினுல் எத்துமின்
மெய்யன் அரனெறி மேலுண்டு தின்னெனைப்
பொய்யொன்று மின்றிப் புறம்பொயி வார்நது
ஐயனும் அங்கே அமர்ந்துநின் றனே. கஉ

2607 வம்பு பழுத்த மலர்ப்பழம் ஒன்றுண்டு
தம்பாற் பறவை புகுந்துணத் தாளெட்டா
தம்புகொண் டெய்திட் டகலத் துரத்திடிற்
செம்பொற் சிவகதி சென்றெய்த லாமே. கஙு

2608 மயக்கிய ஐம்புலப் பாசம் அறுத்துத்
துயக்கறுத் தானைத் தொடர்மின் தொடர்ந்தால்
தியக்கஞ்செய் யாதே சிவனெம் பெருமான்
உயப்போ எனமனம் ஒன்றுவித் தானே. கச

2609 மனமது தானே நினையவல் லாருக்
கினமெனக் கூறு மிருங்காய மேவற்
றனிவினி னுதன்பால் தக்கன செய்யில்
புனிதன் செயலாகும் போதப் புவிக்கே. கரு

206. ஞானிசெயல்

2610 முன்னை வினைவரின் முன்னுண்டே நீங்குவர்
பின்னை வினைக்கணர் பேர்ந்தறப் பார்ப்பர்கள்
தன்னை யறிந்திடுந் தத்துவ ஞானிகள்
நன்மையில் ஐம்புலன் நாடலி னூலே. க

2611 தன்னை யறிந்திடுந் தத்துவ ஞானிகள்
முன்னை வினையின் முடிச்சை யவிழ்ப்பர்கள்
பின்னை வினையைப் பிடித்துப் பிசைவர்கள்
சென்னியில் வைத்த சிவனரு ளாலே. உ

2612 மனவாக்குக் காயத்தால் வல்வினை மூளும்
மனவாக்கு நேர்நிற்கில் வல்வினை மன்னு
மனவாக்குக் கெட்டவர் வாதனை தன்னால்
தனைமாற்றி யாற்றத் தகுஞானி தானே. கூ

207. அவாவறுத்தல்

2613 வாசியு மூசியும் பேசி வகையினால்
பேசி யிருந்து பிதற்றிப் பயனில்லை
ஆசையும் அன்பும் அறுமின் அறுத்தபின்
ஈசன் இருந்த இடம்எளி தாமே. க

2614 மாடத்து ளானலன் மண்டபத் தானலன்
கூடத்து ளானலன் கோயிலுள் ளானலன்
வேடத்து ளானலன் வேட்கைவிட் டார்நெஞ்சில்
மூடத்து ளேநின்று மூத்திதந் தானே. உ

2615 ஆசை யறுமின்கள் ஆசை யறுமின்கள்
ஈசனே டாயினும் ஆசை யறுமின்கள்
ஆசை படப்பட ஆய்வருந் துன்பங்கள்
ஆசை விடவிட ஆனந்த மாமே. ௫

2616 அடுவன பூதங்கள் ஐந்தும் உடனே
படுவழி செய்கின்ற பற்றற வீசி
விடுவது வேட்கையை மெய்ந்நின்ற ஞானந்
தொடுவது தம்மைத் தொடர்தலு மாமே. ச

2617 உவாக்கடல் ஒக்கின்ற வூழியும் போன
துவாக்கட லுட்பட்டுத் துஞ்சினர் வானோர்
அவாக்கட லுட்பட் டழுந்தினர் மண்ணோர்
தவாக்கடல் ஈசன் தரித்துநின் றானே. ஞ

2618 நின்ற வினையும் பிணியும் நெடுஞ்செயல்
துன்றொழி லற்றுச் சுத்தம தாகலும்
பின்றைங் கருமமும் போர்த்தருள் சேர்பெற்றுத்
துன்ற அழுத்தலும் ஞானிகள் தூய்மையே. ட

2619 உண்மை யுணர்ந்துற ஒண்சித்தி முத்தியாம்
பெண்மையற் கெட்டறப் பேறட்ட சித்தியாந்
திண்மையின் ஞானி சிவகாயங் கைவிட்டால்
வண்மை யருள்தான் அடைந்தன்பில் ஆறுமே. ஠

2620 அவனிவன் ஈசனென் றன்புற நாடிச்
சிவனிவன் ஈசனென் றுண்மையை யோரார்
பவனிவன் பல்வகை யாமிப் பிறவி
புவனிவன் போவது பொய்கண்ட போதே. ஡

2621 கொதிக்கின்ற வாறுங் குளிர்கின்ற வாறும்
பதிக்கின்ற வாறிந்தப் பாரக முற்றும்
விதிக்கின்ற ஐவரை வேண்டா துலகம்
கொதிக்கின்ற காயத்து நாலொன் றுமாமே. ஢

2622 உய்ந்தனம் என்பீர் உறுபொருள் காண்கிலீர்
கந்த மலரிற் கலக்கின்ற கந்தியைச்
சிந்தையில் வைத்துத் தெளிவுறச் சேர்த்திட்டால்
மூந்தைப் பிறவிக்கு மூலவித் தாமே. ௯0

208. பத்தியுடைமை

2623 முத்திசெய் ஞானமுங் கேள்வியு மாய்நிற்கும்
அத்தனை மாயா அமரர் பிரான்தனைச்
சுத்தனைத் தூய்நெறி யாய்நின்ற சோதியைப்
பத்தர் பரசும் பசுபதி தானென்றே. ௯

2624 அடியார் அடியார் அடியார்க் கடிமைக்
கடியனுய் நல்கிட் டடிமையும் பூண்டேன்
அடியார் அருளால் அவனடி கூட
அடியா னிவனென் றடிமைகொண் டானே. ௯௨

2625 நீரிற் குளிரும் நெருப்பினிற் சுட்டிடும்
ஆரிக் கடனந்தி யாமா றறிபவர்
பாரிற் பயனுரைப் பார்க்கிலும் நேரியர்
ஊரில் உமாபதி யாகிநின் றூனே. ௯௩

2626 ஓத்துல கேழும் அறியா ஒருவனென்
றத்தன் இருந்திடம் ஆறறி வார்சொல்லப்
பத்தர்தம் பத்தியிற் பாற்படில் அல்லது
முத்தினை யார்சொல்ல முந்துகின் றூரே. ௯௪

2627 ஆன்கன்று தேடி யழைக்கு மதுபோல்
நான்கன்றுய் நாடி யழைத்தேனென் நாதனை
வான்கன்றுக் கப்பாலாய் நின்ற மறைப்பொருள்
ஊன்கன்று ணுடிவந் துள்புகுந் தானே. ௯௫

2628 பெத்தத்துந் தன்பணி இல்லை பிறத்தலான்
முத்தத்துந் தன்பணி இல்லை முறைமையால்
அத்தற் கிரண்டும் அருளால் அளித்தலாற்
பத்திப்பட் டோர்க்குப் பணியொன் றும் இல்லையே. ௯௬

2629 பறவையிற் கற்பமும் பாம்புமெய் யாகக்
குறவஞ் சிலம்பக் குளிர்வரை யேறி
நறவார் மலர்கொண்டு நந்தியை யல்லால்
இறைவனென் றென்மனம் ஏத்தகி லாவே. எ

2630 உறுதுணை நந்தியை உம்பர் பிரானைப்
பெறுதுணை செய்து பிறப்பறுத் துய்மின்
செறிதுணை செய்து சிவனடி சிந்தித்
துறுதுணை யாயங்கி யாகினின் றூனே. அ

2631 வானவர் தம்மை வலிசெய் திருக்கின்ற
தானவர் மும்புரஞ் செற்ற தலைவனைக்
கானவன் என்றுங் கருவரை யானென்றும்
ஊனத னுள்நினைந் தொன்றுபட் டாரோ. கூ

2632 நிலைபெறு கேடென்று முன்னே படைத்த
தலைவனை நாடித் தயங்குமென் உள்ளம்
மலையுளும் வானகத் துள்ளும் புறத்தும்
உலையுளும் உள்ளத்து மூழ்கினின் றேனே. கo

209. முத்தியுடைமை

2633 முத்தியில் அத்தன் முழுத்த அருள்பெற்றுத்
தத்துவ சுத்தி தலைப்பட்டுத் தன்பணி
மெய்த்தவஞ் செய்கை வினைவிட்ட மெய்புண்மைப்
பத்தியி லுற்றோர் பரானந்த போதரே. க

2634 வளங்கனி தேடிய வன்றூட் பறவை
உளங்கனி தேடி யுழிதரும் போது
களங்கனி யங்கியிற் கைவிளக் கேற்றி
நலங்கொண்ட நால்வரும் நாடுகின் றூரே. உ

210. சோதனை

2635 பெம்மான் பெருநந்தி பேச்சற்ற பேரின்பத்
தம்மா னடிதந் தருட்கடல் ஆடினேம்
எம்மாய மும்விடுத் தெம்மைக் கரந்திட்டுச்
சும்மா திருந்திடஞ் சோதனை யாகுமே. க

2636 அறிவுடை யானரு மாமறை யுள்ளே
செறிவுடை யான்மிகு தேவர்க்குந் தேவன்
பொறியுடை யான்புலன் ஐந்துங் கடந்த
குறியுடை யாளெடுங் கூடுவன் நானே. உ

2637 அறிவறி வென்றங் காற்றும் உலகம்
அறிவறி யாமையை யாரும் அறியார்
அறிவறி யாமை கடந்தறி வாளர்
அறிவறி யாமை யழகிய வாறே. ஙு

2638 குறியாக் குறியினிற் கூடாத கூட்டத்
தறியா அறிவில் அவிழ்ந்தேதக சித்தமாய்
நெறியாம் பராநந்தி நீடருள் ஒன்றுஞ்
செறியாச் செறிவே சிவமென லாமே. சு

2639 காணினில் ஊறுங் கருப்பினிற் கட்டியும்
பாலினுள் நெய்யும் பழத்துள் இரதமும்
பூவினுள் காற்றமும் போலுளன் எம்மிறை
காவலன் எங்குங் கலந்துநின் றானே. ஙூ

2640 விருப்பொடு கூடி விகிர்தனை நாடிப்
பொருப்பகஞ் சேர்தரு பொற்கொடி போல
இருப்பர் மனத்திடை எங்கள் பிரானர்
நெருப்புரு வாகி நிகழ்ந்துநின் றாரே. ஙூ

2641 நந்தி பெருமான் நடுவுள் வியோமத்து
வந்தென் அகம்படி கோயில்கொண் டான்கொள்ள
எந்தைவந் தானென் றெழுந்தேன் எழுதலுஞ்
சிந்தையு ளுள்ளே சிவனிருந் தானே. ஙா

2642 தன்மைவல் லோனைத் தவத்துள் நலத்தினை
நன்மைவல் லோன நடுவுறை நந்தியைப்
புன்மைபொய் யாதே புனிதனை நாடுமின்
பன்மையில் உம்மைப் பரிசுசெய் வானே. ஙஅ

2643 தொடர்ந்துநின் றுனென்னைச் சோதிக்கும் போது
தொடர்ந்துநின் றுனல்ல நாதனும் அங்கே
படர்ந்துநின் றுதிப் பராபரன் எந்தை
கடந்துநின் றவ்வழி காட்டுகின் றுனே. கூ

2644 அவ்வழி காட்டும் அமரர்க் கரும்பொருள்
இவ்வழி தந்தைதாய் கேளியான் ஓக்குஞ்
செவ்வழி சேர்சிவ லோகத் திருந்திடும்
இவ்வழி நந்தி இயல்பது தானே. கo

2645 எறிவது ஞானத் துறைவாள் உருவி
அறிவத னேடேயவ் வாண்டகை யானைச்
செறிவது தேவர்க்குந் தேவர் பிரானைப்
பறிவது பல்கணப் பற்றுவி டாரே. கக

2646 ஆதிப் பிரான்தந்த வாளங்கைக் கொண்டபின்
வேதித்து என்னை விலக்கவல் லாரில்லை
சோதிப்பன் அங்கே சுவடு படாவண்ணம்
ஆதிக்கட் டெய்வ மவனிவ னுமே. கஉ

2647 அந்தக் கருவை யருவை வினைசெய்தற்
பந்தம் பணியச்சம் பல்பிறப் பும்வாட்டிச்
சிந்தை திருத்தலுஞ் சேர்ந்தாரச் சோதனை
சந்திக்கத் தற்பர மாகுஞ் சதுரர்க்கே. கஙு

2648 உரையற்ற தொன்றை யுரைத்தான் எனக்குக்
கரையற் றெழுந்த கலிவேட் டறுத்துத்
திரையொத்த என்னுடல் நீங்கா திருத்திப்
புரையற்ற என்னுட் புகுந்தற் பரனே. கச

எட்டாந் தந்திரம் முற்றிற்று.

ஒன்பதாந் தந்திரம்

211. குருமட் தரிசனம்

2649 பலியும் அவியும் பரந்து புகையும்
ஒலியும்னம் ஈசன் தனக்கென்றே யுள்கிக்
குவியுங் குருமடங் கண்டவர் தாம்போய்த்
தளிரு மலரடி சார்ந்துநின் றூரே. க

2650 இவனில்ல மல்ல தவனுக்கங் கில்லை
அவனுக்கும் வேறில்லம் உண்டா அறியின்
அவனுக் கிவனில்ல மென்றென் றறிந்தும்
அவனைப் புறம்பென் றாற்றுகின் றூரே. உ

2651 காடும் பெருந்துறை கான்கண்டு கொண்டபின்
கூடுஞ் சிவனது கொய்மலர்ச் சேவடி
தேட வரியன் சிறப்பிலி எம்மிறை
ஓடும் உலகுயி ராகினின் றூனே. ங.

2652 இயம்புவன் ஆசனத் தோடு மலையும்
இயம்புவன் சித்தக் குகையும் இடமும்
இயம்புவன் ஆதாரத் தோடு வனமும்
இயம்புவன் ஈரா றிருநிலத் தோர்க்கே. ச

2653 மூகம்பீட மாமட முன்னிய தேயம்
அகம்பர வர்க்கமே யாகில்செய் காட்சி
அகம்பர மாதனம் எண்ணெண் கிரியை
சிதம்பரந் தற்குகை யாதாரந் தானே. ஞ

2654 அகழுக மாம்பீடம் ஆதார மாகுஞ்
சகழுக மாஞ்சத்தி யாதன மாகுஞ்
செகழுக மாந்தெய்வ மேசிவ மாகும்
அகழுகம் ஆய்ந்த அறிவுடை யோர்க்கே.

2655 மாயை யிரண்டு மறைக்க மறைவுறுங்
காயமோ ரைந்துங் கழியத்தா ணுகியே
தூய பரஞ்சுடர் தோன்றச் சொரூபத்துள்
ஆய்பவர் ஞாதி மோனத்த ராமே. எ

212. ஞானகுரு தரிசனம்

2656 ஆறுறு முப்பதும் அங்கே யடங்கிடிற்
கூறக் குருபரன் கும்பிடு தந்திடும்
வேறே சிவபத மேலாய் ஒளித்திடும்
பேறுக ஆனந்தம் பேணும் பெருகவே. க

2657 துரியங்கள் மூன்றுங் கடந்தாளிர் சோதி
அரிய பரசிவம் யாவையு மாகி
விரிவு குவிவற விட்ட நிலத்தே
பெரிய குருபதம் பேசவொண் ணுதே. உ

2658 ஆயன நந்தி யடிக்கென் றலைபெற்றேன்
வாயன நந்தியை வாழ்த்தவென் வாய்பெற்றேன்
காயன நந்தியைக் காணவென் கண்பெற்றேன்
சேயன நந்திக்கென் சிந்தைபெற் றேனே. ங

2659 கருடன் உருவங் கருதும் அளவிற்
பருவிடந் தீர்ந்து பயங்கெடு மாபோல்
குருவின் உருவங் குறித்தஅப் போதே
திரிமலந் தீர்ந்து சிவனவ ணுமே. ச

2660 அண்ணல் இருப்பிட மாரும் அறிகிலர்
அண்ணல் இருப்பிடம் ஆய்ந்துகொள் வார்களுக்
கண்ணல் அழிவின்றி யுள்ளே அமர்ந்திடும்
அண்ணலைக் காணில் அவனிவ ணுமே. ஞ

2661 தோன்ற அறிதலுந் தோன்றல் தோன்றுமையு
மான்ற வறிவு மறிநன வாதிகள்
மூன்றவை நீங்குந் துரியங்கள் மூன்றற
ஊன்றிய நந்தி யுயர்மோனத் தானே. ட

2662 சந்திர பூமிக் குடன்புரு வத்திடைக்
கந்த மலரில் இரண்டிதழ்க் கன்னியும்
பந்த மிலாத பளிங்கின் உருவினள்
பந்தம் அறுத்த பரங்குரு பற்றே. ச

2663 மனம்புகுந் தாலுல கேழு மகிழ
நிலம்புகுந் தானெடு வானிலந் தாங்கிச்
சினம்புகுந் தான்திசை எட்டும் நடுங்க
வனம்புகுந் தாளார் வடக்கென்ப தாமே. அ

2664 தாணன வண்ணமுங் கோசமுஞ் சார்தருந்
தாணும் பறவை வனமெனத் தக்கன
தாணன சோடச மார்க்கந்தான் நின்றிடில்
தாணுந் தசாங்கமும் வேறுள்ள தானே. கூ

2665 மருவிப் பிரிவறி யாளங்கள் மாகந்தி
உருவ நினைக்கநின் றுள்ளே யுருக்குங்
கருவிற் கரந்துள்ளங் காணவல் லார்க்கிங்
கருவினை கண்சோருஞ் அழிவார் அகத்தே. கo

2666 தலைப்பட லாமெங்கள் தத்துவன் தன்னைப்
பலப்படு பாசம் அறுத்தறுத் திட்டு
நிலைப்பெற நாடி நினைப்பற வுள்கில்
தலைப்பட லாகுந் தருமமுந் தானே. கக

2667 நினைக்கின் நினைக்கு நினைப்பவர் தம்மைச்
சுனைக்குள் விளைமலர்ச் சோதியி னைனத்
தினைப்பிளந் தன்ன சிறுமைய ரேனுங்
கனத்த மனத்தடைந் தாலுயர்ந் தாரே. கஉ

2668 தலைப்படுங் காலத்துத் தத்துவன் தன்னை
விலக்குறின் மேலை விதியென்றுங் கொள்க
அனைத்துல காய்நின்ற ஆதிப் பிரானை
நினைப்புறு வார்பத்தி நேடிக்கொள் வாரே. கஙு

2669 நகழ்வொழிந் தாரவர் நாதனை புள்கி
நிகழ்வொழிந் தாரெம் பிராலெடுங் கூடித்
திகழ்வொழிந் தார்தங்கள் சிந்தையி னுள்ளே
புகழ்வழி காட்டிப் புகுந்துநின் றூனே. கச

2670 வந்த மரகத மாணிக்க ரேகைபோற்
சந்திடு மாமொழிச் சற்குரு சன்மார்க்கம்
இந்த இரேகை யிலாடத்தின் மூலத்தே
சுந்தரச் சோதியுட் சோதியு மாமே. கஞ

2671 உண்ணும் வாயும் உடலும் உயிருமாய்க்
கண்ணுமா யோகக் கடவுள் இருப்பது
மண்ணு நீரனல் காலொடு வானுமாய்
விண்ணு மின்றி வெளியாளுர் மேனியே. கசு

2672 பரசு பதியென்று பார்முழு தெல்லாம்
பரசிவ னுண்ண கடக்கும் பாதியாற்
பெரிய பதிசெய்து பின்னும் அடியார்க்
குரிய பதியும்பா ராக்கினின் றூனே. கஎ

2673 அம்பர நாதன் அகலிட நீள்பொழில்
தம்பர மல்லது தாமறி யோம்என்பர்
உம்பருள் வானவர் தானவர் கண்டிலர்
எம்பெரு மானருள் பெற்றிருந் தாரே. கஅ

2674 கோவணங் கும்படி கோவண மாகிப்பின்
நாவணங் கும்படி நந்தி யருள்செய்தான்
தேவணங் கோமினிச் சித்தந் தெளிந்தனம்
போய்வணங் கும்பொரு ளாயிருந் தோமே. கக

213. பிரணவ சமாதி

2675 தூலப் பிரணவஞ் சொரூபானந்தப் பேருரை
பாலித்த சூக்கும மேலச் சொரூபப்பெண்
ஆலித்த முத்திரை யாங்கதிற் காரணம்
மேலப் பிரணவம் வேதாந்த வீதியே. க

2676 ஓமெனும் ஓங்காரத் துள்ளே யொருமொழி
ஓமெனும் ஓங்காரத் துள்ளே யுருவரு
ஓமெனும் ஓங்காரத் துள்ளே பலபேதம்
ஓமெனும் ஓங்காரம் ஒண்முத்தி சித்தியே.

2677 ஓங்காரத் துள்ளே யுதித்தஐம் பூதங்கள்
ஓங்காரத் துள்ளே யுதித்த சராசரம்
ஓங்காரா தீதத் துயிர்மூன்றும் உற்றன
ஓங்கார சீவ பரசிவ ரூபமே.

2678 வருக்கஞ் சுகமாம் பிரமமு மாகும்
அருக்கஞ் சராசர மாகும் உலகில்
தருக்கிய வாதார மெல்லாந்தன் மேனி
சுருக்கமின் ஞானந் தொகுத்துணர்ந் தோரே.

2679 மலையு மணிபவ மருள்வன வாவன
நிலையிற் றரிசனம் தீப நெறியாங்
தலமுங் குலமுந் தவஞ்சித்த மாகும்
கலமுஞ்சன் மார்க்கத் துபதேசந் தானே.

2680 சோடச மார்க்கமுஞ் சொல்லுஞ்சன் மார்க்கிகட்
காடிய வீராறின் அந்தமும் ஈரேழிற்
கூடிய அந்தமுங் கோதண்ட முங்கடந்
தேறியே ஞானஞே யாந்தத் திருக்கவே.

214. ஒளி

2681 ஒளியை யறியில் உருவும் ஒளியும்
ஒளியும் உருவம் அறியில் உருவாம்
ஒளியின் உருவம் அறியில் ஒளியே
ஒளியும் உருக வுடனிருந் தானே.

2682 புகலொளி தாகும் புவனங்கள் எட்டும்
அகலொளி தாயிரு ளாசற வீசும்
பகலொளி செய்தது மத்தா மரையிலே
இகலொளி செய்திதம் பிரானிருந் தானே.

2683 விளங்கொளி யங்கி விரிகதிர் சோமன்
துளங்கொளி பெற்றன சோதி யருள
வளங்கொளி பெற்றதே பேரொளி வேறு
களங்கொளி செய்து கலந்துநின் றனே. ௫

2684 இளங்கொளி யீசன் பிறப்பொன்று மில்லி
துளங்கொளி ஞாயிறுந் திங்களுங் கண்கள்
வளங்கொளி யங்கியு மற்றைக்கண் நெற்றி
விளங்கொளி செய்கின்ற மெய்காய மாமே. ௬

2685 மேலொளி கீழுதன் மேவிய மாருதய
பாலொளி யங்கி பரந்தொளி யாகாசம்
நீரொளி செய்து நெடுவிசும் பொன்றிலும்
மேலொளி யைந்தும் ஒருங்கொளி யாமே. ௭

2686 மின்னிய தூவொளி மேதக்க செவ்வொளி
பன்னிய ஞானம் பரந்த பரத்தொளி
துன்னிய வாறெளி தாய்மொழி நாடொறும்
உன்னிய வாறெளி யொத்தது தானே. ௮

2687 விளங்கொளி மின்னெளி யாகிக் கரந்து
துளங்கொளி யீசனைச் சொல்லும்எப் போதும்
உளங்கொளி யூனிடை நின்றுயிர்க் கின்ற
வளங்கொளி எங்கும் மருவினின் றனே. ௯

2688 விளங்கொளி யவ்வொளி யவ்விருள் மன்னுந்
துளங்கொளி யான்தொழு வார்க்கும் ஒளியான்
அளங்கொளி யாரமு தாகநஞ் சாருங்
களங்கொளி யீசன் கருத்தது தானே. ௰

2689 இலங்கிய தெவ்வொளி யவ்வொளி யீசன்
துலங்கொளி போல்வது தூங்கருட் சத்தி
விளங்கொளி மூன்றே விரிசுடர் தோன்றி
உளங்கொளி யுள்ளே யொருங்குகின் றனே. ௰௧

2690 உளங்கொளி யாவதென் உள்நின்ற சீவன்
வளங்கொளி யாகின்ற மாமணிச் சோதி

விளங்கொளி யாய்மின்னி விண்ணில் ஒடுங்கி
வளங்கொளி யாயத்து ளாகிநின் ருனே.

2691 விளங்கொளி யாய்நின்ற விகிர்தன் இருந்த
துளங்கொளி பாசத்துள் தூங்கிருள் சோராக்
களங்கிருள் கட்டமே கண்ணுத லாட
விளங்கொளி புன்மனத் தொன்றினின் ருனே.

2692 போது கருங்குழற் போனவர் தூதிடை
ஆதி பாத்தை அமரர் பிராணெடுஞ்
சோதியும் அண்டத்தப் பாலுற்ற தூவொளி
நீதியி னல்லிருள் நீக்கிய வாறே.

2693 உண்டில்லை யென்னும் உலகத் தியல்லது
பண்டில்லை யென்னும் பரங்கதி புண்டுகொல்
கண்டில்லை மானுடர் கண்ட கருத்துறில்
விண்டில்லை புள்ளே விளக்கொளி யாமே.

2694 சுடருறு ஓங்கிய ஒள்ளொளி யாங்கே
படருறு காட்சிப் பகலவன் ஈசன்
அடருறு மாயையி ளிருள் வீசில்
உடலுறு ஞானத் துறவிய ளுமே.

2695 ஒளிபவ ளத்திரு மேனிவெண் ணீற்றன்
அளிபவ ளச்செம்பொன் ஆதிப் பிராஞங்
களிபவ ளத்தினன் காரிருள் நீங்கி
ஒளிபவ ளத்தென்றே டீசன்நின் ருனே.

2696 ஈசன்நின் ருனிமை யோர்கள்நின் ருர்நின்ற
தேசமொன் றின்றித் திகைத்திழைக் கின்றனர்
பாசமொன் ருகப் பழவினைப் பற்றற
வாசமொன் ருமலர் போன்றது தானே.

2697 தானே யிருக்கும் அவற்றில் தலைவனுந்
தானே யிருக்கும் அவனென நண்ணிடும்
வானே யிருக்குமிம் மாயிரு ஞாலத்துப்
பானே யிருக்கப் பரவலு மாமே.

215. தூல் பஞ்சாக்கரம்

2698 ஐம்ப தெழுத்தே யனைத்துவே தங்களும்
ஐம்ப தெழுத்தே யனைத்தாக மங்களும்
ஐம்ப தெழுத்தின் அடைவை யறிந்தபின்
ஐம்ப தெழுத்தே அஞ்செழுத் தாமே. க

2699 அகார முதலாக ஐம்பத்தான் ருகி
உகார முதலாக வோங்கி யுதித்து
மகார இறுதியாய் மாய்ந்துமாய்ந் தேறி
நகார முதலாகும் நந்திதன் நாமமே. உ

2700 அகராதி யீரெண் கலந்த பரையும்
உகராதி தன்சத்தி யுள்ளொளி யீசன்
சிகராதி தான்சிவ வேதமே கோண
நகராதி தான்மூல மந்திர நண்ணுமே. ங

2701 வாயொடு கண்டம் இதய மருவுந்தி
ஆய இலிங்க மவற்றின்மே லேயவ்வாய்த்
தூயதோர் துண்ட மிருமத் தகஞ்செல்லல்
ஆயதீ ருமைம்தோ டாமெழுத் தஞ்சுமே. ச

2702 கிரணங்கள் ஏழுங் கிளர்ந்தெரி பொங்கிக்
கரணங்கள் விட்டுயிர் தானெழும் போது
மரணங்கை வைத்துயிர் மாற்றிடும் போது
மரணங்கை கூட்டுவ தஞ்செழுத் தாமே. ஞ

2703 ஞாயிறு திங்கள் கனின்றெழு காலத்தில்
ஆயுறு மந்திர மாருமம் அறிகிலர்
சேயுறு கண்ணி திருவெழுத் தஞ்சையும்
வாயுற வோதி வழுத்தலு மாமே. ட

2704 தெள்ளமு தூறச் சிவாய நமவென்
றுள்ளமு தூற வொருகால் உரைத்திடும்
வெள்ளமு தூறல் விரும்பியுண் ணுதவர்
துள்ளிய நீர்போற் சுழல்கின்ற வாறே. எ

2705 குருவழி யாய குணங்களி னின்று
கருவழி யாய கணக்கை யறுக்க
வருவ்வழி மாள மறுக்கவல் லார்கட்
கருள்வழி காட்டுவ தஞ்செழுத் தாமே. அ

2706 வெறிக்க வினைத்துயர் வந்திடும் போது
செறிக்கின்ற நந்தி திருவெழுத் தோதுங்
குறிப்பது வுன்னிற் குரைகழல் கூட்டுங்
குறிப்பறி வான்றவங் கோனுரு வாமே. கூ

2707 நெஞ்சு நினைந்துதம் வாயாற் பிரானென்று
துஞ்சும் பொழுதுன் துணைத்தாள் சரணென்று
மஞ்சு தவழும் வடவரை மீதுறை
அஞ்சில் இறைவன் அருள்பெற லாமே. கூ

2708 பிரான்வைத்த ஐந்தின் பெருமை யுணரா
தராமாற்றஞ் செய்வார்கொல் ஏழை மனிதர்
பராமுற்றுங் கீழொடு பல்வகை யாலும்
ஆராமுற்றுஞ் சூழ்ந்த அகலிடந் தானே. கஈ

216. சூக்கும பஞ்சாக்கரம்

2709 எளிய வாதுசெய் வாரெங்கள் ஈசனை
ஒளியை யுன்னி யுருகு மனத்தராய்த்
தெளிய வோதிச் சிவாய நமவென்னுங்
குளிகை யிட்டுப்பொன் னாக்குவன் கூட்டையே. கூ

2710 சிவன்சத்தி சீவன் செறுமல மாயை
அவஞ்சேர்த்த பாச மலமைந் தகலச்
சிவன்சத்தி தன்னுடன் சீவனைச் சேர
அவஞ்சேர்த்த பாசம் அணுககி லாவே. உ

2711 சிவனரு ளாய சிவன்திரு நாமஞ்
சிவனரு ளான்மாத் திரோத மலமாயை
சிவன்மூத லாகச் சிறந்து நிரோதம்
பவம தகன்று பரசிவ னாமே. ஊ

2712 ஓதிய கம்மலம் எல்லாம் ஒழித்திட்டவ்
வாதி தனைவிட் டிறையருட் சத்தியால்
தீதில் சிவஞான யோகமே சித்திக்கும்
ஓதுஞ் சிவாய மலமற்ற உண்மையே. ச

2713 நமாதி நனுதி திரோதாயி யாகித்
தமாதிய தாய்நிற்கத் தானந்தத் துற்றுச்
சமாதித் துரியந் தமதாக மாகவே
நமாதி ச-மாதி சிவவாதல் எண்ணவே. ஞ

2714 அருடரு மாயமும் அத்தனுக் தம்மில்
ஒருவனை யீன்றவர் உள்ளுறு மாயை
திரிமல நீங்கிச் சிவாயவென் றோதும்
அருவினை தீர்ப்பதும் அவ்வெழுத் தாமே. ட

2715 சிவசிவ என்றே தெளிகிலர் ஊமர்
சிவசிவ வாயுவுந் தோர்ந்துள் அடங்கச்
சிவசிவ வாய தெளிவினுள் ளார்கள்
சிவசிவ வாகுந் திருவரு ளாமே. எ

2716 சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளுஞ்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே. அ

2717 நமவென்னு நாமத்தை நாவில் ஓதுக்கிச்
சிவவென்னு நாமத்தைச் சிந்தையு ளேற்றப்
பவமது தீரும் பரிசும தற்றால்
அவமதி தீரும் அறும்பிறப் பன்றே. க

217. அதிசூக்கும பஞ்சாக்கரம்

2718 சிவாய நமவெனச் சித்தம் ஒருக்கி
அவாயம் அறவே யடிமைய தாக்கிச்
சிவாய சிவசிவ வென்றென்றே சிந்தை
அவாயங் கெடநிற்க ஆனந்த மாமே. க

2719 செஞ்சுடர் மண்டலத் தூடுசென் றப்புற
மஞ்சண வும்முறை யேறி வழிக்கொண்டு
துஞ்சு மவன்சொன்ன காலத் திறைவனை
நெஞ்சென நீங்கா நிலைபெற லாகுமே.

2720 அங்கமும் ஆகம வேதம தோதினும்
எங்கள் பிரானெழுத் தொன்றில் இருப்பது
சங்கைகெட் டவ்வெழுத் தொன்றையுஞ் சாதித்தா
அங்கரை சேர்ந்த அருங்கல மாமே.

2721 பழுத்தன ஐந்தும் பழமறை யுள்ளே
விழுத்தங் குறங்கும் வினையறி வாரில்லை
எழுத்தறி வோமென் றுரைப்பர்கள் ஏதர்
எழுத்தை யழுத்தும் எழுத்தறி யாரே.

218. திருக்கூத்துத் தரிசனம்

2722 எங்குந் திருமேனி எங்குஞ் சிவசத்தி
எங்குஞ் சிதம்பரம் எங்குந் திருநட்டம்
எங்குஞ் சிவமா யிருத்தலால் எங்கெங்குந்
தங்குஞ் சிவனருட் டன்வினை யாட்டதே.

2723 சிற்பரஞ் சோதி சிவானந்தக் கூத்தனைச்
சொற்பத மாம்அந்தச் சுந்தரக் கூத்தனைப்
பொற்பதிக் கூத்தனைப் பொற்றில்லைக் கூத்தனை
அற்புதக் கூத்தனை யாரறி வாரே.

சிவானந்தக் கூத்து

2724 தானந்தம் இல்லாச் சதானந்த சத்திமேல்
தேனுந்தும் ஆனந்த மாநடங் கண்டோர்
ஞானங் கடந்து நடஞ்செய்யும் நம்பிக்கங்
கானந்தக் கூத்தாட ஆடரங் கானதே.

2725 ஆனந்தம் ஆடரங் கானந்தம் பாடல்கள்
ஆனந்தம் பல்லியம் ஆனந்த வாச்சியம்
ஆனந்த மாக அகில சராசரம்
ஆனந்தம் ஆனந்தக் கூத்துகந் தாணுக்கே.

2726 ஒளியாம் பரமும் உளதாம் பரமும்
அளியார் சிவகாமி யாகுஞ் சமயக்
களியார் பரமுங் கருதுறை யந்தத்
தெளிவாஞ் சிவானந்த நட்டத்தின் சித்தியே. ரு

2727 ஆன நடமைக் தகள சகளத்தர்
ஆன நடமாடி ஐங்கரு மத்தாக
ஆன தொழிலரு ளாலெங் தொழிற்செய்தே
தேன்மொழி பாகன் திருநட மாடுமே. சு

2728 பூதாண்ட பேதாண்ட போகாண்ட யோகாண்ட
மூதாண்ட முத்தாண்ட மோகாண்ட தேகாண்ட
தாகாணட மைஙகரு மததாணட தறபரத
தேகாந்த மாம்பிர மாண்டத்த என்பவே. எ

2729 வேதங்க ளாட மிகுஆ கமமாடக்
கீதங்க ளாடக் கிளரண்டம் ஏழாடப்
பூதங்க ளாடப் புவன முழுதாட
நாதங்கொண் டாடினன் ஞானனந்தக் கூத்தே அ

2730 பூதங்கள் ஐந்திற் பொறியிற் புலனைந்தில்
வேதங்கள் ஐந்தின் மிகுமா கமந்தன்னில்
ஓதுங் கலிகாலம் ஊழி யுடன்அண்டப்
போதங்கள் ஐந்திற் புணர்ந்தாடுஞ் சித்தனே. கூ

2731 தேவர சுரர்நரர் சித்தர்வித் தியாதரர்
மூவர்கள் ஆதியின் முப்படத்து மூவர்கள்
தாபதர் சத்தர் சமயஞ் சராசரம்
யாவையும் ஆடிடும் எம்மிறை யாடவே. கo

சுந்தரக் கூத்து

2732 அண்டங்கள் ஏழினுக் கப்புறத் தப்பான்
உண்டென்ற சத்தி சதாசிவத் துச்சிமேற்
கண்டங் கரியான் கருணை திருவுருக்
கொண்டங் குமைகாணக் கூத்துகந் தானே. கக

2733 கொடுகொட்டி பாண்டங் கோடுசங் கார
நடமெட்டோ டைந்தாறு நாடியுள் நாடுந்
திடமுற் றெழுந்தே தவ தாருவாந் தில்லை
வடமுற்ற மாவன மன்னவன் தானே. கஉ

2734 பரமாண்டத் தூடே பராசத்தி பாதம்
பரமாண்டத் தூடே படரொளி ஈசன்
பரமாண்டத் தூடே படர்தரு காதம்
பரமாண்டத் தூடே பரன்கட மாடுமே. கஙூ

2735 அங்குசு மென்ன எழுமாய்க்கம் போதத்தில்
தங்கிய தொந்தி எனுந்தாள ஒத்தினில்
சங்கரன் மூலகா டிக்குள் தரித்தாடல்
பொங்கிய காலம் புகும்போகல் இல்லையே. கச

2736 ஆனத்தி யாடிப் பின்னவக் கூத்தாடி..க்
கானத்தி யாடிக் கருத்தில் தரித்தாடி
மூனச் சுழுனையுள் ஆடி முடிவில்லா
ஞானத்துள் ஆடி முடித்தான்என் நாதனே. கரு

2737 சத்திகள் ஐந்துஞ் சிவபேதந் தானைந்தும்
மூத்திகள் எட்டும் முதலாம் பதமெட்டுஞ்
சித்திகள் எட்டுஞ் சிவபதந் தானெட்டுஞ்
சுத்திகள் எட்டீசன் தொல்கட மாடுமே. கசூ

2738 மேகங்கள் ஏழும் விரிகடல் தீவேழுந்
தேகங்கள் ஏழுஞ் சிவபாற் கரன்ஏழுந்
தாகங்கள் ஏழுஞ் சாந்திகள் ஏழும்
ஆகின்ற நந்தி யடிக்கீழ் அடங்குமே. கஎ

போற்பதிக் கூத்து

2739 தெற்கு வடக்குக் கிழக்குமேற் குச்சியில்
அற்புத மானதோர் அஞ்சு முகத்திலும்
ஒப்பில்பே ரின்பத் துபய உபயத்துள்
தற்பரன் நின்று தனிநடஞ் செய்யுமே. கஅ

2740 அடியார் அரனடி யானந்தங் கண்டோர்
அடியா ரானவ ரத்தரு ளுற்றோர்
அடியார் பவரே யடியவ ராமால்
அடியார் பொன்னம்பலத் தாடல்கண் டாரே. ௧௯

2741 அடங்காத என்னை அடக்கி அடிவைத்
திடங்காண் பரானந்தத் தேனன்னை இட்டு
நடந்தான் செபும்நந்தி நன்ஞானக் கூத்தன்
படந்தான் செய்துள்ளுட் படிந்திருந் தானே. ௨0

2742 உம்பரிற் கூத்தினை உத்தமக் கூத்தினைச்
செம்பொற் றிருமன்றுட் சேவகக் கூத்தினைச்
சம்பந்தக் கூத்தினைத் தற்பரக் கூத்தினை
இன்புற நாடினன் அன்பில்லைவத் தேனை. ௨௧

2743 மாணிக்கக் கூத்தினை வண்திருவாலக் கூத்தினைப்
பூணுற்ற மன்றுட் புரிசடைக் கூத்தினைச்
சேணுற்ற சோதிச் சிவானந்தக் கூத்தினை
ஆணிப்பொற் கூத்தினை யாருரைப் பாரே. ௨௨

2744 விம்முமெ வெருவும் விழுமெழும் மெய்சோருந்
தம்மையுந் தாமறி யார்கள் சதுர்கெடுஞ்
செம்மை சிறந்த திருவம் பலக்கூத்துள்
அம்மலர்ப் பொற்பாதத் தன்புவைப் பார்கட்கே. ௨௩

2745 தேட்டறுஞ் சிந்தை திகைப்பறும் பிண்டத்துள்
வாட்டறுங் கால்புந்தி யாகி வருமுலன்
ஓட்டறு மாசை அறுமூளத் தானந்த
நாட்ட முறுக்குறு நாடகங் காணவே. ௨௪

2746 காளியோ டாடிக் கனகா சலத்தாடிக்
கூளியோ டாடிக் குவலயத் தேயாடி
நீடிய நீர்தீகால் நீள்வா னிடையாடி
நாளுறு அம்பலத் தேயாடும் நாதனே. ௨௫

2747 மேரு நடுநாடி மிக்கிடை பிங்கலை
கூரு மிவ் வானின் இலங்கைக் குறியுறுஞ்
சாரும் திலவனத் தண்மா மலயத்தூ
டேறுஞ் சுழுனை இவைசிவ பூமியே. உசு

2748 பூதல மேருப் புறத்தான தெக்கணம்
ஓதும் இடைபிங் கலையொண் சுழுனையாம்
பாதி மதியோன் பயில்திரு வம்பலம்
ஏதமில் பூதாண்டத் தெல்லையி னீறே. உஎ

பொற்றில்லைக் கூத்து

2749 அண்டங்கள் ஓரேழும் அம்பொற் பதியாகப்
பண்டைய காசங்கள் ஐந்தும் பதியாகத்
தெண்டினிற் சத்தி திருஅம் பலமாகக்
கொண்டு பரஞ்சோதி கூத்துகந் தானே. உஅ

2750 குரானந்த ரேகையாய்க் கூர்ந்த குணமாஞ்
சிரானந்தம் பூரித்துத் தென்திசை சேர்ந்து
புரானந்த போகணைப் பூவையுந் தாணும்
நிரானந்த மாகி நிருத்தஞ்செய் தானே. உக

2751 ஆதி பரன்ஆட அங்கைக் கனலாட
ஓதுஞ் சடையாட உன்மத்த மூற்றூடப்
பாதி மதியாடப் பாரண்ட மீதாட
நாதமோ டாடினன் நாதாந்த நட்டமே. உ0

2752 கும்பிட அம்பலத் தாடிய கோனடம்
அம்பரன் ஆடும் அகிலாண்ட[1]நட்டமாஞ்
செம்பொரு ளாகுஞ் சிவலோகஞ் சேர்ந்துற்றூல்
உம்பர மோனஞா னந்தத்தில் உண்மையே. உக

2753 மேதினி மூவேழ் மிகுமண்டம் ஓரேழு
சாதக மாகுஞ் சமயங்கள் நூற்றெட்டு
நாதமொ டந்த நடானந்த நாற்பதப்
பாதியோ டாடிப் பரனிரு பாதமே. உஉ

2754 இடைபிங் கலையிம வாணை டிலங்கை
கடுநின்ற மேரு கடுவாஞ் சுழுனை
கடவுந் திலவனங் கைகண்ட மூலம்
படர்வொன்றி யென்னும் பரமாம் பரமே. ௬௬

2755 ஈரூன கன்னி குமரியே காவிரி
வேரூ நவதீர்த்த மிக்குள்ள வெற்பேழுள்
பேரூன வேதா கமமே பிறத்தலான்
மாரூத தென்திசை வையகஞ் சுத்தமே. ௬௭

2756 நாதத் தினிலாடி நாற்பதத் தேயாடி
வேதத்தி லாடித் தழலந்த மீதாடி
போதத்தி லாடிப் புவன முழுதாடுந்
தீதற்ற தேவாதி தேவர் பிரானே. ௬௮

2757 தேவரோ டாடித் திருவம்ப லத்தாடி
மூவரோ டாடி முனிசனத் தோடாடிப்
பாவினுள் ஆடிப் பராசத் தியிலாடிக்
கோவினுள் ஆடிடுங் கூத்தப் பிரானே. ௬௯

2758 ஆறு முகத்தில் அதிபதி நானென்றுங்
கூறு சமயக் குருபரன் நானென்றுங்
தேறினர் தெற்குத் திருஅம்ப லத்துளே
வேறின்றி யண்ணல் விளங்கிநின் ரூனே. ௭௦

2759 அம்பலம் ஆடரங் காக அதன்மீதே
எம்பரன் ஆடும் இருதாளி னீரொளி
உம்பர மாம்ஜந்து நாதத்து ரேகையுள்
தம்பத மாய்நின்று தான்வந் தருளுமே. ௭௧

2760 ஆடிய காலும் அதிற்சிலம் போசையும்
பாடிய பாட்டும் பலவான நட்டமுங்
கூடிய கோலங் குருபரன் கொண்டாடத்
தேடியு ளேகண்டு தீர்ந்தற்ற வாறே. ௭௨

2761 இருதயந் தன்னில் எழுந்த பிராணன்
கரசர ணாதி கலக்கும் படியே
அரதன மன்றினின் மாணிக்கக் கூத்தன்
குரவணுப் எங்கணுங் கூத்துகந் தானே. ச0

அற்புதக் கூத்து

2762 குருவுரு வன்றிக் குனிக்கும் உருவம்
அருவுரு வாவது அந்த அருவே
திரிபுரை யாகித் திகழ்தரு வாளும்
உருவரு வாகும் உமையவள் தானே. சக

2763 திருவழி யாவது சிற்றம் பலத்தே
குருவடி வள்ளாக் குனிக்கும் உருவே
உருவரு வாவது முற்றுணர்க் தோர்க்கு
அருள்வழி யாவதும் அவ்வழி தானே. சஉ

2764 நீருஞ் சிரசிடைப் பன்னிரண் டங்குலம்
ஓடும் உயிரெழுந் தோங்கி உதித்திட
நாடுமின் நாதாந்த நம்பெரு மான்உகந்
தாடும் இடந்திரு அம்பலந் தானே. சங

2765 வளிமேக மின்வில்லு வானக வோசை
தெளிய விசும்பில் திகழ்தரு வாறுபோல்
களியொளி யாறுங் கலந்துடன் வேரும்
ஒளியுரு வாகி ஒளித்துநின் றானே. சச

2766 தீமுதல் ஐந்துந் திசையெட்டுங் கீழ்மேலும்
ஆயும் அறிவினுக் கப்புறம் ஆனந்தம்
மாயைமா மாயை கடந்துநின் றார்காண
நாயகன் நின்று நடஞ்செய்யும் வாறே. சஙு

2767 கூத்தன் கலந்திடுங் கோல்வளை யாளொடுங்
கூத்தன் கலந்திடுங் கோதிலா ஆனந்தங்
கூத்தன் கலந்திடுங் கோதிலா ஞானத்துக்
கூத்தனுங் கூத்தியுங் கூத்தின் மேலே. சஙு

2768 இடங்கொண்ட சத்தியும் எந்தை பிராணும்
நடங்கொண்டு நின்றமை நானும் அறிந்தேன்
படங்கொடு நின்றஇப் பல்லுயிர்க் கெல்லாம்
அடங்கலுந் தாமாய்நின் றாடுகின் றாரே. சஎ

2769 சத்தி வடிவு சகல ஆனந்தமும்
ஒத்த ஆனந்தம் உமையவள் மேனியாஞ்
சத்தி வடிவு சகளத் தெழுந்திரண்
டொத்த ஆனந்தம் ஒருநட மாமே. சஅ

2770 நெற்றிக்கு நேரே புருவத் திடைவெளி
உற்றுற்றுப் பார்க்க வொளிவிடு மந்திரம்
பற்றுக்குப் பற்றாய்ப் பரம னிருந்திடஞ்
சிற்றம் பலமென்று சேர்ந்துகொண் டேனே சஆ

2771 அண்டங்கள் தத்துவ மாகிச் சதாசிவந்
தண்டினிற் சாத்தவி சாம்பவி யாதனந்
தெண்டினில் ஏழுஞ் சிவாசன மாகவே
கொண்டு பராஞ்சோதி கூத்துகந் தானே. ரூ

2772 மன்று நிறைந்த விளக்கொளி மாமலர்
கன்றி தானிதழ் காலொடு நாறுவை
சென்றது தானெரு பத்திரு நாறுள
நின்றது தானெடு மண்டல மாமே. ரஎ

2773 அண்டம் எழுகோடி பிண்டம் எழுகோடி
தெண்டிரை சூழ்ந்த திசைகள் எழுகோடி
எண்டிசை சூழ்ந்த இலிங்கம் எழுகோடி
அண்ட நடஞ்செயும் ஆலயந் தானே. ரஉ

2774 ஆகாச மாமுட லங்கார் முயலகன்
ஏகாச மாந்திசை யெட்டுந் திருக்கைகண்
மோகாய முக்கண்கள் மூன்றெரு ளீதாக
மாகாய மன்றுள் நடஞ்செய்கின் றாரே. ரஊ

2775 அம்பல மாவ தகில சராசரம்
அம்பல மாவது ஆதிப் பிரானடி

அம்பல மாவது அப்புத்தீ மண்டலம்
அம்பல மாவது அஞ்செழுத் தாமே. ருச

2776 கூடிய தின்முழ வங்குழ லோமென்று
ஆடிய மானுடர் ஆதிப் பிரானென்ன
நாடிய நற்கண மாரம்பல் பூதங்கள்
பாடிய வாரூரு பாண்டரங் காமே. ருஞ

2777 அண்டத்தில் தேவர்கள் அப்பாலுத் தேவர்கள்
தெண்டிரை சூழ்புவிக் குள்ளுள்ள தேவர்கள்
புண்டரி கப்பதப் பொன்னம் பலக்கூத்துக்
கண்டுசே வித்துக் கதிபெறு வார்களே. ருசு

2778 புளிக்கண் டவர்க்குப் புனலூறு மாபோற்
களிக்குந் திருக்கூத்துக் கண்டவர்க் கெல்லாம்
துளிக்கும் அருட்கண்ணீர் சோர்தெஞ் சுருக்கும்
ஒளிக்குளா னந்தத் தழுதூறும் உள்ளத்தே. ருஎ

2779 திண்டாடி வீழ்கை சிவானந்த மாவது
உண்டார்க் குணவுண்டால் உன்மத்தஞ் சித்திக்குங்
கொண்டாடு மன்றுட் குனிக்குந் திருக்கூத்துக்
கண்டார் வருங்குணங் கேட்டார்க்கும் ஒக்குமே. ருஅ

2780 அங்கி தமருகம் அக்குமா லைபாசம்
அங்குசஞ் சூலங் கபால முடன்ஞானந்
தங்கு புயந்தரு நீல மும்முடன்
மங்கையோர் பாகமாய் மாநட மாடுமே. ருசு

2781 ஆடல் பதிஞெ ருறுப்பும் அடைவாகக்
கூடிய பாதஞ் சிலம்புகைக் கொள்துடி
நீடிய நாதம் பராற்பர னேயத்தே
ஆடிய நந்தி புறமகத் தானே. சுO

2782 ஒன்பதும் ஆட ஒருபதி னுரூட
அன்புறு மார்க்கங்கள் ஆறும் உடனுட
இன்புறும் ஏழினும் ஏழைம்பத் தாறுட
அன்பது மாடினன் ஆனந்தக் கூத்தே. சுக

2783 ஏழினில் ஏழாய் இகழ்ந்தெழுத் தேதழாய்
ஏழினில் ஒன்றாய் இழிந்தமைந் தொான்றுகி
ஏழினிற் சன்மார்க்கம் எங்கள் பரஞ்சோதி
ஏழிசை நாடகத் தேஇசைந் தானே. ௨௨

2784 மூன்றினில் அஞ்சாகி முந்நூற் றறுபதாய்
மூன்றினில் ஆறாய் முதற்பன்னீர் மூலமாய்
மூன்றினில் அக்க முடிவாகி மூந்தியே
மூன்றிலும் ஆடினன் மோகாந்தக் கூத்தே. ௨௩

2785 தாமுடி வானவர் தம்முடி மேலுறை
மாமணி ஈசன் மலரடித் தாளிணை
வாமணி யன்புடை யார்மனத் துள்ளெழுந்
காமணி ஞாலங் கடந்துநின் றானே. ௨௪

2786 புரிந்தவன் ஆடிற் புவனங்க ளாடுந்
தெரிந்தவன் ஆடும் அளவெங்கள் சிந்தை
புரிந்தவ னுடிற்பல் பூதங்கள் ஆடும்
எரிந்தவன் ஆடல்கண் டின்புற்ற வாறே. ௨௫

2787 ஆதி நடஞ்செய்தான் என்பார்கள் ஆதர்கள்
ஆதி நடஞ்செய்கை யாரும் அறிகிலர்
ஆதி நடமாட லாரும் அறிந்தபின்
ஆதி நடமாட லாமருட் சத்தியே. ௨௬

2788 ஒன்பதோ டொன்பதாம் உற்ற இருபதத்
தன்புறு கோணம் அசிபதத் தாடிடத்
துன்புறு சத்தியுள் தோன்றிநின் றுடவே
அன்புறு எந்தைதின் றுடலுற் றானே. ௨௭

2789 தத்துவம் ஆடச் சதாசிவந் தாடைடச்
சித்தமும் ஆடச் சிவசத்தி தாடை
வைத்த சராசரம் ஆட மறையாட
அத்தனும் ஆடினன் ஆனந்தக் கூத்தே. ௨௮

2790 இருவருங் காண எழில்அம் பலத்தே
உருவோ டுருவோ டுருபர ரூபமாய்த்

திருவருட் சத்திக்குள் சித்தரு னந்தன்
அருளரு வாகனின் றூடலுற் றூனே. ௨௬

2791 சிவமாடச் சத்தியும் ஆடச் சகத்தில்
அவமாட ஆடாத அம்பரம் ஆட
கவமான தத்துவ நாதாந்த மாடச்
சிவமாடும் வேதாந்தச் சித்தாந்தத் துள்ளே. ௭0

2792 நாதத்தின் அந்தமும் நாற்போத அந்தமும்
வேதத்தின் அந்தமும் மெய்ச்சிவா னந்தமுங்
தாதற்ற கல்ல சதாசிவா னந்தத்து
நாதப் பிரமஞ் சிவகட மாமே. ௭௪

2793 சிவமாதி ஐவர்தின் டாட்டமுங் தீரத்
தவமார் பசுபாசம் ஆங்கே தனித்துத்
தவமாம் பரனெங்குந் தானுக ஆடுங்
தவமாஞ் சிவானந்தத் தோர்ஞானக் கூத்தே. ௭௨

2794 கூடிநின் றூமினரு காலத்துத் தேவர்கள்
வீடநின் றூன்விகிர் தாவென்னு நாமத்தைத்
தேடநின் றூன்திக ழுஞ்சுடர் மூன்றூளி
ஆடநின் றூன்னென்னை ஆட்கொண்ட வாறே. ௭௩

2795 நாதத் துவங்கடந் தாதி மறைநம்பி
பூதத் துவத்தே பொலிந்தின்பம் எய்தினர்
தேதத் துவமும் அவற்றூடு தேதியும்
பேதப் படாவண்ணம் பின்னிநின் றூனே. ௭௫

2796 ஆனந்தம் ஆனந்தம் என்பர் அறிவிலர்
ஆனந்த மாகட மாரும் அறிகிலர்
ஆனந்த மாகட மாரும் அறிந்தபின்
தானந்தம் அற்றிடம் ஆனந்த மாமே. ௭௬

2797 திருந்துநற் சியென் றுதறிய கையும்
அருந்தவர் வாவென் றணைத்த மலர்க்கையும்
பொருந்தில் இமைப்பிலி யவ்வென்ற பொற்கையுந்
திருந்தத்தீ யாகுந் திருநில மவ்வே. ௭௭

2798 மருவுங் துடியுடன் மன்னிய வீச்சு
மருவிய அப்பும் அனலுடன் கைபுங்
கருவின் மிதித்த கமலப் பதமும்
உருவில் சிவாய நமவென வோதே. என

2799 அரன்துடி தோற்றம் அமைத்தல் திதியாம்
அரன்அங்கி தன்னில் அறையிற்சங் காரம்
அரணுற் றணைப்பில் அமருந் திரோதாயி
அரனடி யென்றும் அணுக்கிரகம் என்னே. எஅ

2800 தீத்திரட் சோதி திகழொளி புள்ளொளி
கூத்தனைக் கண்டஅக் கோமளக் கண்ணினள்
மூர்த்திகள் மூவர் முதல்வ னிடைசெல்லப்
பார்த்தனள் வேதங்கள் பாடினள் தானே. எக

2801 நந்தியை எந்தையை ஞானத் தலைவனை
மந்திர மொன்றுள் மருவி யதுகடந்
தந்தர வானத்தின் அப்புறத் தப்பர
சுந்தரக் கூத்தனை என்சொல்லும் வாறே. அ0

2802 சீய குருநந்தி திருஅம்ப லத்திலே
ஆயுறு மேனியை யாரும் அறிகிலர்
தீயுறு செம்மை வெளுப்பொடு மத்தன்மை
ஆயுறு மேனி அணைபுக லாமே. அக

2803 தானன சத்தியுந் தற்பரை யாய்நிற்குந்
தாணும் பரற்கும் உயிர்க்குந் தகுமிச்சை
ஞானுதி பேத நடத்து நடித்தருள்
ஆனல் அரனடி நேயத்த தாமே. அஉ

219. ஆகாசப்பேறு

2804 உள்ளது ளோமென ஈசன் ஒருவனை
உள்ளத்து ளேயங்கி யாய வொருவனை
உள்ளத்து ளேநீதி யாய வொருவனை
உள்ளத்து ளேயுடல் ஆகாய மாமே. க

2805 பெருநில மாயண்ட மாயண்டத் தப்பால்
குருநில மாய்நின்ற கொள்கையன் ஈசன்
பெருநில மாய்நின்று தாங்கிய தாளோன்
அருநிலை யாய்நின்ற ஆதிப் பிரானே. ஒ

2806 அண்ட வொளியும் அகண்ட வொளியுடன்
பிண்ட வொளியாற் பிதற்றும் பெருமையை
உண்ட வெளிக்குள் ஒளிக்குள் ஒளித்தது
கொண்ட குறியைக் குலைத்தது தானே. ஙு

2807 பயனுறு கன்னியர் போகத்தி னுள்ளே
பயனுறு மாதி பரஞ்சுடர்ச் சோதி
அயனெடு மாலறி யாவகை நின்றிட்
டுயர்நெறி யாயொளி யொன்றது வாமே. ச

2808 அறிவுக் கறிவாம் அகண்ட வொளியும்
பிறியா வலத்தினிற் பேரொளி மூன்றும்
அறியா தடங்கிடில் அத்தன் அடிக்குட்
பிறியா திருக்கிற் பெருங்கால மாமே. ஞ

2809 ஆகாச வண்ணன் அமரர் குலக்கொழுந்
தேகாச மாசுண மிட்டங் கிருந்தவன்
ஆகாச வண்ணம் அமர்ந்துநின் றப்புறம்
ஆகாச மாயங்கி வண்ணனு மாமே. ட

2810 உயிர்க்கின்ற வாறும் உலகமும் ஒக்க
உயிர்க்கின்ற உள்ளொளி சேர்கின்ற போது
குயிற்கொண்ட பேதை குலாவி யுலாவி
வெயிற்கொண்டென் உள்ளம் வெளியது வாமே. ண

2811 நணுகி லகல்கில னுதன் உலகத்
தணுகில் அகன்ற பெரும்பதி நந்தி
நணுகிய மின்னொளி சோதி வெளியைப்
பணியின் அமுதம் பருகலு மாமே. அ

2812 புறத்துளா காசம் புவனம் உலகம்
அகத்துளா காசமெம் மாதி யறிவு
சிவத்துளா காசஞ் செழுஞ்சுடர்ச் சோதி
சகத்துளா காசந் தானஞ்ச மாதியே.

220. ஞானோதயம்

2813 மனசந் தியிற்கண்ட மன்னன வாகுங்
கனவுற வானந்தங் காண்டல் அதனை
வினவுற வானந்த மீதொழி வென்ப
இனமுற்ற னந்தியா னந்த மிரண்டே க

2814 கரியட்ட கையன் கபாலம்கை வந்தி
எரியும் இளம்பிறை சூடும்எம் மானை
அரியன் பெரியனென் றுட்பட்ட தல்லால்
கரியன்கொல் சேயன்கொல் காண்கின்றி லேனே. உ

2815 மிக்கா ரழுதுண்ண நஞ்சுண்ட மேலவன்
தக்கார் உரைத்த தவநெறி யேசென்று
புக்கா லருளும் பொன்னுரை ஞானத்தை
நக்கார் கழல்வழி நாடுமின் நீரே. ங

2816 விளக்கைப் பிளந்து விளக்கினை யேற்றி
விளக்கினுக் குள்ளே விளக்கினைத் தூண்டி
விளக்கில் விளக்கை விளக்குவல் லார்க்கு
விளக்குடை யான்கழல் மேவலு மாமே. ச

2817 தத்துவம் எங்குண்டு தத்துவன் அங்குண்டு
தத்துவம் எங்கில்லை தத்துவன் அங்கில்லை
தத்துவ ஞானத்தின் தன்மை யறிந்தபின்
தத்துவன் அங்கே தலைப்படுந் தானே. ஞ

2818 விசும்பொன்று தாங்கிய மெய்ஞ்ஞானத் துள்ளே
அசும்பினின் றூறிய காரமு தாகும்
பசும்பொன் திகழும் படர்சடை மீதே
குசும்ப மலர்க்கந்தங் கூடிநின் றூனே. ட

2819 மூத்தின் வயிரத்தின் முங்நீர்ப் பவளத்தின்
கொத்தும் பசும்பொன்னின் தூவொளி மாணிக்க
மொத்துயர் அண்டத் துள்ளமர் சோதியை
எத்தன்மை வேறென்று கூறுசெய் வீரே. எ

2820 நானென்றுந் தானென்றும் நாடினேன் நாடலும்
நானென்றுந் தானென் றிரண்டில்லை யென்பது
நானென்ற ஞான மூதல்வனே கல்கிஞன்
நானென்று நாணும் நினைப்பொழிந் தேனே. அ

2821 ஞானத்தின் நன்னெறி நாதாந்த நன்னெறி
ஞானத்தின் நன்னெறி நானென் றறிவோர்தல்
ஞானத்தின் நல்யோக நன்னிலை யேநிற்றல்
ஞானத்தின் நன்மோன நாதாந்த வேதமே. இ

2822 உய்யவல் லார்கட் குயிர்சிவ ஞானமே
உய்யவல் லார்கட் குயிர்சிவ தெய்வமே
உய்யவல் லார்கட் கொடுக்கம் பிரணவம்
உய்யவல் லாரறி வுள்ளறி வாமே. உ

2823 காணவல் லார்க்கவன் கண்ணின் மணியொக்குங்
காணவல் லார்க்குக் கடலின் அமுதொக்கும்
பேணவல் லார்க்குப் பிழைப்பிலன் போர்நந்தி
ஆணவல் லார்க்கே யவன்துணை யாமே. ஊ

2824 ஓமெனும் ஓரெழுத் துள்நின்ற ஓசைபோல்
மேனின்ற தேவர் விரும்பும் விழுப்பொருள்
சேய்நின்ற செஞ்சுடர் எம்பெரு மானடி
ஆய்நின்ற தேவர் அகம்படி. யாமே. ஊ

221. சத்திய ஞானானந்தம்

2825 எப்பாழும் பாழும் மியாவுமாய் அன்றுகி
மூப்பாழும் கீழள மூப்பாழும் முன்னியே
இப்பாழும் இன்னவா றென்பதி லாவின்பத்
தற்பர ஞானானந்தந் தானது வாகுமே. எ

2826 தொம்பதந் தற்பதஞ் சொன்ன துரியம்போல்
நம்பிய மூன்றுந் துரியத்து நன்றுகும்
அம்புவி யுன்ன அதிசூக்க மப்பாலெச்
செம்பொரு ளாண்டருள் சீர்ந்தி தானே. உ

2827 மன்னுஞ் சத்தியாதி மணியொளி மாசோபை
அன்னதோ டொப்ப மிடலொன்று மாறது
இன்னிய வுற்பலம் ஒண்சீர் நிறமணம்
பன்னிய சோபை பகராறு மானதே. ங

2828 சத்தி சிவன்பர ஞானமுஞ் சாற்றுங்கால்
உய்த்த அனந்தஞ் சிவமுயர் ஆனந்தம்
வைத்த சொருபத்த சத்தி வருகுரு
உய்த்த வுடலிவை யுற்பலம் போலுமே. ச

2829 உருவுற் பலநிறம் ஒண்மணஞ் சோபை
தரநிற்ப போலுயிர் தற்பரந் தன்னின்
மருவச் சிவமென்ற மாமுப் பதத்தின்
சொருபத்தன் சத்தியாதி தோன்றநின் றூனே. ஞ

2830 நினையும் அளவின் நெகிழ வணங்கிப்
புனையில் அவனைப் பொதியலு மாகும்
எனையுமெங் கோன்நந்தி தன்னருள் கூட்டி
நினையும் அளவில் நினைப்பித் தனனே. ட

2831 பாலொடு தேனும் பழத்துள் இரதமும்
வாலிய பேரமு தாகும் மதுரமும்
போலுந் துரியம் பொடிபட வுள்புகச்
சீல மயிர்க்கால் தொறுந்தேக் கிடுமே. ண

2832 அமரத் துவங்கடந் தண்டங் கடந்து
தமரத்து நின்ற தனிமையன் ஈசன்
பவளத்து முத்தும் பனிமொழி மாதர்
துவளற்ற சோதி தொடர்ந்துநின் றூனே. அ

2833 மத்திமம் ஆறுறு மாற்றி மலநீக்கிச்
சுத்தம தாகுந் துரியத் துரிசற்றுப்
பெத்த மறச்சிவ மாகிப் பிறழ்வுற்றுச்
சத்திய ஞானனந்தஞ் சார்ந்தனன் ஞானியே. ௫

2834 சிவமா யவமான மும்மலந் தீரப்
பவமான முப்பாழைப் பற்றறப் பற்றத்
தவமான சத்திய ஞானனந் தத்தே
துவமார் துரியஞ் சொரூபம தாமே. ௬0

222. சொரூப உதயம்

2835 பரம குரவன் பரமெங்கு மாகித்
திரமுற எங்கணுஞ் சேர்ந்தொழி வற்று
நிரவு சொரூபத்துள் நீடுஞ் சொரூபம்
அரிய துரியத் தணைந்துநின் றானே. ௬

2836 குலைக்கின்ற நீரிற் குவலய நீரும்
அலைக்கின்ற காற்றும் அனலொடா காச
நிலத்திடை வானிடை நீண்டகன் றான
வரைத்து வலஞ்செயு மாறறி யேனே. ௬

2837 அங்குநின் றானயன் மால்முதல் தேவர்கள்
எங்குநின் றாரும் இறைவனென் றேத்துவர்
தங்கிநின் றன்தனி நாயகன் எம்மிறை
பொங்கிநின் றன்புவ னுபதி தானே. ௬

2838 சமையச் சுவடுந் தனையறி யாமற்
கமையற்ற காமாதி காரணம் எட்டுந்
திமிரச் செயலுந் தெளிவுடன் நின்றோர்
அமரர்க் கதிபதி யாகிநிற் பாரே. ௬

2839 மூவகைத் தெய்வத் தொருவன் முதலுரு
வாயது வேறு மதுபோல் அணுப்பரன்
சேய சிவமுத் துரியத்துச் சீர்பெற
எயும் நெறியென் றிறைநூல் இயம்புமே. ௬

2840 உருவன்றி யேநின் றுருவம் புணர்க்குங்
கருவன்றி யேநின்று தான்கரு வாகும்
அருவன்றி யேநின்ற மாயப் பிராணக்
குருவன்றி யாவர்க்குங் கூடமெவண் ணுமே. கூ

2841 உருவ நினைப்பவர்க் குள்ளுறுஞ் சோதி
உருவ நினைப்பவர் ஊழியுங் காண்பர்
உருவ நினைப்பவர் உம்பரு மாவர்
உருவ நினைப்பவர் உலகத்தில் யாரே. எ

2842 பரஞ்சோதி யாகும்|பதியினைப் பற்றுப்
பரஞ்சோதி என்னுட் படிந்ததற் பின்னைப்
பரஞ்சோதி யுண்ணுன் படியப் படியப்
பரஞ்சோதி தன்னைப் பறையக்கண் டேனே. அ

2843 சொரூபம் உருவங் குணந்தால் விழுங்கி
அறியன வுற்பல மாமாறு போல
மருவிய சத்தியாதி நான்கு மதித்த
சொரூபக் குரவன் சுகோதயத் தானே. கூ

2844 உரையற்ற ஆனந்த மோன|சொரூபத்தன்
கரையற்ற சத்தியாதி காணில் அகார
மருவுற் றுகார மகாரமு தாக
உரையற்ற தாரத்தில் உள்ளொளி யாமே. கஉ

2845 தலைநின்ற தாழ்வரை மீது தவஞ்செய்து
முலைநின்ற மாதறி மூர்த்தியை யாலும்
புலைநின்ற பொல்லாப் பிறவி|கடந்து
கலைநின்ற கள்வனிற் கண்டுகொண் டேனே. கங

2846 ஆமா றறிந்தேன் அகத்தின் அரும்பொருள்
போமா றறிந்தேன் புகுமாறு மீதென்றே
ஏமாப்ப தில்லை இனியோ ரிடமில்லை
நாமா முதல்வனும் நானென லாமே. கஉ

223. ஊழ்

2847 சேற்றிலென் சீவிலென் செஞ்தாக் தணியிலென்
மத்தகத் தேயுளி காட்டி மறிக்கிலென்
வித்தகன் நந்தி விதிவழி யல்லது
தத்துவ ஞானிகள் தன்மைகுன் றாரே. க

2848 தான்முன்னஞ் செய்த விதிவழி தானல்லால்
வான்முன்னஞ் செய்தங்கு வைத்தாேர் மாட்டில்லை
கோன்முன்னஞ் சென்னி குறிவழி யேசென்று
நான் முன்னஞ் செய்தே நன்னில மானதே. உ

2849 ஆறிட்ட நுண்மணல் ஆறே சுமவாதே
கூறிட்டுக் கொண்டு சுமந்தறி வாரில்லை
நீறிட்ட மேனி நிமிர்சடை நந்தியைப்
பேறிட்டென் னுள்ளம் பிரியகி லாவே. ங

2850 வானின் றிடிக்கிலென் மாகடல் பொங்கிலென்
கானின்ற செந்தீக் கலந்துடன் வேகிலென்
தானென்றி மாருதஞ் சண்டம் அடிக்கிலென்
நானென்றி நாதனை நாடுவன் நானே. ச

2851 ஆனை துரக்கிலென் அம்பூ டறுக்கிலென்
கானத் துழுவை கலந்து வளைக்கிலென்
ஏனப் பதியினில் எம்பெரு மான்வைத்த
ஞானத் துழவினை நானுழு வேனே. ஞ

2852 கூடு கெடின்மற்றோர் கூடுசெய் வானுளன்
நாடு கெடினும் நமர்கெடு வாரில்லை
வீடு கெடின்மற்றோர் வீடுபுக்கால் ஒக்கும்
பாடது நந்தி பரிசறி வார்க்கே. ட

224. சிவதரிசனம்

2853 சிந்தைய தென்னச் சிவனென்ன வேறில்லை
சிந்தையி னுள்ளே சிவனும் வெளிப்படுஞ்
சிந்தை தெளியத் தெளியவல் லார்கட்குச்
சிந்தையி னுள்ளே சிவனிருந் தானே. ஠

2854 வாக்கு மனமு மறைந்த மறைப்பொருள்
நோக்குமின் நோக்கப் படும்பொருள் நுண்ணிது
போக்கொன்றும் இல்லை வரவில்லை கேடில்லை
யாக்கமும் அத்தனை ஆய்ந்துகொள் வார்க்கே. உ

2855 பரனுப்ப பாபர னுகியப் பாற்சென்
றுரனுய் வழக்கற வொண்சுடர் தானுய்த்
தரனுய்த் தனதென வாறறி வொண்ணு
அரனு யுலகில் அருள்புரிந் தானே. ங

225. சிவசொரூப தரிசனம்

2856 ஓதும் மயிர்க்கால் தொறும்அமு தூறிய
பேதம் அபேதம் பிறழாத ஆனந்த
மாதி சொரூபங்கள் மூன்றகன் றப்பாலை
வேதம் ஓதுஞ் சொரூபிதன் மேன்மையே. க

2857 உணர்வும் அவனே உயிரும் அவனே
புணரும் அவனே புலவி யவனே
இணரும் அவன்தன்னை யெண்ணலு மாகான்
துணரின் மலர்க்கந்தக் துன்னிநின் றூனே. உ

2858 துன்னிநின் றூன்தன்னை புன்னிமூன் றவிரு
முன்னி யவர்தங் குறையை முடித்திடும்
மன்னிய கேள்வி மறையவன் மாதவன்
சென்னியுள் நின்றதோர் தேற்றத்த னுமே. ஙு

2859 மின்னுற்ற சிந்தை விழித்தேன் விழித்தலுக்
தன்னுற்ற சோதி தலைவன் இணையிலி
பொன்னுற்ற மேனிப் புரிசடை கந்தியும்
என்னுற் றறிவனுன் என்விழித் தானே. ச

2860 சத்திய ஞானத் தனிப்பொருள் ஆனந்தஞ்
சித்தத்தி னில்லாச் சிவானந்தப் பேரொளி
சுத்தப் பிரம துரியந் துரியத்துள்
உய்த்த துரியத் துறுபே ரொளியே. ஞ

2861 பரனல்ல நீடும் பராபர னல்ல
உரனல்ல மீதுணர் ஒண்சுட ரல்ல
தரனல்ல தானவை யாயல்ல வாகும்
அரனல்ல ஆனந்தத் தப்புறத் தானே. ௬

2862 முத்தியுஞ் சித்தியும் முற்றிய ஞானத்தோன்
பத்தியுள் நின்று பரந்தன்னுள் நின்றுமா
சத்தியுள் நின்றோர்க்குத் தத்துவங் கூடலாற்
சுத்தி யகன்றோர் சுகானந்த போதரே. ௭

2863 துரிய அதீதஞ் சொல்லறும் பாழாம்
அரிய துரியம் அதீதம் புரியில்
விரியுங் குவியும் விள்ளா மிளிருந்தன்
உருவுந் திரியும் உரைப்பதெவ் வாறே. ௮

226. முத்தி பேதம், கரும நிருவாணம்

2864 ஓதிய முத்தி யடைவே உயிர்ப்பர
பேதமி லச்சிவம் எய்துந் துரியமோ
டாதி சொலாறுபஞ் சொலாறுபத்த தாகவே
ஏதமி லாநிரு வாணம் பிறந்ததே. ௯

2865 பற்றற் றவர்பற்றி நின்ற பரம்பொருள்
கற்றற் றவர்கற்றுக் கருதிய கண்ணுதல்
சுற்றற் றவர்சுற்றி நின்றஎன் சோதியைப்
பெற்றுற் றவர்கள் பிதற்றெழிந் தாரே. ௰

227. சூனிய சம்பாஷணை

2866 காயம் பலகை கவறைந்து கண்மூன்றுய்
ஆயம் பொருவதோர் ஐம்பத்தோ ரக்கரம்
ஏய பெருமா னிருந்து பொருகின்ற
மாயக் கவற்றின் மறைப்பறி யேனே. ௯

2867 தூறு படர்ந்து கிடந்தது தூநெறி
மாறிக் கிடக்கும் வகையறி வாரில்லை
மாறிக் கிடக்கும் வகையறி வாளர்க்கு
ஊறிக் கிடந்தெதன் உள்ளன்பு தானே. ௰

2868 ஆறு தெருவில் அகப்பட்ட சுந்தியிற்
சாறு படுவன நான்கு பனையுள
ஏறற் கரியதோர் ஏணியிட் டப்பனை
ஏறலுற் றேன்கடல் ஏழுங்கண் டேனே. க

2869 வழுதலை வித்திடப் பாகன் முளைத்தது
புழுதியைத் தோண்டினேன் பூசணி பூத்தது
தொழுதுகொண் டோடினர் தோட்டக் குடிகண்
முழுதும் பழுத்தது வாழைக் கனியே. ச

2870 ஐயென்னும் வித்தினில் ஆனை விளைப்பதோர்
செய்யுண்டு செய்யின் தெளிவறி வாரில்லை
மையணி கண்டன் மனம்பெறின் அந்நிலம்
பொய்யொன்று மின்றிப் புகளளி தாமே. ஞ

2871 பள்ளச்செய் யொன்றுண்டு பாழ்ச்செய் இரண்டுள
கள்ளச்செய் யங்கே கலந்து கிடந்தது
உள்ளச்செய் யங்கே யுழுவுசெய் வார்கட்கு
வெள்ளச்செய் யாகி விளைந்தது தானே. ட

2872 மூவணை யேறு முழுவது முக்காணி
தாமணி கோலித் தறியுறப் பாய்ந்திடு
காவணை கோலி கடுவிற் செறுவுழார்
காலணை கோலிக் களருழு வாரே. ண

2873 ஏற்றம் இரண்டுள ஏழு துரவுள
ஊத்தான் இறைக்க இளையான் படுத்தநீர்
பாத்தியிற் பாயாது பாழ்ப்பாய்ந்து போயிடிற்
கூத்தி வளர்த்ததோர் கோழிப்புள் ளாமே. அ

2874 பட்டிப் பசுக்கள் இருபத்து நாலுள
குட்டிப் பசுக்களோ ரேழுள ஐந்துள
குட்டிப் பசுக்கள் குடப்பால் சொரியினும்
பட்டிப் பசுவே பனவற்கு வாய்த்ததே. ஈ

2875 ஈற்றுப் பசுக்கள் இருபத்து நாலுள
ஊற்றுப் பசுக்கள் ஒருகுடம் பால்போதும்

காற்றுப் பசுக்கள் கறந்துண் ணுங்கா லத்து
மாற்றுப் பசுக்கள் வரவறி யோமே. ௫0

2876 தட்டான் அகத்தில் தலையான மச்சின்மேல்
மொட்டா யெழுந்தது செம்பால் மலர்ந்தது
வட்டம் படவேண்டி வாய்மை மடித்திட்டுத்
தட்டான் அதனைத் தகைந்துகொண் டானே. ௫௫

2877 அரிக்கின்ற காற்றங்கால் அல்லற் கழனி
திரிக்கின்ற வொட்டஞ் சிக்கெனக் கட்டி
வரிக்கின்ற கல்லான் கறவையைப் பூட்டில்
விரிக்கின்ற வெள்ளரி வித்துவித் தாமே. ௫௨

2878 இடாக்கொண்டு தூவி எருவிட்டு வித்திக்
கிடாக்கொண்டு பூட்டிக் கிளறி முளையை
மிடாக்கொண்டு சோறட்டு மெள்ள விழுங்கார்
கிடாக்கொண்டு செங்கல் அறுக்கின்ற வாறே. ௫௩

2879 விளைந்து கிடந்தது மேலைக்கு வித்தது
விளைந்து கிடந்தது மேலைக்குக் காதம்
விளைந்து விளைந்து விளைந்துகொள் வார்க்கு
விளைந்து கிடந்தது மேவுமுக் காதமே. ௫௪

2880 களருழு வார்கள் கருத்தை யறியோங்
களருழு வார்கள் கருதலு மில்லைக்
களருழு வார்கள் களரின் முளைத்த
வளரிள வஞ்சியின் மாய்தலு மாமே. ௫௫

2881 கூப்பிடு கொள்ளாக் குறுநரிக் கொட்டகத்
தாப்பிடு பாசத்தை யங்கியுள் வைத்திட்டு
காட்பட நின்று நலம்புகுந் தாயிழை
ஏற்பட இல்லத் தினிதிருந் தானே. ௫௬

2882 மலைமேல் மழைபெய்ய மான்கன்று துள்ளக்
குலைமேல் இருந்த கொழுங்கனி வீழ
உலைமேல் இருந்த உறுப்பெனக் கொல்லன்
முலைமேல் அமிர்தம் பொழியவைத் தானே. ௫௭

2883 பார்ப்பான் அகத்திலே பாற்பசு ஐந்துண்டு
மேய்ப்பாரும் இன்றி வெறித்துத் திரிவன
மேய்ப்பாரும் உண்டாய் வெறியும் அடங்கிலைற்
பார்ப்பான் பசுஐந்தும் பாலாச் சொரியுமே. கஅ

2884 ஆமாக்கள் ஐந்தும் அரியேறு மூப்பதுந்
தேமா இரண்டொடு திப்பிலி யொன்பதுந்
தாமாக் குரங்கொளிற் றம்மனத் துள்ளன
மூவாக் கடாவிடின் மூட்டுகின் றூரே. கக

2885 எழுதாத புத்தகத் தேட்டின் பொருளைத்
தெருளாத கன்னி தெளிந்திருந் தோத
மலராத பூவின் மணத்தின் மதுவைப்
பிறவாத வண்டு மணமுண்ட வாறே. உ0

2886 போகின்ற பொய்யும் புகுகின்ற பொய்வித்துங்
கூகின்ற நாவலின் கூழைத் தருங்கனி
ஆகின்ற பைங்கூழ் அவையுண் ணும்ஐவரும்
வேகின்ற கூரை விருத்திபெற் றூரே. உக

2887 மூங்கின் முளையில் எழுந்ததோர் வேம்புண்டு
வேம்பினிற் சார்ந்து கிடந்த பணையிலோர்
பாம்புண்டு பாம்பைத் துரத்தித்தின் பாரின்றி
வேம்பு கிடந்து வெடிக்கின்ற வாறே. உஉ

2888 பத்துப் பரும்புலி யானை பதினைந்து
வித்தகர் ஐவர் விறைதகர் ஈரெண்மர்
அத்தகு மூவர் அறுவர் மருத்துவர்
அத்தலை ஐவர் அமர்ந்துநின் றூரே. உங

2889 இரண்டு கடாவுண்டு இவ்வூரி னுள்ளே
இரண்டு கடாவுக்கும் ஒன்றே தொழும்பன்
இரண்டு கடாவும் இருத்திப் பிடிக்கில்
இரண்டு கடாவும் ஒருகடா வாமே. உச

2890 ஒத்த மனக்கொல்லை யுள்ளே சமன்கட்டிப்
பத்தி வலையிற் பருத்தி நிறுத்தலால்

மூத்தக் கயிறுக மூவர்கள் ஊரினுள்
நித்தம் பொருது நிரம்பநின் றூரே. உ

2891 கூகையும் பாம்புங் கிளியொடு பூனைபும
நாகையும் பூழும் நடுவில் உறைவன
நாகையைக் கூகை நணுக லுறுதலுங்
கூகையைக் கண்டெலி கூப்பிடு மாறே. உ

2892 குலைக்கின்ற நன்னகை யாங்கொங் குழக்கின்
நிலைக்கின்ற வெள்ளெலி மூன்று கொணர்ந்தான்
உலைக்குப் புறமெனில் ஓடி யிருக்கும்
புலைக்குப் பிறந்தவை போகின்ற வாறே. உ

2893 காடுபுக் காரினிக் காணர் கடுவெளி
கூடுபுக் கானது ஐந்து குதிரையும்
மூடுபுக் கானது ஆறுள ஓட்டகம்
மூடு புகாவிடின் மூவணை யாமே. உ

2894 கூறையுஞ் சோறுங் குழாயகத் தெண்ணெயுங்
காறையும் நாணும் வளையலுங் கண்டவர்
பாறையி லுற்ற பறக்கின்ற சீலைபோல்
ஆறைக் குழியில் அழுந்துகின் றூரே. உ

2895 துருத்தியுள் ளக்கரை தோன்று மலைமேல்
விருத்திகண் காணிக்கப் போவார்மூப் போதும்
வருத்தியுள் நின்ற மலையைத் தவிர்ப்பாள்
ஒருத்தியுள் ளாளவர் ஊரறி யோமே. ங

2896 பருந்துங் கிளியும் படுபறை கொட்டத்
திருந்திய மாதர் திருமணப் பட்டார்
பெருந்தவப் பூதம் பெறலுரு வாகும்
இருந்திய பேற்றினில் இன்புறு வாரே. ங

2897 கூடும் பறவை இரைகொத்தி மற்றத
னோடுபுக் குண்டி யறுக்குறில் என்னைக்குஞ்
சூடெறி நெய்யுண்டு மைகான் றிடுகின்ற
பாடறி வார்க்குப் பயனெளி தாமே. ங

2898 இலையில்லை பூவுண் டினவண் டிங்கில்லை
தலையில்லை வேருண்டு தாளில்லை பூவின்
குலையில்லை கொய்யும் மலருண்டு சூடுந்
தலையில்லை தாழ்ந்த கிளைபுல ராதே. ௫௬

2899 அக்கரை நின்றதோர் ஆல மரங்கண்டு
நக்கரை வாழ்த்தி நடுவே பயன்கொள்வர்
மிக்கவ ரஞ்சு துயரமுங் கண்டுபோய்த்
தக்கவர் தாழ்ந்து கிடக்கின்ற வாறே. ௫௭

2900 கூப்பிடு மாற்றிலே வன்கா டிருகாதங்
காப்பிடு கள்ளர் கலந்துநின் ருருளர்
காப்பிடு கள்ளரை வெள்ளர் தொடர்ந்திட்டுக்
கூப்பிடு மீண்டதோர் கூரைகொண் டாரே. ௫௮

2901 கொட்டியும் ஆம்பலும் பூத்த குளத்திடை
எட்டியும் வேம்பும் இனியதோர் வாழையுங்
கட்டியுந் தேனுங் கலந்துண்ண மாட்டாதார்
எட்டிப் பழத்துக் கிளைக்கின்ற வாறே. ௫௯

2902 பெடைவண்டும் ஆண்வண்டும் பீடிகை வண்ணைக்
குடைகொண்ட பாசத்துக் கோலமுண் டாலுங்
கடைவண்டு தானுண் ணுங் கண்கலந் திட்ட
பெடைவண்டு தான்பெற்ற தின்பமு மாமே. ௬௦

2903 கொல்லையில் மேயும் பசுக்களைச் செய்தவன்
எல்லை கடப்பித் திறையடிக் கூட்டியே
வல்லசெய் தாற்றன் மதித்தபி னல்லது
கொல்லைசெய் நெஞ்சங் குறியறி யாதே. ௬௧

2904 தட்டத்து நீரிலே தாமரை பூத்தது
குட்டத்து நீரிற் குவளை எழுந்தது
விட்டத்தி னுள்ளே விளங்கவல் லார்கட்குக்
குட்டத்தி லிட்டதோர் கொம்மட்டி யாமே. ௬௨

2905 ஆறு பறவைகள் ஐந்தகத் துள்ளன
நூறு பறவை நுனிக்கொம்பின் மேலன

ஏறும் பெரும்பதி ஏழுங் கடந்தபின்
மாறுத லின்றி மனைடுக லாமே. ௯0

2906 கொட்டனஞ் செய்து குளிக்கின்ற கூவலுள
வட்டனப் பூமி மருவிவந் தூறிடுங்
கட்டனஞ் செய்து கயிற்றூல் தொழுமியுள்
ஓட்டனஞ் செய்தொளி யாவர்க்கு மாமே. ௯௪

2907 ஏழு வளைகடல் எட்டுக் குலவரை
யாழும் விசும்பினில் அங்கி மழைவளி
தாழு மிருநிலந் தண்மை யதுகண்டு
வாழ நினைக்கில தாலய மாமே. ௯௨

2908 ஆலிங் கனஞ்செய் தகஞ்சுடச் சூலத்துச்
சாலிங் கமைத்துத் தலைமை தவிர்த்தனர்
கோலிங் கமைத்தபின் கூடப் பறவைகண்
மாலிங்கன் வைத்தது முன்பின் வழியே. ௯௩

2909 கொட்டுக்குந் தாலி இரண்டே இரண்டுக்குங்
கொட்டுக்குந் தாலிக்கும் பாரை வலிதென்பர்
கொட்டுக்குந் தாலிக்கும் பாரைக்கும் மூன்றுக்கும்
இட்டம் வலிதென்பர் ஈசன் அருளே. ௯௪

2910 கயலொன்று கண்டவர் கண்டே இருப்பர்
மூயலொன்று கண்டவர் மூவருந் உய்வர்
பறையொன்று பூசல் பிடிப்பா ரிருவன்
மறையொன்று கண்ட துருவம்பொன் னாமே. ௯௫

2911 கோரை எழுந்து கிடந்த குளத்தினில்
ஆரை படர்ந்து தொடர்ந்து கிடந்தது
நாரை படுகின்றூற் போலல்ல நாதனர்
பாரை கிடக்கப் படுகின்ற வாறே. ௯௬

2912 கொல்லைமுக் காதமுங் காடரைக் காதமும்
எல்லை மயங்கிக் கிடந்த இருநெறி
எல்லை மயங்கா தியங்கவல் லார்கட்
கொல்லை கடந்துசென் றூர்புக லாமே. ௯௭

2913 உழவொன்று விக்து வொருங்கின காலத்
தெழுமழை பெய்யா திருநிலச் செவ்வி
தழுவி வினைசென்று தான்பய வாது
வழுவாது போவன் வளர்சடை யோனே. சஅ

2914 பதுங்கிலும் பாய்புலி பன்னிரு காதம்
ஓதுங்கிய தண்கடல் ஓதம் உலவ
மதுங்கிய வார்களி யாரமு தூறப்
பொதுங்கிய ஐவரைப் போய்வளைத் தானே. சக

2915 தோணியொன் றேறித் தொடர்ந்து கடல்புக்கு
வாணிபஞ் செய்து வழங்கி வளர்மகன்
நீலிக் கிறையுமே நெஞ்சின் நிலைதளர்ந்
தாலிப் பழம்போல் அளிக்கின்ற அப்பே. நஅ

2916 முக்காத மாற்றிலே மூன்றுள வாழைகள்
செக்குப் பழுத்த திரிமலங் காய்த்தன
பக்கனர் மிக்கார் படங்கிலர் கன்னியர்
நக்கு மலருண்டு நடுவுநின் றூரே. நக

2917 அடியும் முடியும் அமைந்தோர் ஆத்தி
முடியும் நுனியின்கண் மூத்தலை மூங்கில்
கொடியும் படையுங் கோட்சரன் ஐயைந்து
மடியும் வலம்புரி வாய்த்ததவ் வாறே. நஉ

2918 பன்றியும் பாம்பும் பசுமுசு வானரந்
தென்றிக் கிடந்த சிறுநரிக் கூட்டத்துக்
குன்றூழை கூடித் தராசின் நிறுத்தபின்
குன்றி நிறையைக் குறைக்கின்ற வாறே. நங

2919 மொட்டித் தெழுந்தோதார் மொட்டுண்டு மொட்டினைக்
கட்டுவிட் டோடின் மலர்தலுங் காணலாம்
பற்றுவிட் டம்மனை பாழ்பட நோக்கிறற்
கட்டுவிட் டார்க்கன்றிக் காணவொண் ணுதே. நச

2920 நீரின்றிப் பாயும் நிலத்தினிற் பச்சையாம்
யாவரும் என்றும் அறியவல் லாரில்லை

கூரு மழைபொழி யாது பொழிபுனல்
தேரினிற் நீர்மை திடரினில் லாதே. நந

2921 கூகை குருந்தம தேறிக் குணம்பயில்
மோகம் உலகுக் குணர்கின்ற காலத்து
நாகமும் ஒன்று நடுவுரை செய்திடும்
பாகனு மாகின்ற பண்பனு மாமே. நசு

2922 வாழைபுந் சூரையும் வந்திடங் கொண்டன
வாழைக்குச் சூரை வலிது வலிதென்பர்
வாழைபுந் சூரையும் வன்துண்டஞ் செய்திட்டு
வாழை யிடங்கொண்டு வாழ்கின்ற வாறே. நஎ

2923 நிலத்தைப் பிளந்து நெடுங்கடல் ஓட்டிப்
புனத்துக் குறவன் புணர்ந்த கொழுமீன்
விலக்குமின் யாவர்க்கும் வேண்டிற் குறையா
தருத்தமு மின்றி யடுவது மாமே. நஅ

2924 தளிர்க்கும் ஒருபிள்ளை தட்டா னகத்தில்
விளிப்பதோர் சங்குண்டு வேந்தனை நாடிக்
களிக்குங் குசவர்க்குங் காவிதி யார்க்கும்
அளிக்கும் பதத்தினான் முய்ந்துகொள் வார்க்கே. நக

2925 குடைவிட்டுப் போந்தது கோயில் எருமை
படைகண்டு மீண்டது பாதி வழியில்
உடையவன் மந்திரி யுள்ளலும் ஊரார்
அடையா நெடுங்கடை ஐந்தாடு நான்கே. கo

2926 போகின்ற எட்டும் புகுகின்ற பத்தெட்டும்
ஆகிப் படைத்தன ஒன்பது வாய்தலும்
நாகமும் எட்டொடு நாலு புரவியும்
பாகன் விடாவிடிற் பன்றியு மாமே. கக

2927 பாசி படர்ந்து கிடந்த குளத்திடைக்
கூசி யிருக்குங் குருகினை தேர்ந்துண்ணுந்
தூசி மறவன் துணைவழி எய்திடப்
பாசங் கிடந்து பதைக்கின்ற வாறே. கஉ

2928 கும்ப மலைமேல் எழுந்ததோர் கொம்புண்டு
கொம்புக்கும் அப்பால் அடிப்பதோர் காற்றுண்டு
வம்பாய் மலர்ந்ததோர் பூவுண்டப் பூவுக்குள்
வண்டாய்க் கிடந்து மணங்கொள்வன் ஈசனே. சுசுடு

2929 வீணையுந் தண்டும் விரவி யிசைமூரல்
தாணுவும் மேவித் தகுதலைப் பெய்தது
வாணிபஞ் சிக்கென் றதுவடை யாமுன்னங்
காணியும் அங்கே கலக்கின்ற வாறே. சுசு

2930 கொங்குபுக் காரொடு வாணிபஞ் செய்தது
வங்குபுக் காலன்றி ஆய்ந்தறி வாரில்லை
திங்கள்புக் கால்இரு ளாவ தறிந்திலர்
தங்குபுக் கார்சிலர் தாபதர் தாமே. சுருி

2931 போதும் புலர்ந்தது பொன்னிறங் கொண்டது
தாதவிழ் புன்னை தயங்கு மிருகரை
ஏதமில் ஈசன் இயங்கு நெறியிது
மாத ரிருந்தோதார் மண்டலந் தானே. சுசூ

2932 கோழுற் றமருங் குடிகளுந் தம்மிலே
காழுற்ற கத்தி இடுவர் கடைதொறு
மீவற்ற வெல்லை விடாது வழிகாட்டி
யாழுற்ற தட்டினுல் ஐந்துண்ண லாமே. சுஎ

2933 தோட்டத்தில் மாம்பழந் தோண்டி விழுந்தக்கால்
நாட்டின் புறத்தில் நரியழைத் தென்செயும்
மூட்டிக் கொடுத்து முதல்வனை முன்னிட்டு
காட்டிக் கொடுத்தவர் கைவிட்ட வாறே. சுஅ

2934 புலர்ந்தது போதென்று புட்கள் சிலம்பப்
புலர்ந்தது போதென்று பூங்கொடி புல்லிப்
புலம்பி னவளோடும் போக நுகரும்
புலம்பனுக் கென்றும் புலர்ந்திலை போதே. சுஆ

2935 தோணியொன் றுண்டு துறையில் விடுவது
வாணி மிதித்துநின் றைவர்கோ லூன்றலும்
வாணிபஞ் செய்வார் வழியிடை யாற்றிடை
ஆணி கலங்கில் அதுவிது வாமே.

228. மோன சமாதி

2936 நின்றூர் இருந்தார் கிடந்தார் எனவில்லை
சென்றூர்தஞ் சித்த மோன சமாதியாம்
மன்றேறு மங்கே மறைப்பொரு ளொன்றுண்டு
சென்றுங் கணிணந்தவர் சேர்கின்ற வாறே.

2937 காட்டுங் குறியுங் கடந்தவர் காரணம்
ஏட்டின் புறத்தில் எழுதிவைத் தென்பயன்
கூட்டுங் குருநந்தி கூட்டிடி னல்லது
ஆட்டின் கழுத்தில் அதர்கிடந் தற்றே.

2938 உணர்வுடை யார்கட் குலகழுந் தோன்றும்
உணர்வுடை யார்கட் குறுதுய ரில்லை
உணர்வுடை யார்கள் உணர்ந்தஅக் காலம்
உணர்வுடை யார்கள் உணர்ந்துகண் டாரே.

2939 மறப்பது வாய்ந்தின்ற மாயநன் னுடன்
பிறப்பினை நீங்கிய பேரரு ளாளன்
சிறப்புடை யான்திரு மங்கையுந் தானும்
உறக்கமில் போகத் துறங்கிடுந் தானே.

2940 துரியங்கள் மூன்றும் கடந்தொளிர் சோதி
அரிய துரிய மதில்மீது மூன்றுய்
விரிவு குவிவு விழுங்கி யுமிழ்ந்தே
உரையில் அநுபூ திகத்தினுள் ளானே.

2941 உருவிலி யூனிலி யூனமொன் றில்லி
திருவிலி தீதிலி தேவர்க்குந் தேவன்
பொருவிலி பூதப் படையுடை யாளி
மருவிலி வந்தென் மனம்புகுந் தானே.

2942 கண்டறி வாரில்லைக் காயத்தின் நந்தியை.
எண்டிசை யோரும் இறைவனென் றேத்துவர்
அண்டங் கடந்த அளவிலா ஆனந்தத்
தொண்டர் முகந்த துறையறி யோமே. எ

2943 தற்பர மல்ல சதாசிவன் தானல்ல
நிட்கள மல்ல சகள நிலையல்ல
அற்புத மாகி யநுபோகக் காமம்போற்
கற்பனை யின்றிக் கலந்துநின் றூனே. அ

2944 முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்
அகத்திற் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்
மகட்குத் தாய்தன் மணாளனை டாடிய
சுகத்தைதச் சொல்லென்றூற் சொல்லுமா றெங்ஙனே.

2945 அப்பினில் உப்பென அத்தன் அணைந்திட்டுச்
செப்பு பராபரஞ் சேர்பர மும்விட்டுக்
கப்புறு சொற்பத மாளக் கலந்தமை
எப்படி யப்படி என்னுமவ் வாறே. கூ

2946 கண்டார்க் கழகிது காஞ்சிரத் தின்பழந்
தின்றூர்க் கறியலாம் அப்பழத் தின்சுவை
பெண்டா னிரம்பி மடவிய ளாணற்
கொண்டான் அறிவன் குணம்பல தானே. கக

2947 நந்தி யிருந்தான் நடுவுத் தெருவிலே
சந்தி சமாதிகள் தாமே யொழிந்தன
உந்தியி னுள்ளே யுதித்தெழுஞ் சோதியைப்
புந்தியி னூலே புணர்ந்துகொண் டேனே. கஉ

2948 விதறு படாவண்ணம் வேறிருந் தாய்ந்து
பதறு படாதே பழமறை பார்த்துக்
கதறிய பாழைக் கடந்தந்தக் கற்பனை
உதறிய பாழில் ஒடுங்குகின் றேனே. கஙு

2949 வாடா மலர்புனை சேவடி வானவர்
கூடார் அறநெறி நாடொறு மின்புறச்
சேடார் கமலச் செழுஞ்சுட ருட்சென்று
நாடார் அழுதுற நாடார் அழுதமே. கச

2950 அதுக்கென் றிருவர் அமர்ந்தசொற் கேட்டும்
பொதுக்கெனக் காமம் புலப்படு மாபோல்
சதுக்கென்று வேறே சமைந்தாரைக் காண
மதுக்கொன்றைத் தாரான் வளந்தரு மன்றே. கஞ

2951 தாணும் அழிந்து தனமும் அழிந்துநீ
ருணும் அழிந்து உயிரும் அழிந்துடன்
வாணும் அழிந்து மனமும் அழிந்துபின்
நாணும் அழிந்தமை நானறி யேனே. கசு

2952 இருளும் வெளியும் இரண்டையும் மாற்றிப்
பொருளிற் பொருளாய்ப் பொருந்தவுள் ளாகி
அருளால் அழிந்திடும் அத்தன் அடிக்கே
உருளாத கன்மன முற்றுநின் றேனே. கஎ

2953 ஒன்றிநின் றுள்ளே யுணர்ந்தேன் பராபரம்
ஒன்றிநின் றுள்ளே யுணர்ந்தேன் சிவகதி
ஒன்றிநின் றுள்ளே யுணர்ந்தேன் உணர்வினை
ஒன்றிநின் றேபல வூழிகண் டேனே. கஅ

229. வரையுரை மாட்சி

2954 தான்வரை வற்றபி னுரை வரைவது
தானவ னுனபி னுரை நினைவது
காமனை வென்றகண் ணுரை யுகப்பது
தூமொழி வாசகஞ் சொல்லுமின் நீரே. க

2955 உரையற்ற தொன்றை யுரைசெய்பு மூமர்காள்
கரையற்ற தொன்றைக் கரைகாண லாகுமோ
திரையற்ற நீர்போல் சிந்தை தெளிவார்க்குப்
புரையற் றிருந்தான் புரிசடை யோனே. உ

2956 மனமாயை மாயையிம் மாயை மயக்க
மனமாயை தான்மாய மற்றொன்று மில்லை
பினமாய்வ தில்லை பிதற்றவும் வேண்டா
தனையாய்ந் திருப்பது தத்துவந் தானே. ங

230. அணைந்தோர் தன்மை

2957 மலமில்லை மாசில்லை மாறுபி மானங்
குலமில்லை கொள்ளுங் குணங்களு மில்லை
கலமில்லை நந்தியை ஞானத்தி னுலே
பலமன்னி யன்பிற் பதித்துவைப் போர்க்கே. க

2958 ஒழிந்தேன் பிறவி யுறவென்னும் பாசங்
கழிந்தேன் கடவுளும் நானுமொன் றுனேன்
அழிந்தாங் கினிவரு மாக்கமும் வேண்டேன்
செழுஞ்சார் புடைய சிவனைக்கண் டேனே. உ

2959 ஆலைக் கரும்பும் அழுதும்அக் காரமுஞ்
சோலைத் தண்ணீரும் உடைத்தெங்கள் நாட்டிடைப்
பீலிக்கண் ணன்ன வடிவுசெய் வாளொரு
கோலப்பெண் ணூட்குக் குறையொன்று மில்லையே. ங

2960 ஆராலும் என்னை அமட்டவொண் ணுதினிச்
சீரார் பிரான்வந்தென் சிந்தை புகுந்தனன்
சீராடி யங்கே திரிவதல் லால்இனி
யார்பாடுஞ் சாரா அறிவறிந் தேனே. ச

2961 பிரிந்தேன் பிரமன் பிணித்ததோர் பாசந்
தெரிந்தேன் சிவகதி செல்லு நிலையை
அரிந்தேன் வினையை அயில்மன வாளால்
முரிந்தேன் புரத்தினை முந்துகின் றேனே. ஞ

2962 ஒன்றுகண் டூர்உல குக்கொரு தெய்வமும்
ஒன்றுகண் டூர்உல குக்குயி ராவதும்
நன்றுகண் டூர்இனி நமசிவா யப்பழந்
தின்றுகண் டேற்கிது தித்தித்த வாறே. ட

2963 சந்திரன் பாம்பொடுஞ் சூடுஞ் சடாதரன்
வந்தென்ன யாண்ட மணிவிளக் கானவன்
அந்தமும் ஆதியும் இல்லா அரும்பொருள்
சிந்தையின் மேவித் தியக்கறுத் தானே. எ

2964 பண்டெங்கள் ஈசன் நெடுமால் பிரமனைக்
கண்டங் கிருக்குங் கருத்தறி வாரில்லை
விண்டங்கே தோன்றி வெறுமன மாயிடில்
துண்டங் கிருந்ததோர் தூறது வாமே. அ

2965 அன்னையும் அத்தனும் அன்புற்ற தல்லது
அன்னையும் அத்தனு மாறறி வாரென்ன
அன்னையும் அத்தனும் யானும் உடனிருந்
தன்னையும் அத்தன யான்புரந் தேனே. கூ

2966 கொண்ட சுழியுங் குலவரை யுச்சியும்
அண்டரும் அண்டத் தலைவரும் ஆதியும்
எண்டிசை யோருமவ் வெண்கைத் தலத்துளே
உண்டனர் நானினி உய்ந்தொழிந் தேனே. கo

2967 தானே திசையொடு தேவரு மாய்நிற்குந்
தானே வடவரை யாதியு மாய்நிற்குந்
தானே யுடலுயிர்த் தத்துவ மாய்நிற்குந்
தானே யுலகில் தலைவனு மாமே. கக

2968 நமன்வரின் ஞானவாள் கொண்டே எறிவன்
சிவன்வரின் நானுடன் போவது திண்ணம்
பவம்வரும் வல்வினை பண்டே யறுத்தேன்
தவம்வருஞ் சிந்தைக்குத் தானெதி ராரே. கஉ

2969 சித்தஞ் சிவமாய் மலமூன்றுஞ் செற்றவர்
சுத்தச் சிவமாவர் தோயார் மலபந்தங்
கத்துஞ் சிலுகுங் கலகமுங் கைகாணர்
சத்தம் பரவிந்து தாணுமென் றெண்ணினே. கங

2970 நினைப்பும் மறப்பும் இலாதவர் நெஞ்சடம்
வினைப்பற் றறுக்கும் விமலன் இருக்கும்

வினைப்பற் றறுக்கும் விமலனைத் தேடி
நினைக்கப் பெறிலவன் நீளிய ணுமே. கச

2971 சிவபெரு மானென்று நானழைத் தேதத்தத்
தவபெரு மானென்று தான்வந்து நின்ருன்
அவபெரு மானென்னை யாளுடை நாதன்
பவபெரு மானைப் பணிந்துநின் றேனே. கரு

2972 பணிந்துநின் றேன்பர மாதி பதியைத்
துணிந்துநின் றேன்இனி மற்ருன்றும் வேண்டேன்
அணிந்துநின் றேனுடல் ஆதிப் பிரானைத்
தணிந்துநின் றேன்சிவன் தன்மைகண் டேனே. கசு

2973 என்னெஞ்சம் ஈசன் இணையடி தாஞ்சேர்ந்து
முன்னஞ்செய் தேதத்த முழுதும் பிறப்பறுந்
தன்னெஞ்சம் இல்லாத் தலைவன் தலைவிதி
பின்னஞ்செய் தென்னைப் பிணக்கறுத் தானே. கஎ

2974 பிணக்கறுத் தான்பினி மூப்பறுத் தெண்ணுங்
கணக்கறுத் தாண்டனன் காணந்தி என்னைப்
பிணக்கறுத் தென்னுடன் முன்வந்த துன்பம்
வணக்கலுற் றேன்சிவம் வந்தது தானே. கஅ

2975 சிவன்வந்து தேவர் குழாமுடன் கூடப்
பவம்வந் திடுநின்ற பாசம் அறுத்திட்
டவனெந்தை யாண்டருள் ஆதிப் பெருமான்
அவன்வந்தென் னுள்ளே யகப்பட்ட வாறே. கஉ

2976 கரும்புந் தேனுங் கலந்தேதார் காயத்தில்
அரும்புங் கந்தமு மாகிய ஆனந்தம்
விரும்பியே உள்ளம் வெளியுறக் கண்டபின்
கரும்புங் கைத்தது தேனும் புளித்ததே. உ0

2977 உள்ள சரியாதி ஓட்டியே மீட்டென்பால்
வள்ளல் அருத்தியே வைத்த வளம்பாடிச்
செய்வன எல்லாஞ் சிவமாகக் காண்டலாற்
கைவள மின்றிக் கருக்கடந் தேனே. உக

2978 மீண்டார் கமலத்துள் அங்கி மிகச்சென்று
தூண்டா விளக்கின் றகளிநெய் சோர்தலும்
பூண்டாள் ஒருத்தி புவனசூ டாமணி
மாண்டா ளெருவன்கை வந்தது தானே. உஉ

2979 ஆறே யருவி யகங்குளம் ஒன்றுண்டு
நூறே சிவகதி நுண்ணிது வண்ணமுங்
கூறே குவிமுலைக் கொம்பனை யாளொடும்
வேறே யிருக்கும் விழுப்பொருள் தானே. உங

2980 அன்புள் உருகி அழுவன் அரற்றுவன்
என்பும் உருவ இராப்பகல் ஏத்துவன்
என்பொன் மணியை இறைவனை யீசனைத்
தின்பன் கடிப்பன் திருத்துவன் தானே. உச

2981 மண்மி ரிந்து குவிந்தது மாதவ
மனம்வி ரிந்து குவிந்தது வாயு
வனம்வி ரிந்து குவிந்தது மன்னுயிர்
மனம்வி ரிந்துரை மாண்டது முத்தியே. உஞ

231. தோத்திரம்

2982 மாயனை நாடி மனநெடுந் தேரேறிப்
போயின நாடறி யாதே புலம்புவர்
தேயமும் நாடுந் திரிந்தெங்கள் செல்வனைக்
காயமின் னுட்டிடைக் கண்டுகொண் டேனே. க

2983 மன்னு மலைபோல் மதவா ரணத்தின்மேல்
இன்னிசை பாட இருந்தவ ராரொனில்
முன்னியல் கால முதல்வனுர் நாமத்தைப்
பன்னினர் என்றே பாடறி வீரே. உ

2984 மூத்தினின் மூத்தை முகிழிள ஞாயிற்றை
எத்தனை வானேரும் ஏத்தும் இறைவனை
அத்தனைக் காணு நரற்றுகின் றேனையோர்
பித்தன் இவனென்று பேசுகின் றீரே.

2985 புகுந்துநின் ருனெங்கள் புண்ணிய மூர்த்தி
புகுந்துநின் ருனெங்கள் போதறி வாளன்
புகுந்துநின் ருனடி யார்தங்கள் நெஞ்சம்
புகுந்துநின் ருனேயே போற்றுகின் றேனே. ச

2986 பூதக்கண் ணுடியிற் புகுந்திலன் போதுளன்
வேதக்கண் ணுடியில் வேறே வெளிப்படு
நீதிக்கண் ணுடி நினைவார் மனத்துளன்
கீதக்கண் ணுடியிற் கேட்டுநின் றேனே. ஞ

2987 நாமமோ ராயிரம் ஓதுமின் நாதனை
ஏமமோ ராயிரத் துள்ளே இசைவீர்கள்
ஓமமோ ராயிரம் ஓதவல் லாரவர்
காமமோ ராயிரங் கண்டொழிந் தாரே. ட

2988 போற்றுகின் றேன்புகழ்ந் தும்புகழ் ஞானத்தைத்
தேற்றுகின் றேன்சிந்தை நாயகன் சேவடி
சாற்றுகின் றேன்அறை யோசிவ யோகத்தைப்
போற்றுகின் றேன்எம் பிரானென்று நானே. ஠

2989 நாணுவிதஞ்செய்து நாடுமின் நந்தியை
ஊனுர் கமலத்தி னூடுசென் றப்புறம்
வானோர் உலகம் வழிப்பட மீண்டபின்
தேனுரா வுண்டு தெவிட்டலு மாமே. அ

2990 வந்துநின் ருனடி யார்கட் கரும்பொருள்
இந்திர னுதி இமையவர் வேண்டினுஞ்
சுந்தர மாதர் துழனியொன் றல்லது
அந்தர வானத்தின் அப்புற மாமே. கூ

2991 மண்ணிற் கலங்கிய நீர்போல் மனிதர்கள்
எண்ணிற் கலங்கி இறைவன் இவனென்னுர்
உண்ணிற் குளத்தின் முகந்தொரு பால்வைத்துத்
தெண்ணிற் படுத்த சிவனவ னேமே. கூ

2992 மெய்த்தவத் தானை விரும்பும் ஒருவர்க்குக்
கைத்தலஞ் சேர்தரு நெல்லிக் கனியொக்குஞ்

சுத்தனைத் தூய்நெறி யாய்நின்ற தேவர்கள்
அத்தனை காடி அமைந்தொழிந் தேனே. ககூ

2993 அமைந்தொழிந் தேன்அள விற்புகழ் ஞானஞ்
சமைந்தொழிந் தேன்தடு மாற்றமொன் றில்லை
புகைந்தெழும் பூதலம் புண்ணியன் நண்ணி
வகைந்து கொடுக்கின்ற வள்ளலு மாமே. கூ

2994 வள்ளற் றலைவனை வானவன் முடனை
வெள்ளப் புனற்சடை வேத முதல்வனைக்
கள்ளப் பெருமக்கள் காண்பர்கொ லோவென்று
உள்ளத்தி னுள்ளே யொளித்திருந் தாளுமே. கூக

2995 ஆளும் மலர்ப்பதந் தந்த கடவுளை
காளும் வழிபட்டு நன்மையுள் நின்றவர்
கோளும் வினையும் அறுக்குங் குரிசிலின்
வாளு மனத்தொடும் வைத்தொழிந் தேனே. கூச

2996 விருப்பில் அவனடி வீர சுவர்க்கம்
பொருந்தில் அவனடி புண்ணிய லோகந்
திருந்தில் அவனடி தீர்த்தமு மாகும்
வருந்தி யவனடி வாழ்த்தவல் லார்க்கே. கூரு

2997 வானக மூடறுத் தானிவ் வுலகினில்
தானக மில்லாத் தனியாகும் போதகன்
கானக வாழைக் கனிதுகர்ந் துள்ளூறும்
பானகச் சோதியைப் பற்றிநின் றேனே. கூரு

2998 விதியது மேலை யமரர் உறையும்
பதியது பாய்புனற் கங்கையும் உண்டு
துதியது தொல்வினைப் பற்றறு விக்கும்
பதியது வவ்விட்ட தந்தமு மாமே. கூள

2999 மேலது வானவர் கீழது மாதவர்
தானிடர் மானுடர் கீழது மாதனங்
கானது கூவிள மாலை கமழ்சடை
ஆனது செய்யுமெம் ஆருயிர் தானே. கூஅ

3000 சூழுங் கருங்கடல் நஞ்சுண்ட கண்டனை,
எழும் இரண்டிலும் ஈசன் பிறப்பிலி
யாழுஞ் சுனையும் அடவியும் அங்குளன்
வாழும் எழுத்தைந்து மன்னனு மாமே. ௯

3001 உலகமெ தொத்துமண் ணெத்துயர் காற்றை
அலர்கதிர் அங்கியொத் தாதிப் பிரானும்
நிலவிய மாமுகில் நீரொத்து மீண்டச்
செலவொத் தமர்திகைத் தேவர்பி ரானே. ௰

3002 பரிசறிந் தங்குளன் அங்கி அருக்கன்
பரிசறிந் தங்குளன் மாருதத் தீசன்
பரிசறிந் தன்னிலம் பாரிக்கு மாறே. ௰௧

3003 அந்தங் கடந்தும் அதுவது வாய்நிற்கும்
பந்த வுலகினிற் கீழோர் பெரும்பொருள்
தந்த வுலகெங்குந் தானே பராபரன்
வந்து படைக்கின்ற மாண்பது வாமே. ௰௨

3004 முத்தண்ட வீரண்ட மேமுடி யாயினும்
அத்தன் உருவம் உலகே ழெனப்படும்
அத்தனின் பாதாளம் அளவுள்ள சேவடி
மத்தர் அதனை மகிழ்ந்துண ராரே. ௰௩

3005 ஆதிப் பிரான்நம் பிரானவ் வகலிடச்
சோதிப் பிரான்சுடர் மூன்றெளி யாய்நிற்கும்
ஆதிப் பிரான்அண்டத் தப்புறங் கீழவன்
ஆதிப் பிரான்நடு வாகினின் றானே. ௰௪

3006 அண்டங் கடந்துயர்ந் தோங்கும் பெருமையன்
பிண்டங் கடந்த பிறவிச் சிறுமையன்
தொண்டர் நடந்த கனைகழல் காண்டொறுந்
தொண்டர்கள் தூய்நெறி தூங்கினின் றானே. ௰௫

3007 உலவுசெய் நோக்கம் பெருங்கடல் சூழ
நிலமுழு தெல்லா நிறைந்தனன் ஈசன்

பலமுழு தெல்லாம் படைத்தனன் முன்னே
புலமுழு பொன்னிற மாகிநின் றூனே. உசு

3008 பராபர ணுகிப்பல் லூழிகள் தோறும்
பராபர ணுயிவ் வகலிடந் தாங்கித்
தராபர ணுய்நின்ற தன்மை யுணரார்
நிராபர ணுகி நிறைந்துநின் றூனே. உஎ

3009 போற்றும் பெருந்தெய்வந் தானே பிறரில்லை
ஊற்றமும் ஓசையும் ஓசை யொடுக்கமும்
வேற்றுடல் தானென் றதுபெருந் தெய்வமாங்
காற்றது ஈசன் கலந்துநின் றூனே. உஅ

3010 திகையனைத் துஞ்சிவ னேயவ ணுகின்
மிகையனைத் துஞ்சொல்ல வேண்டா மனிதரே
புகையனைத் தும்புறம் அங்கியிற் கூடு
மூகையனைத் தும்எங்கள் ஆதிப் பிரானே. உக

3011 அகன்றூன் அகவிடம் ஏழுமொன் றூகி
இவன்றூ னெனநின் றெளியனு மல்லன்
சிவன்றூன் பலபல சீவனு மாகி
நவின்றூன் உலகுறு நம்பனு மாமே. ஈ0

3012 கலையொரு மூன்றுங் கடந்தப்பால் நின்ற
தலைவனை நாடுமின் தத்துவ நாதன்
விலையில்லை விண்ணவ ரோடும் உரைப்பன்
நரையில்லை யுள்ளூறு முள்ளவன் தானே. ஈக

3013 படிகால் பிரமன்செய் பாசம் அறுத்து
நெடியான் குறுமைசெய் நேசம் அறுத்துச்
செடியார் தவத்தினிற் செய்தொழில் நீக்கி
அடியேனை உய்யவைத் தன்புகொண் டானே. ஈஉ

3014 ஈசனென் றெட்டுத் திசையும் இயங்கின
ஓசையி னின்றெழு சத்தம் உலப்பிலி
தேசமொன் றூங்கே செழுங்கண்டம் ஒன்பதும்
வாச மலர்போல் மருவினின் றூனே. ஈஈ

3015 இல்லனு மல்லன் உளனல்லன் எம்மிறை
கல்லது நெஞ்சம் பிளந்திடுங் காட்சியன்
தொல்லையன் தூயன் துளக்கிலன் தூய்மணி
சொல்லருஞ் சோதி தொடர்ந்துநின் றூனே. ஈச

3016 உள்ளத் தொடுங்கும் புறத்துளும் நானெனுங்
கள்ளத் தலைவன் கமழ்சடை நந்தியும்
வள்ளற் பெருமை வழக்கஞ்செய் வார்கள்தம்
அள்ளற் கடலை அறுத்துநின் றூனே. ஈஞ

3017 மாறெதிர் வானவர் தானவர் நாடொறுங்
கூறுதல் செய்து குரைகழல் நாடுவர்
ஊறுவர் உள்ளத் தகத்தும் புறத்துளும்
வேறுசெய் தாங்கே விளக்கொளி யாமே. ஈசு

3018 விண்ணிலும் வந்த வெளியிலன் மேனியன்
கண்ணிலும் வந்த புலனல்லன் காட்சியன்
பண்ணினில் வந்த பயனல்லன் பான்மையன்
எண்ணிலா னந்தமும் எங்கள் பிரானே. ஈஎ

3019 உத்தமன் எங்கும் உகக்கும் பெருங்கடல்
நித்திலச் சோதியன் நீலக் கருமையன்
எத்தனை காலமும் எண்ணுவர் ஈசனைச்
சித்தர் அமரர்கள் தேர்ந்தறி யாரே. ஈஅ

3020 நிறம்பல எவ்வண்ணம் அவ்வண்ணம் ஈசன்
அறம்பல எவ்வண்ணம் அவ்வண்ணம் இன்பம்
மறம்பல எவ்வண்ணம் அவ்வண்ணம் பாவம்
புறம்பல காணினும் போற்றகி லாரே. ஈக

3021 இங்குநின் றூனங்கு நின்றனன் எங்குளன்
பொங்கிநின் றூன்புவ னைபதி புண்ணியன்
கங்குல்நின் றூன்கதிர் மாமதி ஞாயிறு
றெங்குநின் றூன்மழை போலிறை தானே. சஅ

3022 உணர்வது வாயுமே யுத்தம மாயும்
உணர்வது நுண்ணறி வெம்பெரு மானைப்
புணர்வது வாயும் புல்லிய தாயும்
உணர்வுடல் அண்டமு மாகினின் றூனே. ச

3023 தன்வலி யாலுல கேழுந் தரித்தவன்
தன்வலி யாலே யணுவினுந் தானெய்யன்
தன்வலி யான்மலை எட்டினுந் தான்சாரான்
தன்வலி யாலே தடங்கட லாமே. சஉ

3024 ஏனோர் பெருமைய ஞகிலும் எம்மிறை
ஊனே சிறுமையுள் உட்கலந் தங்குளன்
வானோர் அறியும் அளவல்லன் மாதேவன்
தானே யறியுந் தவத்தின் அளவே. சங

3025 பிண்டாலம் வித்தில் எழுந்த பெருமூலக்
குண்டாலங் காயத்துக் குதிரை பழுத்தது
உண்டனர் உண்டார் உணர்விலா மூடர்கள்
பிண்டத்துட் பட்டுப் பிணங்குகின் றூர்களே. சச

232. சர்வ வியாபி

3026 ஏயுஞ் சிவபோக மீதன்றி யோரொளி
ஆயும் அறிவையும் மாயா உபாதியால்
ஏய பரிய புரியுந் தனதெய்துஞ்
சாயுந் தனது வியாபகந் தானே. க

3027 ஞானறிந் தப்பொருள் நாடவிட மில்லை
வானறிந் தங்கே வழியுற விம்மிடும்
ஊனறிந் துள்ளே உயிர்க்கின்ற ஒண்சுடர்
தானறிந் தெங்குந் தலைப்பட லாமே. உ

3028 கடலிடை வாழ்கின்ற கௌவை யுலகத்
துடலிடை வாழ்வுகொண் டுள்ளொளி நாடி
உடலிடை வைகின்ற உள்ளுறு தேவனைக்
கடலின் மலிதிரைக் காணலு மாமே. ஙு

3029 பெருஞ்சுடர் மூன்றினும் உள்ளொளி யாகித்
தெரிந்துட லாய்நிற்குந் தேவர் பிரானும்
இருஞ்சுடர் விட்டிட் டிகலிட மெல்லாம்
பரிந்துடன் போகின்ற பல்கோரை யாமே. சு

3030 உறுதியி னுள்வந்த வுள்வினைப் பட்டு
இறுதியின் வீழ்ந்தார் இரணம தாகுஞ்
சிறுதியின் உள்ளொளி திப்பிய மூர்த்தி
பெறுதியின் மேலோர் பெருஞ்சுட ராமே. நி

3031 பற்றி னுள்ளே பரமாய பரஞ்சுடர்
மூற்றினு மூற்றி முளைக்கின்ற மூன்றெளி
நெற்றியி னுள்ளே நினைவாய் நிலைதரு
மற்றவ னுய்ந்தின்ற மாதவன் தானே. சு

3032 தேவனு மாகுந் திசைதிசை பத்துளநும்
ஏவனு மாம்விரி நீருல கேழையும்
ஆவனு மாமமர்ந் தெங்கு முலகினும்
நாவனு மாகி நவிற்றுகின் றானே. எ

3033 நோக்குங் கருடன் கொடியே முலகையும்
காக்கு மவனித் தலைவனு மங்குள
நீக்கும் வினையென் நிமலன் பிறப்பிலி
போக்கும் வரவும் புணரவல் லானே. அ

3034 செழுஞ்சடை யன்செம்பொ னேயொக்கு மேனி
ஒழிந்தன வாயு ஒருங்குடன் கூடுங்
கழிந்திலன் எங்கும் பிறப்பிலன் ஈசன்
ஒழிந்தில கேழுல கொத்துநின் றானே. கூ

3035 உணர்வும் அவனே உயிருமம் அவனே
புணர்வும் அவனே புலனும் அவனே
இணரு மவன்றன்னை எண்ணலு மாகான்
துணரின் மலர்க்கந்தந் துன்னிநின் றானே. கo

3036 புலைமையின் நாற்றமில் புண்ணியன் எந்தை
கலைமையின் ஞான வழக்கமு மாகும்

விலைமையில் வைத்துள வேதியர் கூறும்
பலைமையில் எங்கும் பரந்துநின் றானே. ககஅ

3037 விண்ணவ ரும்புல கேழுக்கு மேலுளன்
மண்ணவ ரும்வலஞ் சூழ்கடல் ஏழுக்குந்
தண்ணவ ரும்அது தன்மையின் நிற்பதோர்
கண்ணவ ரும்கலந் துநின் றானே. கஅ

3038 நின்றனன் மாலொடு நான்முகன் தானுகி
நின்றனன் தான்நிலங் கீழோடு மேலென
நின்றனன் தான்நெடு மால்வரை ஏழ்கடல்
நின்றனன் தானே வளங்கனி யாயே. கஆ

3039 புவனி பதிமிகு புண்ணியன் எந்தை
அவனே உலகில் அடர்பெரும் பாகன்
அவனே அரும்பல சீவனு மாகும்
அவனே இறையென மாலுற்ற வாறே. கஇ

3040 உண்ணின் றெரிரும் உலவாப் பிராணனும்
விண்ணின் றியங்கும் விரிகதிர்ச் செல்வனும்
மண்ணின் றியங்கும் வாயுவு மாய்நிற்குங்
கண்ணின் றிலங்குங் கருத்தவன் தானே. கஈ

3041 எண்ணும் எழுத்தும் இனஞ்செயல் அவ்வழிப்
பண்ணுந் திறனும் படைத்த பரமனைக்
கண்ணிற் கவருங் கருத்தில் அதுவிது
உண்ணின் றுருக்கியோர் ஆயமு மாமே. கஉ

3042 இருக்கின்ற எண்டிசை அண்டம்பா தாளம்
உருக்கொடு தன்னடு வோங்கவிவ் வண்ணங்
கருக்கொடு எங்குங் கலந்திருந் தானே
திருக்கொன்றை வைத்த செழுஞ்சடை யானே. கஊ

3043 பலவுடன் சென்றஅப் பார்முழு தீசன்
செலவறி வாரில்லை சேயன் அணியன்
அலைவிலன் சங்கரன் ஆதிஎம் மாதி
பலவில தாய்நிற்கும் பான்மைவல் லானே. கஎ

3044 அதுவறி வானவன் ஆதிப் புராணன்
எதுவறி யாவகை நின்றவன் ஈசன்
பொதுவது வான புவனங்கள் எட்டும்
இதுவறி வான்நந்தி எங்கள் பிரானே. ௧௯

3045 நீரும் நிலனும் விசும்பங்கி மாருதந்
தூரும் உடம்புறு சோதியு மாயுளன்
பேரும் பராபரன் பிஞ்ஞகன் எம்மிறை
ஊருஞ் சகலன் உலப்பிலி தானே. ௨0

3046 மூல னுரைசெய்த மூவா யிரந்தமிழ்
மூல னுரைசெய்த மூந்நூ றுமந்திரம்
மூல னுரைசெய்த மூப்ப துபதேசம்
மூல னுரைசெய்த மூன்றும் ஒன்றுமே. ௨௧

3047 வாழ்கவே வாழ்களன் நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க மலமறுத் தான்பதம்
வாழ்கவே வாழ்க மெய்ஞ் ஞானத் தவன்தாள்
வாழ்கவே வாழ்க மலமிலான் பாதமே. ௨௨

சில ஏட்டுப்பிரதிகளிலும் உரைகளிலும் அதிகமாகக் காணப்படும் திருமந்திரச் செய்யுள்கள்

3048 ஆறு சமய முதலாஞ் சமயங்கள்
ஊறு தெனவும் உணர்க உணர்பவர்
வேற தறவுணர் வார்மெய்க் குருநந்தி
ஆறி யமைபவர்க் கண்ணிக்குந் தானே. ௧

3049 உடலாங் குகையில் உணர்வாகும் பீடத்
தடலார் சமாதி இதயத்த தாக
நடமா டியகுகை நாடிய யோகி
மிடையாகா வண்ணமே சாதிக்கு மெல்லவே. ௨

3050 நிற்ற லிருத்தல் கிடத்தல் நடையோடல்
பெற்ற வக்காலுங் திருவருள் பேராமற்
சற்றியன் ஞானந்தந் தானந்தந் தங்கவே
உற்ற பிறப்பற் றிரளிர்ஞான நிட்டையே. ங

3051 நாயோட்டு மந்திரம் நான்மறை வேதம்
நாயோட்டு மந்திரம் நாத னிருப்பிடம்
நாயோட்டு மந்திரம் நாதாந்த சோதி
நாயோட்டு மந்திரம் நாமறி யோமே. ச

3052 இணங்க வேண்டா இனியுல கோருடன்
நுணங்கு கல்வியும் நூல்களும் என்செயும்
வணங்க வேண்டா வடிவை யறிந்தபின்
பிணங்க வேண்டா பிதற்றை யொழியுமே. ஞ

3053 எவ்விடத் துந்தம் பணியின்மை கண்டுளோர்
எவ்விடத் தும்பணி யீசன் பணியென்றே
அவ்விடத் தைதங்கரு மத்தால் அறிதலால்
உவ்விடத் தோருக்கோர் உபாய மில்லையே. ட

3054 ஒத்த சமயங்கள் ஓராறு வைத்திடும்
அத்த னொருவனும் என்ப தறிந்திலர்
அத்தன் ஒருவனும் என்ப தறிந்திடின்
முத்தி விளைக்கு முதல்வனு மாமே. எ

3055 முதலொன்று மானை முதுகுடன் வாலுங்
திதழுறு கொம்பு செவிதுதிக் கைகால்
மதியுடன் அந்தகர் வகைவகை பார்த்தே
அதுகூற லொக்கும் ஆறு சமயமே. அ

3056 அத்தாளத் தாள மதிலனை விற்கால்
ஒத்தாட வோவாதி யாவேத மூடுற
வைத்தாடி கூடல் தினமான மாகவே
சித்தான நந்திதென் னம்பலத் தாடுமே. கூ

3057 ஆகஞ் சிவானந்த வைவொளி பூரிக்கி
லேக வொளியா மிதய கமலத்தே
தாகமுஞ் சோகமுஞ் சார்கலை புன்னி
லாக மனங்கசிந் தானந்த மாகுமே. கo

3058 ஆணவ மூலத்தகார முதித்திடப்
பேணியுகாரங் கலாதி பிறிவிக்கத்
தாணு மகாரஞ் சதாசிவ மாகவே
ஆணவ பாச மடர்தல் செய்யாவே. கக

3059 உண்ண லுறங்க லுலாவ லுயிர்போத
கண்ணல் நரக சுவர்க்கத்து நாட்டிடப்
பண்ண லவன்பணி யாவிவன் பாலிடை
திண்ணிதிற் செய்கை சிவன் பணியாமே. கஉ

3060 ஓடும் இருக்குங் கிடக்கும் உடனெழுந்
தாடும் பறக்கு மகண்டமும் பேசிடும்
பாடும் புறத்தெழும் பல்லுயி ரானந்தம்
கூடும் பொழுதிற் குறிப்பிலை தானே. கங

3061 சித்தஞ் சிவமாம் சிவஞானி சேர்விடம்
சுத்தச் சிவாலயம் தொல்பாவ நாசமாம்
அத்த மழையக மானந்த மேலிடும்
முத்தம் பெருகும் முழுப்பொரு ளாகுமே. கச

3062 திருமந் திரமே சிதம்பரந் தாணுந்
திருமந் திரமே சிறந்த உபாங்கந்
திருமந் திரமே திருக்கூத்தின் செய்கை
திருமந் திரமே திருமேனி தானே. கஞ

3063 திருமேனி தானே திருவரு ளாகுந்
திருமேனி தானே திருஞான மாகுந்
திருமேனி தானே சிவனேய மாகுந்
திருமேனி தானே தெளிந்தார்க்குச் சித்தியே. கஎ

3064 நெற்றி கடவுள் நினைவெழு கண்டமு
முற்ற விதையமு மோதிய நாபிக்கீழ்ப்

பெற்ற துரியமும் பேசிய மூலத்தே
யுற்ற வதீத மொடுங்கு முடனே. கஎ

3065 பத்தி விதையிற் பயிரொன்று ஞாணத்தைச்
சித்தி தருவை ராக்கத்தாற் செய்தறுத்
துய்த்த சமாதி சிவானந்த முண்டிடச்
சித்தி திகழ்முத்தி யானந்தஞ் சித்தியே. கஅ

3066 பள்ள முதுநீர் பழகிய மீனினம்
வெள்ளம் புதியவை காண விருப்புறும்
கள்ளவர் கோதையர் காமமே டோடிணும்
உள்ளம் பிரியா ஒருவனைக் காணுமே. கக

3067 பாசம தாகும் பழமலம் பற்றற
நேசம தாய்நின்ற வாறுறு நீங்கிடக்
காசமி லாத குணங்கே வலசுத்த
மாசற நிற்ற லதுசுத்த சைவமே. உ0

3068 மனவு நனவு கனவது புந்தி
நினைவி லகந்தை சுழினையுள் நிற்றல்
அதனை யறிசித்தந் துரியமிம் மூன்றின்
நினைவறல் மற்றது நேயத் தளவே. உக

3069 மேலைத் திருவம் பலத்தா மிகுகலை
கோலிப் பரானந்த நாதாந்தக் கூத்ததிற்
சீலித்த சித்தர் சிவயோக சித்தராய்
மாலற்ற வர்சுத்த சைவத்து வாழ்வரே. உஉ

திருமூல தேவனையே சிந்தைசெய் வார்க்குத்
கருமூல மில்லையே காண்.

திருமந் திரமே சிவகதிக்கு வித்தாந்
திருமந் திரமே சிவமா—மருமந்த
புந்திக்கு ளேநினைந்து போற்றுமடி யார்தமக்குச்
சந்திக்குந் தற்பரமே தான்.

பாட்டு முதற்குறிப்பு

பாட்டு	பாட்டெண்	பாட்டு	பாட்டெண்	பாட்டு	பாட்டெண்
அகழுக	2654	அசத்தொடு	2065	அடிவைத்	1698
அகம்படி	1874	அச்சிவன்	1885	அடுக்கு	1144
அகம்புகு	1804	அஞ்சனமேனி	57	அடுவன	2616
அகரம்	1860	அஞ்சனம்போ	727	அடைந்திடு	1327
அகராதி	2700	அஞ்சிட்ட	1034	அடைவினில்	924
அகலிடத்	4	அஞ்சில்	2299	அணங்கற்ற	705
அகலிடமா	1723	அஞ்சுகஅஞ்	980	அணுகிணு	420
அகன்ஞர்	1622	அஞ்சுகடி	830	அணுமாதி	668
அகன்ஞன்	448	அஞ்சுங்	2269	அணுவில்	2008
,,	3011	அஞ்சுடன்	697	அணுவின்	2281
அகாரமுத	1753	அஞ்சுமடக்	2033	,,	2468
,,	2699	அஞ்சுமுக	1736	அணுவும்	2440
அகாரம்உயி	975	அஞ்சுளசிங்	2026	அணுவுள்	2010
,,	2503	அஞ்சுளவானை	977	அணைதுணை	216
அகாரவுகார	951	அஞ்செழுத்தா	934	அண்டங்கட	3006
அக்கரை	2899	அஞ்செழுத்தாலு	966	அண்டங்கள் ஏழி	2732
அங்கப்பு	828	அஞ்சொடு	2272	அ...ள்ஏழு	1871
அங்கமும்	2720	அஞ்சொல்	1109	,,	2388
அங்கார்	1890	அடங்காத	2741	அ...ள்ஓ	2749
அங்கிஉதய	338	அடங்கு	137	அ...ள்ததத்	2771
அங்கிசெய்	421	அடப்பண்	148	அண்டஞ்சுரு	735
அங்கிதம	2780	அடிசார	1603	அண்டத்தில்	2777
அங்கிநிறு	223	அடிசேர்	347	அண்டத்தி	1362
அங்கிமதி	864	அடிதொழு	2583	அண்டமுத	1210
அங்கிமிகா	87	அடிமுடி	88	அண்டமொ	521
அங்கியிற்	858	அடியாரவரே	1672	அண்டம்ஏழு	2773
அங்கியெழு	862	அடியார்அடி	2624	அண்டவொளி	2806
அங்குச	2735	,, அர	2740	அண்ணலாநாடி	1535
அங்குநின்	2837	,, பர	48	அண்ணலாவா	1505
அங்கேயட	2356	அடியும்	2917		

அண்ணல்அரு 58, 60, 64
அண்ணல்இரு 766
" 931
" 2660
அண்ணல்உட 1951
அண்ணிக்கு 1523
அதிபதி 18
அதிமூட 2162
அதிதத்துரி 2199
அதிதத்துளா 2452
அதிதத்துள் 2582
அதுஇது 1186
அதுக்கென் 2950
அதுவரு 788
அதுவறி 3044
அதுவாம் 927
அதுவிது 1154
" 1231
" 1503
அதுவித் 1931
அதுவுணர் 1722
அதோமுகங் 524
அதோமுகமா 525
அத்தத்தில் 2424
அத்தனருளி 2062
அத்தனவ 1829
அத்தன்அமை 2123
அத்தாள 3056
அத்திசை 936
" 1733
அத்திப்பழ 160
அந்தக்கரு 2647
அந்தங்கட 3003
அந்தணரா 224
அந்தண்மை 234
அந்தநடு 1089
அந்தமில்ஞா 1913
அந்தமில்லா 1031
அந்தமின்ஞா 1910
அந்தமும்ஆதி 1927
" 2594
அந்தமும்ஈறு 1266
அந்தமோராறு 2371
அந்தம்பதி 1076
அந்தரஞ்சு 2237
அந்திப்பன் 1504
அந்திவண் 46
அந்நெறிஇங் 551
அந்நெறிநாடி 1546
அப்பகை 528
அப்பணி 343
அப்பது 1261
அப்பரிசென் 409
அப்பரிசேஅயன் 356
அ...சேயயனூர் 355
அப்பனே 36
அப்பினில்உப் 2945
அப்பினிற்கூர் 136
அப்பும் 2266
அமரத்து 2832
அமர்ந்த 925
அமலம்பதி 895
அமுதச்சசி 1959
அமுதப்புனல் 881
அமுதமதாக 1408
அமுதூறு 248
அமைச்ச 1630
அமைந்தொழி 2993
அம்பர 2673
அம்பலம்ஆட 2759
அம்பலமாவ 2775
அம்பன்ன 1147
அம்புய 1003
அம்மனே 1253
அம்முதல் 1264
அம்மையும் 1254
அயலும் 11
அயின்ற 872
அரகர 916
அரசுட 1667
அரனடி 43
அரனன்பர் 2391
அரனெறியப் 1543
அரனெறியா 1562
அரன்துடி 2799
அரன்மூத 2260
அரிக்கின்ற 2877
அரித்த 597
அரிபிரம 358
அருங்கரை 1498
அருடரு 2714
அருட்கண் 1808
அருந்தி 1933
அருமைவல் 548
அருவினில் 960
அருளது 1821
அருளல்ல 475
அருளால்அமு 1801
" அர 1676
அருளான 2341
அருளிற்பிற 1800
அருளிற்றலை 1814
அருளும் 168
அருளெங்கு 1798
அருளேசகல 1806
அருள்பெற்றகா 2599

அருள்பெற்றவ 1071
அரைக்கின்ற 436
அலர்ந்திரு 357
அலைகடல் 363
அவமுஞ்சிவ 2340
அவளையறி 1053
அவனிவரு 767
அவனிவன்ஈச 2620
அவனும் 1789
அவனைஒழி 6
அவன்பால் 1880
அவிழ்க் 66
அவ்வவர் 613
அவ்வழி 2644
அவ்விட்டு 932
அவ்வியம் 196
அவ்வியல் 942
அவ்வின 1269
அவ்வுண்டு 933
அவ்வுலக 1652
,, 1869
அவ்வென்ற 953
அவ்வொடு 957
அழிகின்றஆ 742
,, சா 2587
,, வி 1936
,, வோ 2140
அழிதக 1864
அழுக்கினை 254
அளகநன் 849
அளக்கும் 779
அளந்து 2591
அளந்தேன் 1125
அளவில் 103
அளித்தான் 123
அளியார் 401
அளியொத்த 1064
அறங்கேட்டு 300
அறம்அறி 262
அறவன் 1616
அறிகின்ற 452
அறிகின்றிலா 2323
அறிந்தணு 2414
அறிந்தபரா 682
அறிந்தபிர 1291
அறிந்திடுஞ் 1263
,, 1346
,, 1284
அறிந்திடுவார் 1328
அறிந்துணர் 1588
அறியகி 2350
அறியவொ 1572
அறியாதவ 2224
அறியாதழி 1952
அறியாப் 1879
அறியீருட 469
அறிவது 787
அறிவரு 1009
அறிவறிகி 2206
அறிவறியா 2363
,, 2580
அறிவறிவா 2361
அறிவறிவென் 2362
,, 2405
,, 2637
அறிவாயசத் 617
,, 2471
அறிவாய்அறி 2019
அறிவார்அமர 512
,, 545
அறிவார்அறி 2581
,, பரா 1054
அறிவான 1133
அறிவிக்கவே 2327
அறிவில் 1799
அறிவின்றி 2247
அறிவுக்கழி 2358
அறிவுக்கறி 2808
அறிவுடன் 1554
அறிவுடையார் 2364
அறிவுடையான 2636
அறிவும்அடக் 1471
அறிவுவடி 2357
அறிவை 119
அறிவொன்றி 2181
அறுகாற் 1497
அறுத்தன 213
அறுநான்கு 2267
அற்றதுரை 2595
அற்றவிடத் 952
அற்றுநின்ரு 253
அனைதிசெவ 2401
அனைதிபசு 2236
அன்பினுள் 279
அன்பின்உரு 1456
அன்புசிவம் 270
அன்புடனே 1005
அன்பும்அறி 416
அன்புள் 2980
அன்புறு 282
அன்ருகு 2400
அன்றிய 2001
அன்றிரு 1388
அன்றுநின் 1762
அன்னதூரி 2508
அன்னத்தில் 1965
அன்னமிரண் 2006
அன்னம் 1966

அன்னிய 1485
அன்னேயும் 2965
ஆக்ஞ் 3057
ஆகமதத்த 2023
ஆகமம் 1429
ஆகாசஅக் 1262
ஆகாசமாமு 2774
ஆகாசவண் 2809
ஆகாயமாதி 400
ஆகியகோத 1224
ஆகியசூக்க 2416
ஆகியவச்சோ 2493
,, 2570
ஆகின்றகா 677
,, கே 2232
,, சக் 945
ஆகின்றசத் 1732
,, சந்த 1368
,, சந்திர 685
,, ,, 852
,, தன் 395
,, தொ 2179
,, நந் 1847
,, நா 1219
,, பா 941
,, மண் 1381
,, மின் 680
,, மூல 1380
,, மூவ 1077
,, வத் 674
ஆகுங்கலா 2399
ஆகுங்கலை 1990
ஆகுஞ்சன 739
ஆகுதிவேட் 215
ஆகும்அனாதி 2379
,, உட 1710
ஆகும்உபா 2422
ஆக்குகின்ரு 451
ஆங்கவை 1749
ஆங்குவட 999
ஆசான்முன் 2163
ஆசூசமில் 2552
ஆசூசம் 2551
ஆசையறு 2615
ஆடம்பர 1655
ஆடல் 2781
ஆடியகாலி 2317
,, காலு 2760
ஆடியும் 1816
ஆட்கொண்ட 2121
ஆணவச்சத் 398
ஆணவத்தா 2240
ஆணவந்துற் 500
ஆணவமாகும் 2241
,, 2259
ஆணவமாதி 2183
ஆணவமாயை 2192
ஆணவமூல 3058
ஆணையமாய் 1131
ஆண்டான் 537
ஆண்டுபல 178
ஆண்மிகில் 478
ஆதனமீதில் 1922
ஆதாரசோ 1492
,, 1707
ஆதாரமா 1754
ஆதாரயோ 709
ஆதிஅனாதி 1120
,, 1124
ஆதித்தனுள் 1980
ஆதித்தனே 1981
ஆதித்தன்அன் 1977
,, ஓடி 1986
,, சந் 410
,, தோ 2342
ஆதிநட 2787
ஆதிபடை 447
ஆதிபரஞ் 2190
ஆதிபரந் 1767
ஆதிபரன் 2751
ஆதிபரா 2543
ஆதிப்பிரானும் 104
ஆதிப்பிரானுல 1570
ஆதிப்பிரான்அ 319
,, த 2646
,, ந 3005
ஆதியனாதிய 1114
ஆதியுமாய் 15
ஆதியும்அந்த 2453
ஆதியைவேத 555
ஆதியோடந்த 381
ஆதிவயிரவி 1099
ஆதிவித 1069
ஆத்தமனே 201
ஆமதுவங்கி 1223
ஆமத்தினி 973
,, 1213
ஆமயன் 1208
,, 1241
ஆமவரி 2233
ஆமாக்கள் 2884
ஆமாறறிந் 2846
ஆமாறறியா 507
,, 2046
ஆமாறுரை 1561
ஆமுயிர்கே 2229

ஆழியிர்த்தே 877
ஆமேஅதோ 1412
ஆமேஅழி 772
ஆமேஎழு 1303
ஆமேசதா 1350
,, சிவ 891
,, பிரா 1569
,, பொன் 887
,, யீன 1342
,, வப் 1293
,, வபா 120
,, ழுலகு 373
ஆமையொன் 1206
ஆம்விதி 195
ஆயத்துள் 1530
ஆயபதி 2411
ஆயனகந்தி 2658
ஆயிழையா 1220
ஆயுஞ்சிவா 923
ஆயுமலரின் 1711
,, 2359
ஆயும்அறிவு 1239
,, அறிவோ 1805
,, பொய் 2275
,, பொருளு 796
ஆய்ந்தறி 1571
ஆய்ந்துகொள் 296
ஆய்ந்துண 1566
ஆய்ந்துரை 802
ஆய்வருும் 700
ஆரறிவா 95
ஆராதனை 1831
ஆராலும் 2960
ஆரியனல்ல 565
ஆருமறியார் 786
ஆரும்அறியாத 450
ஆரும்அறியார் 1751
,, உரை 1305
ஆருயிரா 1110
ஆரேஅறி 2126
ஆரேதிரு 1200
ஆர்க்கும் 250
ஆர்த்தெழு 157
ஆர்வமன 2091
ஆர்வம்உடை 273
ஆலழுண்டா 1211
ஆலயமாக 919
ஆலிக்கு 1161
ஆலிங்கன 378
,, 2908
ஆலைக்கரும்பு 2959
ஆவதறியா 2475
ஆவதுதெற்கு 2564
ஆவனஆவ 504
,, 2175
ஆவிக்கமல 1842
ஆவினமான 1267
ஆவின்கிழ 1122
ஆவுடையா 2384
ஆவையும் 243
ஆழிவல 349
ஆளும்மலர் 2995
ஆறங்க 55
ஆறதுகால் 703
ஆறதுவாகு 695
ஆறந்தமாகி 2129
ஆறந்தமுங் 1709
ஆறந்தமுஞ் 2382
ஆறுறகன்ற 2569
ஆறுறகன்றுத 2345
,, ந 2291
ஆறுறதாங்கலை 853
ஆறுறமை 2509
ஆறுறில் 2197
ஆறுறின் 2020
ஆறுறுகாரி 2502
,, குண்ட 2419
,, க்கப் 2271
,, தத் 2447
,, நீங் 2499
,, மாற 2263
ஆறிடும் 1861
ஆறிட்ட 2849
ஆறியிரு 1139
ஆறிருபத் 1300
ஆறுசமயமுங் 1533
ஆறுசமயமுத 3048
ஆறுதெருவி 2868
ஆறுபறவை 2905
ஆறுமுக 2758
ஆறும்இரு 746
ஆறெட்டெழு 930
ஆறெழுத்தா 994
ஆறெழுத்தோ 962
ஆறேயருவி 2530
,, 2979
ஆறைந்துபன் 1940
ஆறொடுமுப் 2656
ஆற்றரு 517
ஆற்றிற் 1642
ஆற்றுகிலா 35
ஆனசமய 1545
ஆனத்தி 2736
ஆனநட 2727
ஆனந்ததத் 2298
,, மாகு 2326
,, மூன் 892

ஆனந்தம்ஆட 2725
,, ஆன 910
,, ,, 2796
ஆனபுகழு 2523
ஆனமறை 2310
ஆனவராக 1072
ஆனவவ் 2218
ஆனவிளக் 683
,, 2222
ஆனைகள் 2316
ஆனைதுரக் 2851
ஆனைந்தும் 1832
ஆனைமயக் 1418
ஆன்கன்று 2627
ஆன்மாவே 2306
இகழ்ந்த 280
இக்காய 2106
இங்கித்தை 2117
இங்குநின் 3021
இசைந்தெழு 1590
இடக்கை 801
இடங்கொ 1024
,, 2768
இடவகை 2147
இடலெரு 2485
இடாக்கொண் 2878
இடிஞ்சில் 164
இடைபிங்கலை 2754
இடையொடு 665
இட்டஇதழ் 1313
இட்டதவ் 574
இட்டான் 486
இணங்க 3052
இணங்கி 28
இணை 898
,, 1423
இதயத் 1596
இதுபணி 1454
இதுபதி 19
இதுவப் 1171
இத்தவ 1568
இந்தியமீ 2144
இந்தியம் 2083
இந்துவினி 1188
இந்துவும் 1852
,, 1853
இப்பரிசே 2092
இமையங்க 1550
இமையவர் 1557
இயக்குறு 169
இயங்கும் 1873
இயமநியம 552
இயம்பு 2652
இயலுமிம் 929
இயலுறு 206
இயைந்த 972
,, 1115
இரண்டா 495
இரண்டினின் 696
இரண்டு 2889
இரதமுத 1934
இரதம்உதி 2125
இரவும் 1134
,, 1528
இராசி 1270
இராப்பகல் 331
,, 1856
இருக்கில் 93
இருக்கின்றஎ 3042
,, கா 716
,, ம 900
,, வா 2149
இருக்குஞ் 1470
இருக்குந் 654
இருக்குரு 53
இருட்டறை 1514
இருதய 2761
இருநிதி 701
இருந்தஇச் 1392
,, இவ் 914
,, ,, 920
,, பிரா 817
,, மன 346
,, வக் 75
,, ழு 1552
,, னர் 1371
,, னள் 814
,, ,, 1146
,, ,, 1113
,, ,, 1185
,, ,, 1190
இருந்தார் 127
இருந்து 1627
இருந்தேன் 80
,, 2097
இருபதமா 1792
இருபதிரு 644
இருமலுஞ் 263
இரும்பிடை 2592
இருவருங் 2790
இருவினைநே 1527
இருவினையொ 2262
இருளது 1119
இருளார் 1740
இருளும் 1010
,, 2952
இருள்சூழ 1517
,, நீக் 1516

இலங்கிய 2689
இலையங்கள் 422
இலிங்கநற் 1752
இலிங்கமதா 1712
இலுதொட் 1640
இலுநல 204
இலுப்பொறி 467
இலுயாமி 2141
இலுயில் 2898
இல்லடை 1417
இல்லதுசத் 383
இல்லதும் 2335
இல்லறு 3015
இவனில் 2650
இவ்வகை 775
இழிகுல 1658
இளங்கொ 2684
இளக்கின்றநெ 614
,, வா 2037
இறப்பும் 1614
இறையடி 1701
இறையவன் 433
இனியதென் 1105
இன்பக் 1128
இன்பத் 2089
இன்பப்பிறவிக் 281
,, ப 432
இன்பழு 1657
இன்பம்இட 267
இன்புற 487
இன்புறுகா 453
,, வ 194
,, வீ 2112
இன்புற்றிரு 468
ஈசத்துவ 2063
ஈசனடி 534
ஈசனென் 3014
ஈசன்அரு 304
,, அறி 288
,, இய 608
,, இரு 105
,, நின் 2696
ஈட்டிய 171
ஈதென்றறி 2209
ஈரண்ட 1991
ஈராறுகால் 722
,, நாத 1705
,, பெண் 865
ஈருமன 1564
ஈரைந்தவ 2469
ஈரைந்திற் 648
ஈரைந்தும் 783
ஈவது 506
ஈறது 1189
ஈறுன 2755
ஈற்றுப் 2875
ஈனப் 2061
உகங்கண் 1043
உகங்கோடி 759
உகந்தனஒன் 2541
உகந்தனள் 1393
உகந்துநின்ரு 1162
உகந்துநின்றே 445
உச்சியம் 1000
உச்சியில் 442
உச்சியுங் 1850
உடந்த 2484
உடம்பார் 724
உடம்பினை 725
உடம்புக் 2128
உடம்பும் 2148
உடம்பொடு 176
உடலாங் 3049
உடலாய் 413
உடலான 1439
உடலிந்தி 2194
உடலில் 1677
உடலிற் 845
உடலும் 2588
உடல்பொரு 1778
உடல்வைத் 470
உடையவன் 1140
உடையான் 547
உணர்த்து 1700
உணர்ந்திரு 1373
உணர்ந்தில 1126
உணர்ந்துட 1063
உணர்ந்துல 1170
உணர்ந்தெழு 1222
,, 1306
உணர்ந்தே 1748
உணர்ந்தொ 1250
உணர்வது 3022
உணர்விந்து 879
உணர்வுடை 1786
,, 2938
உணர்வும் 3035
,, 2857
உணர்வொன் 2044
உண்டில்லை 1065
,, 2693
உண்டுதெளி 2013
,, நரக 2133
,, லகேழு 389
உண்டோர் 1402
உண்ணலுற 3059
உண்ணுடு 2223
உண்ணின்ற 449

உண்ணின்றெரு 3040
உண்ணீரமுத 882
உண்ணீர்அமுத 336
உண்ணுங் 2161
உண்ணுமரு 968
உண்ணும் 2671
உண்மைக் 2383
உண்மையிற் 1579
உண்மையுணர் 2619
உதமறி 843
உதயத் 1923
உதயமழு 2307
உதிக்கின்ற 610
,, 2527
உதித்து 794
உத்தமன் 1039
,, 3019
உந்திக் 869
உந்திச்சுழி 732
உபாயம் 1108
உம்பரிற் 2742
உயருறு 760
உயர்ந்து 1499
உயிரதுநின் 2078
உயிரதுவே 2079
உயிரிச்சை 2336
உயிருஞ் 1779
உயிரைப் 2402
உயிர்க்கறி 2333
உயிர்க்கின்ற 2810
உயிர்க்குயிரா 1444
,, 2210
,, 2504
உயிர்பர 2578
உய்ந்தன 1460
,, 2622
உய்யவல் 2822
உய்யும் 2606
உரமடி 1974
உரியநலை 2273
உருவநினை 2841
உருவம்பல 1248
,, வளர் 485
உருவறியும் 625
உருவன்றி 2840
உருவிப் 1987
உருவிலி 2941
உருவும் 1763
உருவுற்பல 2829
உருவுற்று 2261
உரைத்தநவ 1090
உரைத்தன 549
உரைத்திடு 1016
உரையற்றஆ 2844
,, தொ 2648
,, ,, 2955
உரையற்று 1593
உலகம 3001
உலகம் 2480
உலகாணி 2080
உலகில் 1713
உலந்தி 1727
உலவுசெய் 3007
உவாக்கட 2617
உழவன் 1619
உழவொன்று 2913
உழைக்க 1839
உழைக்கொண் 1833
உளங்கொளி 2690
உள்ளஅரு 1994
,, சரி 2977
,, துளோ 2804
உள்ளத்திற 1117
உள்ளத்தின் 509,511
,, 1183
உள்ளத்தும் 1532
உள்ளத்துளே 1531
உள்ளத்தொடு 3016
உள்ளத்தொரு 431
உள்ளம்உரு 2500
,, பெரு 1823
உள்ளவுயி 2375
உள்ளுண்மை 328
உள்ளுயிர் 418
உள்ளொளி 1196
உறங்கு 1107
உறுதியி 3030
உறுதுணைநங் 2630
உறுதுணையா 307
உறுமாறறி 1547
உறுவது 351
உறைபதி 1203
உற்பிறப்பு 1817
உற்றமுப் 399
உற்றறி 741
உற்றிட 1357
உற்றிடு 2059
உற்றுநின் 284
உற்றுவனை 417
உன்முதலா 2082
உன்னக் 1908
உன்னிட்ட 1282
உன்னும் 2005
உன்னையறி 2279
ஊதியம் 870
ஊமைக்கி 2304
ஊமையெழு 2158

ஊரும்உலக 1419
ஊரெலாங் 145
ஊழிதோ றூழி 1458
,, 1846
ஊழிபிரி 874
ஊழிவல 380
ஊறுமரு 2535
ஊனமின் 1906
ஊனுய் 374
ஊனீர் 809
ஊனூறல் 804
ஊனேவுயி 2354
எங்குஞ்சிவ 1909
எங்குந்திரு 2722
எங்கும்கல 342
எங்கும்பர 341
எங்கேஇரு 570
எடுக்கின்ற 1030
எடுத்தவக் 1019
எட்டாகிய 669
,, 1310
எட்டிபழுத் 260
எட்டிவை 671
எட்டினி 995
,, 2124
எட்டினுள் 473
எட்டுத்திசை 441
,, 1884
எட்டுநிலை 917
எட்டும் 986
எட்டுவரை 987
எட்டெட்டன 855
எட்டெட்டும் 856
எண்சாணள 2127
எண்ணமர் 1399
எண்ணைக்கரு 1002
எண்ணையிர 603
எண்ணிலா 1911
எண்ணிலி 2029
எண்ணில்இத 1744
எண்ணும் 3041
எதிரற 2497
எந்தைபர 1770
,, பிரா 1026
எப்பாழும் 2825
எம்பெருமான் 520
எம்மாருயி 1625
எய்திடலாகு 1204
எய்தியகாலங் 1521
,, காலத் 2602
,, நாளி 186
,, பெத்த 2256
எய்திவழி 1006
எய்தினர் 2338
எய்துமதி 851
எய்துவ 2603
எருவிடும் 584
எலும்பு 371
எல்லாக் 857
எல்லாந் 2308
எல்லாம்அறி 2596
,, இறை 2060
எல்லாவுல 1576
எவ்வாறு 130
எவ்விடத்து 3053
எழுகின்றசோ 702
,, தீ 838
எழுதாத 2885
எழுத்தவை 1265
எழுத்தொடு 1461
எழுந்து 72, 553
எளியவாது 2709
எளியனல் 1502
எறிகதிர் 1988
எறிவது 2645
என்தாயோ 1876
என்பால் 461
என்பே 272
என்றங் 1407
என்றும் 1236
என்னம்மை 1129
என்னன்பு 274
என்னிலு 2516
என்னெஞ்ச 2973
என்னையறிந் 2366
என்னையறிய 2457
ஏகபரா 1309
ஏடங்கை 1067
ஏதும்பல 1311
ஏத்தினர் 1715
ஏத்துவர் 1837
ஏந்திழை 1198
ஏயங்கலந் 459
ஏயிருநாளும் 778
ஏயுஞ்சிவ 3026
ஏயெனில் 1682
ஏய்ந்தபிரா 833
,, மர 1366
,, வரி 1001
ஏரொளி 1255
ஏலங்கொ 2173
ஏழாயிர 899
ஏழானதிற் 649
ஏழினில் 2783
ஏழுஞ்சகள 2532
ஏழுவரை 2907
ஏறனதிர் 458
ஏறியவாறி 774

எறியவாறே	2478
எறுடையா	1862
,,	2111
எறுதல்	568
எறுநெறி	2066
எற்றம்	2873
எற்றி	571
எனேர்பெருமை	490
,,	2012
,,	3024
ஐந்திலொடு	2035
ஐந்தின்	969
ஐந்துகர	காப்பு
ஐந்துகலை	978
ஐந்துஞ்சக	2293
ஐந்துதலை	159
ஐம்பதறி	2442
ஐம்பதெழு	965
,,	2698
ஐம்மலத்	2257
ஐம்முதலா	1334
ஐயென்னும்	2870
ஐயைந்துபத்	2200
,, மட்	2294
,, மத்	2142
,, மாறு	2208
,, மான்	2239
ஐயைந்தொடு	2238
ஐவர் அமைச்	2027
ஐவர்க்கு	564
ஐவர்க்கொ	188
ஒக்கஅடி	561
ஒக்கநின்	3
ஒடுங்கி	666
,,	1624
ஒண்சுடரா	221
ஒண்சுடரோ	1716
ஒண்ணுத	832
ஒண்ணுநயன	600
ஒத்தஇவ்	653
,, சமய	3054
,, செங்	1464
,, டங்கு	1062
,, மன	2890
ஒத்துமிக	1639
ஒத்துலகே	2626
ஒருக்கால்	585
ஒருங்கியபாச	439
,, பூவு	2528
ஒருபொழுது	601
ஒருவனுமே	404
ஒருவனே	2390
ஒருவன்	396
ஒழிகின்ற	819
ஒழிந்தன	261
ஒழிந்தேன்	2958
ஒழிபல	463
ஒழியாத	1948
ஒளிக்கு	1345
ஒளித்திட்	2150
ஒளித்து	437
ஒளிபவள	2695
ஒளியது	1349
ஒளியாம்	2726
ஒளியும்	1819
,,	2325
ஒளியையறி	2681
ஒளியையொ	2486
ஒன்பதின்	1992
ஒன்பதும்	2782
ஒன்பது வாசல்	658
ஒன்பதோ	2788
ஒன்பான்	2545
ஒன்றதுபேரூர்	1558
,, வாகி	698
,, வாலே	1811
ஒன்றவன்	1
ஒன்றுயுலகு	2520
ஒன்றிநின்று	2953
ஒன்றியஈ	185
,,	863
,, சக்	1365
,, நாள்	784
,, வாறு	1747
ஒன்றிரண்	913
,,	2077
ஒன்றில	756
ஒன்றுகண்டீ	2962
ஒன்றுண்டு	2432
ஒன்றும்	236
,,	1437
,,	2536
ஒன்றென	1775
ஒன்றேகுல	2104
ஓங்காரத்துள்	1556
,,	2677
ஓங்காரமுந்தி	1012
ஓங்காரி	1073
ஓங்கிய	659
ஓங்குபெரு	390
ஓசையில்	723
ஓசையும்	771
ஓடவல்லார்	543
ஓடிச்சென்ற	661
ஓடிவந்	352
ஓடுங்குதிரை	1679
ஓடும்இருக்	3060
ஓதம்ஒலி	707

ஓதலும் 1633
ஓதிடும் 1919
ஓதியநந்தி 1080
ஓதியநம் 2712
,, மூத்தி 2864
,, வண் 1121
ஓதும்எழுத் 963
ஓதும்மயிர் 2856
ஓமத்துள் 222
ஓமெனும் 2676
,, 2824
ஓமென்றெழு 944
ஓம்புகின்ரு 2352
ஓரணைய 559
ஓராயமே 407
ஓரில்இது 1308
ஓரினுமூ 2234
ஓரெழுத்தா 885
ஓரெழுத்தொரு 531
ஓரைம்பதின் 1233
ஓலக்க 108, 540
ஓவியமான 751
ஃகராதி 1307
கங்காள 1666
கடங்கட 2002
கடந்த 1400
கடந்து 14
கடலிடை 3028
கடலிற் 513
கடலுடை 299
கடலொடு 607
கடன்கொண் 2086
கடைவாசலை 591
கட்டக்கழ 799
கட்டவல் 711
கட்டிட்ட 662
கட்டுவித் 516
கணக்கறி 316
கண்காணியா 2072
கண்காணியி 2067
கண்டஇச்சக் 1336
கண்டஇச்சத் 1391
கண்டகன 2153
கண்டங்க 1425
கண்டசில 1085
கண்டறிவா 2942
கண்டனுங் 827
கண்டார் 2946
கண்டிடுசக் 1273
கண்டிடுஞ் 1323
கண்டிருந் 502
கண்டுகண்டு 578
கண்டுகொண் 1522
கண்டுகொள் 1330
கண்டெண் 1167
கண்டெழு 992
கண்டேன் 285
கண்ணது 184
கண்ணன் 763
கண்ணைக்கு 599
கண்ணில் 656
கண்ணுடைநா 1384
,, யா 1166
கண்ணுதலா 12
கண்ணுதல் 474
கதறுபதி 2215
கதிரவன் 868
கதிர்கண்ட 1653
கத்தவும் 1634
கத்தித்திரி 1671
கத்துங் 1538
கயலொன்று 2910
கரணவிற 998
கரந்து 1628
கரியட்ட 2814
கரியுண் 2593
கருடன் 2659
கருதலர் 2514
கருதுமவர் 2385
கருதும்இரு 781
கருத்தறிந் 2221
கருத்தறியா 2098
கருத்தின 2024
கருத்தினி 1947
கருத்துறுங் 1205
கருத்துறுசெ 277
கருத்துறை 339
கருந்தாட் 2513
கருமங்கள் 2547
கரும்பு 2976
கருவர 2280
கருவரை 362
கருவில 2258
கருவை 454
கரையருகா 2100
கரையருகே 848
கர்ப்பத்து 460
கலக்கு 1955
கலந்தஉயி 592
கலந்ததுநீ 514
கலந்தரு 102
கலந்திரு 1038
கலந்துநின் 1215
கலப்பறி 1363
,, 2287
கலைத்தலை 1112
கலையொரு 3012

கல்லாஅரச	238	காணகிலா	761	காரியமேழ்	2495
கல்லாதழூட	317	காணநில்	29	காரியம்ஏழி	2505
கல்லாதவரு	310	காணலுமாகுங்	780	காரியம்ஏழு	2507
கல்லொளிமா	2483	,,	1352	காரொளி	1274
கல்லொளியே	938	காணலுமாகும்	769	காலங்கட	1954
கல்வியுடை	293	காணவ	2823	காலங்கி	2305
கழலார்	1600	காணுதகண்ணி	2074	காலரை	1289
கழிகின்ற	762	காணுதகண்ணு	1610	காலவி	1216
கழிப்படு	1835	காணும்இரு	1092	காலினி	2639
கழிவுழுத	1875	காணும்பரி	866	காலுந்த	2425
கழுநீர்	324	காணும்பல	1087	காலும்	146
களருழு	2880	காணும்பொரு	1302	காலைஎழு	182
களிம்பறு	114	காண்கின்ற	434	காலைநடு	955
கறங்கோலை	2313	காண்டற்	1793	காலோடு	694
கறுத்த	2051	காதணி	1664	கால்கொண்டு	246
கற்குழி	211	காதல்வழி	712	கால்கொண்டெ	2433
கற்பன	1421	காதுப்	1424	காளியோ	2746
கற்பனை	628	காமமுங்	326	காணுறுகொடி	1452
கற்பாய	2047	காமம்வெகுளி	2436	,,	1848
கற்றபசு	2015	காமருதத்	691	கிடக்கின்ற	2407
கற்றறிவா	291	காயக்குழப்ப	2071	கிடக்கும்	2032
கற்றுஞ்சிவ	318	,,	2550	கிடந்தது	718
கனவின்	2203	காயத்திரி	226	கிரணங்க	2702
கனிந்த	266	காயத்திலே	1935	கிரியை	1448
கன்றலு	1686	காய்த்தேரே	1651	கில்லேன்	313
கன்னிஒளி	1168	காயப்பரப்பி	1787	கிழக்கெ	177
கன்னித்துறை	1519	காயப்பை	2122	குசவன்	443
கன்னியுங்	1118	காயம்இர	17	குடையுங்	166
கன்னியொரு	2073	காயம்பல	2866	குடைவி	2925
காக்கலு	713	காயாதி	643	குட்டமொ	2031
காக்கை	167	காயுங்	2131	குணம	816
காடுபுக்	2893	காய்ந்த	2309	குணவி	2018
காட்டலு	782	காரணன்	391	குண்டல	1050
காட்டுங்	2937	காரணிசத்	1389	குதித்	2099
காட்டும்	2301	காரணிமந்	1088	குத்து	1163
		காரியமான	639	கும்பக்	1127

கும்பமலி	2928	கூடியத	1287	கைய	1294
கும்பிட	2752	கூடியதி	2776	கைவிட	2043
குயிற்கு	488	கூடியபா	1730	கைவிட்டி	503
குரவன்அரு	642	கூடியும்	2109	கைவிட்டு	151
குரவன்உ	1594	கூடுகெ	2852	கொங்கி	1177
குரான	2750	கூடும்உ	1783	கொங்கு	2930
குருடர்	2048	கூடும்ப	2897	கொடிய	1197
குருட்டி	1680	கூத்தவன்	757	கொடியா	1040
குருவ	2705	கூத்தனெ	935	கொடு	2733
குருவு	2762	கூத்தன்க	2767	கொட்ட	2906
குருவெ	2057	கூத்தன்குறி	755	கொட்டி	2901
குருவே	1581	கூத்தே	912	கொட்டு	2909
குரைக்	1773	கூபத்	1397	கொண்டஇக்	1018
குலாவி	1111	கூப்பிடுகொ	2881	கொண்டஇச்	949
குலைக்கின்றந	2892	கூப்பிடுமா	2900	கொண்டஇம்	1290
குலைக்கின்றநீ	2836	கூவிய	1096	கொண்டஇவ்	1930
குவிந்த	1415	கூறது	369	கொண்டகன	1372
குழவி	482	கூறிய	1181	கொண்டகுண	1943
குறிக்கி	1785	,,	1285	கொண்டகுறி	1870
குறிப்பறி	290	கூறுமினூ	1739	கொண்டங்கி	1416
குறிப்பினின்	587	கூறுமின்	1822	கொண்டசுழி	2966
,,	1794	,,	1332	கொண்டநல்	483
குறியறி	2353	கூறும்	765	கொண்டல்	424
குறியாக்	2638	கூறை	2894	கொண்டவிரத	612
குறைந்த	40	கெடுவது	268	கொண்டனள்	1102
குறைவது	1301	கேடறு	1428	கொண்டா	1784
கூகைகு	2921	கேடிலி	1409	கொதிக்	2621
கூகையு	2891	கேடில்	1356	கொம்ப	1058
கூடகில்லார்	2093	கேடுங்	1618	கொலையிற்	340
,,	2559	கேட்டு	471	கொலையே	200
கூடங்கிட	162	கேவலத்	2250	கொல்லான்	554
கூடமு	1020	கேவலந்தன்	2242	கொல்லிடு	198
கூடம்எடு	576	,,	2302	கொல்லுமு	2912
கூடித்	1636	கேவலமாதி	2249	கொல்லையில்	2903
கூடிநி	2794	கைகலந்தா	2604	கொல்லையின்	2016
கூடியள	985	கைப்பட்ட	536	கொழுந்	1769

கொள்கை 2377
கொள்ளி 1693
கோணுமன 588
கோது 16
கோழு 2932
கோயிலி 811
கோயில்கொ 1728
கோயில்கொண் 1729
கோரை 2911
கோலக் 1100
கோலவற 505
கோல்வளை 484
கோவ 2674
கோவு 2389
கோழை 208
கோன 1453
சகலஅ 2230
சகலத் 2251
சக்கரம் 368
சசியு 873
சடங்க 1192
சட்கோ 1312
சதாசிவ 76
சத்தமுஞ் 1468
,, 1973
சத்தமுதல் 135
சத்தன் 333
சத்திகள் 2737
சத்திக்கு 1768
சத்திசிவமா 1755
சத்திசிவன்பர 2828
சத்திசிவன்வினை 492
,, 1771
சத்திசிவன்றன் 1772
சத்திதரா 1737
சத்திதான் 1741
சத்திநற் 1758
சத்திநாற் 1745
சத்திபரா 2270
சத்தியஞா 2860
சத்தியழு 228
சத்தியம் 231
சத்தியார் 730
சத்தியிரா 2211
சத்தியிலை 1234
சத்தியும் 1230
சத்தியெ 1199
சத்தியை 332
சத்திவ 2769
சத்தின் 2459
சத்தும்அ 1420
,, 1431
,, 1697
,, 2058
,, 2328
சந்தினை 27
சந்திசெய 354
சந்திப்பது 141
சந்திரபூ 2662
சந்திரன்சூரிய 704
,, 1989
சந்திரன்பாம் 2963
சமயங் 1508
சமயத் 1734
சமாதிசெய் 631
,, 1202
சமாதியமா 618
சமைக்க 365
சமையச் 2838
சமையமல 1845
சமையம்பல 1450
சயில 1511
சரியாதி 1449
சற்குண 1703
சன்மார்க்கசற் 535
சன்மார்க்கசாத 1483
சன்மார்க்கத் 1482
சன்மார்க்கந் 1488
சன்மார்க்கமா 1229
சன்மார்க்கமெ 1484
சாக்கிரசாக்கிர 2167
,, 2253
,, 2182
,, 2186
சாக்கிரந்தன் 2265
சாக்கிரா 2212
,, 2254
சாங்க 1004
சாண 1843
சாதகமான 717
சாதனை 1044
சாத்திகமெய் 2296
சாத்திகனைய் 1696
சாத்திடு 758
சாத்தியு 1841
சாத்திரம் 1631
சாந்து 34
சாம்பவிந 1894
சாம்பவிம 1297
சாயுச்சி 1513
சார்ந்தமெ 1447
சார்ந்தவர்க் 2114
சார்ந்தவர்சார 2347
சார்வாம் 2286
சாலோக 1507
சாற்றரி 1442

சாற்றியவி 1962
சாற்றியவே 1098
சாற்றுஞ் 1477
சிகார 982
சிகை 1093
சித்தஞ்சிவமாக 1644
சித்தஞ்சிவமாம் 3061
சித்தஞ்சிவமாய் 2969
சித்தத்தின் 84
சித்தந்திரி 652
சித்தம்உரு 325
சித்தம்யா 1582
சித்தர்சிவத் 2526
சித்தர்சிவலோ 125
சித்தாந்த 2394
சித்திகளெட் 670
சித்திகள் 1575
சித்தியும் 2477
சிந்தைய 2853
சிந்தையில் 1201
சிந்தையினுள் 1138
,, 1370
,, 2428
சிவகதி 1536
சிவசிவஎன்கி 2716
சிவசிவஎன்றே 2715
சிவஞானி 1670
சிவபெரு 2971
சிவமல்ல 1534
சிவமாகிஐவ 497
சிவமாகிமும் 2476
சிவமாகிய 2021
சிவமாட 2791
சிவமாதல் 2393
சிவமாதி 2793
சிவமாம் 62
சிவமாய 2834
சிவமானசிந் 2539
சிவமானஞான 1587
சிவமொ 1807
சிவயோக 122
சிவயோகி 1882
,, 1905
சிவனருளாய 2711
சிவனருளாற் 1649
சிவனவன் 1560
சிவனே 1580
சிவனைப் 2395
சிவனைவழி 2119
சிவனை 5
சிவன்சத் 2710
சிவன்முதல் 106
,, 990
சிவன்வந்து 2975
சிவாயநம 2718
சிவாயவொட 981
சிறியார் 306
சிற்பர 2723
சினஞ் 41
சீக்கை 147
சீயகுரு 2802
சீராரு 1699
சீர்நந்தி 1863
சீவது 2568
சீவனை 2017
சீவன்து 2284
சீவன்றன் 2474
சுக்கில 464
சுடரூற 2694
சுத்தஅதீ 2311
சுத்தஅவ 2245
சுத்தசிவன் 1578
சுத்தச்சிவனு 1440
சுத்தத்திற் 2252
சுத்தம்அசு 1430
சுத்தவம் 1052
சுழலும் 737
சுழல்கின்ற 754
சுழித்து 726
சுழுத்தி 2204
சுழுனையைச் 2156
சூக்கும 909
சூடிடும் 1207
சூடும்இள 1209
சூடுவன் 50
சூரிய 117
சூலங்க 1081
சூலத்தலை 926
சூலந்தண் 1398
சூழுங்கரு 3000
சூழ்ந்தெழு 1382
செஞ்சுடரோ 1975
செஞ்சுடர் 2719
செத்தார் 1907
செந்தாமரை 405
செப்புஞ்சிவா 74
செம்பு 903
செம்பொற் 635
செம்மை 2455
செயலற் 2319
செய்தஇயம 550
செய்தான்அறி 522
,, 2068
செய்திடும் 1924
செய்யதி 1316
செய்யன் 1520

செய்யும் 1941
செல்கின்ற 83
செல்லு 2103
செல்வங் 269
செவிமந்திர 359
செவிமெய் 2589
செவ்வாய் 792
செழுஞ் 3034
செறியு 2189
செற்றிடு 2501
செற்றிலை 2847
சென்றன 2040
சென்று 191
சேயன் 1540
சேருஞ்சிவ 2337
சேருறு 636
சேர்ந்தகலை 1036
சேர்ந்தவர் 1348
சேர்ந்திருந்தே 79
சேவடிஏத் 376
சேவடிசேர 1333
சேவிக்கு 959
சேவிப்ப 1318
சைவசமய 1567
சைவஞ்சிவ 1512
சைவப்பெரு 1478
„ 1559
சொரூபம் 2843
சொல்லகில் 2028
சொல்லலுமா 822
சொல்லவொ 1164
சொல்லிய 1257
சொல்லு 908
சோடசமா 2680
சோதனை 721
சோதிஇரே 582
சோதித்தபே 110
சோதித்தனி 630
சோதிவிசாகந் 1694
சோம்பர் 128
சௌமுதல் 1320
ஞாயிறு 2703
ஞாலம 1259
ஞானச் 1476
ஞானத்தலை 82
ஞானத்திரு 1674
ஞானத்தின் 2821
ஞானத்தின்ஞா 1474
ஞானத்தின்மிக் 1467
ஞானந்தன் 2332
ஞானமிலாதா 242
ஞானமிலார் 1668
ஞானமில்லார் 1656
ஞானம்விளை 541
„ 1472
ஞானிக்குக் 2135
ஞானிக்குச் 1673
ஞானிக்குட 1473
ஞானிபுவி 1426
ஞானியை 538
ஞேயத்தே 1606
ஞேயத்தை 90
தக்கபராவி 1175
தக்கன்றன் 370
தங்கிய 1510
தட்டத்து 2904
தட்டான் 2876
தண்கடல் 364
தண்டறு 1858
தண்டுடன் 752
தண்மதி 875
தத்தஞ்சமய 247
தத்துவஞான 98
„ 2330
தத்துவமாகு 2396
தத்துவமாவ 1738
தத்துவமான 2180
தத்துவம்ஆட 2789
தத்துவம்ஆரு 2184
தத்துவம்எங் 2817
தத்துவம்நீக் 334
தந்தைபிரான் 353
தமிழ்மண்டல 1646
தரணிசலங் 859
தராதல 890
தரிக்கின்றநெ 2042
தரிக்கின்றபல் 1589
„ 1782
தரித்திருந்தா 1156
தரித்துநின்ரு 2431
தருவழியாகி 1374
தரையுற்ற 1725
தலைநின்றதாழ் 2597
„ 2845
தலைப்படலா 2666
தலைப்படுங்கா 2668
தலைப்பட்ட 660
தலைப்பட்டிரு 629
தலைமிசை 1878
தலையடி 2426
தலையான 1810
தலைவனிடம் 773
தலைவனுமாயி 829
தலைவனுமாய் 897
தலைவி 1060
தவஞ்செப 557
தவத்தி 1685
தவமிக் 1661

தவம்வேண்டு 1632
தவிரவைத் 2050
தழைக் 187
தளியறி 510
தளிர்க்கு 2924
தற்கண்ட 2451
தற்கேவல 2246
தற்பதந் 2488
தற்பதம் 2439
தற்பரமல்ல 2943
தற்பரமன்னு 2462
தற்றெரியாத 2195
தனமது 1379
தனிச்சுட 1997
தனியாய 1252
தன்பால் 1469
தன்மனை 1915
தன்மேனி 1750
தன்மையதாக 687, 689
தன்மைவல் 2642
தன்வலியா 3023
தன்வழியாக 678
தன்னது 170
தன்னினில் 2349
தன்னுளு 1351
தன்னேஅறி 255
தன்னேப்பர 1432
தன்னேயறிசு 2227
தன்னேயறிந்தி 2611
தன்னேயறிந்து 2331
தன்னேயறிய 2355
தன்னேயறியா 2264
தாங்கருந்தன் 419
தாங்கிஇரு 350
தாங்கிஉல 1244
தாங்கியதன் 650
தாங்கியநாபி 1386
தாங்குமின் 1525
தாடந்தபோ 1591
தாடந்தளிக்கு 2049
தாண்டவ 888
தாபரத்துண் 1717
தாமக்குழலி 1091
தாமதகாமிய 2494
தாமரை 2562
தாமறி 251
தாமிடர் 544
தாமுடி 2785
தாமேல் 1141
தாரகைமின் 860
தாரகையாக 1272
தாரத்தினுள் 1405
தாரமுமாகு 1179
தார்சடையான் 546
தார்மேல் 1130
தாவரலிங்கம் 515
தாவித்தவப் 1153
தாவியமாயை 2231
தாழ்விலர் 1867
தாளணி 1049
தாளதினுள் 1355
,, 1395
தானக்கமல 377
தானதுகம் 1344
தானத்தி 1895
தானத்தெழுந் 2157
தானந்தமா 2081
தானந்தமே 1226
தானந்தம் 2724
தானந்தி 1583
தானமிழ 2155
தானவர் 988
தானவனுக 1011
தானவனுகிச் 1592
தானவனுகித் 1481
தானவனுகிய 2324
,, 2134
தானவனுகுஞ் 2320
,, 2381
தானன்றி 1675
தானுஅ 1047
தானுந 2467
தானுனச 2803
தானுனவ 2664
தானுனவா 1174
தானுனவே 2372
தானிகழ் 1225
தானிவை 1903
தானிவ்வகை 1904
தானுமழி 2951
தானெங்குமா 2207
தானெங்குள 1055
தானென்றவ 1607
,, 2348
தானேஅணு 649
தானேஅறி 1796
தானேஇருநில 10
,, 1165
தானேஎழுந்த 719
,, 1132
,, 1364
தானேகழறி 1341
தானேசிவ 2314
தானேதலைவி 1074
தானேதனக்கு 896
,, 901
,, 2228

தானேதிசை	412	திருத்திவளர்	202	துரியங்கள்மூ	2940
,,	2967	திருநெறியாகி	232	துரியங்கள்மூன்	2657
தானேபடை	686	திருநெறியாவ	54	துரியதரிசன	2225
,,	1809	திருந்தனர்	2339	துரியத்தில்	2292
தானேபரஞ்	889	திருந்துசிவனு	1235	துரியநனவா	2205
தானேபுலன்	140	திருந்துதின	743	துரியப்பரி	2276
தானேயருளா	1938	திருந்துநற்	2797	துரியமிருப்ப	2159
தானேயளி	937	திருமந்திரமே	3062	துரியம்அடங்கி	2498
தானேயறி	2329	திருமன்னுஞ்	1501	,,	2572
தானேயிரு	2697	திருமேனிதா	3063	துருத்தியுள்	2895
தானேயுப	1968	திருவடிஞான	1598	துவந்தத்தசி	2571
தானேயுலகி	2598	திருவடியே	138	துவாதசமார்	1899
தானேயுலகு	1978	திருவடிவை	1597	துறந்தான்	256
தானேயெழு	939	திருவம்பல	904	துறந்துபுக்	2585
தானேயென	2055	திருவழியா	2763	துன்றுந்தயிர்	1720
தானேரெழு	1756	திருவாய	1584	துன்னிநின்று	2858
தானேவிடும்	237	திலமத்தனை	501	தூங்கவல்லார்	638
தானேவிரி	2003	தினைக்கும்	258	தூங்கிக்	129
தானேவெளி	1361	திறத்திறம்	731	தூநெறி	1901
தாளிருகாலஞ்	275	திறந்தரு	244	தூம்பு	1623
தாளிருகாலந்	415	தீங்கரும்	808	தூயதுவா	2555
தாளிருகூறு	112	தீண்டற்	2346	தூயவி	1718
தாளின்றிவா	915	தீத்திரட்	2800	தூய்மணி	2554
தான்தவஞ்	257	தீமுதல்	2766	தூய்மை	556
தான்முன்ன	2848	தீம்புலனை	1515	தூரதரி	823
தான்வரை	2954	தீயவைத்	430	தூரத்திற்	384
தீகழும்	720	தீயினும்	8	தூரறிவா	1553
தினைக்கின்ற	2214	தீவினையாட	807	தூலப்பிர	2675
தினைக்குரியா	1868	தீவினையாளர்	812	தூறுபடர்	2867
தினையனைத்து	3010	துடுப்பிடு	193	தூநெறி	1901
தினையெட்டு	2531	துணிந்தார	1877	தெக்கண	798
தினைவிளை	2561	துணையது	294	தெய்வச்	2004
தின்டாடி	2779	துரிசில்	580	தெரிசிக்	1479
தினிகின்ற	348	துரியஅ	2863	தெருளும்	435
தினிபுரை	1046	துரியங்கடந்து	2454	தெளிதரும்	846
திருத்திப்புத	837	துரியங்கண்	1893	தெளிந்தார்	361

தெளிந்திடு 1288
தெளியுமிவை 2378
தெளிவருநா 1014
தெளிவறியா 1480
தெளிவுகுரு 139
தெளிவுறு 526
தெள்ளமு 2704
தெற்குவட 2739
தென்னன் 1079
தேசார் 2380
தேசு 2191
தேடுகின்றேன் 2368
தேடுந்திசை 406,414
தேடும்இயம 2376
தேட்டறு 2745
தேய்ந்தற் 179
தேர்ந்தஅரனை 1563
தேர்ந்தறியா 1795
தேர்ந்தெழு 1173
தேவரசுரர் 2731
தேவருறை 886
தேவரோ 2757
தேவர்களோடி 1838
தேவர்பிரானை 1765
தேவர்பிரான்த 301
,, தி 1995
தேவர்பிரான்நம் 32
தேவனுஞ் 1577
தேவனுமா 3032
தேறுத 2544
தேற்றத் 172
தையல் 1103
தொடங்கி 1247
தொடர்ந்துநின்று 26
தொடர்ந்துநின் 2643
தொடர்ந்தெழு 212
தொடியார் 1151
தொட்டேயிரு 2470
தொந்தத்தசிலு 2489
,, சியை 2490
தொம்பதந்தற் 2441
,, 2473
,, 2573
,, 2826
தொம்பதமா 2492
தொலையா 2321
தொழிலறிவா 1690
தொழிலார 1695
தொழிலிச்சை 2334
தொற்பதவிசு 2537
தோட்டத்தில் 2933
தோணியொன் 2935
,, 2915
தோத்திரஞ் 1068
தோற்போர் 1317
தோன்றஅறி 2661
தோன்றிடும் 1238
தோன்றியஎல் 323
தோன்றியதொ 2437
தோன்றியபெ 2322
தோன்றியென் 2445
நகழ்வொழிந் 2669
நகாரமகார 976
நடக்கின்ற 2039
நடந்த 1143
நடந்திடுநாவி 1338
நடந்திடும் 1326
நடந்துவயிரவ 1292
நடமிர 902
நடலித்த 616
நடுவுகிழக்கு 1735
நடுவுநில்லாதி 337
நடுவுநில்லாமல் 795
நடுவுநின்றூர்க் 320
நடுவுநின்றூர்சில 322
நடுவுநின்றூன் 321
நணுகிலகல் 2811
நணுகினு 1526
நண்ணியஞான 1475
நண்ணியபாச 2421
நண்ணுசிறு 750
நண்ணும் 1007
நந்தி அருளாலே 68
,, 92
நந்தி அருள்பெற்ற 67
நந்தி இணை 73
நந்திஎழு 523
நந்திபெரு 2641
நந்திமுத 806
நந்தியறிவு 2443
நந்தியிருந்தா 2947
நந்தியை 2801
நமவது 1013
நமவென் 2717
நமன் 2968
நமாதி 2713
நம்பனைநாலு 286
நம்பனையாதி 626
நம்முதல் 983
,, 996
நயனம் 605
நரருஞ் 2120
நலந்தரு 1322
நலம்பல 2542
நல்குந் 1048
நல்லதெ 1022
நல்லவச 2138
நல்லார் 360

நல்லொளி	1028	நாடும்உற	1654	நானறிந்தன்	1797
நல்வழி	637	நாடும்பதி	2410	நாணுவிதஞ்	2989
நவகுண்ட	1015	நாடும்பிணி	646	நானிது	1790
நவமாம	2538	நாடும்பிரணவ	922	நாணும்	37
நவமிகு	1914	நாடும்பெருந்	2651	நானென	1788
நவமுஞ்	984	நாடோறும்	2022	நானென்றுந்	1441
நவாக்கரிசக்	1319	நாட்டம்	604	,,	2820
நவாக்கரியா	1321	நாட்டுக்	153	நான்கண்ட	738
நவிலும்	1148	நாணுநல்	1742	நான்பெற்ற	85
நவிற்று	1243	நாதத்தில்	382	நித்தசங்காரங்	427
நள்	1918	நாதத்தினி	2756	நித்தசங்காரமும்	428
நற்கு	1916	நாதத்தின்	2792	நித்தசங்காரம்	425
நற்கொடி	690	நாதத்து	2795	,,	426
நற்சு	1021	நாதமுடி	609	நித்தம்பர	2373
நனவ	2216	நாதனு	1218	நித்துலு	278
நனவாதிஐந்	2575	நாதன்	408	நியமத்த	2116
நனவாதிதூல	2187	நாபிக்கண்	2000	நிரம்பிய	595
நனவாதிமூன்	2466	நாபிக்குக்	579	நிலத்தை	2923
நனவில்	2188	நாமமோரா	2987	நிலாமய	1214
நனவிற்கலாதி	2450	நாயகமாகி	692	நிலைபெற	714
நனவிற்கனவி	2196	நாயோட்டு	3051	நிலைபெறு	2632
நனவின்நனவா	2472	நாலாம்	971	நில்லாது	314
நனவின்நனவு	2202	நாலாறு	2172	நில்லாநில	312
நன்மணி	1403	நாலான	1764	நிறம்பல	3020
நாகமுட	2132	நாலிதழ்	1155	நிற்கின்ற	292
நாகமும்	1621	நாலுங்கட	745	நிற்றலிரு	3050
நாசிக்க	581	நாலும்இரு	1704	நினைக்கின்	2667
நாசிநு	2546	நாலேழு	1892	நினைத்திடு	1324
நாடரி	1298	நாலைந்	1299	நினைப்பும்	2970
நாடவல்	764	நாலொரு	2178	நினையும்	2830
நாடிகள்பத்து	2174	நால்வரும்	70	நினைவதும்	1826
நாடிகள்மூன்று	1106	நாவியின்	956	நின்மல	2584
நாடிய	2185	நாவின்	803	நின்றஅர	997
நாடியின்	657	நாவுக்கு	1387	நின்றஇக்	1029
,,	667	நாள்தோறு	239	நின்றஇச்ச	1390
நாடுநகரமு	1445	நானறிந்தப்	3027	,,	1401

நின்றஇச்சா 2277
நின்றஎழுத் 947
நின்றசதா 684
நின்றசிகா 1967
நின்றதிரி 1051
நின்றதுஅ 1275
நின்றதுசக் 948
நின்றதுதானுய் 403
,, 438
நின்றதுபுந்தி 1410
நின்றபரா 1136
நின்றபுக 2088
நின்றவயி 1097
நின்றவள் 1061
நின்றவன்ஆ 2217
நின்றவன்நி 2154
நின்றவினை 2618
நின்றனதத் 679
நின்றனள் 1221
,, 1237
நின்றனன் 3038
நின்ரூர் 2936
நின்ரூள 1066
நின்ரூன் 375
,, 2295
,, 2427
நின்றிடும்எழு 1353
நின்றிடும்எழ் 1358
நின்றிடுவி 1271
நின்றுதொ 1500
நின்றும் 1985
,, 2517
நின்றுயி 394
நீங்காச் 1605
நீதி 2096
நீயது 2577
நீரகத் 388
நீரில் 954
நீரிற் 2625
நீரின் 2920
நீருஞ்சி 2764
நீரும்நில 3045
நீர்பணி 1329
நீலநிற 734
நுண்ணறிவாகு 1228
நுண்ணறிவா 2518
நூலுஞ்சிகை 230
,, 1665
நூலொன்று 295
நூறுசமய 1537
நூறுமிள 847
நூறும்அறு 729
நெஞ்சுசி 1743
நெஞ்சுநிறை 2094
நெஞ்சுநினைந் 2707
நெய்நின் 218
நெருப்பு 2315
நெறியது 1240
நெறியை 1617
நெறிவழி 1457
நெற்றிக்கு 2770
நெற்றிநடு 3064
நேடிக்கொண் 2522
நேயத்தேநிற் 2053
நேயத்தேநின் 1812
நேரறிவாக 1998
நேராமலத்தை 2166
நோழை 78
நோர்தரு 1325
நோர்ந்திடு 1443
நோக்குங் 3033
பகலவன் 1976
பகலும் 1855
பகவற் 1865
பகையில்லை 1304
,, 1339
பங்கயமாதி 558
பசுக்கள் 2193
பசுபாச 1486
பசுப்பல 2406
பச்சிமதிக் 1780
பச்சைஇவ 1394
பஞ்சத்து 1684
பஞ்சமூ 2118
பஞ்சலோ 1917
படமாடக் 1857
படர்கொ 2009
படர்சடை 1641
படிகால் 3013
படியு 2165
படுவதி 893
படைத்து 446
படைப்பாதி 2415
படைப்பும 2418
பட்டபரி 974
பட்டன 989
பட்டிப்பசு 2874
பணிந்து 2972
பணிந்தெண் 640
பண்டம் 144
பண்டித 59
பண்டெங் 2964
பண்டை 2463
பண்ணு 2139
பண்ணிய 1367
பண்பழி 366
பதஞ்செய் 423, 462
பதமுத்தி 2525

பதிபசு	115	பரந்தது	943	பள்ளிஅறை	611
,,	2412	பரந்தி	1378	பறக்கி	2108
பதிபல	33	பரந்துஞ்	2458	பறவை	2629
பதியது	2430	பரந்துல	1888	பற்றதுபற்றி	298
பதியும்	2413	பரமகு	2835	பற்றதுவாய்	259
பதுங்கி	2914	பரமாண்ட	2734	பற்றறப்பற்றி	2448
பதைக்கி	1692	பரமாநன	2283	பற்றற்றவர்	2865
பதைத்தொ	1691	பரமாம்	2274	பற்றுய	197
பத்தர்சரி	1446	பரமாய	946	பற்றிநின்	539
பத்தன்கிரி	1455	பரம்பர	2449	பற்றிப்பத	633
பத்திட்ட	1032	பரவப்	264	பற்றினு	3031
பத்திப்பணி	1573	பரனல்ல	2861	பன்மணி	1083
பத்தியும்	1585	பரஞ்ப்பராபர	61	பன்றியு	2918
பத்திரங்	563	,,	2855	பன்னெத	2429
பத்திவிதை	3065	பரனெங்கு	2590	பன்னிரண்	1075
பத்திவிற்	2069	பராசத்	1056	பன்னிரண்டா	577
பத்தினி	532	,,	1169	பாகம்	1217
பத்துத்திசை	1451	பராபரஞ	3008	பாங்கமர்	1551
பத்துப்பரும்	2888	பராபரன்	1760	பாசஞ்	2408
பத்துமுக	1180	பரானந்தி	2398	பாசத்தி	1802
பத்தும்	854	பரிசறிந்த	3002	பாசத்தைக்	1574
பத்தொடு	2176	பரிசறிவானவ	641	பாசத்தைநீ	2052
பந்தல்	152	,,	1544	பாசமதாகிய	1383
பயனறி	1836	பரிசன	2054	பாசமதாகு	3067
பயனு	2807	பரியங்க	831	பாசம்பசு	1509
பயன்அறி	107	பருந்துங்	2896	பாசம்பயிலு	2423
பயன்எளி	392	பருவுசி	183	பாசி	2927
பரகதி	2558	பரைபசு	49	பாடவல்	96
பரசுபதி	2672	பரையின்	2511	பாட்டும்	56
பரஞ்சி	2285	பலவுடன்	3043	பாதமுழு	562
பரஞ்சோ	2842	பலியும்	2649	பாம்பு	871
பரதுரி	2282	பல்லூழி	2533	பாய்கின்ற	480
,,	2444	பழுக்கி	1643	பாய்ந்தபின்	479
பரத்திலே	111	பழுத்தன	2721	பாய்ந்தன	2038
பரத்திற்	491	பள்ளச்	2871	பாரதுபொன்	2145
பரந்தகரம்	1376	பள்ளமுது	3066	பாரில்லை	844

.பாருக்குக் 1982
.பாரையிடந்து 1984
.பார்க்கலு 777
" 1283
.பார்க்கின்ற 1937
.பார்த்திட 1042
.பார்த்திட்டு 1945
பார்ப்பதி 1033
.பார்ப்பான் 2883
.பாலனு 1135
பாலன் 181
.பாலிக்கும் 867
பாலித்திரு 1193
பாலொடு 2831
.பாழி 219
.பாழே 429
.பான்மொழி 1825
பிச்சைய 1887
பிணக்கறு 2974
பிணங்கவும் 2515
.பிணங்கிஅழி 753
பிணங்கினி 1493
.பிண்டத்தில் 466
பிண்டத்துள் 736
.பிண்டாலம் 3025
பிதற்றிக்கழி 1116
பிதற்று 94
.பிதற்றே 38
பித்தன் 2075
பிரமனும் 372
பிராணன் 567
பிரானருள் 1645
.பிரானல்ல 1761
.பிரான்மய 2076
.பிரான்வைத் 2708
.பிரிந்தேன் 2961
பிறந்தும் 1615
பிறப்பது 789
பிறப்பறி 1626
பிறப்பிலி 25, 86
பிறப்பை 1524
பிறவா 1803
பிறிவி 1182
பிறையுட் 2512
பின்னெய்த 1586
" 1629
பின்னேநின் 81
பின்னேயறி 2288
புகலெளி 2682
புகழநின் 308
புகுந்தறி 397
புகுந்துநின்று 411
" 2985
புகையில்லை 1347
புடையொன் 715
புடைவை 209
புணர்ச்சி 283
புண்ணியஞ் 1828
புண்ணியநந்தி 1078
புண்ணியபாவ 1647
புண்ணியமண் 1851
புண்ணியமா 1912
புண்ணியவான 993
புண்ணியனெகி 1343
புண்ணியன்ன 1650
புண்ணியன்நந்தி 387
புரிந்தருள் 1184
புரிந்தவன் 2786
புரிய 2201
புரியும் 2534
புருட 2300
புரை 134
புலமைந்து 2025
புலமையின் 3036
புலர்ந்தது 2934
புவனம் 386
புவனை 3039
புளிக்க 2779
புள்ளினும் 566
புறத்து 2812
புறப்பட்டவாயு 586
புறப்பட்டுப்புக் 575
பு...டுப்போ 2560
புறமக 1929
புறமே 1820
புனைய 1149
புன் 1669
பூசனைக 1086
பூசனைச் 1404
பூசனைசெய் 1295
பூசிக்கும் 1315
பூசித்தல் 1496
பூசுவன 825
பூட்டொத்து 624
பூதக்கண் 2986
பூதங்கள்ஐந்தி 2730
பூதங்கள்ஐந்து 2146
பூதல 2748
பூதாண்ட 2728
பூதியணி 1662
பூரணசத்தி 663
பூரணந்தன் 1433
பூரணி 2576
பூரித்த 1084
பூவினிற் 1459
பூவின் 456
பூவுடன் 472
பெடை 2902

பெட்டடி	1781	பைந்தொடி	1142	போதுசட	2085
பெண்ணை	1872	பையினி	820	போதுபுனை	1724
பெண்ணெருமை	1159	பொய்க்குழி	210	போதும்புலர்	2931
பெத்தத்தசித்	496	பொய்த்தவஞ்	1659	போயநன்	42
பெத்தத்துங்	2628	பொய்யான	2235	போவதொன்	681
பெத்தமும்	2255	பொய்யிலன்	1996	போற்றினன்	44
பெம்மான்	2635	பொய்வேடம்	1660	போற்றிசெய	2105
பெருக்க	2036	பொருள	2556	போற்றிசைத்	2
பெருஞ்சு	3029	பொருள்	203	,, 24,	2041
பெருஞ்செல்வ	220	பொல்லா	199	போற்றியென்	1150
பெருநில	2805	பொழிந்த	815	,,	2521
பெருநெறி	227	பொற்கொடிமா	1245	போற்றுகின்	884
பெருந்தன்மை	1791	பொ...டியா	1413	,,	2988
,,	1844	பொற்பாத	907	போற்றும்	3009
பெருமான்	303	பொன்றுற்சிவ	1427	மகார	921
பெருமை	133	பொன்றுற்புரி	9	மகிழ்	173
பெருவாய்	2481	பொன்றுன	906	மங்கை	1191
பெறுதற்	2090	பொன்னைக்கட	271	மஞ்சன	1827
பெறுப	2297	பொன்னைம	2289	மஞ்சொடு	2164
பெற்றநல்	63	போகஞ்	1057	மடல்	165
பெற்றபுதல்வ	2434	போகத்துள்	465	மட்ட	918
பெற்றமும்	89	போகத்தை	826	மணிகடல்	606
பெற்றூர்	132	போகமும்மாதர்	529	மணிமுடி	1377
பெற்றுள்	1251	போகமும்முத்	1714	மணியொளி	2482
பெற்றிருங்	530	போகின்றனட்	457	மண்டலத்துள்	818
பேசிய	1095	,,	2926	,,	1385
பேச்சற்றஇன்	1595	போகின்றபொ	2886	,,	1999
பேச்சற்றநற்	1160	போகின்றவா	2107	மண்டலமூன்	2219
பேணிற்	1463	போகின்றனட்	2926	மண்டலம்	623
பேதம்	2343	போக்கும்	393	மண்ணகத்தா	31
பேதை	1414	போதந்தரு	142	மண்ணள	13
பேரொளியாகி	693	போதந்தன	2438	மண்ணில்	1406
பேரொளியாய	1375	போதறியா	2220	மண்ணிற்	2991
பேர்கொண்ட	519	போதிரண்	217	மண்ணினில்	2151
பேர்பெற்றது	928	போதுகந்தேறு	632	மண்ணையிட	1983
பேறுடை	1331	போதுகரு	2692		

மண்ணென்று 143, 440
மண்ணென்று 2351
மண்மகிலை 508
மதிதனில் 645
மதித்திடும் 1286
மதியமும் 710
மதியினை 813
மதிவட்ட 740
மதுவூர் 155
மத்தளி 189
மத்திமமொ 2170
மத்திமம் 2833
மந்தரமேறு 672
மந்திரஞ்ச 1281
மந்திரதந் 2045
மந்திரமாவ 1604
மந்திரம்ஒன்று 958
மந்திரம்ஒரெ 533
மந்திரம்பெற்ற 69
மயக்கியஜும் 2608
மயக்குஞ்ச 329
மயக்குற 2565
மயங்குகின் 1539
மயங்குந்தி 330
மயலற்றிரு 1678
மயன்பணி 302
மரணஞ்சரை 706
மரத்தை 2290
மருட்டி 1518
மருவிப் 2665
மருவுஞ் 979
மருவுந்துடியு 2798
மருவுந்துவாத 1489
மருவொத்த 1137
மலக்கல 2213
மலங்களை 118
மலமில்லை 2957
மலமென்று 2137
மலர்ந்த 1776
மலைமேல் 2882
மலையார் 589
மலையும 2679
மறந்தொழி 2102
மறப்பது 2939
மறப்பு 1830
மறையவர் 1721
மறையவனு 940
மறையோர 233
மனசந்தி 2813
மனத்திடை 1638
மனத்தில்எழு 22
,, 1681
மனத்துவிள 602
மனத்துறை 1637
மனத்தொடு 1972
மனபவன 1854
மனமது 2609
மனமாயை 2956
மனம்புகுந்தா 2663
மனம்புகுந்தெ 1759
மனம்விரி 2981
மனவாக்கு 2612
மனவுநனவு 3068
மனைபுகுவார் 205
மனைபுகுவீ 744
மனையில் 785
மனையுள் 47
மன்மனம் 620
மன்றத்தே 149
மன்றுநிறைந்த 2446
,, 2772
மன்னிநின்ரு 2360
மன்னியசோ 2403
மன்னியவாய் 97
மன்னுஞ் 2827
மன்னுமலை 2983
மன்னும்ஒரு 1555
மன்னும்மலம் 1689
மாடத்து 2614
மாட்டிய 1027
மாணிக்கக் 2743
மாணிக்கத்துள் 131
மாணிக்கமாலை 2064
மாண்பது 477
மாதரிட 1961
மாதரை 1953
மாதவர் 1542
மாதனை 1041
மாதா 481
மாதுநல் 1157
மாத்திரை 1859
மாமதியா 2524
மாமாயை 1045
மாயப்பாழ் 2496
மாயம்பு 1249
மாயவிளக் 2367
மாயஞ 2365
மாயனை 2982
மாயாவு 2014
மாயாள் 1939
மாயைகைத் 2268
மாயைமறை 2548
மாயையிர 2655
மாயையில் 2198
மாயையிற் 2226
மாயையின் 2243
மாயையெழு 2168

மாரியுங் 65
மார்க்கங்க 1227
மார்க்கஞ் 1487
மாலகுவாகி 675
மாலாங்க 77
மாலே 1529
மால்போத 367
மாழுத 1434
மாழுமலக்கு 733
மாழுமலமை 2160
மாறிவரு 793
மாறுதிரு 192
மாறுமதி 883
மாறெதிர் 3017
மானந்தி 1746
மானின்கண் 385
மானுடராக் 1726
மீக்கார 2815
மிருகமனி 2095
மினற் 1565
மின்னிடை 841
மின்னிய 2686
மின்னுற்ற 2859
மீண்டார் 2978
மீது 1921
முகத்திற் 2944
முகம்பீட 2653
முக்கணன் 1025
முக்கரணங்க 2487
முக்காத 2916
முக்குண 615
முச்ச 1145
முடிந்த 749
முடிந்திட்டு 673
முடிமன் 1601
முடிவும் 20
முட்டை 163
முதலாகும் 2404
முதலொன்று 3055
முதற்கிழ 489
முத்தண்ட 3004
முத்திக்கு 2506
முத்திசெய் 2623
முத்திநற் 1035
முத்தியில் 2633
முத்தியு 2862
முத்தியை 2115
முத்திரைமூன் 1176
,, 1612
முத்தினின் 2984
முத்தின் 2819
முத்தீக் 344
முத்துடன் 1719
முத்துவதன 1194
முந்திய 651
முப்பது 126
,, 154
முப்பதோடா 2143
மும்மலங் 2244
மும்மூன்றும் 776
முழக்கி 2034
முளிந்தவர் 527
முறைமுறை 748
முற்பதி 861
முன்சொன்ன 2540
முன்படைத் 276
முன்புபிறப்பு 287
முன்னம்வந் 596
முன்னவனர் 518
முன்னிக்கொ 2152
முன்னிருந் 1881
முன்னின்றரு 1648
முன்னெழுநா 824
முன்னெழும் 699
முன்னைமுதல் 2369
முன்னையறிவ 1609
முன்னையறிவி 2318
முன்னையொப் 7
முன்னைவினை 2610
முங்கின் 2887
மூடங்கெடா 241
மூடுதல் 2563
மூலத்திரு 580
மூலத்துமேல 627
மூலத்துவாரத் 345
,, 583
மூலநாடி 622
மூலமுதல் 708
மூலனுரை 3046
மூலன்உரை 99
மூவகைத் 2839
மூவணையேறு 2872
மூன்றினில் 2784
மூன்றுமடக்கு 728
மூன்றுளகுற்ற 2435
மூன்றுளமண் 1187
மூன்றுளமாளி 2479
மெய்கண்ட 1037
மெய்கலந்தா 2600
,, 2601
மெய்த்தவத் 2992
மெய்த்தாள் 2605
மெய்ப்பொருளா 688
மெய்ப்பொருள் 676
,, 1354
மெய்யக 1891
மெய்யினில் 2130
மெய்வாய் 2586

மெல்லிசை	1152	மேவும்பிர	2374	வருக்கஞ்	2678
மெல்லியலாகி	1337	மேற்கொள்ள	2113	வருத்தமிரண்	1094
மெல்லியல்	1082	மேனியிர	911	வருந்தித்தவ	634
மேகங்கள்	2738	மொட்டலர்	2529	வருமாதி	598
மேதாதிஈ	1070	மொட்டித்	2919	வரும்வழி	2056
மேதாதியாலே	1708	மொழிந்தது	71	வரைத்து	1774
மேதினி	2753	மோழை	2549	வரையிடை	249
மேருநடு	2747	மோனங்கை	1611	வலையழுக்	1979
மேருவிலே	2465	மோனத்து	1900	வல்லவன்	23
மேலது	2999	யாவர்க்குமாம்	252	வல்லார்கள்	311
மேலறி	1017	யோகச்சமய	1466	வல்வகை	542
மேலாநிலத்	1956	யோகச்சமாதி	1490	வழிசென்ற	1549
மேலாந்த	840	யோகத்தின்	1897	வழித்துணை	297
மேலாம்	1212	யோகநற்	1172	வழிநடக்கும்	1548
மேலுணர்	1883	யோகமவ்	1960	வழிநடப்	265
மேலும்	161	யோகமும்	1491	வழிபட்டு	2553
மேலென்று	1706	யோகிகள்கால்	335	வழியிரண்டு	1541
மேலைச்	1613	யோகிக்கிடுமது	1663	வழுதலை	2869
மேலைத்திரு	3069	யோகிக்கு	1465	வழுத்திடு	1335
மேலைநில	590	யோகியு	1950	வளங்கனிதே	2634
மேலையண்ணு	805	யோகியெண்	1898	வளங்கனியொ	1494
மேலொடு	2460	வகுத்த	476	வளத்திடை	158
மேலொளி	2685	வசையில்	214	வளர்கின்ற	876
மேல்கீழ்	572	வடக்கு	2070	வளர்பிறை	1902
மேல்நுற	1620	வட்டங்களே	768	வளிமேக	2765
மேல்வரு	1258	வணங்கிடுந்	1340	வளியினை	569
மேல்வைத்	1599	வண்ணன்ஒலி	800	வள்ளற்றலைவ	2994
மேவியஅந்	2169	வந்தடி	1242	வறுக்கின்ற	1970
மேவியசக்	1314	வந்தமட	101	வற்றஅனலை	1949
மேவியசற்	1495	வந்தமர	2670	வன்னியெழு	1256
மேவியசீவன்	2011	வந்திடுபேத	1925	வாக்குமனமு	1896
மேவியஞான	1849	வந்திடும்	1268	,,	2854
மேவியபொய்	2344	வந்துநின்	2990	வாங்கலிறு	842
மேவியமண்ட	1195	வம்பு	2607	வாசந்தி	150
மேவியெழு	1777	வரவறி	2101	வாசித்தும்	1506
மேவும்பர	2417	வரவிரு	1889	வாசியு	2613

வாடா 2949
வாமத்தில் 573
வாமத்தோர் 327
வாயுமன 1178
வாயொடுகண் 2701
வாயொன்று 1683
வாய்திறவா 593
வாய்நாசி 2579
வாய்ந்தவுப 2510
வாய்ந்தறி 810
வாரணி 402
வாரத்திற் 797
வாராவழி 1815
வாழலுமாம் 594
வாழை 2922
வாழ்கவே 3047
வாழ்த்த 39
வாழ்வும் 174
வாள்கொடு 379
வாறேசதா 894
வாறேசிவா 905
வானக 2997
வானப்பெ 21
வானவர்என் 109
வானவர்தம் 2631
வானின்றழை 30
வானின்றிடி 2850
விசும்பொன்று 2818
விச்சுக்கலழு 1886
விஞ்ஞானகன் 499
விஞ்ஞானத் 2136
விஞ்ஞானர்ஆ 498
விஞ்ஞானர்கே 494
விஞ்ஞானர்நால் 493
விடாதமனம் 880
விடிவத 1687
விடுகின்ற 2110
விடுங்காண் 1942
விடையுடை 444
விட்டபின் 1944
விட்டவிடமே 2409
விட்டவிலக்க 2566
விட்டுப்பிடிப்ப 289
விண்டலர் 621
விண்ணமர் 1396
விண்ணவராலு 2519
விண்ணவரு 3037
விண்ணிலு 3018
விண்ணினின் 315
விண்ணினை 1436
விண்ணின் 113
விதறுபடா 2948
விதித்த 747
விதியது 2998
விதியின் 2030
விதிவழி 45
வித்தகமாகிய 1866
வித்தாஞ் 991
வித்திடு 1946
வித்தினி 1932
வித்துக்கு 1964
வித்துப் 2084
வித்தைக் 121
விந்துஅபரம் 1993
விந்துவிலுஞ் 964
விந்துவினவு 1957
விந்துவும்நாத 619
,, 1969
,, 961
,, 1971
,, 1276
,, 1757
விந்துவும்நாத 1963
விந்துவும்மா 2248
விந்துவென் 1958
விம்மும்வெரு 2744
விரித்தபின் 1920
விரிந்தளழு 1260
விரிந்தது 1278
விரிந்திடிற் 2278
விரிந்து 664
விருப்பொடு 2640
விரும்பிநின் 1462
விரும்பில் 2996
விரும்புவர் 180
விரைந்தன்று 2087
விரையது 1279
வில்லின் 2567
விழுந்தது 455
விழுப்பமுங் 305
விளக்கிப்பர 91
விளக்கினையே 1818
விளக்கை 2816
விளக்கொளி 1359
விளங்கிடுமுந் 2177
விளங்கிடுமேல் 1360
விளங்கிடும்வா 821
,, 1411
விளங்குநிவிர்த் 1926
விளங்கொளி 1246
,, 2683
,, 2687
,, 2688, 2691
வினைந்தளழு 1280
வினைந்துகிட 2879
வினையும்பரவி 1813
வினைவறிவார் 1635
வினைகடிந்தா 1123

விணையாமசத்	2557	வேங்கட	190	வேந்தன்உலகை	245
வின்னுவிளம்	1023	வேடங்கட	1438	வேயன	1104
வீங்குங்கழலை	657	வேடநெறி	240	வேயின்	116
வீசம்இர	1277	வேட்கைமிகுத்	175	வேரெழுத்தா	970
வீட்கும்பதி	2420	வேட்கைவிடு	1702	வேழுமதன்	2461
வீணையுந்	2929	வேட்டவி	1824	வேறுசெய்தா	2312
வீயமதா	1928	வேண்டார்	1008	வேறுறச்	878
வீரமருந்	850	வேண்டிநின்	1766	வைகரியாதி	2007
வீழ்ந்தெழு	967	வேண்டியவா	1296	வைச்சகலாதி	2456
வேங்கதி	836	வேதங்களாட	2729	வைச்சகல்வுற்ற	156
வெல்லு	2303	வேதத்தின்	2370	வைச்சனவச்	2171
வெளிகால்	2464	வேதத்தை	51	வைச்சனவாரு	1608
வெளிப்படு	1101	வேதமோடாக	2397	வைத்தஇருவரு	835
வெளியிலிரே	950	வேதம்உரை	52	வைத்தகை	770
வெளியில்வெளி	124	வேதாநெடுமா	1731	வைத்ததூரிய	2574
வெளியை	839	வேதாந்தங்கண்	1435	வைத்தபசு	1688
வெள்ளக்கட	1834	வேதாந்தங்கே	225	வைத்தபரிசே	100
வெள்ளடையா	1158	,,	229	வைத்தபொரு	1059
வெள்ளியுரு	834	வேதாந்தஞான	235	வைத்திடும்	1369
வெள்ளிவெண்	790	வேதாந்தஞ்சி	2386	வைத்துச்சிவ	2491
,,	791	வேதாந்தஞ்சு	1422	வைத்துணர்	309
வெறிக்கவினை	2706	வேதாந்ததொ	2392	வைத்தேன்	1602
வென்றிடலா	1232	வேதாந்தந்	2387	வையகத்தே	207
வென்று	1840				

உ

சிவமயம்

சமாஜ வெளியீடுகள்

		ரூ.	அ.
சம்பந்தர் தேவாரம் (அரும்பொருளகராதியுடன்)	....	1	4
அப்பர் தேவாரம் ,,	....	1	0
சுந்தரர் தேவாரம்—குறிப்புரையுடன்	....	0	12
திருவாசகம் ,,	....	0	10
திருக்கோவையார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு—குறிப்புரையுடன்	....	0	9
ஆ, கூ திருமுறைகள் ,,	....	1	2
திருமந்திரம்	....	1	0
பதினோராந் திருமுறை	....	0	11
பெரியபுராணம்	....	1	6
சித்தாந்த அஷ்டகம்	....	1	0
மெய்கண்டாரும் சிவஞான போதமும்	....	0	8
சிவஞானபாடியம்	....	1	0
சங்கநூற்புலவரகராதி	....	0	2½
தலயாத்திரைப் படம்	....	0	1
திருப்புகழ் (அருணகிரியார் அருளியவை முற்றும்)		3	0
திருமுருகாற்றுப்படை	....	0	1
சிவஞானபோதச் சிற்றுரை	....	0	8

தபாற்கூலி, பார்சல் செலவு முதலியன வாங்குவோர் செலுத்தவேண்டும். முன் பணம் அனுப்புக.

சைவ சித்தாந்த மகா சமாஜம்

22-A, கல்லுக்காரத் தெரு, மயிலாப்பூர், சென்னை.